# சங்ககாலப் புலவர்கள்



யு
3092

மகாமகோபாத்தியாய
டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம்
பெசன்ட்நகர்-சென்னை-90.

# சங்ககாலப் புலவர்கள்

அக்காரக்கனி நச்சுமனார்:— இவர் கடைச்சங்கத்தைச் சார்ந்த நல்லிசைப் புலவர்களுள் ஒருவர். மதுரையம் பதியில் வாழ்ந்தவர். பாண்டியன் உக்கிரப்பெருவழு தியும் இறையனார் முதலிய சான்றோர்களும் திருவள்ளு வரும் இருந்த காலத்தினர். திருவள்ளுவர் திருக்குறளை அரங்கேற்றியபொழுது வீற்றிருந்து கேட்டு, அந்நூலின் அருமை பெருமைகளைப் பாராட்டி நன்கு மதித்துத் தனித்தனியே சிறப்புப்பாயிரம் அளித்தவர்களுள் இவரும் ஒருவர். இவர் அளித்த பாடல் வருமாறு:—

> கலைநிரம்பிக் காண்டற் கினிதாகிக் கண்ணின்
> நிலைநிரம்பு நீர்மைத் தெனினுந்—தொலைவிலா
> வானூர் மதியந் தனக்குண்டோ வள்ளுவர்முப்
> பானூ னயத்தின் பயன். —(திருவள்ளுவமாலை. 46)

இச்செய்யுளில் மதியத்திற்கும் திருக்குறளாகிய நிதியத்திற்கும் கூறப்பட்டுள்ள பொதுப்பண்பும், திருக் குறளுக்குக் கூறிய நயனும் பயனுமாகிய விசேடப் பண்பும் பிறவும் இவருடைய கல்விப்பெருமையை விளக்குகின்றன. இச்செய்யுளையன்றி வேறு பாடலேனும், நூலேனும் இவர் செய்ததாக எங்கும் காணப் படவில்லை. நச்சுதல்—விரும்புதலாதலின் நச்சுமனார் என்பதற்கு விரும்புதற்குரியார் என்று பொருளா கின்றது. மன்—பெயர் விகுதி. ஆர்—உயர்வு குறித்து நிற்பதோரிடைச்சொல். இஃது இவருடைய இயற்பெயரோ பிற்காலத்தில் காரணத்தால் எய்திய சிறப்புப்பெயரோ யாதும் விளங்கவில்லை.

இப்பெயர் கொண்ட புலவர் இருவர் உள்ளனர். மற்றையோர் பெயரினும் வேறுபடுத்தும் பொருட்டு

'அக்காரக்கனி' என்று அடைமொழிகொடுத்து வழங்கப் படுகிறூர். இப்பெயர் (தே) மாங்கனியின் சுவைபோலும் மிகுந்த சுவையையுடைய செய்யுள் செய்யவல்ல நச்சுமனுர் என்ருவது, தேமாங்கனி வாணிகத்தையுடைய நச்சுமனுர் என்ருவது பொருள்படும். அக்காரம் என்னுஞ் சொல் மாமரம் என்னும் பொருளில் ஈழ நாட்டில் வழங்கு கின்றதென்று தெரிகின்றது. இச்சொல் ஒட்டுமரம் என்னும் பொருளதாகிய ஸககாரம் (ஸஹகாரோதி ஸௌரப: என்பது அமரம்) என்னும் வடமொழிச் சிதைவு போலும் என்பர். செய்யுளுக்குரிய மாங்கனிப் பாகம் அமைந்த செய்யுள் செய்யவல்லவர் என்று இவரைக் கூறுதல் பொருத்தமுடையதே. கடைச்சங்கம் நிறீஇய பாண்டியர் நாற்பத்தொன்பதின்மருள்ளே, நாற்பத்தொன்பதாமவராகிய உக்கிரப்பெருவழுதி யாரின் காலத்தினர் என்பதைக் கொண்டு இவர் கடைச்சங்கத்தின் இறுதிக்காலத்திலிருந்தவராகத் துணியப்படுவர்.

அகத்திய முனிவர்:— முதலிரண்டு சங்கங்களிலும் அகத்திய முனிவர் இருந்து தமிழ் ஆராய்ந்தனரென்று தெரிகின்றது. அவர் வடக்கேயிருந்து தென்னுட்டிற்கு வரும்போது, ''தென்னுடு தமிழ் வழங்கும் தேயமான மையின் அங்கே உள்ளவர்களோடு பழகுமாறு எனக்குத் தமிழ் இலக்கணத்தைக் கற்பித்தருளல் வேண்டும்'' என்று வேண்டிப் பரமசிவன்பால் அதனைப்பெற்று இந் நாட்டிற்கு வந்து இங்கேயுள்ள வழக்கம் முதலியவற்றை அறிந்து இலக்கணம் இயற்றினுர்.

''ஆதரஞ்சேர் குறுமுனியு மெனையொன் ருக்கி
அருள்செய்தா யருள்செய்த படியே செய்வல்
ஓதருந்தென் பூமிதமிழ்ப் பூமி யென்பார்
ஒண்டமிழிற் குரியவெலா மடிமைக் கிங்கே

போதமுற வறிவித்தல் வேண்டு மென்று
போற்றுங்கால் எழுத்துச்சொற் பொருள்முன் னுன
நீதியுடைச் சூத்திரங்க ளறியும் வண்ணம்
நெறியின்க ணறிவித்தாய் நேசங் கூர்ந்தே''.
—(பழைய திருவிளையாடல்)

என்பது முதலியவற்ருல் இது விளங்கும்.

''தமிழொடு பிறந்துபழ மதுரையில் வளர்ந்தகொடி''
(குமர.)

என்றதனுலும் அகத்தியர் தமிழ்நாட்டிற்கு வருவதற்கு முன்னமேயே இந்நாட்டிலிருந்த தமிழின் தொன்மை விளங்கும்.

அகத்திய முனிவர் செய்த இலக்கணம் அகத்தியம்; அஃது இயல், இசை, நாடகமென்னும் மூன்றிலக்கணங் களையுடையது; அது மூன்று சங்கத்தார்களுக்கும் இலக் கணமாய் அமைந்து பல புலவர்களாலும் பெரிதும் போற்றப்பட்டு முதனூலாகவும் எண்ணப்பட்டு வந்தது. இது, ''வினையினீங்கி'' (தொல்காப்பியம் மரபியல். சூத்திரம். 94.) என்னும் சூத்திர உரையாலும்,

''வீங்குகட லுடுத்த வியன்கண் ஞாலத்துத்
தாங்கா நல்லிசைத் தமிழ்க்குவிளக் காகென
வானேே ரேத்தும் வாய்மொழிப் பல்புகழ்
ஆனப் பெருமை அகத்திய னென்னும்
அருந்தவ முனிவ னுக்கிய முதனூல்''.

என்னும் பன்னிருபடலப் பாயிரத்தாலும் புலனு கின்றது.

அகத்திய முனிவரிடம் முத்தமிழ் பயின்ற மாணக் கர்களுள் இயற்றமிழிலக்கணம் இயற்றியவர்கள் தொல்காப்பியர் முதலிய பன்னிருவரென்பர்;

''மன்னிய சிறப்பின் வானோர் வேண்டத்
தென்மலை யிருந்த சீர்சான் முனிவரன்
தன்பாற் றண்டமிழ் தாவின் றுணர்ந்த
துன்னருஞ் சீர்த்தித் தொல்காப் பியன்முதற்
பன்னிரு புலவரும்''.

(சிறப்புப்பாயிரம்)

என்பது புறப்பொருள் வெண்பாமாலை.

இசைத்தமிழிலக்கணமியற்றியவர்கள் சிகண்டி முதலியோர். நாடகத்தமிழ் இலக்கணம் இயற்றியவர்கள் முறுவல், சயந்தம் முதலிய நூலுடையோர். இயற்றமிழ் நூல்களுள் அவிநயம் என்பது தொல்காப்பியத்திற்கு முந்திய தென்றும், தண்டலங்கிழவன் இராச பவித்திரப் பல்லவதரையன் என்பவரால் அதற்கு மிகச் சிறந்ததோருரை செய்யப்பட்டிருந்ததென்றும் நன்னூல் மயிலைநாதர் உரை தெரிவிக்கின்றது.

முத்தமிழிலக்கணங்களையும் இந்நாட்டில் பரவச் செய்த மேம்பாடு பற்றியே பல மதத்தினரும் தமிழாசிரியராக அகத்தியரை மிகப் பாராட்டி இருக்கின்றனர்.

''தமிழெனு மளப்பருஞ் சலதி தந்தவன்''
''தழற்பொலி விழிக்கடவுள் தந்ததமிழ் தந்தான்''
''தமிழ் மாமுனி'' (கம்பராமாயணம்)

''தேனார் கமழ்தொங்கல் மீனவன் கேட்பத்தெண் ணீரருவிக்
கானார் மலயத் தருந்தவன் சொன்னகன் னித்தமிழ்நூல்''

(காரிகை)

''ஆயுங் குணத்தவ லோகிதன் பக்க லகத்தியன் கேட்
டேயும் புவனிக் கியம்பிய தண்டமிழ்''

(வீரசோழியம்)

''மூவாத் தமிழ்பயந்த முன்னூன் முனிவாழி''

(தண்டியலங்காரவுரை மேற்கோள்)

''அகத்தியன் பயந்த செஞ்சொ லாரணங்கு''

(வில்லிபுத்தூரார் பாரதம்)

மேற்கூறியவற்றுள் காரிகை யாசிரியர் சைனர்; வீரசோழிய ஆசிரியர் பௌத்தர். இங்ஙனம் அகத்தியர் பாராட்டப் பெற்றிருத்தலை இன்னும் எத்தனையோ இடங்களிற் காணலாகும்.

இவர் வருவதற்கு முன்னமே இந்நாட்டிலிருந்த தமிழையும் அதனிலக்கணத்தையும் இவர் தந்தார் என்று கூறியிருப்பது உபசார வழக்கு; இங்ஙனம் கூறி யிருத்தற்குக் காரணம் தமிழ்மொழிக்கு அக்காலத் திலிருந்த ஒரு மெலிவைப்போக்கி இவர் இலக்கணம் செய்ததும் மாணுக்கர்களுக்குப் பாடஞ் சொல்லிப் பாது காத்தமையுமே.

பிரமாஸ்திரத்தால் தங்களுக்கு நேர்ந்திருந்த ஆபத்தைச் சஞ்சீவி கொணர்ந்து நீக்கிய அநுமானை நோக்கி இராமர் ''இன்று நாங்கள் உன்வயிற்றில் பிறந் தோம்'' என்று கூறினுற் போல்வது இது.

அகத்தியரால் தரப்பட்டுத்தமிழ் வளர்ந்ததைப் புலவர்கள் அழகாக வர்ணித்திருக்கிருர்கள்.

''ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருள்கடியு—மாங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னேர் இலாத தமிழ்''. (தண்டி. மேற்.)

'ஓங்கல்' என்றது பொதியில் மலையை; இச்செய் யுள் சூரியனுக்கும் தமிழுக்கும் சிலேடை.

''பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலே யிருந்து வையை யேட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர் நினைவிலே நடந்தோ ரேன
மருப்பிலே பயின்ற பாவை மருங்கிலே வளரு கின்றாள்.''
(வி. பா. சிறப்புப்)

இச்செய்யுளில் தமிழை ஒரு குழந்தையாக உருவகித்து அழகாக அதன் வளர்ச்சியை முறையே காட்டியிருப்பது அறிந்து இன்புறத்தக்கது. பொருப்பிலே பிறந்தமை அகத்தியமுனிவர் தமிழாசிரியர் என்பதைக் குறிப்பிடும். தென்னன் புகழிலே கிடந்தது பாண்டிய மன்னர்கள் தமிழைப் போற்றி வந்தமையைக் காட்டும். குழந்தையை வெண்மையாகிய தூய ஆடையிற் கிடத்தல் போல இங்கு வெண்ணிறமாகிய தென்னன் புகழிலே கிடந்தது என்பதிலுள்ள நயம் கவனிக்கத் தக்கது. இருப்பதற்குப் பலகை வேண்டுமாதலால், 'சங்கத்திருப்பிலேயிருந்து' என்ருர். வையையேட்டிலே தவழ்ந்தமை ஞானசம்பந்தர் தேவாரத்தை வரைந்தருளி வையையிலிட்ட ஏடு நீரையெதிர்த்துச் சென்றதையும், நெருப்பிலே நின்றமை அவர் தேவாரத்தை எழுதி நெருப்பிலிட்ட ஏடு வேகாமல் இருந்ததையும் அறிவிக்கும்.

இன்னும் பொதியில் மலையில் அகத்தியரால் தாபிக்கப்பெற்ற ஒரு தமிழ்ச்சங்கம் இருந்ததாகவும் தெரிகிறது.

சீதையைத் தேடுவதற்குத் தென்றிசையின்கட் செல்லும் வானரவீரர்களை நோக்கி வழிகூறுஞ் சுக்கிரீவன் ''பொதியில் மலையில் அகத்திய முனிவருடைய தமிழ்ச்சங்கம் இருக்கின்றது. அங்கே செல்லுவீர்களாயின் தமிழ்ச்சுவையை நீங்கள் நுகர்ந்து அவ்விடத்திலேயே இருப்பீர்கள்; நான் சொல்லிய காரியத்தை மறந்து விடுவீர்கள்'' என்று கூறியதாகக் கம்பர் பாடியிருப்பது அறிதற்பாலது,

> ''தென்றமிழ்நாட் டகன்பொதியிற் றிருமுனிவன் றமிழ்ச்
> சங்கம் சேர்கிற் பிரே லென்றுமவ ணுறைவிடமாம்''.

(கம்ப. நாடவிட்டபடலம். 31.)

அகத்தியர் [அ]:– தமிழ்மொழி மூலமாக அறியப்படும் கலைகளைச் சொல்லும்போது அகத்தியரை முதலிற் சொல்ல வேண்டியிருக்கிறது. இயற்றமிழுக்குப்போல் ஏனைத்தமிழுக்கும் ஆசிரியர் இவரே. இவருடைய மாணுக்கர்களின் தொகை பன்னிரண்டு என்று பரம் பரையாகச் சொல்லப்பட்டு வந்திருக்கிறது. அம்மாணுக்கர்களிற் சிகண்டி என்பார் ஒருவர். அவர் அகத்தியரிடத்திற் சங்கீதத்தைப் பயின்றவர். சிலப் பதிகாரத்திற்கு அடியார்க்குநல்லார் இயற்றிய உரை யால் சிகண்டி ஆசிரியர் இசைநுணுக்கமென்னும் நூல் இயற்றியிருந்ததாகத் தெரிகிறது. அகத்தியருக்குச் சமமான சங்கீத வித்துவான் இல்லை. தொல்காப்பிய உரை ஆசிரியரான இளம்பூரணர் இராவணனை அகத் தியர் கந்தருவத்தால் பிணித்ததாகச் சொல்லியிருக் கிருர். இராவணன் முதலில் தென்னுட்டை ஆண்டா னென்றும், பிறகே இலங்கைக்குச் சென்ருனென்றும் தெரிகின்றது. இராவணன் தென்னுட்டை ஆண்ட பொழுது பலருக்கும் துன்பஞ் செய்துவந்தான். அகத்தியர் தென்னுடு வந்ததும் அவனை அங்கிருந்து அப்புறப்படுத்த நினைத்து அவன் இசையிற் சிறந்தவஞ தலால் அவனைச் சங்கீதப்போருக்கு அழைத்தார். 'பொதியில் மலைக்கல் யாருடைய பாட்டால் உருகுகின் றதோ அவர்க்கு அம்மலைக்கல்லை அங்ஙனம் உருகச் செய்யாதவர் தோற்றவர்; நீ தோற்ருல் தென்னுட் டைக் கொடுத்துவிட வேண்டும்' என்று பேசிக்கொண் டனர். அகத்தியரை முதலிற் பாடும்படி இராவணன் சொன்னுன். அவர் பாடவே மலைக்கல் உருகிற்று. பிறகு இராவணன் பாடினபோது உருகியிருந்த குழம்பும் இறு கிற்று. முன்னுளில் துஷ்டர்களும் சத்தியத்தால் கட்டுப்பட்டிருந்தனராகையால் பேசியபடியே இரா வணன் தென்னுடு துறந்து இலங்கைக்குச் சென்றுவிட் டான். மதுரைக்காஞ்சியில் ''தென்னவற் பெயரிய துன்னருந் துப்பிற், ருென்முது கடவுள்'' என்ற இடத்

தில் தென்னவன் என்ற சொல் இராவணனை உணர்த்து வதாக நச்சினார்க்கினியர் எழுதியிருப்பதும், தொல்காப் பியப் பாயிரவுரையில் இச்சரிதம் கூறப்பெற்றிருப்பதும், இங்கே அறியத்தக்கன. தென்னவன் என்ற சொல் இராவணனைக் குறியாதென்றும், பாண்டியனையே குறிப் பிடுமென்றும் சிலர் சொல்லுவர். நச்சினார்க்கினியர் உரையைத் தேவாரம் ஆதரிக்கிறது. இராவணன் கைலைமலை எடுத்ததைச் சொல்லுங்கால், ''தென்னவன் மலை யெடுக்க'' என்று சொல்லப்பட்டிருக்கிறது. கல் உருக அகத்தியர் பாடியதைத் தஞ்சைவாணன் கோவை இயற்றிய பொய்யாமொழிப்புலவரும், துறைமங்கலம் சிவப்பிரகாசசுவாமிகளும், பிறரும் பாராட்டி இருக் கிறார்கள். அகத்தியர் யாருக்குப் பிரதியாகத் தென் றிசை வந்தாரோ அவர் சங்கீதத்திலுள்ள மிக்க பிரீதி யால் தம் இரண்டு காதுகளிலும் இரண்டு தோடாக இரண்டு கந்தருவரை வைத்துக்கொண்டிருக்கிறாரென் றும் அவ்விருவரும் எப்போதும் கானஞ்செய்து கொண் டிருக்கிறார்களென்றும் சிவ புராணங்கள் கூறும்.

அகம்பன் மாலாதனார்:— இவர் கடைச்சங்கத்தைச் சார்ந்த புலவர்களுள் ஒருவர். நற்றிணை 81 ஆம் செய்யுள் இவரால் இயற்றப்பட்டது.

> ''இருநிலங் குறையக் கொட்டிப் பரிந்தின்
> றூதி போகிய வசைவி னேனென்றூண்
> மன்னர் மதிக்கு மாண்வினைப் புரவி
> கொய்ம்மயி ரெருத்திற் பெய்ம்மணி யார்ப்பப்
> பூண்கதில் பாகநின் றேரே''.

என்று கூறிய குதிரையினியல்பும் பிறவும் மதிக் கற்பாலன. இந்தச்செய்யுளையன்றி வேறு யாதொன் றும் இவர் செய்ததாகக் கிடைத்திலது. கடைச்சங் கத்து நூலென்று கூறப்படும் நற்றிணை நானூற்றில்

இவருடைய செய்யுள் சேர்க்கப்பட்டிருப்பதைக் கொண்டு இவர் கடைச்சங்கத்தைச் சார்ந்தவராகச் சொல்லப்பட்டார். இப்பெயரை அகம்பன மாலாதனரெனவும் படித்தற்கிடமுண்டு. கம்பமும் கம்பனமும் சந்தேகம் அல்லது நடுக்கமென்னும் பொருளில் வருவனவாகிய வடசொல்லாதலின் இப்பெயர் ஐயமில்லாத அல்லது பிறரால் நடுக்கம் இல்லாத மாலாதனர் என்னும் பொருளைத்தந்து இவருடைய தெளிந்த புலமையை வெளிப்படுத்தும். அகம்பன் பாலாதனர் என்றும் பிரதிபேதம் உண்டு.

அஞ்சியத்தை மகனர்:— இவர் கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர். அகநானூற்றில் முடவு முதற்பலவு என்னும் 352-ஆம் செய்யுளன்றி வேறு யாதொன்றும் இவர் செய்ததாக அகப்பட்டிலது. அச்செய்யுளில் 'கடும்பரிப்புரவி நெடுந்தேரஞ்சி நல்லிசை நிறுத்த நயம்வரு பனுவற் றொல்லிசை நிறீஇய உரைசால் பாண்மகன்' எனக் கடையெழு வள்ளல்களில் ஒருவனாகிய அதியமான் நெடுமான் அஞ்சியைப் புகழ்ந்திருத்தலின் இப்புலவர், அவனும் அவனைப் பாடிய ஔவையாரும் பரணர், பெருஞ்சித்திரனர், பொன்முடியார் என்னும் புலவருமிருந்து விளங்கிய காலத்தினராக எண்ணப்படுகிறார். இன்னும் ஔவையாரால் பாடப்பட்டாராகிய அதியமான்மகன் பொகுட்டெழினி, தொண்டைமான் நாஞ்சில் வள்ளுவன், சேரமான் மாவெண்கோ, பாண்டியன் கானப்பேர் தந்த உக்கிரப்பெருவழுதி சோழன் இராயசூயம் வேட்ட பெருநற்கிள்ளி என்கிற தலைவர்களும் பரணரால் பாடப்பட்டோராகிய சோழன் உருவப்பஃறேரிளஞ்சேட் சென்னி, சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதன், சோழன் வேற்பஃறடக்கைப் பெருநற்கிள்ளி, வையாவிக்கோப்பெரும் பேகன், சேரமான் கடல் ஓட்டிய வேல்கெழு குட்டுவன்

என்கிற தலைவர்களும் பெருஞ்சித்திரனாரால் பாடப் பட்டோனாகிய குமணன், இளவெளிமான், வெளிமான் என்னும் தலைவர்களும் பொன்முடியாருடனிருந்த அரிசில்கிழார் என்னும் புலவரும் இவருடைய காலத் தேனும் அதற்குச் சிறிது முற்காலத்தேனும் பிற்காலத் தேனும் இருந்தார்களென்று சொல்லுதற்கிடமுண்டு. அஞ்சியென்னும் தலைவன் வரலாற்றைப் புறநானூற்றி லுள்ள பாடப்பட்டோர் வரலாற்றில் 'அதியமான் நெடுமானஞ்சி' என்னும் பெயராலுணர்க. இச் செய்யுளில் ஆடுகின்ற மயிலின் பின்னே பலாப்பழத்தைத் தழுவி நிற்குங் கடுவ (ஆண் குரங்கு) னுக்கு ஆடுகின்ற விறலியின் பின் முழவைத் தழுவி நிற்கும் தண்ணுமை யோனை உவமை கூறியதான

''முடவுமுதிர் பலவின் குடமருள் பெரும்பழம்
பல்கிளைத் தலைவன் கல்லாக் கடுவன்
பாடிமி ழருவிப் பாறை மருங்கின்
ஆடுமயில் முன்ன தாகக் கோடியர்
விழவுகொண் மூதூர் விறலி பின்றை
முழவன் போல வகப்படத் தழீஇ
யின்றுணைப் பயிருங் குன்ற நாடன்''.

என்பதும், தலைவி தலைவனுடைய அன்புடைமையைப் புலப்படுத்தியதாக வுள்ள

'புதுவது புனைந்த திறத்தின்
வதுவை நாளினு மினியனு லெமக்கே'.

என்பதும் பிறநயங்களும் மிக வியக்கற்பாலன. அஞ்சியென்னும் தலைவனுடைய அத்தையின் புதல்வ ரென்று பொருள் செய்ய வேண்டியிருத்தலானும், அது பொருந்துமாற்றானும், அஞ்சியத்தை மகனார் என்பது காரணப்பெயராகச் சொல்லத்தக்கது. இவருடைய இயற்பெயர் விளங்கவில்லை. உயர்ந்த தலைவனைச்

சார்ந்தோரை எவ்வாற்ருலேனும் அவனேடு சார்த்திப் பெயர் கூறுதல் மரபு. இவர்பெயர் அஞ்சி ஆந்தை மகனுர், அஞ்சி ஆந்தை மகன் நன்ஞகையார் என்றும் சில பிரதிகளில் காணப்படுகின்றது.

அஞ்சிலஞ்சியார்:— இவர் கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர். இதனை நற்றிணை நானூற்றில் இவர் செய்யுள் கலந்திருத்தலால் உணர்க. இவர் பாடியது, அத்தொகையில் 90-ஆம் செய்யுளாகிய 'ஆடியல் விழவின்' என்பதொன்றே. அஞ்சியென்பது தகடூரிலிருந்து அரசாண்ட ஒருவகை அரசர்களின் குடிப்பெயராகத் தெரிதலால் இவர் அக்குடியில் பிறந்தவரென்று நினைக்கப் படுகிருர். வேருெரு புலவர் பெயராகிய 'அஞ்சிலாந்தையார்' என்பதிலும் வந்திருத்தலின் அஞ்சில் என்பது ஒரூர்ப்பெயராக நினைக்கப்படுகிறது. தாம் பாடிய செய்யுளில் கூந்தலைச் சிறப்பித்து 'அஞ்சிலோதி' என்று இவர் கூறியிருப்பதைக் கொண்டோ அஞ்சில் என்பது இவர் பெயருக்கு அடைமொழியாகக் கொடுக்கப்பட்டுள்ளது. அணிலாடுமுன்றிலார், கூகைக்கோழியார், தேய்புரிப் பழங் கயிற்றினர், தொடித்தலை விழுத்தண்டினர், வில்லக விரலினர் முதலிய பெயர்கள் வந்த வரலாற்றை ஆராய்ந்து பார்க்க இவருடைய இயற் பெயர் விளங்கவில்லை. ''வாடாமாலை யோடையொடு துயல்வர'' எனத் திருமுருகாற்றுப்படையிலும் ''வாடாமாலை துயல்வர'' என இச்செய்யுளிலும் வந்துள்ள சொற்கிடையால் இவர் அப்பாட்டினைப் படித்தவர் என்ருவது அதுசெய்தவர் இப்பாட்டினைப் படித்தவர் என்ருவது சொல்லுதற்கிடமுண்டு. காலத்தின் முற்பிற்பாடு விளங்கவில்லை.

ஆடியல் விழவி னழுங்கன் மூதூர்
உடையோர் பான்மையிற் பெருங்கை தூவா

வறனில் புலைத்தி யெல்லித் தோய்த்த
புகாப்புகர் கொண்ட புன்பூங் கலிங்கமொடு
வாடா மாலை துயல்வர வோடிப்
பெருங்கயிறு நாலு மிரும்பனம் பிணையற்
பூங்க ணுய மூக்க வூங்காள்
அழுதனள் பெயரு மஞ்சி லோதி
நல்கூர் பெண்டின் சில்வளைக் குறுமகள்
ஊசல் உறுதொழிற் பூசற் கூட்டா
நயனின் மாக்களொடு குழீஇப்
பயனின் றம்மவிவ் வேந்துடை யவையே.

(நற். 90)

அஞ்சிலாந்தையார்:— அஞ்சில் என்பது ஓர் ஊர். ஆதன் தந்தையார் என்னும் தொடர்மொழி ஆந்தையாரென்று மருவிற்று. அஞ்சில் என்னும் ஊரினரா தலின் இவர் அஞ்சிலாந்தையார் என்னும்பெயர் பெற்றார். இவர் குறிஞ்சி, நெய்தல் வளங்களைச் சிறப் பித்துப்பாடியுள்ளார். இவர்கடுவனைக் ''கல்லாக் கடுவன்'' என்பர் (நற். 233.) புகழ்வது போலப் பழிக்குந் தொடர்களைக் கூறுவர். தலைவன் கனவில் தலைவியோடு கடலாடுதலும், தலைவி ஆயத்தோடிருக் கையில் அவளுடன் குரவையாடுதலும் அதன் காரண மாக அலரெழுதலும் இவர் வாக்கிற் காணப்படும் செய்திகள். இவர் மகளார் நாகையாரென்பவரும் இவரை யொப்ப நல்ல புலமை வாய்ந்தவர். இவர் பெயர் சில பிரதிகளில் அஞ்சியாந்தையாரென்றும் காணப்படுகிறது. இவர் பாடிய வேறு செய்யுள் குறுந் 294. வேறு அடை மொழிகள் கொண்ட ஆந்தையார் பலர் உளர். இவர் பாடிய இரண்டு செய்யுட்களின் கருத்தும் சிறைப்புறமாகச் செறிப்பறி வுறீஇயதான துறையாகவே இருத்தலின் அத்துறை பாடுவதில் இவர் வல்லுநரென்று தெரிகின்றது.

கடலுட ஞடியுங் கானல் அல்கியும்
தொடலே ஆயமொடு தழுவணி அயர்ந்தும்
நொதுமலர் போலக் கதுமென வந்து
முயங்கினன் செலினே அலர்ந்தன்று மன்னே
தித்தி பரந்த பைத்தகல் அல்குல்
திருந்திழை துயல்வுக்கோட் டசைத்த பசுங்குழைத்
தழையினும் உழையின் போகான்
தான்தந் தனன்யாய் காத்தோம் பல்லே.

(குறுந். 294.)

அடைநெடுங்கல்வியார்:— இது கல்வியாற் பெற்ற சிறப்புப் பெயர். எளிதில் அடைந்த மிக்க கல்வியை யுடையாரென்பது இதன் பொருள். பாண்பாட்டு, மகட்பாற்காஞ்சி யென்னுந் துறைகள் இவரால் அழகு பெறப் பாடப்பெற்றுள்ளன. இவராற் பாடப்பட் டோரும், இவர் காலத்தவரும் இன்னரென்று விளங்க வில்லே.

நீர்நாய் வாளேயைப்பெறுதல், வேல் தைத்த மார் பிற்குச் சக்கரத்தின் ஆரை உவமையாகக் கூறுதல், அழும்பில்கோசர் அவைக்களம் என்பன இவர் வாக்கில் வந்துள்ளன. (புறநா. 283, 344, 355.) அவ்வத் திணைப்பொருளேக் குறிக்கத் திணைப்பூவை வைத்துப் பாடுவது இவரது வழக்கமெனத் தெரிகிறது. (தும்பைத் திணைப்பொருள் (தொல்.) வாகைத் திணை மூதின்முல்லே யும், மகட்பாற்காஞ்சியும், திறைதருதலும் அல்லது எரிபரப்புதலும் ஆகிய துறைகளே இவர் பாடியுள்ளார். (புறநா. 344.) அதனுள் ஆரங்கண்ணி என வருதலால் சோழனுதல் கூடும். இவர் மகள் மறுத்த மறவர் இயல்பைப் பற்றிப் பாடியுள்ளார். (புறநா. 345) இப்பாட்டு யாப்பருங்கல விருத்தியில் பல இடங் களில் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது. இவர் பாடிய புறநானூற்றுச் செய்யுட்கள். 283, 344, 345.

செந்நெ லுண்ட பைந்தோட்டு மஞ்ஞை
செறிவளை மகளிர் ஓப்பலிற் பறந்தெழுந்து
துறைநணி மருதத் திறுக்கு மூரொடு
நிறைசால் விழுப்பொரு டருதல் ஒன்றோ
புகைபடு கூரெரி பரப்பிப் பகைசெய்து
பண்பி லாண்மை தருதல் ஒன்றோ
இரண்டினுள் ஒன்று காமையோ வரிதே
காஞ்சிப் பனிமுறி யாரங் கண்ணி
கணிமே வந்தவ ளல்குலவ் வரியே.

(புறம். 344.)

(கு-ரை.) மஞ்ஞை-மயில். ஓப்பலின்—ஓட்டுதலால். துறைநணி மருதம்-நீர்த்துறைக்கு அண்ணிதான மருதமரம்; (புறநா. 154:1, 243: 6-7.) ''மருதிமிழ்ந்தோங்கிய பெருந்துறைத் ததைந்த காஞ்சி'' ''துறைநணி மருத மேறி'' (பதிற். 23: 18, 27:6.) இறுக்கும்—தங்கும். ஒன்றோ: எண்ணிடைச்சொல்; புறநா. 341:12-5. இரண்டனுள் ஒன்று ஆகும். காஞ்சிமுறி—காஞ்சித்தளிர்.

<u>அண்டர்மகன் குறுவழுதி:—</u> தொகை நூல்களில் குறுவழுதியாரென்று ஒரு பெயர் காணப்படுகிறது. இவ்விரு பெயரினரும் ஒருவரோ வேறோ தெரியவில்லை. வழுதி என்ற பெயரால் இவர் பாண்டிய மரபினர் என்பது போதரும். அண்டர்மகன் குறுவழுதி இயற்றியனவாகப் புறச்செய்யுள் ஒன்றும், குறுந்தொகைச் செய்யுள் ஒன்றும், குறுவழுதியென்பார் அகநானூற்றில் 150, 228 ஆம் செய்யுட்கள் இயற்றியனவாகவும் உள்ளன. இவராற் பாடப்பட்டவர் பெயர் முதலியன விளங்கவில்லை. இவர் வாக்கில் வந்துள்ள, ''கல்வியெ னென்னும்

வல்லாண் சிறுஅன்'' (புறநா. 346) என்பது பாராட்டற்பாலது.

பிற.........ளபாலென மடுத்தலின்
ஈன்ற தாயோ வேண்டாள் அல்லள்
கல்வியெ னென்னும் வல்லாண் சிறுஅன்
ஒல்வே னல்ல னதுவா யாகுதல்
அழிந்தோர் அழிய ஒழிந்தோர் ஒக்கல்
பேணுநர்ப் பெறுஅது விளியும்
புன்றலைப் பெரும்பாழ் செயுமிவ ணலனே.
(புறம் 346.)

(கு-ரை) 3-4 தன்மையின்கட் படர்க்கை வந்ததற்கு இவ்வடிகள் மேற்கோள்; நன்.சூ. 379, மயிலை: நன் வி. சூ. 380; இ.வி.சூ. 300, உரை.

<u>அணிலாடு முன்றிலார்:—</u> இவரது இயற்பெயர் இன்னதென்று தெரியவில்லை. மக்களின் நடமாட்டமில்லாத முற்றத்தில் அணில் ஓடிக்கொண்டிருக்கும். தலைவன் பிரிந்தபோது பொலிவிழந்த தலைவிக்கு மக்கள் போகிய அணிலாடு முன்றிலையுடைய இல்லத்தை உவமை கூறினமையின் இவர் பெயர் இங்ஙனம் அமைந்தது. எட்டுத்தொகையுள் இக்குறுந்தொகைச் செய்யுளையன்றி வேறொன்றையும் இவர் இயற்றியதாகத் தெரியவில்லை.

இவரது பாடல் குறுந்தொகையில் காணப்படுகின்றமையின் இவர் கடைச்சங்கப்புலவர்களுள் ஒருவரே.

காதலர் உழையர் ஆகப் பெரிதுவந்து
சாறுகொ ளூரிற் புகல்வேன் மன்ற
அத்த நண்ணிய வங்குடிச் சீறூர்
மக்கள் போகிய அணிலாடு முன்றிற்
புலப்பில் போலப் புல்லென்
றலப்பென் றோழியவ ரகன்ற ஞான்றே.
(குறுந். 41)

அதங்கோட்டாசான்:— பாண்டியன் மாகீர்த்திஅவைக் களத்தில் அரங்கேற்றியதான தொல்காப்பியத்தைப் பல கேள்வி கேட்டு அங்கீகரித்தவர். இவருடைய ஊர் அதங்கோடு என்பது. இவர் அந்தண குலத்தினர்; நான்மறை முற்றும் பயின்றவர். இது ''நிலந்தரு திருவிற் பாண்டிய னவையத் தறங்கரை நாவி னுன்மறை முற்றிய வதங்கோட் டாசாற் கரிறபத் தெரிந்து'' என்னும் பனம்பாரனுர் கூறியதான தொல்காப்பியப் பாயிரத்தால் துணியப்படும். ''சீரதங் கோட்டு முனி கேட்ட நூல்'' என்னும் துறைமங்கலம் சிவப்பிரகாசர் பாடலால் இவர் கேட்டது பற்றியே தொல்காப்பியம் சிறப்பிக்கப்பட்டிருத்தல் காண்க. இடைச்சங்கத்திலிருந்த தொல்காப்பிய முனிவர் இயற்றிய நூலைக் கேட்டாரென்றதனுல் இவர் இடைச்சங்கத்தார் காலத்தினர் என்பது சொல்லாமலேயே விளங்குகின்றது. இவர் தொல்காப்பியம் கேட்ட வரலாற்றை ''வட வேங்கட'' மென்னும் பாயிரச் சூத்திரத்திற்கு நச்சினுர்க்கினியர் எழுதிய உரையானும் உணர்க.

அதியன் விண்ணத்தனுர்:— இவருடைய பாடல் அகநானூற்றில் காணப்படுதலின் இவர் கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவரே. அதியவன் வண்ணத்தனுரென்றும் பிரதிபேதம் உண்டு. அகநானூற்றில் 301 ஆவது செய்யுளாகிய ''வறனுறு செய்தியின்'' என்ற செய்யுள் ஒன்றே இவர் இயற்றியதாகத் தெரிகின்றது.

வறனுறு செய்தியின் வாடுபு வருந்திப்
படர்மிகப் பிரிந்தோர் உள்ளுபு நினைதல்
சிறிநனி யான்றிக மென்றி தோழி
நல்குநர் ஒழித்த கூலிச் சில்பதம்
ஒடிவை இன்றி ஓம்பா துண்டு
நீர்வாழ் முதலை ஆவித் தன்ன
ஆரை வேய்ந்த அறைவாய்ச் சகடத்
தூரிகை தென்னு வூறில் வாழ்க்கைச்

சுரமுதல் வருத்த மரமுதல் வீட்டிப்
பாடின் றெண்கிணை கறங்கக் காண்வரக்
குவியிணர் எருக்கின் றதர்பூங் கண்ணி
ஆடூஉச் சென்னித் தகைப்ப மகடூஉ
முளரித் தீயின் முழங்கழல் விளக்கத்துக்
களரி யாவிரைக் கிளர்பூங் கோதை
வண்ண மார்பின் வனமுலைத் துயல்வரச்
செறிநடைப் பிடியொடு களிறுபுணர்ந் தென்னக்
குறுநெடுந் தூம்பொடு முழவுபுணர்ந் திசைப்பக்
கார்வான் முழக்கின் நீர்மிசைத் தெவுட்டுந்
தேரை ஒலியின் மானச் சீரமைத்துச்
சில்லரி கறங்குஞ் சிறுபல் லியத்தொடு
பல்லூர் பெயர்வனர் ஆடி ஒல்லெனத்
தலைப்புணர்த் தசைத்த பஃறொகைக் கலப்பையர்
இரும்பேர் ஒக்கல் கோடியர் இறந்த
புன்றலை மன்றம் காணின் வழிநாள்
அழுங்கன் மூதூர்க் கின்னா தாகும்
அதுவே மருவின மாலை யதனால்
காதலர் செய்த காதல்
நீடின்று மறத்தல் கூடுமோ மற்றே.

(அகம். 301.)

ஆவித்து—கொட்டாவிவிடுதல்

அந்திலிளங் கீரனார்:— இவருடைய பாடல் அகநானூற்றில் காணப்படுகின்றமையின் இவர் கடைச்சங்கப் புலவருள் ஒருவரே. அகநானூற்றில் 71 ஆவது செய்யுளாகிய ''நிறைந்தோர்த்தேரும்'' என்பதொன்றே இவர் செய்ததாகத் தெரிகின்றது. கடைச்சங்கப் புலவர்களுள்ளே இளங்கீரனாரென்ற பெயருள்ள வேறொருவர் உண்மையின் அவரினின்றும் பிரித்தறிதல் பொருட்டே இவர் பெயருக்கு 'அந்தில்' என்னும் அடைமொழி கொடுக்கப்பட்டதுபோலும்.

நிறைந்தோர்த் தேரு நெஞ்சமொடு குறைந்தோர்
பயனின் மையிற் பற்றுவிட் டொரூஉ

நயனின் மாக்கள் போல வண்டினஞ்
சுனைப்பூ நீத்துச் சினைப்பூப் படர
மையின் மானின மருளப் பையென
வெந்தாறு பொன்னி னந்தி பூப்ப
ஐயறி வகற்றும் கையறு படரோ
டகலிரு வானம் அம்மஞ் சீனப்
பகலாற்றுப் படுத்த பழங்கண் மாலை
காதலர்ப் பிரிந்த புலம்பி னுேதக
வாரஞ ருறுந ரருநிறஞ் சுட்டிக்
கூரெஃ கெறிஞரி னலைத்த லானு
தெள்ளற வியற்றிய நிழல்காண் மண்டிலத்
துள்ளூ தாவியின் பைப்பய நுணுகி
மதுகை மாய்தல் வேண்டும் பெரிதழிந்
திதுகொல் வாழி தோழி என்னுயிர்
விலங்குவெங் கடுவளி எடுப்பத்
துளங்குமரப் புள்ளின் துறக்கும் பொழுதே.

(அகம். 71.)

அம்மள்ளனுர்:— இவருடைய பாடல் நற்றிணையில் காணப்படுகின்றமையின் இவர் கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவரே. நற்றிணையில் 82 ஆம் செய்யுளாகிய ''நோயு நெகிழ்ச்சியும்'' என்பதொன்றே இவர் செய்த தாகக் கிடைக்கின்றது. இவரைப்பற்றிய செய்தி வேறு யாதொன்றும் தெரிந்திலது. கடைச்சங்கப்புலவர்களுள்ளே 'மள்ளனுர்' என்ற பெயருள்ள வேருெரு புலவர் உண்மையின் அவரினின்றும் பிரித்தற் பொருட்டே இவர் பெயருக்கு இவ்வடைமொழி கொடுக்கப்பட்டது போலும்.

நோயு நெகிழ்ச்சியும் வீடச் சிறந்த
வேய்வனப் புற்ற தோளை நீயே
என்னுடன் வருதியோ நன்னடைக் கொடிச்சி
முருகுபுணர்ந் தியன்ற வள்ளி போலநின்
னுருவுகண் ணெறிப்ப நோக்கலாற் றலனே
போகிய நாகப் போக்கருங் கவலைச்
சிறுகண் பன்றிப் பெருஞ்சின வொருத்தல்
சேரு டிரும்புற நீருெடு சிவண
வெள்வசிப் படீஇயர் மொய்த்த வள்பழீஇக்

18 TO 30 PAGES MISSING IN BOOK

இவர் பாடியனவாக உள்ள பாடல்கள்: 4. (நற். 1, அகநா. 1; புறநா. 1; குறுந். 1.

படைப்புப்பல படைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினு மிடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டும் கவ்வியுந் துழந்தும்
நெய்யுடை அடிசின் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லை தாம்வாழு நாளே.

(புறம். 188.)

ஆசிரியன் நல்லந்துவனர்:— இவர் செய்தனவாகப் பரிபாடலில் நான்கு பாடல்கள் (6, 8, 11, 20) உள்ளன. அவற்றுள் எட்டாவது முருகக்கடவுளுக்கும் 6, 11, 20 இம்மூன்றும் வையைக்கும் உரியன. எட்டாம் பாடலில் திரிமூர்த்திகளும் ஏனைத்தேவர் களும் முருகக்கடவுளைத் தரிசித்தற் பொருட்டு வந்திருத்தலால் திருப்பரங்குன்றம் இமயமலையையும் அதிலுள்ள சுனை இமயமலையிலுள்ள சரவணப் பொய்கையையும் ஒக்குமென்றும் ஆடவரும் மகளிரும் மகப்பேறு முதலிய பயன்களைக் கருதிப் பலவகைக் காணிக்கைகளுடன் அக்குன்றத்தைச் சார்ந்து அவரை வணங்கிப் பலவகை வழிபாடுகள் செய்து வேண்டிய வரங்களைப் பெற்றுய்கின்றனரென்றுங் கூறுதல் முகமாக அக்குன்றத்தின் பெருமையையும் அதிற் கடம்பமரத் தின் அடியிலே கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் முருகக்கடவுளின் திருவருட் சிறப்பையும் பாராட்டி யிருக்கும் பகுதியும், அக்குன்றின் வாழ்வையே தம் வாழ்வாகக் கருதி உள்ளமுருகி இவர் அதனை வாழ்த்தியிருக்கும் பகுதியும், பிறவும் அறிந்து இன்புறற் பாலன. இவற்றை உட்கொண்டே, ''சூர்மருங்கறுத்த சுடரிலை நெடுவேற், சீர்மிகு முருகன் றண்பரங் குன்றத் தந்துவன் பாடிய சந்துகெழு நெடுவரை, யின்றீம்

பைஞ்சுனை'' (அகநா. 59) என்று மதுரை மருதனிள நாகனுர் கூறினர் போலும்.

மற்றைப் பாடல்களில் மழைவளமும் வையைப் பெருக்கும் புதுநீர் விழவின்பொருட்டுப் பலர் தத்தமக் கேற்ற ஊர்திகளிலேறிக் கொண்டு வையைக்குக் கையுறைப் பொருள்களாக ஏந்திச் செல்லும் பொான் மீன் முதலியனவும் நீர் விளையாட்டிற்குக் கொண்டு செல்லும் கருவிகளும் தெப்ப வகைகளும் சனநெருக் கமும் நீர்விளையாட்டும் பலவகையாக ஆணையிடும் வழக்கும் பிறவும் கூறப்பட்டுள்ளன. . பரிபாடலைப் பெற்ற பெருமை வாய்ந்ததென 11ஆம் பாடலில் இவர் வையையாற்றைச் சிறப்பித்திருத்தலும் அது கடலோடு கலத்தலை 20ஆம் பாடலில் உவமை முகத் தால் தெரிவித்திருத்தலும் அறிதற்பாலன. அதனைத் தமிழ் வையை என்றும் தென்னவன் வையை என்றும் கூறுகிருர்.

இவர் கலித்தொகையில் நெய்தற்கலியை இயற்றி யவர்; அந்நூலில் ஐந்திணைக்குமுரிய கலிப்பாக்களைக் கோத்தவர்; இவை

''பெருங்கடுங்கோன் பாலை குறிஞ்சி கபிலன்
மருதனிள நாகன் மருதம்—அருஞ்சோழன்
நல்லுருத்தி ரன்முல்லை நல்லந் துவனெய்தல்
கல்விவலார் கண்ட கலி''.

என்னும் வெண்பாவாலும், ''புரிவுண்ட'' (கலித். 142.) என்பதனுரையிலும், 'உரிப்பொருளல்லன' (தொல். அகத். சூ. 13) என்பதனுரையிலும் நச்சி ஞர்க்கினிய ரெழுதியுள்ள வாக்கியங்களாலும் விளங்கு கின்றன. ஆசிரியன் என்பது கல்விச்சிறப்பால் பெற்ற பெயர்.

திருவள்ளுவமாலையிலுள்ள ''சாற்றிய பல்கலையும்'' என்னும் வெண்பாவை இயற்றியவரும் இவர்

என்பர். மதுரை, திருப்பரங்குன்றம் இவற்றின் இடை வழி, வையையாறு, திருமருதந்துறை யென்பவற்றின் இயற்கைகளேயும் ஆங்காங்கு நிகழ்ந்த பலவகைச் செய்திகளேயும் விளங்கக்கூறியிருத்தலால் இவருடைய ஊர் மதுரையென்றும், ''கடன் முகந்து கொண்ட'' (அகநா. 43) என்பதை இயற்றியவரான மதுரை யாசிரியன் நல்லந்துவனுர் என்பவர் இவரேயென்றும் தோன்றுகின்றது.

ஆசிரியன் பெருங்கண்ணன்:— ஆசிரியன் என்ற அடை மொழி வேறுசில புலவருக்கும் உண்டு. இவர்க்கு இப் பெயர் கல்விச்சிறப்பாலும், உறுப்பாலும் வந்தது போலும். இயற்பெயர் விளங்கவில்லே. இவர் கடைச் சங்கத்திற்பாடிய புலவர்கள் நானூற்று நாற்பத்தொன் பதின்மருள் ஒருவர். இவர் பாடியது குறுந்தொகையில் ''தொடி ஞெகிழ்ந்தனவே'' என்னும் 239 ஆம் செய்யுள் ஒன்றே. காந்தட் பூவிலுள்ள வண்டிற்குப் பாம்பு ஈன்ற மணியை உவமை கூறியது மிக அழகிது.

தொடிஞெகிழ்ந் தனவே தோள்சா யினவே
விடுநாண் உண்டோ தோழி விடர்முகைச்
சிலம்புடன் கமழு மலங்குகுலேக் காந்தள்
நறுந்தா தூதுங் குறுஞ்சிறைத் தும்பி
பாம்புமிழ் மணியிற் ரேன்றும்
முந்தூழ் வேலிய மலேகிழ வோற்கே.

(குறுந். 239.)

ஆடுதுறை மாசாத்தனுர்:— காவிரி நதியின் தென் பாலொன்றும் வடபாலொன்றும் வடவெள்ளாற்றங் கரையிலொன்றுமாக மூன்று ஊர்கள் ஆடுதுறையென் னும் பெயரினவாக உள்ளன. இவற்றுள் முன்னுள்ள இரண்டும் தேவாரம் பெற்றனவும் பின்னது புராண வரலாறுள்ளதுமான சிவஸ்தலங்கள்; இவை முறையே தென்குரங்காடுதுறை, வடகுரங்காடுதுறை, ஆடுதுறை என வழங்கும்; பின்னுள்ளது ஏழு துறைகளுள் ஒன்று.

தெய்வப் பெயரை மக்கட்கிட்டு வழங்குதல் மரபாதலின் ஐயனுருடைய திருநாமமாகிய மாசாத்தனுரென்பது இவருக்குப் பெயராக அமைந்தது போலும். சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைப் பாடியவரா தலால், இவர் சோழநாட்டினரென்றே கொள்வது தக்கது. அவன் இறந்தபொழுது பிரிவாற்ருமல் வருந்திப் பாடியிருத்தலால் அவன் இறந்தபின்னும் இவர் இருந்தாரென்பதும், அவனைப் பாடிய ஆலத்தூர்கிழார் முதலிய புலவர் ஒன்பதின்மரும் இவர் காலத்தினரென் பதும் தெரிகின்றன; ''பகைவர்களையும் அவர்கள் சேனைகளையும் கொன்று உன் பசியை எளிதில் ஒழிக்கும் இந்த வளவனைக் கைக் கொண்டாயே! இனி உன் பசியைத் தீர்க்கும் ஆற்றலுடையார் யாவர்? உனக்கே நீ தீங்கை விளைவித்துக் கொண்டமையின் நீ மிக்க பேதைமையுடையாய்!'' (புறநா. 227) என்று கூற்றத்தை நோக்கி இவர் கூறின செய்யுள் பாராட்டற் பாலது.

நனிபே தையே நயனில் கூற்றம்
விரகின் மையின் வித்தட் டுண்டனை
இன்னுங் காண்குவை நன்வா யாகுதல்
ஒளிறுவாண் மறவருங் களிறு மாவும்
குருதியங் குரூஉப்புனற் பொருகளத் தொழிய
நாளு மானுன் கடந்தட் டென்றுநின்
வாடுபசி யருத்திய வசைதீர் ஆற்றல்
நின்னோர் அன்ன பொன்னியற் பெரும்பூண்
வளவன் என்னும் வண்டுமூசு கண்ணி
இனையோற் கொண்டனை யாயின்
இனியார் மற்றுநின் பசிதீர்ப் போரே.

(புறம். 227)

ஆதிமந்தியார்:— நல்லிசைப் புலமை வாய்ந்த மெல் லியலார்களுள் இவர் ஒருவர். இவர் கரிகால் பெரு வளவனுடைய புத்திரியார், ஆதிமருதியார் என்பது இவரது பெயராக இருந்திருக்கலாமென்றும் பிறகு எழுதுவோர் கைப்பிழையால் அப்பெயர் ஆதிமந்தி

யார் என்று மாறியிருக்குமென்றும் ஐயரவர்கள் நினைக்கிறார்கள். இவர் பெயர் மந்தியெனவும் வழங்கும். வஞ்சிக்கோனாகிய ஆட்டனத்தி என்பானை இவர் மணந்தவர். அவன் பெயர் அத்தி யெனவும் வழங்கும். ஒரு சமயம் ஒரு நீர் விழாவிற் கழாரென்னும் ஊரைச் சார்ந்த காவிரித் துறையில் கணவனுடன் இவர் நீராடுகையில், கணவனைக் காவிரி வெள்ளத்திற் கவர்ந்து கொண்டது என்பதும் அதனால் மந்தியார் தம் கணவனைக் காணாது கவன்று பலவிடத்தும் தேடித் தேடிச் சென்று முடிவிற் கடற்கரையில் அரற்றி நின்றாரென்பதும் அப்போது இவரது கற்பின் பெருமையால் கடல், கரைக்கணித்தாக அவனைக் கொணர்ந்து நிறுத்தக் கண்டு இவர் மகிழ்ந்து தழுவிச் சேர்ந்தனரென்பதும் அகநா. 45, 76, 222, 236, 276, 396-ஆம் பாடல்களாலும், ''இது (குறுந். 31 காதலற் கெடுத்த ஆதிமந்தியார் பாட்டு'' என்ற நச்சினார்க்கினியர் உரையினாலும் (தொல். அகத். 54) சிலப். 21:11-5-ஆம் அடிகளாலும் உணரப்படும். கி.பி. 55-முதல் 95 வரையில் கரிகாற் பெருவளவன் என்று ஒருவன் இருந்தான் என்று சிலாசாசன ஆராய்ச்சியாளர் கூறுதலால் அவன் மகளாகிய இவர் காலமும் அறியத்தக்கதே. வெள்ளி வீதியார் என்ற பெண்பாற் புலவர் பரணர் முதலியோர் இவரைப் பாராட்டியுள்ளனர். அகநா. 147-ஆம் பாடலால் ஔவையாருக்குக் காலத்தால் முந்தியவர் வெள்ளி வீதியார் என்பதும், அகநா. 45-அம் பாடலால் வெள்ளி வீதியாருக்குக் காலத்தால் முந்தியவர் ஆதிமந்தியார் என்பதும் விளங்குகின்றன.

மள்ளர் குழீஇய விழவி னானும்
மகளிர் தழீஇய துணங்கை யானும்
யாண்டுங் காணேன் மாண்டக் கோனை
யானுமோர் ஆடுகள மகளே என்கைக்
கோடீர் இலங்குவளை நெகிழ்த்த
பீடுகெழு குரிசிலுமோ ராடுகள மகனே.

(குறுந். 31.)

ஆமூர்க் கௌதமன் சாதேவனார்:— இவர் ஆமூர் என்ற ஊரிலே பிறந்தவர் என்று தெரிகிறது. இவர் அந்தணர். இவருடைய பாடல் அகநானூற்றிலும், நற்றிணையிலும் உள்ளது. பாலைத் திணையைச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

தெண்கழி விளைந்த வெண்கல் உப்பின்
கொள்ளை சாற்றிய கொடுநுக ஒழுகை
உரனுடைச் சுவல பகடுபல பரப்பி
உமணுயிர்த் திறந்த வொழிக லடுப்பின்
வடியுறு பகழிக் கொடுவில் ஆடவர்
அணங்குடை நோன்சிலை வணங்க வாங்கிப்
பல்லா னெடுநிரை தழீஇக் கல்லென
வருமுனை யலைத்த பெரும்புகல் வலத்தர்
கனைகுரற் கடுந்துடிப் பாணி தூங்கி
உவலைக் கண்ணியர் ஊன்புழுக் கயரும்
கவலைக் காதலர் இறந்தனர் எனநனி
அவலம் கொள்ளன்மா காதலந் தோழி
விசும்பி னல்லேறு சிலைக்குஞ் சேட்சிமை
நறும்பூஞ் சாரற் குறும்பொறைக் குணஅது
வில்கெழு தடக்கை வெல்போர் வானவன்
மிஞிறுமூசு கவுள சிறுகண் யானைத்
தொடியுடைத் தடமருப் பொடிய நூறிக்
கொடுமுடி காக்குங் குரூஉக்க ணெடுமதிற்
சேண்விளங்கு சிறப்பி ஞமூ ரெய்தினும்
ஆண்டமைந் துறையுநர் அல்லர்நின்
பூண்டாங் காகம் பொருந்துதல் மறந்தே.

(அகம். 159.)

ஆர்க்காடு கிழார் மகனார் வெள்ளைக் கண்ணத்தனார்:— ஆர்க்காடு:— சோழநாட்டின்கண் உள்ளது; திருவையாற்றருகில் உள்ளதென்பர். இவர் பாடிய பாடலொன்று அகநானூற்றில் உள்ளது; முல்லைத்திணையைப் பற்றிய பாடலாகும்.

களையும் இடனால் பாக வுளையணி
உலகுகடப் பன்ன புள்ளியற் கலிமா
வகையமை வனப்பின் வள்புநீ தெரிந்த
தளவுப்பிணி யவிழ்ந்த தண்பதப் பெருவழி
ஐதிலங் ககலிலை நெய்கனி நோன்காழ்
வென்வேல் இளையர் வீங்குபரி முடுகச்
செலவுநாம் அயர்ந்தனம் ஆயின் பெயல
கடுநீர் வரித்த செந்நில மருங்கின்
வடுநெறி யீர்மணல் வாரணம் சிதரப்
பாம்புறை புற்றத்து ஈர்ம்புறங் குத்தி
மண்ணுடைக் கோட்ட வண்ண லேஎ
றுடனிலை வேட்கையின் மடநாகு தழீஇ
ஊர்வயிற் பெயரும் பொழுதிற் சேர்புடன்
கன்றுபயிர் குரல மன்றுநிறை புகுதரு
மாபூண் டெண்மணி யைதியம் பின்னிசை
புலம்புகொண் மாலை கேட்டொறும்
கலங்கினள் உறைவோள் கையறு நிலையே.

(அகம். 64)

ஆரிய வரசன் யாழ்ப்பிரமதத்தனார்:— ஆரிய வரசர் பலர் தமிழின்பால் ஆர்வங்கொண்டு அதனைக் கற்றமை விளங்கும். கபிலர் ஆரிய வரசன் பிரகத்தன் என்பானுக்குத் தமிழறிவுறுத்தற்குக் குறிஞ்சிப்பாட்டை இயற்றினார் என்பர். ''அறிகரி பொய்த்தல் ஆன்றோர்க்கில்லை'' என்று கூறி ஆன்றோரின் பெருமையை இவர் புலப்படுத்தியுள்ளார். சிலப்பதிகாரத்தில் ஆரிய மன்னரென்னும் ஒரு வகையார் கூறப்படுகின்றனர். இவர் அவர்களுள் ஒருவரோ வேறோ தெரியவில்லை.

அறிகரி பொய்த்தல் ஆன்றோர்க் கில்லை
குறுகல் ஓம்புமின் சிறுகுடிச் செலவே
இதற்கிது மாண்ட தென்ன ததற்பட்
டாண்டொழிந் தன்றே மாண்டகை நெஞ்சம்
மயிற்க ணன்ன மாண்முடிப் பாவை
நுண்வலைப் பரதவர் மடமகள்
கண்வலைப் படூஉங் கான லானே.

(குறுந். 184)

ஆலங்குடி வங்கனார்:— ஆலங்குடியென்னும் பெயருள்ள ஊர்கள் பல இருத்தலின் இவர் ஊர் இன்ன ஆலங்குடி யென்று நிச்சயிக்கக் கூடவில்லை. தொகை நூல் களில் ஐந்தும் (நற். 3, அகநா. 1, புறநா. 1) திருவள்ளுவ மாலையில் ஒரு செய்யுளும் இவர் செய்தன வாக இப்பொழுது காணப்படுகின்றன. புறத்திணைப் பாடலொழிய மற்ற எட்டுத்தொகைப் பாடல்கள் யாவும் மருதத் திணையைச் சார்ந்தன. காமக் கிழத்தியர் தலைவனை ஆடிப்பாவை போன்றான் என்று இகழ்தலும் (குறுந். 8), உயர் குடிப்பிறந்த கற்புடை மகளிர் தம் தலைவர் கொடுமை புரியினும் அதனை மறந்து அன்பு பாராட்டுதலும் (குறுந். 45) கூறும் முகத்தால் இவர் இருவேறு மகளிருக்கும் உள்ள வேற்றுமையை நன்கு புலப்படுத்துகின்றார். இவர் பாடிய நற். 330-ஆம் பாடலும் இவ்வேற்றுமையையே காட்டும். ''தலைவி தன் வயிற்றை அலைத்துக் கோடற் பொருட்டாகச் செறிந்த நம் தொடி ஒலிப்ப வீசி அவள் உறையும் சேரிக்கண் சிறிது பொழுது சூழ் வருவோம் வா, தோழீ' என்று பரத்தை தலைமகள் புறங் கூறினளாகக் கேட்டு மொழிந்தாளென்று (அகநா. 106) இவர் கூறியிருப் பதும் பரத்தையின் கொடுமையையே காட்டுகிறது.

காலை எழுந்து கடுந்தேர் பண்ணி
வாலிழை மகளிர்த் தழீஇய சென்ற
மல்ல லூரன் எல்லினன் பெரிதென
மறுவருஞ் சிறுவன் றாயே
தெறுவ தம்மவித் திணைப்பிறத் தல்லே.

(குறுந். 45)

ஆலத்தூர்கிழார்:— ஆலத்தூரிற் பிறந்தவர் இவர். ஆலத்தூர் என்ற பெயருள்ள ஊர்கள் தமிழ் நாட்டில் பல உள்ளன. இதனை இன்ன ஆலத்தூரென்று சொல்ல முடியவில்லை. இவர் வேளாளர். ''கணந்துட் பறவை ஆறலை கள்வர் வருவதையறிந்து ஒலிக்கும் இயல் புடையது'' (குறுந். 350) என்பதை இவர் குறித்துள் ளார். ''பிறர் கூறும் பழிமொழியை அஞ்சினால் காமம் மெலிவடையும்; பிறர் பழித்தல் அறும்படி அக் காமத்தை விட்டுவிடின் எனது பெண்மைநலனும் கற்பும் அழிந்து விடும்'' என்று தலைவி கூறுவதாகக் காமம், கவ்வை இவை இரண்டாலும் வரும் துன்பங்களை அழகாகக் குறித்துள்ளார், குறுந். 112. நன்றியறிவும், அரசர்களை இடித்துக் கூறும் மனவலியும் குறிப்பறிந் தளிக்கும் உபகாரிகளின் இயல்பை வெளிப்படுத்தும் அன்புடைமையும் போர் செய்யும் முறையை விளக்கும் இயல்பும் பொருள்களின் இயற்கை நலனைப் புலப் படுத்தும் நுண்ணறிவும் உடையவர் இவர். இவர் செய்தனவாகப் புறநானூற்றில் 5 செய்யுட்கள் காணப் படுகின்றன. இவராற் பாடப்பட்டோர் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனும் சோழன் நலங்கிள்ளியும் ஆவர்.

கௌவை அஞ்சிற் காமம் எய்க்கும்
எள்ளற விடினே உள்ளது நாணே
பெருங்களிறு வாங்க முரிந்துநிலம் படாஅ
நாருடை யொசியல் அற்றே
கண்டிசின் தோழியவர் உண்டவென் னலனே.

(குறுந். 112)

ஆலம்பேரி சாத்தனார்:— இவர் மதுரை யாருலவிய நாட்டு ஆலம்பேரி சாத்தனார் என்று வழங்கப்படுவர். (பேரி சாத்தனார், வாலம்பேரி சாத்தனார்.) இவர் பாடியனவாக நற்றிணையில் நான்கு பாடல்களும் அகநானூற்றில் நான்கு பாடல்களும் உள்ளன.

மடலே காமந் தந்த தலரே
மிடைபூ வெருக்கி னலர்தந் தன்றே
இலங்குகதிர் மழுங்கி யெல்விசும்பு படரப்
புலம்புதந் தன்றே புகன்றுசெய் மண்டில
மெல்லாந் தந்ததன் றலையும் பையென
வடந்தை துவலை தூவக் குடம்பைப்
பெடைபுணர் அன்றி லியங்குகுரல் அளைஇக்
கங்குலுங் கையறவு தந்தன்
றியாங்கா குவென்கொல் அளியேன் யானே.

(நற் செய். 152)

ஆலியார்:— ஆலி என்பது சோழநாட்டின் உள் நாடுகளுள் ஒன்ருகிய ஆலிநாடென்பதன் தலைநகர். இது திருமங்கையாழ்வார் அவதரித்த தலமென்பர். இவ்வூரினராதலால் இவர் இப்பெயர் பெற்ருர்போலும். இவ்வூர்ப் பெயர் திருவாலியென வழங்கா நிற்கும். தன்னுடைய தலைவன் தனக்குச் சிறந்த உணவை யளிக்கின்ருனேயன்றி, போர் செய்தற்குத் தன்னை முந்திச் செல்லென்று ஏவுகின்ருனல்லனென்று ஒரு வீரன் சொல்லியதாக இவர் இயற்றிய பாடலின் (புறநா. 298) பொருள் வீரச்சுவையைப் புலப்படுத்துகின்றது. இதனல் இவர் வீரர் குடியிற்பிறந்தவராகவும் கருதப்படுகிருர்; இப்பெயர் சில பிரதிகளில் ஆவியாரென்றும், ஆனியாரென்றும் காணப்படுகிறது.

எமக்கே கலங்க றருமே தானே
தேறல் உண்ணு மன்னே நன்றும்
இன்ஞன் மன்ற வேந்தே யினியே
நேரா ராரெயின் முற்றி
வாய்மடித் துரறிநீ முந்தென் ஞனே.

(புறம் 298)

(கு-ரை) கலங்கிய கள்ளை எமக்கே கொடுப்பான் தான் தெளிந்த கள்ளை உண்பான் முன்பு என்றது, தலைவன் எம்மை மேலாக மதித்து முன்பு இனியது

செய்வான் என்றபடி. 'எமக்கு என்பது தன்போல் வாரையும் உளப்படுத்தி நின்றது. மன்—கழிவுப் பொருளது. வேந்து இனி இன்னுன்—வேந்தன் இப்பொழுது இன்னுதவனுயினுன்: அதனைப் பின் கூறுவார். பகைவருடைய மதிலைச் சூழ்ந்து இதழைக் கவ்விமுழங்கிக் கொண்டு நீ முற்படுக வென்னுனுகித் தான் முற்படுவான். ஆதலால், இன்னுன் என்க·

ஆவூர் கிழார்:— ஆவூரென்னும் பெயருள்ள ஊர்கள் பல இருத்தலின் இந்த ஆவூர் இன்ன இடத்திலுள்ள தென்று தெரிந்துகொள்ளக் கூடவில்லை; ஆனுலும், மருதநிலத்தின் வளம் இவர் பாடலிற் கூறப்பெற்றிருத் தலின், இது சோழநாட்டிற் காவிரியின் தென்கரை யிலுள்ள ஆவூராக இருக்கலாமென்று ஊகிக்கப்படுகிறது. கள்ளியின் முள்ளிற்குக் காளையின் பதனழிந்த கொம்புகளை இவர் உவமை கூறியிருக்கின்ருர். இப் பெயர் ஆவூரழகியாரென்றும் சில பிரதிகளிற் காணப் படுகிறது.

உழுதூர் காளை யூழ்கோ டன்ன
கவைமுட் கள்ளிப் பொரியரைப் பொருந்திப்
புதுவர கரிகாற் கருப்பை பார்க்கும்
புன்றலைச் சிருஅர் வில்லெடுத் தார்ப்பிற்
பெருங்கட் குறுமுயல் கருங்கல னுடைய
மன்றிற் பாயும் வன்புலத் ததுவே
கரும்பி னெந்திரஞ் சிலைப்பி னயல
திருஞ்சுவல் வாளை பிறழு மாங்கண்
தண்பணை யாளும் வேந்தர்க்குக்
கண்படை யீயா வேலோ னூரே.

(புறம். 322)

(கு-ரை.) வரகு அரிகால்-வரகம் பயிரின் அரிந்ததாள். கருப்பை-எலியை. கருங்கலன்-மண்ணுல் செய்யப்பட்ட அடிசிற்பாண்டம். எந்திரம்-ஆலை, சுவல்-பிடர், தண்பணை-மருதநிலத்தைச்சார்ந்த ஊர்கள்.

ஆவூர்கிழார் மகனார் கண்ணத்தனார்:— இவர் அகநானூற்றில் உள்ள ''வயங்குவெள்ளருவி'' என்ற பாடலின் ஆசிரியர்.

வயங்குவெள் ளருவிய குன்றத்துக் கவாஅற்
கயந்தலை மடப்பிடி யினனே மார்ப்பப்
புலிப்பகை வென்ற புண்கூர் யானை
கல்லகச் சிலம்பிற் கையெடுத் துயிர்ப்பின்
நல்லிணர் வேங்கை நறுவீ கொல்லன்
குருகூது மிதியுலைப் பிதிர்வின் பொங்கிச்
சிறுபன் மின்மினி போலப் பலவுடன்
மணிநிற இரும்புதற் றுவு நாட
யாமே யன்றியும் உளர்கொல் பானாள்
உத்தி யரவின் பைத்தலை துமிய
உரவுரு முரறும் உட்குவரு நனந்தலைத்
தவிர்வி லுள்ளமொ டெஃகுதுணை யாகக்
கனையிருள் பரந்த கல்லதர்ச் சிறுநெறி
தேராது வரூஉம் நின்வயின்
ஆரஞர ரரும்படர் நீந்து வோரே.

(அகம். 202)

ஆவூர் மூலங்கிழார்:— இப்பெயர் இவருக்கு நாண்மீனால் வந்தது போலும்; மூலம்-ஒரு நக்ஷத்திரம். இவருடைய பாடல்களுள் அடியில் எடுத்துக் காட்டிய கருத்தமைந்த பகுதிகள் சிறந்தவை:— (1) ''செங்கோலினாகிய ஓரரசனது நாடு சுவர்க்கத்தினும் சிறந்தது; வேந்தே! நீ இன்சொல்லையும் பிறர் வந்து காணுதற்கு எளியதாகிய சமயத்தையும் உடையையாவை; (3) 'பல நாள் தேகம் உலரக் காத்திருந்து பெருஞ் செல்வரிடத்துப் பெற்ற யானை முதலிய பெரும் பரிசில்களைக் காட்டிலும் ஒருவன் அன்புடனளிக்கும் உணவைக் காலையிற் பனம் பட்டையில் உண்ணல் மிகச் சிறந்தது; (4) ''அரச! கையிலுள்ளதைக் கொடுத்தலும் இல்லாததை இல்லை யென்றலும் உலகியற்கை; அங்ஙனமின்றிப் பரிசிலரை அலைக்கழித்தல் உனக்கு நன்றன்று; நான் செல்வேன்'.

இவற்றால் இவருடைய குணவிசேடங்கள் புலனாகின்றன. இன்னும் பரம்பரைத் தொழிலை வழுவின்றிச் செய்து போதரும் ஓரந்தணனுடைய இயல்பையும், தன் வீரர்க்கு முன்னே போரில் முற்படும் ஓரரசனது இயற்கையையும், யானையின் மேலன்றி ஏனையிடங்களில் தன் வேலினை எறியாத ஒரு வீரனது இயல்பையும் இவர் பாராட்டியிருக்கின்றார். ஒருபகாரி இறந்த பின்பு அவன் வீட்டை நோக்கி, ''கணவனை யிழந்து மழித்த தலையை யுடைய கழிகல மகடூஉவைப் போல்கின்றாய் நீ'' என்று இரங்கிக் கூறியது யாவருடைய உள்ளத்தையும் கனியச் செய்யும். இவர் செய்தனவாகத் தொகை நூல்களில் 12-செய்யுட்கள் காணப்படுகின்றன; அகநா. 4, புறநா 8. இவராற் பாடப்பெற்றோர்: சோணாட்டுப் பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கவுணியன் விண்ணந்தாயன், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன் பாண்டியன் கீரஞ்சாத்தன், மல்லிக்கிழான் காரியாதி முதலியோர். இவர் காலத்திருந்த புலவர்: சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் முதலிய தலைவர் நால்வரைப் பாடிய பதின்மூவராவர்.

பல்சான் றீரே பல்சான் றீரே
குமரி மகளிர் கூந்தல் புரைய
அமரி னிட்ட அருமுள் வேலிக்
கல்லென் பாசறைப் பல்சான் றீரே
முரசுமுழங்கு தானைநும் அரசும் ஓம்புமின்
ஒளிறேந்து மருப்பினுங் களிறும் போற்றுமின்
எனைநாட் டங்குநும் போரே யனைநாள்
எறியார் எறிதல் யாவண தெறிந்தோர்
எதிர்சென் றெறிதலுஞ் செல்லா னதனால்
அறிந்தோர் யாரவன் கண்ணிய பொருளே
பலமென் றிகழ்தல் ஓம்புமி னுதுக்காண்
நிலனளப் பன்ன நில்லாக் குறுநெறி
வண்பரிப் புரவிப் பண்புபா ராட்டி
எல்லிடைப் படர்தந் தோனே கல்லென

வேந்தூர் யானைக் கல்ல
தேந்துவன் போலான்றன் இலங்கிலை வேலே.

(புறம். 301)

(குறிப்புரை) சான்றோர்-போர்வீரர் பலம்-பலராக வுள்ளோம். பரி-நடை.

இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார்:— இவர் பத்துப்பாட்டுள், சிறுபாணாற்றுப் படையை இயற்றியவர். இவருடைய நாடாகிய இடைக்கழிநாடென்பது சென்னைக்குத் தென்மேற்கிலுள்ள ஒரு சிறு நாடு; இக்காலத்து இந்நாடு இப்பெயராலேயே வழங்கப் பெறுகின்றது. இஃது உப்பங்கழிகளுக்கு இடையே இருத்தலின் இப்பெயர் பெற்றது போலும்; இதிலுள்ள ஊர்கள் பலவற்றுள் நல்லூரென்று ஒரூர் இருக்கிறது; அதுவே இந்நூலாசிரியருடைய ஊராக இருத்தல் வேண்டும். இவருடைய காலத்துப் புலவர் நல்லியக் கோடனைப் பாடிய புறத்திணை நன்னாகனாராவார். இவர் காலத்துப் பிரபுக்கள் இப்பாட்டுடைத் தலைவனாகிய நல்லியக் கோடனும், புறத்திணை நன்னாகனாராற் பாடப் பெற்ற ஓய்மானல்லியாதனும், ஓய்மான் வில்லியாதனும், கரும்பனூர்க்கிழானுமே. தத்தனாரென்பது இவரது இயற்பெயரென்றும் கல்வி மேம்பாடுபற்றி நத்தத்தனாரென்ற பெயர் இவருக்குப் பிற்காலத்தில் வழங்கலாயிற்றென்றும் தோற்றுகின்றது. 'ந' என்பது சிறப்புப் பொருளைத் தருவதோர் இடைச்சொல்; நக்கீரர், நப்பாலத்தர், நப்பூதனார், நச்செள்ளையார் முதலிய பெயர்களாலும் இது விளங்கும். நத்தத்தனாரென ஒரு புலவர் பெயர் புறநானூற்றில் 218-ஆம் பாட்டின் ஆசிரியர் பெயரின் பாடபேதமாகக் காணப்படுகின்றது. அந்த நத்தத்தனாரென்பவரும், திருவள்ளுவமாலையிலுள்ள ''ஆயிரத்து முந்நூற்று முப்பது'' என்னும் முதலையுடைய வெண்பாவை இயற்றிய நத்தத்தனாரென்பவரும், நத்தத்தமென்னும் இலக்கண நூலை இயற்றிய நத்தத்தரென்பவரும் இவரும் ஒருவரோ வேறோ தெரியவில்லை.

இவரால் இயற்றப்பட்ட சிறுபாணாற்றுப்படையினுல், இவர் ஐந்திணையையும் சிறப்பித்துப் பாடுதலில் வல்லவரென்பதும், பண்களைப் பற்றிய நுண்ணறிவுடையவரென்பதும் புலப்படுகின்றன. ''திறவாக் கண்ணசாய் செவிக் குருளை'' (130) என்பது முதலிய அடிகளில் வறுமை நிலையை நன்கு விளக்கிக் கூறியுள்ளார். தாம் தொண்டைநாட்டினரேயாயினும் மதுரைச்சங்கத்தே தமிழாராய்ந்து கண்கூடாகச் சங்கத்தின் நிலையை அறிந்த நல்லிசைப் புலவராதலின் அம்மதுரையை, ''தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின், மகிழ்நனை மறுகின் மதுரை'' எனச் சிறப்பித்திருக்கின்ருர். ஓய்மானுடு-திண்டிவனத்தைச் சூழ்ந்த பிரதேசம்.

இடைக்காடனுர்:— இடைக்காடென்னும் ஊரிலுள்ளாராதலின், இவர் இப்பெயர் பெற்ருர். இடைக்காடு என்பது பட்டுக்கோட்டைத் தாலுகாவில் உள்ளது. இவர் சாதியில் இடையர். இவர் கபிலருடைய தோழர்; மற்றப் புலவர்களிடத்தும் அன்புடையவர்; கவிசெய்யும் ஆற்றலில் மிக்கோர்; இவை ''முன்னமோர் நாணன் மாட மதுரையின் முழுது ணர்ந்தோன், பின்னமில் கபிலன் ருேழன் பெயரிடைக் காட னென்போன், இன்னியல் வாணர்க் கெல்லா மிதவியோன் கவியான் மிக்கோன்'', ''எனையந் தாதி சொன்னவன் கபிலன் ருேழன்'' (திருவால. 20:1, 11) என்பவற்ருல் அறியலாகும். ''கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்'' என்று திருக்குறளினியல்பைப் புலப்படுத்திப் பாடியிருத்தலால், இவர் பெரும் பொருளைச் சிறுகவியில் அடக்கும் இயல்பினரென்பதும் சுருங்கச் சொல்லலென்னும் அழகில் மிக்க விருப்பமுடையவரென்பதும் புலனுகின்றன. அரச! மலையினின்றிழிந்து ஆறுகள் கடலை நோக்குவது போலப் புலவர்கள் நின்னையே நோக்கினர்; நீ பகை வேந்தருடைய மண்களை நோக்கினை' (42) எனப்புறநானூற்றிலும்

வேறு வகையாக ஏனைத்தொகை நூல்களிலும் இவர் கூறியிருக்கும் உவமைகள் மதிக்கற்பாலன. இவருடைய செய்யுட்களை உற்றுநோக்குமிடத்துப் பெரும்பான் மையாக முல்லைத்திணை, மழை, இடைச்சாதி என்பவற்றின் இயல்புகளும் சிறுபான்மையாக மருதத்திணை வளமும் அமைந்திருப்பது விளங்கும். சில பாடல்கள் இடைக்காடர் ஊசிமுற்றியென்று பழைய உரைகளிற் காணப்படுகின்றன; ஊசிமுறியெனப் பெயரிய நூலொன்று இவராற் செய்யப்பட்டிருந்ததென்று தெரிகின்றது; ஊசி-எழுத்தாணி. இவர், ஒரு பாண்டியன் மீது சில பாடல்களைப் பாடிக்கொண்டு சென்று அவனைக் கண்டு தெரிவித்தபொழுது அவன் அவற்றை மதியாதிருந்தமை கண்டு மனம் நொந்து உடனே ஆலவாயடிகளையடைந்து குறையிரந்து நிகழ்ந்ததனை விண்ணப்பித்து வடபாற்சென்று ஓரிடத்திருப்ப, அவரும் சங்கப்புலவர்களும் இவர்பின் சென்று இவருடன் இருந்தாரென்றும், இந்நிகழ்ச்சியை யறிந்த பாண்டியன் மனங்கலங்கி, இவரையடைந்து குறையிரந்து இவர் மனவருத்தத்தைத் தீர்த்தானென்றும் இருவகைத் திருவிளையாடல்களிலும் ஒரு சரித்திரம் வழங்குகின்றது. ''திருந்திய செல்வ மதுரைச் செழியன்முன் சென்றடியேன், அருந்தமிழ் பாடினன் றள்ளின னேயென் றவன்செல்லவே, கரும்பன சொல்லி யுடன்வட பாலிடைக் காடனுக்காப், பரிந்துபின் போன சொக் கேபர தேசிபயகரனே'' (திருவிளையாடற் பயகரமாலை 20), ''கூறுமிடைக் காடனியற் கவிதை பாடிக் கொடுகாண மன்னிகழ்ந்து தள்ள நொந்தே வீறுயரா லயத்தணுகிப் பொருணீ சொல்லுன் மெல்லியென மறைபுகலு மிகழ்ந்த துன்னை, மாறகலுன் றேவியைமற் றிலையென் றேத்தி வரைந்தேக யானுமே குவலென் றேகி, ஏறியசங் கத்தொடிருந் தழைப்பப் போந்தானிடத்தைவட திருவால வாயென் ருர்கள்'' (கடம்பவன புராணம் இலீலாசங்கிரக அத்தியாயம் 20) என்பவற்ருலும் இவ்வரலாறு அறியப் படும். இவராற் பாடப்பட்டோன் சோழன் குள

முற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன். எட்டுத்தொகையில் இவர் இயற்றிய செய்யுட்கள் 11 (நற் 3: அகநா 6; புறநா 1; குறுந் 1).

இடைக்குன்றூர் கிழார்:— இவருக்கு இப்பெயர் ஊரான் வந்தது. நெடுஞ்செழியனென்பான் தனது மிக்க இளமைப்பருவத்தில், சோணாட்டுள்ள தலையாலங்காடென்னும் ஊரில் முடிமன்னர்களாகிய சேர சோழர் இருவரையும் ஐம்பெரு வேளிரையும் பொருது வென்ற பெருவிறலும் அவனுடைய அடக்கமும் பிறவிசேட குணங்களும் புறநானூற்றுள் இவர் வாக்கில் நன்கு அறியலாகும். இவராற் பாடப்பட்டோன் அப்பாண்டியன். இவர்காலத்துப் புலவர் அவனைப் பாடிய கல்லாடனார் முதலியோராவர். இவர் பாடிய புறநானூற்றுப் பாடல்கள் 76, 77, 78, 79.

மூதூர் வாயிற் பனிக்கய மண்ணி
மன்ற வேம்பின் ஒண்குழை மலைந்து
தெண்கிணை முன்னர்க் களிற்றி னியலி
வெம்போர்ச் செழியனும் வந்தனன் எதிர்ந்த
வம்ப மள்ளரோ பலரே
எஞ்சுவர் கொல்லோ பகறவச் சிறிதே.

(புறம். 79)

இடையன் சேந்தன் கொற்றனார்:— இவர் இடையர் குலத்தைச் சார்ந்தவர் என்று பெயருக்கு முன்னுள்ள அடைமொழியால் அறியலாம். பாழியெறிந்த இளம் பெருஞ்சென்னியைப் புகழ்ந்து பாடியுள்ளார். இவர் இடையன் செங்கொற்றனார் என்றும் வழங்கப்படுகிறார். இவரது பாடல் ஒன்று அகநானூற்றில் உள்ளது.

சென்று நீடுநர் அல்லர் அவர்வயின்
இனைதல் ஆனாய் என்றிசின் இகுளை
அம்புதொடை அமைதி காண்மார் வம்பலர்
கலனிலர் ஆயினுங் கொன்றுபுள் ளூட்டும்

கல்லா இளையர் கலித்த கவலைக்
கணநரி இனனொடு குழீஇ நிணனருந்தும்
நெய்த்தோர் ஆடிய மல்லல் மொசிவிரல்
அத்த எருவைச் சேவல் சேர்ந்த
அரைசேர் யாத்த வெண்டிரள் வினைவிறல்
எழூஉத் திணிதோட் சோழர் பெருமகன்
விளங்குபுகழ் நிறுத்த இளம்பெருஞ் சென்னி
குடிக்கடன் ஆகலிற் குறைவினை முடிமார்
செம்புறழ் புரிசைப் பாழி நூறி
வம்ப வடுகர் பைந்தலைச் சவட்டிக்
கொன்ற யானைக் கோட்டிற் றோன்றும்
அஞ்சுவரு மரபின் வெஞ்சுரம் இறந்தோர்
நோயிலர் பெயர்த லறியின்
ஆழல மன்னோ தோழியென் கண்ணே.

(அகம். 375)

**இடையன் நெடுங்கீரனார்:—** இவர் அகநானூற்றின் 166 ஆம் பாடலுக்கு ஆசிரியர், இடையர் குலத்தைச் சார்ந்தவர். இப்பாட்டினை ''இல்லோர் செய்வினை யிகழ்ச்சிக்கண்'' என்னும் துறைக்கு உதாரணமாகக் கொண்டு, இது பரத்தை பிறர் அலர் கூறிய வழிக் காமஞ்சிறந்து புலந்தவாறு என்பர். நச். (தொல். பொருள் 151, 164.)

நன்மரங் குழீஇய நனைமுதிர் சாடி
பன்னாள் அரித்த கோஒ யுடைப்பின்
மயங்குமழைத் துவலையின் மறுகுடன் பனிக்கும்
பழம்பல் நெல்லின் வேளூர் வாயில்
நறுவிரை தெளித்த நாறிணர் மாலைப்
பொறிவரி யினவண் டூதல கழியும்
உயர்பலி பெறூஉம் உருகெழு தெய்வம்
புனையிருங் கதுப்பின் நீவெய் யோள்வயின்
அனையேன் ஆயின் அணங்குக என்னென

மனையோட் டேற்றும் மகிழ்நன் ஆயின்
யார்கொல் வாழி தோழி நெருநல்
தார்பூண் களிற்றின் தலைப்புணை தழீஇ
வதுவை ஈரணிப் பொலிந்த நம்மொடு
புதுவது வந்த காவிரிக்
கோடுதோய் மலிர்நிறை ஆடி யோரே.

(அகம். 166)

கோஒய்—கள்முகக்கும் பாத்திரம்.

இம்மென்கீரனார்:— இவர் இயற்பெயர் கீரனார். இவரது பாடலொன்று அகநானூற்றில் காணப்படுகின்றது. அப்பாடலில் ''நும்மோன் செய்த கொடுமைக்கு, இம்மென்று அலமரல் மழைக்கண் தெண்பனி மல்க'' என்றவிடத்து 'இம்மென்று' கூறியது நோக்கி இம்மென்கீரனார் என்று வழங்கப்பட்டார் என்று தெரிகிறது.

இழைநிலை நெகிழ்ந்த எவ்வம் கூரப்
படர்மலி வருத்தமொடு பலபுலந் தசைஇ
மென்றோள் நெகிழச் சாஅய்க் கொன்றை
ஊழுறு மலரிற் பாழ்பட முற்றிய
பசலை மேனி நோக்கி நுதல்பசந்
தின்னேம் ஆகிய எம்மிவண் அருளான்
நும்மோன் செய்த கொடுமைக் கிம்மென்
றலமரல் மழைக்கண் டெண்பனி மல்க
நன்றுபுற மாறி யகறல் யாழநின்
குன்றுகெழு நாடற் கென்னெனப் படுமோ
கரைபொரு நீத்த முரையெனக் கழறி
நின்னொடு புலத்தல் அஞ்சி யவர்மலைப்
பன்மலர் போர்த்து நாணுமிக வொடுங்கி
மறைந்தனை கழியு நிற்றந்து செலுத்தி
நயனறத் துறத்தல் வல்லி யோரே
நொதுமல் ஆளர் அதுக ணோடா
தழற்சினை வேங்கை நிழற்றவிர்ந் தசைஇ
மாரி புறந்தர நந்தி யாரியர்
பொன்படு நெடுவரை புரையும் எந்தை

பல்பூங் கானத் தல்கி யின்றிவண்
சேர்ந்தனை செலினே சிதைகுவ துண்டோ
குயவரி யிரும்போத்துப் பொருத புண்கூர்ந்
துயங்குபிடி தழீஇய மதனழி யானை
வாங்கமைக் கழையின் நரலுமவர்
ஓங்குமலை நாட்டின் வரூஉ வோயே.

(அகம். 398)

இரங்குகுடிக் குன்றநாடன்:- இவரது இயற்பெயர் தெரியவில்லை. இவர் பாடியுள்ள பாடல் ஒன்று அகநானூற்றில் உள்ளது. ''விலங்கிருஞ் . . . . . செலன்மாண்புற்ற'' என்புழி வேறுபன்மொழிய தேஎத்தைக் கொள்ளக் கருதிப் போர்த்தொழிலைச் செலுத்தும் உரன்மிக்க நெஞ்சமென்றலின் இது குறுநிலமன்னன் தன் பகைவயின் நாடுகொள்ளச் சென்றதாம், வேந்தனெனப் பெயர் கூறுமையின் என்பர், நச் (தொல். பொருள் 32.)

விலங்கிருஞ் சிமையக் குன்றத் தும்பர்
வேறுபன் மொழிய தேஎ முன்னி
வினைநசைஇப் பரிக்கு முரன்மிகு நெஞ்சமொடு
புனைமாண் எஃகம் வலவயின் ஏந்திச்
செலன்மாண் புற்ற நும்வயின் வல்லே
வலனா கென்றலு நன்றுமற் றில்ல
கடுத்தது பிழைக்குவ தாயிற் றெருடுத்த
கைவிரற் கவ்வுங் கல்லாக் காட்சிக்
கொடுமரம் பிடித்த கோடா வன்கண்
வடிநவி லம்பி னேவ லாடவர்
ஆளழித் துயர்த்த அஞ்சுவரு பதுக்கைக்
கூர்நுதிச் செவ்வா யெருவைச் சேவல்
படுபிணப் பைந்தலை தொடுவன குழீஇ
மல்லன் மொசிவிரல் ஒற்றி மணிகொண்டு
வல்வாய்ப் பேடைக்குச் சொரியு மாங்கட்
கழிந்தோர்க் கிரங்கு நெஞ்சமொ
டொழிந்திவ ணுறைத லாற்று வோர்க்கே.

(அகம் 215)

இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங் கௌசிகனார்:— இவர் மலைபடுகடாமென்னும் பாட்டை இயற்றியவர். இரணிய முட்டமென்பது மதுரையைச் சார்ந்த யானைமலை முதலிய இடங்களைத் தன்பாற் கொண்டதாகிய ஒரு சிறிய நாடென்பர். இவர் பெருமையும் பிறவும் மலைபடுகடாத்தின் 145-ஆம் அடியின் விசேடவுரையால் விளங்கும். இவர் சாதியால் அந்தணர். இதனை 'உறையூர் ஏணிச்சேரி முடமோசி, பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகன், கடியலூர் உருத்திரங் கண்ணனாரென்பன அந்தணர்க்குரியன. (தொல். மரபு சூ. 74. பேர்) என்பதனால் அறிக. இந் நூலன்றி நற்றிணையில் இரண்டு (44, 139) செய்யுட் களும் இவர் செய்தனவாகத் தெரிகின்றன. கௌசிகனா ரென்று ஒரு நல்லிசைப் புலவர் பெயர் பழைய நூல் களில் காணப்படுகின்றது; அவரும் இவரும் ஒருவரோ, வேறோ தெரியவில்லை.

இவர் பாடியவற்றுள், ஆகுளி, எல்லரி, குழல், குறும்பரந்தூம்பு, சிறுபறை, சீறியாழ், தட்டை, தண்ணுமை, துடி, தூம்பு, பன்றிப்பறை, பாண்டில், பேரியாழ், முழவென்னும் இசைக்கருவிகளைப் பற்றிய செய்திகளும், யாழ் வருணனையும், காட்டுவழியிடையே செல்லுகையில் இசைக் கருவிகளுக்கு நேரும் இடையூறு களும், அவற்றை நீக்கிக் கொள்ளும் உபாயங்களும் காணப்படுதலின், இவர் இசைக் கருவிகளைப் பற்றியும் பண்களைப்பற்றியும் நன்கறிந்தவரென்பது பெறப்படும். ''திருமழை தலைஇய விருணிற விசும்பின், விண்ணதி ரிமிழிசை கடுப்பப் பண்ணமைத்துத் திண்வார் விசித்த முழவு'' (மலைபடு 1-3) ''மழையெதிர் படுகண் முழவுக ணிகுப்ப!'' (மலைபடு 532) என முழவின் ஒலிக்கு மேகத்தின் முழக்கத்தை மலைபடுகடாத்தில் உவமை கூறியதை ஒட்டி, 'எழிலி......... முழவின் மண்ணார் கண்ணி னிம்மென விமிரூஉ'' (நற். 139) என மழை

முழக்கத்திற்கு முழவின் ஒலியை இவர் உவமித்திருத்தல் அறியத்தக்கது.

இருங்கோன் ஒல்லையாயன் செங்கண்ணனார்:— இவர் இடையர் மரபினர்; ஒல்லை என்பது ஒல்லையூர் என்பதனைக் குறிக்கும். புதுக்கோட்டை சமஸ்தானத்திலுள்ள ஒலியமங்கலம் என்னுமூரிலுள்ள சாசனத்தால் ஒல்லையூர் என்பது அவ்வூர் என்று தெரிகின்றது. இவரது பாடல் அகநானூற்றில் ஒன்று உள்ளது.

நட்டோர் இன்மையுங் கேளிர் துன்பமும்
ஒட்டா துறையுநர் பெருக்கமும் காணூஉ
ஒருபதி வாழ்தல் ஆற்றுப தில்ல
பொன்னவிர் சுணங்கொடு செறிய வீங்கிய
மென்முலை முற்றம் கடவா தோரென
நள்ளென் கங்குலும் பகலும் இயைந்தியைந்
துள்ளம் பொத்திய உரஞ்சுடு கூரெரி
ஆள்வினை மாரியின் அவியா நாளும்
கடறுழந் திவண மாகப் படருழந்
தியாங்கா குவள்கொ றூனே தீந்தொடை
விளரி நரம்பின் நயவரு சீறியாழ்
மலிபூம் பொங்கர் மகிழ்குரற் குயிலொடு
புணர்துயில் எடுப்பும் புனறெளி காலையும்
நம்முடை மதுகையள் ஆகி அணிநடை
அன்னமாண் பெடையின் மென்மெல இயலிக்
கையறு நெஞ்சினள் அடைதரும்
மைஈர் ஓதி மாஅ யோளே.

(அகம். 279)

இருந்தையூர்க் கொற்றன் புலவனார்:— திருக்கோவலூர் தாலுக்காவில் இருந்தையென்று ஓர் ஊர் உள்ளது. இருந்தையூர் என்பது அதுவாக இருக்கலாமென்று தோற்றுகிறது. இந்த ஊரிலேயே கருங்கோழி மோசியார் என்ற வேறோர் இடைச்சங்கப் புலவர் இருந்தனரென்று தெரியவருகிறது.
(சிலப் உரைப் அடியார்.)

நிரைவளை முன்கை நேரிழை மகளிர்
இருங்கல் வியலறைச் செந்தினை பரப்பிச்
சுனைபாய் சோர்விடை நோக்கிச் சினையிழிந்து
பைங்கண் மந்தி பார்ப்பொடு கவரும்
வெற்பிடை நண்ணி யதுவே வார்கோல்
வல்விற் கானவர் தங்கைப்
பெருந்தோட் கொடிச்சி இருந்த வூரே.

(குறுந். 335)

<u>இரும்பிடர்த்தலையார்:—</u> இவர் சோழன் கரிகாலனுடைய அம்மான்; அவனுக்குப் பெருந்துணையாய் இருந்தவர். ''சுடப்பட் டுயிருய்ந்த சோழன் மகனும், பிடர்த்தலைப் பேரானைப் பெற்றே- கடைக்காற் செயிரறு செங்கோல் செலீஇயினான்'' என்னும் பழமொழி வெண்பாவாலும் அதன் பழைய உரையாலும் உணர்க. யானைப்பிடரை இரும்பிடர்த்தலையென்று சிறப்பித்தமை பற்றி இவர் இப்பெயர் பெற்றார் போலும் (புறநா 3:11) இவருடைய இயற்பெயர் விளங்கவில்லை. தலைவன், இரவலருடைய குறிப்பறிந்து கொடுக்கும் வண்மைநலம் முதலியன இவராற் பாராட்டப்பெற்றுள்ளன. இவராற் பாடப்பட்டோன் பாண்டியன் கருங்கையொள்வாட் பெரும்பெயர் வழுதி.

உவவுமதி யுருவி னோங்கல் வெண்குடை
நிலவுக்கடல் வரைப்பின் மண்ணக நிழற்ற
ஏம முரசம் இழுமென முழங்க
நேமி யுய்த்த நேஎ நெஞ்சிற்
றவிரா வீகைக் கவுரியர் மருக
செயிர்தீர் கற்பிற் சேயிழை கணவ
பொன்னோடைப் புகரணிநுதற்
றுன்னருந்திறற் கமழ்கடாஅத்
தெயிறுபடை யாக வெயிற்கத விடாஅக்
கயிறுபிணிக் கொண்ட கவிழ்மணி மருங்கிற்
பெருங்கை யானை யிரும்பிடர்த் தலையிருந்து
மருந்தில் கூற்றத் தருந்தொழில் சாயாக்
கருங்கை ஒள்வாட் பெரும்பெயர் வழுதி
நிலம்பெயரினு நின்சொற்பெயரல்

பொலங்கழற்காற் புலர்சாந்தின்
விலங்ககன்ற வியன்மார்ப
ஊரில்ல வுயவரிய
நீரில்ல நீளிடைய
பார்வல் இருக்கைக் கவிகண் ணோக்கிற்
செந்தொடை பிழையா வன்க ணாடவர்
அம்புவிட வீழ்ந்தோர் வம்பப் பதுக்கைத்
திருந்துசிறை வளைவாய்ப் பருந்திருந் துயவும்
உன்ன மரத்த துன்னருங் கவலை
நின்னசை வேட்கையி னிரவலர் வருவரது
முன்ன முகத்தி னுணர்ந்தவர்
இன்மை தீர்த்தல் வன்மை யானே.

(புறம். 3.)

இழிகட்பெருங்கண்ணனார்:— இவருடைய பாடல் திருவள்ளுவமாலையில் உள்ளது.

இம்மை மறுமை யிரண்டும் எழுமைக்கும்
செம்மை நெறியின் தெளிவுபெற—மும்மையின்
வீடவற்றின் நான்கின் விதிவழங்க வள்ளுவனார்
பாடினர் இன்குறள்வெண் பா.

(திருவள். 40)

இளங்கீரந்தையார்:— கீரன் தந்தையார் என்ற தொடர் கீரந்தையார் என்று மருவியது. கீரந்தையார் என்று இடைச்சங்கப் புலவருள் ஒருவர் இருந்தார் என்பது (சிலப். அடியார்) தெரிய வருகிறது. பரி பாடலில் ஒரு பாட்டை எழுதியவரும் திருவள்ளுவ மாலையில் தப்பா முதற்பாவாற்' என்னும் செய்யுளை இயற்றியவரும் கீரந்தையார் என்று தெரிகிறது. அவருக்கும் இவ்விளங் கீரந்தையாருக்கும் தொடர் புண்டோ இல்லையோ தெரியவில்லை. கீரந்தையாரினும் இவர் இளைஞராயிருத்தல் பற்றி அவரினும் வேறுபடுத்த இவர் பெயர் இளங்கீரந்தையாரென்று வழங்கியிருத்தல் கூடுமோவென்று தோற்றுகிறது. இவர் பாடிய குறுந் தொகைச் செய்யுள் ஒன்று.

செல்வச் சிறுஅர் சீறடிப் பொலிந்த
தவளை வாய பொலஞ்செய் கிண்கிணிக்
காசின் அன்ன போதீன் கொன்றை
குருந்தோ டலம்வரும் பெருந்தண் காலையும்
காரன் றென்றி யாயிற்
கனவோ மற்றிது வினவுவல் யானே.

(குறுந். 148)

இளங்கீரனார்:— இவரும் எயினந்தை மகனார் இளங்கீரனாரென்பவரும் ஒருவரேயென்று சிலர் கூறுவர். அங்ஙனமாயின் இவர் வேடர் மரபினர். இவர் பாலைத் திணையைப் பலவாறு பாடியுள்ளார். தலைவியின் இனிமைக்கு வினைமுடித்தலால் வரும் இனிமையையும், மூங்கிலில் காற்றடித்தலால் உண்டாகும் ஓசைக்கு யானையின் நெட்டுயிர்ப்பையும், தலைவன் நெஞ்சம் தலைவியுடன் ஒன்றுபட்டுக் கரைவதற்கு ஈரம் காயாத பசிய மட்கலம் பெருமழையிற் கரைவதும் இவர் காட்டும் அரிய உவமைகளாகும். நற்-3, 62, 308 வழக்கமாக மகளிர் பிறை தொழுதலையும் சுவரிற் குறியமைத்து நாளெண்ணுதலையும் (அகநா.239, 289) இவர் குறித்துள்ளார். 'சோழர் உறந்தை', 'உதியன் மண்டிய ஞாட்பு' 'பொறையன் கொல்லி' என்ற தொடர்களால் இவர் சோழனையும் சேரரையும் பெயர் கூறுமற் குறித்திருக்கிறார். பொருந்தில் என்னும் ஊரினராகிய இளங்கீரனாரென்னும் புலவரொருவர் புறநானூற்றில் ஒரு செய்யுளையும் அகநானூற்றில் இரண்டு செய்யுட்களையும் பாடியுள்ளார். அவருக்கும் இவருக்கும் ஏதேனும் தொடர்பிருக்குமோ இல்லையோ என்பது தெரியவில்லை. எட்டுத்தொகையில் இவரியற்றியுள்ள செய்யுட்கள் 15 (நற் 6, குறுந். 1, அகநா. 8.).

யானயந் துறைவோ டேம்பாய் கூந்தல்
வளங்கெழு சோழர் உறந்தைப் பெருந்துறை

நுண்மணல் அறல்வார்ந் தன்ன
நன்னெறி யவ்வே நறுந்தண் ணியவே.
(குறுந். 116)

இளங்கோவடிகள் வரலாறு:— சிலப்பதிகாரத்தின் ஆசிரியராகிய இளங்கோவடிகள் சேரநாட்டில் வஞ்சி நகரத்திலிருந்து அரசுசெய்த சேரலாதன் என்னும் அரசனுடைய புத்திரர்; சேரன் செங்குட்டுவனுடைய தம்பி; இதனால் இவர் முதலில் இளங்கோவென்று சொல்லப்பட்டுப்பின்பு துறவுபூண்டமையால் இளங்கோவடிகள் என்று பெயர் பெற்றார்; இவர் துறவு பூண்ட பின்பே சிலப்பதிகாரம் இவராற் செய்யப்பட்டது. பத்தினியைத் துதித்தலையும் சில தருமங்களை உலகத்தார்க்குத் தெரிவிக்க வேண்டுமென்பதையும் எண்ணி இவர் சிலப்பதிகாரத்தைச் செய்தனர்; தமது மரபில் உள்ளாருடைய உயர்ச்சியைக் கூறுதல் போலவே ஏனைச் சோழ பாண்டியர்களுடைய உயர்வுகளையும் சிறிதும் வேறுபாடின்றி இவர் நன்றாகச் சொல்லியிருத்தலால், இவரது மனத்தூய்மை நன்கு புலப்படுகின்றது.

சிலப்பதிகாரத்தின் இடையிலேயே சொல்லப்படுபவர்களுடைய சரித்திர நிகழ்ச்சியாற் போந்த நற்பயனையும், தீப்பயனையும் ஆங்காங்கு உலகத்தாரை நோக்கிச் சொல்லிப்போதல் இவருக்கு இயல்பு. பின்னும் யாரேனும் மிக்க துன்பம் அனுபவித்ததாகச் சொல்லுங்கால் அத்துன்பத்திற்குக் காரணமாக முற்பிறப்பில் அவர்கள் தீவினை செய்ததைக் குறித்து இவர்மனம் இரங்கிற்றென்பதை ஆங்காங்குள்ள பாடற்பகுதிகள் நன்கு புலப்படுத்தும். இவர் மலைநாட்டினராதலால் இந்நூலில் அந்நாட்டுச் சொற்கள் பல அவ்வவ்விடத்து வந்துள்ளன.

இவர் சிலப்பதிகாரக் கதை நிகழ்ந்த காலத்திருந்தவராதலாற் காவிரிப்பூம்பட்டினத்திலும் மதுரையிலும் நடந்த சரித்திரங்களை அறிந்தோர் வாய்க்கேட்டும்

மலைநாட்டில் நிகழ்ந்தவற்றைக் கேட்டதோடு தாமே நேரிற்கண்டும் இந்நூலைச் செய்தனர். இங்ஙனம் செய்தாரென்பதைச் சிலப்பதிகாரப்பதிகமும், 24வது 30வது காதைகளும் விளக்கும்.

சிலப்பதிகாரக் கதையோடு தொடர்புடையதாகிய மணிமேகலையின் கதையையும் சிலப்பதிகாரத்தின் இறுதியிற்சேர்த்துப் பாடக் கருதியிருந்த இவர், 'இக் கதையை மணிமேகலையென்ற பெயரால் ஒரு காப்பிய மாக யான் செய்து முடித்தேன்' என்று மதுரைத் தமிழாசிரியர் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனுர் சொல்லக் கேட்டு அவ்வாறு செய்யாது விடுத்தனர்.

<u>சமயம்</u>:— கால்கோட் காதையில், செங்குட்டுவன் இமயஞ் செல்லப் புறப்பட்டபோது, ''நிலவுக்கதிர் முடித்த நீளிருஞ் சென்னி, உலகு பொதி யுருவத் துயர்ந்தோன் சேவடி, மறஞ்சேர் வஞ்சி மாலை யொடு புனைந், திறைஞ்சாச் சென்னி யிறைஞ்சி வலங் கொண்டு'' (அடி 54-7) எனவும், ''ஆடக மாடத் தறிதுயி லமர்ந்தோன், சேடங் கொண்டு சிலர் நின் றேத்தத், தெண்ணீர் கரந்த செஞ்சடைக் கடவுள், வண்ணச் சேவடி மணிமுடி வைத்தலின், ஆங்கது வாங்கி யணிமணிப் புயத்துத், தாங்கினனுகி'' (அடி 62-7) எனவும், செங்குட்டுவனை நோக்கி இமயத்தி னின்றும் வந்த முனிவர்கள் கூறியதாக, ''செஞ்சடை வானவ னருளினில் விளங்க, வஞ்சித் தோன்றிய வானவ கேளாய்'' (அடி 98-99) எனவும், வரந்தருகாதையில் மாடலன் கூறியதாக, ''ஆனே றூர்ந்தோ னருளிற் றோன்றி, மாநிலம் விளக்கிய மன்னவ னாதலின்'' (அடி 141-2) எனவும் இவரே கூறியிருத்தலாலும், இவர் அவனுடைய தம்பியாதலாலும் இவரது சமயம் சைவமென்று தோன்றுகின்றது. இவருக்கு அடிகளென்று பெயர் வந்திருத்தலையும் பதிகத்தில், ''குணவாயிற் கோட்டத்து'' என்பதிற் கோட்ட மென்றதற்கு

'அருகன் கோயில்' என்று அடியார்க்கு நல்லார் பொருள் செய்திருத்தலையும், இந்நூலிற் சிலவிடத்துச் சைனமதக் கொள்கையை இவர் மிகுத்துக் கூறியிருத்தலையும் கொண்டு இவரது சமயம் சைனமென்று ஐயுறுதற்கும் இடம் உண்டு.

காலம்:— ''உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள், உரைசாலடிக ளருள மதுரைக், கூலவாணிகன் சாத்தன் கேட்டனன்; '' என இந்நூற் பதிகத்து இறுதி யிலும், ''இளங்கோ வேந்த னருளிக் கேட்ப, வளங் கெழு கூல வாணிகன் சாத்தன், மாவண் டமிழ்த்திற மணிமே கலைதுற, வாறைம் பாட்டினு ளறியவைத் தனனென்'' என மணிமேகலையின் பதிகத்திறுதியிலும் கூறியிருத்தலால், இளங்கோவடிகளும் சாத்தனும் ஒருவர் முன்னிலையில் ஒருவர் முறையே சிலப்பதிகாரத் தையும் மணிமேகலையையும் அரங்கேற்றினரென்று போதருதலானும் தொல்காப்பியச் செய்யுளியலில், ''ஞகாரைமுதலா''(240) என்னும் சூத்திரத்தின் விசேட வுரையில், சீத்தலைச் சாத்தனாராற் செய்யப்பட்ட மணிமேகலை'' என்று பேராசிரியர் எழுதியிருத்தலால் மேற்கூறிய சாத்தனர் கடைச்சங்கப் புலவருளொரு வராகிய சீத்தலைச்சாத்தனரென்று தெரிதலானும், இளங்கோவடிகள் காலம் கடைச்சங்கப் புலவர் கால மென்று நிச்சயிக்கப்படுகிறது.

இளங்கோவடிகளுக்குத் தமையனாகிய செங்குட்டுவன் பத்தினிக் கடவுளாகிய கண்ணகியார்க்குக் கோயில் சமைத்து விழாக் கொண்டாடிய காலத்து இலங்கை யரசனாகிய கயவாகுவென்பவன் உடனிருந்தானென்று வரந்தரு காதையாலும், அக்கயவாகுவும் கண்ணகி யார்க்குக் கோயில் கட்டுவித்து விழாக் கொண்டாடினா ரென்று சிலப்பதிகாரப் பதிகத்தைச் சார்ந்த உரைபெறு கட்டுரையாலும் தெரிகின்றன.

இற்றைக்குச் சற்றேறக்குறைய 1800 வருடங்களுக்கு முன்பு கயவாகுவென்னும் அரசனொருவன் இருந்தானென்று இலங்கைச் சரித்திரமாகிய மகாவம்சத்தாற் புலப்படுகின்றது. பின்னும் சற்றேறக்குறைய 800 வருடங்களுக்கு முன்பு கயவாகுவென்று மற்றோர் அரசனிருந்ததாகவும் அச்சரித்திரத்தாற் தெரியவருகின்றது. ஆயினும் இந்நூலில் கூறிய வேறு சில அரசர்களுடைய காலத்தை ஆராயும்போது இந்நூலாசிரியர் காலம் முதற்கயவாகுவின் காலமென்றே துணியப்படுகின்றது.

இளந்தத்தன்:— இவன் ஒரு புலவன். சோழன் நலங்கிள்ளியிடத்திருந்து உறையூர் புகுந்தபொழுது, ஒற்று வந்தானென்று காரியாற்றுத்துஞ்சிய நெடுங்கிள்ளியால் எண்ணப்பட்டு அவன் கொல்லப் புகுந்தவிடத்துக் கோவூர்கிழாராற் பாடி விடுவிக்கப்பட்டான்.

இளந்தேவனார்:— இவர் வணிகர். மதுரைப் பண்டவாணிகன் இளந்தேவனார் என்பவரும் இவரே. பாலையையும், குறிஞ்சியையும் சிறப்பித்துப் பாடியுள்ளார். இவர் பாடிய பாடல்கள் நற்றிணையிலும், அகநானூற்றிலும் உள்ளன.

பைங்கண் யானைப் பரூஉத்தாள் உதைத்த
வெண்புறக் களரி விடுநீ றாடிச்
சுரன்முதல் வருந்திய வருத்தம் பைபயப்
பார மலிசிறு கூவலிற் றணியு
நெடுஞ்சேட் சென்று வருந்துவர் மாதோ
வெல்லி வந்த நல்லிசை விருந்திற்குக்
கிளரிழை யரிவை நெய்துழந் தட்ட
விளரூ னம்புகை யெறிந்த நெற்றிச்
சிறுநுண் பல்வியர் பொறித்த
குறுநடைக் கூட்டம் வேண்டு வோரே.

(நற். 41)

இளம்புல்லூர்க்காவிதி:— இவர் இளம்புல்லூர் என்னும் ஊரினர்; இவர் காவிதிப்பட்டம் பெற்றவர். இவர் உழுவித்து உண்ணும் வேளாளப் பெருங்குடியைச் சேர்ந்தவர். இவர் பாடிய செய்யுள் ஒன்று நற்றிணையில் உள்ளது. வாடைக்காற்றது கொடுமையைப் பற்றிய உவமை பாராட்டத்தக்கது.

கொண்டல் ஆற்றி விண்டலைச் செறீஇயர்
திரைப்பிதிர் கடுப்ப முகடுகந் தேறி
நிரைத்துநிரை கொண்ட கமஞ்சூன் மாமழை
அழிதுளி கழிப்பிய வழிபெயற் கடைநாள்
இரும்பனிப் பருவத்த மயிர்க்காய் உழுந்தின்
அகலிலை அகல வீசி அகலா
தல்கலு மலைக்கு நல்கா வாடை
பருமயானை யயர்வுயிர்த் தாஅங்
கின்னும் வருமே தோழி வாரா
வன்க ணாளரோ டியைந்த
புன்கண் மாலையும் புலம்புமுந் துறுத்தே.

(நற். 89.)

இளம்பூதனார்:— 'அலைகளின் நீர்த்துளிகள் தம் ஈரமாகிய புறத்தை நனைப்ப அக்குளிரை வெறுத்துக் காக்கைகள் கடற்கரைச் சோலையில் தங்கும்' என்று இவர் அவற்றின் இயல்பை அறிந்து கூறுவது பாராட்டத் தக்கது. இவர் பாடிய குறுந்தொகைச் செய்யுள் 1.

சிறுவெண் காக்கைச் செவ்வாய்ப் பெருந்தோ
டெறிதிரைத் திவலை யீர்ம்புறம் நனைப்பப்
பனிபுலந் துறையும் பல்பூங் கானல்
விரிநீர்ச் சேர்ப்பன் நீப்பின் ஒருநம்
இன்னுயிர் அல்லது பிறிதொன்(று)
எவனோ தோழி நாமிழப் பதுவே.

(குறுந். 334)

இளம்பெருவழுதியார்:— திருமாலுக்குரிய பரிபாடலில் 15-ஆம் பாடலை இயற்றியவர் இவர். இப்பாட்டில் எல்லா மலைகளுள்ளும் இருங்குன்றம் (திருமாலிருஞ் சோலை மலை) சிறந்ததென்று எடுத்துக் காட்டியிருக்கும் அழகும், சிலம்பாற்றால் அழகு பெற்றுள்ள அக்குன்றத் தின் வளமும் விரும்பி அதிலெழுந்தருளியிருக்கும் கண்ணபிரானும் பலதேவரும் உருவத்தால் இருவரா யினும் தொழிலால் ஒருவரேயென்பதற்குக் கூறியுள்ள உவமைநயமும், அக்குன்றம் திருமால் போல்வது, தன்னைக் கண்டோருடைய மயக்கத்தையறுப்பது, ஆதலால், சென்றேனும் கண்டேனும் திசை நோக்கி யேனும் குடும்பத்துடன் வழிபடுமினென்று உலகத்த வரை நோக்கிக் கூறியிருக்கும் இவரது அன்புடைமையும் அக்குன்றத்தின் அடியுறைதலே தமக்கு வேண்டுமென்று இவர் முடித்திருத்தலும் அறிந்து இன்புறற்குரியன. இவர் பாண்டியர் குடியிற் பிறந்தவரென்பதை வழுதியா ரென்ற பெயர் புலப்படுத்துகின்றது. இளம்பிராயத் திலேயே பேரறிவினராக இருந்தது பற்றி இவர் இப் பெயர் பெற்றனரென்று தோற்றுகின்றது. இப்பாடலே இவரது பேரறிவிற்குப் போதிய சான்றாகும். புறநா னூற்றுச் செய்யுட்களைப் பாடிய புலவர்களுள் கடலுண்மாய்ந்த இளம்பெருவழுதியென்று ஒருவ ருளர்; அவர் பாடிய ''உண்டாலம்ம'' என்னும் செய்யுளும் இப்பாட்டும் பரோபகாரச் செய்தி முதலிய கருத்துக்களில் ஒத்திருத்தலானும் பெயரொற்றுமை யானும் அவரும் இவரும் ஒருவரென்றே கொள்ளுதல் முறையாகும். கடலுண்மாய்ந்த' என்னு மடைமொழி, துஞ்சிய பின்பு இவருக்கு அமைக்கப்பட்டதென்பது சொல்லாமலே விளங்கும். நற்றிணைப் புலவர் வரிசை யிலும் பழைய இலக்கணவுரைகளின் உதாரணங் களுள்ளும் பெருவழுதி யென்னும் பெயர் காணப்படு கின்றது. ஆயினும் இளமையென்னு மடைமொழியின் மையால் அப்பெயரையுடையார் வேறு, இவர் வேறென்று கொள்ள வேண்டும்.

இளம்போதியார்:— இவர் புத்த சமயத்தைச் சேர்ந்தவர். இவர் நெய்தற்றிணையைப் பற்றிப் பாடியுள்ளார். இவர் இயற்றிய செய்யுள் நற்றிணையில் ஒன்று உள்ளது.

பேணுப பேணார் பெரியோர் என்பது
நாணுத்தக் கன்றது காணுங் காலை
உயிரோ ரன்ன செயிர்தீர் நட்பின்
நினக்கியான் மறைத்தல் யாவது மிகப்பெரி
தழிதக் கன்றாற் றானே கொண்கன்
யான்யா யஞ்சுவல் எனினும் தானே
பிரிதல் சூழான் மன்னே யினியே
கானல் ஆயம் அறியினும் ஆனா
தலர்வ தன்றுகொல் என்னும் அதனால்
புலர்வது கொல்லவ னட்பெனா
அஞ்சுவல் தோழியென் னெஞ்சத் தானே.

(நற். 72.)

இளவெயினனார்:— இவர் வேட்டுவ மரபினர். நெய்தல் திணையைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். இவர் சூலுற்ற பேடைக்கு, நாரை கடல் மீனைக் கொண்டுவந்து கொடுக்கும் அன்பினை எடுத்துக் காட்டுகின்றார். இவர் பாடிய நற்றிணைச் செய்யுள் ஒன்று.

பிறைவனப் பிழந்த நுதலும் யாழநின்
இறைவரை நில்லா வளையு மறையா
தூரலர் தூற்றுங் கௌவையு நாணிட்
டுரையவற் குரையா மாயினும் இரைவேட்டுக்
கடுஞ்சூல் வயவொடு கானலெய் தாது
கழனி ஒழிந்த கொடுவாய்ப் பேடைக்கு
முடமுதிர் நாரை கடல்மீன் ஒய்யும்
மெல்லம் புலம்பற் கண்டுநிலை செல்லாக்
கரப்பவும் கரப்பவும் கைம்மிக்
குரைத்த தோழி யுண்க ணீரே.

(நற். 263)

இறையனார்:— மதுரையில் எழுந்தருளிய சோம சுந்தரக் கடவுள் இறையனாரென்ற பெயரால் வழங்கப் பெறுவர் என்பர். இவரது வரலாறு குறுந்தொகையில் 'கொங்குதேர் வாழ்க்கை' என்னும் செய்யுளின் இறுதியில் விரிவாக உள்ளது. இவர் பாடிய குறுந் தொகைச்செய்யுள் 1.

கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவும் உளவோநீ அறியும் பூவே.

(குறுந். 2.)

இனிசந்த நாகனார்:— இவர் இனிமையாகப் பாடும் ஆற்றல் பெற்றிருந்தமை பற்றி இவ்வடை மொழியைப் பெற்றார் போலும். இவர் பாலையைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். இவர் பாடிய நற்றிணைச் செய்யுள் ஒன்று.

மிளகுபெய் தனைய சுவைய புன்காய்
உலறுதலை உகாஅய்ச் சிதர்சிதர்த் துண்ட
புலம்புகொ ணெடுஞ்சினை யேறி நினைந்துதன்
பொறிகிளர் எருத்தம் வெறிபட மறுகிப்
புன்புறு வுயவும் வெந்துக ளியவின்
நயந்த காதலற் புணர்ந்தன ளாயினுஞ்
சிவந்தொளி மழுங்கி யமர்த்தன கொல்லோ
கோதை மயங்கினுங் குறுந்தொடி நெகிழினுங்
காழ்பெய் யல்குற் காசுமுறை திரியினும்
மாணலங் கையறக் கலுழுமென்
மாயக் குறுமகள் மலரேர் கண்ணே.

(நற். 66.)

ஈழத்துப் பூதன் தேவனார்:— இவர் வேறு; குறுந் தொகை 189, 360 ஆம் செய்யுட்களைப் பாடிய மதுரை

ஈழத்துப் பூதன்றேவனுர் வேறு. இவர் குறிஞ்சித் திணையைக் குறித்துப்பாடியுள்ளார். யானையைத் தாக்கிய மிகுவலி யிரும்புலி யேற்றை அந்த யானையின் முயற்சியின்றி அதன் கொம்பினுற் குத்தப்பட்டு இறந்து கிடத்தலை அழகுபட இவர் கூறியுள்ளார். இவர் பாடிய குறுந்தொகைச் செய்யுள் ஒன்று.

நினையாய் வாழி தோழி நனைகவுள்
அண்ணல் யானை அணிமுகம் பாய்ந்தென
மிகுவலி இரும்புலிப் பகுவாய் ஏற்றை
வெண்கோடு செம்மறுக் கொளீஇ விடர்முகைக்
கோடை ஒற்றிய கருங்கால் வேங்கை
வாடுபூஞ் சினையிற் கிடக்கும்
உயர்வரை நாடனெடு பெயரு மாறே.

(குறுந். 343.)

உக்கிரப்பெருவழுதி:— இவன், சேரமான் மாவெண்கோ, சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியென்பவர் களுடைய நண்பன், கடைச்சங்கமிரீஇய பாண்டியர் நாற்பத்தொன்பதின்மருள் ஒருவன்; இதனை இறையனு ரகப் பொருளுரையாலும் சிலப்பதிகாரவுரையாலும் உணர்க. இவன் முன்னிலையில் திருக்குறள் அரங்கேற்றப் பட்டதென்ற செய்தி, அக்குறளுக்கு இவன் கொடுத்த ''நான்மறையின் மெய்ப்பொருளை'' என்னும் வெண் பாவிற் காணப்படுகிறது, எட்டுத்தொகையுள் அகநா னூற்றைத் தொகுப்பித்தோனும், அந்நூலிலுள்ள 26 ஆம் பாடலைப் பாடியவனும் இவனே. ''புலவரை யிறந்த'' என்னும் புறப்பாட்டால், வேங்கை மார்ப னென்னும் பகைவனைவென்று அவன் ஆட்சியிலிருந்த பல சிற்றரண்களையுடைய கானப்பேரரணைக் கைக் கொண்டானென்று விளங்குகின்றது; இவன் பெயர், பாண்டியன் உக்கிரப் பெருவழுதியெனவும், உக்கிரப் பெருவழுதியெனவும், பாண்டியன் கானப்பேர் தந்த உக்கிரப் பெருவழுதியெனவும் வழங்கும். இவனைப் பாடிய புலவர்: ஐயூர் மூலங்கிழார், ஔவையார்.

<u>உகாய்க்குடி கிழார்:—</u> உகாய்க்குடி யென்னும் ஊரிற் பிறந்தவர் இவர். ''ஈதலும் துய்த்தலும் இல்லோர்க் கில்லென'' என்று இவர் கூறும் பொருட்சிறப்பு அருமையாக உள்ளது. இங்கே ஈதலைத் துய்த்தலுக்கு முன் இவர் அமைத்துள்ள நயம் படித்து இன்புறற் பாலது. இவர் பாடிய குறுந்தொகைச் செய்யுள் ஒன்று.

ஈதலும் துய்த்தலும் இல்லோர்க் கில்லெனச்
செய்வினை கைம்மிக எண்ணுதி அவ்வினைக்
கம்மா அரிவையும் வருமோ
எம்மை யுய்த்தியோ உரைத்திசின் நெஞ்சே.

(குறுந். 63)

<u>உம்பர்க்காட்டிளங் கண்ணனார்:—</u> உம்பர்க்காடு சேர நாட்டைச் சேர்ந்தது என்று தெரிகிறது. இவரது பாடலொன்று அகநானூற்றில் உள்ளது. முல்லையைச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

மழையில் வானம் மீனணிந் தன்ன
குழையமன் முசுண்டை வாலிய மலர
வரிவெண் கோடல் வாங்குகுலை வான்பூப்
பெரிய சூடிய கவர்கோற் கோவலர்
எல்லுப்பெயல் உழந்த பல்லான் நிரையொடு
நீர்திகழ் கண்ணியர் ஊர்வயின் பெயர்தர
நனிசேட் பட்ட மாரி தளிசிறந்து
ஏர்தரு கடுநீர் தெருவுதொ றொழுகப்
பேரிசை முழக்கமொடு சிறந்துநனி மயங்கிக்
கூதிர்நின் றன்றாற் பொழுதே காதலர்
நம்நிலை அறியார் ஆயினுந் தம்நிலை
அறிந்தனர் கொல்லோ தாமே யோங்குநடைக்
காய்சின யானை கங்குற் சூழல்
அஞ்சுவர விறுத்த தானை
வெஞ்சின வேந்தன் பாசறை யோரே.

(அகம். 264)

**உமட்டூர்கிழார் மகனார் பரங்கொற்றனார்:—** இவர் உமட்டூர்கிழார் என்பவரின் புதல்வரென்றும் பரங்கொற்றனார் என்பது இவரது இயற்பெயர் என்றும் தெரிகிறது. இவர் வேளாண்குடியைச் சேர்ந்தவர். ஆய்வள்ளலது கானச் சிறப்பினையும் இவர் பாடியுள்ளார். இவர் இயற்றிய பாடலொன்று அகநானூற்றில் உள்ளது.

ஆய்நலந் தொலைந்த மேனியும் மாமலர்த்
தகைவனப் பிழந்த கண்ணும் வகையில
வண்ணம் வாடிய வரியு நோக்கி
ஆழல் ஆன்றிசின் நீயே உரிதினின்
ஈதல் இன்பம் வெஃகி மேவரச்
செய்பொருட் டிறவ ராகிப் புல்லிலைப்
பராரை நெல்லி அம்புளித் திரள்காய்
கான மடமரைக் கணநிரை கவரும்
வேனில் அத்தம் என்னா தேமுற்று
விண்பொரு நெடுவரை இயறேர் மோரியர்
பொன்புனை திகிரி திரிதரக் குறைத்த
அறையிறந் தகன்றனர் ஆயினும் எனையதூஉம்
நீடலர் வாழி தோழி ஆடியல்
மடமயில் ஒழித்த பீலி வார்ந்துதஞ்
சிலைமாண் வல்விற் சுற்றிப் பலமாண்
அம்புடைக் கையர் அரண்பல நூறி
நன்கலந் தரூஉம் வயவர் பெருமகன்
சுடர்மணிப் பெரும்பூண் ஆஅய் கானத்துத்
தலைநாள் அலரி நாறுநின்
அலர்முலை ஆகத் தின்றுயில் மறந்தே.

(அகம். 69)

**உருத்திரசன்மர்:—** இறையனாரகப்பொருளுக்குப் பல புலவர்களும் உரையெழுதினர். தத்தம் உரையே சிறந்ததென்று ஒவ்வொருவரும் கூறுவாராயினர். அது பற்றிப் பெரிய கலகம் விளைந்தது. சோமசுந்தரக்

கடவுளிடத்தில் அவர்கள் அதனை விண்ணப்பஞ் செய்து கொண்டனர். அவர் அப்பொழுது அவர்களுக்கு முன்னே எழுந்தருளி, ''மதுரையில் வணிகர் மரபில் உப்பூர்குடிகிழார்மகன் உருத்திரசன்மன் என்ற பெயருடைய மூங்கைப்பிள்ளை இருக்கிறான். அவன் முன் நும் உரைகளைப் படித்துக் காட்டினால் இன்னது சிறந்ததென்பதை முகக்குறியால் உணர்த்துவான்'' என்றருளினார்:— அந்த மூங்கைப் பிள்ளையை முருகன் என்பர். பார்வதி தேவியாருக்கு ஒருகாலத்தில் பரமசிவன் உத்தரகோசமங்கை என்னும் ஸ்தலத்தில் ஆகமப் பொருளை விளக்கிக் கொண்டிருந்தபோது அவர் கவனக்குறைவுடன் இருந்தமையால் இறைவன் அவரைச் சபித்தார். அதனால் முருகக்கடவுள் தாயிடத்திலுள்ள அன்பினால் வெகுண்டு அங்கேயிருந்த சாத்திரங்களைத் தூக்கிக்கடலில் எறிந்துவிட்டார். அதுபற்றி அவர் ஊமையாகப் பிறக்குமாறு சபிக்கப்பட்டு அப்படியே அவதரித்தார். சங்கப்புலவர்கள் தத்தம் உரையைப் படித்துக் காட்டியபொழுது நக்கீரர் உரையே சிறந்ததென்று அவர் ஏற்றுக்கொண்டார்.

> ''மணிக்கா லறிஞர் பெருங்குடித் தோன்றி
> இறையோன் பொருட்குப் பரணர்முதல் கேட்பப்
> பெருந்தமிழ் விரித்த வருந்தமிழ்ப் புலவனும்
> பாய்பா ரறிய நீயே யாதலின்''
>
> (கல். முருகர் துதி)

> ''திருத்தகு மதுரை தன்னிற் சிவன்பொரு ணிறுக்கு மாற்றால்
> உருத்திர சன்மனாகி யுற்றெழும் நிமலன்.''
>
> (கந்தபு.)

பின்னர் உருத்திரசன்மர் சிவபெருமானை வழிபட்டுத் தமது ஊமைத் தன்மையை நீக்கிக் கொண்டார். அந்த இடம் திருவெருக்கத்தம்புலியூர்.

<u>உருத்திரனார்:—</u> இவருக்கு அமைந்திருப்பது தெய்வப் பெயர். பாலை வழியின் இன்னாமையையும் தலைவியை

உள்ளிச் செல்லின் அது கடத்தற்கு இனியதாக இருத்தலையும் நன்றாக இவர் கூறியுள்ளார். இவர் பாடிய குறுந்தொகைச் செய்யுள் ஒன்று.

புறவுப்புறத் தன்ன புன்கா லுகாஅய்க்
காசினை அன்ன நளிகனி உதிர
விடுகணை வில்லொடு பற்றிக் கோடிவர்பு
வருநர்ப் பார்க்கும் வன்க ணுடவர்
நீர்நசை வேட்கையின் நார்மென்று தணியும்
இன்னாக் கானமும் இனிய பொன்னொடு
மணிமிடை அல்குல் மடந்தை
அணிமுலை ஆகம் உள்கினம் செலினே.

(குறுந். 274)

உரோடகத்துக் கந்தரத்தனார்:— இப்பெயர், 'உரோடகத்துக் காரத்தனார்', 'ஊரோடகத்துக் கந்தரத்தனார்', 'ஒரோடகத்துக் கந்தரத்தனார்' என்று பலவாறு பிரதிகளில் உள்ளது. 'உரைகடம்' என்னும் பெயர் உள்ள மூன்று ஊர்கள் செங்கற்பட்டு ஜில்லாவில் இருக்கின்றன. 'உரோடகம்' என்பது அவற்றுள் ஒன்றன் திரிபாக இருக்கலாமென்று தோற்றுகிறது. உழவர் காலையில் விதைக்க எடுத்துச் சென்ற வட்டிகளை மாலையில் வறியனவாக அல்லாமற் போதொடு கொணர்வர் என்று கூறுகிறார். தலைவிக்குப் பொருளின் உயர்வைப் புலப்படுத்தத் தலைவன் முல்லை படர்ந்த நொச்சியினது கிளையின் உயர்வைக் காட்டுவதாக இவர் குறித்துள்ளார். அலர் தூற்றும் பெண்டிரை நரகம் புகுதற்கு உரியவரென்று தலைவியின் கூற்றில் அமைத்திருக்கிறார். எட்டுத் தொகையில் இவரியற்றிய செய்யுட்கள் 5. (நற். 1 குறுந். 1, அகநா. 3).

முதைப்புனங் கொன்ற ஆர்கலி உழவர்
விதைக்குறு வட்டி போதொடு பொதுளப்
பொழுதோ தான்வந் தன்றே மெழுகான்று
ஊதுலைப் பெய்த பகுவாய்த் தெண்மணி
மரம்பயில் இறும்பின் ஆர்ப்பச் சுரனிழிபு

மாலை நனிவிருந் தயர்மார்
தேருவரும் என்னும் உரைவா ராதே.

(குறுந். 155)

முதை—பழமை. வட்டி—பனையோலை முதலியவற்றால் முடையப்பெற்ற சிறுபெட்டி.

<u>உலோச்சனார்:—</u> இவர் நெய்தற்றிணையையே மிகுதியாகச் சிறப்பித்துள்ளார். இதனாலும் தலைவியின் கூற்றாக, 'கழிசூழ்படப்பைக் காண்டவாயில்.......எம் அழுங்கலூரே' (நற். 38) என்று கூறுவதனாலும் இவர் நெய்தல் நிலத்தைச் சார்ந்தவர் என்று ஊகிக்கலாம். கடலில் உப்பெடுத்தலை ''வானம் வேண்டா உழவு'' (நற். 254) என்கின்றார். பொறையாறு என்ற ஊரினனான பெரியன் என்பானையும், சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியையும் இவர் குறித்துதுள்ளார். வியப்பைப் புலப்படுத்தப் பெண்டிர்தம் மூக்கினுச்சியிற் சுட்டுவிரலைச் சேர்த்தலையும், சிறுமியர் வண்டல் மண்ணாலே பாவை செய்து விளையாடுதலையும் (நற். 149. 191) வழக்கங்களாகக் கூறியுள்ளார். உலோச்சென்பது சைனர்கள் செய்து கொள்ளும் ஒரு கிரியை. அதனால் இவர் சைனரென்று கொள்ளுதற்கு இடமுண்டு. இவர் வாக்கில் எருமை மறம் என்னுந் துறை விளங்கக் கூறப் பெற்றுள்ளது; புறநா. 274. எட்டுத்தொகையில் இவயற்றிய செய்யுட்கள் 35. (நற். 20; குறுந் 4; அகநா 8; புறநா. 3

நீலக் கச்சைப் பூவார் ஆடைப்
பீலிக் கண்ணிப் பெருந்தகை மறவன்
மேல்வருங் களிற்றொடு வேறுரந் தினியே
தன்னுந் துரக்குவன் போலு மொன்னலர்
எஃகுடை வலத்தர் மாவொடு பரத்தரக்
கையின் வாங்கித் தழீஇ
மொய்ம்பி னூக்கி மெய்க்கொண் டனனே.

(புறம். 274)

உவர்க்கண்ணூர்ப் புல்லங்கீரனார்:— கடற்கரைப் பக்கத்திலுள்ள ஊரினர். கீரன் என்பது இவரது இயற்பெயர் போலும். புல்லன் என்பது தந்தையின் பெயராக இருக்கலாம். இவரது பாடலொன்று அகநானூற்றில் உள்ளது; மருதத்தைச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

வலிமிகு முன்பின் அண்ணல் ஏஎறு
பனிமலர்ப் பொய்கைப் பகல்செல மறுகி
மடக்கண் எருமை மாணாகு தழீஇப்
படப்பை நண்ணிப் பழனத் தல்கும்
கலிமகிழ் ஊரன் ஒலிமணி நெடுந்தேர்
ஒள்ளிழை மகளிர் சேரிப் பன்னாள்
இயங்கல் ஆனாது ஆயின் வயங்கிழை
யார்கொல் அளியள் தானே எம்போல்
மாயப் பரத்தன் வாய்மொழி நம்பி
வளிபொரத் துயல்வருந் தளிபொழி மலரில்
கண்பனி ஆகத்து உறைப்பக் கண்பசந்து
ஆயமும் அயலும் மருளத்
தாயோம்பு ஆய்நலம் வேண்டா தோளே.

(அகம். 146)

உழுந்தினைம் புலவன்:— ஒரு காரியம் செய்கையில் அது நிறைவேறாமல் போனால் உண்டாகும் வருத்தத்தை இவர் ‘பணிக்குறை வருத்தம்’ என்று கூறியுள்ளார். இவர் பாடிய குறுந்தொகைச் செய்யுள் ஒன்று.

குறும்படைப் பகழிக் கொடுவிற் கானவன்
புனமுண்டு கடிந்த பைங்கண் யானை
நறுந்தழை மகளிர் ஒப்புங் கிளியொடு
குறும்பொறைக் கணவுங் குன்ற நாடன்
பணிக்குறை வருத்தம் வீடத்
துணியின் எவனோ தோழிநம் மறையே.

(குறுந். 333)

உறையனார்:— சுரஞ்செல் மாக்கட்கு ஒரு துணையுமின்றென்பதைக் குறிக்க இவர், ‘‘இனந்தீர் பருந்தின் புலம்புகொ டெள்விளி......உயவுத் துணையாகும்’’ என்கிறார். இவர் பாடிய குறுந்தொகைச் செய்யுள் ஒன்று,

செப்பினஞ் செலினே செலவரி தாகுமென்
றத்த வோமை யங்கவட் டிருந்த
இனந்தீர் பருந்தின் புலம்புகொ டெள்விளி
சுரஞ்சென் மாக்கட் குயவுத்துணை யாகும்
கல்வரை யயலது தொல்வழங்கு சிறுநெறி
நல்லடி பொறிப்பத் தாஅய்ச்
சென்றெனக் கேட்டநம் ஆர்வலர் பலரே.

(குறுந். 207)

உறையூர் இளம்பொன் வாணிகனார்:— இவர் வணிகர், ஒரு வீரனுடைய கொடைச் சிறப்பும் போரில் இறந்த பின்பு அவனுக்காக நட்ட வீரக்கல்லின் கோலமும் அவனை இழந்தமையாற் பாணர்கள் படுந்துன்பமும் இவராற் கூறப்பட்டிருக்கின்றன. இவர் பாடிய புறநானூற்றுச் செய்யுள் ஒன்று,

பரலுடை மருங்கிற் பதுக்கை சேர்த்தி
மரல்வகுந்து தொடுத்த செம்பூங் கண்ணியொ
டணிமயிற் பீலி சூட்டிப் பெயர்பொறித்
தினிநட் டனரே கல்லுங் கன்றொடு
கறவை தந்து பகைவர் ஓட்டிய
நெடுந்தகை கழித்தமை அறியா
தின்றுங் வருங்கொல் பாணரது கடும்பே.

(புறம். 264)

உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்:— இவர் அந்தணர்; சேரமான் அந்துவஞ்சேரலிரும்பொறையால் ஆதரிக்கப் பெற்றவர்; இவை முறையே ''ஊரும் பேரும்'' (தொல். மரபு 74, பேர்.) என்பதன் விசேட வுரையாலும், 'சேரமான் அந்துவஞ்சேரலிரும்பொறை யோடு வேண்மாடத்திலிருந்து' (புறநா. 13) என்பத னாலும் பெறப்படுகின்றன; போர்க்களத்திற் பகைவரது சேனையைப் பிளந்துகொண்டு வாள்வீரர்க்கிடையே தன் தலைமை தோன்றச் செல்லும் சோழன் களிற்றிற்குக் கடலைக் கிழித்துச் செல்லும் நாவாயையும், விண்மீன் களுக்கு இடையே விளங்கும் திங்களையும் இவர் உவமை

கூறியிருக்கின்ருர். (புறநா. 13); ஆய் என்னும் வள்ளலுடைய கொடைச்சிறப்பு, வீரச்சிறப்பு முதலியனவும் இவராற் பலபடியாகப் புனைந்து பாராட்டப்பெற்றுள்ளன; இது பற்றியே, ''திருந்துமொழி மோசி பாடிய ஆயும்'' (158) எனப் பெருஞ்சித்திரனுர் என்னும் புலவர் இவரைப் பாராட்டியுள்ளார்; இதிலுள்ள 'திருந்துமொழி' என்னும் அடைமொழி இவருடைய சிறந்த புலமையை வெளியாக்குகின்றது; இவராற் பாடப்பெற்ருேர் சோழன் முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளியும், ஆயுமாவார்; ஆய் இறந்த பின்பும் இருந்தவர் இவர். இவர் பெயர் மோசி, ஏணிச்சேரி முடமோசியார் எனவும் வழங்கும். இவர் இயற்றிய புறநானூற்றுச் செய்யுட்கள் 14.

இவனியா ரென்குவை யாயி னிவனே
புலிநிறக் கவசம் பூம்பொறி சிதைய
எய்கணை கிழித்த பகட்டெழின் மார்பின்
மறலி யன்ன களிற்றுமிசை யோனே
களிறே, முந்நீர் வழங்கு நாவாய் போலவும்
பன்மீ னுப்பட் டிங்கள் போலவும்
சுறவினத் தன்ன வாளோர் மொய்ப்ப
மரீஇயோர் அறியாது மைந்துபட் டன்றே
நோயில னுகிப் பெயர்கதி லம்ம
பழன மஞ்ஞை யுகுத்த பீலி
கழனி யுழவர் சூட்டொடு தொகுக்கும்
கொழுமீன் விளைந்த கள்ளின்
விழுநீர் வேலி நாடுகிழ வோனே.

(புறம். 13)

உறையூர்க் கதுவாய்ச்சாத்தனுர்:— உறையூரில் இருந்தவர். சாத்தனுர் இவரது இயற்பெயர். இவரது பாடலொன்று நற்றிணையில் உள்ளது. குடும்ப வாழ்க்கையைப் பற்றிய பாடல்; சுவை மிக்கது.

வாராய் பாண நகுகம் நேரிழை
கடும்புடைக் கடுஞ்சூல் நங்குடிக்கு உதவி
நெய்யோ டிமைக்கும் ஐயவித் திரள்காழ்

விளங்குநகர் விளங்கக் கிடந்தோட் குறுகிப்
புதல்வன் ஈன்றெனப் பெயர்பெயர்த் தவ்வரித்
திதலை அல்குல் முதுபெண் டாகித்
துஞ்சுதி யோமெல் லஞ்சில் ஓதியெனப்
பன்மாண் அகட்டிற் குவளை ஒற்றி
உள்ளினென் உறையும் எற்கண்டு மெல்ல
முகைநாள் முறுவல் தோற்றித்
தகைமலர் உண்கண் புதைத்துவந் ததுவே.

(நற். 370)

**உறையூர்ச் சல்லியன் குமாரனார்:—** உறையூரைச் சார்ந்த புலவர் பலர் உளர். ஒரு காலத்தில் அது கல்வியிற் சிறந்திருந்ததென்பது இதனாற் புலனாகும். பரத்தையிற் பிரிந்து வந்த தலைவனுக்கு வாயில் நேர்ந்தமைக்குத் தோழி உழவர் தம் தொழிலை முடிப்பாராகி வரப்பில் வாடும்படி களைந்தெறிந்த நெய்தல் மீட்டும் தம்மை நீக்கிய வயலினிடத்து மலர்கின்றதை உவமையாகக் காட்டியுள்ளது பாராட்டற்பாலது. களையைக் களைந்த இடத்திலேயே போடக் கூடாதென்பதை இவர் அறிந்துள்ளார் என்று தெரிகிறது. இவர் சேர நாட்டரசன் மகனாகியஆட்டனத்தி என்பானைப் பாராட்டியுள்ளார். இவர் பாடிய குறுந்தொகைச் செய்யுள் ஒன்று,

கைவினை மாக்கடஞ் செய்வினை முடிமார்
சுரும்புண மலர்ந்த வாசங் கீழ்ப்பட
நீடிய வரம்பின் வாடிய விடினும்
கொடியரோ நிலம்பெயர்ந் துறைவே மென்னாது
பெயர்த்துங் கடிந்த செறுவிற் பூக்கும்
நின்னூர் நெய்தல் அனையேம் பெரும
நீயெமக் கின்னா தனபல செய்யினும்
நின்னின் றமைதல் வல்லா மாறே.

(குறுந். 309)

**உறையூர்ச் சிறுகந்தனார்:—** தலைவன் பிரிந்த வழிக் காமமாகிய பகை தலைவியை இகலும் என்கிறார். பலா

மரம் நிரம்பக் காய்த்துள்ளமையை அழகுபட வருணித்துள்ளார். இவர் பாடிய குறுந்தொகைச் செய்யுள் ஒன்று.

வேரு முதலுங் கோடு மொராங்குத்
தொடுத்த போலத் தூங்குபு தொடரிக்
கீழ்தாழ் வன்ன வீழ்கோட் பலவின்
ஆர்கலி வெற்பன் வருதொறும் வரூஉம்
அகலினு மகலா தாகி
இகலுந் தோழிநங் காமத்துப் பகையே.

(குறுந். 257)

காமம் இன்பத்தைத் தருவதாயினும் தலைவனைப் பிரிந்த ஞான்று தன்னுடனுறைந்தே துன்பத்தைத் தருதலின் அதனைப் பகையாகக் கூறினள்.

உறையூர்ப் பல்காயனார்:— யாப்பருங்கலம், யாப்பருங் கலக்காரிகை என்பவற்றின் உரைகளால் பல்காயனார் என்ற ஒருவர் யாப்பிலக்கணஞ் செய்துள்ளமை தெரிய வருகிறது. அவரும் இவரும் ஒருவரோ வேறோ என்பது தெரியவில்லை. ஊர் மயக்க மடைந்துள்ளமைக்குத் தூக்கணங் குருவி பனைமேற்றொடுத்த கூட்டின் மயக்கத்தை உவமை கூறுகிறார். சில பிரதிகளில் இவர் பெயர் 'பராயனார்' என்று காணப்படுகிறது. இவர் பாடிய குறுந்தொகைச் செய்யுள் ஒன்று.

எந்தையும் யாயும் உணரக் காட்டி
ஒளித்த செய்தி வெளிப்படக் கிளந்தபின்
மலைகெழு வெற்பன் தலைவந்து இரப்ப
நன்றுபுரி கொள்கையி னொன்றா கின்றே
முடங்கல் இறைய தூக்கணங் குரீஇ
நீடிரும் பெண்ணைத் தொடுத்த
கூடினு மயங்கிய மையல் ஊரே.

(குறுந். 374)

உறையூர் மருத்துவன் தாமோதரனார்:— இவர் மருத்துவன்றாமோதரனார் எனவும் வழங்கப்பெறுவர்; மருத்துவர்—மருத்துவநூலில் வல்லவர்; வைத்தியர்: இது, ''சீந்திநீர்க் கண்டந் தெறிசுக்குத் தேனளாய்,

மோந்தபின் யார்க்குந் தலைக்குத்தில்—காந்தி, மலைக் குத்து மால்யானை வள்ளுவர்முப் பாலாற், றலைக்குத்துத் தீர்வுசாத் தற்கு'' (திருவள்.11) என்னும் வெண்பா வால் விளங்குகின்றது; தாமோதரனாரென்பது தெய் வத்தால் வந்த பெயர்; இதனால், இவர் குடும்பத்தினர் திருமாலின் அடியவராகக் கருதப்படுகின்றனர்; இவர் செய்தனவாக 6 பாடல்கள் கிடைக்கின்றன: அகநா 2; திருவள். 1; புறநா. 3, இவராற் பாடப்பட்டோர் சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவன், பிட்டங்கொற்றனென்பார். இவர் வாக்கிற் பாலை நிலத்தினியல்பும் ஏற்ற உவமையணிகளும் காணப் படுகின்றன; ''முந்நீர் நாப்பட் டிமிற்சுடர் போலச், செம்மீ னிமைக்கு மாக விசும்பு'' (60) ''கழியுப்பு முகந்து கன்னாடு மடுக்கும், ஆரைச் சாகாட் டாழ்ச்சி போக்கும், உரனுடை நோன்பகட்டன்ன வெங் கோன்'' (60) ''உலைக்கல் லன்னவல் லாளன்'' (170) என்பவை புறநானூற்றுள் இவர் வாக்கிற் சிறந்த பகுதிகள்.

உறையூர் முதுகண்ணன் சாத்தனார்:— 'முதுகண்' என்பது பிராயத்தாலும் அறிவாலும் முதிர்ந்து, அரசர்க்கும் பட்டத்தேவிகளுக்கும் உசாத்துணையாக இருந்து நீதிகளைச் செவியறிவுறுத்தும் ஆண்பாலார் பெண்பாலார்க்குரிய பெயராகச் சிலாசாசனம் முதலிய வற்றிற் காணப்படுகின்றது; ''முற்றிழை மகளிர்க்கு முதுக ணாமென'' (பெருங். 1. 36:198) என வருதலும் காண்க; இவர், உறையூர் அரசர்பால் அத்தொழிலை உடையவராக இருந்தார் போலும்; இவராற் பாடப் பட்டோன் சோழன் நலங்கிள்ளி; இவர் காலத்துப் புலவர் அவனைப் பாடிய ஆலத்தூர்கிழாரும் கோவூர் கிழாரும்; இவர் சிறந்த குடியிற் பிறந்தவருக்குத் தாமரைப்பூக்களையும், வளர்தல் முதலியவற்றை யடைந்த பொருள் குறைதல் முதலியவற்றையடையு மென்பதற்குத் திங்களையும் உவமை கூறியிருத்தலும்,

அருளுங் கொடையும் வெற்றிக்கும், அவையின்மை தோல்விக்கும் காரணமென்பது புலப்பட, ''அருள வல்லே யாகுமதி யருளிலர், கொடாமை வல்லராகுக, கெடாஅ துப்பினின் பகையெதிர்ந்தோரே'' (புறநா.27) விளக்கியிருத்தலும் நன்கு மதிக்கற்பாலன. இவர் செய்தனவாக 6 செய்யுட்கள் உள்ளன. குறுந். 1; புறநா. 5.

<u>உறையூர் முதுகூத்தனர்:–</u> இப்பெயர் முதுகூற்றனு ரெனவும் சில பிரதிகளிற் காணப்படுகின்றது; ''வென் றெறி முரசின் விறற்போர்ச் சோழர், இன்கடுங் கள்ளி னுறந்தை'' (அகநா. 137) என இவரே கூறியிருத்த லால் தம்முடைய ஊரில் இவர் அன்புடைய ரென்பதும், அவ்வூர் அரசராகிய சோழரால் நன்கு மதிக்கப்பெற்றவ ரென்பதும் வெளியாகின்றன. ''உள்ளது, தவச்சிறி தாயினு மிகப்பல ரென்னுள், நீணெடும் பந்த ரூண்முறை யூட்டும், இற்பொலி மகடூஉ'' (331) எனக் கற்புடை மங்கையினியல்பையும், ''தேவிற் சிறந்த திருவள் ளுவர் குறள்வெண், பாவிற் சிறந்திடுமுப் பால்பகரார் நாவிற், குயலில்லே சொற்சுவை யோர்வில்லே மற்றுஞ் செயலில்லே யென்னுந் திரு'' (திருவள். 39) எனத் திருக்குறளின் சிறப்பையும் பாராட்டியிருத்தல் மதிக்கற் பாலது; இவர் வாக்கிற் பெரும்பாலுங் காணப்படுவது பாலேநிலத்தினியல்பு; இவர் செய்தனவாக 6 பாடல் கள் தெரிகின்றன; அகநா. 2; குறுந். 2; திருவள். 1; புறநா. 1.

கைவளே நெகிழ்தலு மெய்ப்பசப் பூர்தலும்
மைபடு சிலம்பி னேவனம் வித்தி
அருவியின் விளேக்கு நாடனெடு
மருவேன் ரேழியது காமமோ பெரிதே.

(குறுந். 371)

<u>உறையூர் முதுகொற்றனர்:–</u> இடையர் கறந்த பாலே வீட்டிற் கொடுத்துவிட்டு இனநிரை இருக்குமிடத்துக்குக்

கூழொடு பெயர்தலையும் ஆறலைகள்வர் வணிகர் கூட்டத்தை வழிப்பறிக்க முயல்வதையும் இவர் குறிப்பித்துள்ளார். இவர் பாடிய குறுந்தொகைச் செய்யுட்கள் இரண்டு.

அவரோ வாரார் முல்லையும் பூத்தன
பறியுடைக் கையர் மறியினத் தொழியப்
பாலொடு வந்து கூழொடு பெயரும்
யாடுடை இடைமகன் சென்னிச்
சூடிய வெல்லாஞ் சிறுபசு முகையே.

(குறுந். 221)

ஊட்டியார்:— தாம் இயற்றியுள்ள செய்யுட்களில் அமைத்துள்ள இனிய ஒருமொழியின் நயத்தால் ''(ஊட்டி யன்ன ஒண்தளிர்ச் செயலை'') என்ற அடியால் இவருக்கு ஊட்டியார் என்ற பெயர் சிறப்பாக அமைந்தது போலும். இயற்பெயர் தெரியவில்லை. இவர் பாடியனவாக இரண்டு செய்யுட்கள் அகநானூற்றில் உள்ளன.

அன்னாய் வாழிவேண் டன்னைநம் படப்பைத்
தண்ணயத் தமன்ற கூதளங் குழைய
இன்னிசை அருவிப் பாடும் என்னதூஉம்
கேட்டியோ வாழிவேண் டன்னைநம் படப்பை
ஊட்டி அன்ன ஒண்டளிர்ச் செயலை
ஓங்குசினைத் தொடுத்த ஊசல் பாம்பென
முழுமுதல் துமிய உருமெறிந் தன்றே
பின்னும் கேட்டியோ எனவுமஃ தறியாள்
அன்னையும் கனைதுயில் மடிந்தனள் அதன்தலை
மன்னுயிர் மடிந்தன்றால் பொழுதே காதலர்
வருவர் ஆயின் பருவம் இதுவெனச்
சுடர்ந்திலங் கெல்வளை நெகிழ்ந்த நம்வயின்
படர்ந்த உள்ளம் பழுதன் றாக
வந்தனர் வாழி தோழி யந்தரத்
திமிழ்பெய றலைஇய இனப்பல கொண்மூத்
தவிர்வில் வெள்ளந் தலைத்தலை சிறப்பக்
கன்றுகால் ஒய்யும் கடுஞ்சுழி நீத்தம்
புன்றலை மடப்பிடிப் பூசல் பலவுடன்

வெண்கோட் டியானை விளிபடத் துழவும்
அகல்வாய் பாந்தட் படாஅர்ப்
பகலும் அஞ்சும் பனிக்கடுஞ் சுரனே.

(அகம். 68)

ஊண்பித்தையார்:— இப்பெயர் ஊன்பித்தையென்றும் பிரதிகளில் உள்ளது. இவர் பெண்பாலார். இவர் பாடிய செய்யுளின் பழைய கருத்து, பிரிவிடைத் தோழி வற்புறுத்தியதாக உள்ளது. இச்செய்யுள் தலைவியின் கூற்றாே என்று ஐயுறும் வண்ணம் அமைந்திருக்கிறது. இவர் பாடிய குறுந்தொகைச் செய்யுள் ஒன்று,

உள்ளார் கொல்லோ தோழி உள்ளியும்
வாய்ப்புணர் வின்மையின் வாரார் கொல்லோ
மரற்புகா வருந்திய மாவெருத் திரலை
உரற்கால் யானை யொடித்துண் டெஞ்சிய
யாஅ வரிநிழற் றுஞ்சும்
மாயிருஞ் சோலை மலையிறந் தோரே.

(குறுந். 232)

ஊன்பொதிபசுங்குடையார் :—இவராற் பாடப் பட்டோர் சேரமான் பாமளூரெறிந்த இளஞ்சேட் சென்னி, சோழன் செருப்பாழி யெறிந்த இளஞ் சேட்சென்னி, சோழன் நெய்தலங்கானல் இளஞ் சேட்சென்னி யென்பார்; இவர் அரசர்களுக்குத் தருமங்களைக் கற்பிக்கும் முறை மிக அழகு வாய்ந்தது; இராவணன் உயிரோடிருக்கையில் தம்பால் அடைக் கலம் புகுந்த விபீடணனுக்கு இராமர் இலங்கா ராச்சியம் அளித்ததை உட்கொண்டு, ''ஒன்னார், ஆரெயி லவர்கட் டாகவு நுமதெனப் பாண்கட னிறுக்கும் வள்ளியோய்'' (புறநா. 203) எனக் கூறியிருத்தலையும், மிக்க வறுமையுற்ற கிணைப்பொருநனொருவன் தன் உறவினரோடு சென்ற காலத்தில் ஒருபகாரி அவர் களுடைய நிலைமைக்கு எத்தனையோ மடங்கு மேற் பட்டுள்ளனவாகிய அணிகலன்களைக் கொணர்வித்து அவர்களிடையே சொரிவித்தபொழுது, அவர்கள்

அணியும் முறையறியாமல் தடுமாற்றமுற்று விரைந்து சென்று அவற்றை அணிந்து கொண்டதற்கு இராவணன் வெளவிச்சென்ற சீதை தான் சென்ற வழியை இராமன் அறிந்துகொள்ளுதற்கு அடையாளமாகத் துகிலில் முடிந்து வீழ்த்திய அணிகலன்களைக் கண்ட வானரங்கள் தனித்தனியே விரைந்தெடுத்து அவற்றை அணிந்துகொள்ளுந் தடுமாற்றத்தை உவமித்திருப்பதையும் (புறநா. 378) நோக்குகையில், இராம சரித்திரம் இவருடைய ஞாபகத்திலிருந்து வந்ததென்பதும், வறுமையின் இயல்பை விளங்கக் கூறுதலில் இவர் வல்லுநரென்பதும் விளங்குகின்றன. இவரியற்றிய செய்யுட்கள் புறநானூற்றில் நான்கு.

கழிந்தது பொழிந்தென வான்கண் மாறினும்
தொல்லது விளைந்தென நிலம்வளங் கரப்பினும்
எல்லா உயிர்க்கும் இல்லால் வாழ்க்கை
இன்னும் தம்மென எம்மனோர் இரப்பின்
முன்னும் கொண்டிரென நும்மனோர் மறுத்தல்
இன்னா தம்ம இயல்தேர் அண்ணல்
இல்லது நிரப்பல் ஆற்றா தோரினும்
உள்ளி வருநர் நசையிழப் போரே
அனையையும் அல்லை நீயே யொன்னார்
ஆரெயில் அவர்கட் டாகவு நுமதெனப்
பாண்கட னிறுக்கும் வள்ளியோய்
பூண்கட னெந்தைநீ இரவலர் புரவே.

(புறம். 203)

எயிற்றியனார் :— தலைவன் தோழியிடத்துத் தலைவியை ''உள்ளிக் காண்பென் போல்வன்'' என்று கூறுங்கால் அவளை உள்ளுதற்குரிய நலன்களைக் கூறுவதாகச் செய்யுள் செய்திருப்பது பாராட்டற்குரியது. இவர் பெயர் காரணப்பெயராக இருக்கலாமென்று தோற்றுகிறது. இவர் பாடிய குறுந்தொகைச் செய்யுள் ஒன்று.

உள்ளிக் காண்பென் போல்வன் முள்ளெயிற்
றமிழ்த மூறுமஞ் செவ்வாய்க் கமழகில்
ஆர நாறு மறல்போற் கூந்தற்
பேரமர் மழைக்கட் கொடிச்சி
மூரன் முறுவலொடு மதைஇய நோக்கோ.

(குறுந். 286)

எயினந்தையார் :— இவர் வேடர்குலத்தைச் சார்ந்தவர். எயின் + தந்தை = எயினந்தை — மரூஉ. இவர் இளங்கீரனூர் என்னும் புலவரின் தந்தை; பாலைத் திணையைச் சிறப்பித்துள்ளார்.

துகில்விரித் தன்ன வெயிலவிர் உருப்பின்
என்றூழ் நீடிய குன்றத்துக் கவாஅன்
ஒய்பசிச் செந்நாய் உயங்குமரை தொலைச்சி
ஆர்ந்தன ஒழிந்த மிச்சில் சேய்நாட்
டருஞ்சுரஞ் செல்வோர்க்கு வல்சி யாகும்
வெம்மை யாரிடை யிறத்தல் நுமக்கே
மெய்ம்மலி உவகை யாகின் றிவட்கே
அஞ்சல் என்ற இறைகை விட்டெனப்
பைங்கண் யானை வேந்துபுறத் திறுத்தலிற்
களையுநர்க் காணாது கலங்கிய வுடைமதில்
ஓரெயின் மன்னன் போல
அழிவுவந் தன்றால் ஒழிதல் கேட்டே.

(நற். 43)

எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார் :— எருக்காட்டூர் என்பது திருவாரூர்க்குத் தென்மேற்கில் மூன்று நாழிகை வழித்தூரத்தில் உள்ளதென்பர்; கண்ணனென்பது கிருஷ்ணனென்னும் தெய்வப் பெயரின் சிதைவு போலும்; கண்ணனென்பது கரியோனென்னும் பொருளதோர் பாகதச் சிதைவு' (திருக்கோவையார் 53, பேர்) என்பது ஈண்டறியற் பாலது; ''செறுவிற் பூத்த சேயிதழ்த்தாமரை, அறுதொழி லந்தண ரறம் புரிந்தெடுத்த, தீயொடு விளங்கு நாடன்'' (பு. 397) என அந்தணரின் வேள்வித் தீயைப் பாராட்டிக்கூறியிருத்தலால் இவர் அந்தண

ராகக் கருதப்படுகிருர்; அக்காலத்திருந்த அரசரால் இவருக்கு இவ்வூர் பிரமதாயமாகக் கிடைத்ததென்று தெரிகிறது ; தாயம்—உரிமை. இவராற் பாடப்பட்டோன் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்; இவர் காலத்துப் புலவர்கள் அவனைப் பாடிய ஆலத்தூர்கிழார் முதலியோர்; தாயங்கண்ணனுரென்று ஒரு புலவர் பெயர் தொகை நூல்களிற் காணப்படுகின்றது; அவரும் இவரும் ஒருவரோ வேருே தெரியவில்லை. புறநானூற்றில் அன்றி, இவர் செய்தனவாக அகநானூற்றில் 7 செய்யுட்கள் உண்டு.

வெள்ளியு மிருவிசும் பேர்தரும் புள்ளும்
உயர்சினைக் குடம்பைக் குரற்றேற் றினவே
பொய்கையும் போதுகண் விழித்தன பைபயச்
சுடருஞ் சுருங்கின் றொளியே மாடெழுந்
திரங்குரன் முரசமொடு வலம்புரி யார்ப்ப
இரவுப் புறங்கண்ட காலைத் தோன்றி
எஃகிரு ளகற்று மேமப் பாசறை
வைகறை யரவங் கேளியர் பலகோள்
செய்தார் மார்ப எழுமதி துயிலெனத்
தெண்கண் மாக்கிணை தெளிர்ப்ப ஒற்றி
நெடுங்கடைத் தோன்றி யேனே யதுநயந்
துள்ளி வந்த பரிசிலன் இவனென
நெய்யுறப் பொரித்த குய்யுடை நெடுஞ்சூடு
மணிக்கலன் நிறைந்த மணநாறு தேறல்
பாம்புரித் தன்ன வான்பூங் கலிங்கமொடு
மாரி யன்ன வண்மையிற் சொரிந்து
வேனில் அன்னவென வெப்பு நீங்க
அருங்கல நல்கி யோனே என்றும்
செறுவிற் பூத்த சேயிதழ்த் தாமரை
அறுதொழில் அந்தணர் அறம்புரிந் தெடுத்த
தீயொடு விளங்கு நாடன் வாய்வாள்
வலம்படு தீவிற் பொலம்பூண் வளவன்

எறிதிரைப் பெருங்கடல் இறுதிக்கண் செலினும்
தெறுகதிர்க் கனலி தென்திசைத் தோன்றினும்
என்னென் றஞ்சலம் யாமே வென்வேல்
அருஞ்சமங் கடக்கு மாற்றலவன்
திருந்துகழ ஞேன்ருட் டண்ணிழ லேமே.

(புறம். 397)

எருமை வெளியனுர் :—எருமை வெளியென்பது ஓரூர். இவராற் குதிரை மறமென்னுந் துறை மிகச் செவ்வியதாகப் பாடப்பெற்றுள்ளது. இவரியற்றிய பாடல்கள் 3 ; அகநா. 1 ; புறநா 2 ;

மாவா ராதே மாவா ராதே
எல்லார் மாவும் வந்தன வெம்மிற்
புல்லுளைக் குடுமிப் புதல்வற் றந்த
செல்வ னூரு மாவா ராதே
இருபேர் யாற்ற வொருபெருங் கூடல்
விலங்கிடு பெருமரம் போல
உலந்தன்று கொல்லவன் மலைந்த மாவே.

(புறம். 273)

எருமை வெளியனுர் மகனுர் கடலனுர் :—எருமை வெளியனுருடைய மகனுவர். இவர் பாடியதாக ஒரு செய்யுள் அகநானூற்றில் உள்ளது. குறிஞ்சியைப் பாடியுள்ளார்.

இருள்கிழிப் பதுபோன் மின்னி வானந்
துளிதலைக் கொண்ட நளிபெயல் நடுநாள்
மின்மினி மொய்த்த முரவுவாய்ப் புற்றம்
பொன்னெறி பிதிரிற் சுடர வாங்கிக்
குரும்பி கெண்டும் பெருங்கை ஏற்றை
இரும்புசெய் கொல்லெனத் தோன்றும் ஆங்கண்
ஆறே அருமர பினவே யாறே
சுட்டுநர்ப் பனிக்குஞ் சூருடை முதலைய
கழைமாய் நீத்தங் கல்பொரு திரங்க
அஞ்சுவம் தமியம் என்னாது மஞ்சுசுமந்
தாடுகழை நரலும் அணங்குடைக் கவாஅன்
ஈருயிர்ப் பிணவின் வயவுப்பசி களைஇய

இருங்களி றட்ட பெருஞ்சின உழுவை
நாம நல்லராக் கதிர்பட உமிழ்ந்த
மேய்மணி விளக்கிற் புலர ஈர்க்கும்
வாணடந் தன்ன வழக்கருங் கவலை
உள்ளுநர் உட்கும் கல்லடர்ச் சிறுநெறி
அருள்புரி நெஞ்சமொ டெஃகுதுணை யாக
வந்தோன் கொடியனும் அல்லன் தந்த
நீதவ றுடையையும் அல்லை நின்வயின்
ஆனு அரும்படர் செய்த
யானே தோழி தவறுடை யேனே. (அகம். 72)

எழூஉப் பன்றி நாகன் குமரனார் :— கொடுந்தமிழ் நாடு பன்னிரண்டனுள் ஒன்று பன்றி நாடு. இவர் இயற்றிய பாடல்கள் இரண்டு அகநானூற்றில் உள்ளன; குறிஞ்சித்திணையையும், முல்லைத்திணையையும் சிறப்பித்துப்பாடியுள்ளார். இவரது பெயர் எழூம் பன்றிநாககுமாரன் எனவும் சுவடிகளில் காணப் படுகிறது.

இகுளை கேட்டிசின் காதலந் தோழி
குவளை உண்கண் டெண்பனி மல்க
வறிதியான் வருந்திய செல்லற்கு அன்னை
பிறிதொன்று கடுத்தனள் ஆகி வேம்பின்
வெறிகொள் பாசிலை நிலமொடு சூடி
உடலுநர்க் கடந்த கடலந் தானைத்
திருந்திலை நெடுவேற் றென்னவன் பொதியில்
அருஞ்சிமை யிழிதரும் ஆர்த்துவரல் அருவியில்
ததும்புசீர் இன்னியங் கறங்கக் கைதொழு
துருகெழு சிறப்பின் முருகுமனைத் தரீஇக்
கடம்புங் களிறும் பாடித் தொடங்குபு
தோடுந் தொடலையுங் கைக்கொண் டல்கலும்
ஆடி னராதல் நன்றோ நீடு
நின்னொடு தெளித்த நன்மலை நாடன்
குறிவரல் அரைநாட் குன்றத் துச்சி
நெறிகெட வீழ்ந்த துன்னருங் கூரிருள்
திருமணி உமிழ்ந்த நாகம் காந்தள்

கொழுமடற் புதுப்பூ ஊதுந் தும்பி
நன்னிற மருளும் அருவிடர்
இன்னா நீளிடை நினையுமென் னெஞ்சே.
(அகம். 138)

குறிப்பு: அடி—12. தோடு—பனந்தோடு. தொடலை-கடப்பமாலை.

ஐயாதிச் சிறுவெண்டேரையார் :—யாக்கை நிலையாமையை அறிவித்தல் வாயிலாக விரைந்து அறஞ்செய்க என்று இவர் அறிவுறுத்துகின்றார்; சிறுவெண்டேரையாரென்று புறநானூற்றுள் ஒருவர் பெயர் காணப்படுகின்றது. அவரும் இவரும் ஒருவரே.

இருங்கட லுடுத்தவிப் பெருங்கண் மாநிலம்
உடையிலை நடுவண திடைபிறர்க் கின்றித்
தாமே யாண்ட வேமங் காவலர்
இடுதிரை மணலினும் பலரே சுடுபிணக்
காடுபதி யாகப் போகித் தத்தம்
நாடு பிறர்கொளச் சென்றுமாய்ந் தனரே
அதனால், நீயுங் கேண்மதி யத்தை வீயா
துடம்பொடு நின்ற உயிரும் இல்லை.
மடங்கல் உண்மை மாயமோ வன்றே
கள்ளில் ஏய்ந்த முள்ளியம் புறங்காட்டு
வெள்ளில் போகிய வியலு ளாங்கண்
உப்பிலாஅ வவிப்புழுக்கல்
கைக்கொண்டு பிறக்குநோக்கா
திழிபிறப்பினோ னீயப் பெற்று
நிலங்கல னாக விலங்குபலி மிசையும்
இன்னா வைகல் வாரா முன்னே
செய்ந்நீ முன்னிய வினையே
முந்நீர் வரைப்பக முழுதுடன் றுறந்தே. (புறம். 363)

ஐயூர் முடவனார் :—இவருக்கு முடவனாரென்னும் பெயர் சினையால் வந்தது போலும்; இப்பெயர் ஐயூர்கிழார் எனவும், உறையூர் முடவனாரெனவும் சில பிரதிகளில் உள்ளது. ஐயூர் என்பது சோழ நாட்டகத்ததோர் ஊர். இவர் நடந்து செல்லுதற்கு இயலாத முடவராதலின், தாமான் தோன்றிக்

கோனை அடைந்து வண்டியிழுத்தற்குப் பகடு வேண்டு மென்று பாடி, அவன் பகடுகளும் பல பசுநிரை களும் ஊர்தியுங் கொடுக்கப்பெற்று வாழ்ந்தவர் ; இறந்தோருடம்பைத் தாழியாற் கவித்த லுண்டென் பதும் வீரச்சிறப்பும் கொடைச்சிறப்பும் இவர் பாடல்களிற் காணப்படுகின்றன. இவராற் பாடப் பட்டோர் ஆதனெழினி, தாமான் தோன்றிக் கோன், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன், பாண்டியன் கூடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதி யென்பார். ''அறவ ரறவன் மறவர் மறவன், மள்ளர் மள்ளன் றொல்லோர் மருகன், இசையிற் கொண்டான்'' என்பது இவர் தாமான் தோன்றிக் கோனைப் பாராட்டிய பகுதி. இவர் செய்தனவாக 10 செய்யுட்கள் தொகைநூல்களிற் காணப்படுகின்றன. அகநா. 1 ; குறுந். 3 ; நற். 2 ; புறநா. 4.

நீர்மிகின் சிறையும் இல்லை தீமிகின்
மன்னுயிர் நிழற்றும் நிழலும் இல்லை
வளிமிகின் வலியும் இல்லை ஒளிமிக்கு
அவற்றோர் அன்ன சினப்போர் வழுதி
தண்டமிழ் பொதுவெனப் பொறாஅன் போரெதிர்ந்து
கொண்டி வேண்டுவ னாயின் கொள்கெனக்
கொடுத்த மன்னர் நடுக்கற் றனரே
அளியரோ வளியரவ னளியிழந் தோரே
நுண்பல சிதலை யரிதுமுயன் றெடுத்த
செம்புற் றீயல் போல
ஒருபகல் வாழ்க்கைக் குலமரு வோரே.

(புறம். 51)

ஐயூர் மூலங்கிழார் ;—இவருக்கு இப்பெயர் மூல மென்னும் நாண்மீனினுல் வந்தது போலும் ; இவர் பாடலில் வேங்கை மார்பனென்னும் தலைவனுற் பாதுகாக்கப்பட்டுள்ள கானப்பேரென்னும் ஊரில் அமைந்திருந்த அரணின் அமைதி கூறப் பெற்றுள்ளது. இவராற் பாடப்பட்டோன் கானப்பேரெயில் கடந்த

உக்கிரப் பெருவழுதி. இவர் காலத்துப் புலவர் அவ்வழுதியைப் பாடியவர்களாவர்.

புலவரை யிறந்த புகழ்சா ளுேன்றல்
நிலவரை யிறந்த குண்டுகண் ணகழி
வான்ருேய் வன்ன புரிசை விசும்பின்
மீன்பூத் தன்ன வுருவ ஞாயிற்
கதிர்நுழை கல்லா மரம்பயில் கடிமிளே
அருங்குறும் புடுத்த கானப் பேரெயில்
கருங்கைக் கொல்லன் செந்தீ மாட்டிய
இரும்பு ணீரினு மீட்டற் கரிதென
வேங்கை மார்ப னிரங்க வைகலும்
ஆடுகொளக் குழைந்த தும்பைப் புலவர்
பாடுதுறை முற்றிய கொற்ற வேந்தே
இகழுந ரிசையொடு மாயப்
புகழொடு விளங்கிப் பூக்கநின் வேலே.

(புறம். 21)

ஒக்கூர் மாசாத்தனுர் :—இவர் செய்யுளிற் கணவனே யிழந்த மகளிர் புல்லரிசிக் கூழை அகாலத்திலுண்டு கைம்மை நோன்பு நோற்றிருத்தல் கூறப்பெற் றுள்ளது. இப்பெயர் எக்கூர் மாசாத்தனுரென்றும் சில பிரதிகளிற் காணப்படுகின்றது. இவர் இயற்றியதாக அகநானூற்றில் ஒரு செய்யுள் (14) உள்ளது. புறநானூற்றில் ஒன்றும் உள்ளது.

அளிய தாமே சிறுவெள் ளாம்பல்
இளேய மாகத் தழையா யினவே
இனியே, பெருவளக் கொழுநன் மாய்ந்தெனப் பொழுது மறுத்
தின்ஞ வைகல் உண்ணும்
அல்லிப் படூஉம் புல்லா யினவே.

(புறம். 248)

ஒக்கூர் மாசாத்தியார் :—முல்லேக் கொடி மலர்ந் திருத்தலே அது நகுதல் போலும் என்றும், காட்டுப் பூனேயை அஞ்சிப் பெட்டைக் கோழி தன் குஞ்சு

களை ஒருங்கு சேர்க்கும் பொருட்டு அழைத்துக் கூவும் என்றும் கூறுகிறார். புறநானூற்றில் ஒரு மறக்குடி மகளின் வீரச்செயல் இவரால் விசேடித்துப் பாராட்டப் பெற்றுள்ளது. இவர் பெண்பாலார், இவர் பாடல்கள் முல்லைத் திணையைப் பற்றி வருவன. ஒக்கூர் என்பது பாண்டி நாட்டில் திருக்கோட்டியூர்ப் புறத்தே யுள்ள ஓர் ஊர். இவர் பாடிய செய்யுட்கள் 8. (அகநா. 2 ; குறு. 5 ; புறநா. 1).

இளமை பாரார் வளநசைஇச் சென்றோர்
இவணும் வாரார் எவண ரோவெனப்
பெயல்புறந் தந்த பூங்கொடி முல்லைத்
தொகுமுகை யிலங்கெயி றாக
நகுமே தோழி நறுந்தண் காரே.

(குறுந். 126)

ஒருசிறைப் பெரியனார் :—இவர் தலைவியினுடைய கண்களுக்கு அவளது தன்னையர் கலையின்மேல் எய்த குருதி தோய்ந்த அம்பை உவமை கூறி யுள்ளமையும், தேர்ப்பாகன் தலைவனை ஆற்றுவிப்ப தாகக் கூறியுள்ளமையும் சிறந்த செய்திகளாகும். நாஞ்சில் வள்ளுவனைப் பாடிப் பரிசில் பெற்றவர். நாஞ்சில்மலையின் வளத்தையும் அதன் தலைவனது இயல்பையும் இவர் பாராட்டி யிருக்கின்றார். இவர் பாடல்கள் முல்லையையும் குறிஞ்சியையும் பற்றியவை. இவர் இயற்றிய பாடல்கள் 3. (குறுந். 1 ; நற். 1 ; புறநா. 1.) இவர் பெயர் ஒரு 'சிறைப்பெயரினார்' ஒருசிறப்பெயரினார் என்று சில பிரதிகளில் காணப்படுகிறது.

தீண்டலும் இயைவது கொல்லோ மாண்ட
வில்லுடை வீளையர் கல்லிடு பெடுத்த
நனந்தலைக் கானத் தினந்தலைப் பிரிந்த
புன்கண் மடமா னேர்படத் தன்னையர்
சிலைமாண் கடுவிசைக் கலைநிறத் தழுத்திக்

குருதியொடு பறித்த செங்கோல் வாளி
மாறுகொண் டன்ன வுண்கண்
நாறிருங் கூந்தற் கொடிச்சி தோளே.

(குறுந். 272)

ஒரூஉத்தனார் :—இவர் செய்யுளில் ஒருவீரன் பகைவர் சேனையைத் தனியே நின்று தடுக்கும் மறச்செயலாகிய எருமைமறம் விளக்கப் பெற்றுள்ளது. இவர் இயற்றிய பாடல், புறநா. 275.

கோட்டங் கண்ணியுங் கொடுந்திரை யாடையும்
வேட்டது சொல்லி வேந்தனைத் தொடுத்தலும்
ஒத்தன்று மாதோ விவற்கே செற்றிய
திணிநிலை யலறக் கூவை போழ்ந்துதன்
வடிமா ணெஃகங் கடிமுகத் தேந்தி
ஓம்புமின் ஓம்புமின் இவணென ஓம்பாது
தொடர்கொள் யானையிற் குடர்கா றட்பக்
கன்றமர் கறவை மான
முன்சமத் தெதிர்ந்ததன் றோழற்கு வருமே.

(புறம். 275)

ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் :—புதுக்கோட்டை சமஸ்தானத்திலுள்ள ஒலியமங்கலமென்னும் ஊரிலுள்ள சாசனத்தால் ஒல்லையூர் என்பது அவ்வூரென்று தெரிகின்றது. தென்னாட்டிலுள்ள பூதப் பாண்டியென்னு மோரூர் பண்டைக் காலத்தில் இவன் பெயரால் அமைக்கப்பெற்றது போலும். போர்க்களத்தில் இவன் கூறிய வஞ்சினவகைகள் அறியற்பாலன ; போரில் வல்லவன் ; செய்யுள் செய்தலிலும் திறமையுடையோன் ; இதனை இவன் பாடிய பாடல் புலப்படுத்தும் ; இவன் பெயர் பூதபாண்டியனெனவும் வழங்கும்; இவன் நட்பினர்: மையலென்னும் ஊரிலுள்ள மாவன், எயிலென்னும் ஊரிலுள்ளானாகிய ஆந்தை, அந்துவஞ்சாத்தன்,

ஆதனழிசி, இயக்கன் என்னும் இவர்கள். இவன் மனைவி இவன் இறந்தவுடனே தீயிற் பாய்ந்து இறந்தாள். இவன் இயற்றிய பாடல்கள் 4. அகநா. 1 ; புறநா. 3.

மடங்கலிற் சினைஇய மடங்கா வுள்ளத்
தடங்காத் தானை வேந்த ருடங்கியைந்
தென்னொடு பொருது மென்ப வவரை
ஆரம ரலறத் தாக்கித் தேரோ
டவர்ப்புறங் காணே னாயிற் சிறந்த
பேரம ருண்கண் ணிவளினும் பிரிக
அறனிலை திரியா அன்பின் அவையத்துத்
திறனில் ஒருவனை நாட்டி முறைதிரிந்து
மெலிகோல் செய்தே னாகுக மலிபுகழ்
வையை சூழ்ந்த வளங்கெழு வைப்பிற்
பொய்யா யாணர் மையற் கோமான்
மாவனு மன்னெயி லாந்தையு முரைசால்
அந்துவஞ் சாத்தனு மாத னழிசியும்
வெஞ்சின வியக்கனு முளப்படப் பிறரும்
கண்போ னண்பிற் கேளிரொடு கலந்த
இன்களி மகிழ்நகை யிழுக்கியா னொன்றோ
மன்பதை காக்கும் நீள்குடிச் சிறந்த
தென்புலங் காவலி னொரீஇப்பிறர்
வன்புலங் காவலின் மாறியான் பிறக்கே.

(புறம். 71)

<u>ஓதலாந்தையார்</u> :— ஐங்குறுநூற்றின் நான்காம் நூறாகிய பாலைத்திணையைப் பாடிய இவர் கடைச் சங்கப் புலவர்களுள் ஒருவர். ஆதன் தந்தை என்பது ஆந்தை யென்று மருவியதென்பது பழைய உரையாசிரியர்களுடைய கொள்கை. பாலைத்திணை இயல்பை விளங்கப் பாடுதலில் மிக்க ஆற்றலுடையவர். குறுந்தொகையில் 3-ம் ஐங்குறுநூற்றில் பாலையில் 100-ம் இவரியற்றிய செய்யுட்கள்.

பாலைத்திணையில் பிரிதலும் பிரிதல் நிமித்த முமே பயின்றுவருவன வாயினும், 'தலைவி தலைவனை மணந்து அவனுடன் இனியளாய் இன்று வரும்' எனக் கேட்ட செவிலி அதனை நற்றாய்க்குக் கூறும் செய்யுளை ஈற்றில் அமைத்து இத்திணைக்கு மங்கல முடிபு கொடுத்திருத்தல் மிக அழகாயுள்ளது.

தாம் அன்பு வைத்துள்ளாருடைய அரிய பண்பு களை நினைக்குந்தோறும், ஒருவருக்குற்ற வழிநடைத் துன்பம் முதலியன நீங்குமென்பதை இவர் ஐங்குறு நூறு 322, 325, 327 ஆம் கவிகள் முதலியவற்றில் வெளியிடுகிறார்.

ஒரு காதலி தான் கருதியவனையே கணவனாகக் கோடல் வேண்டுமென்று நினைப்பாள் (ஐங்.371) என்றும் ஒரு தலைவியை அவர் விரும்பும் தலைவனுக்கு மணஞ் செய்து கொடுக்க விருப்பமற்ற தாயை 'அறனில் தாய்' (ஐங். 385) என்றும், தீவினையை 'அறனில் பால்' (ஐங்.476) என்றும், அந்தணர்க்குரிய கொள்கையைக் கூறுமிடத்து 'அறம்புரி பெருமறை நவின்ற நாவிற்,றிறம்புரி கொள்கை (ஐங்.387) என்றும், அறத்தைச் செய்வோர் அன்பைக் கருதுவது தகாது என்பதை 'அன்பில் அறனும்' (ஐங்.394) என்றும் இவர் கூறுவதிலிருந்து அறத்தை இவர் பலபடியாகப் பாராட்டுகின்றனர் என்பது தெரிகிறது. இவர் செய்யுட்களில் சொல்நயம் பொருள்நயம் ஆகிய வற்றை அதிகமாகக் காணலாம்.

ஓரம் போகியார் :— ஐங்குறுநூற்றின் முதல் நூலாகிய மருதத்தைப் பாடிய இவர் கடைச் சங்கப் புலவருள் ஒருவர். இவர் பெயர் ஓரம் போதியார் என்றும், ஓரேர் போகியார் என்றும், ஒன்னார் உழவர் என்றும், காம்போதியார் என்றும் பிரதிகளில் வேறுபட்டுக் காணப்படுகின்றது. இவர்

மருதத்திணையின் வளங்களை உள்ளுறையுவமை இறைச்சி முதலிய நயங்கள் தோன்ற விளங்கப் பாடுதலில் மிக்க ஆற்றலுடையவர்.

இவராற் பாடப்பெற்றவர் ஐவர். அவர்களுள் முடிமன்னர் மூவர்.

*(1)* சேரமான்களில் ஆதன் அவினி என்பவன். (ஐங். முதற்பத்து).

*(2)* வெல்போர்ச் சோழன் கடுமான் கிள்ளி *(56, 78)*.

*(3)* பாண்டியன் *(54)*; உபகாரிகள் இருவர் :
*(1)* விராஅன் *(58)*, *(2)* மத்தி *(61)*.

இவர் பாடலில் வந்துள்ள ஊர்கள் நான்கு : *(1)* தேனூர். *(54–5, 57)*, *(2)* ஆமூர் *(56)*, *(3)* இருப்பை *(58)*, *(4)* கழார் *(61)*. இவற்றுள் தேனூரை வேனிலாயினும் தண்புனல் ஒழுகும் தேனூரென்றும், பாண்டியர் தேனூரென்றும், கரும்பின் எந்திரம் களிற்றெதிர் பிளிற்றும் தேனூரென்றும், வேள்விகள் மலிந்த தேனூரென்றும் மற்ற ஊர்களினும் சிறப்பாகப் பாராட்டுதலை நோக்கும் போது இவருக்கு இவ்வூரின்கண் ஏதேனும் நெருங்கிய பற்று இருக்கலாமென்று தோற்றுகிறது.

நதிகளில் காவிரி (ஐங். *42*)யும், வையை (ஐங். *7*)யும், இந்திர விழாவும் (ஐங். *62*), தைந் நீராடும் விரதமும் (ஐங். *84*) இவரால் குறிக்கப் பெற்றுள்ளன.

இவர் பாடியனவாக இப்பொழுது தெரிந்தவை. ஐங்குறுநூற்றில் முதல் நூறு, நற்றிணையில் இரண்டு *(20, 360)*, குறுந்தொகையில் ஐந்து *(10, 70,*

122, 127, 384) அகநானூற்றில் இரண்டு (286, 316), புறநானூற்றில் ஒன்று (284) ஆக 110 செய்யுட்களாகும்.

திருவள்ளுவரைப் போலவே இவர் நூலின் தொடக்கத்தில் இல்லறத்தை வைத்துச் சிறப்பிக்கிருர். இல்லறம் செவ்வனே நடைபெறுவதற்கும் கற்பொழுக்கம் குன்ருமலிருப்பதற்கும் அரசனது காவல் இன்றியமையாததாகலின் முதற்கண் காவலனை வாழ்த்துகிருர். மாதவர் நோன்பும் மடவார் கற்பும் காவலன் காவல் இன்றெனி னின்ருல் (மணி. 22 : 208–9) என்ற அடிகள் கவனிக்கற்பாலன.

அரச வாழ்த்தோடு 'பால்பல வூறுக' (ஐங். 3) 'பார்ப்பாரோதுக' (ஐங். 4) என்று இவர் கூறியிருப்பது 'ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர், காவலன் காவா னெனின், என்ற திருக்குறளை நினைப் பூட்டுகிறது.

தலைவி மணம் நிகழ்ந்த பின்னர் அல்லாமற் றலைவனை எதிர்ப்பட்ட ஞான்றே கற்புப்பூண் டொழுகுகின்ற சிறப்பை (ஐங். 6)யும், தலைவனிடத்திற் புலத்தற்குரிய காரணமாயின உளவாகவும் தலைவி அவற்றை மனங்கொளாத சிறப்பை (ஐங். 1, குறுந். 10)யும் இவர் பாராட்டியிருப்பது தமிழ் மகளிரின் கற்பின் பெருமைக்கு ஒரு சான்ருகும். குலப்பெண்கள் தம் கணவரை அதிகமாகப் புலத்தலினுல் வரும் தீமைகளை இவர் நன்கு விளக்கி யுள்ளார்; அகநா. 316. 'தலைவி தலைவன் வீட்டிற் கால்வைத்த நாள்முதல் தலைவனுக்குச் செல்வம் முதலிய நன்மைகள் பெருகின' என்பது தோன்ற அவளை 'விழவு மூதாட்டி' (குறுந். 10), 'தலைவன் செல்வம் பெற்று மகிழ்தற்குரியான்' என்று கூறு

வதை நோக்க, 'ஏர் பிடித்தவன் என்ன செய்வான், பானை பிடித்தவள் பாக்கியம்' என்ற பழமொழி ஞாபகத்துக்கு வருகிறது'. தலைவியை ஐம்புலன் களுக்கும் இன்பம் தருபவளென்று இவர் கூறி யிருப்பது (குறுந். 70) 'கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு, மொண்டொடியார் கண்ணே யுள' என்ற திருக்குறளுக்கு இலக்கியமாக உள்ளது.

இவ்வாசிரியர் கூறும் சில உவமைகள் படித்து இன்புறற் பாலனவாகும். தலைவன் மார்பு ஊர வர்க்கெல்லாம் பொதுவாகிய பழனம் போலாது தலைவிக்கே யுரித்தாதல் (4); தலைவன் மார்புக்குப் பழனத்தை உவமையாகக் கூறிப் பரத்தையின் மார்பு பலர் படிந்துண்ணும் தண்ணிய கயம் போன்றது (ஐங். 84) என்றல்; இழிந்தோராகிய பரத்தையர் தோளுக்கு உயர்ந்த பொருளை உவமை கூறாது, கழுந்து தேய்ந்து வழு வழுப்பாகவும் பருத்ததாகவுமுள்ள உளுத்தங்காயை அடித்தற்குதவும் தடியை உவமை கூறுதல் (குறுந். 384).

உலகியல் தொடர்பான பல செய்திகளை இவர் அழகு தோன்றக் கூறுகிறார் : மகளிர், தாம் மகவைப் பெற்றதனால் தம் கணவருக்கு வேம்பாவ தாக நினைப்பதை, 'தூயர் நறியர் நின் பெண்டிர் பேய் அனையம் யாம் சேய்பயந்தனமே' (ஐங். 70) என்றல்; 'புதைத்தல் ஒல்லுமோ ஞாயிற்றதொளி (ஐங். 71); 'சிறுவரின் இனைய செய்தி, நகாரோ பெருமநிற் கண்டிசினோர் (ஐங். 85) ; நும்மோ ரன்னோர் மாட்டும் இன்ன பொய்யொடு மிடைந் தவை தோன்றின் மெய்யாண்டுளதோ விவ்வுல கத்தானே' (அகம். 286).

புறப்பொருட் செய்திகளாக இவர் கூறுவன பகைவர் புல்லார்தலும் (ஐங். 4) மறக்குடியிற்

பிறந்த ஒருவனது வீரத்தின் மேம்பாடுமே (புறநா. 284) யாகும். இவற்றுள் பகைவர் புல்லார்தல் புறப்பொருள்களைப் பற்றிக் கூறும் இலக்கண நூல்களில் யாண்டும் கூறப்பட வில்லை. ஆனால் சங்க நூல்களில் ஐங்குறுநூற்றைத் தவிரத் தெரிந்த வரையில் சிறுபஞ்ச மூலத்தில் மட்டும் இதற்கு இலக்கியம் அமைந்துள்ளது.

ஓரிற்பிச்சையார் :– அறிவர் பெறும் உணவை 'ஓரிற் பிச்சை' என்று குறித்தலின் இப்புலவர் இப் பெயருடையவர் ஆனார். ஓரிற் பிச்சையின் சிறப்பு மிகவும் பாராட்டற்பாலது. பெரியோர்கள் ஓரில்லைத் தாண்டிப் பிச்சை எடுப்பதில்லை. இவர் பாடிய குறுந்தொகைச் செய்யுள் ஒன்று.

ஆசில் தெருவில் நாயில் வியன்கடைச்
செந்நெல் அமலை வெண்மை வெள்ளிழு
தோரிற் பிச்சை ஆர மாந்தி
அற்சிர வெய்ய வெப்பத் தண்ணீர்
சேமச் செப்பிற் பெறீஇயரோ நீயே
மின்னிடை நடுங்கும் கடைப்பெயல் வாடை
எக்கால் வருவது என்றி
அக்கால் வருவரெங் காத லோரே.

(குறுந். 277)

அற்சிரம்-முன்பனிக்காலம்.

ஓரேருழவனார் :– வினைமுற்றி மீளுந் தலைமகன் தலைமகளைக் காண்டற்கு விரையும் தன் நெஞ்சிற்கு ஈரச் செவ்வியில் விதை விதைத்தற் பொருட்டுக் கொல்லையை அடைதற்கு விரையும் ஓரேருழவனை உவமை கூறிய சிறப்பால் இவர் இப்பெயர் பெற்றனர்; இவருடைய இயற் பெயர் தெரியவில்லை. தம்முடைய செய்யுளில் இல்லறத்தை வெறுத்துக் கூறுதலின் இவர் துறவறத்தில் பற்றுடையவரென்று கருத இடமுண்டு. இவர் இயற்றிய

செய்யுள் (குறுந். 131), புறநா. 193, இந்த 131ஆம் செய்யுளின் ஆசிரியர் பெயருக்கு 'நக்கீரர்' என்னும் பிரதிபேதம் காணப்படுகிறது. இப் பெயர் ஒன்னுருழவர் எனவும் வழங்கும்.

ஆடமை புரையும் வனப்பின் பணைத்தோள்
பேரமர்க் கண்ணி இருந்த ஊரே
நெடுஞ்சே ணாரிடை யதுவே நெஞ்சே
ஈரம் பட்ட செவ்விப் பைம்புனத்(து)
ஓரேர் உழவன் போலப்
பெருவிதுப் புற்றன்று னோகோ யானே.

(குறுந். 131)

ஓரேருழவன் ஈரம் வீண்படாமல் உழுதற்கு விரை தலைப்போல என்நெஞ்சம் தலைவியை உரிய பருவத்தேக் கண்டு அளவளாவ விரைகின்றது என்றான். பல ஏருடையான் சிறிது சோம்பியிருப்பினும் ஏவலாளர் உதவி கொண்டு குறுகிய காலஅளவில் உழுதுவிடல் கூடும்; ஓரேருழவனே அவ்வோரேரைக் கொண்டே ஈரம் வீண்படாமல் உழவேண்டியவனுதலின் விரை வான். ஆதலின் அவனை உவமை கூறினான்.

ஓரேருழவன் என்றது ஓரேரும் அதனால் உழப்படும் சிறுநிலமும் உடையவனைக் குறித்தது.

''ஓரேர்க்காரன் உழுதுகெட்டான்;
அஞ்சேர்க்காரன் அமர்த்திக்கெட்டான்''—

என்ற பழமொழியும் ஒன்று உண்டு.

ஒளவையார் :— இவர் அதியமான் நெடுமானஞ்சியிடம் அமுத மயமாகிய நெல்லிக்கனி பெற்று அவனைப் புகழ்ந்தார். இவர் அக்கனியைப் பெற்றமை புறநானூறு 91ஆம் பாட்டினாலும், ''பூங்கமல வாவிசூழ் புல்வேளூர்ப் பூதனையும், ஆங்குவரும் பாற் பெண்ணை யாற்றினையும் ஈங்கே, மறப்பித்தாய்

வாளதிகா வன்கூற்றி னுவை, அறுப்பித்தா யாமலகம் தந்து'' என்னும் வெண்பாவாலும், 100ஆம் திருக்குறளுக்குப் பரிமேலழகர், 'இனிய கனிகளென்றது ஔவையுண்ட நெல்லிக் கனிபோல் அமிழ்தானவற்றை' என்று எழுதிய விசேட வுரையாலும் வெளியாகின்றது. இவராற் பாடப் பட்டோர்; அதியமான் நெடுமானஞ்சி, தொண்டை மான், அதியமான் மகன் பொகுட்டெழினி, நாஞ் சில் வள்ளுவன், சேரமான் மாவெண்கோ, பாண்டி யன் கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெரு வழுதி, சோழன் இராசசூயம் வேட்ட பெருநற் கிள்ளியென்பார். இவரியற்றிய பாடல்கள் புற நானூற்றிலன்றி நற்றிணையிலும், குறுந்தொகை யிலும், அகநானூற்றிலும், தொல்காப்பிய உரை யிலும், யாப்பருங்கல விருத்தியுரை முதலியவற்றி லும் காணப்படுகின்றன. ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி, அசதிக்கோவை முதலியன இவரியற்றிய நூல்களென்பர். இவர் அவ்வச்சமயத்துச் செய்தனவாகவுள்ள தனிப் பாடல்கள் மிகப்பல. பகைவரை நோக்கிக் கூறு வார்போல, அதியமான் நெடுமானஞ்சியின் குணங் களை இவர் பாராட்டிக் கூறியிருக்கும் பகுதிகளும் அவனுல் தூதனுப்பப்பட்டுச் சென்ற பொழுது தன் மேம்பாட்டைப் புலப்படுத்தற் பொருட்டுத் தொண்டைமான் தன் படைக்கலக் கொட்டிலைக் காட்டக் கண்டு அப்படைக்கலங்களைப் புகழ்வார் போல அதியமானது போர்த்திறத்தை வெளிப் படுத்தியிருக்கும் பகுதியும் மிக்க விம்மிதத்தை விளைவிக்கும். அதியமான் கோவலூரெறிந்த தனைப் பரணர் பாடியதையும் (புறநா. 96), மூவேந்தரும் சேனைகளுடன் பாரியை வெல்லக் கருதி அவன் நகரைச் சூழ்ந்து புகல் போக்கின்றித் தடுத்தபோது பறவைகளால் நெற்கதிரைப் புறத் திருந்து வருவித்து உள்நகரத்தாரைப் பசியால்

வருந்தாதபடி பாதுகாத்தளித்த கபிலர் செய்தியை யும் (அகநா. 303), பிரிவாற்ருது வருந்திய வெள்ளி வீதியார் என்னும் புலமை வாய்ந்த பெண்பாலா ருடைய துன்பமிகுதியையும் (அகநா. 147) புலப் படுத்தியிருத்தல் புலவரிடத்து இவருக்குள்ள பேரன்பை விளக்குகின்றது ; பழையனூர்க் காரிக் காகச் சென்று ஆடொன்று கேட்டபோது சேரன் இவருடைய மேம்பாட்டை நினைந்து, பொன்ஞல் ஓர் ஆடு செய்வித்து அளிக்க, இவர் அதனைப் பெற்று மனமகிழ்ந்து, ''சேரா ! உன்னுடு பொன் ஞடு (உன் நாடு பொன் நாடு)'' என்று கூறினு ரென்றும் அதனுல் மலைநாடு இதுகாறும் சிறப் புற்று விளங்குகிறதென்றும் ஒரு செய்தி வழங்கு கிறது. தம்முடைய கூற்ருகவன்றிப் பாடி யிரத்தற்குரிய விறலி முதலியவர்களின் கூற்றுக் களாகவும் இவர் பாடிய பாடல்கள் புறநானூற்றி லும் பிற நூல்களிலும் காணப்படும். ஆராய் வோர், அதனைக் கொண்டு இவரை விறலி முதலிய வர்களாக நினைந்து விரைந்து முடிவுசெய்து விடுதல் மரபன்று ; அங்ஙனம் பாடுதல் கவிமதமெனக் கொள்ளுதல் முறை ; பிற புலவர்கள் பாடல் களிலும், இம்முறை காணப்படும். தொகை நூல்களில் இவர் பெயர் ஒளவையெனவும் வழங்கும். இவர் பாடிய நற்றிணைச்செய்யுட்கள் 7; குறுந்தொகைச் செய்யுட்கள் 15; புறநானூற்றுச் செய்யுட்கள் 33, அகநானூறு 4.

நாடா கொன்ருே காடா கொன்ருே
அவலா கொன்ருே மிசையா கொன்ருே
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே.

(புறம் 187)

கங்குல் வெள்ளத்தார்:— இரவினைக் கண்டு தலைவி அஞ்சி, ''கங்குல் வெள்ளங் கடலினும் பெரிதே'' என்று கூறியதாக அமைத்திருத்தலின் இவர் இவ்விசேடப் பெயரையடைந்தார். இவர் பாடிய குறுந் தொகைச் செய்யுள் ஒன்று.

எல்லை கழிய முல்லை மலரக்
கதிர்சினந் தணிந்த கையறு மாலையும்
இரவரம் பாக நீந்தின மாயின்
எவன்கொல் வாழி தோழி
கங்குல் வெள்ளங் கடலினும் பெரிதே.

(குறுந். 387)

மாலையைக் கடலாகவும் அதன் பின்னர்த்தாகிய இராவை அதன் வரம்பாகவும் வைத்துக் கூறினாள்; ஒரு சிறு பொழுதை அடுத்து வரும் மற்றொரு சிறுபொழுதைக் கரையாகக் கூறும் இச் செய்யுளை நினைந்து பரிமேலழகர், ''கூடிய ஞான்று பிரிவரென்று அஞ்சப் பண்ணிய காலை, அஃது ஒழிந்து இஞ்ஞான்று கங்குல் வெள்ளத்திற்குக் கரையாய் வாரா நின்றது'' (குறள். 1225.) என்று உரை எழுதினர்.

கச்சிப்பேட்டிளந்தச்சனார்:— கச்சிப்பேடு என்ற ஊர் காஞ்சிபுரத்தைச் சார்ந்தது. இவர் முல்லைத் திணையைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். இவர் பாடிய செய்யுளொன்று நற்றிணையில் உள்ளது.

கொல்லைக் கோவலர் குறும்புனஞ் சேர்ந்த
குறுங்காற் குரவின் குவியிணர் வான்பூ
வாடுடை யிடைமகன் சூடப் பூக்கு
மகலு ளாங்கட் சீறூ ரேமே
அதுவே சாலுங் காம மன்றியும்
எம்விட் டகறி ராயிற் கொன்னொன்று
கூறுவல் வாழிய ரைய வேறுபட்
டிரீஇய காலை யிரியிற்
பெரிய வல்லவோ பெரியவர் நிலையே.

(நற். 266.)

கச்சிப்பேட்டுக் காஞ்சிக் கொற்றனார்:— கச்சிப் பேடென்பது காஞ்சிபுரத்தைச் சார்ந்த ஓர் ஊர். தலைவன் தலைவியின்பால் விருப்ப முடையவனேனும் தன்னலம் பேணாது இல்லறம் புரியுங் கடமையை நினைந்து அதற்குரிய பொருள் தேடச் செல்லுதலைத் தோழி கூற்றாகவும் தலைவி கூற்றாகவும் கூறியுள்ளார். செல்வத்தை இவர், ''கேடில் விழுப்பொருள்'' என்று குறித்துள்ளார். நன்னாகையார், இளந்தச்சனார், பெருந் தச்சனார் முதலிய புலவர்களும் கச்சிப் பேட்டினர் என்று தெரிகிறது. இவர் பாடிய குறுந்தொகைச் செய்யுட்கள் இரண்டு.

அவரே, கேடில் விழுப்பொரு டருமார் பாசிலை
வாடா வள்ளியங் காடிறந் தோரே
யானே, தோடார் எல்வளை நெகிழ வேங்கிப்
பாடமை சேக்கையிற் படர்கூர்ந் திசினே
அன்னள் அளியள் என்னாது மாமழை
இன்னும் பெய்ய முழங்கி
மின்னுந் தோழியென் னின்னுயிர் குறித்தே.

(குறுந். 216)

வள்ளியங்காடு: அம், சாரியை. படர்—நினைந்து வருந்தும் துன்பம். அன்னள்—மிக்க வருத்தத்தை யுடையவள். உயிர்குறித்து—உயிரைக் கொள்ளுதல் குறித்து.

கச்சிப்பேட்டு நன்னாகையார்:— இவர் பெண்பாற் புலவர். உண்மை போலத் தோன்றிப் பொய்யாக முடியும் கனவை, ''வாய்த்தகைப் பொய்க்கனா'' என்கிறார் இவர். யானையடியின் நகத்துக்குப் பேயின் பல்லை உவமை கூறுகிறார். களிற்றின் கூட்டத்துக்கு ஒரு யானை தலைமை பெற்று நிற்கும் என்பது, ''இருங் களிற்றின நிரையேந்தல்'' என்று இவர் குறித்திருப்ப தனால் தெரிகிறது. மாதர் பன்னிரண்டு திங்கள் கருப்பம் தாங்குதலையும் கணவர் அகலச் சென்றிருக்கும்

காலங்களில் மகளிர் கூந்தலில் மலரை அணியாமை யையும் கூதிர்ப்பருவம் மகளிர்க்குக் கூற்றுதலையும் இவர் வாக்கால் அறியலாகும். இவர் இயற்றிய குறுந் தொகைச் செய்யுட்கள்: 6.

கேட்டிசின் வாழி தோழி யல்கற்
பொய் வலாளன் மெய்யுறன் மரீஇய
வாய்த்தகைப் பொய்க்கனு மருட்ட வேற்றெழுந்
தமளி தைவந் தனனே குவளை
வண்டுபடு மலரிற் சாஅய்த்
தமியேன் மன்ற அளியேன் யானே.

(குறுந். 30.)

அல்கல்—இரவு. பொய்வலாளன் என்றது தான் கூறிய நாளில் வந்து வரையாமையைப் புலப்படுத்தியது. வாய்த்தகைப் பொய்க்கனு—உண்மையைப் போலத் தோன்றிப் பொய்யாக முடியும் கனவு: இது கனவு என்னும் மெய்ப்பாடு. ஏற்றெழுதல்—துயிலுணர்ந்து எழுதல்.

<u>கச்சிப்பேட்டுப் பெருந்தச்சனுர்:—</u> இவர் மேற்கூறிய இளந்தச்சனுரினும் முதியவர் என்னுங் காரணம் பற்றிப் பெருந்தச்சனுரெனப்பட்டார் போலும். இவர் குறிஞ்சித் திணையைப் பாடுவதிற் சிறந்தவர். இவர் தலைவி தோழி ஆகியோரது உள்ளக் கருத்தை அறியும் பொருட்டு மதியுடன்படுக்கும் தலைவனது கூற்றுக நற்றிணையின் 213 ஆம் பாடலைப் பாடியுள்ளார். நற்றிணை 144ஆம் பாடலின் ஆசிரியரும் இவரே.

அருவி யார்க்கும் பெருவரை நண்ணிக்
கன்றுகால் யாத்த மன்றப் பலவின்
வேர்க்கொண்டு தூங்குங் கொழுஞ்சுளைப் பெரும்பழம்
குழவிச் சேதா மாந்தி யயலது
வேய்பயி லிறும்பி னுமுலை பருகும்
பெருங்கல் வேலிச் சிறுகுடி யாதெனச்

சொல்லவுஞ் சொல்லீ ராயிற் கல்லெனக்
கருவி மாமழை வீழ்ந்தென வெழுந்த
செங்கே ழாடிய செழுங்குரற் சிறுதினைக்
கொய்புனங் காவலு நுமதோ
கோடேந் தல்கு னீடோ ளீரே.

(நற். 213)

கடம்பனூர்ச் சாண்டிலியனார்:– இப்பெயர் இவருக்கு ஊரினால் வந்த பெயர். சாண்டிலியர் என்பது ஒரு முனிவரின் பெயர். பெரியோர்களின் பெயரையிடுவது பழைய காலத்திலும் வழக்கமாய் இருந்ததென்று தெரிகிறது. உடைந்த வளையை இவர் பிறைக்கு உவமை கூறியுள்ளார். இவர் பாடிய குறுந்தொகைச் செய்யுள் ஒன்று.

வளையுடைத் தனைய தாகிப் பலர்தொழச்
செவ்வாய் வானத் தையெனத் தோன்றி
இன்னம் பிறந்தன்று பிறையே அன்னே
மறந்தனர் கொல்லோ தாமே களிறுதன்
உயங்குநடை மடப்பிடி வருத்த நோனது
நிலையுயர் யாஅந் தொலையக் குத்தி
வெண்ணார் கொண்டு கைசுவைத் தண்ணாந்
தழுங்க னெஞ்சமொடு முழங்கும்
அத்த நீளிடை யழப்பிரிந் தோரே.

(குறுந். 307)

பெண்யானையின் வருத்தத்தை நீக்கமுயலும் ஆண் யானையைத் தாம் செல்லும் வழியிலே கண்டும், எனது வருத்தத்தை நீக்க முயன்றிலர் என்பது தலைவியின் கருத்து.

கடலுண்மாய்ந்த இளம்பெருவழுதி:– இவர் பாண்டியர் குடியிற் பிறந்தவர்; வழுதியென்ற பெயரே இதனைப் புலப்படுத்தும். பரிபாடலில் திருமாலுக்குரிய 15ஆம் பாடலை இயற்றிய இளம்பெருவழுதியார் என்பவரும் இவரும் ஒருவராகவே கருதப்படுகின்றனர்;

பரோபகாரச் செய்தி கூறல் முதலிய கருத்துக்களில் இருவர் பாடல்களும் ஒத்திருத்தலும் பெயரொற்றுமையும் பிறவும் இக்கருத்தை வலியுறுத்தும். இளம் பிராயத்திலேயே பேரறிவினராக இருந்தது பற்றி இவர் இப்பெயரை அடைந்தனர்போலும்; ஒரு பெரியார்க்குச் சிறுப்பெரியார் என முற்காலத்திற் பெயர் வழங்கிற்று. 'கடலுண் மாய்ந்த'' என்னும் அடை, இறந்த பின்பு இவருடைய பெயரின் முன்னர் அமைக்கப் பெற்றதென்பது சொல்லாமலே விளங்கும்; 'துஞ்சிய' என்பது போல. சோலை மலையிலுள்ள திருமாலைப் பாடியிருத்தல் பற்றிச் சமயத்தால் இவர் வைணவராகக் கருதப்பெறுகின்றனர். இவர் பாடிய, ''உண்டாலம்ம'' என்னும் புறநானூற்றுப் பாடல் சொல்லாலும் பொருளாலும் இனிமை வாய்ந்தது. இவருடைய ஏனை வரலாறுகளை இளம்பெருவழுதி என்ற புலவர் வரலாற்றிற் காணலாகும்.

உண்டா லம்மவிவ் வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினு மினிதெனத்
தமியர் உண்டலும் இலரே முனிவிலர்
துஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவ தஞ்சிப்
புகழெனி னுயிருங் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினுங் கொள்ளலர் அயர்விலர்
அன்ன மாட்சி யனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே.

(புறம். 182)

<u>கடியலூர் உருத்திரங்கண்ணனார்:—</u> இவர் பெரும்பாணாற்றுப் படையையும், பட்டினப்பாலையையும் இயற்றிய ஆசிரியர். கடியலூர் என்பது பாண்டிய நாட்டிலுள்ளதோரூர்; திருநெல்வேலி ஜில்லாவில் உள்ளது. ஐயந்தீர்தற்பொருட்டுத் தந்தையின் பெயரைப் புதல்வனுடைய பெயர்க்கு விசேடணமாக்கி வழங்குதல் மரபாக இருத்தலாலும், உருத்திரங்கண்ணனா

ரென்னும் பெயர்த்தொகையை உருத்திரனுருடைய புதல்வராகிய கண்ணனுரென விரித்தற்கு இடமுண்டா தலாலும் 'உருத்திரனர்' என்பவர் இவருடைய தந்தை யாராகக் கருதப்படுகிருர். உருத்திரனுரென்னும் பெயரொன்று குறுந்தொகையில், ''புறவுப் புறத்தன்ன' என்னும் 274ஆம் செய்யுள் இயற்றியவர் பெயராகக் காணப்படுகின்றது. 'ஊரும் பெயரும்'' (தொல். மரபு. பேர்.) என்னும் சூத்திரத்தின் விசேடவுரையால் இவர் அந்தணராகக் கருதப்படுகிருர். பெரும்பாணுற்றுப் படையில் அந்தணர் மனையையும் அந்தண மகளிர் கற்பினையும் அவர்கள் விருந்து பேணும் முறையையும் விளங்கக் கூறியுள்ள பகுதியும், கேள்வியந்தண ரருங்கட னிறுத்த வேள்வித் தூணத்தைப் பற்றிக் கூறுவதும் இங்கே அறிதற்குரியன. ''இருநிலங் கடந்த திருமறு மார்பின், முந்நீர் வண்ணன்'' எனத் திருமாலையும், ''காந்தருளஞ் சிலம்பிற் களிறுபடிந்தாங்குப், பாம்பணைப் பள்ளி யமர்ந்தோ னுங்கண்'' என அவர் பாம்பணையிற் கண்வளர்ந்தருளும் திருவெஃகாவையும், ''நீனிற வுருவி னெடியோன் கொப்பூழ், நான்முக வொருவற் பயந்த பல்லிதழ்த், தாமரைப் பொகுட்டு'' என அவரது திரு வுந்திக் கமலத்தையும் பாராட்டிக் கூறியிருத்தலின் இவர் திருமாலிடத்து அன்புடையவரென்று சொல்லு வதற்கு இடமுண்டு. இந்த இரண்டு பாட்டுக்களும், எட்டுத்தொகையுட் குறுந்தொகைக் கண்ணதாகிய, ''நெடுநீராம்பல்'' என்னும் 352ஆம் செய்யுளும், அக நானூற்றின் கண்ணதாகிய, ''வயங்குமணி பொருத'' என்னும் 167ஆம் செய்யுளும் இவரால் இயற்றப் பெற்றவை என்று இப்பொழுது தெரிகின்றன. பெரும் பாணுற்றுப்படைத் தலைவனுகிய தொண்டைமானிளந் திரையனும், பட்டினப் பாலையின் தலைவனுகிய சோழன் கரிகாற் பெருவளத்தானும் இவரை ஆதரித்தவர்கள். சோழன் கரிகாற் பெருவளத்தான் பட்டினப் பாலையைக் கேட்டு மகிழ்ந்து பதினுறு நூறுயிரம் பொன் இவருக்குப் பரிசளித்தானென்று தெரிகிறது. இவர் பல சாதியார்

களுடைய ஒழுக்கங்களையும் அவர்கள் இருக்கும் குடியி யிருப்பினையும் மிகச் சுவைபடத் தெரிவிக்கும் ஆற்றலு டையவர். பெரும்பாணாற்றுப்படையில் உமணர், எயினர், எயிற்றியர், ஆயர், ஆய்ச்சியர், உழவர், வலைஞர், அந்தண மகளிர் முதலியோரைப்பற்றியும், பட்டினப் பாலையில் பரதவர், வணிகர் முதலியோரைப் பற்றியும் கூறும் பகுதிகள் இக்கருத்தைப் புலப்படுத்தும். நீர்ப்பெயறென்னும் ஊருக்கு அருகுள்ள பட்டினம், காவிரிப்பூம்பட்டினமென்னும் இரண்டு கடற்றுறை நகர்களைப் பற்றிக் கூறுவனவற்றுட் பல பகுதிகள் ஒன்றிய கருத்துள்ளன; கப்பல்கள் குதிரைகளையும் வட நாட்டுப் பொருள்களையும் கொண்டு வந்தனவென்பதும் பண்டசாலைகளைக் காவலாளர் காத்து வந்தனரென் பதும், அப்பண்ட சாலைகளின் முற்றங்களில் மேழகக் கிடாயும் நாயும் திரிந்தனவென்பதும், பரதவர் தெரு விலுள்ள மாடங்களில் அழகிய மகளிர் இருந்து விளையா டினர் என்பதும், அத்தெருவிற் கட்கடைகள் இருந்தன வென்பதும் அவற்றின் முற்றத்தில் மலர்கள் தூவப் பட்டிருந்தனவென்பதும், பலரும் செல்லும் வாயிலும் கள் விற்பதைத் தெரிவிக்கும் கொடியும் அவற்றில் அமைந்து இருந்தன வென்பதும், மாடங்களில் ஏற்றப் பட்ட விளக்குகள் கலங்களிற் செல்வார்க்கு அடையாள மாக இருந்தனவென்பதும் பெரும்பாணாற்றுப் படை யிலும் பட்டினப்பாலையிலும் காணப்படுகின்றன. பாழ் பட்ட நாடுகளைப் பற்றி இவர் கூறும்பகுதி படிப்போர்க் குக் கழிபேரிரக்கத்தை உண்டாக்கும். ''மலைந்தோர் தேஎ மன்றம் பாழ்பட'' (பெரும்பாண். 423.) எனச் சுருக்கிக் கூறிய இவர் பட்டினப் பாலையில், ''பெரு விழாக் கழிந்த பேஎமுதிர் மன்றத்து'' (255) என்பது முதலிய அடிகளால் விரித்துக் கூறுகின்றார். மெழுகப் பட்டதும் கடவுள் இருப்பதுமாகிய இடம் பாழாயிருத் தல், கட்டிடங்களை யானைகள் உராய்ந்து பாழ்படுத் தினமை, எயினர் கொள்ளை யிடுவதனால் ஊர் கவினழிந் திருத்தல் ஆகிய செய்திகள் பட்டினப் பாலையிலும் இவர்

இயற்றிய அகநானூற்றுச் செய்யுளிலும் காணப்படு கின்றன. பெரும்பாணாற்றுப் படையிற் காணப்படு கின்ற, பலாமரத்தைப் பறவைத் தொகுதிகள் விரும்பு கின்றன வென்ற செய்தி குறுந்தொகையில் ''கொடு மென் சிறைய கூருகிர்ப் பறவை, அகலிலைப் பலவின் சாரன் முன்னிப் பகலுறை முதுமரம் புலம்பப்போகும்'' என்ற அடிகளில் அமைந்திருக்கின்றது. பண்டங்களுக்குச் சுங்கம் வாங்கும் முறையும், சாத்து, சிறுவர் உருட்டும் தேர் என்பவற்றைப் பற்றிய செய்திகளும், அரசனுக்குச் சிங்கத்தை உவமை கூறுதலும் இவர் செய்யுட்களில் ஒன்றிற்கு மேற்பட்ட இடங்களில் காணப்படுகின்றன. மகளிர் பொற்குழையைப் பாராட்டாமையாகிய செய்தி யால் செல்வப்பெருக்கத்தைப் புலப்படுத்தியிருக்கின்ற னர். பட்டினப் பாலையும் அகநானூற்றுச் செய்யுளும் தலைமகன் செலவழுங்கிக் கூறும் கூற்றாக அமைந்துள்ளன. சில சொற்றொடர்கள் இவருடைய செய்யுட்களில் இரண்டிடங்களில் வந்திருத்தலைக் காணலாம்; ''அரக்கி தழ்க் குவளையொடு நீலநீடி, முரட்பூ மலிந்த முதுநீர்ப் பொய்கை'' (பெரும்பாண். 293-4) என்பதும், ''முருக மர்பூ முரண்கிடக்கை, வரியணி சுடர் வான்பொய்கை'' (பட்டினப். 37-8.) என்ற பகுதிகளும் ஒரு சார் ஒத்திருத் தலையும், ''கொடுவரிக் குருளை'' (பெரும்பாண் 449, பட்டினப் 221), ''பகல்விளையாடிப் பெறற்கருந்தொல் சீர்த் துறக்க மேய்க்கும், பொய்யா மரபிற் பூமலி பெருந் துறை'' (பெரும்பாண். 387-9, பட்டினப் 103—5) என்ற பகுதிகள் இரண்டிடங்களிற் சிறிதும் வேற்றுமை யின்றி வந்துள்ளமையையும் காண்க.

> நெடுநீர் ஆம்பல் அடைப்புறத் தன்ன
> கொடுமென் சிறைய கூருகிர்ப் பறவை
> அகலிலைப் பலவின் சாரன் முன்னிப்
> பகலுறை முதுமரம் புலம்பப் போகும்.
> சிறுபுன் மாலை யுண்மை
> அறிவேன் ருேழியவர்க் காணு வூங்கே. (குறுந். 352)

உகிர்—நகம். பறவை—வௌவால்கள். ஊங்கு—காலம்.

கடுகு பெருந்தேவனர்:— தலைவன் தன்னுடைய கடமையை நிறைவேற்றும் பொருட்டுப் பொருள் முயற்சிக்கண் உள்ள பிணிப்பினல் இடங்கள் தோறும் செல்லுதலை இவர் வாக்கினல் அறியலாகும். கடுகு என்ற அடைமொழியின் காரணம் புலப்படவில்லை. கடுகுசந்தை யென்னும் ஓர் ஊர் பாண்டி நாட்டில் உள்ளது. இவர் பாடிய குறுந்தொகைச் செய்யுள் ஒன்று.

பொத்தில் காழ வத்த யாஅத்துப்
பொரியரை முழுமுத லுருவக் குத்தி
மறங்கெழு தடக்கையின் வாங்கி யுயங்குநடைச்
சிறுகட் பெருநிரை யுறுபசி தீர்க்கும்
தடமருப் பியானை கண்டனர் தோழி
தங்கட னிறீஇயர் எண்ணி இடந்தொறும்
காமர் பொருட்பிணிப் போகிய
நாம்வெங் காதலர் சென்ற வாறே.

(குறுந். 255)

பொத்து—பொந்து; உட்புரை. காழ்—வயிரம். அத்தயா—சிவந்த யாமரம் என்றும் பொருள் கூறலாம்.

கடுந்தொடைக்காவினர்:— ''காவடித் தண்டில் மிக்க பாரமுள்ள பண்டங்களைத் தொடுத்துந் தோளில் சுமந்து செல்பவராக இவர் இருந்திருக்கலாம் என்று தோன்றுகிறது. அகநானூற்றில் காணப்படும் இவரது பாடல் (109) பாலைத்திணையைப் பற்றியது.

பல்லிதழ் மென்மல ருண்க ணல்யாழ்
நரம்பிசைத் தன்ன வின்றீங் கிளவி
நலநல் கொருத்தி யிருந்த வூரே
கோடுழு களிற்றின் தொழுதி யீண்டிக்
காடுகால் யாத்த நீடுமரச் சோலை
விழைவெளி லாடுங் கழைவளர் நனந்தலை
வெண்ணுனை யம்பின் விசையிட வீழ்ந்தோர்
எண்ணுவரம் பறியா வுவலிடு பதுக்கைச்

சுரங்கெழு கவலைக் கோட்பாற் பட்டென
வழங்குநர் மடிந்த வத்த மிறந்தோர்
கைப்பொரு ளில்லை யாயினு மெய்க்கொண்டு
இன்னுயிர் செகாஅர் விட்டகல் தப்பற்குப்
பெருங்களிற்று மருப்பொடு வரியத ளிறுக்கும்
அறனில் வேந்த னாளும்
வறனுறு குன்றம் பலவிலங் கினவே.
(அகம். 109.)

கடுந்தோட்கரவீரனார்:— கரவீரம் என்பது சோழ நாட்டின்கண் திருவாரூருக்கு அருகிலுள்ள ஒரு சிவஸ் தலம். கரவீரன்—அலரி மாலையை யணிந்தவன். ஆண் குரங்கு இறந்ததாகப் பெண் குரங்கு கைம்மைத் துன் பத்துக்கு ஆற்றாமல், மரமேறுதல் முதலிய தொழிலறி யாத சிறுகுட்டியைச் சுற்றத்தினிடத்துச் சேர்த்து ஓங்கிய மலைப் பக்கத்தில் தாவி உயிரை மாய்த்துக் கொள்வதாக இவர் கூறியுள்ளது படித்து இன்புறற் பாலது. இவர் பாடிய குறுந்தொகைச் செய்யுள் ஒன்று.

கருங்கட் டாக்கலை பெரும்பிறி துற்றெனக்
கைம்மை யுய்யாக் காமர் மந்தி
கல்லா வன்பறழ் கிளைமுதற் சேர்த்தி
ஓங்குவரை அடுக்கத்துப் பாய்ந்துயிர் செகுக்கும்
சார னாட நடுநாள்
வாரல் வாழியோ வருந்துதும் யாமே.
(குறுந். 69.)

கலை இறந்ததாக மந்தியும் உயிர்செகுக்கும் நாட என்றது பெண்விலங்கினங்களும் தம் துணைக்குத் துன்பம் நேர்ந்த காலத்தில் உயிர் தரியாமையை நின்னாட்டில் அறிந்தனை யாதலின், நினக்கு ஏதம் வருமேல் இவள் உயிர் வாழ் தலின்மையையும் அறிதியென்று உணர்த்தியவாறு.

கடுவன் மள்ளனார்:— கடுவன்குடி என்ற பெயருள்ள ஊர்கள் சோழ நாட்டிற் பல உண்டு. கடுவன் என்பது அவற்றுள் ஒன்றன் திரிபாக இருக்கலாம். இவர் கடுவன்

என்ற ஊரினரென்று கொள்ள இடமுண்டு. இவர் தந்தையார் புறநானூறு, 334-ஆம் செய்யுளை இயற்றிய மதுரைத் தமிழ்க் கூத்தனார் என்று தெரிகிறது. 'மள்ள னார்' என்ற பெயரை நோக்கும்போது இவர் அரசியலில் துணைபுரியும் படைத்தலைவராக இருக்கலாமென்று ஊகிக்க இடமுண்டு. நற்றிணையில் 150-ஆம் செய்யுளும் குறுந்தொகையில் 82-ஆம் செய்யுளும் இவர் பாடியவை.

வாருறு வணர்கதுப் புளரிப் புறஞ்சேர்
பழாஅல் என்றுநம் மழுதகண் டுடைப்பார்
யாரா குவர்கொ றேழி சாரற்
பெரும்புனக் குறவன் சிறுதினை மறுகாற்
கொழுங்கொடி யவரை பூக்கும்
அரும்பனி அச்சிரம் வாரா தோரே.

(குறுந். 82)

குறவன், ஒருமுறை யறுத்த கதிரால் பயன்பெற்றதன்றிப் பின்னும் மறுகாலிற் கிளைக்கும் கதிராலும் அதனோடு அவரையினாலும் பயனைப் பெறுதற்குரிய அச்சிரம் என்றது, தலைவன் முன் இன்புற்றதன்றி மீண்டும் இப் பொழுது வந்து என்பாற் பெறும் இன்பத்தையும் செய்வினை முடித்த இன்பத்தையும் பெறுதற்குரியன் என்னும் குறிப்பினது.

அவரை என்றது இங்கே மொச்சையை.

<u>கடுவனிளவெயினனார்:</u>— இவர் செய்த பாடல்கள் பரிபாடலில் 3, 4, 5. திருமாலையும் முருகக் கடவுளையும் வாழ்த்தியிருத்தலால் இவர் அவ்விருவரிடத்தும் அன்பு டையவரென்று தெரிகிறது. மூன்றாவது நான்காவது பாடல்களில் திருமாலைத் துதித்திருக்கும் பகுதிகள் அவருடைய நால்வகைவியூகம்,வராக நரசிங்க வாமனாவ தாரச் செயல்கள், அவர் அன்னமாகத் தோன்றிச் செய்த அரியசெயல், வேதத்தால் அவர் பாராட்டப் படும் வகை, யோகிகளாலே தியானிக்கப்படுமுறை, கருடனும் பனை, நாஞ்சில், யானை ஆகிய இவைகளும்

அவருக்குக் கொடிகளாகவுள்ளன வென்பது, ஆல், கடம்பு, ஆற்றிடைக்குறை, குன்றம் இவற்றில் அவர் வேறுவேறு பெயரோடு எழுந்தருளியிருத்தல், கருடனது பெருமை, அவனுக்குண்டாகிய செருக்கை அவர் அடக்கினமை, தத்துவத்தின் தோற்ற வொடுக்கங்கள் முதலியவற்றை விதந்து கூறியிருக்கும் பகுதிகளும் மிக்க இனிமை பயப்பன. முருகக் கடவுளுடைய திருவவதார வரலாறு, அவதரித்த அன்றே இந்திரன் முதலிய தேவர்களை வென்று அவர்கள் அளித்த மயில் கோழி முதலியவற்றை அவர் பெற்றமை வேற்படையாற் கிரௌஞ்சத்தையுடைத்து வழியுண்டாக்கினமை, பிணி முகமென்னும் யானையை ஊர்ந்து சென்று கடலிற் சூர்மாவைத் தடிந்தமை ஆகிய இவைகளும், வெறியாட்டுச் செயல், சிவபிரான் திரிபுர தகனஞ் செய்த சரிதம் ஆகிய இவைகளும் ஐந்தாம் பாட்டில் மிக அழகாகக் கூறப்பெற்றுள்ளன. ''எமக்கு வேண்டுவன நுகர்பொருளும் போகமும் அல்ல; அருளும் அன்பும் அறனுமே'' என்று வேண்டிக் கொண்டிருத்தல் இவருடைய பேரன்பைத் தெரிவிக்கிறது. இவர் பெயர் ஒரு பிரதியிற் கடுவனிள வெயினரென்றுங் காணப்படுகிறது.

கண்ணகனார்:— இவர் காலத்தவர் கோப்பெருஞ் சோழன், பிசிராந்தையார், பொத்தியார் முதலியோர்; புறநானூற்றிலுள்ள 218ஆம் செய்யுள் இயற்றியவரும் நற்றிணையில் 79ஆம் செய்யுளியற்றியவரும் இவரே. பரிபாடலில் செவ்வேள் மேலதாகிய 21ஆம் செய்யுளுக்கு இசை வகுத்தவர் இவரே. இதனால் இவர் இசைத் தமிழிலும் வல்லுநரென்று தெரிவதோடு இவரை முருகக்கடவுளின் அடியவராகக் கருதுவதற்கும் இடமுண்டு. ''என்றும், சான்றோர் சான்றோர் பாலராப, சாலார் சாலார் பாலரா குபவே (புறநா. 218.) என்பது இவர் வாக்கிற் சிறந்த பகுதி; இவராற் பாடப் பெற்றோர் பிசிராந்தையார்.

பொன்னுந் துகிரு முத்து மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேய வாயினுந் தொடைபுணர்ந்
தருவிலை நன்கல மமைக்குங் காலை
ஒருவழித் தோன்றியாங் கென்றுஞ் சான்றோர்
சான்றோர் பால ராப
சாலார் சாலார் பாலரா குபவே.

(புறநா. 218)

கண்ணகாரன் கொற்றனார்:— இவர் பாலைத் திணையைப் புனைந்து பாடியுள்ளார். இவர் இயற்றிய பாடலொன்று நற்றிணையில் உள்ளது.

ஐதே காமம் யானே யொய்யெனத்
தருமணல் ஞெமிரிய திருநகர் முற்றத்
தோரை யாயமு நொச்சியுங் காண்டொறு
நீர்வார் கண்ணேன் கலுழு மென்னினும்
கிள்ளையும் கிளையெனக் கூஉ மிளையோள்
வழுவிலள் அம்ம தானே குழீஇ
அம்பன் மூதூர் அலர்வாய்ப் பெண்டிர்
இன்னா வின்னுரை கேட்ட சின்னாள்
அறியேன் போல வுயிரே
னறிய நாறுநின் கதுப்பென் றேனே.

(நற். 143.)

ஐது—வியப்புடையது. அம்பல்—பழிமொழி. ஓரை—மகளிர் விளையாட்டுள் ஒன்று.

கண்ணங் கொற்றனார்:— இவர் குறிஞ்சியைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். இவர் பாடிய நற்றிணைச் செய்யுள் ஒன்று.

நீயே, அடியறிந் தொதுங்கா வாரிருள் வந்தெங்
கடியுடை வியனகர்க் காவ னீவியும்
பேரன் பினையே பெருங்கன் னாட
யாமே, நின்னுநின் மலையும் பாடிப் பன்னாட்
சிறுதினை காக்குவஞ் சேறு மதனால்
பகல்வந் தீமோ பல்படர் அகல

வெருவை நீடிய பெருவரைச் சிறுகுடி
அரியல் ஆர்ந்தவர் ஆயினும் பெரியர்
பாடிமிழ் விடர்முகை முழங்க
வாடுமழை இறுத்ததெங் கோடுயர் குன்றே.

(நற். 156.)

கண்ணம்புல்லனார்:— கருவூர்க்கண்ணம் புல்லனார் என்பவரும் இவரே. புல்லன்—இயற்பெயர். இவர் நெய்தல் திணையையும், பாலைத்திணையையும் பற்றிப் பாடியுள்ளார். இவர் இயற்றிய செய்யுட்கள் இரண்டு. அகநானூறு, ஒன்று; நற்றிணை ஒன்று.

மணிதுணிந் தன்ன மாயிரும் பரப்பி
னுரவுத்திரை கெழீஇய பூமலி பெருந்துறை
நிலவுக்குவித் தன்ன மோட்டுமண லிடிகரைக்
கோடுதுணர்ந் தன்ன குருகொழுக் கெண்ணி
எல்லை கழிப்பின மாயின் மெல்ல
வளிசீத்து வரித்த புன்னை முன்றிற்
கொழுமீ னார்கைச் செழுநகர்ச் செலீஇய
வெழுவெனி னவளு மொல்லாள் யாமு
மொழியென வல்ல மாயினம் யாமத்
துடைதிரை யொலியிற் றுஞ்சு மலிகடற்
சில்குடிப் பாக்கங் கல்லென
வல்குவ தாகநீ யமர்ந்த தேரே.

(நற். 159)

கண்ணனார்:— தலைவனுக்குக் களிற்றையும், தலைவனை எதிர்ப்படப் பெறாத தலைவிக்கு வலையிற்பட்ட மயிலையும் உவமையாக இவர் கூறியுள்ளார். இவர் இயற்றிய குறுந்தொகைச் செய்யுள் ஒன்று.

பல்லோர் துஞ்சு நள்ளென் யாமத்
துரவுக்களிறு போல்வந் திரவுக்கதவ முயறல்
கேளேம் அல்லேங் கேட்டனம் பெரும
ஓரி முருங்கப் பீலி சாய
நன்மயில் வலைப்பட் டாங்கியாம்
உயங்குதொறு முயங்கு மறனில் யாயே.

(குறுந். 244.)

(வி—ரை) தலைவன் இரவுக்குறியின் கண் தலைவியோடு அளவளாவுதற்கு வந்து கதவைத் தட்டித் தன் வரவைக் குறிப்பித்தான். அப்பொழுது அவன் வந்தது தெரிந்த தலைவி வருந்தினள். அவளது வருத்தத்தின் காரணத்தை உணராத செவிலி அவள் அச்சத்தால் அங்ஙனம் வருந்தினுள் என்று கருதி இறுகத் தழுவிக்கொண்டாள். இச்செய்தியையே தோழி தலைவனுக்குக் கூறினுள்.

(கருத்து) காவல் மிகுதியால் நின்னைத் தலைவி காண்டல் அரிதாதலின் வரைந்து கோடலே நலம்.

<u>கணக்காயன் தத்தனுர்:—</u> தமிழ் அரிச்சுவடிக்குத் தமிழ்க் கணக்கென்றும் நெடுங்கணக்கென்றும் பெயருண்டு. ஆயம்—கூட்டம். பிள்ளைகளைக் கூட்டமாகச் சேர்த்துத் தமிழ்க் கணக்கைக் கற்பிக்கும் உபாத்தியாயர் கணக்காய ரெனப்படுவார். இவர் ஆசிரியத் தொழிலுடைய தத்தனுராவர். சுருவேட்டையை இவர் நன்கு கூறியுள்ளார்.

> கொல்வினைப் பொலிந்த கூர்வா யெறியுளி
> முகம்பட மடுத்த முளிவெதிர் நோன்காழ்
> தாங்கரு நீர்ச்சுரத் தெறிந்து வாங்குவிசைக்
> கொடுந்திமிற் பரதவர் கோட்டுமீ னெறிய
> நெடுங்கரை யிருந்த குறுங்கால் அன்னத்து
> வெண்டோ டிரியும் வீததை கானற்
> கைதையந் தண்புனற் சேர்ப்பனெடு
> செய்தனெ மன்றவோர் பகைதரு நட்பே.
>
> (குறுந். 304)

<u>கணிமேதாவியார்:—</u> இவர் கணித நூலில் வல்லவர். இந்நூலாசிரியருக்குக் கணிமேதையார் என்ற மற்றொரு பெயரும் உண்டு. இவரும் சிறுபஞ்சமூல ஆசிரியரும் ஒருசாலை மாணுக்கர் என்று தெரிகிறது. இவர் ஏலாதி, திணைமாலை நூற்றைம்பது என்ற நூல்களை இயற்றியுள்ளார்.

பொய்யுரையான் வையான் புறங்கூறுன் யாவரையும்
மெய்யுரையான் உள்ளனவும் விட்டுரையான் எய்யுரையான்
கூந்தன்மயி லன்னுய் குழீஇயவான் விண்ணேர்க்கு
வேந்தனும் இவ்வுலகம் விட்டு.

(ஏலாதி.33)

<u>கணியன் பூங்குன்றன்:-</u> கணியன்—சோதிடம் வல்லோன்: ''விளைவெல்லாங், கண்ணி யுரைப்பான் கணி'' (பு.வெ. 174) பூங்குன்றமென்பது நாடொன்றின் தலைநகர். (நாலடி. 128, 212) இராமநாதபுரம் ஜில்லாவில் மகிபாலன் பட்டிக்கு அருகிலுள்ள சாசனங்களில் அவ்வூர் பூங்குன்ற நாட்டுப் பூங்குன்றமெனக் குறிக்கப்பட்டுள்ளது; அதனுல் அவ்வூரே இப்புலவருக்குரிய ஊரென்று கொள்ளலாகும். இவருக்கு இப்பெயர் தொழிலாலும் இடத்தாலும் வந்தது போலும். இப்பெயர் கணிபுன்குன்றனுரெனவும் வழங்கும். இவராற் பாடப்பெற்றதும் அரிய பொருள்களமைந்தது மான ''யாதுமூரே'' (புறநா. 192) என்னுஞ் செய்யுள் படிக்குந்தோறும் நினைக்குந்தோறும் எவருக்கும் மிக்க இன்பத்தை விளைவிக்கும். நற்றிணையிலும் இவரியற்றிய பாடலொன்று உண்டு.

யாதும் ஊரே யாவருங் கேளிர்
தீது நன்றும் பிறர்தர வாரா
நோதலுந் தணிதலு மவற்றோ ரன்ன
சாதலும் புதுவ தன்றே வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்று மிலமே முனிவின்
இன்னு தென்றலு மிலமே மின்னெடு
வானந் தண்டுளி தலைஇ யானுது
கல்பொரு திரங்கு மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோ லாருயிர்
முறைவழிப் படூஉ மென்பது திறவோர்
காட்சியிற் றெளிந்தன மாகலின் மாட்சியிற்
பெரியோரை வியத்தலு மிலமே
சிறியோரை இகழ்த லதனினு மிலமே.

(புறம். 192.)

யாதானு நாடாமா லூராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு. (குறள். 397.)

''பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்'' (குறள். 505)

''பெருமையும் சிறுமையும் தாந்தர வருமே''
(வெற்றிவேற்கை.)

''வருந்தும் உயிரொன்பான் வாயிலுடம்பிற்
பொருந்துத ஞேன புதுமை''

கந்தக் கண்ணனுர்:— பித்திகத்தின் அரும்பு உரிய பருவத்தின் முன்னும் சிவந்ததென்றும் அதனுல் வருந்தேனென்றும் தலைவி கூறுவதாக இவர் வாக்கில் உள்ளது வியக்கத்தக்கது. இவர் கதக்கண்ணனுர் என்றும் வழங்கப்படுவர்.

பெருந்தண் மாரிப் பேதைப் பித்திகத்
தரும்பே முன்னு மிகச்சிவந் தனவே
யானே மருள்வேன் றோழி பானுள்
இன்னுந் தமியர் கேட்பிற் பெயர்த்தும்
என்னு குவர்கொல் பிரிந்திசி னோரே
அருவி மாமலைத் தத்தக்
கருவி மாமழைச் சிலைதருங் குரலே.

(குறுந். 94.)

பித்திகம்—பிச்சி; இது மழைக் காலத்து அரும்பி மலரும். பானுள்—பால்+நாள். பால்—பகுதி; பானுள்—நடு யாமம்.

கபிலர்:— இவர் குறிஞ்சிப் பாட்டை இயற்றிய ஆசிரியர். இவர் பிறந்த ஊர் பாண்டி நாட்டிலுள்ள திருவாதவூர்; இது திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்திலுள்ள, ''நீதிமா மதூக நீழ னெட்

டிலே யிருப்பை யென்றோர், காதல்கூர் பனுவல் பாடுங் கபிலனார் பிறந்த மூதூர், சோதிசேர் வகுள நீழற் சிலம்பொலி துலங்கக் காட்டும், வேதநா யகனார் வாழும் வியன்திரு வாத வூரால்'' (27:3) என்னும் திருவிருத்தத்தால் வெளியாகின்றது.

இவர் அந்தண வருணத்தவர்; ''யானே, பரிசிலன் மன்னு மந்தணன்'', யானே, தந்தை தோழ னிவரென் மகளிர், அந்தணன் புலவன் கொண்டுவந் தனனே'' (புறநா. 200-201) என இவர் தம்மைக் கூறிக்கொள்வதனாலும், ''புலனழுக் கற்ற வந்தணாளன்'' (புறநா. 126) என மாறோக்கத்து நப்பசலையார் இவரைப் பாராட்டிக் கூறுவதாலும் இதனை அறியலாம்.

இவர் வேள் பாரியினுடைய உயிர் நண்பரும் அவனுடைய அவைக்களத்துப் புலவருமாக இருந்து அவனை மகிழ்வித்து வந்தார்; இடையிடையே முள்ளூருக்குரியவனும் வள்ளலுமாகிய மலையமான் திருமுடிக் காரியைக் கண்டு அவனது பெருவண்மையைச் சிறப்பித்தனர்; வையாவிக்கோப் பெரும் பேகனென்னும் வள்ளல் தன் மனைவியாகிய கண்ணகி யென்பவளைத் துறந்திருந்தானாதலின் அவள் காரணமாக அவனைப் பாடினார்.

பாரியின் மகளிர் மணம்பெறும் பருவம் அடைந்த காலத்தில் தமிழ்நாட்டு மூவேந்தர்களுள் ஒவ்வொருவரும் அம்மகளிரை மணஞ்செய்து கொள்ள விரும்பி வேள் பாரிக்கு அக்கருத்தை அறிவித்தார்களாக, அவன் அவ்வாறு கொடுக்க மறுத்தனன். மறுக்கவே, மூவேந்தரும் அவனது பறம்பு மலையைச் சூழ்ந்து கொண்டு போர் செய்தனர். அக்காலத்து இவர் அவர்களை நோக்கி, ''பாரியது பறம்புமலை கைக்கொள்வதற்கு எளியதென்றும் பாரி எளிதில் வெல்லப்படுவானென்றும் எண்ணன்மின். அவனுடைய மலை இன்றியமையாத பொருள்களை ஈவது. நெடுங்காலம் நீவிர் இக்குன்றை

முற்றியிருப்பினும் இங்கே உண்டாகும் நெல், பழம், கிழங்கு, தேன் முதலியனவும் உங்களால் அறிதற்கரியன வாகிய சுனைகளில் உள்ள நீரும் எங்களுக்குப் போதியன வாதலின் யாதோர் இடையூறும் வாராது. அவனுடைய பறம்புநாடு முந்நூறு ஊர்களே உடையது. அவற்றை யெல்லாம் பரிசிலர் பெற்றனர்; எஞ்சியிருப்பது இக் குன்று ஒன்றே; யானும் பாரியும் இருக்கின்றோம். நீவிர் இக்குன்றையேனும் எம்மையேனும் கொள்ள நினைப்பின் பாரியைப் பாடிக்கொண்டு பரிசிலராக வரிற் கொள்ள லாம்'' எனப் பாடினர். அம்மூவரும் பலநாள் உள்ளே உணவுப் பொருள் வாராதபடி பறம்பை முற்றியிருந் தனர். அப்பொழுது கபிலர் சில கிளிகளையும் குருவி களையும் பழக்கி அவற்றைக் காலையில் வெளியே பறக்க விட்டுப் பல விளைபுலங்களிற் சென்று நெற்கதிர்களைக் கொண்டு மாலையில் வரும்படி செய்வார். இச்செய்தி நக்கீரர் பாட்டாலும் ஔவையார் பாட்டாலும் (அகநா. 78, 303) புலப்படுகின்றது. பின்பு, பறம்புமலையைப் பகைவர்கள் கைக்கொண்டார்கள்; பாரியும் உயிர் நீத்தான். அப்பொழுது இவர், அவன் மகளிரைத் தக்காருக்கு மணம் புரிவிக்க வேண்டுமென்றெண்ணி உடனழைத்துச் சென்றார். செல்லுங் காலையிற் பாரியின் பிரிவாற்றாமையால் மிக வருந்தி, அவனுடைய நற்குணங் களையும் கொடைத்திறத்தினையும் செங்கோற் செவ்வி யினையும் நினைந்து நினைந்து இரங்கி, அவனது பறம்பு மலையின் பழைய வளத்தையும் பின்பு பகைவர்களால் அழகிழந்ததையும் பறம்பு நாட்டின் வளத்தையும் எண்ணி நெஞ்சுருகிப் பல செய்யுட்களைப் பாடினர். மணல் நிறைந்த இடமொன்றில் நடந்து போகையில் பாரிமகளிர் அங்கே சென்ற உமணர் உப்பு வண்டிகளை நோக்கிக் கொண்டிருந்தபொழுது 'தமது மலையைச் சூழ்ந்த அரசர்களுடைய குதிரை முதலியவற்றை மலை மேல் நின்று எண்ணிய இவர்கள் உப்பு வண்டிகளை ஈந்திலை நிறைந்த குப்பையில் நின்று எண்ணும்படியா யிற்றே'' எனச் சொல்லி வருந்தினர். பின்னர், பாரி

மகளிரை அந்தணர்பால் ஒப்பித்து மலைநாட்டிற்குப் போய்ச் செல்வக்கடுங்கோ வாழியாதனை அடைந்து, நீ பாரிபால் உள்ள குணங்களை உடையா யென்பதை அறிந்தே உன்னைப் பார்க்க வந்தேன்'' எனக் கூறி அவன் செய்த வேள்வி, அவனது கொடைவென்றி முதலியவற்றைப் பாராட்டிப் பத்துச் செய்யுட்களைப் பாடி அவன் வலிந்து தந்த பரிசிலைப் பெற்றனர். அப் பரிசில்: ''சிறுபுறமென நூறாயிரம் காணங்கொடுத்து நன்றாவென்னும் குன்றேறி நின்று தன் கண்ணிற் கண்ட நாடெல்லாம் காட்டிக் கொடுத்தான் அக்கோ'' (பதிற். ஏழாம் பத்தின் பதிகம்.) என்பதனால் விளங்கும். இதனால் இவர் சேரமான் செல்வக்கடுங்கோ வாழியா தனால் மிகவும் ஆதரிக்கப் பட்டவரென்று தெரிகிறது. ஒருபொழுது அவன் இவர் கையைப் பிடித்து, 'உமது கைகள் மிகவும் மெல்லியன' என்று கூற இவர் அவன் கைகள் இன்ன இன்ன செய்கைகளால் வலியன என்று கூறித் தமது கைகள் இன்ன இன்ன காரணத்தால் மெல் லியன என்று கூறினர். அதனைப் புறநா. 14-ஆம் செய்யுளாலுணர்க.

பின்பு பாரிமகளிரோடு விச்சிக்கோவென்னும் குறுநில மன்னனிடம் சென்று அவரை மணந்து கொள்ளுமாறு வேண்டினர். அவன் மறுக்க, எவ்வியென்னும் மன்ன னுடைய வழித்தோன்றலும் புலிகடிமால் மரபில் உள்ளவனுமாகிய இருங்கோவேளென்பானிடம் சென்று பாரி மகளிரைக் கொள்ளுமாறு அவனை மிகவும் வேண் டினர். அவனும் மறுத்தானாக, புலவர்களை இகழ்வத னால் உண்டாகும் துன்பத்தை அவனுக்கு ஒரு சரித்திர வாயிலாக அறிவுறுத்தி ஒரு செய்யுள் கூறினார். பின்னர் அம்மகளிரை மீண்டும் அந்தணரிடத்தே விட்டு விட்டு, பாரியினது பிரிவை ஆற்றவொண்ணாராய் வடக்கிருந் தனர். அப்பொழுது, ''வளம்பொருந்திய நாட்டை யுடைய பாரியே, பெரிய வண்மையையுடையாய்! நீ பலயாண்டுகள் என்னோடு பொருந்தி நட்பினனாக

ஒழுகினை; பல உதவிகளைச் செய்தாய். எனினும் அந் நட்பிற்கு மாருக இவ்வுலகத்தில் என்னை விட்டுவிட்டு நீ தனித்துச் சென்றனை. நீ முன்பு ஒழுகியதும் உதவி யதும் மனத்தோடு பொருந்தியவையல்ல போலும்! என்னை அக்காலத்து வெறுத்திருந்தாய் போலும்! இல்லை யெனின் என்னைப் பிரிய உனக்கு மனம் வருமோ? அவ் வாறு நினக்கும் பொருந்தினேனல்லே னெனினும் இப் பிறப்பில் நீயும் நானும் அளவளாவி மகிழ்ந்திருந்தவாறு மறுபிறப்பிலும் இடைவிடாது நின்னுேடு வாழ்தலை விதி கூட்டுவதாக'' எனக் கரைந்து புலம்பினுர். ''திருக் கோவலூர்ச் சாசனமொன்ருல் இவர் பாரிமகளிரை மலையனுக்கீந்து பெண்ணையாற்றங் கரையில் வளர்த்த கனலில் புகுந்தனரென்று தெரிகின்றது. அவ்விடத்திலே 'கபிலக்கல்' என்று ஒரு கல் இருப்பதாகவும் அச்சாசனம் கூறும்.

ஆரியவரசன் பிரகத்தனைத் தமிழறிவித்தற்கே இக் குறிஞ்சிப்பாட்டை இவர் இயற்றினர். பழைய இலக்கண உரைகளில், 'கபில பரணர்' என்று வழங்கு கிற தொகைநிலைத் தொடராலும் தொகை நூல்களி லும் பிறவற்றிலும் பலவிடங்களில் இவரது பாட்டிற்குப் பின் பரணர் பாட்டு அமைந்திருப்பதனுலும் பரணரென் பவருக்கும், திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தில் வந்துள்ள, ''பின்னமில் கபிலன் ரேழன் பெயரிடைக் காடனென் போன்'' (20:1) என்னும் திரு விருத்தத்தால் இடைக்காடனுருக்குச் சிறந்த நட்பின ராக இருந்தாரென்று இவர் எண்ணப்படுகிருர். வீர சோழியம், தொகைப் படலம், 6ஆம் கலித்துறை உரையால் பரணருடன் இவர் வாதுசெய்தனரென்பது வெளியாகின்றது. இவர் வேறு, தொல்கபிலர் வேறு.

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க் கணக்கென்னும் முத்தொகுதி நூல்களிலும் இவருடைய பாடல்களும் நூல்களும் கலந்திருத்தல் இவரது பெரு மையை விளக்குகின்றது.

11ஆம் திருமுறையிலுள்ள மூத்த நாயனர் திருவிரட்டை மணிமாலே, சிவபெருமான் திருவிரட்டை மணிமாலே, சிவபெருமான் திருவந்தாதியென்னும் பிரபந்தங்கள் மூன்றையும் இயற்றிய கபிலதேவ நாயனர் என்பவர் இவரேயென்பது சில பெரியோர் கொள்கை; ''ஏனயந்தாதி சொன்னவன் கபிலன்'' (திருவால. 20:11) எனச் சிவபெருமான் கட்டளையிட்டருளியதாகக் கூறப்பட்டிருத்தலும் காண்க. இப்பிரபந்தங்கள் இவரியற்றியன வென்பது ஆராய்ந்து நிச்சயித்தற்குரியது.

''முதலிற் கூறுஞ் சினையறி கிளவி'' என்னும் தொல்காப்பியச் சூத்திரத்திற்கு இளம்பூரணரும் சேனவரையரும் எழுதிய வுரையால், கபிலரால் செய்யப்பெற்றதான கபிலமென்று ஒரு நூல் இருந்ததாகத் தெரிகிறது: அஃது இப்பொழுது கிடைக்கவில்லே.

பன்னிரு பாட்டியலில் இவர் பெயரால் வழங்கும் சில சூத்திரங்களும் தனிப்பாடல்களில் வழங்கும் வெண்பாவும் அகவலும் பிற்காலத்தவர்களால் இயற்றப்பெற்றனவென்பது சிலர் கொள்கை.

இவரைப் பாராட்டிக் கூறியவர்கள் நக்கீரனர், பெருங்குன்றூர்கிழார், பொருந்திலிளங்கீரனர், மாறோக்கத்து நப்பசலேயார் என்பார். நக்கீரனர் இவரை ''உலகுடன் றிரிதரும் பலர்புகழ் நல்லிசை வாய்மொழிக் கபிலன்'' (அகநா. 78) எனப் புகழ்ந்து இவர் கிளியினல் நெற்கதிர் தொகுத்த விரகைக் குறிப்பித்துள்ளார்; அன்றியும் அவர் ஒருவனேச் சாவப்பாடிய அங்கதப் பாட்டுள், ''முரணில் பொதியின் முதற்புத்தேள் வாழி, பரணர் கபிலரும் வாழி'' (தொல். செய். சூ. 179, பேர். மேற்.) என அகத்தியரோடு பரணரையும் இவரையும் ஒருங்கு வாழ்த்தி இவருடைய பெருமையைப் புலப்படுத்தியிருக்கிருர். பெருங்குன்றூர்கிழார்,

''உவலை கூராக் கவலையி னெஞ்சின், நனவிற் பாடிய நல்லிசைக் கபிலன் பெற்ற வூரினும் பலவே' (பதிற். 85) என்றும் பொருந்திலிளங்கீரனார், ''செறுத்த செய்யுட் செய்செந் நாவின், வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்'' (புறநா. 53) என்றும், மாறோக்கத்து நப்ப சலையார் ''புலனழுக் கற்ற வந்த ணாளன், இரந்துசென் மாக்கட் கினியிடனின்றிப், பரந்திசை நிற்கப்பாடினன்'' (புறநா. 126) என்றும் ''பொய்யா நாவிற் கபிலன்'' (புறநா. 174) என்றும் வியந்து பாடியுள்ளார்கள். இவற்றால் இவருடைய பெரும்புகழும், வாய்மையும், பாடும் திறமையும், கல்விகேள்வியின் மிகுதியும், அகத்தூய்மையும் விளங்குகின்றன. இவரே, 'எஞ்சிக் கூறேன்' (பதிற். 61) எனச் செல்வக்கடுங்கோ வாழியாதனை நோக்கிக் கூறுதல் இவருடைய வாய்மை நலத்தைப் புலப்படுத்தும்.

இவராற் பாடப்பட்டோர்: அகுதை; இருங்கோ வேள், ஓரி, சேரமான் செல்வக்கடுங்கோ வாழியாதன், நள்ளி, பாண்டியன், மலையமான் திருமுடிக்காரி, விச்சிக்கோ, வேள்பாரி, வையாவிக்கோப் பெரும்பேகன், மலையன்.

அயிரைமலை, கொல்லிமலை, பறம்புமலை, முள்ளூர் மலை, பறம்புநாடு, கிடங்கில், கொடுமணம், பந்தர், மதுரை, முள்ளூர்க்கானம், வாரணவாசி யென்பவை இவராற் பாராட்டப் பெற்றிருத்தலின் அவைகள் இவர் காலத்தில் விளக்கமுற்றிருந்தன வென்றும் அவற்றுட் பல இவர் பழகிய இடங்களென்றும் தெரிகின்றன.

இவருடைய செய்யுட்களில், சிவபெருமான், திருமால், பலதேவர், பிரமன், முருகக்கடவுளென்பவர்களுடைய துதிகள் வந்திருக்கின்றன; அதனால் இவர் சமயக் கோட்பாட்டிற் பாரதம் பாடிய பெருந்தேவனாரைப் போன்றவராக எண்ணப்படுகிறார்.

இவருடைய செய்யுட்கள் மிக்க இனிமையையுடையன. பழைய உரைகளில் மேற்கோளாகக் காட்டப்படும் 'கபிலரது பாட்டு' என்னும் தொடர்மொழியே இதனை வலியுறுத்தும்.

குறிஞ்சித்திணையைப் பாடுதலில் இவர் மிக்க ஆற்றலுடையவர். அந்நிலத்தின் இயற்கைச் செவ்வியும், அந்நிலத்தினர் ஒழுகலாறும், அத்திணைக்குரிய ஒழுக்கத்தின் பலவகைத் துறைகளும் இவருடைய செய்யுட்களில் இன்சுவையுடன் இலங்குவதைக் காணலாம். கொடைச் சிறப்பு, நட்பின் நயம், செய்ந்நன்றியறிதல் முதலிய உயர்குணங்களை இவர் பலவகையிற் பாராட்டியிருத்தல் அறிந்து இன்புறற்பாலது.

குறிஞ்சிப்பாட்டிலும் இவருடைய பிற செய்யுட்களிலும் பல பகுதிகள் ஒப்புமைப்பட அமைந்துள்ளன:

'அன்னாய் வாழிவேண்டன்னை'' என இப்பாட்டைத் தொடங்கியது போலவே ஐங்குறுநூற்றில் அன்னாய் வாழிப்பத்து முழுவதும் முதலடியில் இத்தொடர் மொழியே அமைக்கப்பட்டிருக்கின்றது. தலைவியினது நோயின் காரணத்தை அறிவதற்காகச் செவிலி கடவுளைப் பேணுதல் முதலியவற்றை இயற்றியதாக இதிற் கூறிய தற்கேற்ப, ' அன்னையும் பொருளுகுத் தலமரும்'' (அகநா. 292),

''கறிவளர் சிலம்பிற் கடவுட் பேணி
அறியா வேலன் வெறியெனக் கூறும்
அதுமனங் கொள்குவை யனையிவள்
புதுமலர் மழைக்கண் புலம்பிய நோய்க்கே''.

(ஐங்குறு. 243.)

என்று பாடிய பகுதிகள் அறிதற்குரியன. இத்தகைய செய்திகளை விளங்க உணர்த்தி, ஐங்குறுநூற்றில் 'வெறிப்பத்து' என்னும் பத்துச் செய்யுட்களைத் தனியே

பாடியுள்ளார். தலைவியின் நோய்க் காரணத்தை அறியாத செவிலி வருந்தும் முறை இங்கே கூறியவாறே, ''அறியாமையின் வெறியென மயங்கி, அன்னையு மருந்துய ருழந்தனள் (ஐங். 242) என்று பிறிதோரிடத்தும் காணப்படுகின்றது. தலைவியின் தோள்கள் காம நோயால் நெகிழ்ந்த தன்மையைப் பலவிடங்களிற் கூறுவார். தலைவி தன் நோயின் காரணத்தை மறைத்தனளென்று இங்கே உள்ள செய்தியை இன்னும் நயம்பட, ''தன்னெவ்வங் கூரினும் நீசெய்த வருளின்மை, என்னையு மறைத்தாளென் றேழி.........கூருநோய் சிறப்பவும் நீசெய்த வருளின்மை, சேரியு மறைத்தாளென் றேழி......நோயட வருந்தியும் நீசெய்த வருளின்மை, ஆயமும் மறைத்தா ளென்றேழி'' (கலித் 44) என்றமைத்தமை காண்க. போர் செய்யும் இரண்டு வேந்தர்க்கு இடையே சந்து செய்விப்போரைத் தோழிக்கு உவமையாக ஈண்டுக் கூறியவர், மலையிலிருந்து வரும் அருவிக்கு உவமையாக அதனை எடுத்தாண்டுள்ளார் (கலித். 46). தோழி, தாய்க்கும் தலைவியின் துயருக்கும் அஞ்சும் இருவகையான அச்சத்தை இங்கே கூறியவாறே வேறுவிதமான இரண்டு அச்சங்களைப் பிறிதோரிடத்திற் சொல்லியிருக்கின்றனர்; அது வருமாறு: ''குன்ற நாடன், உடுக்குந் தழைதந்தனனே யாமஃதுடுப்பின் யாயஞ் சுதுமே கொடுப்பிற், கேளுடைக் கேடஞ்சுதுமே'' (நற். 359) தினைக்கதிர்க்கு யானையின் துதிக்கையை உவமை கூறுவர். மூங்கிலை நெல்லோடு யானை உண்ணுமென்ற செய்தி கலித்தொகையில்,

''வாங்குகோல் நெல்லொடு வாங்கி வருவைகல்
மூங்கின் மிசைந்த முழந்தா ளிரும்பிடி''(கலித். 50)

என்ற விடத்தும் கூறப்பட்டுள்ளது.

தலைவி இதணமேறிக் கிளிகளைத் தழல், தட்டை முதலிய கருவிகளைக்கொண்டு கடிதல் இவருடைய செய்யுட்கள்

பலவற்றிற் காணப்படுகின்றது; அவற்றுள், ''வேங்கைப் பாவமை யிதண மேறிப் பாசினம், வணர்குரற் சிறுதினை கடிய'' (நற். 373) சுடுபுனமருங்கிற் கலித்த வேனற், படுகிளி கடியுங் கொடிச்சிகைக் குளிரே (குறுந். 291), ''குறமகள் ....... தட்டையின் ஐவனச் சிறுகிளி கடியு நாட'' (ஐங்குறு. 285) என்பன குறிப்பிடத்தக்கவை. தலைவி கிளியோப்பிச் சுனைப்பூவைப் பறித்துத் தழை தொடுத்திருந்தாளென்று இங்குக் கூறியதோடு, ''சுனைப் பூக் குற்றுத் தொடலை தைஇப், புனக்கிளி கடியும் பூங்கட் பேதை'' (குறுந். 142) என்பதை ஒப்பிடுக. ''மலையவு நிலத்தவுஞ் சினையவுஞ் சுனையவும்'' என மலர்களை வகைப்படுத்தியவர், ''கொடியவுங் கோட்டவும்'' (கலித் 54) எனப் பிறிதோரிடத்தில் வகுத்துள்ளார். தலைவி அசோக மரத்தடியில் இருந்தகாலைத் தலைவன் வந்தானென்று இங்கே புனைந்தவர், ''செயலைத் தோன்றும், நற்ரூர் மார்பன்'' (நற். 376) எனக் கூறுதல் காண்க. தலைவன் பலவித மலராலாகிய கண்ணி யோடும் சந்தனம் பூசிய மார்பையுடையவனாக வில்லை யும் அம்பையும் ஏந்திக் கச்சு கழல் முதலியவற்றை அணிந்து நாயோடு வந்தானென இங்கே சொல்லப் படுகின்றது. அவன் கண்ணியுடனும் வில்லுடனும் வந்தமையை, குல்லை குளவி கூதளங் குவளை, இல்ல மொடு மிடைந்த வீர்ந்தண் கண்ணியன், சுற்றமை வில்லன்'' (நற். (376) என்றும் ,தொடைமாண்ட, கண்ணியன் வில்லன் வரும்'' (கலித். 37) என்றும், கண்ணியையும் சந்தனத்தையும் அணிந்து வந்தமையை, ''தாமரைக் கண்ணியை தண்ணறுஞ் சாந்தினை'' (கலித். 52) என்றும், வில்லும் அம்பும் ஏந்தி வந்த மையை; ''உருவ வல்வில் பற்றி யம்பு தெரிந்து'' (அகநா. 82) என்றும், சந்தனம் பூசி வந்தமையை, ''ஆர நாறு மார்பினை'' (குறுந். 198), ''ஆர மார்பினை' (கலித். 52) என்றும், கச்சும் கழலும் அணிந்து வந்த மையை, ''பாசி சூழ்ந்த பெருங்கழற் றண்பனி வைகிய வரிக்கச் சினனே'' (ஐங்குறு. 206) என்றும், நாயொடு

வருதலை, ''வயநாய் பிற்படப் பகல்வரின்'' (அகநா. 118) என்றும் புலப்படுத்தியிருக்கின்றார். இதன்பாலுள்ள வெண்போழ்க் கண்ணியென்ற தொடர், பதிற்றுப்பத்திலும் (67) ஒருகாழென்பது கலித் தொகையிலும் (54) வந்துள்ளன. தலைவன், ''இறந்த கெடுதியு முடையேன்'' என்று சொன்னதாக இங்கே கூறியவர், அக்கெடுதியுள் ஒன்ருகிய யானையை அவன் வினவியதாக, ''ஒருவன், வயமானடித் தேர்வான் போல'' (கலித். 37) செருச்செய் யானை சென்னெறி வினய் (அகநா. 82) என்ருர். இங்கே ஏனலிலுள்ள தினையைத்தின்ற யானையை வேடன் கணையினல் துரத்தினனென்றவர், அச்செய்தியைச் சிறிது வேறு படுத்தி, பிடியோடு மேய்ந்த யானையைக் கானவன் கவணலெறிந்தனனெனவும் (கலித். 41) மேயவரும் யானையின் வரவை ஒற்றியறிந்து கவண்கல்லை வீசின னெனவும் (அகநா.292) கூறி, அக்கவண்கல் ''இறுவரை வேங்கையி னெள்வீசிதறி, ஆசினிமென்பழ மளிந்தவை யுதிராத் தேன்செ யிருஅ றுளைபடப் போகி நறுவடி மாவின் பைந்துண ருழக்கிக், குலையுடை வாழைக் கொழுமடல் கிழியாப், பலவின் பழத்துட் டங்கும்'' எனவும், ''உடுவுறு கணையிற் போகிச் சாரல், வேங்கை விரியிணர் சிதறித் தேன்சிதையூஉப், பலவின் பழத்துட் டங்கும் எனவும் நயம்படக் கிளர்ந்தனர். யானையின் முழக்கத்திற்கு உருமேற்றின் முழக்கத்தை உவமை கூறியது போல நற்றிணையிலும் உவமித்துள்ளார் (65, 353). மையல் வேழமென்று இங்கே கூறியவர், ''மையல் யானையின் மருட்டலு மருட்டினன் (கலித். 54) என வேறிடத்தும் கூறியுள்ளமை காண்க. தலைவி அருவி நீராடுகையில் நீரோடு சென்ருளாகத் தலைவன் சென்று எடுத்துக் காத்தானென்று இங்கே காணப்படும் செய்தி 'காமர் கடும்புனல் கலந்தெம்மோ டாடுவாள், தாமரைக்கண் புதைத்தஞ்சித்தளர்ந்ததனே டொழு கலால், நீணக நறுந் தண்டார் தயங்கப் பாய்ந்தருளி னற், பூணக முறத்தழீஇப் போதந்தான்'' (39) எனக்

கலிப்பாட்டில் இவராற் சுவையுறச் சொல்லப் பட்டிருக்கிறது. பாறை நெடுஞ்சுனையிலே வீழ்ந்த பல பழங்களில் உண்டான தேனை நீரென்று கருதி உண்டமயில் தளர்ந்து நின்றதாக இங்கே உணர்த்தியவர், அதனைச் சிறிது வேறுபடுத்தி அத்தகைய தேனை உண்ட ஒரு மந்தி மயங்கிக் கண்படை கொண்டதாக அமைத்து,

''கோழிலை வாழைக் கோண்மிகு பெருங்குலை,
ஊழுறு தீங்கனி யுண்ணுநர்த் தடுத்த,
சாரற் பலவின் சுளையொ டூழ்படு
பாறை நெடுஞ்சுனை விளைந்த தேறல்
அறியா துண்ட கடுவ னயலது
கறிவளர் சாந்த மேறல்செல் லாது
நறுவீ யடுக்கத்து மகிழ்ந்துகண் படுக்கும்''.
(அகநா. 2.)

என்று புனைந்தமை அறிந்து மகிழ்வதற்குரியதாகும். முருகக் கடவுளைத் தொழுது தலைவன் சூளுரைத்தானென்று இங்கே கூறியது போலவே பலவிடங்களிற் பல வகையாகச் சூளைப்பற்றிய செய்திகளை அமைத்துள்ளார். ஆம்பலந் தீங்குழலை, ''இயவர், தீங்குழ லாம்பலினினிய விமிரும்'' (ஐங்குறு. 215) என்றவிடத்து உவமையாக அமைத்துள்ளார். மேகக் கூட்டங்களுக்கு யானைப்படைகளையும் பறவைகளின் தொகுதிக்கு அரசர்களுடைய படைகளையும் பிற இடங்களில் உவமை கூறிய இவர், இங்கே மேகங்கள் மலையைச் சூழவும் புள்ளினம் தத்தம் இடங்களிற் சேர்ந்து ஒலிப்பவும் வரும் மாலைக்கு, சினைஇய வேந்தன் செல்சமத்தை உவமை கூறுதல் மிக ஏற்புடையதாகும். தலைவனை அன்றையன்ன விருப்போடென்றும் வருபவனாக உணர்த்தியதை, ''அன்றையன்ன நட்பினன்'' (குறுந். 385) எனவும் உணர்த்துவர். தலைவியின் அழுங்கண்களுக்கு நீரெறி மலரை உவமை கூறும் இவரது இயல்பு, ''அதுபுலந் தழுத கண்ணே சாரற், குண்டுநீர்ப் பைஞ்சுனைப் பூத்த குவளை, வண்டு பயில் பல்லிதழ்க் கலைஇத் தண்டுளிக் கேற்ற மலர் போன்றனவே'' (குறுந். 291) என்றும், நின்சுனைக்

கனைபெய னீலம்போற் கண்பனி யுகுபவால்'' (கலித். 48) என்றும், ''மலிபெயற் கலித்த மாரிப்பித் திகத்து ............பெயலேர் மணமுகைச் செவ்வெரி நுறமுழுங் கொழுங்கடை மழைக்கண்'' (அகநா. 42) என்றும் வரும் பகுதிகளாலும் அறியப்படுகின்றது. தலைவி நலஞ் செலச் சாய்ந்த செய்தியை, ''மணிமருள் மேனி யாய் நலந் தொலைய'' (அகநா. 278) என்று வேற்றுருவத்திற் கூறுதல் காண்க. கங்குலில் தலைவன் வருதலையஞ்சித் தலைவி கலுழ்தலை, ''உரவு மழை பொழிந்த பானாட் கங்குற், றனியை வந்த வாறுநினைந் தல்கலும், பனி யொடு கலுழுமிவள் கண்ணே.'' (அகநா. 182) எனச் சுருக்கிக் கூறியதனை இப்பாட்டில் மிகவிரித்துரைத்திருத் தல் அறிதற்குரியது. தலைவன் வரும் வழியிடையில் உள்ள அஞ்சத்தக்க விலங்குகளாக இங்கே கூறியவற்றுள், அளைச்செறி யுழுவையின் தன்மையை, ''இருண்மயங் கியாமத் தியவுக்கெட விலங்கி, வரிவயங் கிரும்புலி வழங்குநர்ப் பார்க்கும் (அகநா. 218) எனவும், முதலை யின் தன்மையை, ''கான்யாற்றுக் கராஅந் துஞ்சுங் கல்லுயர் மறிசுழி, மராஅ யானை மதந்தப வொற்றி, உராஅ வீர்க்கும்'' (அகநா. 18) எனவும் விளக்கி யுள்ளார். இங்கே கூறப்பட்ட விலங்குகள் முதலிய வற்றுட் பல, ''கான மானதர் யானையும் வழங்கும், வானமீமிசை யுருமுநனி யுரறும், அரவும் புலியு மஞ்சு தக வுடைய'' (அகநா. 318) என்றவிடத்தும் இவராற் கூறப்பட்டுள்ளன. வழியிடத்து உள்ளனவாகக் கூறப் படும் இவ்விலங்கு முதலியன அஞ்சத்தக்கன வென் பதனை, ''கடுஞ்சின வேழத் தெதிர்சேறலின்னா, ஒடுங்கி யரவுறையு மில்லின்னா வின்னா, கடும்புலி வாழு மதர்'' (இன்னா.31) எனப் பிறவாற்றாலும் புலப்படுத்தி யிருத்தல் காண்க.

இவர் இன்னாநாற்பதின் கடவுள் வாழ்த்தில், ''முக்கட் பகவன் அடிதொழா தார்க்கின்னா'' எனத் தொடங்கினமையும், புலியின் உருவத்தை யொப்பப்

பூத்த வேங்கையைக் குத்திய யானை அம்மரத்திற்குள் தன் கொம்பு அகப்பட்டுக்கொள்ள அதனைப் பெயர்க்க மாட்டாது வருந்தும் நிலைக்கு இறைவன் வீற்றிருந் தருளும் கைலையை எடுக்கப் புகுந்த இராவணன் அகப் பட்டுக் கொண்டதை உவமை கூறுமுகத்தால், ''இமைய வில் வாங்கிய வீர்ஞ்சடை யந்தணன், உமையமர்ந் துயர்மலை யிருந்தனனாக'' (கலித். 38) எனக் கூறிய தும், பாரி புல்லியோரையும் பேணியீவா னென்பதனை உவமை முகத்தால் புலப்படுத்த நினைந்தவர், ''குவி யிணர்ப், புல்லிலை யெருக்க மாயினு முடையவை, கடவுள் பேணே மென்னா'' (புறநா. 106) என்று சிவ பெருமானை நினைந்து குறிப்பாற் கூறினமையும் கபிலர் சிவபெருமான்பால் வைத்த அன்பைப் புலப்படுத்தும். ''சக்கரத்தானை மறப்பின்னா'' (இன்னா. 1) என்று திருமாலை வணங்கியவர் ''மாயோ னன்ன மால்வரைக் கவாஅன்'' (நற். 32) என்று அவரை மலையோடு உவ மித்துக் கூறியுள்ளார். அவ்வாறு உவமித்தவர் அம் மலையோடு ஒன்றியுள்ள வெள்ளிய அருவிக்கு அம் மாயோனோடு கலந்து உலவும் பலதேவரை,'' வாலியோ னன்ன வயங்குவெள் ளருவி'' (நற். 32) என்று உவமித் திருத்தல் இயைபுடையதாக விளங்குகின்றது. பிரமனை யும், ''பொற்பன வூர்தியை யுள்ளா தொழுகின்னா'' (இன்னா. 1) என்று துதித்திருக்கின்றார். இவை இவரது சமநிலையைப் புலப்படுத்தும். குறிஞ்சித் திணையைப் பாடுவதிற் சிறந்த இவர் அந்நிலத்தின் கடவுளாகிய முருகவேளைப் பற்றிய செய்திகளைப் புலப்படுத்தி யுள்ளா ரெனல் மிகை. இவர் முருகக்கடவுளை, ''இன்னா, சத்தியான் றொழா தார்க்கு'' (இன்னா. 1) என வணங்கி, சுடர்ப்பூட் சேஎய், நெடுவேள் பிறங்குமலை மீமிசைக் கடவுள், கறிவளர் சிலம்பிற் கடவுள் எனச் சிறப்பித்து, ''கறங்குவெள்ளருவி பிறங்குமலைக் கவாஅற், றேங்கம ழிணர வேங்கை சூடித், தொண்டகப் பறைச்சீர் பெண்டிரொடு விரைஇ, மறுகிற் றூங்குஞ் சிறுகுடிப் பாக்கத், தியன்முருகு'' (அகநா. 118) எனக்

குன்றவாணர் அவருக்கு விழாவெடுக்கு முறையையும், ''மன்ற வேங்கை மலர்சில கொண்டு, மலையுறை கடவுள் குலமுதல் வழுத்தி'' (ஐங்குறு. 259) என அவரை வழுத்தும் முறையையும் காட்டி, ''குன்றக் குறவன் கடவுட் பேணி, இரந்தனன் பெற்ற வெல்வளைக் குறுமகள்'' (ஐங்குறு. 257) என அவரை வழிபடுவதாற் பெறும் பயனைக் குறிப்பித்துச் செல்லும் நீர்மை அறிந்து போற்றற்குரியது. இவர் செய்யுட்களில் வரையரமகளிர், பிறவகை அரமகளிர், மராஅத்த கடவுள் முதலிய தெய்வங்களைப் பற்றிய செய்திகளும் காணப் படும்.

கண்ணபிரான் மல்லரை மறஞ்சாய்த்த செய்தியும், வீமன் துரியோதனனைக் குறங்கறுத்த செய்தியும் இவ ரால் எடுத்தாளப் பட்டுள்ளன.

அந்தணராகிய இவர், நெய்பெய்தீயின் முன் மணத் தலையும், அந்தணர் அந்திக்காலத்திற் செய்ய வேண்டு வனவற்றைச் செய்தலையும், குதிரையின் குடுமிக்கு உவமையாக அந்தணச் சிறுவனது குடுமித்தலையையும், அறநூலறிவு, வேள்வி முடித்தல் முதலிய அந்தணர் தகுதி களையும், ''அந்தண ரில்லிருந் தூணின்னு'' (இன்னு. 2) என்பதனல் அவர் ஊண்சுவையைப் பெரிதெனக்கருதா ரென்பதனையும், அவர் வீட்டிற் கோழியும் நாயும் புகா வென்பதனையும், வேதம் அவருக்கு இன்றியமை யாத தென்பதனையும் புலப்படுத்தியிருக்கின்றமை உணர்தற்குரியது.

பெருவள்ளலாகிய பாரியோடிருந்து வாழ்ந்து அவனது வண்மை நலத்தைக் கண்டு மகிழ்ந்த இவர், கொடைத்திறத்தைப் பாடும் முறை மிகச் செவ்விதாக அமைந்துள்ளது. பாரியை, 'புல்லியோரென்று பாராது யாருக்கும் ஈவான்; விறலியரும் பாணரும் என்ன வேண்டினும் வழங்குவான்; அவனுடைய

ஊர்களெல்லாம் பரிசிலர் பெற்றுரெனினும் தன்னையே பரிசிலாக உதவுவான்; நிழலில்லாத இடத்திலுள்ள தனிமரத்தைப் போல அவன் யாருக்கும் பயன்படுவான் என்றும், மலையமான் திருமுடிக்காரியை, 'உரிய எல்லாவற்றையும் அந்தணர் பரிசிலர் முதலியோர்க்கு அளித்து விட்டமையால் அவனுக்குரியது அவன் மனைவியின் தோளொன்றே; அவன் இயல்பாகவே கணக்கற்ற தேர்களைப் பலவாகக் கொடுப்பவன்; பரிசிலர் புறப் படுகையில் தீயநிமித்தங்கள் உண்டானாலும் அவன்பாற் சென்றால் பரிசில் பெறுவது ஒருதலை' என்றும், நள்ளியை, ''இரப்போர்க் கிழையணி நெடுந்தேர் களிறொ டென்றும், மழைசுரந்தன்ன வீகை வண்மகிழ்க், கழறொடித் தடக்கைக் கலிமா னள்ளி'' (அகநா. 238) என்றும், செல்வக்கடுங்கோ வாழியாதனை, அந்தணருக்கு நீரொடு தானப் பொருள்களைக் கொடுக்கும் பொழுது சொரிந்த தாரை நீர்ப்பெருக்கத்தால் அவனது மாளிகையின் முற்றம் சேறுபட்டது; அவன், 'நம்மைப் பரிசிலர்கள் காணவேண்டுவதில்லை; நம் மாளிகைப் புறத்து நீயிர் காணினும் கொடுமின் என்று தன் படை வீரர்களுக்குக் கூறுந் தன்மையன்; பாணர் புரவலன்; பரிசிலர் வெறுக்கை; களிற்றையும் நெல்லையும் வரையறையின்றித் தருபவன்; பாணருக்கு முத்தத்தையும் நல்ல ஆபரணங்களையும் வழங்குபவன் என்றும், தென்னவனை, ''பொழி பெயல் வண்மையான் (கலித். 57) என்றும் சிறப்பித்துப் பாடியிருக்கும் பகுதிகளிலும், இல்லையென்று வந்தாரது குறையை நீக்க முடியாவிடின் உயிரை நீத்தல் வள்ளியோர் செயலென்பதை, ''இன்மையுரைத்தார்க் கதுநிறைக்க லாற்றுக்காற் றன்மெய் துறப்பான்மலை'' ''ஈத லிரந்தார்க்கொன் றாற்றாது வாழ்தலிற், சாதலுங் கூடுமா மற்று'' (கலித். 43, 61) என்று புலப்படுத்திய அடிகளிலும் கொடையைப் பாராட்டும் இவரது நற்புலமை விளங்குகின்றது.

பாரியோடு உயிர் நண்பராக இருந்து நட்பின் இயல்பை நன்கறிந்த இவர், ''புரைய மன்ற புரை யோர் கேண்மை'' ''பெரியோர், நாடி நட்பி னல்லது, நட்டு நாடார்'' (நற். 1, 32), ''நட்டோர்க் கல்லது கண்ணஞ் சலேயே'' (பதிற். 63) ''நட்டார்க்குத் தோற்றலே நாணுதோன் (கலித். 43) ''பிரிவின் றியைந்த துவரா நட்பின், இருதலைப் புள்ளி னோருயி ரம்மே'' (அகநா. 12) என நட்பினைப் பற்றிய செய்தி களை அறிவித்திருத்தல் அவரது அனுபவத்தினின் றெழுந் ததென்றே கூறலாம்.

தலைவியின் உயிர் சிறிது, காமம் பெரிதென்பதைப் பலாவின் சிறுகொம்பிற் பெரியபழம் தூங்குவதை உவ மித்து விளக்கியிருத்தல், காமம் கடலினும் பெரி தென்றல், காமம் முதிர்ந்தால் உயிர்க்கு அழிவு நேரு மென்றல் முதலியன காமத்தைப் பற்றி இவர் கூறுவன வாகும்.

இவர், தலைவன் தலைவியரிடையே உள்ள அன்பின் வகையைப் புலப்படுத்தும் இடங்கள் பல; தலைவன் இனியனுதலின் அவன் செய்வன யாவும் இனியனவே; அவன் செய்யும் இன்னுமை தேவலோகத்திற் பெறும் இன்பத்தினும் உயர்ந்தது என்றும், தாய் வீட்டில் இருந்து உண்ணும் தேனெடு கலந்த பாலைக் காட்டிலும் தழைக்குவியலுக்கு அருகே உள்ளதும் மானுண்டு எஞ்சியதுமாகிய நீரை அவனது அருகேயிருந்து பருகுதல் இனியது' என்றும் தலைவி கூறுவதாக அமைத்த பகுதிகள் இன்பத்தை விளைவிப்பனவாகும். கற்பினை யுடைய மகளிரை, ''காமர் கடவுளு மாளுங் கற்பிற்... சேயிழை'' (பதிற். 65), ''அருமழை தரல் வேண்டிற் றருகிற்கும் பெருமையள்'' (கலித். 39) என்பர்.

குறவர்கள் யானைக்கொம்பை விற்று உணவுப் பொருள்களைப் பெறுதலும், வீரர்கள் அக்கொம்பை

விற்றுக் கள்ளைவாங்குதலும், கணவனை இழந்த மகளிர் பஞ்சினைப் பன்னி நூற்றலும், மகளிர் தைந்நீராடுதலும், அவர் விளையாட்டிற் பிள்ளையை வளர்த்து வேறொருத்தி வளர்த்த பெண்ணைக் கொள்ளுதற்குச் சிறுசோறு சமைத்து ஆயத்திற்கு இட்டு மகிழ்தலும், தலைவனைப் பிரிந்த மகளிர் அவன் வரும் நாட்களைச் சுவரில் விரலா லெழுதி எண்ணி யிருத்தலும், மகளிர் உரலிற் பொருள் களை இடிக்கும் பொழுது வள்ளைப்பாட்டைப் பாடு தலும், ஒருவன் தானே வலிய இராக்கத மணமுறை பற்றி ஒருத்தியைக் கொள்ளுதலும், நீர்குடித்தும் மெய்தொட்டும் சூளுறவு கூறுதலும், யானையை நீருண்ண விடுகையில் அதனல் வருந்துன்பத்தைத் தடுக்க அதன் வரவை அறிவிக்கும் பொருட்டுப் பறை யறைதலும் பிறவுமாகிய செய்திகள் இவர் காட்டிய அக்கால வழக்கங்கள்.

தலைவனுக்கு வண்டு, நண்டின் கண்ணிற்கு நொச்சி யரும்பு, மழைக்குப் பஞ்சின் பனுவலும் அவரைப் பூவும், இற்றிமரத்தின் வேருக்கு அருவி, வயலைக் கொடிக்கு நெய்யோடு கலந்த உழுந்துமாவை நூற்ற உருவம், மலைமிசைச் சிறுநெறிக்கு யானைக்கயிற்றுப்புறம், மூங்கிலின் கணுவிலுள்ள பாளைக்கு மான்செவி, வாழைக் குலைக்குப் புலியின் அடி முதலிய உவமைகள் இவருடைய செய்யுட்களிற் காணப்படுகின்றன.

அருவியின் ஒலியால் குறிஞ்சி நிலத்தாரும் யானையும் தூங்குதலும், குரங்குமயிலின் முட்டையைப் பாறையில் உருட்டுதலும், அது மலையில் வளர்ந்த இற்றியின் வேரைப் பிடித்துக்கொண்டு மேல் ஏறுதலும், தன் கன்று பால் குடித்துக்கொண்டே யிருப்பப் பிடி தினையை யுண்ணுதலும் ஆகியவற்றைப் போன்ற இயற்கைக் காட்சிகளைக் கூறும் பகுதிகள் இவருடைய செய்யுட்களை அழகுபடுத்தி விளங்குகின்றன. அகநானூற்றில், ஆடும் மயிலுக்கு விறலியை உவமை கூறப் புகுந்தவர், காட்டில்

வளர்ந்த மூங்கிலிலே உள்ள துளைகளிற் காற்றுப் புகுந்து புறப்படுதலால் உண்டாகும் இன்னொலி குழலோசை யாகவும், அருவியின் ஓசை முழவொலியாகவும், மான் களின் குரல் பெருவங்கியத்தின் இசையாகவும், வண்டின் முரற்சி யாழொலியாகவும், மந்திகள் அவையிலிருந்து கூத்துக் காண்பாராகவும் மயில் ஆடுகின்றதென்று நயம்பெறப் புனைந்த புலமைத்திறம் ஆய்ந்தறிந்து இன்புறத்தக்கது.

இவர் பாக்களிற் சில சில இடங்களில் நகைச்சுவை ததும்பும் பகுதிகளும் அமைந்துள்ளன. ஆண்குரங்கு மரத்திற் பாய்கையில் விழுந்துவிட அந்தத் தப்பு அம் மரத்தின் கொம்பினதாகக் கூறப்பட்டதை ஓரிடத்தில் உவமை கூறுவதும், அவரையை நிறையத் தின்ற மந்தி பல பண்டங்களை விற்பார்களது பையைப் போலத் தோன்றுமென்பதும், குரங்கு பிரம்பின் கோலைக் கொண்டு மழைக் கொப்புளத்தைப் புடைத்தல், நறைக் கொடி கொண்டு மேகங்களைப் புடைக்க முயலுதல் என்பவற்றைச் சொல்லுவதுமாகிய பகுதிகளில் அவற்றின் இயல்பை நகைச்சுவைபட விளக்குதல் காண்க. இன்னும் பரணிலுள்ள வேடனது நெருப்புக் குப் பயந்து சென்ற யானை வான்மீன்களின் ஒளியைக் கண்ட விடத்தும் அஞ்சியதென்றும், துறுகல்லை யானை பிடியென எண்ணி மயங்கித்தழுவியதென்றும், புலியைத் தாக்கிய வருத்தத்தோடு தூங்கிய யானை நனவிற் செய்த செயல் மனத்தில் அழுந்தியிருந்தமையின் கன விலும் அவ்வாறு கண்டு உடனே வெருவியெழுந்து புதிதாக மலர்ந்த வேங்கை மரமொன்றைத் தன்னாற் கடியப்பட்ட புலியென்று மயங்கிக் குத்திச் சிதைத்துச் சினந்தணிந்தபின் அது மரமென்றும் புலியன்றென்றும் உணர்ந்து நாணிற்றென்றும், தினைப்புனத்திற் பெண் புலி போன்றமைத்த உருவத்தினைக் கண்டு மயங்கி ஆண்புலி தழுவிச்சென்றது என்றும் புனைந்த காட்சி களும், கலித்தொகையிற் கூறியுள்ள முதுபார்ப்பானது

பெருங் கூத்தும், ''கள்ளில்லா மூதூர் களிகட்கு நன்கின்னு'', ''கடித்தமைந்த பாக்கினுட் கற்படுத லின்னு'' என நீதிகளைக் கூறும் இன்னா நாற்பதிற் காணப்படுதலும் இவர் நகைச்சுவையைப் பல்லாற்றானும் புலப்படுத்தும் இயல்புடையவரென்பதைத் தெரிவிக்கும்.

இவரது புலமை நலங்கள் இன்னும் எடுத்தெழுதப் புகின் மிக விரியுமாதலின் அஞ்சி இதனோடு நிறுத்தப் பெற்றன.

கயத்தூர் கிழார்:— கயத்தூர் என்பது சோழ நாட்டிலுள்ள நன்னிலம் தாலுகாவில் உள்ளதோர் ஊர். இவர் வேளாண்மரபினர். தோழி தலைவனிடம், ''யாம் உனக்கு இனியமாக இருந்தும் நெடுங்காலம் பழகினமையினால் நின்னால் வெறுத்தற்குரியே மாயினேம்'' என்னும் நினைவு பற்றி, ''நீர்நீ டாடிற் கண்ணுஞ் சிவக்கும், ஆர்ந்தோர் வாயிற் றேனும் புளிக்கும்'' என்று கூறுவதாக இவர் ஒரு செய்யுள் செய்திருக்கிறார். ''நீ எம்மைப் பிரிவையாயின் எம்முடைய தந்தையின் வீட்டுக்கு அழைத்துச் செல்வாயாக'' என்று தோழி தலைவியை உளப்படுத்தித் தலைவனிடம் கூறியது உலக வழக்கை ஒட்டிய கூற்றாகும். இவர் பாடியது குறுந் தொகைச் செய்யுள் ஒன்று.

நீர்நீ டாடிற் கண்ணுஞ் சிவக்கும்
ஆர்ந்தோர் வாயிற் றேனும் புளிக்கும்
தணந்தனை யாயினெம் மில்லுய்த்துக் கொடுமோ
அந்தண் பொய்கை யெந்தை யெம்மூர்க்
கடும்பாம்பு வழங்கும் தெருவில்
நடுங்கனுர் எவ்வம் களைந்த எம்மே.

(குறுந். 354)

'பழகப் பழகப் பாலும் புளிக்கும்' என்னும் பழமொழி இங்கே நினைத்தற்குரியது.

கயமனார்:— பசிய இலையினின்றும் மேலெழுந்த நெய்தற்பூ கழியில் வெள்ளம் மிகும் போதெல்லாம் கயத்தின் கண்ணே மூழ்கும் மகளிருடைய கண்ணை யொக்குமென்று இவர் ஒரு செய்யுளிலே (9) பாடுகின்றார். இதுபற்றி இவர் கயமனார் என்ற சிறப்புப் பெயர் பெற்றாரென்று ஊகிக்கப்படுகிறது. போரில் இறந்த மகனுடைய பிரிவாற்றாது வருந்தும் நற்றாயின் இயல்பை இவர் புலப் படுத்தியுள்ளார் (புறநா. 254). அகநானூற்றிலும் புறநானூற்றிலும் இவர் பாடல்களில் புலம்பல் மிகுதி யாகத் தோற்றுகிறது. அன்னியென்பான் குறுக்கைப் பறந்தலையில் திதியன் என்பானை வெற்றி கொண்டு அவனது காவல் மரமாகிய புன்னையை வெட்டினான் என்ற செய்தி (அகநா. 145) இவராற் கூறப்பட்டுள்ளது. சோழநாட்டிற் காவிரியின் வடகரையில் இப்பொழுது பாண்டூர் என வழங்கும் திருவன்னியூர் என்பதும் அதனருகிலுள்ள திருக்குறுக்கை வீரட்டம் என்பதும் மேலே கூறிய செய்திக்குத் தொடர்புடையனவென்று கருத இடமுண்டு. எட்டுத்தொகையுள் இவரியற்றிய செய்யுட்கள் 23. (நற். 6; அகநா. 12; புறநா. 1, குறுந்· 4.)

யாயா கியளே மாஅ யோளே
மடைமாண் செப்பிற் றமிய வைகிய
பெய்யாப் பூவின் மெய்சா யினளே
பாசடை நிவந்த கணைக்கா னெய்தல்
இனமீ னிருங்கழி யோத மல்குதொறும்
கயமூழ்கு மகளிர் கண்ணின் மானும்
தண்ணந் துறைவன் கொடுமை
நம்மு னாணிக் கரப்பா டும்மே.

(குறுந். 9.)

மாயோள்—மாமை நிறத்தையுடையவள்; மாமைநிறம் என்பது மாந்தளிர் போன்ற அழகிய நிறம்; அஃது இலாவணியம் எனப்படும்.

கருங்குழலாதனர்:— இவர் சோழன் கரிகாற்பெரு வளத்தான் இறந்த பின்பு அவன் பிரிவாற்ருது வருந் துதல் வாயிலாக அவனுடைய குணவிசேடங்களையும் அரிய செயல்களையும் அவனுரிமை மகளிர் அருங்கல முதலியவற்றைக் களைந்ததனையும் கூறியிருக்கின்றனர். இவர் இயற்றிய செய்யுள் ஒன்று.

களிறு கடைஇயதாட்
கழலுரீஇய திருந்தடிக்
கணைபொருது கவிவண்கையாற்
கண்ணொளிர்வரூஉங் கவின்சாபத்து
மாமறுத்த மலர்மார்பிற்
ருேல்பெயரிய வெறும்முன்பின்
எல்லையு மிரவும் எண்ணுய் பகைவர்
ஊர்சுடு விளக்கத் தழுவிளிக் கம்பலைக்
கொள்ளை மேவலை யாகலி னல்ல
இல்லவா குபவா லியறேர் வளவ
தண்புனல் பரந்த பூசன் மண்மறுத்து
மீனிற் செறுக்கும் யாணர்ப்
பயன்றிகழ் வைப்பிற்பிற ரகன்றலை நாடே.

(புறம். 7)

கரும்பிள்ளைப் பூதனர்:— இவர் பரிபாடலில் வையைக் குரிய 10ஆம் பாடலை இயற்றியவர்; இப்பாடலிலுள்ள புதுநீர் விழாச்சிறப்பு மிக்க இன்பமளிப்பது. நீர் விளை யாட்டின் முறை இதனல் நன்கு அறியலாகும். இதில் வந்துள்ள உவமைகள்யாவும் மிகச் சிறந்தவை. நெருக் கத்தால் மெல்லச் செல்லுமாந்தர் நடைக்கு வாச்சியத் தின் விளம்பித நடையை உவமை கூறியிருத்தலின் இவரது இசைப்பயிற்சியும் வையையின் பேருதவிக்குப் பாண்டியன் கொடையை உவமை கூறியிருத்தலின் அவனிடம் இவருக்கிருந்த அன்பும் வெளியாகின்றன.

கருவூர்க் கந்தப்பிள்ளை:— இவருடைய ஊர் கருவூர்; இவருடைய பெயர் கருவூர்க் கதப்பிள்ளை என்றும்

காணப்படுகிறது. கருவூர்க் கந்தப்பிள்ளைச் சாத்தனுர் என்ற புலவர் இவருடைய மகனுர் என்று கருத இட முண்டு. இவராற் பாடப்பட்டோன் பாண்டியனுடைய வீரனும் கந்தன் என்னும் பெயரினனுமாகிய நாஞ்சில் வள்ளுவனென்பான். இவர் பாடலால் அவனுடைய வண்மையும் வீரமும் நாஞ்சில் மலையின் வளனும் புலனுகின்றன; ''துப்பெதிர்ந் தோர்க்கே யுள்ளாச் சேய்மையன், நட்பெதிர்ந் தோர்க்கே யங்கை நண் மையன்'' என்பது இவர் அவனைப் பாராட்டிய பகுதி. இவர் செய்த பாடல்கள் 3; குறுந். 2, புறநா. 1. பண்டைக்காலத்தும் தெய்வப் பெயரை மனிதர்க்கு இட்டு வழங்குதல் மரபாகத் தெரிதலாலும், மிளைக் கந்தன், மிளைப்பெருங்கந்தன் என்று வேறு தொகை நூல்களிற் புலவர்கள் பெயர் காணப்படுதலாலும் இப் பெயர் பொருத்தமுடைய தென்றே தோற்றுகிறது.

தென்பவ் வத்து முத்துப் பூண்டு
வடகுன் றத்துச் சாந்த முரீஇ
........................................ ங்கடற் ருனை
இன்னிசைய விறல்வென்றித்
தென்னவர் வயமறவன்
மிசைப்பெய்தநீர் கடற்பரந்து முத்தாகுந்து
நாறிதழ்க் குளவியொடு கூதளங் குழைய
வேறுபெ........................................த்துந்து
தீஞ்சுளைப் பலவி ஞஞ்சிற் பொருநன்
துப்பெதிர்ந் தோர்க்கே யுள்ளாச் சேய்மையன்
நட்பெதிர்ந் தோர்க்கே யங்கை நண்மையன்
வல்வேற் கந்த னல்லிசை யல்ல
....................த்தார்ப் பிள்ளையஞ் சிறுஅர்
அன்ன ஞகன் மாறே யிந்நிலம்
இலம்படு காலை யாயினும்
புலம்பல்போ யின்று பூத்தவென் கடும்பே.

(புறம். 380)

**கருவூர்க் கந்தப்பிள்ளை சாத்தனார்:—** இப்பெயர் கருவூர்க் கந்தப்பிள்ளை சாத்தனாரெனவும் காணப்படுகின்றது. இவருடைய ஊர் கருவூர். சாத்தனார் என்பது இவரது இயற்பெயர். 'கந்தப் பிள்ளை' என்பவர் இவருடைய தந்தை. சேரன் சேனாதிபதியும் குதிரைமலைத் தலைவனுமாகிய பிட்டங் கொற்றனை நோக்கி, ''பாடுப வென்ப பரிசிலர் நாளும், ஈயாமன்னர் நாண, வீயாது பரந்தநின் வசையில்வான் புகழே'' (புறநா. 168) என்று பாடியுள்ளார்; இப்பாடலிற் குதிரைமலையிலுள்ள குறவர்களின் இயல்பு நன்கு கூறப்பெற்றுள்ளது; ஏனைத் தொகை நூல்களிலும் இவர் செய்யுட்கள் உள்ளன; அகநா. 1; குறுந். 1; நற். 1.

அருவி யார்க்குங் கழைபயி னனந்தலைக்
கறிவளர் அடுக்கத்து மலர்ந்த காந்தட்
கொழுங்கிழங்கு மிளிரக் கிண்டிக் கிளையொடு
கடுங்கட் கேழல் உழுத பூழி
நன்னாள் வருபத நோக்கிக் குறவர்
உழாஅது வித்திய பரூஉக்குரற் சிறுதினை
முந்துவிளை யாணர் நாட்புதி துண்மார்
மரையான் கறந்த நுரைகொ டேம்பால்
மான்றடி புழுக்கிய புலவுநாறு குழிசி
வான்கே ழிரும்புடை கழாஅ தேற்றிச்
சாந்த விறகி னுவித்த புன்கம்
கூதளங் கவினிய குளவி முன்றிற்
செழுங்கோள் வாழை அகலிலைப் பகுக்கும்
ஊராக் குதிரைக் கிழவ கூர்வேல்
நறைநார்த் தொடுத்த வேங்கையங் கண்ணி
வடிநவி லம்பின் வில்லோர் பெரும
கைவள் ளீகைக் கடுமான் கொற்ற
வையக வரைப்பிற் றமிழகங் கேட்பப்
பொய்யாச் செந்நா நெளிய வேத்திப்
பாடுப வென்ப பரிசிலர் நாளும்
ஈயா மன்னர் நாண
வீயாது பரந்தநின் வசையில்வான் புகழே.

(புறம். 168.)

கருவூர்க் கலிங்கத்தார்:— இவர் பாடியது அகநானூற்றுப் பாடல் ஒன்று.

குவளை யுண்கண் கலுழவுந் திருந்திழைத்
திதலை அல்குல் அவ்வரி வாடவும்
அத்தமா ரழுவ நத்துறந் தருளார்
சென்றுசே ணிடைய ராயினு நன்று
நீடல ரென்றி தோழி பாடான்று
பனித்துறைப் பெருங்கட லிறந்துநீர் பருகிக்
குவவுத்திரை யருந்து கொள்ளைய குடக்கேர்பு
வயவுப்பிடி யினத்தின் வயின்வயிற் றேன்றி
இருங்கிளைக் கொண்மூ வொருங்குடன் றுவன்றிக்
காலை வந்தன்ற் காரே மாலைக்
குளிர்கொள் பிடவின் கூர்முகை யலரி
வண்டுவாய் திறக்குந் தண்டா நாற்றங்
கூதிர் அற்சிரத் தூதை தூற்றப்
பனியலைக் கலங்கிய நெஞ்சமொடு
வருந்துவ மல்லமோ பிரிந்திசினோர் திறத்தே.

(அகம். 183.)

கருவூர்கிழார்:— தலைவனது நட்பில் தனக்குள்ள உறுதியைத் தலைவி கூறுவதாக உள்ள குறுந்தொகைச் செய்யுள் ஒன்றே இவர் பெயரால் வழங்கப்படுகின்றது. யானைக்குக் கொறுக்காந்தட்டையினிடத்துள்ள விருப் பத்தை இவர் பாடல் புலப்படுத்துகிறது.

பலரும் கூறுகவஃ தறியா தோரே
அருவி தந்த நாட்குரல் எருவை
கயநா டியானை கவள மாந்தும்
மலைகெழு நாடன் கேண்மை
தலைபோ காமைநற் கறிந்தனென் யானே.

(குறுந். 170)

எருவை—கொறுக்காந்தட்டை. தலைபோதல்—முடிதல்; அழிதல்.

கருவூர்க்கோசனுர்:— கௌசிகனுர் என்ற பெயர் கோசனுர் என்று மருவியதாகச் சொல்லலாம் என்று தோன்றுகிறது. கோசர்; ஒரு வகை வீர இனத்தைச் சார்ந்தவர். இவரும் அவ்வினத்தைச் சார்ந்தவராக இருக்கலாம் என்றும் தோன்றுகிறது. பாலேயைச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

இசையும் இன்பமும் ஈதலும் மூன்றும்
அசையுடன் இருந்தோர்க் கரும்புணர் வின்மென
வினைவயிற் பிரிந்த வேறுபடு கொள்கை
யரும்பவிழ் அலரிச் சுரும்புண் பல்போ
தணிய வருதுநின் மணியிருங் கதுப்பென
வெஞ்சா வஞ்சினம் நெஞ்சுணக் கூறி
மைசூழ் வெற்பின் மலைபல விறந்து
செய்பொருட் ககன்ற செயிர்தீர் காதலர்
கேளார் கொல்லோ தோழி தோள
விலங்குவளை நெகிழ்த்த கலங்கனுர் எள்ளி
நகுவது போல மின்னி
ஆர்ப்பது போலுமிக் கார்ப்பெயற் குரலே.

(நற். 214.)

இசை—புகழ்.

கருவூர்ச் சேரமான் சாத்தனுர்:— இவர் கருவூரார்; சேரர் மரபினர்; தோழி தலைவியைநோக்கி, ''வந்து அடைந்தவர் பால் செல்கின்றீரோ வென்று செப்பலும் ஆற்றும்; மீண்டும் வருவீரோ வென்று வினவலும் ஆற்றும்; யாங்குச் செய்வாம்?'' என்று கூறும் முகத்தால் வரைந்து கோடலே தக்க தென்று புலப்படுத்திய தாக இவர் ஒரு செய்யுள் பாடியுள்ளார்.

சேறி ரோவெனச் செப்பலு மாற்றும்
வருவி ரோவென வினவலும் வினவாம்
யாங்குச்செய் வாங்கொ ரேழி பாம்பின்
பையுடை யிருந்தலை துமிக்கு மேற்ருெடு
நடுநாள் என்னுர் வந்து
நெடுமென் பணைத்தோள் அடைந்திசி னேரே.

(குறுந். 268.)

கருவூர் நன்மார்பனர்:— இவருக்கு இப்பெயர் உறுப்பால் வந்தது போலும். இவர் பாலைத்திணையைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். இவர் பாடிய பாடலொன்று அகநானூற்றில் உள்ளது.

தண்கதிர் மண்டில மவிரறச் சாஅய்ப்
பகலழி தோற்றம் போலப் பையென
நுதலொளி கரப்பவு மாள்வினை தருமார்
தவலில் உள்ளமொ டெஃகுதுணை யாகக்
கடையலங் குரல வாள்வரி யுழுவை
பேழ்வாய்ப் பிணவின் விழுப்பசி நோனு
திரும்பனஞ் செறும்பி னன்ன பரூஉமயிர்ச்
சிறுகட் பன்றி வருதிறம் பார்க்கு
மத்தமா ரழுவத் தாங்க ணனந்தலைப்
பொத்துடை மரத்த புகர்படு நீழல்
ஆறுசெல் வம்பல ரசைவினர் இருக்கும்
ஈரமில் வெஞ்சுர மிறந்தோர் நம்வயின்
வாரா வளவை யாயிழை கூர்வாய்
அழலகைந் தன்ன காமர் துதைமயிர்
மனையுறை கோழி மறனுடைச் சேவற்
போர்புரி யெருத்தம் போலக் கஞலிய
பொங்கழல் முருக்கி னொண்குரன் மாந்திச்
சிதர்சிதர்ந் துகுத்த செவ்வி வேனில்
வந்தன் றம்ம தானே
வாரார் தோழிநங் காத லோரே.

(அகம். 277.)

கருவூர்ப் பவுத்திரனர்:— பவித்திரன் என்ற சொல் பவுத்திரன் என்று திரிந்தது போலும்; பவித்திரன்— தூய்மையுள்ளவன். பூதனர் என்ற சொல்லும் இப்பொருளிலேயே வருமென்று அறிஞர் கூறுவர். இவர் பாடியது குறுந்தொகைச் செய்யுள் ஒன்று.

கார்புறந் தந்த நீருடை வியன்புலத்துப்
பலர்புகு தரூஉம் புல்லென் மாலை

முல்லை வாழியோ முல்லை நீநின்
சிறுவெண் முகையின் முறுவல் கொண்டனை
நகுவை போலக் காட்டல்
தகுமோ மற்றிது தமியோர் மாட்டே.

(குறுந். 162.)

கருவூர்ப்பூதஞ்சாத்தனர்:— இவர் பாடிய பாடல் ஒன்று அகநானூற்றில் உள்ளது. இவர் நெய்தல் திணையைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். சாத்தனர் என்பது இவரது இயற்பெயர்.

கடல்பா டவிந்து தோணி நீங்கி
நெடுநீர் இருங்கழிக் கடுமீன் கலிப்பினும்
வெவ்வாய்ப் பெண்டிர் கௌவை தூற்றினும்
மாணிழை நெடுந்தேர் பாணி நிற்பப்
பகலு நம்வயின் அகலா னுகிப்
பயின்றுவரு மன்னே பனிநீர்ச் சேர்ப்பன்
இனியே, மணப்பருங் காமந் தணப்ப நீந்தி
வாரா தோர்நமக் கியாஅர் என்னது
மல்லன் மூதூர் மறையினை சென்று
சொல்லின் எவனே பாண வெல்லி
மனைசேர் பெண்ணை மடிவாய் அன்றில்
துணையொன்று பிரியினுந் துஞ்சா காணெனக்
கண்ணிறை நீர்கொடு கரக்கும்
ஒண்ணுதல் அரிவையா னென்செய்கோ வெனவே.

(அகம். 50.)

இவர் கருவூர்ப்பூதனர்மகனர் கொற்றனர் என்றும் வழங்கப்படுவர்.

கருவூர்ப் பெருஞ்சதுக்கத்துப்பூதநாதனர்:— சதுக்கம்-நான்கு தெருக்கள் கூடும் இடம்; அங்கேயுள்ள தெய்வமாகிய ஒரு பூதத்தின் பெயர் இவருக்கு எய்தியது போலும்; கருவூரிற் சதுக்கப்பூதமொன்றிருந்தமை, ''சதுக்கப் பூதரை வஞ்சியுட்டந்து, மதுக்கொள் வேள்வி வேட்டா னுயினும்'' (சிலப். 28:147-8) என்பதனுல் அறியலாகும்; வஞ்சி-கருவூர். முசுகுந்தனுக்குத் துணை

யாக இந்திரனுல் அனுப்பப்பட்ட பூதமொன்று காவிரிப் பூம்பட்டினத்திற் சதுக்கத்திலிருந்து அந்நகரைப் பாது காத்து வந்ததாகச் சிலப்பதிகார முதலியன தெரிவிக் கின்றன. துறவு பூண்டிருந்த கோப்பெருஞ் சோழனே நோக்கி மனமுருகிப் பாடியவர்களுள் இவர் ஒருவர்.

உள்ளாற்றுக் கவலைப் புள்ளி நீழல்
முழூஉ வள்ளூர முணக்கு மள்ள
புலவுதி மாதோ நீயே
பலரால் அத்தைநின் குறியிருந் தோரே.

(புறம். 219.)

'உள்ளாற்றுக் கவலை' என்பதற்கு வழிக்குள்ளாகிய நாற்றிசையும் கூடிய இடம் என்றுமாம்; கவர்த்த வழிக்குள் என்றுரைப்பாரும் உளர்.

கருவூரோத ஞானி:— ஓதஞானி—பரந்த ஞானி; வட சொற்றெடர்; தலைவன் தன் நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்கியதாக இவர் கூறும் ஒரு பாடலே இவர் புலமையை நன்கு தெரிவிக்கின்றது. இவர் பாடிய குறுந் தொகைப் பாடல்கள் இரண்டு.

மருந்தெனின் மருந்தே வைப்பெனின் வைப்பே
அரும்பிய சுணங்கி னம்பகட் டிளமுலைப்
பெருந்தோ ணுணுகிய நுசுப்பிற்
கல்கெழு கானவர் நல்குறு மகளே.

(குறுந். 71)

வைப்பு-சேமநிதி. பகடு-பெருமை.

கல்பொரு சிறுநுரையார்:— தலைவனைப் பிரிந்திருக்க மாட்டாத தலைவி அப்பிரிவினுல் உண்டாகும் துன்ப மிகுதியைப் புலப்படுத்தி, 'யாமெங் காதலர்க் காணே மாயிற், செறிதுனி பெருகிய நெஞ்சமொடு பெருநீர்க் கல்பொரு சிறுநுரை போல, மெல்ல மெல்ல வில்லா குதுமே' என்று கூறுவதாகப் பாடினமையின் இவர் இப்பெயர் பெற்ருர்.

காமந் தாங்குமதி யென்போர் தாமஃ
தறியலர் கொல்லோ வனைமது கையர்கொல்
யாமெங் காதலர்க் காணே மாயிற்
செறிதுனி பெருகிய நெஞ்சமொடு பெருநீர்க்
கல்பொரு சிறுநுரை போல
மெல்ல மெல்ல வில்லா குதுமே.

(குறுந். 290.)

கற்பொரு சிறு நுரையெனற்பாலது எதுகை நோக்கிக் கல்பொரு சிறுநுரையென நின்றது. நுரை கல்லில் மோதுந் தோறும் சிறிது சிறிதாகக் கரைதலைப் போலத் தலைவர் பிரிவை எண்ணுந்தோறும் உயிர் தேய்ந்து ஒழியும் என்க. இவ்வுவமையின் சிறப்பினுல் இச் செய்யுளியற்றிய நல்லிசைப்புலவர் 'கல் பொரு சிறு நுரையார் என்னும் பெயர் பெற்ருர்'.

கல்லாடனார்:— கல்லாட மென்னும் ஊரினராதலின் இவர் இப்பெயர் பெற்ருர் போலும்; ''கல்லாடத்துக் கலந்தினிதருளி'' (திருவா. கீர்த்தி.) என்பதை நோக்குக. தொல்காப்பியத்திற்கு உரை செய்தவர் களுள் கல்லாடர் என்பவர் ஒருவர்; ''ஒல்காப் பெரு மைத் தொல்காப்பியத்திற், குரையிடையிட்ட விரகர் கல் லாடர்'' என்னும் ஆன்ருேர் வாக்காலுணர்க. அவர் வேறு, இவர் வேறு. இவருடைய பாடல்களில் பகைவருடைய நீர்நிலையைக் கெடுத்தல், கடிமரந் தடிதல், அவர் முரசைக் கைக்கொள்ளல், முதலிய தலைவர்களின் வீரச் செயல்களும், பகைவர் இறந்தபின் அவருடைய மனைவிமார் கைம்மைநோன்பு நோற்றிருத் தலும் கூறப்பெற்றுள்ளன. இவர் கிணைப்பொரு நனுகத் தம்மைக் காட்டி அவன் செயல்களை முறையே சொல்லிச் செல்லும் மறக்களவழி, ஏர்க்களவுருவக மென்னும் துறைகள் நயப்பாடுடையன. பகைவரைக் கொன்றவிடத்து அவருடைய பெண்டிர் தம் இளம் புதல்வரைப் பாதுகாக்கும் நிமித்தம் இறந்து படாமல்

இலைகளைத் தின்று உயிர் வாழ்தலைப் புலப்படுத்தி இவர் கூறியிருக்கும் செய்யுள் யாருடைய மனத்தையும் கனியச் செய்யும். பதினோராம் திருமுறையிலுள்ள திருக்கண்ணப்பதேவர் திருமறம் என்னும் நூலொன்று இவர் செய்ததாகக் கூறுவர்: பன்னிரு பாட்டியலில் இவர் செய்தனவாகச் சில சூத்திரங்கள் காணப்படு தலால் இவரால் செய்யப்பட்ட பாட்டியலொன்று உள்ளது என்று கொள்வாருமுளர். இலக்கணவுரைகளில் கல்லாடமாமூலர் என்று ஒரு தொடர்மொழி இருத் தலால் மாமூலர் என்னும் புலவரோடு இவர் நட் புடையவரென்று சொல்லலாம். எட்டுத்தொகையுள் இவர் இயற்றிய பாடல்கள்: 14. (அகநா. 7; புறநா. 5 குறுந். 2) திருவள்ளுவமாலையில் இவர் இயற்றிய செய்யுளொன்று உள்ளது. இவராற் பாடப்பெற்றோர் அம்பர் கிழானருவந்தை, பாண்டியன் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், புல்லி, பொறையாற்றுக் கிழானென்பார்.

வெள்ளி தோன்றப் புள்ளுக்குர லியம்பப்
புலரி விடியற் பகடுபல வாழ்த்தித்
தன்கடைத் தோன்றினு மிலனே பிறன்கடை
அகன்கட் டடாரிப் பாடுகேட் டருளி
வறனியா ணீங்கல் வேண்டி யென்னரை
நீனிறச் சிதாஅர் களைந்து
வெளிய துடீஇயென் பசிகளைந் தோனே
காவிரி யணையுந் தாழ்நீர்ப் படப்பை
நெல்விளை கழனி யம்பர் கிழவோன்
நல்லரு வந்தை வாழியர் புல்லிய
வேங்கட விறல்வரைப் பட்ட
ஓங்கல் வானத் துறையினும் பலவே.

(புறம். 385.)

புள்-கோழிச்சேவல். பறவைப்பொதுவுமாம். பாடு-ஓசை. வெளியது-வெள்ளாடையை. காவிரி என்றது இங்கே அரிசிலாற்றை. படப்பை-தோட்டம்.

கவிசாகரப் பெருந்தேவனார்:— இச்செய்யுள் திருவள்ளுவ மாலையில் உள்ளது.

பூவிற்குத் தாமரையே பொன்னுக்குச் சாம்புனதம்
ஆவிற் கருமுனியா யானைக் கமரும்பல்
தேவிற் றிருமா லெனச்சிறந்த தென்பவே
பாவிற்கு வள்ளுவர்வெண் பா.

(திருவள்ளுவ. 36.)

கவைமகனார்:— இரட்டைப் பிள்ளைகளைக் கவை மகவெனக் கூறி அவர்கள் நஞ்சுண்டதை உவமையாக எடுத்தாண்டமையின் இவர் இப்பெயர் பெற்றார். இவர் பாடியது குறுந்தொகைச் செய்யுள் ஒன்றே.

கொடுங்கான் முதலைக் கோள்வ லேற்றை
வழிவழக் கறுக்குங் கானலம் பெருந்துறை
இனமீ னிருங்கழி நீந்தி நீநின்
நயனுடை மையின் வருதி யிவடன்
மடனுடை மையி னுயங்கும் யானது
கவைமக நஞ்சுண் டாஅங்
கஞ்சுவல் பெருமவென் னெஞ்சத் தானே.

(குறுந். 324.)

கவைமகவின் செய்தியை உவமையாக எடுத்தாண்ட சிறப்பால் இப்பாட்டை இயற்றிய புலவர் கவைமகன் என்னும் பெயர் பெற்றார்.

கழாத்தலையார்:— கழாத்தலை - ஓரூர்; சேரமான் குடக்கோநெடுஞ்சேரலாதனும் சோழன் வேற்பஃற டக்கைப் பெருநற்கிள்ளியும் போர்ப்புறத்துப் பொருது வீழ்ந்து இறந்தது கண்டு இவர் மனம் வருந்திப் பாடினர்; இருங்கோவேளின் முன்னோரில் ஒருவன் இவரை இகழ்ந்தமையால் அவனது நகரமாகிய அரைய மென்பது அழிவுற்றதென்று கபிலர் பாடியிருத்தலின், இவர் மேம்பாடு விளங்குகின்றது; (புறநா. 202); அன்றி யும் கபிலருக்கு இவர் காலத்தால் முற்பட்டவரென்று தெரிகிறது. இவர் கூறும் உவமைகள் அழகு வாய்ந்

தவை. இவராற் பாடப்பட்டோர் மேற்கூறிய அரசரும் சேரமான் பெருஞ்சேரலாதனுமாவர். இவர் பாடியன வாகப் புறநானூற்றில் ஏழு செய்யுட்கள் உள்ளன.

மண்முழா மறப்பப் பண்யாழ் மறப்ப
இருங்கட் குழிசி கவிழ்ந்திழுது மறப்பச்
சுரும்பார் தேறல் சுற்ற மறப்ப
உழவர் ஓதை மறப்ப விழவும்
அகலு ளாங்கட் சீறூர் மறப்ப
உவவுத்தலை வந்த பெருநா ளமயத்
திருசுடர் தம்மு ணோக்கி யொருசுடர்
புன்கண் மாலை மலைமறைந் தாங்குத்
தன்போல் வேந்தன் முன்புகுறித் தெறிந்த
புறப்புண் ணாணி மறத்தகை மன்னன்
வாள்வடக் கிருந்தன னீங்கு
நாள்போற் கழியல ஞாயிற்றுப் பகலே.
(புறம். 65.)

<u>கழார்க்கீரனெயிற்றியார்:—</u> கீரனென்பவருக்கு உற வினர் போலும். இவர் பெண்பாற் புலவர். கழார் என்பது மாயூரத்திற்கு அருகிலிருக்கும் ஓர் ஊர். இப் புலவரே அதனை, 'வெல்போர்ச் சோழர் கழாஅர்' (நற். 281) என்பர். இவர் பனிக்காலத்தையே மிகுதி யாகச் சிறப்பித்துப் பாடியுள்ளார். கரும்பின் அரும் புக்குப் பசும்பாம்பின் சூல் உவமையாதலும், மழை மிகுதியினால் எள்ளுக்காய் உள்ளீடில்லாமற் போதலும் இவராற் காட்டப் பெற்றுள்ளன. வண்ணாத்தியின் செயலை இவர் அழகாகவும் சுருக்கமாகவும் உவமை யாகக் காட்டியிருப்பது பாராட்டற்குரியதாகும். எட்டுத்தொகையில் இவர் இயற்றிய செய்யுட்கள் பத்து. (நற். 2; அகநா. 5, குறுந். 3.)

நாணில மன்றவெங் கண்ணே நாணேர்பு
சினைப்பசும் பாம்பின் சூன்முதிர்ப் பன்ன
கனைத்த கரும்பின் கூம்புபொதி யவிழ
நுண்ணுறை யழிதுளி தலைஇய
தண்வரல் வாடையும் பிரிந்திசினோர்க் கழலே.
(குறுந். 35.)

**கழைதின் யானையார்:—** இவர் தைரியமும் கம்பீரமு முடையவர்; ''ஈயென விரத்த லிழிந்தன் றதனெதிர், ஈயே னென்ற லதனினு மிழிந்தன்று, கொள்ளெனக் கொடுத்த லுயர்ந்தன் றதனெதிர், கொள்ளே னென்ற லதனினு முயர்ந்தன்று''. என்பது இவருடைய வாக்கிற் சிறந்த பகுதி. இவராற் பாடப்பட்டோன் வல்விலோரி.

ஈயென விரத்தல் இழிந்தன் றதனெதிர்
ஈயே னென்றல் அதனினும் இழிந்தன்று
கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன் றதனெதிர்
கொள்ளேன் என்றல் அதனினு முயர்ந்தன்று
தெண்ணீர்ப் பரப்பி னிமிழ்திரைப் பெருங்கடல்
உண்ணு ராகுப நீர்வேட் டோரே
ஆவு மாவுஞ் சென்றுணக் கலங்கிச்
சேறொடு பட்ட சிறுமைத் தாயினும்
உண்ணீர் மருங்கின் அதர்பல வாகும்
புள்ளும் பொழுதும் பழித்தல் அல்லதை
உள்ளிச் சென்றோர்ப் பழியலர் அதனால்
புலவேன் வாழியர் ஓரி விசும்பிற்
கருவி வானம் போல
வரையாது சுரக்கும் வள்ளியோய் நின்னே.

(புறம். 204.)

**கள்ளம்பாளனார்:—** கருவூர்க் கண்ணம்பாளனார் என்றும் வழங்கப்படுவார். இவரது பாடல்கள் அகநானூற்றில் இரண்டும், நற்றிணையில் ஒன்றும் உள்ளன.

வண்ண நோக்கியு மென்மொழி கூறியு
நீயவண் வருதல் ஆற்று யெனத்தாந்
தொடங்கி யாள்வினைப் பிரிந்தோர் இன்றே
நெடுங்கயம் புரிந்த நீரி னீளிடைச்
செங்கான் மராஅத் தம்புடைப் பொருந்தி
வாங்குசிலை மறவர் வீங்குநிலை யஞ்சாது
கல்லளைச் செறிந்த வள்ளுகிர்ப் பிணவி
னின்புனிற் றிடும்பை தீரச் சினஞ்சிறந்து
செங்க ணிரும்புலிக் கோள்வ லேற்றை
உயர்மருப் பொருத்தற் புகர்முகம் பாயும்
அருஞ்சுரம் இறப்ப வென்ப
வருந்தேன் றோழி வாய்க்கவவர் செலவே. (நற். 148.)

கள்ளிக்குடிப்பூதம் புல்லனுர்:— கள்ளிக்குடி: ஓரூர். இவர் பாலைத்திணையைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். இவர் பாடியுள்ளது நற்றிணைச் செய்யுள் ஒன்றே.

மழைதொழில் உலந்து மாவிசும் புகந்தெனக்
கழைகவி னழிந்த கல்லதர்ச் சிறுநெறிப்
பரலவ லூறற் சிறுநீர் மருங்கிற்
பூநுதல் யானையொடு புலிபொரு துண்ணுஞ்
சுரனிறந் தரிய வென்னுர் உரனழிந்
துண்மலி நெஞ்சமொடு வண்மைவேண்டி
அரும்பொருட் ககன்ற காதலர் முயக்கெதிர்ந்து
திருந்திழைப் பணைத்தோள் பெறுநர் போலு
நீங்குக மாதோநின் னவல மோங்குமிசை
உயர்புகழ் நல்லில் ஒண்சுவர்ப் பொருந்தி
நயவரு குரல பல்லி
நள்ளென் யாமத் துள்ளுதொறும் படுமே.

(நற். 333.)

கள்ளில் ஆத்திரையனுர்:— கள்ளில் என்பது தொண்டை நாட்டிலுள்ளதும் ஸ்ரீஞானசம்பந்தர் தேவாரம் பெற்றதுமான ஒரு சிவஸ்தலம். ஆத்திரையன்—அத்திரி குலத்திற் பிறந்தவன்; இவரது இப்பெயர் குடிப்பெயர்; இதனுல் இவர் அந்தணராகக் கருதப்படுகின்ருர்; நன்றியறிவு முதலிய உத்தம குணத்தினர். இவராற் பாடப்பட்டோர்: வேங்கடமலைக்குரிய தலைவனுகிய ஆதனுங்கனும், ஆதியருமனும், முதியனும் ஆவர். இவர் செய்த பாடல்கள். 3; குறுந். 1; புறநா. 2.

கள்ளிற் கேளிர் ஆத்திரை உள்ளூர்ப்
பாளை தந்த பஞ்சியங் குறுங்காய்
ஓங்கிரும் பெண்ணை நுங்கொடு பெயரும்
ஆதி அருமன் மூதூர் அன்ன
அயவெள் ளாம்பல் அம்பகை நெறித்தழை
தித்திக் குறங்கின் ஊழ்மா றலைப்ப
வருமே சேயிழை அந்திற்
கொழுநற் காணிய வளியேன் யானே.

(குறுந். 293.)

கள்ளுண்பாராது செலவைக்கள்ளிலாதிரையெனக் கூறிய இதனல் இச்செய்யுளை இயற்றிய புலவர் 'கள்ளிலாத் திரையன்' என்னும் பெயர் பெற்றார் போலும்.

களத்தூர்க்கிழார்:— இவர் பாடிய செய்யுள் திருவள்ளுவமாலையில் உள்ளது.

ஒருவர் இருகுறளே முப்பாலி னோதுந்
தரும முதனன்குஞ் சாலும்—அருமறைகள்
ஐந்துஞ் சமயநூ லாறுநம் வள்ளுவனர்
புந்தி மொழிந்த பொருள்.

(திருவள்ளுவ. 44.)

காக்கைபாடினியார் நச்செள்ளையார்:— இவர் பெண்பாலார். ஆடுகோட்பாட்டுச் சேரலாதனென்னும் அரசன்மீது பதிற்றுப்பத்துள் ஆறும் பத்தைப் பாடி, அணிகலனுக்கென்று ஒன்பது துலாம் பொன்னும், நூறுயிரம் பொற்காசும் பரிசு பெற்றவர்; நச்செள்ளையாரென்பது இவரது இயற்பெயரென்பதும், குறுந்தொகையில், ''திண்டேர் நள்ளி கானத் தண்டர், பல்லா பயந்த நெய்யிற் றெண்டி, முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோ, றெழுகலத் தேந்தினுஞ் சிறிதென் றோழி, பெருந்தோ ணெகிழ்த்த செல்லற்கு, விருந்து வரக் கரைந்த காக்கையது பலியே'' என்னும் 210-ஆம் பாட்டில், காக்கை கரைந்தமையைப் பாராட்டிக் கூறிய அருமைபற்றிக் காக்கைபாடினியார் என்ற சிறப்புப் பெயரைப் பிற்காலத்தில் ஆன்றோரால் இவர் பெற்றனர் என்பதும் தெரிகின்றன; பாடினி—பாடுபவள். செள்ளையென்பது பெண்பாலார்க்கு இயற்பெயராகப் பண்டைக் காலத்து வழங்கிவந்தது போலும்; பதிற். 9-ஆம் பத்தின் பதிகத்தில் மையூர் கிழானுடைய மனைவியின் பெயர் அந்துவஞ் செள்ளை யென்று வந்திருத்தல் காண்க. மறக்குடி மங்கையின் இயல்பை விளக்கி இவர்பாடிய, ''படுமகன் கிடக்கை காணூஉ,

ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே'' (278) என்னும் புறப்பாட்டும், அப்பாடல் ஒக்கூர் மாசாத்தியார் என்னும் பெண்பாலாருடைய பாக்களின் வரிசையிற் சேர்க்கப் பெற்றிருத்தலும் இவர் பெண்பாலாராதலை வலியுறுத்தும்; 'ந' என்பது சிறப்புப் பொருளைத் தருவ தோர் இடைச்சொல். 'கலனணிக' என்று அரசன் பொற்காசு முதலியன கொடுத்தானென்றது ஈண்டு அறியற் பாலது. இப்பெயர் சில பிரதிகளில் காக்கை பாடினியார் நச்சென்னையாரெனவும் காணப்படு கின்றது. எட்டுத்தொகையில் இவர் செய்தனவாக 12 செய்யுட்கள் காணப்படுகின்றன. குறுந். 1; பதிற். 10; புறநா. 1.

திண்தேர் நள்ளி கானத் தண்டர்
பல்லா பயந்த நெய்யிற் றொண்டி
முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோ
றெழுகலத் தேந்தினுஞ் சிறிதென் றோழி
பெருந்தோ ணெகிழ்த்த செல்லற்கு
விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே.

(குறுந். 210.)

காசிபன்கீரனார்:— காசிப கோத்திரத்தைச் சார்ந்தவ ராதலின் இவர் அந்தணரென்று அறியப்படுகிறார். கீரன் என்பது இவரது இயற்பெயராகும். இவரது பாடல் முல்லைத்திணையைப் பற்றியது; கார்காலத்தில் பெய்த மழையை உரிய காலத்திற்கு முன்னமே பெய்த பொய் யான மழையென்று தலைவி கருதித் தேறுதல் கொள்ளும் பொருட்டுத் தோழி மருட்டி மழையை விளித்துக் கூறு வதாக இவர் பாடிய நற்றிணைப் பாடல் (248) பாராட் டத்தக்கது.

சிறுவீ முல்லைத் தேங்கமழ் பசுவீ
பொறிவரி நன்மான் புகர்முகங் கடுப்பத்
தண்புத லணிபெற மலர வண்பெயற்
கார்வரு பருவ மென்றனர் மன்னினிப்

பேரஞு ருள்ள நடுங்கல் காணிய
ரன்பின் மையிற் பண்பில பயிற்றும்
பொய்யிடி யதிர்குரல் வாய்செத் தாலு
மினமயின் மடக்கணம் போல
நினைமருள் வேனோ வாழியர் மழையே.

(நற். 248)

சிறுவீ—சிறிய பூக்கள். பசுவீ—பசுமையான புதுப் பூக்கள் பொறி—புள்ளி. புகர்—புள்ளி.

காட்டூர்கிழார் மகனார் கண்ணனார்:— காட்டூர் என்பது நன்னிலம் தாலுகாவில் உள்ளதோர் ஊர். இவர் பாடிய பாலைத்திணையைப் பற்றிய பாடல் (85) அகநானூற்றில் உள்ளது; தொண்டைமான் இளந்திரையனுக்குரிய வேங்கட மலையைப் புகழ்ந்துள்ளார். இவர் பெயர் ஊட்டூர் கிழார் மகன் அந்தணனாரென்றும் சில பிரதிகளில் காணப்படுகிறது.

நன்னுதல் பசப்பவும் பெருந்தோள் நெகிழவும்
உண்ணா வுயக்கமொ டுயிர்செலச் சாஅய்
இன்ன மாகவு மீங்குநத் துறந்தோர்
அறவ ரல்ல ரவரெனப் பலபுலந்து
ஆழல் வாழி தோழி சாரல்
ஈன்றுநா ளுலந்த மென்னடை மடப்பிடி
கன்றுபசி களைஇய பைங்கண் யானை
முற்றா மூங்கில் முளைதரு பூட்டும்
வென்வேற் றிரையன் வேங்கட நெடுவரை
நன்னாட் பூத்த நாகிள வேங்கை
நறுவீ யாடிய பொறிவரி மஞ்ஞை
நனைப்பசுங் குருந்தின் நாறுசுனை யிருந்து
துணைப்பயிர்ந் தகவுந் துணைதரு தண்கார்
வருதும் யாமெனத் தேற்றிய
பருவங் காணாது பாயின்றான் மழையே.

(அகம். 85.)

(குரை.) நாள் உலந்த-நாள் முடிந்த, ஆடிய-குடைந்த பயிர்த்தகவும்-அழைத்துக் கூப்பிடும்.

<u>காப்பியஞ் சேந்தனர்:–</u> இவர் காப்பியம் என்று வழங்கப்பெறும் காப்பியக்குடி என்னும் ஊரினரோ அன்றி ஏதேனும் காப்பியம் செய்த காரணம் பற்றி இவருக்கு இப்பெயர் ஏற்பட்டதோ என்பது தெரியவில்லை. இவரது இயற்பெயர் சேந்தனர். இவர் பாலைத் திணையைச் சிறப்பித்து நற்றிணை 246-ஆம் பாடலைப் பாடியுள்ளார்; தலைமகன் வருவதைத் தெரிவிக்கும் பல்லி சொல்லுதல் முதலிய நிமித்தங்களை ஒருங்கே விரிவாகக் கூறியுள்ளார்.

இடூஉ வூங்க ணினிய படூஉம்
நெடுஞ்சுவர்ப் பல்லியும் பாங்கிற் றேற்றும்
மனைமா நொச்சி மீமிசை மாச்சினை
வினைமா ணிருங்குயில் பயிற்றலும் பயிற்றும்
உரம்புரி யுள்ளமொடு சுரம்பல நீந்திச்
செய்பொருட் ககன்றன ராயினும் பொய்யலர்
வருவர் வாழி தோழி புறவிற்
பொன்வீக் கொன்றையொடு பிடவுத்தலை யவிழ
இன்னிசை வான மிரங்குமவர்
வருது மென்ற பருவமோ விதுவே.

(நற். 246.)

<u>காப்பியாற்றுக் காப்பியனர்:–</u> இவர் களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலென்னும் அரசன்மீது பதிற்றுப் பத்து நாலாம்பத்தைப் பாடி நாற்பது லக்ஷம் பொன்னும் அவன் ஆண்டதில் ஒரு பாதியும் பரிசிலாகப் பெற்றவர்.

களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரலோடு பகைத்து நின்றவர்கள் நன்னனும், நெடுமிடலஞ்சியும், நன்னன் நார்முடிச்சேரல் இளைஞனாய் இருந்த காலத்தில், அவன் நாட்டின் ஒரு பகுதியைக் கவர்ந்து கொண்டான். நார்முடிச்சேரல் அரசு கட்டில் ஏறியதும் நன்னனுடைய பூழிநாட்டின்மீது படையெடுத்துச் சென்று வாகைப் பெருந்துறை என்னுமிடத்தில் போர்செய்து நன்னனை வென்று இழந்த தன்நாட்டைப் பெற்றுக்கொண்டான். நார்முடிச்சேரல் பெற்ற வெற்றியைப் புலவர்.

'பொன்னம் கண்ணிப் பொலந்தேர் நன்னன்
சுடர்வீ வாகைக் கடிமுதல் தடிந்த
தார்மிகு மைந்தின் நார்முடிச் சேரல்''
எனப் புகழ்ந்துள்ளார். (பதிற்றுப் 40; 14-16)

காமக்கணிப் பசலையார்:— இவர் மதுரைக்காமக்கணி நப்பசலையார் என்றும் வழங்கப்படுவர். இவர் பெண்பாலார். இவர் பாலை, முல்லை வளங்களைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். பசலையென்பது இளமைக்கு ஒரு பெயர். ஆதலின் இவர் இளமையிலேயே பெரும் புலமை வாய்ந்தவராக இருந்தவரென்று கருத இடமுண்டு. இவர் நப்பசலையார் என்றும் வழங்கப்படுவர். இவரது பாடல் ஒன்று நற்றிணையில் உள்ளது.

தேம்படு சிலம்பிற் றெள்ளற றழீஇய
துறுக லயல தூமணல் அடைகரை
அலங்குசினை பொதுளிய நறுவடி மாஅத்துப்
பொதும்புதோ றல்கும் பூங்க ணிருங்குயில்
கவறுபெயர்த் தன்ன நில்லா வாழ்க்கையிட்
டகற லோம்புமி னறிவுடை யீரெனக்
கையறத் துறப்போர்க் கழறுவ போல
மெய்யுற விருந்து மேவர நுவல
வின்னு தாகிய காலைப் பொருள்வயிற்
பிரிதல் ஆடவர்க் கியல்பெனி
னரிதுமன் றம்ம வறத்தினும் பொருளே.
(நற். 243)

கார்மஞ்சேர் குளத்தார்:— துக்கக் கண்ணீர் வெம்மையுடையதாதல் பற்றி அதனை ''இமை தீய்ப்பன்ன கண்ணீர்'' என்றும், பொறுத்தற்கரியது அஃது என்பது தோன்ற, 'தாங்கி' என்றும் இவர் குறித்த நயம் இன்புறத் தக்கது. இவர் பாடியது குறுந்தொகைச் செய்யுள் ஒன்றே.

நோமென் னெஞ்சே நோமென் னெஞ்சே
இமைதீய்ப் பன்ன கண்ணீர் தாங்கி

அமைதற் கமைந்தநங் காதலர்
அமைவிலர் ஆகுதல் நோமென் னெஞ்சே.

(குறுந். 4.)

<u>காரிகிழார்:—</u> இவர் வேளாளர்; இவருக்கு இப்பெயர் ஊரான் வந்தது; காரி யென்பது தொண்டை நாட்டி லுள்ளதோரூர்; இப்பொழுது இராமகிரியென்று வழங்கப்படுகின்றது; ''பணியிய ரத்தை நின்குடையே முனிவர், முக்கட் செல்வர் நகர்வலஞ் செயற்கே'' என்று அரசனை நோக்கிக் கூறியதனால், இவர் பரம சிவனை வழிபடுபவரென்று தெரிகின்றது; இவருடைய செவியறிவுறூஉவை உற்று நோக்குகையில் வைதிக வொழுக்கிற் சிறந்தவராகக் கருதப்படுகின்றனர்; இவருடைய சிவநேயத்தையும் பெயரையும் பார்க்கும் பொழுது, பெரியபுராணத்துக் கூறப்படும் காரி நாயனார், திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தில் 52-ஆம் திருவிளையாடலில் வந்துள்ள காரியாரென்பவர்களுடைய ஞாபகம் வருகின்றது. இவராற் பாடப்பட்டோன் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி.

வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்
தெனாஅ துருகெழு குமரியின் றெற்கும்
குணாஅது கரைபொரு தொடுகடற் குணக்கும்
குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்
கீழது, முப்புண ரடுக்கிய முறைமுதற் கட்டின்
நீர்நிலை நிவப்பின் கீழு மேலவ
தானிலை யுலகத் தானு மானா
துருவும் புகழு மாகி விரிசீர்த்
தெரிகோன் ஞமன்ன் போல வொருதிறம்
பற்ற லிலியரோ நிற்றிறஞ் சிறக்க
செய்வினைக் கெதிர்ந்த தெவ்வர் தேஎத்துக்
கடற்படை குளிப்ப மண்டி யடர்புகர்ச்
சிறுகண் யானை செவ்விதி னேவிப்
பாசவற் படப்பை யாரெயில் பலதந்
தவ்வெயிற் கொண்ட செய்வுறு நன்கலம்
பரிசின் மாக்கட்கு வரிசையி னல்கிப்

பணியிய ரத்தைநின் குடையே முனிவர்
முக்கட் செல்வர் நகர்வலஞ் செயற்கே
இறைஞ்சுக பெருமநின் சென்னி சிறந்த
நான்மறை முனிவர் ஏந்துகை யெதிரே
வாடுக விறைவநின் கண்ணி யொன்னர்
நாடுசுடு கமழ்புகை யெறித்த லானே
செலியர் அத்தைநின் வெகுளி வாலிழை
மங்கையர் துனித்த வாண்முகத் தெதிரே
ஆங்க, வென்றி யெல்லாம் வென்றகத் தடக்கிய
தண்டா வீகைத் தகைமாண் குடுமி
தண்கதிர் மதியம் போலவுந் தெறுசுடர்
ஒண்கதிர் ஞாயிறு போலவும்
மன்னிய பெருமநீ நிலமிசை யானே.

(புறம். 6.)

காலெறி கடிகையார்:— தலைவியின் எயிற்று நீரின் இனிமைக்குக் கரும்பின் காலெறி கடிகையின் சுவையை உவமையாக்கிச் சிறப்பித்தலின் இவர் இங்ஙனம் குறிக்கப் பெற்றார். ''முடிகையினுற்றெடு மோட்டுழவர் முன்கைத் தருக்கைக் கரும்பின் கட்டிக், கடிகையினு லெறி காட்டுப் பள்ளி'' (தே. திருஞா. கீழைத் திருக் காட்டுப்பள்ளி) என்பதிலும் இது வந்துள்ளது. இவர் பாடியது குறுந்தொகைச் செய்யுள் ஒன்றே.

இருங்கண் ஞாலத் தீண்டுபயப் பெருவளம்
ஒருங்குட னியைவ தாயினுங் கரும்பின்
காலெறி கடிகைக் கண்ணயின் றன்ன
வாலெயி றூறிய வசையில் தீநீர்க்
கோலமை குறுந்தொடிக் குறுமகள் ஒழிய
ஆள்வினை மருங்கிற் பிரியார் நாளும்
உறன்முறை மரபிற் கூற்றத்
தறனில் கோணற் கறிந்திசி னோரே.

(குறுந். 267.)

காவட்டனார்:— இப்பெயர் கானட்டனுரெனவும் வழங்கும்; இவர் பாடலில் வந்துள்ள 'வசையு நிற்கு மிசையு நிற்கும்'' என்பது முதலிய அரிய வாக்கியங்கள்

அறிந்து கோடற்பாலன; இவர் செய்த பாடல்கள்-2 அகநா. 1; புறநா. 1, இவராற் பாடப்பட்டோன் அந்துவன் கீரன்.

பாறுபடப் பறைந்த பன்மாறு மருங்கின்
வேறுபடு குரல வெவ்வாய்க் கூகையொடு
பிணந்தின் குறுநரி நிணந்திகழ் பல்ல
பேஎய் மகளிர் பிணந்தழூஉப் பற்றி
விளரூன் றின்ற வெம்புலான் மெய்யர்
களரி மருங்கிற் கால்பெயர்த் தாடி
ஈம விளக்கின் வெருவரப் பேரும்
காடுமுன் னினரே நாடுகொண் டோரும்
நினக்கும் வருதல் வைகல் அற்றே
வசையு நிற்கும் இசையும் நிற்கும்
அதனால், வசைநீக்கி இசைவேண்டியும்
நசைவேண்டாது நன்றுமொழிந்தும்
நிலவுக்கோட்டுப் பலகளிற்றொடு
பொலம்படைய மாமயங்கிட
இழைகிளர் நெடுந்தேர் இரவலர்க் கருகாது
கொள்ளென விடுவை யாயின் வெள்ளென
ஆண்டுநீ பெயர்ந்த பின்னும்
ஈண்டுநீடு விளங்குநீ எய்திய புகழே.

(புறம். 359.)

(குரை.) 1. பாறுபட—கெட

காவற் பெண்டு:— இவர் சோழன் போர்வைக்கோப் பெருநற்கிள்ளியின் செவிலித்தாய் என்று தெரிகிறது. காவற்பெண்டு-செவிலித்தாய். இவர் பெயர் காதற் பெண்டு எனவுங் காணப்படுகின்றது; தம் மகன் போர் செய்தற்குச் சென்றானென்னும் பகுதி இவர் வீரக்குடியிற் பிறந்தவரென்பதைப் புலப்படுத்தும். இவர் பாடியது புறநானூற்றுச் செய்யுள் ஒன்றே.

சிற்றி னற்றூண் பற்றி நின்மகன்
யாண்டுள னோவென வினவுதி யென்மகன்
யாண்டுள னாயினு மறியே னோரும்

புலிசேர்ந்து போகிய கல்லளை போல
ஈன்ற வயிறோ விதுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே.

(புறம். 86.)

காவற்பெண்டு—செவிலித்தாய்.

அடி—5-6. நற்றாய்க்கும் தனக்கும் வேறுபாடின்மையின் ஈன்ற வயிறோ இது என்று இங்ஙனம் கூறினாள். போர்க்களத்தான்-போர்க்களத்தின்கண்; உருபுமயக்கம்.

காவன் முல்லைப்பூதனார்:— இவரது இயற்பெயர் பூதனார். காவன் முல்லை என்பது புறத்திணைத் துறைகளுள் ஒன்று. இவர் அத்துறையைப் பாடும் வல்லமையுடையார் போலும். பாலைத்திணையை மிகுதியாகக் கூறுகிறார். நல்கூர்ந்தோரின் நிலையும், மிகுபொருள் விரும்புவார்க்கு அருளில்லாமற் போதலும் இவராற் கூறப்படுகின்றன. (அகநா. 151) பல்லி சோதிடங் கூறும் என்று கொண்டு எட்டுத் தொகையில், 'கணிவாய்ப் பல்லி' என்கிறார். காட்டில் உதிரும் நெல்லிக்காயை வட்டக் கழங்காகக் கொண்டு செம்முக மந்தி ஆடுமென்றும் அதிரற்பூ வெருகின் எயிறு போலுமென்றும் கூறியுள்ளார். இவர் பாடிய செய்யுட்கள் 8. (நற். 1; குறுந். 2; அகநா. 5. (பி.ம்—காவன் முல்லை மழுக்கரத்தனார்)

அம்ம வாழி தோழி காதலர்
நூலறு முத்திற் றண்சிதர் உறைப்பத்
தாளித் தண்பவர் நாளா மேயும்
பனிபடு நாளே பிரிந்தனர்
பிரியு நாளும் பலவா குவவே.

(குறுந். 104.)

காவிரிப் பூம்பட்டினத்துக் கந்தரத்தனார்:— கந்த ரத்தனார் என்ற பெயர் வேறு புலவர்க்கும் உண்டு. உரோடகத்துக் கந்தரத்தனார் என்ற புலவரின் பெயர் முன்வந்துள்ளது. அடையின்றிக் கந்தரத்தனார் என்ற பெயருடைய புலவர் செய்தனவாக நற்றிணையில் மூன்று

பாடல்கள் (116, 146, 238) காணப்படுகின்றன. பலாமரத்தில் உள்ள பழங்களைக் குரங்குகள் கவரா வண்ணம் வலைகளை மாட்டும் வழக்கம் இவர் பாடலால் தெரிகிறது. இவர் இயற்றிய செய்யுட்கள் நற். 3; குறுந். 1.

> கலைகை தொட்ட கமழ்சுளைப் பெரும்பழம்
> காவன் மறந்த கானவன் ஞாங்கர்க்
> கடியுடை மரந்தொறும் படுவலை மாட்டும்
> குன்ற நாட தகுமோ பைஞ்சுனைக்
> குவளைத் தண்டழை இவளீண்டு வருந்த
> நயந்தோர் புன்கண் டீர்க்கும்
> பயந்தலைப் படாஅப் பண்பினை யெனினே.
>
> (குறுந். 342.)

காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்:— இப் பெயர் காரிக்கண்ணனர் எனவும் வழங்கும். இவருக்கு இப்பெயர் உறுப்பான் வந்தது போலும்; காரி - கரிக் குருவி; இவர் வணிகர்; இதனை, ''ஊரும் பேரும்'' (தொல். மரபு. சூ. 74, பேர்) என்பதன் விசேடவுரை யால் உணர்க; இவர் வாக்கிற் காவிரி கடலொடு கலக்கும் சங்கமுகத்துறை கூறப்பெற்றுள்ளது; (அகநா. (123.). பாண்டியனுக்குத் திருமாலையும் அப் பாண்டியனும் சோழனும் ஒருங்கிருந்தபொழுது அவர் களுக்குத் கண்ணபிரான் பலதேவரிருவரையும் உவமை கூறியிருத்தலின், இவர் திருமாலடியவராகக் கருதப் படுகின்றனர். ஒற்றுமையுடன் வாழ வேண்டுமென்று மேற்கூறிய அரசருக்கு இவர் கூறும் பகுதியும் பிறவும் இன்பத்தைத் தருவன. அயனே திருவள்ளுவராக வந்து திருக்குறளைத் தந்தார் என்றதனல் அந்நூலின்பால் இவருக்குள்ள நன்மதிப்பு வெளியாகும். இவராற் பாடப்பெற்றோர்: சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவன், பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன், பாண்டியன் வெள்ளியம் பலத்துத் துஞ்சிய பெருவழுதி, பிட்டங் கொற்றனென்

பார். இவரியற்றிய பாடல்கள் 9. (அகநா. 2; குறுந் 1; புறநா. 5. திருவள்ளுவ. 1;)

வல்லா ராயினும் வல்லுந ராயினும்
புகழ்தல் உற்றோர்க்கு மாயோன் அன்ன
உரைசால் சிறப்பிற் புகழ்சான் மாற
நின்னொன்று கூறுவ துடையே னென்னெனின்
நீயே, பிறர்நாடு கொள்ளுங் காலை யவர்நாட்
டிறங்குகதிர்க் கழனிநின் னிளையருங் கவர்க
நனந்தலைப் பேரூர் எரியு நைக்க
மின்னுநிமிர்ந் தன்னநின் னொளிறிலங்கு நெடுவேல்
ஒன்னார்ச் செகுப்பினுஞ் செகுக்க என்னதூஉம்
கடிமரந் தடித லோம்புநின்
நெடுநல் யானைக் கந்தாற் றாவே.

(புறம். 57.)

காவிரிப் பூம்பட்டினத்துச் செங்கண்ணனார்:— இவருக்கு இப்பெயர் ஊராலும், உறுப்பாலும் வந்தது. இவர் அகநானூற்றில் இரண்டும் (103, 271) நற்றிணையில் ஒன்று (389) மாக முறையே பாலைத்திணை குறித்தும், குறிஞ்சித்திணை குறித்தும் மூன்று பாடல்கள் பாடியுள் ளார். இவர் அவியனென்னும் ஒருபகாரியையும் அவனது மலையையும் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

பொறிவரிப் புறவின் செங்காற் சேவல்
சிறுபுன் பெடையொடு சேட்புலம் போகி
அரிமண லியவிற் பரல்தேர்ந் துண்டு
வரிமரல் வாடிய வானீங்கு நனந்தலைக்
குறும்பொறை மருங்கிற் கோட்சுரம் நீந்தி
நெடுஞ்சேண் வந்த நீர்நசை வம்பலர்
செல்லுயிர் நிறுத்த சுவைக்காய் நெல்லிப்
பல்கா யஞ்சினை யகவு மத்தம்
சென்றுநீ ரவணி ராகி நின்றுதரு
நிலையரும் பொருட்பிணி நினைந்தனி ரெனினே
வல்வ தாகநுஞ் செய்வினை யிவட்கே
களிமலி கள்ளி னற்றே ரவியன்
ஆடிய விளமழை சூடித் தோன்றும்
பழந்தூங்கு விடரகத் தெழுந்த காம்பின்

கண்ணிடை புரையு நெடுமென் பணைத்தோட்
டிருந்துகோ லாய்தொடி ஞெகிழின்
மருந்து முண்டோ பிரிந்துறை நாட்டே.

(அகம். 271.)

காவிரிப் பூம்பட்டினத்துச் சேந்தங்கண்ணனார்:— இவரூர் காவிரிப் பூம்பட்டினமாகும். இவர் இளவாகையைக் 'குமரி வாகை' என்கிறார். இவர் இயற்றியது குறுந் தொகைச்செய்யுள் ஒன்றே.

மல்குசுனை புலர்ந்த நல்கூர் சுரமுதற்
குமரி வாகைக் கோலுடை நறுவீ
மடமாத் தோகைக் குடுமியிற் றோன்றும்
கான நீளிடைத் தானு நம்மொ
டொன்றுமணஞ் செய்தனள் இவளெனின்
நன்றே நெஞ்ச நயந்தநின் றுணிவே.

(குறுந். 347.)

மல்குசுனை—முன்பு நீர்மல்கிய சுனை. குமரி என்றது இளமை குறித்து நின்றது.

காவிரிப்பூம் பட்டினத்துப் பொன்வாணிகனார் மகனார் நப்பூதனார்:— இவர், முல்லைப்பாட்டை இயற்றிய ஆசிரியர்; இவருடைய இயற்பெயர் பூதனாரென்பது. 'ந' சிறப்பைப் புலப்படுத்துவது. நற்றிணை, 29-ஆம் செய்யுளை இயற்றிய பூதனார் இவரே போலும். இவருடைய ஊர் காவிரிப்பூம் பட்டினமென்றும் இவருடைய தந்தையார் பெயர் பொன் வாணிகனாரென்றும் வணிக குலத்தினரென்றும் பெயருக்கு முன்னுள்ள அடை மொழியால் தெரிய வருகின்றது. எட்டுத்தொகை முதலியவற்றில் இவரியற்றியதாக ஒன்றும் காணப்பட வில்லை, காவிரிப்பூம்பட்டினத்திற் சதுக்கப்பூதம் முதலிய பூதங்கள் மிக்க சிறப்புடையனவாகவும் பலரால் வழிபடத்தக்கனவாகவும் இருந்து வந்தமையின் அவற் றுள் ஒன்றை நினைந்து பூதனென்னும் பெயர் இவருக்கு இடப்பட்டது போலும்.

பாசறையைப்பற்றி விரிவாக முல்லைப் பாட்டிற் கூறியிருத்தலால் இவர் நல்ல வீரம் பொருந்திய அரசர் களோடு பழகியவரென்றும் தோற்றுகின்றது.

கிடங்கிற் காவிதிக் கீரங்கண்ணனூர்:— கிடங்கி லென்னும் ஊர் இப்பொழுது திண்டிவனத்தைச் சார்ந்துள்ளது. காவிதிப்பட்டம்: ''பாண்டி நாட்டுக் காவிதிப் பட்டம் எய்தினோரும்.......முதலியோருமாய் முடியுடை வேந்தர்க்கு மகட் கொடைக்கு உரிய வேளாளராம்'' என்பதனுல் உயர்ந்த வேளாளர் பெறுவதாகிய இப்பட்டத்தை இவர் பெற்றிருந்தனர் என்பது தெரிகிறது. இவர் நெய்தல் திணையின் வளத்தைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். இவர் பாடிய தாக நற்றிணையில் 218-ஆம் பாடல் கிடைத்துள்ளது.

ஞாயிறு ஞான்று கதிர்மழுங் கின்றே
யெல்லியும், பூவீ கொடியிற் புலம்படைந் தன்றே
வாவலும் வயின்றொறும் பறக்குஞ் சேவலு
நகைவாய்க் கொளீஇ நகுதொறும் விளிக்கு
மாயாக் காதலொ டதர்ப்படத் தெளித்தோர்
கூறிய பருவங் கழிந்தன்று பாரிய
பராரை வேம்பின் படுசினை யிருந்த
குராஅற் கூகையு மிராஅ விசைக்கு
மானு நோயட வருந்தி யின்னுந்
தமியேன் கேட்குவென் கொல்லோ
பரியரைப் பெண்ணை யன்றிற் குரலே.

(நற். 218.)

ஞான்று-கீழிறங்கி. சேவல்-இங்கு இரவில் இயங்கும் ஆந்தையின் சேவல். குரால்-கோட்டான். பராரை-பருத்த அடி. படுசினை-பெரிய கிளை. இராஅ- இரவு.

கிடங்கிற் காவிதிப் பெருங்கொற்றனூர்:— இவரது ஊர் கிடங்கில். காவிதிப் பட்டம் பெற்றவர்; கொற்றனூர் என்பது இவரது இயற்பெயர்; கொற்றனூர்

என்று பலரிருத்தலின் அவர்களிலிருந்து வேறுபடுத்தவே 'பெரும்' என்னும் அடைமொழி கொடுக்கப்பட்டது போலும். முல்லைத் திணையைச் சிறப்பித்து நற்றிணை 364 ஆம் பாடலைப் பாடியுள்ளார்.

சொல்லிய பருவம் கழிந்தன் றெல்லையும்
மயங்கிரு ணடுநாண் மங்குலோ டொன்றி
யார்கலி வான நீர்பொதிந் தியங்கப்
பனியின் வாடையொடு முனிவுவந் திறுப்ப
இன்ன சின்னுள் கழியிற் பன்னுள்
வாழலேன் வாழி தோழி யூழின்
உருமிசை அறியாச் சிறுசெந் நாவின்
ஈர்மணி இன்குரல் ஊர்நனி இயம்பப்
பல்லா தந்த கல்லாக் கோவலர்
கொன்றையந் தீங்குழல் மன்றுதோ றியம்ப
உயிர்செலத் துனைதரு மாலை
செயிர்தீர் மாரியொ டொருங்குதலை வரினே.
(நற். 364.)

எல்லை-பகல். மங்குல்-காரிருள். இறுப்ப-வந்து தங்க.

கிடங்கிற் குலபதி நக்கண்ணனர்:— கிடங்கில் என்பது ஓர் ஊர். இவ்வூரிற் புலவர் பலர் சங்க காலத்தே இருந்தனர். இவரது இயற்பெயர் கண்ணன். 'ந' என்பது சிறப்புப் பற்றி வந்தது. ஆயிரம் மாணவர்களை ஆதரித்துக் கல்வி புகட்டுவோர் குலபதியாவர். இப் பட்டத்தை உடையவராதல் பற்றி இவர் சிறந்த ஆசிரியர் என்று தெரிகிறது. 'சான்றோர் புகழு முன்னர் நாணுப; பழியாங்கு ஒல்ப; அதனல் தோழி, மடவை நீ யெனக் கடவுபு துனியல்' என்று தலைவி கூறுவதாக அமைந்த இந்தக் குறுந்தொகைச் செய்யுள் ஒன்றே இவரியற்றியதாகத் தெரிகிறது.

நெடிய திரண்ட தோள்வளை ஞெகிழ்த்த
கொடிய ஞகிய குன்றுகெழு நாடன்
வருவதோர் காலை யின்முகந் திரியாது

கடவுட் கற்பின் அவனெதிர் பேணி
மடவை மன்ற நீயெனக் கடவுபு
துனியல் வாழி தோழி சான்றோர்
புகழு முன்னர் நாணுப
பழியாங் கொல்பவோ காணுங் காலே.
(குறுந். 252.)

கிள்ளி மங்கலங் கிழார்:— இவர் பெயர் கிள்ளி கிழார் என்றும் சில பிரதிகளிற் காணப்படுகிறது. இவர் வேளாண் மரபினர். கிள்ளி மங்கலங் கிழார் மகனார் சோகோவனார் என்பவர் ஒருவர் (நற். 365) -ஆம் செய்யுளைப் பாடியிருக்கிறார். அவரை இவருடைய மகனார் என்று கொள்ளக்கூடும். தலைவரைப் பலகாற் காண்டலால் வளருந் தன்மையையுடைய காமத்துக்குத்தாய் முகம் நோக்கி வளருந்தன்மையையுடைய ஆமையின் பார்ப்பை உவமை கூறுகின்றார் (குறுந். 152); திருமணப் பல கடம்பூண்ட பெருமுது பெண்டிர் தலைவனைக் குறை கூறலாகாது (குறுந். 181) என்பதனை இவர் தலைவியின் கூற்றாக அமைத்துள்ளார். கிள்ளிமங்கலம் என்ற ஊர் கிளிமங்கலம் என்றும் வழங்கப்பெறும். குறுந்தொகைச் செய்யுட்கள் நான்கே இவர் இயற்றியனவாம்.

காந்தள் வேலி ஓங்குமலை நன்னாட்டுச்
செல்ப வென்பவோ கல்வரை மார்பர்
சிலம்பிற் சேம்பி னலங்கல் வள்ளிலை
பெருங்களிற்றுச் செவியின் மானத் தைஇத்
தண்வரல் வாடை தூக்கும்
கடும்பனி அச்சிர நடுங்கனார் உறவே.
(குறுந். 76.)

கடும்பனி-புதுப்பனியுமாம். அச்சிரம்-முன்பனி.

கிள்ளிமங்கலங் கிழார் மகனார் சோகோவனார்:— கிள்ளி மங்கலம் என்ற ஊர் பாண்டிய நாட்டைச் சார்ந்தது. இவர் வேளாண் மரபைச் சேர்ந்தவர். இவரது தந்தை

கிள்ளி மங்கலங்கிழார். கோவன் என்பது இயற்பெயர். 'சோ' என்பது அடைமொழியாக இருக்கலாம் என்று புலவர்கள் கருதுகின்ருர்கள். இவர் குறிஞ்சித்திணை யைச் சிறப்பித்து நற்றிணை 365 ஆம் பாடலைப் பாடி யுள்ளார். கிழிமங்கலம் என்ற பாட பேதம் உண்டு போலும்.

அருங்கடி அன்னை காவ னீவிப்
பெருங்கடை யிறந்து மன்றம் போகிப்
பகலே பலருங் காண வாய்விட்
டகல்வயற் படப்பை அவனூர் வினவிச்
சென்மோ வாழி தோழி பன்னுட்
கருவி வானம் பெய்யா தாயினும்
அருவி ஆர்க்கும் அயந்திகழ் சிலம்பின்
வான்ருேய் மாமலை நாடனைச்
சான்ருேய் அல்லை என்றனம் வரற்கே.

(நற். 365.)

கடி-காவல். நீவி-கடந்து. படப்பை- கொல்லை. அயம்-நீர்வளம்.

கீரங்கொற்றனர்: மதுரைக்கணக்காயனர் மகனர் நக்கீரனுடைய புதல்வர். இவரைப்பற்றி அறிய ஆதாரம் கிடைக்கவில்லை. இறையனர் அகப்பொருளில் இவர் பெயர் வந்துள்ளது. கீரவி கொற்றனர் என்ற பாடபேதம் உண்டு.

கீரந்தையார்:— பரிபாடல் 2-ஆம் பாடலாகிய திருமால் வாழ்த்து இவரால் இயற்றப் பெற்றது; இதில் ஐம்பூத ஊழிகள், நெய்தல் முதலிய பேரெண்கள், திருமாலின் வியாபகம், அவர் பல தேவராகவும், கண்ணபிரானுகவும் பூவராக மூர்த்தியாகவும் ஆனமை, தேவர்களுக்கு அவர் அமுதளித்தது, வேள்வியில் அவருக் குள்ள சம்பந்தம் ஆகிய இவைகளும் பிறவும் கூறப் பெற்றுள்ளன. அவருடைய திருமேனி முதலியவற் றிற்கு இவ்வாசிரியர் கூறியவுவமை, அவரது திரு

மார்பைப் பாராட்டியிருத்தல் முதலியவைகள் வியக்கற் பாலன. திருவள்ளுவ மாலையிலுள்ள ''தப்பா முதற் பாவால்'' என்னுஞ் செய்யுளை இயற்றியவரும் இவரே என்பர். சிலப்பதிகாரம் 23-ஆம் காதை, 42-ஆம் அடியில் கீரந்தையென்ற பெயரொன்று வந்துள்ளது. அப்பெயரை யுடையாரும் இவரும் ஒருவரோ வேறோ தெரியவில்லை.

<u>குட்டுவன் கண்ணனார்:–</u> குட்டுவன்–குட்டநாட்டில் உள்ளவன். கண்ணன் என்பது இவரது இயற்பெயர். சேரருக்கே குட்டுவன் என்ற பெயருண்டு. ஆதலால் இவர் சேரர் மரபினரோ என்று கருதுவாருமுளர். தலைவன் நாய்களோடு வருதலும், யானை மூங்கிலை விரும்பியுண்ணுமென்பதும் இவர் பாடலிற் காணப்படு கின்றன. இவர் இயற்றியது குறுந்தொகைச் செய்யுள் ஒன்றே.

கல்லென் கானத்துக் கடமா வாட்டி
எல்லும் எல்லின்று ஞமலியும் இளைத்தன
செல்ல லைஇய வுதுவெம் மூரே
ஓங்குவரை அடுக்கத்துத் தீந்தேன் கிழித்த
குவையுடைப் பசுங்கழை தின்ற கயவாய்ப்
பேதை யானை சுவைத்த
கூழை மூங்கிற் குவட்டிடை அதுவே.
(குறுந். 179.)

கல்லென்றல்: சிள்வீடு, விலங்கு முதலியவற்றால் உண்டாகும் ஆரவாரம். கடமா-ஒருவகை விலங்கு.

<u>குட்டுவன் கீரனார்:–</u> குட்டுவன்–குட்ட நாட்டில் உள்ளவன். கீரனாரென்பது இவரது இயற்பெயர். கீரனாரென்னும் பெயருள்ள புலவர் சிலர் இருத்தலின் இவர் பெயர்க்குத் தேயப் பெயரை அடைமொழியாக் கினர் போலும்; சிறந்த உபகாரியாகிய ஆய் அண்டிரன் தன் உரிமை மகளிரோடு தேவலோகத்தை அடைந் தமையால் புலவர்கள் மிக்க பசியையுடையவர்களாகி

அயல்நாடு செல்லுவதாக வருந்திக் கூறியிருத்தலின் இவர் அவனிறந்த பின்பும் இருந்தவரென்று தெரிகின்றது. இவர் இயற்றியது புறநானூற்றுச் செய்யுள் ஒன்றே.

ஆடுநடைப் புரவியுங் களிறும் தேரும்
வாடா யாணர் நாடும் ஊரும்
பாடுநர்க் கருகா வாஅ யண்டிரன்
கோடேந் தல்குற் குறுந்தொடி மகளிரொடு
காலன் என்னும் கண்ணிலி உய்ப்ப
மேலோர் உலகம் எய்தினன் எனுஅப்
பொத்த வறையுட் போழ்வாய்க் கூகை
சுட்டுக் குவியெனச் செத்தோர்ப் பயிரும்
கள்ளியம் பறந்தலை ஒருசிறை அல்கி
ஒள்ளெரி நைப்ப உடம்பு மாய்ந்தது
புல்லென் கண்ணர் புரவலர்க் காணாது
கல்லென் சுற்றமொடு கையழிந்து புலவர்
வாடிய பசிய ராகிப்பிறர்
நாடுபடு செலவினர் ஆயினர் இனியே.

(புறம். 240.)

குடபுலவியனார்:— போர்க்களத்தின் இயல்பைப் பாடுதலில் இவர் ஆற்றலுடையவர்; சினவாதபடி அரசனுக்கு இவர் தருமங்களைக் கூறும் இயல்பு யாரும் கற்றுக் கோடற்குரியதே. ‘‘உண்டி கொடுத்தோருயிர் கொடுத் தோரே’’ என்பது இவர் வாக்கு. இவராற் பாடப்பட்டோன் பாண்டியன் நெடுஞ்செழியன்; இவர்காலத்துப் புலவர், அவனைப் பாடிய கல்லாடர் முதலியோர். இவர் பாடியன புறநானூற்றுச் செய்யுட்கள் இரண்டேயாம்.

இமிழ்கடல் வளைஇய வீண்டகன் கிடக்கைத்
தமிழ்தலை மயங்கிய தலையாலங் கானத்து
மன்னுயிர்ப் பன்மையும் கூற்றத் தொருமையும்
நின்னொடு தூக்கிய வென்வேற் செழிய
இரும்புலி வேட்டுவன் பொறியறிந்து மாட்டிய
பெருங்கல் லடாரும் போன்மென விரும்பி
முயங்கினே னல்லனே யானே மயங்கிக்

குன்றத் திறுத்த குரீஇயினம் போல
அம்புசென் றிறுத்த வரும்புண் யானைத்
தூம்புடைத் தடக்கை வாயொடு துமிந்து
நாஞ்சில் ஒப்ப நிலமிசைப் புரள
எறிந்துகளம் படுத்த வேந்துவாள் வலத்தர்
எந்தையொடு கிடந்தோரெம் புன்றலைப் புதல்வர்
இன்ன விறலு முளகொ னமக்கென
மூதிற் பெண்டிர் கசிந்தழ நாணிக்
கூற்றுக்கண் ணோடிய வெருவரு பறந்தலை
எழுவர் நல்வலங் கடந்தோய்நின்
கழூஉவிளங் காரங் கவைஇய மார்பே.

(புறம். 19.)

குடவாயிற் கீரத்தனார்:— குடவாயிலென்பது சோழ நாட்டிலுள்ளதும் சோழர்களின் தலைநகராகவிருந்ததும் தேவாரம் பெற்ற சிவஸ்தலமுமான ஒரூர்; ''தண் குட வாயிலன்னோள்'', ''கொற்றச் சோழர் குடந்தை வைத்த, நாடுதரு நிதியினுஞ் செறிய, வருங்கடிப் படுக்குவள்'' (அகநா. 44, 60.), ''தேர்வண் சோழர் குடந்தை வாயில்'' (நற். 379) என்பவற்றால் அவ்வூரின் பெருமையை இவர் புலப்படுத்தியிருக்கின்றனர்; புலவர்கள் தம்மூர்ப் பெயர் முதலியவற்றை ஒரு வகையாகத் தம்முடைய பாடல்களில் தெரிவித்தல் மரபு. ஒல்லையூர் கிழான்மகன் பெருஞ் சாத்தன் இறந்த பின்பு அவனுடைய வண்மையைப் பாராட்டியும் இரவலர் வருந்துதலை ஒருவகையாகப் புலப்படுத்தியும் இவர் பாடிய செய்யுள் படிப்பவர் உள்ளத்தை உருகச் செய்யும்; இன்னும் சேரனுடைய தொண்டி, பாண்டியரின் கூடல்நகர், கொற்கைத்துறை, சோழரின் உறையூர் என்பவை இவர் பாடலிற் பாராட்டப் பெற்றிருத்தலின் மேற்கூறிய பெருஞ்சாத்தனையன்றிச் சேரர் முதலிய முடிமன்னர் மூவராலும் நன்னனாலும் இவர் ஆதரிக்கப் பெற்றவரென்று தெரிகின்றது; பெரும்பாலும் இவர் பாடல்களில் வந்துள்ளது பாலைத்திணை; இவரியற்றிய பாடல்கள்-18; அகநா. 10; குறுந். 3; நற். 4; புறநா. 1; (பி.ம். குடவாயில் நல்லாதனார்)

இளையோர் சூடார் வளையோர் கொய்யார்
நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்
பாணன் சூடான் பாடினி அணியாள்
ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்த
வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை
முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே.

(புறம். 242.)

ஒல்லையூர்: இது கோனாட்டிலுள்ள ஒலிய மங்கலம் என்னும் ஊர்.

சோழநாட்டில் உள்ள ஒலிய மங்கலம் என்னும் ஊர் இதுவென்று தெரிகிறது; திருமெய்யத்துக்குப் பக்கத்தில் இப்பெயரோடு ஊர் உள்ளது.

குடவாயிற் கீரனக்கனார்:— யானை ஓமை மரத்தின் தோலையுண்ணுமென்பதும், பாலைநிலத்திலுள்ள புறு தன் பெடையைப் பயிர்வதும் இவர் பாவிற் காணப் படும் செய்திகள். குறுந்தொகைச் செய்யுள் ஒன்றே இவர் பாடியதாகும்.

கான யானை தோனயந் துண்ட
பொரிதா ளோமை வளிபொரு நெடுஞ்சினை
அலங்கல் உலவை ஏறி ஒய்யெனப்
புலம்புதரு குரல புறவுப்பெடை பயிரும்
அத்த நண்ணிய அங்குடிச் சீறூர்ச்
சேந்தனர் கொல்லோ தாமே யாந்தமக்
கொல்லே மென்ற தப்பற்
சொல்லா தகறல் வல்லு வோரே.

(குறுந். 79.)

குண்டுகட் பாலியாதன்:— குண்டுகண்—ஆழமான கண்; பாலி—ஓரூர்; இவருக்கு இப்பெயர் சினையாலும் இடத்தாலும் வந்தது; பகைவர் தருந் திறைப் பொருள்களை அரசர் இரவலர்க்குக் கொடுத்து விடும் வழக்கம் பண்டைக் காலத்தில் உண்டென்பது இவர் பாடலாலும் தெரியவருகின்றது; சேரமான் சிக்கற்பள்ளித் துஞ்சிய

செல்வக்கடுங்கோ வாழியாதனுடைய வண்மையைப் பாராட்டி, இவர் கூறியிருக்கும் அருமைச் செய்யுள் (387) மிகப் பாராட்டற்பாலது; இவர் பாடிய பாடல்கள் 2; நற். 1; புறநா. 1;

இவர் குன்றுகேட் பாலீகனுர் எனவும் வழங்கப் படுவர்.

வள்ளுகிர வயலாமை
வெள்ளகடு கண்டன்ன
வீங்குவிசிப் புதுப்போர்வைத்
தெண்கண் மாக்கிணை யியக்கி யென்றும்
மாறுகொண்டோர் மதிலிடறி
நீருடிய நறுங்கவுள
பூம்பொறிப் பணையெருத்தின
வேறுவேறு பரந்தியங்கி
வேந்துடைமிளை யயல்பரக்கும்
ஏந்துகோட் டிரும்பிணர்த்தடக்கைத்
திருந்துதொழிற் பலபகடு
பகைப்புல மன்னர் பணிதிறை தந்துநின்
நகைப்புல வாணர் நல்குர வகற்றி
மிகப்பொலியர்தன் சேவடியத்தையென்
றியானிசைப்பி னனிநன்றெனுப்
பலபிற வாழ்த்த விருந்தோர் என்கோ
மருவவினக ரகன் . . . . . .
திருந்துகழற் சேவடி குறுகல் வேண்டி
வென்றிரங்கும் விறன்முரசினேன்
என்சிறுமையி னிழித்துநோக்கான்
தன்பெருமையின் றகவுநோக்கிக்
குன்றுறழ்ந்த களிறென்கோ
கொய்யுளைய மாவென்கோ
மன்றுநிறையு நிரையென்கோ
மனைக்களமரொடு களமென்கோ
ஆங்கவை, கனவென மருள வல்லே நனவின்
நல்கி யோனே நசைசா ருேன்றல்
ஊழி வாழி பூழியர் பெருமகன்
பிணர்மருப் பியானைச் செருமிகு நோன்றுட்

செல்வக் கடுங்கோ வாழி யாதன்
ஒன்னாத் தெவ்வர் உயர்குடை பணித்திவன்
விடுவர் மாதோ நெடிதே நி. . . . . .
புல்லிலை வஞ்சிப் புறமதில் அலைக்கும்
கல்லென் பொருநை மணலினும் ஆங்கண்
பல்லூர் சுற்றிய கழனி
எல்லாம் விளையு நெல்லினும் பலவே.

(புறம். 387.)

வள்-கூர்மை. அகடு-வயிறு. மிளை-காவற் காடு. நகைப் புலவாணர்-புலவர். மா-குதிரை. நிரை- பசுக்கூட்டம். பணித்து-வாழ்த்தி.

குதிரைத் தறியனார்:— குதிரைத்தறி என்பது ஓரூர். இவர் குதிரை மலைப்பக்கத்தைச் சார்ந்தவர் போலும். இவர் பாடிய பாடலொன்று நற்றிணையில் உள்ளது. பாலைத்திணையைச் சிறப்பித்துள்ளார். கார்காலம் தனித் திருப்போருக்குத் துன்பத்தைத் தரக் கூடியது. தலைவன் அக்காலத்தில் தலைவியைப் பிரிய விரும்பான். எடுத்த செயல் அக்காலம் வந்தும் முடியாமையினால், அவன் அதை முடித்தே வருவான்; அச்செயலினை வெற்றியுடன் முடித்துக் காணவே விரும்புவான் என்பதைப் புலவர் அழகுபடக் கூறியுள்ளது மிகவும் மகிழ்ச்சியைத் தரக் கூடியது. இவர் குதிரைத் தீயனார் என்றும் வழங்கப் படுவர்.

என்னா வதுகொல் தோழி மன்னர்
வினைவல் யானைப் புகர்முகத் தணிந்த
பொன்செய் ஓடை புனைநலம் கடுப்பப்
புழற்காய்க் கொன்றைக் கோடணி கொடியிணர்
ஏகன் மீமிசை மேதக மலரும்
பிரிந்தோர் இரங்கும் அரும்பெறற் காலையும்
வினையே நினைந்த உள்ளமொடு துனைஇச்

செல்ப என்ப காதலர்
ஒழிதும் என்பநாம் வருந்துபடர் உழந்தே.
(நற். 296.)

கொன்றை மலர்தல் கார்காலமாதலின் ஈண்டுக் கார் காலம் கொள்ளப்பட்டது. பாரதம் பாடிய பெருந் தேவனாரும் அகநானூற்றுக் காப்புச் செய்யுளில் குறிப் பிட்டுள்ளார்.

குப்பைக் கோழியார்:— தலைமகள் தன் நோயைத் தீர்ப்பார் ஒருவருமின்றித் தான் வருந்துவதைப் பிறரால் ஏவப் படாமலும் இடையே விலக்கப்படாமலும் குப் பைக் கோழிகள் இரண்டு தம்மிற் பொருது அழிவதற்கு உவமையாகக் கூறியதனால் இவர் இப்பெயர் பெற்றார். இவர் இயற்றியது குறுந்தொகைச் செய்யுள் ஒன்றே.

கண்டர வந்த காம வொள்ளெரி
என்புற நலியினும் அவரொடு பேணிச்
சென்றுநா முயங்கற் கருங்காட் சியமே
வந்தஞர் களைதலை அவராற் றலரே
உய்த்தனர் விடாஅர் பிரித்திடை களையார்
குப்பைக் கோழித் தனிப்போர் போல
விளிவாங்கு விளியி னல்லது
களைவோர் இலையான் உற்ற நோயே.
(குறுந். 305)

போரின் பொருட்டு வளர்க்கப்பட்டு அப்போரில் ஊக்கமுடையாரால் உய்க்கப்படும் சேரிக் கோழியின் போர் பெருந்திரளான மக்கட்கிடையே நிகழும்; குப்பைக் கோழிப்போர் உய்ப்பாரும் களைவாரும் காண்போரும் இலதாயிற்று.

யான் உற்ற நோயைக் களைவாரில்லையென்றது அங்ஙனம் களைவாரொருவரை வேண்டி நிற்றலைப் புலப்

படுத்தியது; இதனால் அறத்தொடு நிற்றல் வேண்டு மென்பதைத் தோழிக்குத் தலைவி குறிப்பித்தாள்.

குமட்டூர்க் கண்ணனார்:– இவர் இமயவரம்பன் நெடுஞ் சேரலாதன் மீது பதிற்றுப்பத்து 2-ஆம் பத்தைப் பாடி, உம்பற்காட்டு 500-ஊர் பிரமதாயமும் 38-ஆம் வருடம் தென்னாட்டுள் வருவதனிற் பாகமும் பரிசிலாகப் பெற்றவர்; அந்தண வருணத்தினர்; இது பிரம தாயமும் பெற்றனரென்பதனால் தெரிகிறது. கண்ணனா ரென்று ஒரு புலவர் உளர்; அவரினின்று வேறுபடுத் தற்கு இவர் இங்ஙனம் வழங்கப் பெற்றார். இவர் தாம் பாடிய பாடல்களில் முருகனையும், திருமாலையும் சிறப் பித்துள்ளமையால் இவர்தம் கடவுள் கொள்கை தெற்றென விளங்கும்.

குமிழிஞாழலார் நப்பசலையார்:– இவர் பெண்பாலார். குமிழிஞாழலாருக்கு உறவினர் போலும். (பி.ம். குமுழி ஞாழார் நப்பசலையார்.

ஒடுங்கீர் ஓதி நினக்கு மற்றோ
நடுங்கின் றளித்தெ னிறையி னெஞ்சம்
அடும்புகொடி சிதைய வாங்கிக் கொடுங்கழிக்
குப்பை வெண்மணற் பக்கஞ் சேர்த்தி
நிறைச்சூல் யாமை மறைத்தீன்று புதைத்த
கோட்டுவட் டுருவின் புலவுநாறு முட்டைப்
பார்ப்பிட னாகு மளவைப் பகுவாய்க்
கணவன் ஓம்புங் கானலஞ் சேர்ப்பன்
முள்ளுறிற் சிறத்தல் அஞ்சி மெல்ல
வாவுடை மையின் வள்பிற் காட்டி
ஏத்தொழில் நவின்ற எழில்நடைப் புரவி
செழுநீர்த் தண்கழி நீந்தலின் ஆழி
நுதிமுகங் குறைத்த பொதிமுகிழ் நெய்தல்
பாம்புயர் தலையிற் சாம்புவன நிவப்ப
விரவந் தன்றாற் றிண்டேர் கரவா
தொல்லென ஒலிக்கும் இளையரொடு வல்வாய்

அரவச் சீறூர் காணப்
பகல்வந் தன்றால் பாய்பரி சிறந்தே.

(அகம். 160.)

அடும்பு-ஒருவகை நீர்க்கொடி. முள்-தாற்றுக் கோலி முள். வள்பு-கடிவாள வார். சாம்புதல்-வாடுதல்.

குழற்றத்தனார்:— தத்தன் என்பது இவர் இயற்பெயர். குழல் என்பது புல்லாங் குழலைக் குறிக்குஞ் சொல்லாக இருத்தல் கூடுமோ என்று தோற்றுகிறது. தலைவன் தலைவியுடன் இல்லறம் புரிதலைச் செவிலியின் கூற்றில் இவர் அமைத்திருப்பது படித்து இன்புறற் பாலது. குறுந்தொகைச் செய்யுள் ஒன்றே இவர் பாடியதாகும்.

கானங் கோழிக் கவர்குரற் சேவல்
ஒண்பொறி யெருத்திற் றண்சிதர் உறைப்பப்
புதனீர் வாரும் பூநாறு புறவிற்
சீறூ ரோளே மடந்தை வேறூர்
வேந்துவிடு தொழிலொடு செலினும்
சேந்துவரல் அறியாது செம்மல் தேரே.

(குறுந். 242.)

''தலைவன் தலைவியைப் பிரியாது உறைகின்றான். எச் செயல் குறித்தும் பிரிந்து செல்வதில்லை. அரசனது ஏவல் கடத்தற்கரிதாதலின் அதன் பொருட்டு மாத் திரம் அரிதில் சிலகால் வேற்றூர் செல்வான். செல் லினும் உடனே மீள்வன்'' என்ற கருத்துக்களை இவ் வடிகள் கொண்டுள்ளன.

குளம்பாதாயனார்:— இவர் பாடலில் வளையல் களைந்த மகளிர் கைகளுக்குப் பட்டை நீங்கிய மூங்கில் உவமை கூறப்பெற்றுள்ளது. இவர் குளம்பாதயானார் என்றும் வழங்கப்படுகின்றார்.

என்றிறத் தவலங் கொள்ளல் இனியே
வவ்வார் கண்ணி இளையர் திளைப்ப
நகாஅலென வந்த மாறே யெழாநெற்

பைங்கழை பொதிகளைந் தன்ன விளர்ப்பின்
வளையில் வறுங்கை ஓச்சிக்
கிளையு ளொய்வலோ கூறுநின் னுரையே.
(புறம். 253.)

நகாஅல்- எதிர்மறை வியங்கோள்: தன்மைக்கண் வந்தது.

குறமகள் இளவெயினி:— இவருக்கு இப்பெயர் சாதியால் வந்தது; குறவர் தலைமகனாகிய ஏறைக்கோனை, 'எம்மோன்'' (157) என்று இவர் சொல்லியிருத்தலும் இதனை வலியுறுத்தும்; ''தமர்தற்றப்பி னதுநோன்றல்லும், பிறர்கை யறவுதானு ணுதலும், படைப் பழிதாரா மைந்தின ளுகலும், வேந்துடை யவையத் தோங்குபு நடத்தலும்,.......ஏறைக்குத் தகுமே'' என அச்செய்யுளில் இவர் விதந்திருக்கும் அவனுடைய அருமைக் குணங்கள் அறிதற்பாலன.

தமர்தற் றப்பின் அதுநோன் றல்லும்
பிறர்கை யறவு தானு ணுதலும்
படைப்பழி தாரா மைந்தின ளுகலும்
வேந்துடை அவையத் தோங்குபு நடத்தலும்
நும்மோர்க்குத் தகுவன வல்ல எம்மோன்
சிலைசெல மலர்ந்த மார்பிற் கொலைவேற்
கோடற் கண்ணிக் குறவர் பெருமகன்
ஆடுமழை தவிர்க்கும் பயங்கெழு மீமிசை
எற்படு பொழுதி னினந்தலை மயங்கிக்
கட்சி காணுக் கடமா னல்லேறு
மடமா ளுகுபிணை பயிரின் விடர்முழை
இரும்புலிப் புகர்ப்போத் தோர்க்கும்
பெருங்க ளுடனெம் மேறைக்குத் தகுமே.
(புறம். 157.)

கையறவு-செயலுறுதல். எல்-ஒளி; சூரியனுக்கு ஆகு பெயர்.

குறியிறையார்:— குறியிறைப் புதல்வர் என்ற ஒரு தொடரைத் தம் செய்யுளில் அமைத்துப் பாடிய காரணத்தால் இவர் இப்பெயர் பெற்றுர். (பி.ம். குறையிறையார்.)

முழந்தாள் இரும்பிடிக் கயந்தலைக் குழவி
நறவுமலி பாக்கத்துக் குறமகள் ஈன்ற
குறியிறைப் புதல்வரொடு மறுவந் தோடி
முன்னுள் இனிய தாகிப் பின்னுள்
அவர்தினை மேய்தந் தாங்குப்
பகையா கின்றவர் நகைவிளை யாட்டே.

(குறுந். 394.)

''குறவர் குழந்தைகளோடு விளையாடி மகிழ்ச்சியை விளைவித்த யானைக்கன்று பின் அவருக்குரிய தினையை உண்டு அவருக்குத் துன்பத்தை விளைத்தது போல, முன்னுள் நின்னேடு அளவளாவி மகிழ்ந்த தலைவனது நட்பு அப்பொழுது இன்பத்தைப் பயந்து இப்பொழுது நின் அழகு கெடுதற்கு ஏதுவாயிற்று'' என்ற உவமையை விரிக்க. நகைவிளையாட்டு—இடக்கரடக்கல்.

குறுங்கீரனுர்:— உடலின் குறுமை பற்றி, குறுமுனி, குறு வழுதி என்பவற்றைப் போல இவர் இப்பெயர் பெற்றுர் போலும். காலமல்லாத காலத்திற் பெய்யும் மழைக்கு முல்லையும் தளவும் மலர்ந்தன வென்று தோழி கூறுவதாக இவர் செய்யுளில் அமைத்துள்ளார்.

தண்டுளிக் கேற்ற பைங்கொடி முல்லை
முகைதலை திறந்த நாற்றம் புதன்மிசைப்
பூமலி தளவமொடு தேங்கமழ்பு கஞல
வம்புப் பெய்யுமான் மழையே வம்பன்று
காரிது பருவ மாயின்
வாரா ரோநங் காத லோரே.

(குறுந். 382.)

''தலைவர் தாம் கூறிய சொற்பிழையாராதலின் அவர் வாராமையே இது கார்ப்பருவம் அன்று என்பதற்கு

அடையாளம். ஆதலின் முல்லை, தளவம், மழையென்பன அடையாளமல்ல'' என்பது தோழியின் கருத்து. கார்ப் பருவமேயாயினும் தலைவி ஆற்றுள் என்பது கருதித் தோழி கார் அன்றென்றுள்.

குறுங்குடி மருதனுர்:— மருதனுர் என்பது இவரது இயற்பெயர். குறுங்குடியாகிய பாண்டிநாட்டு விஷ்ணு ஸ்தலம் இவருடைய ஊர். அகநா. 4. குறுந்: 344 இவர் செய்தன. இவ்விரு பாடல்களிலும் முல்லையையே வருணிக்கிறுர். ''தாதுண் பறவை பேதுறலஞ்சி, மணிநா வார்த்த மாண்வினைத் தேரன்'' (அகநா. 4) என்று தலைவனது அருளை இவர் குறிப்பிக்கிறுர். மாலையில் வீடு திரும்பும் தாய்ப்பசுவின் வருணனை படித்து இன்புறற்பாலது.

> நோற்றேர் மன்ற தோழி தண்ணெனத்
> தூற்றுந் துவலைப் பனிக்கடுந் திங்கட்
> புலம்பயிர் அருந்த அண்ணல் ஏற்றெடு
> நிலந்தூங் கணல வீங்குமுலைச் செருத்தல்
> பால்வார்பு குழவி உள்ளி நிறையிறந்
> தூர்வயிற் பெயரும் புன்கண் மாலை
> அரும்பெறற் பொருட்பிணிப் போகிப்
> பிரிந்துறை காதலர் வரக்காண் போரே.
>
> (குறுந். 344.)

அணல்-அலைதாடி. செருத்தல்-ஆகுபெயர். பொருட் பிணி-பொருள்வேட்கை.

குறுங்கோழியூர் கிழார்:— இவர் வேளாளர்; சேனையை இவர் வருணித்தல் மிக அழகியது; இவராற் பாடப் பட்டோன் யானைக்கட் சேய் மாந்தரஞ் சேரலிரும் பொறை யென்னுஞ் சேரவரசன்; போரிற் பாண்டியன் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியனுற் பிணிப்புண்டு அப்பால் அப்பிணிப்பைத் தானே நீக்கிக்கொண்டு சென்று அவன் சிங்காசனத்தி லேறிய வரலாறும், அச் சேரனுடைய வீரமும், செங்

கோன் முறைமையும் இவரால் நன்கு கூறப்பெற்றுள்ளன. இவர் பெயர் குறுங்கோளியூர் கிழாரெனவும் வழங்கும்; இவர் பாடல்களுட் சிறந்த பகுதிகளின் கருத்துக்கள் வருமாறு;

*1.* 'அரசே ! ஐம்பூதங்களை அளந்தறிந்தாலும் அறியலாகும்; உன்னுடைய அறிவு முதலியன அளந்தறிதற்கரியன';

2. 'சோற்றை ஆக்குந் தீயாலும் வெயிலாலும் உண்டாகும் வெம்மையை யன்றி உன் குடைநிழலில் வாழ்வோர்க்கு வேறு வெம்மையில்லை;'

3. 'இந்திரவில்லை யன்றி வேறு கொலைவில்லையும் கலப்பையையன்றி வேறு படைக்கலங்களையும் உன் நாட்டார் அறியார்';

4. 'வயாவுற்ற மகளிர் விரும்பியுண்பரேயன்றிப் பகைவர் நின்மண்ணை ஒரு பொழுதும் நுகரார்';

5. 'உன்னைப் பாடிய நா வேறொருவரையும் பாடாதபடி கொடுக்கும் வண்மையை உடையாய் நீ';

6. 'எல்லா வகையாலும் உன்நாடு தேவருலகம் போல்வது'.

புறநானூற்றுப் பாடல்கள் (17,20,22) மூன்றே இவர் பாடியனவாம்.

இருமுந்நீர்க் குட்டமும்
வியன்ஞாலத் தகலமும்
வளிவழங்கு திசையும்
வறிதுநிலைஇய காயமும், என்றாங்
கவையளந் தறியினும் அளத்தற் கரியை
அறிவும் ஈரமும் பெருங்கண் ஓட்டமும்

சோறுபடுக்குந் தீயோடு
செஞ்ஞாயிற்றுத் தெறலல்லது
பிறிதுதெறல் அறியார்நின் னிழல்வாழ் வோரே
திருவில் அல்லது கொலைவில் அறியார்
நாஞ்சில் அல்லது படையும் அறியார்
திறனறி வயவரொடு தெவ்வர் தேயவப்
பிறர்மண் ணுண்ணுஞ் செம்மனின் னாட்டு
வயவுறு மகளிர் வேட்டுணி னல்லது
பகைவர் உண்ணா வருமண் ணினையே
அம்புதுஞ்சுங் கடியரணால்
அறந்துஞ்சுஞ் செங்கோலையே
புதுப்புள் வரினும் பழம்புட் போகினும்
விதுப்புற வறியா வேமக் காப்பினை
அனையை யாகன் மாறே
மன்னுயிர் எல்லா நின்னஞ் சும்மே.

(புறம். 20.)

திருவில்-இந்திரவில். வயவு-வயா; கருப்பமுற்ற மகளிர்க்கு நுகரப்படும் பொருள் மேற்செல்லும் வேட்கை; அதனால் அவர்கள் புகையுண்ட மண்ணை உண்பர்.

"புதுப்புள் வருதலும் பழம்புள் போதலும் பொழு தன்றிக் கூகை குழறலும் போல்வன புள்ளின்கட் டோன்றிய நிமித்தம்." (தொல். புறத்திணை. சூ. 36-ந.)

<u>குன்றம் பூதனார்:—</u> இவர் முருகக் கடவுள்பால் அன்புடையவர்; பரிபாடலில் அவருக்குரிய 9, 18-ஆம் பாடல்களை இயற்றியவர். 9-ஆம் பாடலில் "நான்மறை விரித்து" என்பது முதலியவற்றாற் பாராட்டியிருக்குந் தமிழ் வழக்கு, தமிழ் மொழியின்கண் இவருக்குள்ள பேரன்பைப் புலப்படுத்தும். 18-ஆவது செய்யுளால் சூரனுடைய மாமரச் செய்தியும் திருப்பரங்குன்றத் துள்ள கோயிலின் பக்கத்தே சித்திர வம்பல முண்டென் பதும் தெரிய வருகின்றன. குறிஞ்சித்திணைக்குரிய முதல், கரு, உரியென்ற முப்பொருள்களையும் செவ்வனே

யமைத்து நயமுறக் கூறியிருத்தலை உற்று நோக்கும் பொழுது, இவர் அத்திணையைப் பாடுதலில் வல்லவ ரென்று தெரிகின்றது. 'திருப்பரங்குன்றத்துள்ள சோலை சுனை அருவி காந்தள் தினை மயில் முதலியவற்றை வருணித்து, அக்குன்றம் இமயத்தையும் முருகக் கட வுளின் ஊர்தியாகிய யானையையுமொக்குமென்று இவர் கூறியிருப்பது பாராட்டற்பாலது. குன்றத்தை இங் ஙனம் அழகுறப்பாடி யிருத்தலால், இவர் இப்பெயர் பெற்றனர் போலும்.

குன்றியனார்:— வரைவு மலிவுக்கு இவர் கூறும் கார ணங்கள் சிறந்தனவாக உள்ளன; (குறுந். 51). தலைவ னது மணிகள் கட்டிய தேர் வாராதாயினும் வருவது போலத் தன் செவிகளில் இசைக்குமென்று தலைவி கூறுவ தாக இவர் குறிப்பிடுகிறார். (குறுந். 301.)இவர் கூறும் மாலை வருணனை (நற். 117) சுவைபட அமைந்துள்ளது. இவர் மேலைக் கடற்கரை நகரமாகிய தொண்டி என்ற ஊரை வருணிக்கிறார்; (குறுந். 238) களவு, கற்பாகிய இருவகை ஒழுக்கங்களையும் நெய்தற்றிணையில் அமைத் துப் பலவாறு பாராட்டி யுள்ளார். எட்டுத்தொகை யில் இவரியற்றியுள்ள செய்யுட்கள் 10. (நற். 2; அகநா.2; குறுந். 6.)

பிரதிபேதம். குன்றியான், குன்றியாள்.

ஐயவி அன்ன சிறுவீ ஞாழல்
செவ்வீ மருதின் செம்மலொடு தாஅய்த்
துறையணிந் தன்றவ ரூரே இறையிறந்
திலங்குவளை நெகிழச் சாஅய்ப்
புலம்பணிந் தன்றவர் மணந்த தோளே.

(குறுந். 50.)

குன்றூர்கிழார் மகனார்:— இவர் வேளாளர்; நீர் நிறைந்த வயல்களின் இடையேயுள்ள ஓரூரின் மதிலுக் குக் கடலின் இடையே யுள்ள புறமுலர்ந்த கப்பலை

உவமை கூறியிருக்கின்றனர். இவராற் பாடப்பட்டேன் போந்தையென்னும் நகரின் தலைவனுன நெடுவேளாத னென்பான்.

ஏர்பரந்தவய னீர்பரந்தசெறுவின்
நென்மலிந்தமனைப் பொன்மலிந்தமறுகிற்
படுவண் டார்க்கும் பன்மலர்க் காவின்
நெடுவே ளாதன் போந்தை யன்ன
பெருஞ்சீர் அருங்கொண் டியளே கருஞ்சினை
வேம்பு மாரும் போந்தையு மூன்றும்
மலைந்த சென்னியர் அணிந்த வில்லர்
கொற்ற வேந்தர் வரினுந் தற்றக
வணங்கார்க் கீகுவ னல்லன்வண் டோட்டுப்
பிணங்குகதிர்க் கழனி நாப்ப ணேமுற்
றுணங்குகல னாழியிற் றோன்றும்
ஓரெயின் மன்னன் ஒருமட மகளே.

(புறம். 338.)

போந்தை-ஒரூர். கொண்டிச்சீரள்-மிகுதியான சீரை யுடையவள். ஆர்-ஆத்தி. போந்தை-பனை. கொற்றம்-அரசுரிமை. தற்றக-தனக்குத்தக. கலன்-கப்பல்.

குன்றூர்கிழார் மகனார் கண்ணத்தனார்:— இவர் வேளாண் மரபைச் சார்ந்தவர். கண்ணத்தனார் என்பது இவர் பெயர். குறிஞ்சித்திணையைச் சிறப்பித்துப் பாடுவதில் வல்லவர் என்று தெரிகிறது. இவரது பாடல் ஒன்று நற்றிணையில் மட்டும் உள்ளது.

இகுளைத் தோழியிஃ தென்னெனப் படுமோ
குவளை குறுநர் நீர்வேட் டாங்கு
நாளு நாளுடன் அகலவுந் தோளே
தொன்னிலை வழீஇயநின் றொடியெனப் பன்மாண்
உரைத்தல் ஆன்றிசின் நீயே விடர்முகை
ஈன்பிணவு ஒடுக்கிய இருங்கோள் வயப்புலி
இரைநசைஇப் பரிக்கும் மலைமுதற் சிறுநெறி
தலைநாள் அன்ன பேணலன் பலநாள்

ஆரிருள் வருதல் காண்பேற்கு
யாங்கு ஆகும்மே இலங்கிழை செறிப்பே.

(நற். 332.)

இருளைத்தோழி-இருபெயரொட்டு. குறுநர்-பறிப்பவர். தொன்னிலை-பழையநிலை. பிணவு-பெண்புலி.

கூகைக் கோழியார்:— மயானத்தின் இயல்பை, பழைய மரங்களின் பொந்திற் பிறர் திடுக்கிடும்படி சுட்டுக்குவியென்று ஒலித்துக் கொண்டிருக்கும் கூகைக் கோழிகள் நீங்காதது என்னும் கருத்துப்பட, ''முது மரப் பொத்திற் கதுமென வியம்பும், கூகைக் கோழி யானுத் தாழிய பெருங்காடு'' (364) என்றமையின், இப்பெயர் இடப்பட்ட தென்று தெரிகின்றது.

வாடா மாலை பாடினி அணியப்
பாணன் சென்னிக் கேணி பூவா
எரிமரு டாமரைப் பெருமலர் தயங்க
மைவிடை இரும்போத்துச் செந்தீச் சேர்த்திக்
காயங் கனிந்த கண்ணகன் கொழுங்குறை
நறவுண் செவ்வாய் நாத்திறம் பெயர்ப்ப
உண்டுந் தின்றும் இரப்போர்க் கீய்ந்தும்
மகிழ்கம் வம்மோ மறப்போ ரோயே
அரிய வாகலு முரிய பெரும
நிலம்பக வீழ்ந்த வலங்கற் பல்வேர்
முதுமரப் பொத்திற் கதுமென வியம்பும்
கூகைக் கோழி யானுத்
தாழிய பெருங்கா டெய்திய ஞான்றே.

(புறம். 364.)

வாடாமாலை-பொன்னரிமாலை. கேணி பூவாத் தாமரை-பொற்றாமரைப்பூ. அலங்கல்-அசைதல். கூகை-பேராந்தை; கோட்டானுமாம். கோழி-காட்டுக் கோழி. தாழியபெருங்காடு - பிணங்களைக்கவிக்கும் தாழிகளையுடைய மயானம்.

கூடலூர் கிழார்:— இவர் மலைநாட்டின்கண்ணதாகிய கூடலூரை இருப்பிடமாக உடையவர்; வேளாண்

மரபினர்; இவருடைய பாடல்கள் இன்சுவையைத் தருபவை; ஒரு விண்மீன் வீழ்ச்சியைக் கண்டு கோச் சேரமான் யானைக்கட் சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறை என்னும் அரசன் இன்ன நாளில் இறப்பானென்று முதலில் நிச்சயித்திருந்து அவ்வாறே அவன் இறந்தது கண்டு ஒருவாற்றானும் பிரிவாற்றாது வருந்தினாரென்று, ''ஆடிய லழற்குட்டத்து'' (புறநா. 229) என்னும் பாடலாலும் அதன் பின்னுள்ள வாக்கியங்களாலும் தெரிதலால், இவர் கணிதத்திலும் வல்லவராகக் கருதப்படுகிறார்; இவர் மேற்கூறிய அரசனால் மிக ஆதரிக்கப் பெற்றவர்; அவன் வேண்டுகோளால் ஐங்குறுநூறென்னும் தொகை நூலைத் தொகுத்தவர் இவரே; ஐங்குறுநூற்றின் இறுதி வாக்கியத்தில் ''புலத்துறை முற்றிய கூடலூர் கிழார்'' என ஆன்றோராற் சிறப்பித்துக் கூறப் பெற்றிருத்தலின், இவருடைய பெரும்புலமை நன்கு வெளியாகின்றது. இவர் காலத்துப் புலவர்கள்; குறுங்கோழியூர் கிழார், பொருந்தில் இளங்கீரனார் என்பவர்கள். முதுமொழிக் காஞ்சியை இயற்றிய மதுரைக் கூடலூர் கிழார் என்பவர் வேறு; இவர் வேறு. இவரியற்றிய பாடல்கள் 4; குறுந். 3; புறநா. 1.

முளிதயிர் பிசைந்த காந்தண் மெல்விரல்
கழுவுறு கலிங்கங் கழாஅ துடீஇக்
குவளை யுண்கண் குய்ப்புகை கமழத்
தான்றுழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதல் முகனே.

(குறுந். 167.)

முளிதயிர்-நன்றாக முற்றிய தயிர். முளிதல்-காய்தல். இறுகிய தயிராதலின் தலைவி புளிக்குழம்பு செய்யும் பொருட்டுத் தன் விரலால் துழாவித் தாளிதம் செய்தாள். விரைவில் அமைக்க வேண்டும் என்னும் விருப்பினளாதலின் தயிர் பிசைந்த கையைத் துடைத்த ஆடையைத் துவைத்தலை மறந்தாள்; கையை ஆடை

யில் துடைத்தது செல்வ மிகுதியால் வந்த இயல்பு. ''ஏனது சுவைப்பினும் நீகை தொட்டது வானோர் அமுதம் புரையுமால் எமக்கென'' (தொல். கற்பு. 5) விரும்புபவனாதலின் இனிதென உண்டான்.

**கூடலூர்ப் பல்கண்ணனார்:—** இவர் பாடியது நற்றிணைச் செய்யுள் ஒன்றே. இவர் கடலூர்ப் பல்கண்ணனார் என்றும் வழங்கப்படுவர்.

நெய்யுங் குய்யு மாடி மையொடு
மாசுபட் டன்றே கலிங்கமும் தோளும்
திதலை மென்முலைத் தீம்பால் பிலிற்றப்
புதல்வற் புல்லிப் புனிறுநா றும்மே
வாலிழை மகளிர் சேரித் தோன்றும்
தேரோற் கொத்தனெ மல்லே மதனாற்
பொன்புனை நரம்பி னின்குரற் சீறியாழ்
எழாஅல் வல்லை யாயினுந் தொழாஅல்
கொண்டுசெல் பாணநின் றண்டுறை யூரனைப்
பாடுமனைப் பாடல் கூடாது நீடுநிலைப்
புரவியும் பூணிலை முனிகுவ
விரகில மொழியல்யாம் வேட்டதில் வழியே.
(நற். 380.)

குய்-தாளிப்புப்புகை. கலிங்கம்-உடை. வாலிழை-ஒளி செய்யும் அணிகள்.

**கூவன் மைந்தனார்:—** இராக்காலத்தில் கிணற்றில் விழுந்துவிட்ட பசுவின் துயரைக் கண்டு அதனைப் பிறருக்குச் சொல்லும் வல்லமையில்லாத ஊமனைத் தன் துயரைப் பிறருக்குச் சொல்லும் வலியின்றி வருந்தும் கிழத்திக்கு உவமைகூறியுள்ளார். இங்கே, ''கூவற் குராலான் படுதுயர்'' என்ற தொடரினால் இவர் கூவன் மைந்தன் என்று பெயர் பெற்றார் என்பர்.

கவலை யாத்த அவல நீளிடைச்
சென்றோர் கொடுமை எற்றித் துஞ்சா
நோயினு நோயா கின்றே கூவற்

குராலான் படுதுயர் இராவிற் கண்ட
உயர்திணை ஊமன் போலத்
துயர்பொறுக் கல்லேன் றோழி நோய்க்கே.
(குறுந். 224.)

கூற்றங் குமரனார்:— இவரது பெயர் குமரன். கூற்றன் என்பவருடைய மகனாக இருக்கலாம் என்று தெரிகிறது. குறிஞ்சித்திணையைச் சிறப்பித்துப் பாடியுள்ளமையால் குறிஞ்சி நிலப்பகுதியில் வாழ்ந்தவர் போலும். இவரது பாடலொன்று நற்றிணையில் உள்ளது.

விழுந்த மாரிப் பெருந்தண் சாரல்
கூதிர்க் கூதளத் தலரி நாறு
மாதர் வண்டி னயவருந் தீங்குரன்
மணநாறு சிலம்பின் அசுணம் ஓர்க்கும்
உயர்மலை நாடற் குரைத்தல் ஒன்றோ
துயர்மருங் கறியா அன்னைக் கிந்நோய்
தணியுமா றிதுவென உரைத்தல் ஒன்றோ
செய்யா யாதலிற் கொடியை தோழி
மணிகெழு நெடுவரை யணிபெற நிவந்த
செயலை அந்தளிர் அன்னவென்
மதனின் மாமெய்ப் பசலையுங் கண்டே.
(நற். 244.)

கூதளம்-கூதாளிக்கொடி. மாதர்-அழகு. செயலை-அசோகு.

கேசவனார்:— இவர் முருகக் கடவுளுக்குரிய பரிபாடலி லுள்ள 14-ஆம் பாடலை இயற்றியவர்; இப்பாடலில் திருப்பரங் குன்றத்துள்ள சுனை முதலியவற்றையும் கார்காலத்தையும் வருணித்திருத்தலும் அங்கங்கே கூறிய உவமைகளும் முருகக் கடவுளை முன்னிலையாக்கித் துதித்திருக்கும் அருமையும் மிக்க இன்பம் பயக்கும். அவரை அடுத்தடுத்து வழிபடுவதன் பயன் மேன் மேலும் அவரை வழிபடுவதாகவே ஆகல் வேண்டு மென்று இதனிறுதியில் வேண்டுதல், அவர் பால் இவருக்குள்ள ஒப்புயர்வற்ற அன்பைப் புலப்படுத்து

கின்றது. இசைச் செய்திகளை இவர் பலபடப் பாராட்டி யிருக்கிருர்; இப்பாடலுக்கு இசை வகுத்தவரும் இவரே.

கொட்டம் பலவனுர்:— கொட்டம்பலம் என்ற ஊரில் இருந்தவர். இவ்வூர் கோட்டம்பலம் என்றும் வழங்கப் பெறும். குறிஞ்சித்திணையைச் சிறப்பித்துப்பாடியுள் ளார். இவரது பாடல் நற்றிணையில் ஒன்றுள்ளது.

கழைபா டிரங்கப் பல்லியங் கறங்க
ஆடுமகள் நடந்த கொடும்புரி நோன்கயிற்(று)
அதவத் தீங்கனி அன்ன செம்முகத்
துய்த்தலை மந்தி வன்பறழ் தூங்கக்
கழைக்கண் இரும்பொறை ஏறி விசைத்தெழுந்து
குறக்குறு மாக்கள் தாளம் கொட்டுமக்
குன்றகத் ததுவே கொழுமிளைச் சீறூர்
சீறூ ரோளே நா்றுமயிர்க் கொடிச்சி
கொடிச்சி கையகத் ததுவேபிறர்
விடுத்தற் காகாது பிணித்தவென் நெஞ்சே.

(நற். 95.)

கழை-மூங்கில் பல்லியம்-பலவாத்தியக் கருவிகள். ஆடுமகள்-கயிற்றில் நடந்து கூத்தாடி மகிழ்விக்கும் மகள். அதவம்-அத்திமரம். துய்-பஞ்சு. மிளை-காவற்காடு. நாறுமயிர்-நறுமணம் கமழும் கூந்தல். தாளம் கொட்டும் என்ற சொற்சிறப்பால் ஆசிரியர் கொட்டம்பலவனுர் என்று பெயர் பெற்ருர் போலும்.

கொடிஞாமல் மாணி பூதனுர்:— இவர் சங்ககாலப் புலவருள் ஒருவர். திருவள்ளுவருடைய திருக்குறளைக் கேட்டுச் சிறப்புப்பாயிரமாக ஒரு வெண்பா இயற்றி யுள்ளார்.

அறனறிந்தே மான்ற பொருளறிந்தே மின்பின்
திறனறிந்தேம் வீடு தெளிந்தேம்—மறனெறிந்த

வாளார் நெடுமாற வள்ளுவர் தம்வாயால்
கேளா தனவெல்லாங் கேட்டு.

(திருவள். 50.)

கொல்லன் அழிசி:- கொல்லன் என்பது சாதி பற்றிய பெயர். இவரது இயற்பெயர் அழிசி என்பது. மதுரைக் கொல்லன் புல்லன், மதுரைப் பெருங் கொல்லன் என்று இவ்வகுப்பாரில் வேறு புலவரும் குறுந் தொகை நூலிற் பாடியுள்ளார்கள். இவர் சார்த்து வகை யால் நன்னனது ஏழிற் குன்றத்தைக் கூறியிருப்பதனுல் (குறுந். 138) அவன் காலத்தவராகக் கருதப்படுகிருர். ஏழிற் குன்றத்தில் மயில்கள் உள்ளனவென்று இவர் கூறியவாறே 'நன்ன னேழி னெடுவரைப்பாழிச்சிலம்பிற் களிமயில்' (அகநா. 152) என்று பிறரும் கூறியுள்ளார். இருளில் மலை மறைவதற்குக் கடலில் கலம் ஆழ்வதை இவர் உவமை கூறியிருத்தல் (குறுந். 145) பாராட்டற் பாலது. அழிசி என்னும் பெயர் அழுசியென்றும் வழங்குகிறது. குறுந்தொகையில் உள்ள நான்கு செய் யுட்களே (27, 138, 145, 240) இவர் பாடியன வாம்.

கொன்னூர் துஞ்சினும் யாந்துஞ் சலமே
எம்மில் அயல தேழில் உம்பர்
மயிலடி இலைய மாக்குர னொச்சி
அணிமிகு மென்கொம் பூழ்த்த
மணிமருள் பூவின் பாடுநனி கேட்டே.

(குறுந். 138.)

கொல்லிக் கண்ணனர்:- கொல்லி மலையினைச் சார்ந் தவர் இவர். குட்டுவன் சேரனுடைய மரந்தை நகரை இவர் கூறுவதனுல் அவன் காலத்தவராகக் கருதப் படு கிருர். 'இரங்கு நீர்ப் பரப்பின் மரந்தையோர் பெரும' (பதிற் 90-98) என்ற அடியை நோக்கும்போது மரந்தை என்பதே ஏற்புடையதாகத் தோற்றுகின்றது. குறுந் தொகைச் செய்யுள் ஒன்றே இவர் பாடியதாகும்.

ஒறுப்ப ஓவலர் மறுப்பத் தேறலர்
தமியர் உறங்கும் கௌவை யின்றாய்
இனியது கேட்டின் புறுகவிவ் வூரே
முனாஅ தியானையங் குருகின் கானலம் பெருந்தோ
டட்ட மள்ளர் ஆர்ப்பிசை வெரூஉம்
குட்டுவன் மரந்தை அன்னவெம்
குழல்விளங் காய்நுதற் கிழவனு மவனே.

(குறுந். 34.)

கொற்றங் கொற்றனார்:— இவர் மாற்றூர் கிழார் என்பவருடைய மகனாவர். வேளாண் மரபினர். இவர் பாடியனவாக அகநானூற்றில் ஒரு செய்யுளும், நற்றிணையில் ஒரு செய்யுளும் உள்ளன.

யாங்குச்செய் வாங்கொல் தோழி பொன்வீ
வேங்கை ஓங்கிய தேங்கமழ் சாரல்
பெருங்கல் நாடனொ டிரும்புனத் தல்கிச்
செவ்வாய்ப் பைங்கிளி ஓப்பி அவ்வாய்ப்
பெருவரை அடுக்கத் தருவி ஆடிச்
சாரல் ஆரம் வண்டுபட நீவிப்
பெரிதமர்ந் தியைந்த கேண்மை சிறுநனி
அரிய போலக் காண்பேன் விரிதிரைக்
கடல்பெயர்ந் தனைய வாகிப்
புலர்பதங் கொண்டன வேனற் குரலே.

(நற். 259.)

கொற்றனார்:— இவர் நக்கீரருடைய புதல்வர்; கீரங் கொற்றன் எனவும் வழங்கப்படுவர். இறையனாரகப் பொருளுக்கு முதலில் நல்லுரை கண்டு அதனை நக்கீரர் தம் புதல்வராகிய இவருக்குக் கூறினாரென்று இறையனாரகப் பொருளுரை கூறும். இவர் நற்றிணையில் ஒரு செய்யுளும் குறுந்தொகையில் இரண்டு செய்யுளும் இயற்றியுள்ளார்.

விடர்முகை யடுக்கத்து விறல்கெழு சூலிக்குக்
கடனும் பூணுங் கைந்நூல் யாவாம்
புள்ளும் ஓராம் விரிச்சியும் நில்லாம்
உள்ளலும் உள்ளாம் அன்றே தோழி

உயிர்க்குயிர் அன்னர் ஆகலிற் றம்மின்
றிமைப்புவரை யமையா நம்வயின்
மறந்தாண் டமைதல் வல்லியோர் மாட்டே.

(குறுந். 218.)

கோக்குள முற்றனார்:— கோக்குளம் என்பது ஓர் ஊர்; வெண்காடு. கோக்குளமுற்றம் என்ற சொல்லே ஓர் ஊரின் பெயர் என்றும் கொள்ளுதல் கூடும். குறுந் தொகையிலொன்றும் நற்றிணையிலொன்றுமாக இவர் இரண்டு பாடல்களைச் செய்தவர். இவ்விரண்டி லும் தலைவன் பிரிவினால் தலைவியின் மேனி பசலை பாய்ந்து அழகழிந்தமையைக் கூறியுள்ளார். இவர் பாடல்களில் நெய்தலும் முல்லையும் சிறப்பிக்கப் பெற் றுள்ளன.

இன்னள் ஆயினள் நன்னுதல் என்றவர்த்
துன்னச் சென்று செப்புநர்ப் பெறினே
நன்றுமன் வாழி தோழிநம் படப்பை
நீர்வார் பைம்புதற் கலித்த
மாரிப் பீரத் தலர்சில கொண்டே.

(குறுந். 98.)

அவர்-நெஞ்சறிசுட்டு. படப்பை-தோட்டம். இங்கே மனைக்கருகிலுள்ள தோட்டம். பீரம்-பீர்க்கு.

கோட்டியூர் நல்லந்தையார்:— கோட்டியூர்: ஓரூர். இது பாண்டிய நாட்டிலுள்ளது. இவர் நெய்தல் திணையைச் சிறப்பித்துள்ளார். இவரது பாடலொன்று நற்றிணையில் உள்ளது. கோட்டியூர்-திருக்கோட்டி யூரைக் குறிக்கும்.

யார்க்குநொந் துரைக்கோ யானே யூர்கட
லோதஞ் சென்ற வுப்புடைச் செறுவிற்
கொடுங்கழி மருங்கி னிரைவேட் டெழுந்த
கருங்காற் குருகின் கோளுய்ந்து போகிய
முடங்குபுற விறவின் மோவா யேற்றை
எறிதிரை தொகுத்த வெக்கர் நெடுங்கோட்டுத்

துறுகடற் றலைய தோடுபொதி தாழை
வண்டுபடு வான்போது வெரூஉந்
துறைகெழு கொண்கன் றுறந்தன னெனவே.

(நற். 211.)

ஓதம்-கடல்நீர். எக்கர்-மணல்மேடு.

கோடிமங்கலம் வாதுளி நற்சேந்தனார்:— இவர் அந்தணர். கோடி மங்கலம் மதுரை ஜில்லாவில் உள்ள ஓரூர். வாதுளி என்பது வாதுள கோத்திரத்தைக் குறிக்கும். இவரது பாடல்கள் அகநானூற்றில் உள்ளன.

விண்டோய் சிமைய விறல்வரைக் கவாஅன்
வெண்டேர் ஓடும் கடங்காய் மருங்கிற்
றுனையெரி பரந்த துன்னரும் வியன்காட்டுச்
சிறுகண் யானை நெடுங்கை நீட்டி
வான்வாய் திறந்தும் வண்புனல் பெறுஅது
கான்புலந்து கழியுங் கண்ணகன் பரப்பின்
விடுவாய்ச் செங்கணைக் கொடுவில் ஆடவர்
நன்னிலை பொறித்த கன்னிலை யதர
வரம்புகொள் பூசல் களையுநர்க் காணுச்
சுரஞ்செல விரும்பினி ராயி னின்னகை
முருந்தெனத் திரண்ட முள்ளெயிற்றுத் துவர்வாய்க்
குவளை நாண்மலர் புரையு முண்கணிம்
மதியேர் வாண்முகம் புலம்பப்
பதிபெயர்ந் துறைத லொல்லுமோ நுமக்கே.

(அகம். 179.)

வெண்தேர்-பேய்த்தேர். முருந்து-மயிலிறகுக் குருத்து.

கோடை பாடிய பெரும் பூதனார்:— பெரும்பூதனா ரென்பது இவரது இயற்பெயர்; கோடைமலையையோ கோடைக் காலத்தையோ நன்கு பாடிய இவருடைய ஆற்றலுடைமையைக் கண்டு, "கோடை பாடிய" என்னும் அடைமொழியை இவர் பெயர்க்கு முன்பு ஆன்றோர் அமைத்தனர் போலும்; "முருகுமெய்ப் பட்ட புலைத்தி போலத், தாவுபு தெறிக்குமான்" (புறநா 259) என்னும் இவர் பாடலானது முருகக் கடவுளின்

ஆவேசங் கொண்டு மகளிர் ஆடும் வழக்கம் பண்டைக் காலத்தில் உண்டென்பதைத் தெரிவிக்கின்றது.

ஏறுடைப் பெருநிரை பெயர்தரப் பெயரா
தலைபுதை பெருங்காட்டுத் தலைகரந் திருந்த
வல்வின் மறவர் ஒடுக்கங் காணாய்
செல்லல் செல்லல் சிறக்கநின் னுள்ளம்
முருகுமெய்ப் பட்ட புலைத்தி போலத்
தாவுபு தெறிக்கு மான்மேற்
புடையிலங் கொள்வாட் புனைகழ லோயே.

(புறம். 259.)

வெட்சித்திணைத் துறைகளுள், 'ஆபெயர்த்துத் தருதல்' என்பதற்கு மேற்கோள், தொல். புறத்திணை. சூ. 5, இளம்; ந.

கோண்மா நெடுங்கோட்டனார்:— புலி, சிங்கம் போன்ற ஆற்றல் உடையவர் போலும்; ஆதலின் கோண்மா என்னும் அடைமொழி இவரது பெயருக்கு முன் அமைந்தது போலும். இவருடைய பாடல் ஒன்று நற்றிணையில் உள்ளது. மருதத்திணையைச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

நெடுநா ஒண்மணி கடிமனை இரட்டக்
குரையிலைப் போகிய விரவுமணற் பந்தர்ப்
பெரும்பாண் காவல் பூண்டென ஒருசார்த்
திருந்திழை மகளிர் விரிச்சி நிற்ப
வெறியுற விரிந்த அறுவை மெல்லணைப்
புனிறுநாறு செவிலியொடு புதல்வன் துஞ்ச
ஐயவி அணிந்த நெய்யாட்டு ஈரணிப்
பசுநெய் கூர்ந்த மென்மை யாக்கைச்
சீர்கெழு மடந்தை யீரிமை பொருந்த
நள்ளென் கங்குல் கள்வன் போல
அகன்றுறை ஊரனும் வந்தனன்
சிறந்தோன் பெயரன் பிறந்த மாறே.

(நற். 40.)

இரட்ட-ஒலிக்க. விரிச்சி-நிமித்தம். அறுவை-ஆடை. ஐயவி-வெண்கடுகு. மணிகடிமனை இரட்டஎன்றது தலைவனின் செல்வ மிகுதியைக் காட்டுகின்றது.

கோதமனார்:— இவர் பெயர் கௌதமனாரெனவும்; வழங்கும்; பாலைக் கௌதமனாரெனவும் வழங்கும்; இவர் அந்தணர்; பதிற்றுப்பத்தில் 3 ஆம் பத்தைப் பாடிய இவர் இமயவரம்பன் தம்பி பல்யானைச் செல்கெழு குட்டுவனாற் சுவர்க்கம் பெற்றார்; இதனை, ''பல்யானைச் செல்கெழு குட்டுவனைப் பாலைக் கௌதமனார் பாடினார் பத்துப் பாட்டு.......பாடிப் பெற்ற பரிசில்: ''நீர் வேண்டியது கொண்மின்'' என, ''யானும் என் பார்ப்பனியும் சுவர்க்கம் புகவேண்டும்'' என, பார்ப்பாரிற் பெரியோரைக் கேட்டுப் பெருவேள்வி வேட்பிக்கப் பத்தாம் பெருவேள்வியிற் பார்ப்பானையும் பார்ப்பனியையுங் காணாராயினர்'' (பதிற். 3-அம் பத்தின் இறுதிக் கட்டுரை) என்பதனாலும், ''பாடாண்டிணையே'' (தொல். புறத்திணை, சூத். 25, ந.) என்பதன் விசேடவுரையாலும், ''சேரன் குட்டுவன் புகழைச் செய்யுளாகத் தொடுத்த கௌதமனென்னும் பெரிய புலவன், ''யானும் என் சுற்றமும் துறக்கம் புகும்படி பொருந்திய அறங்களை முடித்துத் துறக்கத்தைத் தா' என்றாற்கு, அவன் சொற்குறை தீர்ப்பான் பொருட்டு உவந்து யாகங்களை நடத்தி, 'நீ வேண்டிய துறக்கத்தின்கண் நீடு வாழ்வாயாக' என்றான்; ஆதலால் புனைந்து இப் பெற்றியாரென்று புகழ வேண்டுவதில்லை; இயற்கையாகக் கொடுக்கும் சீலத்தார் தம் அளவினாற் கொடுக்க வல்லதனைத்தாமே அறிந்து கொடுப்பார்'' (பழ. 316, பழையவுரை) என்பதனாலும் உணர்க.

கோப்பெருஞ் சோழன்:— இவனுடைய இராசதானி உறையூர். பிசிராந்தையார்க்கும் பொத்தியாருக்கும் உயிர் நண்பன். இவன் தன் பிள்ளைகள் இருவரோடு பகைமை கொண்டு போர் செய்தற்கு எழுந்த

பொழுது புல்லாற்றூர் எயிற்றியனுரால் சமாதானம் செய்யப்பட்டான். செய்யுள் செய்தலில் வல்லவன்; இவன் பின்பு எல்லாவற்றையும் துறந்து வடக்கிருந்து, உடன் உயிர் நீத்தற்கு வந்த பொத்தியாரை, 'மகன் பிறந்தபின் வருக' எனக் கூறித் தான் உயிர் நீத்துக் கல்லாகியும், அவ்வாறு வந்த அவருக்கு இடங்கொடுத்தும் புகழ்பெற்று விளங்கினுன்; இவன் வடக்கிருந்ததைக் கேட்டுப் பிசிராந்தையாரும் உடன் உயிர் நீத்தனர்; இதனே, ''புணர்ச்சி பழகுதல் வேண்டா'' என்னும் திருக்குறளுக்குப் பரிமேலழகர் எழுதிய விசேட உரையாலும் ''தோழிதாயே'' (தொல். கற்பு. சூ. 52) என்பதன் உரையாலும் உணரலாம். இவன் இளஞ்சேரலிரும்பொறையால் வெல்லப்பட்டான் போலும். (பதிற். 9-ஆம் பத்தின் பதிகம்) இவனேப் பாடிய புலவர்: பிசிராந்தையார், புல்லாற்றூர் எயிற்றியனுர், பொத்தியார், கருவூர்ப் பெருஞ்சதுக்கத்துப் பூத நாதனுர். இவ்வரசனும் இப் புலவர்களும் அவ்வச் சமயத்துக் கூறிய பாடல்கள் மிக அற்புதமானவை. பிசிராந்தையாரின் நண்பனுகக் கருதப்பட்டவன் இவனே. புலவர் பால் மிக்க அன்பு பூண்டவன். தலேவன் பாங்கனே விளிப்பதாக இவன் கூறும் பகுதியில், ''எலுவ சிறுஅ ரேமுறு நண்ப, புலவர் தோழ'' என்று புலவர்களுக்குத் தோழனுக இருத்தலின் பெருமையைப் புலப்படுத்தியுள்ளான். அரசர்களுக்கு இன்றியமையாதவை கூறுவதனுல் (குறுந். 20) இவனது செங்கோன்மை புலனுகும். புறநானூற்றில் இவன் பாடியவனவாக மூன்று செய்யுட்கள் காணப்படுகின்றன. (214-16) அவ்வ இவனுடைய உயரிய மனப்பான்மையை விளக்குவனவாகும். அங்கே இவன் கூறும் நீதிகள் பலகால் படித்து இன்புறற்பாலன. இவன் இயற்றிய பாடல்கள்: குறுந். 4; புறநா. 3.

செய்குவங் கொல்லோ நல்வினே யெனவே
ஐய மருஅர் கசடீண்டு காட்சி

நீங்கா நெஞ்சத்துத் துணிவில் லோரே
யானை வேட்டுவன் யானையும் பெறுமே
குறும்பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே
அதனால், உயர்ந்த வேட்டத் துயர்ந்திசி னோர்க்குச்
செய்வினை மருங்கின் எய்த லுண்டெனிற்
றெய்யா வுலகத்து நுகர்ச்சியுங் கூடும்
தொய்யா வுலகத்து நுகர்ச்சி யில்லெனின்
மாறிப் பிறப்பி னின்மையுங் கூடும்
மாறிப் பிறவா ராயினும் இமயத்துக்
கோடுயர்ந் தன்ன தம்மிசை நட்டுத்
தீதில் யாக்கையொடு மாய்தறவத் தலையே.

(புறம். 214.)

<u>கோவதத்தர்:</u>— வம்பமாரியைக் காரென மதித்துக் கொன்றை மலர்ந்ததனால் அவை அறிவற்றவை என்று தோழி கூற்றில் இவர் கூறியுள்ளார். மயில் அகவுதல் காம உத்தீபனம் என்பது இவர் வாக்கால் தெரிகிறது. குறுந்தொகையில் இவர் இயற்றிய பாடல்கள் இரண்டு உள்ளன. (பி.ம். கோவத்தன்.)

மடவ மன்ற தடவுநிலைக் கொன்றை
கல்பிறங் கத்தஞ் சென்றோர் கூறிய
பருவம் வாரா வளவை நெரிதரக்
கொம்புசேர் கொடியிணர் ஊழ்த்த
வம்ப மாரியைக் காரென மதித்தே.

(குறுந். 66.)

வம்பு என்னும் உரிச்சொல் நிலையின்மைப் பொருள் குறித்து வந்தது.

<u>கோவூர் கிழார்:</u>— இவர் வேளாண் மரபினர்; சோழ பரம்பரையோரால் ஆதரிக்கப் பெற்றவர்; நன்றி யுள்ளவர்; பிறருடைய சீற்றத்தைத் தணித்தலிற் கண்ணுங் கருத்துமாக விருந்து வாழ்ந்தவர்; யாரும் மன ஒற்றுமையுடன் இருக்க வேண்டுமென்பது இவரது கொள்கை. கணநூல், சோதிடநூல், இசைநூல்

என்பவற்றில் வல்லுநர்; உவமை கூறுதலிலும் உபகாரிகளின் குணங்களைப் பாராட்டுதலிலும் வீரச் செயல்களை விளக்குதலிலும் மிக்க ஆற்றல் வாய்ந்தவர்; அஞ்சாத நெஞ்சினர்; இவை இவருடைய பாடற் பகுதிகளால் விளங்கும். சோழர்களுள் நலங்கிள்ளியென்பவன் ஒரு காலத்தில் ஆவூரையும் ஒருகாலத்தில் உறையூரையும் முற்றியிருந்த பொழுது அவ்வக் காலத்தில் அடைத்துக் கொண்டு அந்நகரங்களுக்குள்ளே அஞ்சியிருந்த நெடுங்கிள்ளியை நோக்கி, 'வெளியே வந்து போர் செய்தல், ஒற்றுமையுடன் வாழ்தல் இந்த இரண்டனுள் ஒன்றைச் செய்து கொள்க' என்று இடித்துக் கூறிய பகுதியும் (44-5), நலங்கிள்ளியிடத்திருந்து உறையூருக்கு வந்த இளந்தத்தனென்னும் புலவனை ஒற்று வந்தானென்று நெடுங்கிள்ளி கொல்லத் தொடங்கிய விடத்து அப்புலவனை உய்வித்தற் பொருட்டுப் பொதுவாகப் புலவர்களின் இயல்பை விதந்து கூறிய பகுதியும் (புறநா. 47), மலையமான் மக்களைக் கிள்ளிவளவன் யானைக்கு இடத்துணிந்த பொழுது அவர்களை உய்விக்கவும் அவனுடைய மனத்தைக் கனிவிக்கவும் எண்ணிச் சிறுவர்களின் இயல்பை எடுத்துக் கூறிய பகுதியும் (46) இவருடைய ஆற்றலையும் அருமைக் குணங்களையும் புலப்படுத்தும். ''சிறப்புடை மரபிற் பொருளு மின்பமும், அறத்துவழிப் படூஉந் தோற்றம் போல, இருகுடை பின்பட வோங்கிய வொருகுடை'', ''போரெனிற் புகலும் புனைகழன் மறவர்'', ''ஊன்சோற் றமலை பாண்கடும் பருத்தும், செம்மற் றம்மநின் வெம்முனையிருக்கை,'' ''காலனும் காலம் பார்க்கும் பாராது, வேலீண்டு தானை விழுமியோர் தொலைய, வேண்டிடத் தடூஉம் வெல்போர் வேந்தே,'' ''மையல் கொண்ட வேமமி லிருக்கையர், புதல்வர் பூங்கண் முத்தி மனையோட், கெவ்வங் கரக்கும் பைதன் மாக்களொடு, பெருங்கலக் குற்றன்றாற் றனே காற்றோ, டெரிநிகழ்ந் தன்ன செலவிற், செருமிகு வளவநிற் சினை இயோர்

நாடே,'' ''உடும்புரித் தன்ன வென்பெழு மருங்கிற், கடும்பின் கடும்பசி களையுநர்க் காணது, சில்செவித் தாகிய கேள்வி நொந்து நொந்து,'' ''மென்மையின் மகளிர்க்கு வணங்கி வண்மையின், ஆடவர்ப் பிணிக்கும் பீடுகெழு நெடுந்தகை, புனிறுதீர் குழவிக் கிலிற்றுமுலை போலச், சுரந்த காவிரி மரங்கொன் மலிநீர், மன்பதை புரக்கு நன்னாட்டுப் பொருநன்'', ''யானை, நெடுநகர் வரைப்பிற் படுமுழா வோர்க்கும், உறந்தை யோனே குருசில், பிறன்கடை மறப்ப நல்குவன் செலினே,'' ''தைஇத் திங்கட் டண்கயம் போலக் கொளக் கொளக் குறைபடாக் கூழுடை வியனகர், அடுதீ யல்லது சுடுதீ யறியா, திருமருந்து விளக்கு நன்னாட்டுப் பொருநன்,'' ''நிறனுற்ற வராப்போலும் வறன்,'' வெய்துண்ட வியர்ப்பல்லது, செய்தொழிலான் வியர்ப்பறியாமை, ஈத்தோ னெந்தை'' என்பவை இவருடைய பாடல்களுட் சிறந்த பகுதிகள். இவராற் பாடப்பட்டோரும் இவர் காலத்தவரும்: சோழன் நலங்கிள்ளி, சோழன் குள முற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்; சிறுகுடிகிழான் பண்ணனென்போரும் அவர்களைப் பாடிய புலவர்களும் ஆவார். இவர் இயற்றிய பாடல்கள் 18. குறுந். 1; திருவள். 1; நற். 1; புறநா. 15.

நீயே, புறவி னல்ல லன்றியும் பிறவும்
இடுக்கண் பலவும் விடுத்தோன் மருகனை
இவரே, புலனுழு துண்மார் புன்க ணஞ்சித்
தமதுபகுத் துண்ணுந் தண்ணிழல் வாழ்நர்
களிறுகண் டழூஉ மழாஅன் மறந்த
புன்றலைச் சிறாஅர் மன்றுமருண்டு நோக்கி
விருந்திற் புன்கணோ வுடையர்
கேட்டனை யாயின் நீ வேட்டது செய்ம்மே.

(புறம். 46.)

கோவேங்கைப் பெருங்கதழ்வர்:— வேங்கை மரத்தைக் கதழ்வீழ் அருவி தாக்குவதாகக் கூறியிருத்தலின் இவர் இப்பெயர் பெற்றனர்.

அம்ம வாழி தோழி நம்மொடு
பிரிவின் ருயி னன்றுமற் றில்ல
குறும்பொறைத் தடைஇய நெடுந்தாள் வேங்கைப்
பூவுடை யலங்குசினை புலம்பத் தாக்கிக்
கல்பொரு திரங்குங் கதழ்வீ ழருவி
நிலங்கொள் பாம்பி னிழிதரும்
விலங்குமலை நாடனொடு கலந்த நட்பே.

(குறுந். 134.)

தடைஇய-பருத்த

அருவி நிலப்பரப்பில் இழிந்து வளந்தருவதேனும் இடையில் மலரை உதிர்த்தலும் கல்லைப் பொருதலும் பாம்பு போலத் தோன்றலுமாகிய துன்பத்திற்கு ஏதுவான செயலைச் செய்ததுபோல, நாடனது நட்பு முடிவில் நன்மையையே தருவதாயினும் இடையிற் பிரிவினுல் துன்பத்திற்குக் காரணமாயிற்று என்பது குறிப்பு.

கோழிக் கொற்றனர்:— இவர் கோழி என்ற பெயரையுடைய உறையூரைச் சார்ந்தவர்; உறையூர் பல புலவர்களுக்கிடமாக இருந்தமை வெளிப்படை. இவரது இயற்பெயர் கொற்றன் என்பது . தலைவன் அறங் கூறவையத்துச் சான்ருேரிடம் தலைவியைப் பற்றிக் கூறி அவளைப் பெறவிரும்பிக் கேட்டல் இவர் பாடலிற் காணப்படுகிறது. கூழிக்கொற்றன் என்றும் வழங்கப் படுகிருர்.

பணைத்தோட் குறுமகள் பாவை தைஇயும்
பஞ்சாய்ப் பள்ளஞ் சூழ்ந்து மற்றிவள்
உருத்தெழு வனமுலை ஒளிபெற எழுதிய
தொய்யில் காப்போர் அறிதலும் அறியார்
முறையுடை அரசன் செங்கோல் அவையத்
தியான்றற் கடவின் யாங்கா வதுகொல்
பெரிதும் பேதை மன்ற
அளிதோ தானேயிவ் வழுங்க லூரே.

(குறுந். 276.)

பைஞ்சாய் என்பது பஞ்சாயென வந்தது. பஞ்சாய்க் கோரையாற் பாவை பண்ணித் தலைவன் கொடுத்தான்.

கோளம் பக்கனார்:— இவர் கொள்ளம் பக்கனார் என்றும் வழங்கப்பெறுவர் போலும். கோளம் என்பது திருக்கோழம்பத்தைக் குறிக்கும். இவர் அவ்வூரில் வாழ்ந்தவர் என்று தெரிகிறது. இவரது பாடல் ஒன்று நற்றிணையில் உள்ளது. குறிஞ்சித்திணையைத் திறம்படப் பாடியுள்ளார்.

யாங்கா குவமோ அணிநுதற் குறுமகள்
தேம்படு சாரல் சிறுதினைப் பெருங்குரல்
செவ்வாய்ப் பைங்கிளி கவரநீ மற்று
எவ்வாய்ச் சென்றனை அவணெனக் கூறி
அன்னை ஆனாள் கழற முன்னின்று
அருவி ஆர்க்கும் பெருவரை நாடனை
அறியலும் அறியேன் காண்டலும் இலனே
வெதிர்புனை தட்டையேன் மலர்பூக் கொய்து
சுனைபாய்ந்து ஆடிற்றும் இலனென நினைவிலை
பொய்யல் அந்தோ வாய்த்தனை அதுகேட்டுத்
தலையிறைஞ் சினளே அன்னை
செலவொழிந் தனையால் அளியைநீ புனத்தே.

(நற்-147)

அணிநுதல் - அழகிய நெற்றி. குறுமகள் - இளமகள். தேம் - இடம்.

கோளியூர்கிழார் மகனார் செழியனார்:— இவரது பெயர் செழியனார். இவர் வேளாண் மரபினைச் சார்ந்தவர். கோளியூர் என்பது இவரது ஊராகும். இவ்வூரில் வாழ்ந்த வேளாளர் ஒருவருடைய மகனார் என்று தெரிகிறது. இவர் குறிஞ்சித்திணையைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். இவரது பாடலொன்று நற்றிணையில் உள்ளது. குறுங்கோழியூர் கிழார் என்றும் வழங்கப் பெறுவர்.

கல்லயற் கலித்த கருங்கால் வேங்கை
அலங்கலந் தொடலை அன்ன குருளை
வயப்புனிற் றிரும்பிணப் பசித்தென வயப்புலி
புகர்முகம் சிதையத் தாக்கிக் களிறட்டு
உருமிசை உரறும் உட்குவரு நடுநாள்
அருளினை போலினும் அருளாய் அன்றே
கனையிருள் புதைத்த அஞ்சுவரும் இயவில்
பாம்புடன் றிரிக்கும் உருமோடு
ஓங்குவரை நாடநீ வருத லானே.

(நற். 383.)

கல்-மலை. கலித்த-தழைத்த. தொடலை- மாலை. வய-வயாநோய். வயம்-வலிமை. உரறும்- முழங்கும். உட்கு-அச்சம். இரிக்கும்-கொல்லும்.

கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக் குமரனார்:—

வஞ்சப் புகழ்ச்சியணி இவர் பாடல்களில் நன்றாக அமைந்துள்ளது. திருவள்ளுவ மாலையில் இவர் பெயரோடு ஒரு பாடல் காணப்படுகிறது. இவரால் பாடப்பட்டோர்: சேரமான் குட்டுவன் கோதை, சோழன் இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நலங்கிள்ளி சேட்சென்னி, ஏனாதி திருக்கிள்ளி, ஈந்தூர்கிழான் தோயன் மாறன், சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திரு மாவளவன், சோழிய ஏனாதி திருக்குட்டுவனென்போர். புறநானூற்றில் இவரது ஆறு பாடல்கள் உள்ளன.

நிரப்பாது கொடுக்குஞ் செல்வமும் இலனே
இல்லென மறுக்குஞ் சிறுமையும் இலனே
இறையுறு விழுமந் தாங்கி அமரகத்
திரும்புசுவைக் கொண்ட விழுப்பு ணோய்தீர்ந்து
மருந்துகொண் மரத்தின் வாள்வடு மயங்கி
வடுவின்று வடிந்த யாக்கையன் கொடையெதிர்ந்
தீர்ந்தை யோனே பாண்பசிப் பகைஞன்
இன்மை தீர வேண்டி னெம்மொடு
நீயும் வம்மோ முதுவா யிரவல
யாந்தன் னிரக்குங் காலைத் தானெம்
உண்ணா மருங்குல் காட்டித் தன்னூர்க்

கருங்கைக் கொல்லனை யிரக்கும்
திருந்திலை நெடுவேல் வடித்திசி னெனவே.

(புறம். 180.)

<u>சங்கவருண ரென்னும் நாகரியர்</u>:— இவர் பாடிய பெருங்காஞ்சித்துறை இனிய பொருள் வாய்ந்தது. இவர் பாடல் யாக்கை நிலையாமை முதலியவற்றை வற்புறுத்திக் கூறும்; இவராற் பாடப்பட்டோன் தந்து மாறன். நாகரியர் என்ற பெயரால் இவர் நகரத்தில் வாழ்ந்தவர் போலும்.

பெரிதாராச் சிறுசினத்தார்
சிலசொல்லாற் பலகேள்வியர்
நுண்ணுணர்வினாற் பெருங்கொடையர்
கலுழ்நனையாற் றண்டேறலர்
கனிகுய்யாற் கொழுந்துவையர்
தாழுவந்து தழூஉமொழியர்
பயனுறுப்பப் பலர்க்காற்றி
ஏம மாக விந்நில மாண்டோர்
சிலரே பெரும கேளினி நாளும்
பலரே தகையஃ தறியா தோரே
அன்னோர் செல்வமு மன்னி நில்லா
தின்னு மற்றதன் பண்பே யதனால்
நிச்சமு மொழுக்க முட்டிலை பரிசில்
நச்சுவர் கையி னிரப்பல் ஓம்புமதி யச்சுவரப்
பாறிறை கொண்ட பறந்தலை மாகத
கள்ளி போகிய களரி மருங்கின்
வெள்ளி னிறுத்த பின்றைக் கள்ளொடு
புல்லகத் திட்ட சில்லவிழ் வல்சி
புலைய னேவப் புன்மே லமர்ந்துண்
டழல்வாய்ப் புக்க பின்னும்
பலர்வாய்த் திராஅர் பருத்துண் டோரே.

(புறம். 360.)

கலுழ்நனை-கலங்கியகள். குய்-நறுமணப்புகை. துவை-துவையல். தாழ் உவந்து-வணங்குதலை விரும்பி. ஆற்றி-கொடுத்து. தகையஃது-மேற்கூறிய தன்மையை. முட்டிலை-குறைபாடில்லாயாய். நிரப்பல் ஓம்பு-நிரம்பு

தலைப் பாதுகாப்பாயாக.. வெள்ளில்-பாடை. நிறுத்த-நிறுத்திய. புல்-தருப்பை. அவிழ்-பருக்கை. வல்சி-உணவு.

சத்தி நாதனார்:— தலைவனை ஓர் இளைய மகள் வருத்தியதற்குச் சிறிய பாம்புக் குட்டி காட்டிலுள்ள பெரிய யானையை வருத்துவதை இவர் உவமை காட்டியுள்ளார். சத்தி நாதனார் என்ற பெயர் சிவபெருமானின் திருப்பெயராகும்.

சிறுவெள் ளரவின் அவ்வரிக் குருளை
கான யானை யணங்கி யாஅங்
கிளையண் முளைவா ளெயிற்றள்
வளையுடைக் கையளெம் மணங்கி யோளே.

(குறுந். 119.)

கரும்பாம்பும் உளதாதலின் அதனை நீக்க வெள்ளரவு என்றான். இதனைக் கோதுமை நாகம் என இக்காலத்தில் வழங்குவர். தோற்றத்தால் அழகிய வரியையுடையதேனும் செயலால் கொடியது.

இளைய பாம்புக்குட்டியானது, பிறருக்கு அடங்காது திரியும் யானையைத் தீண்டி வருத்தியதுபோல, இளமையையுடைய தலைவி பகைவரால் தோல்வியுறாத என்னை வருத்தினாள் என்று உவமையை விரிக்க.

சாகலாசனார்:— இவர் சாகலோசனார் என்றும் வழங்கப் பெறுவர். இவர் கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர். இவர் குட்டுவனையும் அவனது கழுமலத்தையும் சிறப்பித்துப் பாடியுள்ளார். இவரது பாடல்கள் அகநானூற்றில் உள்ளன.

நாயுடை முதுநீர்க் கலித்த தாமரைத்
  தாதி னல்லி அயலிதழ் புரையும்
மாசில் அங்கை மணிமருள் அவ்வாய்
நாவொடு நவிலா நகைபடு தீஞ்சொல்

யாவரும் விழையும் பொலந்தொடிப் புதல்வனைத்
தேர்வழங்கு தெருவில் தமியோற் கண்டே
கூர்எயிற் றரிவை குறுகினள் யாவரும்
காணுநர் இன்மையிற் செத்தனள் பேணிப்
பொலங்கலஞ் சுமந்த பூண்டாங் கிளமுலை
வருக மாளவென் னுயிரெனப் பெரிதுவந்து
கொண்டன ணின்றோட் கண்டுநிலைச் செல்லேன்
மாசில் குறுமகள் எவன்பே துற்றனை
நீயுந் தாயை இவற்கென யான்றற்
கரைய வந்து விரைவனென் கவைஇக்
களவுடம் படுநரிற் கவிழ்ந்துநிலங் கிளையா
நாணி நின்றோ ளிலைகண் டியானும்
பேணினென் அல்லனோ மகிழ்ந வானத்து
அணங்கருங் கடவுளன் னோளின்
மகன்றா யாதல் புரைவதாங் கெனவே.

(அகம்.16.)

மணி-பவளமணி. நவிறல்-பழகுதல். நகை-மகிழ்ச்சி. செத்தனள்பேணி - கருதிப்பேணி. செத்து-ஒப்புமாம்.

சாத்தந்தையார்:— இவர், பதினெண் கீழ்க்கணக்கினுளொன்றாகிய திணைமொழியைம்பது என்னும் நூலாசிரியரான கண்ணஞ்சேந்தனாருடைய தந்தையார். மறப்போரியல்பு இவர் பாடலிற் காணப்படுகின்றது. இவராற் பாடப்பட்டோன் சோழன் போர்வைக் கோப்பெருநற்கிள்ளி. இவர் பாடிய புறப்பாடல்கள் 4; நற். 1.

ஆர்ப்பெழு கடலினும் பெரிதவன் களிறே
கார்ப்பெயல் உருமின் முழங்கலா னுவே
யார்கொல் அளியர் தாமே யார்நார்ச்
செறியத் தொடுத்த கண்ணிக்
கவிகை மள்ளன் கைப்பட் டோரே.

(புறம்.81.)

ஆர்-ஆத்தி. அரசன் இயல்பையும், வென்றியையும் கூறினமையின், இஃது அரசவாகை.

சாத்தனுர்:— சாத்தன் என்ற பெயரிய புலவர் பலராவர். இரந்தோர் வேண்டியவற்றைக் கொடுத்து மீட்டும் அவைதாவென்று சொல்லுவதினும் இன்னுயிர் இழப்பு இனியதாகும் என்ற நீதியைத் தலைவியின் கூற்றால் இவர் அமைத்துள்ளது சிறந்த பகுதியாகும்.

அடும்பவிழ் அணிமலர் சிதைஇமீ னருந்தும்
தடந்தா ணாரை யிருக்கு மெக்கர்த்
தண்ணந் துறைவற் றொடுத்து நந்நலம்
கொள்வா மென்றி தோழி கொள்வாம்
இடுக்கண் அஞ்சி இரந்தோர் வேண்டிய
கொடுத்தவை தாவென் சொலலினும்
இன்னா தோநம் இன்னுயிர் இழப்பே.

(குறுந். 349.)

கொடுத்ததைத் திரும்பப் பெறுமை:

''அலைகடல் கடையக் கண்டே னயனைந்து
சிரமுங் கண்டேன்
மலையிரு சிறகு கண்டேன் வாரிதி
நன்னீர் கண்டேன்
சிலைமதன் வடிவு கண்டேன் சிவன்சுத்தக்
கழுத்துக் கண்டேன்
குலவரி யிருகண் கண்டேன் கொடுத்ததை
வாங்கக் காணேன்.

(பழம்பாடல்.)

சிறுமேதாவியார்:— இவர் கடைச் சங்கப் புலவர்களுள் ஒருவர் என்பதைத் திருக்குறளுக்குச் சிறப்புப்பாயிரம் அளித்திருப்பதிலிருந்து அறிந்துகொள்ளலாம். இவர் இயற்றிய வெண்பா ஒன்று திருவள்ளுவமாலையில் உள்ளது. நன்பலூர்ச் சிறுமேதாவியார் என்ற புலவர் அகநானூறு 394 ஆம் பாடலுக்கு ஆசிரியர். இவரது ஊர் மயலூர் என்று தெரிகிறது.

வீடொன்று பாயிர நான்கு விளங்கறம்
நாடிய முப்பத்து மூன்றொன்றூழ்—கூடுபொருள்

எள்ளி லெழுப திருபதிற் றைந்தின்பம்
வள்ளுவர் சொன்ன வகை.

(திருவள்ளுவ. 20.)

<u>சிறுமோலிகனுர்:—</u> இவர் சங்கப் புலவர்களுள் ஒருவர். மோலிகனுர் என்பது காரணப் பெயராக இருத்தல் கூடும். சிறுமை என்பது இங்கு இளமையைக்குறிக்கும். இவரது பாடலொன்று நற்றிணையில் உள்ளது. குறிஞ்சித் திணையைச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

கேளாய் எல்ல தோழி அல்கல்
வேணவா நலிய வெய்ய உயிரா
ஏமான் பிணையின் வருந்தினே ளாகத்
துயர்மருங் கறிந்தனள் போல அன்னை
துஞ்சா யோவென் குறுமகள் என்றலின்
சொல்வெளிப் படாமை மெல்லவென் னெஞ்சிற்
படுமழை பொழிந்த பாறை மருங்கிற்
சிரல்வாய் உற்ற தளவிற் பரலவற்
கான்கெழு நாடற் படர்ந்தோர்க்குக்
கண்ணும் படுமோ வென்றிசின் யானே.

(நற். 61.)

எல்ல - ஒருவிளிப்பெயர்; இருபாற்கும் பொது. அல்கல்-இரவு. வேணவா-வேட்கையால் உண்டாகிய அவா. ஏ-அம்பு. துயர் மருங்கு-துன்பத்தின் நிலே. குறுமகள்-இளேயமகள். குறுமை என்பது இளமையை உணர்த்தா நின்றது. படு-மிக்க. சிரல்-சிச்சிலிப் பறவை உற்ற-போன்ற. தளவம்-முல்லே. பரல்-பருக்கைக் கற்கள். அவல்-பள்ளம். படர்தல்-நினைத்தல்.

<u>சிறைக்குடி ஆந்தையார்:—</u> சிறைக்குடி என்பது ஓர் ஊர். அவ்வூரினர் இவர். ''புணரிற் புணராது பொருளே பொருள் வயிற், பிரியிற் புணராது புணர்வே'' என்றும், ''பொருளே, வாடாப் பூவின் பொய்கை நாப்பண், ஓடுமீன் வழியிற் கெடுவ (நற்.16) என்றும் பொருளேப் பற்றி இவர் கூறியுள்ளார். பிரிவினும் புணர்ப்பின் மிகுதியையே தம் பாடல்களில் இவர் பல

படப் பாராட்டியுள்ளார். தலைவி, ''இருவேமாகிய உலகத், தொருவேமாகிய புன்மை நாமுயற்கு உடனுயிர் போகுக' (குறுந். 57) என்பதும், ''கடல் சூழ் மண்டிலம் பெறினும் விடல் சூழலன்'' (குறுந். 300) என்று தலைவன் தலைவிக்கு உறுதி கூறுவதும் தலைவன் தலைவியரில் ஒருவர்பால் மற்றொருவர் வைத்துள்ள அன்பைப் புலப்படுத்துவனவாகும். தலைவி தோழியின் வழி ஒழுகுவாள் என்பதை, ''தலைப்புணைக் கொளினே தலைப்புணைக் கொள்ளும், கடைப் புணைக் கொளினே கடைப்புணைக் கொள்ளும் புணைகை விட்டுப் புனலோ டொழுகின், ஆண்டும் வருகுவள் போலும்'' (குறுந். 222) என்பதனுல் இவர் புலப்படுத்தியிருக்கும் நயம் படித்தின்புறற் பாலதாகும். குறுந்தொகையிலன்றி நற்றிணையில் ஒரு செய்யுள் இவர் செய்தது.

பூவிடைப் படினும் யாண்டுகழிந் தன்ன
நீருறை மகன்றிற் புணர்ச்சி போலப்
பிரிவரி தாகிய தண்டாக் காமமொ
டுடனுயிர் போகுக தில்ல கடனறிந்
திருவே மாகிய வுலகத்
தொருவே மாகிய புன்மைநா முயற்கே.
(குறுந். 57.)

தலைவனைப் பிரிந்து தான் ஒருத்தியாதலையும், தன்னைப் பிரிந்து அவன் ஒருவனுதலையும் 'ஒருவேம்' என்பதனுல் புலப்படுத்தினுள்.

செங்கண்ணனுர்:— இவர் மதுரைச் செங்கண்ணனுர் என்றும் வழங்கப்பெறுவார். உறுப்பால் வந்த பெயர். இவர் பாடியனவாக அகநானூற்றில் ஒன்றும், நற்றிணையில் ஒன்றுமாக இரண்டு பாடல்கள் உள்ளன.

இருங்கல் அடுக்கத் தென்னையர் உழுத
கருங்காற் செந்தினை கடியு முண்டன
கல்லக வரைப்பிற் கான்கெழு சிறுகுடி
மல்லன் மருங்கின் மௌவலும் அரும்பின

நகையுரு முரறு நாம நள்ளிருள்
வரையக நாடன் வரூஉ மென்ப
துண்டுகொ லன்றுகொல் யாதுகொன் மற்றென
நின்று, மதிவல் உள்ளமொடு மறைந்தவை யாடி
அன்னையும் அமரா முகத்தினள் நின்னெடு
நீயே சூழ்தல் வேண்டும்
பூவேய் கண்ணியது பொருந்து மாறே.
(நற்.122.)

இருங்கல்-பெரியமலை. மல்லல்-வளம்; உரிச்சொல்.

செம்பியனர்:— இவரது பெயரிலிருந்து சோழ அரசர் மரபினரென்று தெரிகிறது. இவர் குறிஞ்சித்திணையைப் புனைந்துள்ளார். இவர் பாடிய நற்றிணைப்பாடல் ஒன்று.

கொடுங்குரல் குறைத்த செவ்வாய்ப் பைங்கிளி
அஞ்சல் ஓம்பி ஆர்பதங் கொண்டு
நின்குறை முடித்த பின்றை என்குறை
செய்தல் வேண்டுமால் கைதொழு திரப்பல்
பல்கோட் பலவின் சாரல் அவர்நாட்டு
நின்கிளை மருங்கின் சேறி யாயின்
அம்மலை கிழவோர்க் குரைமதி இம்மலைக்
கானக் குறவர் மடமகள்
ஏனல் காவல் ஆயினள் எனவே .
(நற். 102.)

கொடுங்குரல்-வளைந்த தினைக்கதிர். ஆர்பதம்-உணவு. கோள்-காய். இச்செய்யுளில் தலைவி தன்னைத்தாழ்த்தியும் கிளியை உயர்த்தியும் கூறியுள்ளது சிறப்பு.

செம்புலப் பெயனீரார்:— நொதுமலராக இருந்த தலைவனும் தலைவியும் ஒன்றுபட்டு உள்ளப்புணர்ச்சியுற்றதை, ''செம்புலப் பெயனீர் போல, அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே'' என்று உவமை வாயிலாக வெளியிட்ட சிறப்புப் பற்றி இவர் இப்பெயர் பெற்றுர்.

யாயு ஞாயும் யாரா கியரோ
எந்தையு நுந்தையும் எம்முறைக் கேளிர்

யானு நீயும் எவ்வழி யறிதும்
செம்புலப் பெயனீர் போல
அன்புடை நெஞ்சம் தாங்கலந் தனவே.
(குறுந். 40.)

செம்மண்ணிலத்துப் பெய்த நீரானது அம்மண்ணேடு கலந்து அதன் நிறத்தையும் சுவையையும் பெற்று ஒன்று படுவதுபோல, நம்நெஞ்சம் ஒன்றேடொன்று கலந்து தன்மை ஒன்றுபட்டன என்று உவமையை விரித்துக் கொள்க. நெஞ்சம் கலந்தமைக்குச் செம்புலப் பெயனீரை உவமைகூறிய சிறப்பால் இச்செய்யுளின் ஆசிரியர் ''செம்புலப் பெயனீரார்'' என்னும் சிறப்புப் பெயர் பெற்ருர்.

செய்தி வள்ளுவன் பெருஞ்சாத்தனுர்:— அரசாங்கத்துச் செய்தியைத் தெரிவிக்கும் கருமத் தலைவர்கள் வள்ளுவர் எனப்படுவர். இக்காலத்தில் சோதிடம் கூறுவோர் வள்ளுவர் எனப்பெறுவர். தாழைமலர் குருகுகள் கோதுகின்ற சிறகைப்போல மடல்விரியும் என்று ஒரே நிலப் பொருளாதல் பற்றித் தாழைக்குக் குருகினை இவர் உவமை கூறியது அழகாக அமைந்துள்ளது.

வீழ்தாழ் தாழை யூழுறு கொழுமுகை
குருகுள ரிடத்தின் விரிபுதோ டவிழும்
கானல் நண்ணிய சிறுகுடி முன்றில்
திரைவந்து பெயரு மென்பநத் துறந்து
நெடுஞ்சே ணட்டா ராயினும்
நெஞ்சிற் கணியர் தண்கடல் நாட்டே.
(குறுந். 228.)

செயலூர் இளம்பொன்சாத்தன் கொற்றனுர்:— இவரது ஊர் செயலூர். இவர் தந்தை பெயர் சாத்தன். இவர் பொன் வாணிக மரபைச் சார்ந்தவர். இவர் இயற்றிய பாடல் அகநானூற்றில் ஒன்று உள்ளது. சிறுகுடிக்குத் தலைவனுகிய பண்ணனைப் பாராட்டியுள்ளார். அயிரி யாறு இவரால் சிறப்பிக்கப் பெற்றுள்ளது. இவர்

செல்லூர் இளம்பொன் சாத்தன் கொற்றனர் என்றும், உறையூர் இளம்பொன் வாணிகன் சாத்தன் கொற்றனர் என்றும் வழங்கப் பெறுவர். காட்டிலுள்ள சூல்கொண்ட பெண்மயில் பாகற் பழங்களைத் தின்ன விரும்பும் என்பதைத் திறம்படக் கூறியிருப்பது சிறப்பு.

தொன்னலம் சிதையச் சாஅய் அல்கலும்
இன்னும் வாரார் இனியெவன் செய்கெனப்
பெரும்புலம் புறுத லோம்புமதி சிறுகண்
இரும்பிடித் தடக்கை மான நெய்யருந்
தொருங்குபிணித் தியன்ற வெறிகொள் ஐம்பால்
தேங்கமழ் வெறிமலர் பெய்ம்மார் காண்பின்
கழையமல் சிலம்பின் வழைதலை வாடக்
கதிர்கதங் கற்ற வேக னெறியிடைப்
பைங்கொடிப் பாகற் செங்கனி நசைஇக்
கான மஞ்ஞைக் கமஞ்சூன் மாப்பெடை
அயிரியாற் றடைகரை வயிரி னரலும்
காடிறந் தகன்றோர் நீடின ராயினும்
வல்லே வருவர் போலும் வென்வேல்
இலைநிறம் பெயர வோச்சி மாற்றோர்
மலைமருள் யானை மண்டமர் ஒழித்த
கழற்கால் பண்ணன் காவிரி வடவயின்
நிழற்கயம் தழீஇய நெடுங்கான் மாவின்
தளிரே ராகந் தகைபெற முகைந்த
அணங்குடை வனமுலைத் தாஅயநின்
சுணங்கடை வரித்த ரெய்யிலை நினைந்தே.

(அகம். 177.)

செயலூர்க் கொடுஞ் செங்கண்ணனர்:— இவர் கடைச் சங்கப் புலவர்களுள் ஒருவர். திருக்குறளுக்குச் சிறப்புப் பாயிரம் அளித்தவர்களுள் ஒருவர். செயலூர் என்பது இவரது ஊர். இவரது பாடல் திருவள்ளுவமாலையில் உள்ள ஒன்றே. வேறு பாடல்கள் இயற்றியதாகத் தெரிய வில்லை.

வேதப் பொருளை விரகால் விரித்துலகோர்
ஓதத் தமிழால் உரைசெய்தார்—ஆதலால்

உள்ளுந ருள்ளும் பொருளெல்லா முண்டென்ப
வள்ளுவர் வாய்மொழி மாட்டு.

(திருவள்ளுவ. 42.)

செயிர்க் காவிரியார்மகனுர் சாத்தனுர்:— இவர் செயிர்க் காவிதியார் மகனுர் சாத்தனுர் என்றும் வழங்கப் பெறுவர். சாத்தனுர் என்பது இயற் பெயர். இவர் திருக்குறளுக்குச் சிறப்புப்பாயிரம் அளித்தவர்களுள் ஒருவர். இவர் அளித்த சிறப்புப்பாயிரச் செய்யுள் திருவள்ளுவமாலையில் உள்ளது.

ஆவனவு மாகா தனவு மறிவுடையார்
யாவரும் வல்லார் எடுத்தியம்பத்—தேவர்
திருவள் ளுவர்தாமுஞ் செப்பியவே செய்வார்
பொருவி லொழுக்கம்பூண் டார்.

(திருவள்ளுவ. 41.)

செல்லூர்க் கொற்றனுர்:— இவர் செல்லூரென்னும் ஊரினர். குறிஞ்சியும் முல்லையும் மயங்கிய பாலைத் திணையைப் பற்றிய ஒரு செய்யுளே இவர் பாடியது.

கண்ணி மருப்பி னண்ண னல்லேறு
செங்கோற் பதவின் வார்குரல் கறிக்கும்
மடக்கண் வஃரயா நோக்கி வெய்துற்றுப்
புல்லரை யுகாஅய் வரிநிழல் வதியும்
இன்னு வருஞ்சுர மிறத்தல்
இனிதோ பெரும வின்றுணைப் பிரிந்தே.

(குறுந். 363.)

கண்ணி மருப்பு-மாலையை அணிந்த மருப்பு. பதவு-அறுகு.

செல்லூர்கிழார் மகனுர் பெரும்பூதங் கொற்றனுர்:— செல்லூர் என்பது இவரது ஊர். பெரும்பூதங் கொற்றனுருடைய தந்தை செல்லூர் கிழார். இவர் வேளாண் குடியைச் சேர்ந்தவர். இவர் பாடியது அக நானூற்றுப் பாடல் ஒன்றே.

எவன்கொல் வாழி தோழி மயங்குபிசிர்
மல்குதிரை உழந்த ஒல்குநிலைப் புன்னை
வண்டிமிர் இணர நுண்டாது வரிப்ப
மணங்கமழ் இளமணல் எக்கர்க் காண்வரக்
கணங்கொள் ஆயமொடு புணர்ந்துவிளை யாடக்
கொடுஞ்சி நெடுந்தேர் இளையரொடு நீக்கித்
தாரன் கண்ணியன் சேரவந்து ஒருவன்
வரிமனை புகழ்ந்த கிளவியன் யாவது
மறுமொழி பெறாஅன் பெயர்ந்தனன் அதற்கொண்
டரும்படர் எவ்வமொடு பெருந்தோள் சாஅய்
அவ்வலைப் பரதவர் கானலஞ் சிறுகுடி
வெவ்வாய்ப் பெண்டிர் கவ்வையிற் கலங்கி
இறைவளை நெகிழ்ந்த நம்மொடு
துறையும் துஞ்சாது கங்கு லானே.
(அகம். 250.)

மயங்குபிசிர்-நெருங்கிய துளிகள். வரிப்ப-அழகு செய்ய. அதற்கொண்டு-அதுமுதற்கொண்டு.

செல்லூர்க் கோசிகன் கண்ணனார்:— இவர் அந்தணர். கௌசிக கோத்திரத்தைச் சார்ந்தவர். கண்ணனார் என்பது இவரது இயற்பெயர். செல்லூர் என்பது இவரது ஊர். இவர் மருதத்தைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். இவர் இயற்றியுள்ள பாடலொன்று அகநானூற்றில் உள்ளது. இவர் செயலூர்க் கோசங் கண்ணனார் என்றும் வழங்கப்பெறுவர்.

இம்மை யுலகத் திசையொடும் விளங்கி
மறுமை யுலகமு மறுவின் றெய்துப
செறுநரும் விழையுஞ் செயிர்தீர் காட்சிச்
சிறுவர்ப் பயந்த செம்ம லோரெனப்
பல்லோர் கூறிய பழமொழி யெல்லாம்
வாயே யாகுதல் வாய்த்தனந் தோழி
நிரைதார் மார்ப னெருந லொருத்தியொடு
வதுவை யயர்தல் வேண்டிப் புதுவதி
னியன்ற வணிய னித்தெரு விறப்போன்
மாண்டொழின் மாமணி கறங்கக் கடைகழிந்து
காண்டல் விருப்பொடு தளர்புதளர் போடும்
பூங்கட் புதல்வனை நோக்கி நெடுந்தேர்

தாங்குமதி வலவவென் றிழிந்தனன் றாங்காது
மணிபுரை செவ்வாய் மார்பகஞ் சிவணப்
புல்லிப் பெரும செல்லினி யகத்தெனக்
கொடுப்போற் கொல்லான் கலுழ்தலிற் றடுத்த
மாநிதிக் கிழவனும் போன்மென மகனொடு
தானே புகுதந் தோனே யானது
படுத்தனெ னாகுத னாணி யிடித்திவற்
கலக்கினன் போலுமிக் கொடியோ னெனச்சென்
றலைக்குங் கோலொடு குறுகத் தலைக்கொண்
டிமிழ்கண் முழவி னின்சீ ரவர்மனைப்
பயிர்வன போலவந் திசைப்பவும் தவிரான்
கழங்கா டாயத் தன்றுநம் மருளிய
பழங்க ணோட்டமு நலிய
வழுங்கின னல்லனோ வயர்ந்ததன் மணனே.

(அகம். 66.)

சேந்தங் கண்ணனார்:— இவரது இயற்பெயர் கண்ணனார். சேந்தன் என்பது இவரது தந்தையின் பெயர். இவர் பாடியனவாக அகநானூற்றுள் ஒரு செய்யுளும், நற்றிணையில் ஒரு செய்யுளுமாக இரண்டு பாடல்கள் உள்ளன. இவர் நெய்தல் திணையைச்சிறப்பித்துள்ளார். கற்போர் மனத்தைக் கவருமாறு இவர் நாரைவிடுதூது கூறியுள்ளார்.

வளைநீர் மேய்ந்து கிளைமுதல் செலீஇ
வாப்பறை விரும்பினை யாயினுந் தூச்சிறை
இரும்புலா அருந்துநின் கிளையொடு சிறிதிருந்து
கருங்கால் வெண்குருகு எனவ கேண்மதி
பெரும்புலம் பின்றே சிறுபுன் மாலை
அதுநீ அறியின் அன்புமார் உடையை
நொதுமல் நெஞ்சம் கொள்ளா தென்குறை
இற்றாங் குணர உரைமதி தழையோர்
கொய்குழை யரும்பிய குமரி ஞாழல்
தெண்டிரை மணிப்புறம் தைவரும்
கண்டல் வேலிநும் துறைகிழ வோற்கே.

(நற். 54.)

வாப்பறை - தாவிப்பறத்தல். கிளை - சுற்றம். மதி இரண்டும் அசை. குமரி-இளமை. ஞாழல்-குங்கும

மரம், கோங்கமரம் முதலாயின. கண்டல்-நெய்தல் நிலத்திலுள்ள ஒரு மரம்.

சேந்தம் பூதனர்:— சேந்தனுடைய மகனர் சேந்தம் பூதனர் எனப்படுவர். சேந்தங் கண்ணனர், சேந்தன் கீரனர், சேந்தன் கூத்தனர், சேந்தங் கொற்றனர் என்ற பெயர்களையுடைய வேறு சங்கப் புலவர்களும் உண்டு. ''திறவோர் செய்வினை அறவதாகும்'' என்பதனுல், பெரியோரிடத்து இவருக்குள்ள நல்லெண்ணம் புலனுகின்றது. மலைப்பாம்பு யானையைப் புரட்டுவதாக (நற். 261) நெறியின் தன்மையை இவர் ஓரிடத்திற் புலப்படுத்தி யுள்ளார். இவர் பெரும்பாலும் குறிஞ்சியையும், நெய்தலையும், முல்லையையும் புனைந்து பாடியுள்ளார். இவர் பாடியனவாக நற்றிணையில் ஒன்றும், குறுந்தொகையில் ஒன்றும் ஆக இரண்டு பாடல்கள் உள்ளன.

எழின்மிக வுடைய தீங்கணிப் படூஉம்
திறவோர் செய்வினை யறவ தாகும்
கிளையுடை மாந்தர்க்குப் புணையுமா ரிவ்வென
ஆங்கறிந் திசினே தோழி வேங்கை
வீயா மென்சினை வீயுக யானை
ஆர்துயி லியம்பு நாடன்
மார்புரித் தாகிய மறுவி னட்பே.
(குறுந். 247.)

இவ்-இவை; அண்மையில் நிகழும் செயல்களாதலின் இங்ஙனம் சுட்டினுள். மார்-அசைநிலை. அறிந்திசின்-இசின் தன்மைக்கண் வந்த அசை. யானையால் சிதைக்கப்படாமல் இருத்தலின் ''வீயா மென்சினை'' என்று சிறப்பித்தாள். துயில்: ஆகுபெயர். இயம்புதல்-நெடுந்தூரம் ஒலித்தல்.

சேந்தன் கீரனர்:— சேந்தனுகிய கீரனர் என்பது இத்தொடரின் பொருள். தலைவியின் கூற்றுக இவர், ''கடுந்தேர் யான் கண்டனனே விலனே........ஆய

மெல்லாமுடன் கண்டன்றே'' என்று கூறியிருப்பது பெண்கள் வழக்கமாகக் கூறும் கூற்ருக அமைந்துள்ளது.

அலர்யாங் கொழிவ தோழி பெருங்கடற்
புலவுநா றகன்றுறை வலவன் ருங்கவும்
நில்லாது கழிந்த கல்லென் கடுந்தேர்
யான்கண் டனனே விலனே பாணுள்
ஓங்கல் வெண்மணற் ருழ்ந்த புன்னைத்
தாதுசேர் நிகர்மலர் கொய்யும்
ஆய மெல்லா முடன்கண் டன்றே.

(குறுந். 311.)

தாங்குதல்-வேகமாகச் செல்லுதலைத் தடுத்தல். ஓங்கல்வெண்மணல் - மணல்மேடு. மணற்குன்றென்பர். நிகர்மலர்-ஒளியையுடையமலர்.

<u>சேரமான் இளங்குட்டுவனுர்:—</u> இவர் அரசர். சேரர் மரபினர். இவர் பாலைத்திணையைச் சிறப்பித்துள்ளார். இவர் பாடிய அகநானூற்றுச் செய்யுள் ஒன்று.

நோகோ யானே நோதகு முள்ளம்
அம்தீங் கிளவி ஆயமொடு கெழீஇப்
பந்துவழிப் படர்குவள் ஆயினும் நொந்துநனி
வெம்புமனளிய டானே யினியே
வன்க ணுளன் மார்புற வளைஇ
இன்சொற் பிணிப்ப நம்பி நங்கண்
உறுதரு விழும முள்ளா ளொய்யெனத்
தெறுகதி ருலைஇய வேனில் வெங்காட்
டுறுவளி யொலிகழைக் கண்ணுறுபு தீண்டலிற்
பொறிபிதிர் பெடுத்த பொங்கெழு கூரெரிப்
பைதறு சிமையப் பயநீங் காரிடை
நல்லடிக் கமைந்த வல்ல மெல்லியல்
வல்லுநள் கொல்லோ தானே யெல்லி
ஓங்குவரை யடுக்கத் துயர்ந்த சென்னி
மீனெடு பொலிந்த வானிற் ருேன்றித்
தேம்பாய்ந் தார்க்குந் தெரியிணர்க் கோங்கின்
காலுறக் கழன்ற கண்கமழ் புதுமலர்

கைவிடு சுடரிற் றேன்று
மைபடு மாமலை விலங்கிய சுரனே.

(அகம். 153.)

நோகோ யான் நோதகு உள்ளம்-இதற்கு நான் நோவாநின்றேன் ; என் நெஞ்சமும் நோவத் தக்கதே என்று மகட்போக்கிய செவிலித்தாய் சொன்னுள் என்று கொள்க. நோகோ என்றவிடத்துள்ள ஓகாரம் ஒழியிசை. ஆயமொடு கெழீ-தோழிகளுடன் கூடி. எல்லி-இரவு. கால்-காற்று.

சேரமான் கணைக்காலிரும்பொறை:— இவன் சோழன் செங்கணுனெடு போர் செய்து பிடிக்கப்பட்டுக் குட வாயிற் கோட்டச் சிறையிற் கிடந்து தண்ணீர் தா வென்று கேட்டு உடனே பெருது பின்பு பெற்று அதனை மானத்தால் உண்ணுது கைக்கொண்டிருந்து, ''குழவி யிறப்பினும்'' என்னும் பாடலைப் பாடித் தன் கருத்தைப் புலப்படுத்தி அப்பால் துஞ்சினுன்.

குழவி யிறப்பினு மூன்றடி பிறப்பினும்
ஆளன் றென்று வாளிற் றப்பார்
தொடர்ப்படு ஞமலியி னிடர்ப்படுத் திரீஇய
கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை யின்றி வயிற்றுத்தீத் தணியத்
தாமிரந் துண்ணு மளவை
ஈன்ம ரோவிவ் வுலகத் தானே.

(புறம். 74.)

ஊன்றடி-ஊன்பிண்டம்.

சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை:— இவன், தன் மனைவி இறந்தபொழுது பிரிவாற்ருது, ''யாங்குப் பெரிதாயினும்'' என்னும் பாடலைப் பாடினுன்.

யாங்குப்பெரி தாயினு நோயள வெனைத்தே
உயிர்செகுக் கல்லா மதுகைத் தன்மையிற்
கள்ளி போகிய களரியம் பறந்தலை

வெள்ளிடைப் பொத்திய விளைவிற கீமத்
தொள்ளழற் பள்ளிப் பாயல் சேர்த்தி
ஞாங்கர் மாய்ந்தனண் மடந்தை
இன்னும் வாழ்வ லென்னிதன் பண்பே.
(புறம். 245.)

பள்ளிப்பாயல்-ஒருபொருட்பன்மொழி.

சேரமானெந்தை:— உத்தம மகளிருடைய நுதல் இயற்கை மணமுடையதென்று கொண்டு இவர் ''தேமு ரொண்ணுதல்'' என்பர். தோழி தலைவியை ஆற்றுவிக்க வேண்டி, ''தலைவன் செலவு நின்னொடும் ஆகும்'' என்று கூறுவது இலக்கியங்களில் அருமையாகக் காணப் படுவதொன்றும். அகநா. 41-ஆம் பாடலும் இவரியற்றிய தென்பது பல சுவடிகளால் தெரியவருகிறது.

நீர்வார் கண்ணை நீயிவ ணொழிய
யாரோ பிரிகிற் பவரே சாரற்
சிலம்பணி கொண்ட வலஞ்சுரி மராஅத்து
வேனில் அஞ்சினை கமழும்
தேமு ரொண்ணுத னின்னொடுஞ் செலவே.
(குறுந். 22.)

யாரோ என்பது ஒருவரும் இலர் என்னும் பொருளில் வந்தது. பிரிகிற்பவர்-பிரியச் சம்மதிப்போர். கிற்றல்-சம்மதித்தல்.

சோணாட்டு முகையலூர்ச் சிறுகருந்தும்பியார்:— முகையலூர்ச் சிறு கருந்தும்பியாரென்றும் பிரதிபேதமுண்டு. திருவள்ளுவமாலையில் 17-ஆம் செய்யுளாகிய, ''உள்ளுத லுள்ளி'' என்னும் வெண்பா இவரால் இயற்றப்பெற்றது. இவராற் பாடப்பட்டோன் வல்லார் கிழான் பண்ணன். இவர் பாடியன புறநானூற்றுப் பாடல்கள் இரண்டே.

மன்ற விளவின் மனைவீழ் வெள்ளில்
கருங்க ணெயிற்றி காதன் மகனொடு
கான விரும்பிடிக் கன்றுதலைக் கொள்ளும்

பெருங்குறும் புடுத்த வன்புல விருக்கைப்
புலாஅ வம்பிற் போரருங் கடிமிளை
வலாஅ ரோனே வாய்வாட் பண்ணன்
உண்ணு வறுங்கடும் புய்தல் வேண்டின்
இன்னே சென்மதி நீயே சென்றவன்
பகைப்புலம் படரா வளவைநின்
பசிப்பகைப் பரிசில் காட்டினை கொளற்கே. (புறம். 181.)

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன்:–

தன்னுட்டில் வேளாண்மைத் தொழிலிற் சிறந்து விளங்கிய பண்ணனென்பவனுடைய அரிய குணங்களை இவன் பாராட்டிப் பாடினன். இவனது இராசதானி உறையூர்; மிக்க கொடையும் வீரமும் உடையோன். செய்யுள் செய்தலில் வல்லவன்; கருவூரை முற்றுகை செய்து சேரனை வென்றவன். இவனைப் பாடிய புலவர் கள்: ஆலத்தூர்கிழார், மாறேக்கத்து நப்பசலையார், ஆவூர் மூலங்கிழார், இடைக்காடனர், ஆடுதுறை மாசாத்தனர் ஐயூர் முடவனர், கோவூர்கிழார், நல்லிறையனர், எருக்காட்டூர்த் தாயங்கண்ணனர், வெள்ளைக்குடி நாகனர். இவருள் இவன் இறந்த பின்பும் இருந்து பிரிவாற்ருது வருந்தியவர்கள்: மாறேக்கத்து நப்பசலையார், ஐயூர் முடவனர், ஆடுதுறை மாசாத் தனர்.

யான்வாழு நாளும் பண்ணன் வாழிய
பாணர் காண்கிவன் கடும்பின திடும்பை
யாணர்ப் பழுமரம் புள்ளிமிழ்ந் தன்ன
ஊணொலி யரவந் தானுங் கேட்கும்
பொய்யா வெழிலி பெய்விட நோக்கி
முட்டை கொண்டு வற்புலஞ் சேரும்
சிறுநுண் ணெறும்பின் சில்லொழுக் கேய்ப்பச்
சோறுடைக் கையர் வீறுவீ றியங்கும்
இருங்கிளைச் சிருஅர்க் காண்டுங் கண்டும்
மற்று மற்றும் வினவுதும் தெற்றெனப்
பசிப்பிணி மருத்துவ னில்லம்
அணித்தோ சேய்த்தோ கூறுமின் எமக்கே.

(புறம். 173.)

சோழன் நல்லுருத்திரன்:- இப்பெயர் சோழன் நல்லுத்தரனெனவும், நல்லுத்திரனெனவும், உருத்திர னெனவும் பிரதிகளில் வேறுபட்டுள்ளது. இவன் முயற்சியுடையோரிடத்து மிக்க விருப்பும் முயற்சியில்லா ரிடத்து மிக்க வெறுப்பும் உடையானென்றும் சிறந்த நட்புடையவர்பாற் பழகும் இயல்பினனென்றும் இவன் பாடிய பாடல் தெரிவிக்கின்றது; கலித்தொகையில் முல்லைக்கலியும், புறநானூற்றுச் செய்யுளொன்றும் இவன் பாடியன.

விளைபதச் சீறிட நோக்கி வளைகதிர்
வல்சி கொண்டளை மல்க வைக்கும்
எலிமுயன் றனைய ராகி யுள்ளதம்
வளன்வலி யுறுக்கு முளமி லாளரொ
டியைந்த கேண்மை யில்லா கியரோ
கடுங்கட் கேழல் இடம்பட வீழ்ந்தென
அன்றவ ணுண்ணு தாகி வழிநாட்
பெருமலை விடரகம் புலம்ப வேட்டெழுந்
திருங்களிற் றொருத்த னல்வலம் படுக்கும்
புலிபசித் தன்ன மெலிவி லுள்ளத்
துரனுடை யாளர் கேண்மையொ
டியைந்த வைக லுளவா கியரோ.

(புறம். 190.)

சோழன் நலங்கிள்ளி;- இவன் பகைவரை அஞ்சாது வெல்லும் ஆற்றலுடையவனென்றும் பொதுமகளிரைச் சிறிதும் விரும்பாதவனென்றும் இரப்போர்க்கு எவற்றை யும் வரையாது கொடுக்கும் வள்ளலென்றும் செங்கோலை உடையவனென்றும் இவன் பாடிய பாடல்கள் தெரிவிக் கின்றன. இவன் இயற்றிய பாடல்கள் புறநானூற்றில் இரண்டு; 73, 75.

மெல்ல வந்தென் னல்லடி பொருந்தி
ஈயென விரக்குவ ராயிற் சீருடை
முரசுகெழு தாயத் தரசோ தஞ்சம்
இன்னுயி ராயினுங் கொடுக்குவெ னிந்நிலத்
தாற்ற லுடையோ ராற்றல் போற்றுதென்

உள்ள மெள்ளிய மடவோன் றெள்ளிதிற்
றுஞ்சுபுலி யிடறிய சிதடன் போல
உய்ந்தனன் பெயர்தலோ வரிதே மைந்துடைக்
கழைதின் யானைக் காலகப் பட்ட
வன்றிணி நீண்முளை போலச் சென்றவண்
வருந்தப் பொரேஎ னுயிற் பொருந்திய
தீதி னெஞ்சத்துக் காதல் கொள்ளாப்
பல்லிருங் கூந்தன் மகளிர்
ஒல்லா முயக்கிடைக் குழைகவென் றாரே.

(புறம். 73.)

சிதடன்-குருடன்.

தங்கால் ஆத்திரேயன் செங்கண்ணனார்:— தங்கால் என்பது திருத்தண்கால் என்றுவழங்கும் விஷ்ணுஸ்தலம் இவ்வூர் ஸ்ரீவில்லிபுத்தூருக்கு அருகில் உள்ளது. இவர் ஆத்திரேய கோத்திரத்தைச் சேர்ந்தவர். இவர் அந்தணர். குறிஞ்சித்திணையைப் புனைந்து பாடியுள்ளார். இவர் பாடியது நற்றிணைச் செய்யுள் ஒன்றே.

சிறுகட் பன்றிப் பெருஞ்சின வொருத்த
றுறுகட் கண்ணிக் கானவர் உழுத
குலவுக்குர லேனன் மாந்தி ஞாங்கர்
விடரளைப் பள்ளி வேங்கையஞ் சாது
கழைவளர் சாரற் றுஞ்சு நாட
னணங்குடை யருஞ்சூ டருகுவ னெனநீ
நும்மோ ரன்னோர் துன்னார் இவையெனத்
தெரிந்தது வியந்தனென் றோழி பணிந்துநங்
கல்கெழு சிறுகுடிப் பொலிய
வதுவை யென்றவர் வந்த ஞான்றே.

(நற். 386)

ஒருத்தல்-ஆண்பன்றி. குலவுக்குரல்-வளைந்த கதிர். மாந்தி-தின்று.

தண்கால் பூட்கொல்லனார்:—தண்கால் பாண்டி நாட்டி லுள்ளதோரூர்; திருத்தண்காலென இக்காலத்து வழங்

கும்; இது திருமாலின் நூற்றெட்டுத் திருப்பதிகளுள் ஒன்று. பூண் கொல்லனூர்-ஆபரணஞ் செய்யுந் தட்டார்; இவருக்கு இப்பெயர் ஊராலும்தொழிலாலும் வந்தது. இப்பெயர், தங்கால் தாட்கோவலனு ரெனவும் தங்கால் பூட்கோவலனூர் எனவும் காணப் படுகின்றது. இவர் பாடிய புறநானூற்றுப் பாடலில் இல்லற வொழுக்கம் நன்கு கூறப்பட்டுள்ளது.

ஊர்முது வேலிப் பார்நடை வெருகின்
இருட்பகை வெரீஇய நாகிளம் பேடை
உயிர்நடுக் குற்றுப் புலாவிட் டரற்றச்
சிறையுஞ் செற்றையும் புடையுந ளெழுந்த
பருத்திப் பெண்டின் சிறுதீ விளக்கத்துக்
கவிர்ப்பூ நெற்றிச் சேவலிற் றணியும்
அருமிளை யிருக்கை யதுவே மனைவியும்
வேட்டச் சிறுஅர் சேட்புலம் படராது
படமடைக் கொண்ட குறுந்தா ளுடும்பின்
விழுக்குநிணம் பெய்த தயிர்க்கண் விதவை
யாணர் நல்லவை பாணரொ டொராங்கு
வருவிருந் தயரும் விருப்பினள் கிழவனும்
அருஞ்சமந் ததையத் தாக்கிப் பெருஞ்சமத்
தண்ணல் யானை யணிந்த
பொன்செ யோடைப் பெரும்பரி சிலனே.

(புறம். 326)

புலா-புலாவை; வாயிலுள்ள தசையை. சிறை-பக்கம். செற்றை-சிறுதூறு. பருத்திபெண்டின்-பருத்தி நூற்கும் மங்கையின். கவிர்ப்பூ-முள்ளுமுருங்கைப்பூ. சேட்புலம்-நெடுந்தூரமாகிய் இடம். யாணர்-புதிது. நல்லவை-நல்ல உணவுகளை. ஒராங்கு-ஒருபடியாக கிழவன்-தலைவன். ததைய-சிதைய. ஓடை-நெற்றிப்பட்டம்.

<u>தண்கால் பொற்கொல்லன் வெண்ணாகனார்:</u>— இவர் தண்கால் என்னும் ஊரினர். பொற்கொல்லன் என்றமை யால் இவர் கம்மாளர் வகுப்பைச் சேர்ந்தவர் என்பது தெரிகிறது. திருத்தண்காலில் இருந்த இவர் மதுரைக்கு வந்து வாழ்ந்து வந்தவர் என்றும் தெரிகிறது.

இவர் குறிஞ்சியையும், பாலையையும் பாராட்டிப் பாடியுள்ளார். இவர் பாடியனவாக நற்றிணையில் ஒன்றும், குறுந்தொகையில் ஒன்றும், அகத்தில்இரண்டும் புறத்திலொன்றுமாக ஐந்து பாடல்கள் உள்ளன.

கருங்கால் வேங்கை நாளுறு புதுப்பூப்
பொன்செய் கம்மியன் கைவினை கடுப்பத்
தகைவனப் புற்ற கண்ணழி கட்டழித்
தொலிபல் கூந்தல் அணிபெறப் புனைஇக்
காண்டல் காதல் கைம்மிகக் கடீஇயாற்
கியாங்கா குவங்கொ லேழி காந்தள்
கமழ்குலை அவிழ்ந்த நயவருஞ் சாரற்
கூதள நறும்பொழில் புலம்ப வூர்வயின்
மீள்குவம் போலத் தோன்றுந் தோடுபுலர்ந்
தருவியி னொலித்த லானா
கொய்பதம் கொள்ளுநாங் கூஉந் தினையே.

(நற். 313).

கண்ணழிவு-தடை. கட்டழித்தல்-முற்ற ஒழித்தல்.

<u>தண்கால் முடக்கொல்லனார்:</u>—தண்கால்; இது பாண்டி நாட்டிலுள்ளது; திருத்தண்காலென இக்காலத்து வழங்கும்; திருமாலின் நூற்றெட்டுத் திருப்பதிகளுள் ஒன்று. செவிலித் தாய்க்குத் தோழி அறத்தொடு நிற்றலைக் கூறும், இவரது பாட்டு (அகநா. 48) அழகமைந்த தொன்றாகும். இவரியற்றிய செய்யுட்கள் 6 (அகநா. 3; நற்-1; புறநா.1; குறுந். 1.)

தினைகிளி கடிகெனிற் பகலு மொல்லும்
இரவுநீ வருதலி னூறு மஞ்சுவல்
யாங்குச்செய் வாமெம் மிடும்பை நோய்க்கென
ஆங்கியான் கூறிய வினைத்திற்குப் பிறிதுசெத்
தோங்குமலை நாட னுயிர்த்தோன் மன்ற
ஐதே காமம் யானே
கழிமுதுக் குறைமையும் பழியுமென் றிசினே.

(குறுந். 217)

தனிமகனார்:—இவரது இயற்பெயர் புலப்படவில்லை. பாலைத்திணையைச்சிறப்பித்துப் பாடியுள்ளார். இவர் பாடியது நற்றிணைப்பாடல் ஒன்றே. ''வெஞ்சின வேந்தன் பகையலைக் கலங்கி, வாழ்வோர் போகிய பேரூர்ப் பாழ்காத் திருந்த தனிமகன் போன்றே'' என்று கூறியுள்ளதைக்கொண்டு இவர் இப்பெயர் பெற்றார் போலும்.

குணகடன் முகந்து குடக்கேர் பிருளி
மண்டிணி ஞாலம் விளங்கக் கம்மியர்
செம்புசொரி பானையின் மின்னியெவ் வாயுந்
தன்தொழில் வாய்த்த இன்குரல் எழிலி
தென்புல மருங்கிற் சென்றற் றாங்கு
நெஞ்ச மவர்வயிற் சென்றென ஈண்டொழிந்
துண்ட லளித்தெ னுடம்பே விறற்போர்
வெஞ்சின வேந்தன் பகையலைக் கலங்கி
வாழ்வோர் போகிய பேரூர்ப்
பாழ்காத் திருந்த தனிமகன் போன்றே.

(நற். 153)

செம்புசொரிபானை-செம்பால் செய்து கடைந்து வைத்த பானை.

தாமப்பல்கண்ணனார்:—காஞ்சீபுரத்தின் பக்கத்தில் தாமல் என்று ஓரூர் உள்ளது. இவர் அந்தணர்; அரசரோடு நெருங்கிய பழக்கமுடையவர்; தைரியம் மிக்கவர். இவரால் பாடப்பட்டோன் சோழன் நலங்கிள்ளி தம்பி மாவளத்தான். புறநானூற்றுச் செய்யுளொன்றே இவர் பாடியுள்ளார்.

நிலமிசை வாழ்நர் அலமரல் தீரத்
தெறுகதிர்க் கனலி வெம்மை தாங்கிக்
காலுண வாகச் சுடரொடு கொட்கும்
அவிர்சடை முனிவரு மருளக் கொடுஞ்சிறைக்
கூருகிர்ப் பருந்தின் ஏறுகுறித் தொரீஇத்
தன்னகம் புக்க குறுநடைப் புறவின்
தபுதி அஞ்சிச் சீரை புக்க

வரையா வீகை யுரவோன் மருக
நேரார்க் கடந்த முரண்மிகு திருவில்
தேர்வண் கிள்ளி தம்பி வார்கோற்
கொடுமர மறவர் பெரும கடுமான்
கைவண் டோன்ற லைய முடையேன்
ஆர்புனை தெரியனின் முன்னோர் எல்லாம்
பார்ப்பார் நோவன செய்யலர் மற்றிது
நீர்த்தோ நினக்கென வெறுப்பக் கூறி
நின்யான் பிழைத்தது நோவா யென்னினும்
நீபிழைத் தாய்போ னனிநா ணினையே
தம்மைப் பிழைத்தோர்ப் பொறுக்குஞ் செம்மல்
இக்குடிப் பிறந்தோர்க் கெண்மை காணுமெனக்
காண்டகு மொய்ம்ப காட்டினை யாகலின்
யானே பிழைத்தனென் சிறக்கநின் னாயுள்
மிக்குவரு மின்னீர்க் காவிரி
எக்கர் இட்ட மணலினும் பலவே.

(புறம். 43)

தாமோதரனார்:— இவர் தெய்வப் பெயரையுடையவர். மாலைக் காலத்திற் பறவைகள் தம் குஞ்சுகளுக்கு இரை எடுத்துச் செல்வதைக்கண்ட தலைவி தான் மட்டும் தனித்திருத்தலை நினைந்து தான் இரங்கத் தக்கவள் என்று கூறுவதற்குப் பதிலாக மதிமயங்கி, ''அளிய தாமே கொடுஞ் சிறைப்பறவை'' என்று கூறுவதாக இவர் பாடியுள்ள ஒரு பாடலே இவர் பெயரால் வழங்குகிறது.

ஞாயிறு பட்ட வகல்வாய் வானத்
தளிய தாமே கொடுஞ்சிறைப் பறவை
இறையுற வோங்கிய நெறியயன் மராஅத்த
பிள்ளை யுள்வாய்ச் செரீஇய
இரைகொண் டமையின் விரையுமாற் செலவே

(குறுந். 92.)

படுதல்-மறைதல். இறையுறல்-தங்குதல். செரீஇய-செருகும்பொருட்டு.

தாயங்கண்ணனார்:— எருக்காட்டூர்த் தாயங்கண்ண னாரென்ற புலவரும் இவரும் ஒருவரோ வேறோ தெரிய வில்லை. இவருடைய பாட்டில், மயானத்தின் இயல் பும் அதன் தொன்மையும் விளங்கக் கூறப்பட்டுள்ளன. ''நெஞ்சமர் காதல ரழுத கண்ணீர்; என்புபடு சுடலை வெண்ணீ றவிப்ப, எல்லார் புறனுந் தான்கண் டுல கத்து, மன்பதைக் கெல்லாந் தானாய்த், தன்புறங் காண்போர்க் காண்பறியாதே'' (புறநா 356:5-9) என்பதைப் பார்க்க; ''முன்புறந் தான்காணு மிவ் வுலகை யிவ்வுலகிற், றன்புறங் கண்டறிவார் தாமில்லை- அன்பின், அழுதார்க ணீர்விடுத்த வாருடிக் கூகை, கழுதார்ந் திரழுங்குங் காடு'' (பு.வெ.) என்னும் காடு வாழ்த்து மேற்கூறிய பகுதியை ஒத்து விளங்குதல் காண்க. இவர் பெயர் கதையங்கண்ணனாரெனவும் பிரதியிற் காணப்படுகிறது. குறுந்தொகையில் இவர் மாலைக்காலத்தை நன்கு வருணித்துள்ளார்.

மானேறு மடப்பிணை தழீஇ மருள்கூர்ந்து
கான நண்ணிய புதன்மறைந் தொடுங்கவும்
கையுடை நன்மாப் பிடியொடு பொருந்தி
மையணி மருங்கின் மலையகஞ் சேரவும்
மாலை வந்தன்று மாரி மாமழை
பொன்னேர் மேனி நன்னலஞ் சிதைத்தோர்
இன்னும் வாரா ராயின்
என்னாந் தோழிநம் மின்னுயிர் நிலையே.

(குறுந். 319.)

தாயங்கண்ணியார்;— கைம்மை நோன்பு இவர் பாடலிற் கூறப்பெற்றுள்ளது. புறநானூற்றுப் பாடல் ஒன்றே இவர் பாடியதாகக் காணப்படுகிறது.

குய்குரன் மலிந்த கொழுந்துவை யடிசில்
இரவலர்த் தடுத்த வாயிற் புரவலர்
கண்ணீர்த் தடுத்த தண்ணறும் பந்தர்க்
கூந்தல் கொய்து குறுந்தொடி நீக்கி
அல்லி யுணவின் மனைவியோ டினியே

புல்லென் றனையால் வளங்கெழு திருநகர்
வான்சோறு கொண்டு தீம்பால் வேண்டும்
முனித்தலைப் புதல்வர் தந்தை
தனித்தலைப் பெருங்காடு முன்னிய பின்னே.

(புறம். 250.)

குய்குரல்-தாளிப்பு ஓசை. துவை-துவையல். முனித்தலை-குடுமித்தலை எனினும் அமையும்.

<u>திப்புத் தோளார்:—</u> உறுப்பாற் பெயர் பெற்றவர் இவர். இப்பெயர் தீப்புத்தேளார் என்றும் காணப் படுகிறது. முருகக்கடவுளைச் சார்த்து வகையாகக் கூறும் இவர் பாடலை குறுந்தொகை நூலின் முதற் பாட்டாக வைத்திருத்தல் இவரது பெருமையை விளக்கு வதாகும். செம்மை என்ற சொல்லும் பொருளும் ஐந்துமுறை பயின்று வருமாறு நான்கடிகளில் இவர் பாடியுள்ள செய்யுள் பலகால் படித்து இன்புறற்பாலது.

செங்களம் படக்கொன் றவுணர்த் தேய்த்த
செங்கோ லம்பிற் செங்கோட்டி யானைக்
கழலொடிச் சேஎய் குன்றம்
குருதிப் பூவின் குலைக்காந் தட்டே.

(குறுந். 1.)

முருகக்கடவுளின் ஊர்திகளுள் யானை ஒன்று; அதன் பெயர் பிணிமுகம். அருள்செய்வதற்கும் போர் செய்வதற்கும் எழுந்தருள்கையில் அதனை அவர் ஊர்ந்து செல்வார்.

<u>திருத்தாமனார்:—</u> இவராற் பாடப்பட்டோன் சேர மான் வஞ்சன். இவர் பாடிய புறநானூற்றுச் செய்யுளொன்றே.

மதிநிலாக் கரப்ப வெள்ளி யேர்தர
வகைமா ணல்லிற் ......................
பொறிமயிர் வாரணம் பொழுதறிந் தியம்பப்
பொய்கைப் பூமுகை மலரப் பாணர்

கைவல் சீறியாழ் கடனறிந் தியக்க
இரவுப்புறம் பெற்ற வேம வைகறைப்
பரிசிலர் விசையெ ..................
வரிசையி னிறுத்த வாய்மொழி வஞ்சன்
நகைவர் குறுகி னல்லது பகைவர்க்குப்
புலியின மடிந்த கல்லளை போலத்
துன்னல் போகிய பெரும்பெயர் மூதூர்
மதியத் தன்னவென் னரிக்குரற் றடாரி
இரவுரை நெடுவா ரிப்ப வட்டித்
துள்ளி வருநர் கொள்கல நிறைப்போய்
தள்ளா நிலையை யாகியர் எமக்கென
என்வர வறீஇச்
சிறிதிற்குப் பெரிதுவந்து
விரும்பிய முகத்த னாகி யெனதரைத்
துரும்புபடு சிதாஅர் நீக்கித் தன்னரைத்
புகைவிரிந் தன்ன பொங்குதுகி லுடீஇ
அழல்கான் றன்ன வரும்பெறன் மண்டை
நிழல்காண் டேற னிறைய வாக்கி
யானுண வருள லன்றியுந் தானுண்
மண்டைய கண்ட மான்வறைக் கருனை
கொக்குகிர் நிமிர லொக்க லார
வரையுறழ் மார்பின் வையகம் விளக்கும்
விரவுமணி யொளிர்வரு மரவுற ழாரமொடு
புரையோன் மேனிப் பூத்தசல..........
முரைசெல வருளி யோனே
..................... யருவிப் பாயற் கோவே

(புறம். 398.)

வஞ்சன்: இப்பாட்டுடைத்தலைவன் பெயர். நகைவர்-நண்பர். கருனை-பொரிக்கறி. புளியில்லாமல் சமைத்த கறிவகைகள்.

திருவள்ளுவர் :— திருவள்ளுவரையும் அவரது திருக்குறளையும் பாராட்டாத புலவர்கள் இலர். தமிழ் மணம் எங்கெங்கே உண்டோ அங்கெல்லாம் திருக்குறளின் நறுமணம் வீசிக்கொண்டே இருக்கும்; குறள் மணம் எங்கெங்கே உண்டோ அங்கெல்லாம் தமிழ் மணம் வீசுகின்றதென்று கூறுதலே பின்னும் பொருத்தமாகத் தோற்றுகின்றது. ஏனெனில், தமிழ் வழங்காத பிறநாடுகளிலுள்ள அறிஞர்கள் திருக்குறளின் மொழிபெயர்ப்புக்களைப் படித்து இன்புறுகிறார்கள். அங்கே தமிழ் மணம் ஏது? நாமெல்லாம் தமிழை அறிந்து அதன் மூலம் குறளை அறிகின்றோம். அவர்களெல்லாம் குறளின் பொருளை அறிந்து அதன் மூலம் தமிழைப்பற்றி அறிந்துகொள்கிறார்கள். இதனால் தமிழைக்காட்டிலும் குறளுக்கு வியாபகம் அதிகமாக இருப்பதை அறிகிறோமல்லவா?

இத்தகைய சிறந்த நூலை இயற்றிய திருவள்ளுவரது வரலாறு ஒரு வரையறையாக வழங்கப்படவில்லை. அவருடைய பிறப்பைப்பற்றியும், சாதியைப்பற்றியும், ஆச்சிரமத்தைப்பற்றியும், ஒன்றுக்கொன்று வேறுபாடான செய்திகள் தமிழ் நாட்டில் உலாவுகின்றன. அவற்றை ஆராய்ந்து அறுதியிடுதற்குரிய கருவிகள் போதியனவாகக் கிடைக்கவில்லை. இக்குறை திருவள்ளுவர் திறத்தில் மட்டுமே அமைந்ததன்று; பெரும்பாலான தமிழ்ப்புலவர்களுடைய வரலாறுகள் இத்தகையனவே.

பலவகையான கொள்கையினரும் திருவள்ளுவரைத் தங்கள் தங்களைச் சார்ந்தவராகக் கூறுவதும் தங்கள் கூற்றுக்கு ஆதாரங்களை எடுத்துக்காட்டுவதுமாகிய இவை இப்புலவர்பிரான் எல்லோராலும் விரும்பப்படும் சிறப்பினரென்பதைத் தெரிவிக்கின்றன. சங்ககாலத்துப் புலவர்களையும் நூல்களையும் முற்காலத்தினரும் பிற்காலத்தினரும் வழங்கும்

போது திருவென்னும் அடைகொடுத்து வழங்கிய தாகக் காணேம். ஆயினும் வள்ளுவரையும், குறளை யும் திருவள்ளுவரென்றும், திருக்குறளென்றும் கூறு கின்ருேம். திருவென்பதற்குத் . திருக்கோவை யாரின் உரையில் பேராசிரியர், கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கமென்று உரை கூறு கின்ருர். வள்ளுவரும் அவர் வாய்மொழியும் யாவ ராலும் ஒருங்கே விரும்பப்படுவதனல் திருவென்னும் அடை மிக்க பொருத்தமுடையதே. இவருக்கு அமைந்த பல பெயர்கள் இவருடைய சிறந்த இயல்புகளை வெளிப்படுத்துகின்றன.

திருவள்ளுவரைப்பற்றிய வரலாறுகள் ஒருபால் இருப்ப, நமக்கு இப்போது பயன்படுவது திருக்குற ளாகிய திருவள்ளுவரேயாம். தமிழில் கருத்தாவாகு பெயருக்கு உதாரணமாகத் திருவள்ளுவரென்பதை யன்றி நூல் வழக்கில் வேறு ஆட்சி இப்போது கிடைக்க வில்லை. அகத்தியம், தொல்காப்பியமென்பன ஈறு திரிந்த பெயர்களாக உள்ளன. ஆசிரியர் பெயரை உள்ளவாறே கூறி நூலை உணர்த்தும் இயல்பு அவற்றுக்கு இல்லை. எனவே, திருக்குறளைப்பற்றிப் பேசினலும், ஆகுபெயர்ப்பொருளால் திருவள்ளு வரைப்பற்றிப் பேசியதாகவே அமையும்.

குறளிலுள்ள பல பாக்களால் திருவள்ளுவர் கல்வி யினிடத்தே மிக்க ஆர்வமுடையாரென்பதும் புலவர்கள் பால் குறையாத அன்புடையவரென்பதும் பெறப் படும். கல்வியைப்பற்றிக் கூறவந்தவர் தாம் உரைக்கப் புகுந்த செய்திகள் பத்துக்குறளில் அடங்காமைபற்றிக் கல்வி, கல்லாமை, கேள்வியென்னும் மூன்று அதி காரங்களால் உணர்த்துகின்ருர். அன்றியும் அறி வுடைமை, சொல்வன்மை, அவையஞ்சாமை என் பனவும் கல்வியோடு தொடர்புடைய அதிகாரங்களே யாகும். இவ்வளவு மிகுதியாக வேறு எதனையும் இவர் வற்புறுத்தவில்லை. கல்லாதாரை விலங்குகளென்றும்

குருடர்களென்றும் கூறும் வள்ளுவர் மதிநுட்பம் நூலோடுடையவரை மிகப்போற்றுகின்றார். பல நூல்களைப் படித்துப் படித்து அவ்வின்பத்திலே இவர் திளைத்திருக்க வேண்டுமென்று தோற்றுகின்றது. நிரம்பிய நூலின்றிக் கோட்டி கொள்ளலை வெறுக்கும் இப்பெரு நாவலர் பல நூல்களைப் படியாமல் இருத் தற்கு நியாயமில்லை யல்லவா? படிக்குந்தோறும் இன்பங் கண்டவராதலினாலேதான் இவர் பண்புடை யாளர் தொடர்பினால் வரும் இனிமையை, 'நவில் தொறும் நூல்நயம் போலும்' என்னும் உவமையால் விளக்குகின்றார். அங்ஙனம் மேலும் மேலும் படிக்கப் படிக்கத் தோன்றும் நயத்தில் உள்ளம் உருகி, ''இதுகாறும் இதனை அறிந்திலேமே' என்று இரங் கினார். இங்ஙனம் இப்பொதுமறைப் புலவர் இரங்கும் காட்சி.

> ''அறிதோ றறியாமை கண்டற்றாற் காமம்
> செறிதோறுஞ் சேயிழை மாட்டு''

என்னும் காமத்துப்பாற் குறளைப் படிக்கும் போது நம் அகக் கண்ணுக்குப் புலனாகவில்லையா?

பற்றற்று மெய்ப்பொருள் கண்டு பிறப்பறுக் கும் துறவற வியலிலும் அம்மெய்ப்பொருள் காண் டற்குக் கல்வி பெருந்துணையாகுமென்பதை,

> ''கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
> மற்றீண்டு வாரா நெறி''

என்று வற்புறுத்தும் திருவள்ளுவர் கல்வியினும் சிறந்ததொரு பொருள் உலகத்தில் இருப்பதாக எண்ண இடமில்லை. அதனாலேதான் அதனைச் சாந்துணையும் கற்கவேண்டுமென்று விதிக்கின்றார்.

> ''யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
> சாந்துணையுங் கல்லாத வாறு''

என்னும் குறளைக் காண்க. அங்ஙனம் கற்றவன் ஒரூருக்குமட்டும் உரியோனல்லன்; ஒரு நாட்டுக்கு மட்டும் உரியோனல்லன்; எல்லா ஊருக்கும் எல்லா நாட்டுக்கும் உரியனென்ற கருத்துக்கள் இக்குறளில் அமைந்துள்ளன. இக்குறளுக்குத் திருவள்ளுவரையே உதாரணமாகக் கூறிவிடலாம். இவருடைய புகழு டம்பு இப்போது இவ்வுலகத்துக்கே பொதுச் செல்வ மாக நிலவுகின்ற தன்றோ?

திருவள்ளுவர் பல மொழி நூல்களையும் பல சமய நூல்களையும் ஆராய்ந்தவரென்பதை அவற்றி லுள்ள கருத்துக்கள் திருக்குறளில் அங்கங்கே அமைந்து விளங்குவதனல் அறியலாம். அன்றியும், இவருடைய வாக்கிலிருந்தே இவர் மதி நுட்பம் நூலோடுடையவரென்பதை உணரலாம்.

நீத்தார் பெருமையை விளக்க வந்த தெய்வப் புலவர்.

''ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவற் றுணிவு''

என்று அருளினர். இங்கே பனுவல்களின் துணிவு இது வென்று அறுதியிட்டுரைத்தமையால் அப்பனுவல் களை இவர் ஆய்ந்தறிந்தனரென்பதற்கு இக்குறளே சான்று பகர்கின்றது;

''பொச்சாப்பார்க் கில்லை புகழ்மை யதுவுலகத்
தெப்பானூ லோர்க்குந் துணிவு''

என்ற குறள் உலகத்திலுள்ள பலவகைப்பட்ட கொள்கையுடையார் நூல்களிலும் இப்பொய்யில் புலவர் அறிவுடைய ரென்பதைத் தெளிவுறுத்து கின்றது. அரணைப்பற்றி,

''உயர்வகலந் திண்மை யருமையிந் நான்கின்
அமைவர ணென்றுரைக்கு நூல்''

என்றமையால் இவர் பொருள்நூல்கள் பலவற்றை ஆய்ந்துள்ளவரென்பது புலப்படும்.

''நூலோர் வளிமுதலா வெண்ணிய மூன்று''

என்பதனுல் இவர் மருத்துவ நூல்களையும் ஆராய்ந் தவராதலை யுணரலாம்.

தொல்காப்பியத்தை ஆய்ந்தறிந்த இவர், அதன் கண் மந்திரமென்பதன் இலக்கணத்தை உணர்த்தும்,

''நிறைமொழி மாந்த ராணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திர மென்ப''

என்னும் சூத்திரத்தை,

''நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்''

என்னும் குறளிலே கோத்து நன்கு அழகு படுத்தி யிருக்கின்ருர்.

இங்ஙனம் நிரம்பிய நூல்வல்லராகிய திருவள்ளுவர் பிற புலவர்களிடத்தே அன்புடையவராக இருந்தார். அவர்களோடு பழகுதலை இன்பமாகவும் அவர்களைப் பிரிதலைத் துன்பமாகவும் உணர்ந்தார்.

''உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்''

என்பதில் இக்கருத்தைக் காண்க. அவர்களுடைய பகை மிகக் கொடிதென்பதை,

''வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை''

என அறிவுறுத்துகிறார்.

புலவர்மாட்டு இத்தகைய பேரன்புடைய இப் பெரியார் அப்புலவர்பால் வறுமை குடிகொண்டிருத் தலை யறிந்து மிக வருந்தி இரங்கினர்.

''பொச்சாப்புக் கொல்லும் புகழை யறிவினை
நிச்ச நிரப்புக்கொன் றாங்கு''

என்பதில் வறுமையானது அறிவுடையார் அவ்வறி வினையும் மறந்தொழுகச் செய்யும் கொடுமையை யுடைய தென்பதைக் குறிப்பிடுகின்றார். புலவர்கள் இங்ஙனம் இருக்கும் உலக இயல்பை,

''இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு''

என்று நொந்து கூறுகின்றார். அத்தகைய புலவர்களை இரந்துண்டு வாழ வைத்த கொடுமையால்,

''இரந்து முயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து
கெடுக வுலகியற்றி யான்''

என்று பிரமனுக்குச் சாபங் கொடுக்கின்றார். இவருடைய வெறுப்பு முழுவதும் சேர்ந்து, 'இன்மை யெனவொரு பாவி என்று வையும் பாட்டில் வெளிப்படுகின்றது.

வறுமையைப் பாவி யென்று வைதது போலவே அழுக்காற்றையும் பாவியென வெறுக்கின்றார்.

''அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்''

என்று கூறுவதைக் காண்க. இதனால் பொறாமைக் குணத்தையும் இவர் அதிகமாக வெறுத்தாரென்று தெரிகிறது. உலகத்தினர் ஒருவரை இழித்துரைக்கும்போது, 'துணிக்கும் பிண்டத்துக்கும் இல்லாமல் நாசமாகப் போகவேண்டும்' என்று வைகின்றார்கள். இதே வெறுப்போடு அழுக்காறுடையாரை,

''கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற முடுப்பதூஉம்
உண்பதூஉ மின்றிக் கெடும்''

என்று அழகிய மொழிகளால் இவர் திட்டுகின்றார். ஒழுக்கமில்லான்கண் உயர்வில்லையென்பதற்கு அழுக்காறுடையான்கண் ஆக்கமிலாமையை உவமை கூறும்போது இவருக்கு அதன்பாலுள்ள வைரம் நன்கு காணப்படுகின்றது. இதுமட்டுமா? அறத்திற்குக் குறைபாடுகளென்று கூறும் நான்கனுள்,

''அழுக்கா றவாவெகுளி யின்னுச்சொல் நான்கும்
இழுக்கா வியன்ற தறம்''

என்று தெரிவிக்கையில் அழுக்காற்றை முதலிற் கூறி அதன் இழுக்கை மிகுதிப்படுத்திக் காட்டுகின்றார்.

தனக்கும் பிறர்க்கும் ஒருங்கே பயன்பட, உணவுண்டு வாழ்ந்து அறம் நடத்துதலைப்பற்றி வரையறுத்த இப்புலவர் பெருமானது நூல், இவர், தமக்கும் பிறர்க்கும் பயன்படும்படி கற்றறிந்து ஒழுகினார் என்பதை நன்றாகத் தெரிவிக்கின்றது. பிறராற் செயற்கரிய செய்தவராகிய இப்பெரியார் புகழ் இன்னும் சிறப்பாக உலகத்தாருடைய உள்ளத்துள்ளும் உள்ளதாகக் காணும் நாள் அண்மையில் இருக்கின்றதென்றே நாம் நம்புகிறோம்.

குறிப்பு: டாக்டர் ஐயரவர்கள் சென்னைப் பச்சையப்பன் கலாசாலை மண்டபத்தில் திருவள்ளுவர் திருநாளன்று செய்த சொற்பொழிவின் சுருக்கம்.

தீன்மிதி நாகனார்:- இவர்பெயர் தீன்மதி நாகனார் என்றும் தீமிதி நாகனார் என்றும் காணப்படுகிறது. ''தலைவியின் வேறுபாட்டுக்குள்ள காரணத்தை அன்னை இயல்பாக அறிதல்கூடும்; அங்ஙனம் அறிந்துகொள்ளாது வேலன் கூற்றை நம்புவாளாயின் இல்லவரின் பெருநகையைக் காணத் தலைவன் இங்கே வருக'' என்ற கருத்தைத் தோழி கூறுவதாக இவர் பாடல் அமைந்துள்ளது. இவர்பாடியது குறுந்தொகைச் செய்யுள் ஒன்றே.

மென்றோள் நெகிழ்த்த செல்லல் வேலன்
வென்றி நெடுவேள் என்னும் அன்னையும்
அதுவென உணரு மாயின் ஆயிடைக்
கூழை இரும்பிடிக் கைகரந் தன்ன
கேழிருந் துறுகற் கெழுமலை நாடன்
வல்லே வருக தோழிநம்
இல்லோர் பெருநகை காணிய சிறிதே.

(குறுந். 111.)

நகை-நகையை விளக்கும் செயல். நெடுவேள்: ஆகுபெயர், அவன் செயலுக்கு ஆயினமையின்.

தும்பிசேர் கீரனார்:- கீரனார் என்பது இவரது இயற்பெயர். ''கொடியை வாழிதும்பி................மெய்யே கருமை யன்றியுஞ் செவ்வன், அறிவுங்கரிதோ வறனிலோய் நினக்கே................பசலை யூதாய் ..............அன்பிலர் வெம்மலை யருஞ்சுர மிறந்தோர்க் கென்னிலையுரையாய் சென்றவண் வரவே'' (நற். 277) என்றும், ''அம்ம வாழியோ வணிச்சிறைத் தும்பி யவர்நாட், டண்ண னெடுவரைச் சேறி யாயிற்.........களைனர்தங்கை தமரிற்றீரா ளென்மோ .................கிழவோர்க்கே''. (குறுந். 392) என்றும் வண்டினை நோக்கி இரண்டிடங்களில் தலைவி தோழிகளின் கூற்றாக இவர் கூறியிருத்தலினால் ''தும்பிசேர்'' என்ற அடைமொழி பெற்றார் போலும். தும்பி சொகினனார் என்ற பிரதி பேதமும் உண்டு. கணவன் இறந்துபட

மனைவி கைம்மையடைந்து வருந்திய நிலையைக் கண்டார் நிலையாமை கூறி இரங்கியதாக இவர் பாடிய பாட்டு (புறநா. 249) இவர்தம் புலமைக்கு ஒரு சான்ருகும். சிறுகுழந்தைகள் தச்சன் செய்த சிறிய வண்டிகளை ஈர்த்து இன்புறும் வழக்கம் இவராற் கூறப்பட்டுள்ளது. குறுந்தொகையின் நான்கு செய்யுட்களையன்றி இவர் பாடிய வேறு செய்யுட்கள்: நற். 277; புறநா. 249.

தச்சன் செய்த சிறுமா வையம்
ஊர்ந்தின் புறாஅ ராயினுங் கையின்
ஈர்த்தின் புறூஉம் இளையோர் போல
உற்றின் புறேஎ மாயினு நற்றேர்ப்
பொய்கை யூரன் கேண்மை
செய்தின் புற்றனெஞ் செறிந்தன வளையே.

(குறுந். 61.)

தும்பி-ஒருவகை வண்டு; சொகினம்-நிமித்தம்.

இச்செய்யுளில், விளையாட்டுத்தேரை ஈர்த்து இன்புறும் பருவம் கடந்து மெய்த்தேரை யூர்ந்து இன்புறுவார் போலக் களவுக் காலங்கடந்து மெய்யுறு புணர்ச்சியை இடையீடில்லாமல் பெறுவதற்குரிய கற்புக் காலத்தினேமாகிய யாம் சிறுரைப்போலக் களவுக்குரிய உள்ளப் புணர்ச்சியையே உடையேமாயினேம் என்னும் குறிப்பும் பெறப்படும்.

<u>துறைக்குறுமாவிற் பாலங்கொற்றனர்:—</u> இவர் வணிகர் மரபினைச் சேர்ந்தவராக இருக்கலாம் என்று தோன்றுகிறது. இவர் பாலையைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். இவரது பாடலொன்று நற்றிணையில் உள்ளது.

ஊசல் ஒண்குழை யுடைவியத் தன்ன
அத்தக் குமிழின் ஆயிதழ் அலரி
கல்லென வரிக்கும் புல்லென் குன்றம்

சென்ருேர் மன்ற செலீஇயரென் உயிரெனப்
புனேயிழை நெகிழ விம்மி நொந்துநொந்
தினேதல் ஆன்றிசி ஞயிழை நினேயின்
நட்டோ ராக்கம் வேண்டியும் ஒட்டிய
நின்தோள் அணிபெற வரற்கும்
அன்ருே தோழியவர் சென்ற திறமே.

(நற். 286.)

உடை-உடைமரம்; வேலமரத்தின் வகையுள் ஒன்று. வியம்-வழி. கல்லென-ஆரவாரத்தோடு.

துறையூர் ஓடைகிழார்:— இவர் வேளாளர்; இவர் வறுமையால் மிக்க துன்புற்றவரென்று தெரிகிறது. இப்பெயர் துறையூர் அரிசில் கிழாரெனவும் பிரதிகளிலுள்ளது. இவராற் பாடப்பட்டோன் ஆய் என்னும் வள்ளல். புறநானூற்றிலுள்ள செய்யுள் ஒன்றே இவர் பாடியதாகும்.

யாழ்ப்பத்தர்ப் புறங்கடுப்ப
இழைவலந்த பஃறுன்னத்
திடைப்புரைபற்றிப் பிணிவிடாஅ
ஈர்க்குழாத்தோ டிறைகூர்ந்த
பேஎற்பகையென வொன்றென்கோ
உண்ணுமையி னூன்வாடித்
தெண்ணீரிற் கண்மல்கிக்
கசிவுற்றவென் பல்கிளேயொடு
பசியலேக்கும் பகையொன்றென்கோ
அன்னதன்மையு மறிந்தீயார்
நின்னதுதாவென நிலேதளர
மரம்பிறங்கிய நளிச்சிலம்பிற்
குரங்கன்னபுன் குறுங்கூளியர்
பரந்தலேக்கும் பகையொன்றென்கோ
ஆஅங், கெனேப்பகையு மறியுநனுய்
எனக்கருதிப் பெயரேத்தி
வாயாரநின் னிசைநம்பிச்
சுடர்சுட்ட சுரத்தேறி
இவண்வந்த பெருநசையேம்

எமக்கீவோர் பிறர்க்கீவோர்
பிறர்க்கீவோர் தமக்கீபவென
அனைத்துரைத்தனன் யானாக
நினக்கொத்தது நீநாடி
நல்கினை விடுமதி பரிசில் அல்கலும்
தண்புனல் வாயிற் றுறையூர் முன்றுறை
நுண்பல மணலினும் ஏத்தி
உண்குவம் பெருமநீ நல்கிய வளனே.

(புறம். 136.)

கூளியர் என்பதற்குச் சேவித்து நிற்போர் என்று திருமுருகாற்றுப்படையிலும், நாடுகாக்கும் வேடர் என்று மலைபடுகடாத்திலும், வேட்டுவர் என்று மதுரைக் காஞ்சியிலும் பொருள் செய்திருக்கின்றார் நச்சினார்க்கினியர்.

இச்செய்யுளைப் பாடிய புலவர் துறையூரினர் ஆதலின் அவ்வூர்த்துறைமணலைக் கூறினார்.

தூங்கலோரியார்:— அகநானூற்றில், ''வருநர் வரையாப் பெருநாளிருக்கைத், தூங்கல் பாடிய வோங்கு பெரு நல்லிசைப் பிடிமிதி வழுதுணைப் பெரும் பெயர்த் தழும்பன்'' (227) என்று நக்கீரனார் கூறியிருக்கும் பகுதியிற் காணப் படும் தூங்கல் என்ற சொல் இப்புலவரையே குறிக்கும் என்பர். அங்ஙனமாயின் இவர் ஊணூருக்குத் தலைவனாகிய தழும்பன் என்ற உபகாரியைப் பாடியிருத்தல் கூடுமென்று தெரிகிறது. அப்பாட்டு இப்பொழுது கிடைத்திலது. செல்வக்குறைபாடுள்ள ஒருவனது வாழ்க்கையை இவர், ''ஓரான் வல்சிச் சீரில் வாழ்க்கை'' என்று குறித்துள்ளார். (குறுந். 295.) ஒரு பசுவினால் வரும் ஊதியத்தைக் கொண்டு வாழும் வாழ்க்கை செல்வச் சிறப்பில்லாத தென்பது இதன் கருத்து. இச்செய்யுளிலேயே தலைவனது நல்குரவு பற்றி இவர் தலைவியைச் சிறப்பித்திருப்பது அழகாக அமைந்துள்ளது. ''மறப்

பருங் காதலி யொழிய, இறப்ப லென்பதீண் டிளமைக்கு முடிவே'' என்று புணர்ப்பினுலேயே இளமைக்கு இன்பம் உன்டாதலே இவர் குறிக்கின்ருர். (குறுந்.151) நற். 60— ஆம் பாடலும் இவர் பாடியதே.

வங்காக் கடந்த செங்காற் பேடை
எழாலுற வீழ்ந்தெனக் கணவற் காணுது
குழலிசைக் குரல குறும்பல வகவும்,
குன்றுகெழு சிறுநெறி யரிய வென்னுது
மறப்பருங் காதலி யொழிய
இறப்பல் என்பதீண் டிளமைக்கு முடிவே.

(குறுந். 151.)

வங்கா-ஒருவகைப்பறவை. இது வக்கா எனவும் வழங்கும். எழால்-புல்லூறு என்னும் பறவை. கணவன் என்பது அஃறிணைக்கும் வரும்.

<u>தேய்புரிப்பழங்கயிற்றினர்:—</u> இவரது இயற்பெயர் இன்னதென்று தெரியவில்லை. நெஞ்சமும் அறிவும் மாறுகொண்டு இழுத்தலால் என்னுடம்பு இருயானை யால் இழுக்கப்பட்டுத் தேய்ந்த பழங்கயிறு அறுந்து போவதுபோல் அழிய வேண்டியதுதானே என்று கூறிய உவமையால் இவர் இப்பெயர் பெற்ருர் போலும். இவர் பாலையைச்சிறப்பித்துள்ளார். இவர் பாடியது நற்றிணைச்செய்யுள் ஒன்றே.

புறந்தாழ் பிருண்ட கூந்தற் போதின்
நிறங்கிளர் நிரையிதழ்ப் பொலிந்த வுண்கண்
உள்ளம் பிணிக்கொண் டோள்வயின் நெஞ்சே
செல்லல் தீர்கஞ் செல்வாம் என்னும்
செய்வினை முடியா தெவ்வஞ் செய்தல்
எய்யா மையோ டிளிவுதலைத் தருமென
உறுதி தூக்கத் தூங்கி அறிவே
சிறிதுநனி விரையல் என்னும் ஆயிடை
ஒளிறேந்து மருப்பிற் களிறுமாறு பற்றிய
தேய்புரிப் பழங்கயிறு போல
வீவது கொல்லென் வருந்திய வுடம்பே.

(நற். 284.)

போது-நெய்தல் மலர். எய்யாமை-அறியாமை. இளிவு-இகழ்ச்சி.

தேரதனர்:— இவர் பெயர் தாமோதரன் என்றும் காணப்படுகிறது. பிரிவிடைப் பருவவரவின்கட் கிழத்தி மெலிந்து கூறுவதாக இவர் கூறும் செய்யுளில் வாடையை, ''தைவர லசைவளி'' என்று குறிப்பித்து அது மெய்பாய்ந்துறு தரத் தலைவியின் மெய்பிறிதா வதாகக் கூறிய நயம் கூர்ந்து நோக்கத் தக்கது. குறுந்தொகையிலுள்ள செய்யுள் ஒன்றே இவர் பாடிய தாகும்.

சுடர்சினந் தணிந்து குன்றஞ் சேரப்
படர்சுமந் தெழுதரு பையுண் மாலை
யாண்டுளர் கொல்லோ வேண்டுவினை முடிநர்
இன்னு திரங்கு மென்னு ரன்னே
தைவர லசைவளி மெய்பாய்ந் துறுதரச்
செய்வுறு பாவை யன்னவென்
மெய்பிறி தாகுதல் அறியா தோரே.

(குறுந். 195.)

சினம்-வெயில். படர்-தமியர் ஆயினுர் படும் துன்பம். அசைவளி-மெல்லென்ற காற்று. பாவை-பொன்னுற் செய்த பாவை.

தேவ குலத்தார்:—தேவகுலம்—தேவாலயம்; தேவா லயத்தினர் என்பது இத்தொடரின் பொருள். ''நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று, நீரினு மாரளவின்றே................நாடனெடு நட்பே'' என்று தலைவி கிழவோன் மாட்டுத்தனக்கு அமைந்துள்ள பெருமையிற்றிரியாத அன்பைப் புலப்படுத்துவதாக இவர் பாடிய குறுந்தொகைச் செய்யுள் பல முறை படித்து இன்புறற்பாலதாகும்.

நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே சாரல்
கருங்கோல் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே.

(குறுந். 3.)

குறிஞ்சி:—இது பன்னிரண்டு வருடத்திற்கு ஒரு முறை மலருமென்றும், அம்மலரிலிருந்து ஈக்களால் எடுக்கப் படும் தேன் மிக்க சுவையை உடையதென்றும் நீல கிரியிலுள்ள தொதுவர் என்னும் ஒருவகைச் சாதி யார் இது மலருங்காலத்தைக் கொண்டே தம்முடைய பிராயத்தைக் கணக்கிடுவர் என்றும் சொல்வர்.

தேவனூர்:— சோழனது ஆர்க்காட்டைச் சிறப்பித்துள் ளார். நெய்தல் திணையையும் சிறப்பித்துள்ளார். இவர் பாடிய பாடலொன்று நற்றிணையில் உள்ளது.

அறிந்தோர் அறனிலர் என்றலர் சிறந்த
இன்னுயிர் கழியினு நனியின் னாதே
புன்னையங் கானற் புணர்குறி வாய்த்த
பின்னீர் ஓதியென் றோழிக் கன்னோ
படுமணி யானைப் பசும்பூட் சோழர்
கொடிநுடங்கு மறுகி னார்க்காட் டாங்கட்
கள்ளுடைத் தடவிற் புள்ளொலித் தோவாத்
தேர்வழங்கு தெருவி னன்ன
கௌவையா கின்ற தையநின் னருளே.

(நற். 227.)

அன்னோ: இரக்கச்சொல். தடவு-சாடி, பனையுமாம். புள்-வண்டு.

தேனீக்குடிக்கீரனார்:— இவர் கடைச்சங்கப் புலவர் களுள் ஒருவர்; திருக்குறளுக்குச் சிறப்புப்பாயிரம் அளித்துள்ளார்.

பொய்ப்பால பொய்யேயாய்ப் போயின பொய்யல்லா
மெய்ப்பால மெய்யாய் விளங்கினவே-முப்பாலின்
தெய்வத் திருவள் ளுவர்செப் பியகுறளால்
வையத்து வாழ்வார் மனத்து.

(திருவள்ளுவ. 49.)

தொடித்தலை விழுத்தண்டினார்:— புறநானூற்றில் தாம் கூறும் முதுமைப்பருவ வருணனையில், தொடித் தலை' என்னும் அடையைத் தண்டிற்குக் கூறிய சிறப்பால், இவர் இப்பெயர் பெற்றார். தொடி-பூண். இவராற் பாடப்பட்டோன் ஒல்லையூர்கிழான் மகன் பெருஞ்சாத்தன். திருவள்ளுவ மாலையில் இவர் பாடல் ஒன்றுள்ளது.

இனிநினைந் திரக்க மாகின்று திணிமணற்
செய்வுறு பாவைக்குக் கொய்பூத் தைஇத்
தண்கய மாடு மகளிரொடு கைபிணைந்து
தழுவுவழித் தழீஇத் தூங்குவழித் தூங்கி
மறையென வறியா மாயமி லாயமொ
டுயர்சினை மருதத் துறையுறத் தாழ்ந்து
நீர்நணிப் படிகோ டேறிச் சீர்மிகக்
கரையவர் மருளத் திரையகம் பிதிர
நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து
குளித்துமணற் கொண்ட கல்லா விளமை
அளிதோ தானே யாண்டுண்டு கொல்லோ
தொடித்தலை விழுத்தண் டூன்றி நடுக்குற்
றிருமிடை மிடைந்த சிலசொற்
பெருமூ தாளரே மாகிய வெமக்கே.

(புறம். 243.)

தொண்டி ஆமூர்ச்சாத்தனார்:—ஆமூர் என்பது சேர நாட்டில் குறும்பொறை மலைக்குக் கீழ்ப்பக்கத்துள்ள ஓரூர். தொண்டி ஆமூர் என்பது தொண்டை நாட்டைச் சார்ந்த ஆமூர் என்றும் கொள்ளப்படும். பாலைத்திணையைச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

மரந்தலை கரிந்து நிலம்பயம் வாட
அலங்குகதிர் வேய்ந்த அழல்திகழ் நனந்தலைப்
புலிதொலைத் துண்ட பெருங்களிற் றொழியூன்
கலிகெழு மறவர் காழ்க்கோத் தொழிந்ததை
ஞெலிகோல் சிறுதீ மாட்டி ஒலிதிரைக்
கடல்விளை யமிழ்தின் கணஞ்சா லுமணர்
சுனைகொ டீநீர்ச் சோற்றுலைக் கூட்டுஞ்
சுரம்பல கடந்த நம்வயிற் படர்ந்துநனி
பசலை பாய்ந்த மேனிய ணெடிதுநினைந்து
செல்கதிர் மழுகிய புலம்புகொண் மாலை
மெல்விரல் சேர்த்திய நுதலண் மல்கிக்
கயலுமிழ் நீரிற் கண்பனி வாரப்
பெருந்தோள் நெகிழ்ந்த செல்லலொடு
வருந்துமால் அளியள் திருந்திழை தானே.

(அகம். 169.)

தொண்டி-ஒரூர். அதற்கு அண்மையில் உள்ள ஆமூர் என்றும் கொள்ளலாம். இவர் தொண்டி மாமூர்ச் சாத்தனார் என்றும் வழங்கப் பெறுவர்.

<u>தொண்டைமான் இளந்திரையன்</u>:— இவன் காஞ்சி நகரத்திருந்த ஓரரசன். பாடுதலில் வல்லவன் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடிய பெரும் பாணாற்றுப்படைத் தலைவன் இவனே. இவனுடைய பிறப்பின் வரலாறும், பெயர்க்காரணமும் பெரும் பாணாற்றுப்படை 37- ஆம் அடியின் விசேடவுரையால் அறியலாகும்; அதில் நாககன்னியென்றது மணிமேகலை 24-ஆம் காதையின்57-ஆம் அடியிற் கூறப்பெற்ற பீலிவளையேயென்றும் அதற்குத் தக்க ஆதாரம் சாசனத் திலும் நூல்களிலுமுள்ளதென்றும் சொல்லுகின்றனர்; இவன் முடியுடை மன்னர் மூவரோடு சேர்த்து எண்ணப் படும் பெருமை வாய்ந்தவனேனும், ''வில்லும் வேலும் என்னும் (தொல். மரபு. சூ. 83) சூத்திரவுரையில் 'மன்பெறு மரபினேனோ ரெனப்படுவார், அரசுபெறு மரபிற் குறுநில மன்னரெனக் கொள்க, அவை பெரும் பாணாற்றுள்ளும் பிறவற்றுள்ளும் காணப்படும்

எனப் பேராசிரியர் எழுதியிருத்தலால் இவனைக் குறுநிலமன்னனுகப் பண்டையோர் கொண்டிருந்தனரென்று தெரிகிறது. இப்பெயர் இளந்திரையனெனவும், திரையனெனவும், நூல்களில் வழங்கும். இவனியற்றிய பாடல்களாக நற்றிணையில் மூன்றும் புறநானூற்றில் ஒன்றும் காணப்படுவதால் இவன் நல்லிசைப் புலவர் வரிசையிற் சேர்ந்த பெருமை வாய்ந்தவனென்றும் தெரிகின்றது. இளந்திரையமென ஒரு நூல் இவனுற் செய்விக்கப் பெற்றதென்று இறையனுரகப் பொருளுரை, நன்னூல் மயிலை நாதருரை முதலியன தெரிவிக்கின்றன; நன்னூல் மயிலை நாதருரையில் (ப. 245) திரையனூரென்பதற்குத் திரையனுற் செய்யப்பட்ட ஊர் திரையனது ஊர் என்று பொருள் செய்திருத்தலின், இப்பெயருள்ள ஊரொன்று பண்டைக்காலத்தில் இவனுல் நிருமிக்கப் பெற்றதென்று தெரிகிறது.

''வினைநவில் யானை விறற்போர்த் தொண்டையர்
இனமழை தவழு மேற்றரு நெடுங்கோட்
டோங்குவெள் ளருவி வேங்கடத் தும்பர்''

(அகநானூறு. 213.)

''பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ
பாவீற் றிருந்த புலவீர்காள் பாடுகோ
ஞாயிற் றெளியான் மதிநிழற்றே தொண்டையார்
கோவீற் றிருந்த குடை''

''வஞ்சி வெளிய குருகெல்லாம் பஞ்சவன்
நான்மாடக் கூடலிற் கல்வலிது
சோழ னுறந்தைக் கரும்பினிது தொண்டைமான்
கச்சியிற் காக்கை கரிது''

''ஆழி யிழைப்பப் பகல்போ மிரவெல்லாம்
தோழி துணையாத் துயர்தீரும்-வாழி
நறுமாலை தாராய் திரையவோஒ வென்னும்
செறுமாலை சென்றடைந்த போது''

(யா.வி. மேற்கோள்)

என்பவற்ருல் இவன் பரம்பரையோருடைய பெருமைகள் புலப்படும். இவன்காலத்துப் புலவர் மேற்கூறிய உருத்திரங் கண்ணனும் நக்கண்ணையாருமாவார்.

தொல் கபிலர்:— குறிஞ்சி பாட்டைப் பாடிய கபிலரினும் இவர் வேறு பட்டவர். குறிஞ்சித்திணையை பலபடியாகச் சிறப்பித்துப் பாடியுள்ளார். பல உள்ளுறை யுவமங்களை அடுக்கி யுள்ளார். குறுந்தொகை 14ஆம் பாடலையன்றி இவரியற்றிய வேறு பாடல்கள்; நற். 114, 276,328, 399; அகநா. 12,282.

அமிழ்துபொதி செந்நா வஞ்ச வந்த
வார்ந்திலங்கு வையெயிற்றுச் சின்மொழி யரிவையைப்
பெறுகதில் லம்ம யானே பெற்ருங்
கறிகதில் லம்மவிவ் வூரே மறுகில்
நல்லோள் கணவ னிவனெனப்
பல்லோர் கூறயா நாணுகஞ் சிறிதே.

(குறுந். 14.)

அமிழ்து என்றது எயிற்றில் ஊறிய நீரை. சின்மொழி-சிலவாகிய மொழி.

நக்கண்ணையார்:— இவர் பெண்பாலார். பெருங் கோழி நாய்கன் மகள் நக்கண்ணையார் எனவும் வழங்கபெறுவர். வணிகமரபினர். உறையூர் வீரை வேண்மான் வெளியன் தித்தனது மகன் போர்வைக் கோப்பெருநற்கிள்ளி என்னும் சோழன் தன் தந்தை யொடு பகைத்து நாடிழந்து புல்லரிசிக் கூழுண்டு வருந்தியவன். ஆமூர் மல்லனைப்போரில் வென்றது கண்ட இப்புலவர் அவ்வரசனைத் தாம் மணந்து கொள்ள விரும்பித் தம்காதன் மிகுதியையும் அவனை அணைத்து முயங்குவதற்கு அவையத்தார் காண்பரே என்று அஞ்சுவதையும், அவனைப் பலகாலும் காணப் பெறினும் முயங்காமையினுலே தம்மேனி பசலை பூத்ததையும் பலவாருக விரித்துக்கூறி வருந்துவாரா யினர்; புறநா. 83,84; மேலும், என்னுடைய

தலைவனுக்கு நாடு இஃது அல்லாமையானும் அவனுக்கு இயல்பாயவெற்றியை அவனது வெற்றி யென்று சிறப்பாகச் சொல்லுவர் ஒரு பக்கத்தார். அவனது வெற்றியன்று சொல்வர் ஒரு பக்கத்தார். பலரும் ஒத்து ஒவ்வாமல் கூறும் இவ்விருவகைப் பட்ட நல்ல வார்த்தையும் நல்லனவாயிருந்தன. அவ்வாறு கூறினராயினும் அழகிய சிலம்பார்ப்ப ஓடிச்சென்று, எம்முடைய மனையின்கண் முழாப் போலும் பக்கத்தையுடைய பனையை பொருந்தி நின்று ''எனது வளையும் கலையும் முதலானவை தோற்கும் ஆண்மையுடைமையின், அவனது வென்றியாதல் யான் கண்டேன் என்று கூறியுள்ளார் (புறா. 85). இவர் சோழர் மரபின் அழகியினது ஆர்க்காட்டைச் சிறப்பிக்கிறார்; நற். 87. இவர் பாடியனவாக நற்றிணையில் இரண்டு பாடல்களும், அகநானூற்றில் ஒரு பாடலும், புறநானூற்றில் மூன்று பாடல்களும் உள்ளன.

என்னைக் கூரிஃ தன்மை யானும்
என்னைக்கு நாடிஃ தன்மை யானும்
ஆடா டென்ப வொருசா ரோரே
ஆடன் றென்ப வொருசா ரோரே
நல்ல பல்லோ ரிருநன் மொழியே
அஞ்சிலம் பொலிப்ப வோடி யெம்மில்
முழாவரைப் போந்தை பொருந்திநின்
றியான்கண் டனனவ னுடா குதலே.

(புறம். 85)

<u>நத்தத்தனார்</u>:— இவர் கடைச்சங்கப்புலவர்களுள் ஒருவர். திருக்குறளுக்கு சிறப்புப்பாயிரம் கொடுத்தவர் களுள் ஒருவர். இவரது பாடல் ஒன்று திருவள்ளுவ மாலையில் உள்ளது.

ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும்
பாயிரத்தி னேடு பகர்ந்ததற்பின்-போயொருத்தர்
வாய்க்கேட்க நூலுளவோ மன்னு தமிழ்ப்புலவ
ராய்க்கேட்க வீற்றிருக்க லாம்.

(திருவள்ளு. 16)

நப்பண்ணனார்:— பரிபாடலில் முருகக் கடவுளுக்குரிய தாகிய 19ஆம் பாடல் இவரால் இயற்றப் பெற்றது. திருப்பரங்குன்றத்தில் நிகழும் வள்ளியம்மையின் திருமணவிழாச் செய்தியும் முருகக்கடவுளைத் தரிசிக்க விரும்பி மதுரையிலுள்ளார் நடத்தும் தத்தமக்குரிய ஊர்திகளில் ஏறிச் செல்லுதலும், அவர்களுடைய நெருக்கத்தால் தோன்றும் வழியின் காட்சியும், பாண்டியன் உரிமைமகளிரோடும் மந்திரி மார் முதலியவர்களோடும் வந்து அம்மலையின் மீதேறித் திருக்கோயிலை வலம் வருதலும், தரிசிக்க வந்தவர்கள் அம்மலையில் நிகழ்த்தும் பலவகைச் செய்திகளும், ஆண்டுள்ள மண்டபத்து எழுதப் பெற்ற பழஞ்செய்திகளைப் புலப்படுத்தும் சித்திர வகைகளும், பலவகை மலர்களின் தோற்றமும் கொடியேற்றிய யானையை அலங்கரித்துப் பூசித்தலும், கன்னியரும் மணந்தமகளிரும் பயன்களைக் கருதி அந்த யானையின் கவளமிச்சிலை யுண்ணுதலும், முருகக்கட வுள் கடம்பமரத்தின் அடியில் எழுந்தருளியிருத்தலும் பிறவும் இப்பாடலிற் கூறப்பெற்றுள்ளன. இதில் வந்துள்ள உவமைகள் மிக்க இன்பம் பயப்பவை. இவரது இயற் பெயர் பண்ணனாரென்பது; 'ந' என்பது சிறப்புப் பொருளைத் தருவதோ ரிடைச்சொல்.

திருப்பரங்குன்றத்தில் முருகக்கடவுள் கடம்பமரத்தினி டத்தே எழுந்தருளியிருந்தார் என்று பரிபாடல் 19வது பாடலின் 3 ஆம் அடியாலும் 104 ஆம் அடியாலும் தெரிகின்றது. இவ்வுண்மை, ''கடம்பமர் மன்றற் றெருங்கற் கந்தனைச் சிந்தனை செய்வாம்'' (திருவால. கடவுள். 18) என்பதனாலும் ''கடம்பமர் நெடுவேள்'' (பெரும்பாண். 75.) என்பவற்றாலும் விளங்கும்.

நப்பாலத்தனார்:— பாலத்தன் என்பது இயற்பெயர். ந. சிறப்புப்பொருள்தரும் இடைச்சொல். பாலத்தனார் என்று கூறப்படுபவரும் இவரே. யாப்பருங்கல மேற்கோளுள் நப்பாலத்தனார் சூத்திரம் எனச்சில

சூத்திரம் காட்டப் படுதலின் இவர் யாப்பிலக்கணஞ் செய்துள்ளார் என்று தெரிய வருகிறது. இவர் பாலைத்திணையைச் சிறப்பித்துப்பாடியுள்ளார். இவர் பாடியனவாக நற்றிணையில் இரண்டு பாடல்களும் திருவள்ளுவமாலையில் ஒருபாடலும் உள்ளன.

ஐதே கம்மவிவ் வுலகுபடைத் தோனே
வையேர் வாலெயிற் றெண்ணுதற் குறுமகள்
கைவர் முயக்க மெய்யுறத் திருகி
ஏங்குயிர்ப் பட்ட வீங்குமுலை யாகந்
துயிலிடைப் படூஉந் தன்மைய தாயினும்
வெயில்வெய் துற்ற பரலவல் ஒதுக்கிற்
கணிச்சியிற் குழித்த கூவல் நண்ணி
ஆன்வழிப் படுநர் தோண்டிய பத்தல்
யானை யினநிரை வெளவுங்
கானங் திண்ணிய மலைபோன் றிசினே.

(நற். 240.)

நம்பி குட்டுவர்:—இவர் சேரர் பரம்பரையினர் என்பது குட்டுவன் என்ற சொல்லால் விளங்கும். நம்பி என்ற சிறப்புப்பெயர் நம்பிநெடுஞ்செழியன்' (புறநா. 239) என்பது போல அடைமொழியாக வந்தது. தலைவனது மலையிற்பட்டு வரும் காற்றுத் தன்மீது படுவதனுல் தன் காமவெப்பம் தணியுமென்று தலைவி கூறுவதாக (நற். 236.) இவர் பாடியுள்ளார். சேதாம்பல் சிறிது நெகிழ்வதற்குச் சிறு வெண் காக்கை வாய் திறப்பதை உவமை கூறியுள்ளார். (நற். 345) தலைவனை உள்ளுவதனுல் கண் துயிலாமையைத் தலைவி, ''சேர்ப்பனை, உள்ளேன் றோழி படீஇயரென் கண்ணே என்று வேறு விதமாகக் கூறுவதாக இவர் பாடி இருத்தல் நோக்கத் தக்கது. குறுந்தொகைச் செய்யுட் கள் இரண்டன்றி இவர் பாடியனவாக இப்பொழுது கிடைத்துள்ள வேறு செய்யுட்கள் நற்றிணையில் மூன்று.

முடக்கால் இறவின் முடங்குபுறப் பெருங்கிளை
புணரி யிகுதிரை தரூஉந் துறைவன்

புணரிய இருந்த ஞான்றும்
இன்னது மன்னே நன்னுதற் கவினே.

(குறுந். 109.)

இறவு-இருமீன்.

நரிவெரூஉத் தலையார் :— இவர், யாது காரணத்தாலோ தம் உடம்பு வேறுபட்டிருந்து சேரமான் கருவூரேறிய ஒள்வாட் கோப்பெருஞ் சேரலிரும்பொறையைக் கண்ட நாளில் அவ்வேறுபாடு நீங்கித் தம் உடம்பு பெற்றனர். இது, புறநானூற்றின் 5-ஆம் பாட்டின் பின்புள்ள வாக்கியத்தாலும், ''புதுமைபெருமை'' (தொல். மெய்ப். சூ. 7 பேர்) என்பதன் விசேடவுரையாலும் விளங்கும். இவராற் பாடப்பட்டோன்; மேற்கூறிய சேரமான் கருவூரேறிய ஒள்வாட் கோப் பெரும் சேரலிரும்பொறை. இவர் இயற்றிய பாடல்கள் குறுந் தொகையிலும் திருவள்ளுவமாலையிலும் புறநானூற்றி லும் உள்ளன.

பல்சான் றீரே பல்சான் றீரே
கயன்முள் ளன்ன நரைமுதிர் திரைகவுட்
பயனின் மூப்பிற் பல்சான் றீரே
கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திறல் ஒருவன்
பிணிக்குங் காலை இரங்குவிர் மாதோ
நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்
அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்
எல்லாரும் உவப்ப தன்றியும்
நல்லாற்றுப் படூஉ நெறியுமார் அதுவே.

(புறம். 195.)

ஒருவன்-யமன்.

நரைமுடி நெட்டையார்:— இவர் நிரைமுடி நெட்டை யார் எனவும் வழங்கப் பெறுவர். இவருக்கு இப்பெயர் உறுப்பால் வந்தது போலும். இப்புலவர் காதற் சிறப்பும், கடமையின் உயர்வும் உணர்ந்தவர். இவர் தாம் பாடிய அகநானூற்றுப்பாடலில் தேர் ஆழி ஓடிய

வழியில் நீர் விரைந்து ஓடும் காட்சி விரைந்தோடும் பாம்பு போலும் எனவும், பயற்றுச்செடியில் முற்றிய காய்கள், கொத்தாக நிற்கும் காட்சி, ஒன்றை ஒன்று ஒட்டுதலின்றிக் குவிந்து நிற்கும் கைவிரல்கள் போலும் எனவும் கூறிய உவமைகள் சிறப்புடையன.

வீங்குவிசைப் பிணித்த விரைபரி நெடுந்தேர்
நோன்கதிர் சுமந்த ஆழியாழ் மருங்கிற்
பாம்பென முடுகுநீர் ஓடக் கூம்பிப்
பற்றுவிடு விரலிற் பயறு யூழ்ப்ப
அற்சிரம் நின்றன்றாற் பொழுதே முற்பட
ஆள்வினைக் கெழுந்த அசைவி லுள்ளத்து
ஆண்மை வாங்கக் காமந் தட்பக்
கவைபடு நெஞ்சங் கட்க ணகைய
இருதலைக் கொள்ளி இடைநின்று வருந்தி
ஒருதலைப் படாஅ வுறவி போன்றன
நோங்கொல் அளியள்தானே யாக்கைக்கு
உயிரியைந் தன்ன நட்பி னவ்வுயிர்
வாழ்தல் அன்ன காதல்
சாதல் அன்ன பிரிவரி யோளே.

(அகம். 339.)

<u>நல்கூர்வேள்வியார்:—</u> இவர் கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர். இவர் திருக்குறளுக்குச் சிறப்புப்பாயிரம் அளித்திருக்கிறார்.

உப்பக்க நோக்கி உபகேசி தோண்மணந்தான்
உத்தர மாமதுரைக் கச்சென்ப-இப்பக்க
மாதானு பங்கி மறுவில் புலச்செந்நாப்
போதார் புனற்கூடற் கச்சு.

(திருவள்ளுவ. 21.)

<u>நல்லச்சுதனார்:—</u> பரிபாடலில் முருகக்கடவுளுக்குரிய 21ஆம் பாடலை இயற்றியவர் இவர்; இப்பாட்டில் முருகக்கடவுள் ஊரும் யானை, அவர் தொடும் அடையற் செருப்பு, அவரது வேற்படை, அவர் அணிந்த கடப்பமாலை, திருப்பரங்குன்றம், அதை வழிபடும்

மகளிருடைய பலவகைச் செயல்கள், அங்கே ஆடும் மயிலின் காட்சி, மகளிரும் மைந்தரும் சுனையில் நிகழ்த்தும் நீர்விளையாட்டு, பலவகை மணத்துடன் அங்கே தவழும் தென்றலின் இயல்பு, கேள்வர் உருட்டும் துடிச்சீர்க்கு இசையக்குன்றத்து மகளிராடல் ஆகிய இவைகளும், பிறவும் கூறப்பட்டுள்ளன. திருப்பரங் குன்றம் யானையாக உருவகஞ் செய்யப் பெற்றிருத்தல் மிக அழகியது. முருகக்கடவுளுடைய அடியின் கீழும் உறைதல் தமக்கு இயைய வேண்டுமென்று இவர் வேண்டுதல், அவர்பால் இவருக்குள்ள அன்பின் மிகுதியைக் காட்டுகின்றது. பரிபாடலில் 16,17,18, 20, ஆம் பாடல்களுக்கு இசைவகுத்தவரும் இவரே. இவற்றால் இயலிசைகளில் இவர் வல்லுநரென்று தெரிகிறது.

நல்லழிசியார்:— பரிபாடலில் இவர் வையைக்குரிய தாகிய 16 ஆம் பாடலையும் முருகக்கடவுளுக்குரியதான 17- ஆம் பாடலையும் இயற்றியவர். பதினாறுவது பாடலில் வையையினது கரை அதன் துறை அதன் கரைச்சோலை முதலியவற்றின் சிறப்பியல்பும், அதன் நீர்ப்பெருக்கும், அதில் நிகழ்ந்த நீர் விளையாட்டுச் செய்தியும், பதினேழாவது பாடலில் திருப்பரங்குன்றத்தில் முருகக்கடவுள் எழுந்தருளிய கடம்ப மரத்தை அன்பர்கள் வந்து வழிபடுதலும், மாலை தோறும் அக்குன்றத்தின் அடியிலுறைவோர் விண்ணு லக இன்பத்தையும் விரும்பாரென்பதும், அதிலுள்ள பலவகை விசேடங்களும் மதுரையின் வளமும் செவ்வனே கூறப்பெற்றுள்ளன.

திருப்பரங்குன்றத்தின் சிறப்பினைக் கீழ்வரும் அடிகள் கூறுகின்றன.

ஒருதிறம், பாணர் யாழின் தீங்குரலெழ
ஒருதிறம், யாணர் வண்டின் இமிரிசையெழ
ஒருதிறம், கண்ணார் குழலின் கரையெழ

ஒருதிறம், பண்ணார் தும்பி பரந்திசை யூத
ஒருதிறம், மண்ணார் முழவின் இசையெழ
ஒருதிறம், அண்ணல் நெடுவரை அருவிநீர் ததும்ப
ஒருதிறம், பாடல்நல் விறலியர் ஒல்குபு நுடங்க
ஒருதிறம், வாடை யுளர்வயிற் பூங்கொடி நுடங்க
ஒருதிறம், பாடினி முரலும் பாலையங் குரலின்
நீடுகிளர் கிழமை நிறைகுறை தோன்ற
ஒருதிறம் ஆடுசீர் மஞ்ஞை அரிகுரல் தோன்ற
மாறுமா றுற்றனபோல் மாறெதிர் கோடல்
மாறட்டான் குன்றம் உடைத்து ;

(பரிபாடல் 17:9-21.)

நல்லாவூர் கிழார்:— இவரது ஊர் நல்லாவூர். இவர் வேளாளர். இயற்பெயர் தெரியவில்லை. இவர் பாடிய உழுந்து தலைப்பெய்த’ என்ற அகநானூற்று 86 ஆம் பாடலால் பண்டைக்காலத்துக் கலியாணச் சடங்கின் முறைகளை நன்கு அறியலாம். குறிஞ்சித் திணையையும் மருதத்திணையையும் சிறப்பித்துப் பாடியுள்ளார். இவர் பாடியனவாக நற்றிணையில் ஒரு பாடலும், அகநானூற்றில் ஒரு பாடலும் உள்ளன.

உழுந்துதலைப் பெய்த கொழுங்களி மிதவை
பெருஞ்சோற் றமலை நிற்ப நிரைகால்
தண்பெரும் பந்தர்த் தருமணல் ஞெமிரி
மனைவிளக் குறுத்து மாலை தொடரிக்
கனையிருள் அகன்ற கவின்பெறு காலைக்
கோள்கா னீங்கிய கொடுவெண் டிங்கட்
கேடில் விழுப்புகழ் நாடலை வந்தென
உச்சிக் குடத்தர் புத்தகன் மண்டையர்
பொதுசெய் கம்பலை முதுசெம் பெண்டிர்
முன்னவும் பின்னவு முறைமுறை தரத்தரப்
புதல்வற் பயந்த திதலையவ் வயிற்று
வாலிழை மகளிர் நால்வர் கூடிக்
கற்பினின் வழாஅ நற்பல உதவிப்
பெற்றோற் பெட்கும் பிணையை யாகென
நீரொடு சொரிந்த ஈரிதழ் அலரி
பல்லிருங் கதுப்பி னெல்லொடு தயங்க
வதுவை நன்மணங் கழிந்த பின்றைக்

கல்லென் சும்மையர் ஞெரேரெனப் புகுதந்து
பேரிற் கிழத்தி யாகெனத் தமர்தர
ஓரில் கூடிய உடன்புணர் கங்குல்
கொடும்புறம் வளைஇக் கோடிக் கலிங்கத்து
ஒடுங்கினள் கிடந்த ஓர்புறந் தழீஇ
முயங்கல் விருப்பொடு முகம்புதை திறப்ப
அஞ்சினள் உயிர்த்த காலை யாழநின்
நெஞ்சம் படர்ந்த தெஞ்சா துரையென
இன்னகை இருக்கைப் பின்யான் வினவலிற்
செஞ்சூட் டொண்குழை வண்காது துயல்வர
அகமலி உவகையள் ஆகி முகனிகுத்து
ஒய்யென இறைஞ்சி யோளே மாவின்
மடங்கொள் மதைஇய நோக்கின்
ஒடுங்கீர் ஓதி மாஅ யோளே.

(அகம். 86.)

<u>நல்லிறையனார்:—</u> இவர் வாக்கிற் காவிரி சிறப்பிக்கப் பெற்றுள்ளது. இவராற் பாடப்பட்டோன் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன். இறையனார் வேறு. இவர் வேறு. புறநானூற்றிலுள்ள பாடல் ஒன்றே இவர் பாடியதாகும்.

பதிமுதற் பழகாப் பழங்கண் வாழ்க்கைக்
குறுநெடுந் துணையொடு கூமை வீதலிற்
குடிமுறை பாடி யொய்யென வருந்தி
அடனசை மறந்தவெங் குழிசி மலர்க்கும்
கடனறி யாளர் பிறநாட் டின்மையின்
வள்ளன் மையினெம் வரைவோர் யாரென
உள்ளிய உள்ளமொ டுலைநசை துணையா
........கவக மெல்லாம் ஒருபாற் பட்டென
மலர்தார் அண்ணனி னல்லிசை யுள்ளி
ஈர்ங்கை மறந்தவெ னிரும்பேர் ஒக்கல்
கூர்ந்த வெவ்வம்விடக் கொழுநிணங் கிழிப்பக்
கோடைப் பருத்தி வீடுநிறை பெய்த
மூடைப் பண்ட மிடைநிறைந் தன்ன
வெண்ணிண மூரி யருள நாளுற
ஈன்ற வரவி னுவுருக் கடுக்குமென்
தொன்றுபடு சிதாஅர் துவர நீக்கிப்
போதுவிரி பகன்றைப் புதுமலர் அன்ன

அகன்றுமடி கலிங்க முடீஇச் செல்வமும்
கேடின்று நல்குமதி பெரும மாசில்
மதிபுரை மாக்கிணை தெளிர்ப்ப வொற்றி
ஆடுமகள் அல்குல் ஒப்ப வாடிக்
கோடை யாயினுங் கோடி.........
காவிரி புரக்கு நன்னாட்டுப் பொருந
வாய்வாள் வளவன் வாழ்கெனப்
பீடுகெழு நோன்றாள் பாடுகம் பலவே.

(புறம். 393.)

பழங்கண் - துன்பம். குழிசி - சமைத்தற்குரிய கலம். மலர்க்கும் - நிமிரச்செய்யும். உலை நசை - உலைதற்குக் காரணமான இச்சை. ஈர்ங்கை - உண்டு பூசிய கை. பருத்திவீடு - பருத்தியின் சுகிர்ந்த பஞ்சு. நிணமூரி - நிணத்தின் துண்டம். துவர - முற்ற.

நல்லூர்ச் சிறுமேதாவியார்:— இவர் நன்பலூர்ச் சிறுமேதாவியார் எனவும் கூறப்படுவர். வாயை மடித்து விடும் வீளைக்கு முயல்வெருவிப்புதலில் மறையுமென்றும், நரியினது ஊளை முதைப்புனங் காவலர் ஊதும் கொம்பின் ஒலியோடு ஒருங்கிசைக்கும் என்றும் பாடியுள்ளார். இவர் பாடியனவாக நற்றிணையில் ஒரு பாடலும், அகத்தில் இரண்டு பாடல்களும் திருவள்ளுவ மாலையில் ஒன்றும் உள்ளன.

தோடமை செறிப்பின் இலங்குவளை ஞெகிழக்
கோடேந் தல்குல் அவ்வரி வாட
நன்னுதற் பாய படர்மலி அருநோய்
காதலன் தந்தமை அறியா துணர்ந்த
அணங்குறு கழங்கின் முதுவாய் வேலன்
கிளவியிற் றணியின் நன்றுமன் சாரல்
அகில்சுடு கானவன் உவல்சுடு கமழ்புகை
ஆடுமழை மங்குலின் மறைக்கும்
நாடுகெழு வெற்பனொடு அமைந்தநம் தொடர்பே.

(நற் 282.)

நல்லெழுனியார்:— பரிபாடலில் இவராற் பாடப் பெற்றது திருமாலிற்குரியதாகிய 13 ஆம் பாடல். இதில் திருமாலின் திருவுருவம் முதலியவற்றைப் பல படப் பாராட்டியிருக்கும் பகுதிகளும் அவரைத் துதித்திருக்கும் பாகங்களும் அன்பர்களுடைய மனத்தை ஆநந்த வெள்ளத்திலழுத்தும். அதிகமானெடுமானஞ்சி யின் பரம்பரையோர் பெயர்களில் 'எழுனி' என்பது விரவி வருதலால், இவர் அவன் பரம்பரையினரோ வென்று நினைத்தற்கிடமுண்டு. இவர் பெயர் நல்லெழினி யென்றும் வழங்கும்.

நல்வழுதியார்:— பரிபாடலில் இவராற் பாடப் பெற்றது வையைக்குரிய 12-ஆம் பாடல். சைய மலையிலிருந்து மரங்கள் பலவற்றை வையை அடித்துக் கொண்டு வருதல், அது மதுரையின் மதிலைப் பொருதல், அதிற் புதுநீர் பெருகி வருதலைக் கேட்ட மகளிர் தலைவர்களுடன் ஊர்திகளில் ஏறிச்செல்லல், அது கண்ட பிறமகளிர் தம்முட் கூறுங் கூற்றுக்கள் சனங் களின் முழக்க மிகுதி, பலவகை வாச்சிய ஒலிகள், சென்றோர் தம்மவர்க்கு அங்கங்கே நிகழ்பவற்றை உவந்து காட்டிக்கூறல், நீர்விளையாட்டின் வகை முதலியன இதில் மிக நன்றாகக் கூறப் பெற்றுள்ளன. வழுதியாரென்பது இவர் பாண்டியர் குடியிற் பிறந்தவ ரென்பதைக் காட்டுகின்றது.

> ''இன்பமுங் கவினும் அழுங்கன் மூதூர்
> நன்பல நன்பல நன்பல வையை
> நின்புகழ் கொள்ளாதிம் மலர்தலை யுலகே.''

நல்விளக்கனார்:— இவர் நல்விளக்கு என்னும் ஊரினர். இவர் குறிஞ்சியைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். இவர் பாடிய பாடலொன்று நற்றிணையில் உள்ளது.

> ஆய்மலர் மழைக்கண் தெண்பனி உறைப்பவும்
> வேய்மருள் பணைத்தோள் விறலிழை நெகிழவும்

அம்பல் மூதூர் அரவம் ஆயினும்
குறிவரி இரும்புலி அஞ்சிச் குறுநடைக்
கன்றுடை வேழம் நின்றுகாத் தல்கும்
ஆர்இருள் கடுகிய அஞ்சுவரு சிறுநெறி
வாரற்க தில்ல தோழி சாரற்
கானவன் எய்த முளவுமான் கொழுங்குறை
தேங்கமழ் கதுப்பின் கொடிச்சி மகிழ்ந்துகொடு
காந்தளம் சிறுகுடிப் பகுக்கும்
ஓங்குமலை நாடன்நின் நசையி னுனே.

(நற். 85.)

நற்சேந்தனுர்:— இவர் கோடி மங்கலத்து வாதுளி நற்சேந்தனுர் எனவும் வழங்கப்பெறுவர். வாதுள கோத்திரத்தைச் சார்ந்தவராதலால் இவர் அந்தணர் என்று தெரியவருகிறது. பாலைத்திணையையும், குறிஞ்சித்திணையையும் சிறப்பித்துப் பாடியுள்ளார். இவர் பாடியனவாக நற்றிணையில் ஒரு செய்யுளும், அகநானூற்றில் இரண்டு செய்யுட்களும் உள்ளன.

பகலெரி சுடரின் மேனி சாயவும்
பாம்பூர் மதியி னுதலொளி கரப்பவும்
எனக்குநீ யுரையா யாயினை நினக்கியான்
உயிர்பகுத் தன்ன மாண்பினே னுகலின்
அதுகண் டிசினல் யானே யென்றுநனி
அழுத லான்றிசி னுயிழை யொலிகுரல்
ஏனல் காவலி னிடையுற் றொருவன்
கண்ணியன் கழலன் தாரன் தண்ணெனச்
சிறுபுறங் கவையின னுக அதற்கொண்டு
அஃதே நினைந்த நெஞ்சமொடு
இஃதா கின்றியா னுற்ற நோயே.

(நற். 128.)

நற்றங்கொற்றனுர்:— இவர் பெயர் கொற்றனுர். நத்தம் என்ற சொல் நற்றம் என்று ஆயிற்று. 'நத்தம்' எனப் பல ஊர்கள் சோழ நாட்டிலும், பாண்டிய நாட்டிலும் உள்ளன. இவரது ஊர் எந்த நாட்டில் உள்ளது என்று தெளிவாகக்கூறச் சான்று இல்லை.

இவர் குறிஞ்சித்திணையைச் சிறப்பித்துப்பாடியுள்ளார். தலைவன் பிரிவினுல் தன்னுடம்பு இளைத்தமையை அறிவுறுத்துவளாகிய தலைவி யான் கைவளை வேண்டி னேனுக எவ்வளவு இளைத்தாலும் கழலாதபடி எந்தை வளை செய்து தந்தனன் என்று கூறியது சிறப்பு. இவரது பாடல் ஒன்று நற்றிணையில் உள்ளது.

திருந்துகோல் எல்வளை வேண்டியான் அழவும்
அரும்பிணி உறுநர்க்கு வேட்டது கொடாஅது
மருந்தாய்ந்து கொடுத்த அறவோன் போல
என்னை வாழிய பலவே பன்னிய
மலைகெழு நாடனெடு நம்மிடைச் சிறிய
தலைப்பிரி வுண்மை அறிவான் போல
நீப்பநீங் காது வரின்வரை அமைந்து
தோட்பழி மறைக்கும் உதவிப்
போக்கில் பொலந்தொடி செறீஇ யோனே.

(நற். 136.)

எல்வளை-ஒளிப் பொருந்திய தோள்வளை. என் ஐ-என் தந்தை. தலைப்பிரிவு-விட்டுப் பிரிவு. அறவோன்-மருத்துவன்.

நற்றமனுர்:— இவர் குறிஞ்சித்திணையைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். பிரிவுக்காலத்துத் தோழி ஆற்று வித்தல் இரும்பைப் பழுக்கக் காய்ச்சிய உலையில் கொல்லன் பனைமடல் சின்னீர் தெளித்து நெருப்பைத் தணிப்பது போலாகுமென்று கூறியிருப்பது சிறப்பு. இவர் பாடிய பாடலொன்று நற்றிணையில் உள்ளது.

தோளே தொடிகொட் பானு கண்ணே
வாளீர் வடியின் வடிவிழந் தனவே
நுதலும் பசலை பாயின்று திதலைச்
சில்பொறி அணிந்த பல்காழ் அல்குல்
மணியேர் ஐம்பால் மாயோட்கு என்று
வெவ்வாய்ப் பெண்டிர் கவ்வை தூற்ற
நாமுறு துயரம் செய்யலர் என்னும்
காமுறு தோழி காதலம் கிளவி

இரும்புசெய் கொல்லன் வெவ்வுலைத் தெளித்த
தோய்மடற் சில்நீர் போல
நோய்மலி நெஞ்சிற்கு ஏமமாம் சிறிதே.

(நற். 133.)

கொட்டி-சுழற்சி. வடி-மாவடுவுக்கொருபெயர். நாம்-அச்சம். ஏமம்-காவல்.

நன்னாகையார்:— இவர் ஒரு பெண்பாற் புலவர். மாலையிற் கதவடைப்போர், ''வருவீர் உளீரோ' என்று கூப்பிடுதல் வழக்கமென்பது இவர் பாட்டால் தெரிகிறது. (குறுந். 118) பெண்பாலராகிய இப்புலவர் தலைவி கூற்றாகவே குறுந்தொகையில் இரண்டு செய்யுட்களையும் (118, 325) அமைத்துள் ளார்.

புள்ளும் மாவும் புலம்பொடு வதிய
நள்ளென வந்த நாரின் மாலைப்
பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர்
வருவீர் உளீரோ வெனவும்
வாரார் தோழிநங் காத லோரே.

(குறுந். 118.)

புலம்பு-தனிமை. நார்-அன்பு.

நாகம்போத்தனார்:— நாகனுடைய மகன் போத்தன் என்பது இத்தொடரின் பொருள். நாகன் என்பதன் ஈற்றிலுள்ள 'அன்' கெட்டு அம்முச் சாரியை வந்தது. (தொல். எழுத்து. சூ. 300) போத்தன் என்ற பெயர் மக்களுக்கு உண்டு என்பது, 'போத்தனார்' என்ற பெயர் வழக்கா லறியலாகும். வரகு செம் மண்ணையுடைய முல்லை நிலத்திற் கார்காலத்தில் வளம் பெறுவதென்று இவர் குறித்துள்ளார். இவர் பாடியது குறுந்தொகைச் செய்யுள் ஒன்றே

செவ்விகொள் வரகின் செஞ்சுவல் கலித்த
கௌவை நாற்றின் காரிருள் ஓரிலை

நவ்வி நாண்மறி கவ்விக் கடன்கழிக்கும்
காரெதிர் தண்புனங் காணிற் கைவளை
நீர்திகழ் சிலம்பின் ஓராங் கவிழ்ந்த
வெண்கூ தாளத் தந்தூம்பு புதுமலர்
ஆர்கழல் புகுவ போலச்
சோர்குவ வல்ல என்பர்கொல் நமரே.

(குறுந். 282.)

செஞ்சுவல்-முல்லை நிலத்திலுள்ள செம்மண் மேடு. ஆர்-காம்பு.

நாகன் றேவனார்:— இவர் கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர். திருக்குறளுக்குச்சிறப்புப்பாயிரம் அளித்துள்ளார். இவரது பாடலொன்று திருவள்ளுவமாலையில் உள்ளது.

தாளார் மலர்ப்பொய்கை தாங்குடைவார் தண்ணீரை
வேளா தொழிதல் வியப்பன்று—வாளாதாம்
அப்பா லொருபாவை யாய்பவோ வள்ளுவனார்
முப்பான் மொழிமூழ்கு வார்.

(திருவள்ளுவ. 12.)

நாமகள்:— கடைச்சங்கப்புலவர்களுள் ஒருவர். இவர் பாடிய பாடலொன்று திருவள்ளுவமாலையில் உள்ளது.

நாடா முதனான் மறைநான் முகனாவிற்
பாடா விடைப்பா ரதம்பகர்ந்தேன்—கூடாரை
எள்ளிய வென்றி யிலங்கிலைவேன் மாறபின்
வள்ளுவன் வாயதென் வாக்கு.

(திருவள்ளுவ. 2.)

…ார் மகன் இளங்கண்ணனார்:— மாலைக் காலத்தில் …ன் தன் பிணையோடு பள்ளங்களிலே தங்கிய … மாந்தித் துள்ளி விளையாடும் என்று இவர் …செய்யுளிற் கூறியுள்ளார். இவர் பாடியது …ாகைச்செய்யுள் ஒன்றே.

பரலவற் படுநீர் மாந்தித் துணையோடு
இரலை நன்மான் நெறிமுதல் உகளும்
மாலை வாரா வளவைக் காலியற்
கடுமாக் கடவுமதி பாக நெடுநீர்ப்
பொருகயல் முரணிய வுண்கண்
தெரிதீங் கிளவி தெருமரல் உயவே.

(குறுந். 250.)

நிகண்டன், கலைக்கோட்டுத்தண்டனார்:—மான்கொம்பை நிமிர்த்திக் கைக்கோலாகக் கொண்டமையால் இவர் கலைகோட்டுத்தண்டன் எனப்பட்டார். இவரது இயற்பெயர் தெரியவில்லை. நிகண்டன் என்ற அடைமொழியால் இவர் ஒரு நிகண்டு நூல் செய்திருப்பதாகத்தெரிகிறது. இவர் நெய்தலைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். இவர் பாடிய பாடலொன்று நற்றிணையில் உள்ளது.

கானல் மாலைக் கழிநீர் மல்க
நீனிற நெய்தல் நிரையிதழ் பொருந்த
ஆனது அலைக்கும் கடல்மீன் அருந்திப்
புள்ளினம் குடம்பை யுடன்சேர் புள்ளார்
துறந்தோர் தேஎத்து இருந்துநனி வருந்தி
ஆருயிர் அழிவ தாயினும் நேரிழை
காத்தல் வேண்டுமால் மற்றே பரப்புநீர்த்
தண்ணந் துறைவன் நாண
நண்ணார் தூற்றும் பழிதான் உண்டே.

(நற். 382.)

நெட்டிமையார்:— இவருக்கு இப்பெயர் உறுப்பால் வந்தது; நெடுமை இமையார். இவராற் பாடப் பட்டோன் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி. அப்பாண்டியன் பகைவருடைய மதிலை அழித்து ஊரைப் பாழ்படுத்தினமையும், குதிரைகளைச் செலுத்தி அவர் வயல்களை அழித்தமையும் யானைகளால் அவர் குளங்களைக் கலக்கினமையும், அவன் செய்த தருமயுத்தமும் இவர் பாடல்களிற்

கூறப்பெற்றுள்ளன. இவர் பாடிய செய்யுட்கள்: புறநா. 9, 12, 15.

> பாணர் தாமரை மலையவும் புலவர்
> பூநுதல் யானையொடு புனைதேர் பண்ணவும்
> அறனோ மற்றிது விறன்மாண் குடுமி
> இன்னா வாகப் பிறர்மண்கொண்
> டினிய செய்திநன் னார்வலர் முகத்தே.

(புறம். 12.)

<u>நெடுங்கழுத்துப் பரணர்</u>:— போருக்குச் செல்வோர் வெள்ளுடை உடுத்துச் செல்ல வேண்டுமென்பது இவர் பாடலால் தெரிகின்றது. இவருக்கு இப் பெயர் உறுப்பால் வந்தது போலும். புறநானூற்றில் உள்ள செய்யுள் ஒன்றே இவர் பாடியதாகும்.

> சிறுஅஅர் துடியர் பாடுவன் மகாஅஅர்
> தூவெள் ளறுவை மாயோற் குறுகி
> இரும்புட் பூசல் ஓம்புமின் யானும்
> விளரிக் கொட்பின் வெண்ணரி கடிகுவென்
> என்போற் பெருவிதுப் புறுக வேந்தே
> கொன்னுஞ் சாதல் வெய்யோற்குத் தன்றலை
> மணிமருண் மாலை சூட்டி அவன்றலை
> ஒருகாழ் மாலை தான்மலைந் தனனே.

(புறம். 291.)

துடியர்-துடிப்பறை கொட்டுபவர்கள். தூவெள் அறுவை- மிகவும் வெள்ளிய ஆடை. இரும்புட் பூசல்-பறவைகளின் ஆரவாரம். விளரி-இரங்கற்பண். கொட்பு-சுழற்சி.

<u>நெடும்பல்லியத்தனார்</u>:— பல்லியம் என்பது பல வாத்தியங்களைக் குறிக்கும். நெடிய பல வாத்தியங் களை உடைமையின் இவருக்கு இப்பெயர் வந்தது. இப்பெயருக்கேற்ப இவர், ''நல்யா ழாகுளி பதலை யொடு சுருக்கிச் சொல்லா மோதில் சில்வளை விறலி''

என்று கூறியிருப்பது நோக்கத்தக்கது. (புறநா. 64. தலைவியினது தூய தன்மையினால் பரத்தைமையுடைய தலைவன் நீங்கி ஒழுகுவதற்கு முனிவரது தூய்மையைக்கண்டு தூய்மையில்லாதார் அஞ்சி விலகியொழுகுவதை இவர் உவமையாகக் கூறியுள்ளார். இவர் பாடிய செய்யுட்கள் புறநா. 64. குறுந்தொகை செய். 203

மலையிடை யிட்ட நாட்டரு மல்லர்
மரந்தலை தோன்றா ஊரரும் அல்லர்
கண்ணிற் காண நண்ணுவழி இருந்தும்
கடவுள் நண்ணிய பாலோர் போல
ஒரீஇ யொழுகும் என்னைக்குப்
பரியலென் மன்யான் பண்டொரு காலே.

(குறுந். 203.)

முனிவரைக் கண்டார் தம் தூய்மையன்மை காரணமாக அஞ்சி விலகி ஒழுகும் தன்மையைப்போல என்னிடத்தினின்றும் நீங்கி ஒழுகினார் என்றாள். இவ்வுவமையால், தனது தூய்மையையும் தலைவனது பரத்தைமையாகிய தூய்மையன்மையையும் குறிப்பால் உணர்த்தினாள்.

<u>நெடும்பல்லியத்தை:—</u> இவர் ஒரு பெண்பாற் புலவர். இவர் நெடும்பல்லியத்தனாரின் உடன் பிறந்தாரோ வென்று ஊகிக்கப்படுகிறார். தலைவி தலைவனுக்குக் களவுக்காலத்தில் அரியளா யிருத்தற்கு, மூன்றாம் பிறை, கண்டு தொழுவோர்க்கு, அரிதாயிருத்தலை உவமை கூறியுள்ளார். இவர் இயற்றியது குறுந்தொகைச் செய்யுளொன்றே.

அயிரை பரந்த அந்தண் பழனத்து
ஏந்தெழில் மலர தூம்புடைத் திரள்கால்
ஆம்பல் குறுநர் நீர்வேட் டாங்கிவள்
இடைமுலைக் கிடந்தும் நடுங்கல் ஆனீர்
தொழுதுகாண் பிறையிற் றோன்றி யாம்நுமக்கு

அரிய மாகிய காலைப்
பெரிய நோன்றனிர் நோகோ யானே

(குறுந்.—178.)

நெடுவெண்ணிலவினர்:— களவுக்காலத்தில் இரவுக் குறிக்கண் வரும் தலைவனுக்கு இடையூருக இருக்கும் நிலவை, ''நெடுவெண் ணிலவே'' என்று விளித்துத் தோழி வெறுப்புக் குறிப்புப்படக் கூறுவதாகச் செய்யுள் பாடியதால் இவர் இப்பெயர் பெற்ருர். குறுந்தொகையிலுள்ள செய்யுள் ஒன்றே இவர் பாடிய தாகும்.

கருங்கால் வேங்கை வீயுகு துறுகல்
இரும்புலிக் குருளையிற் ருேன்றுங் காட்டிடை
எல்லி வருநர் களவிற்கு
நல்லை யல்லை நெடுவெண் ணிலவே.

(குறுந். 47.)

எல்லி - இரவு. நெடு வெண்ணிலவு - நெடுநேரம் எறிக்கும் வெண்ணிலவு; இயல்பாகத் தனக்கமைந்த பொழுதின் மாத்திரம் எறிக்கும் நிலவாயினும், விரைவில் மறைய வேண்டுமென்னும் விருப்பினளாதலின் அவளுக்கு நெடுமையுடையதாகத் தோன்றியது.

நெய்தற்கார்க்கியர்:— கார்க்கிய ரென்பது ஒரு முனிவர் பெயர்; அதுவே இவரது இயற்பெயராகும். நெய்தல் திணையைப் பாடும் ஆற்றல் வாய்ந்தமையின் இவர் நெய்தற் கார்க்கிய ரென்ற பெயரைப் பெற்ருர். நெய்தல் நிலத்தில் கழியிலுள்ள நீலப்பூக்கள் கூம்புவதும், கடற்றிவலை வீச ஊதைக் காற்றுத் துன்பத்தை உண்டாக்குவதும், தலைவன் மணியொலிக்கத் தேரிலேறிக் கடற்கரை வழியாக வருவதும் இவர் பாடல்கள் இரண்டிலும் (குறுந். 55, 212) சொல்லப்படுகின்றன.

மாக்கழி மணிப்பூக் கூம்பத் தூத்திரைப்
பொங்குபிதிர்த் துவலையொடு மங்குல்தைஇக்
கையற வந்த தைவரல் ஊதையொடு
இன்னா வுறையுட் டாகும்
சின்னாட் டம்மவிச் சிறுநல் லூரே.

(குறுந். 55.)

<u>நெய்தற் சாய்த்துய்த்த ஆவூர்கிழார்:</u>— இவர் வேளாண்மரபினைச் சார்ந்தவர். தலைமகனைத் தோழி வரைவு கடாவுவதாகச் செய்துள்ள இவரது அகப்பாடல் படிப்போர்க்கு இன்பம் பயக்கும். ''மிக்க வேட்கையுடையவரேனும் சான்றோர் பழியோடு வரும் இன்பத்தை விரும்பார். புகழோடு வரும் இன்பத்தையே விரும்புவர்'' என்பது இவர் பாடிய அகநானூற்றுப் பாடலால் அறியப்படும் நீதியாகும். இந்நீதி அமைந்த செய்யுள் ஒன்றேஇவர் பாடியதாகும்.

கூனல் எண்கின் குறுநடைத் தொழுதி
சிதலை செய்த செந்நிலைப் புற்றின்
மண்புனை நெடுங்கோ டுடைய வாங்கி
இரைநசைஇப் பரிக்கும் அரைநாட் கங்குல்
ஈன்றணி வயவுப்பிணப் பசித்தென மறப்புலி
ஒளிறேந்து மருப்பின் களிறட்டுக் குழுமும்
பனியிருஞ் சோலை எமியம் என்னாய்
தீங்குசெய் தனையே ஈங்குவந் தோயே
நாளிடைப் படினென் தோழி வாழாள்
தோளிடை முயக்க நீயும் வெய்யை
கழியாக் காதலர் ஆயினும் சான்றோர்
பழியொடு வரூஉம் இன்பம் வெஃகார்
வரையின் எவனோ வான்தோய் வெற்ப
கணக்கலை இகுக்குங் கறியிவர் சிலம்பின்
மணப்பருங் காமம் புணர்ந்தமை அறியார்
தொன்றியல் மரபின் மன்றல் அயரப்
பெண்கோள் ஒழுக்கம் கண்கொள நோக்கி
நொதுமல் விருந்தினம் போலவிவள்
புதுநாண் ஒடுக்கமும் காண்குவம் யாமே.

(அகம். 112.)

<u>நெய்தற் றத்தனார்:</u>— இவரது இயற்பெயர் தத்தன். தத்தனார் என்று பலர் இருப்பதனால் அவர்களினின்றும் பிரித்தறிய இவர் நெய்தற்றத்தனார் என்று வழங்கப் பெற்றார். இவர் நெய்தல் திணையைச் சிறப்பித்துப் பாடியுள்ளார்; பாலைத்திணையையும் பாடியுள்ளார். நீ படும் துன்பத்தைத் தலைமகன் ஊருக்குச் சென்று அவன் அறிந்துகொள்ளும்படி கூறுவோம் என்று தோழி தலைமகளை நோக்கிக் கூறியதாக இவரது பாடல் அமைந்துள்ளது. இவர் பாடியனவாக நற்றிணையில் இரண்டு செய்யுட்களும் அகநானூற்றில் ஒரு செய்யுளும் உள்ளன.

படுதிரை கொழீஇய பானிற எக்கர்த்
தொடியோர் மடிந்தெனத் துறைபுலம் பின்றே
முடிவலை முகந்த முடங்கிறுப் பாவைப்
படுபுள் ளோப்பலிற் பகன்மாய்ந் தன்றே
கோட்டுமீன் எறிந்த உவகையர் வேட்டமடிந்து
எமரும் அல்கினர் ஏமார்ந் தனமெனச்
சென்றுநாம் அறியின் எவனோ தோழி
மன்றப் புன்னை மாச்சினை நறுவீ
முன்றிற் றாழையொடு கமழுந்
தெண்கடற் சேர்ப்பன்வாழ் சிறுநல் ஊர்க்கே.

(நற். 49.)

அல்குதல் - தங்குதல். ஏமார்த்தல் - மயங்குதல். மன்றம் - சபை.

<u>நொச்சி நியமங்கிழார்:</u>— நொச்சிநியமம் — ஓரூர். இக்காலத்தில் நொச்சியம் என்று வழங்கப்படுகிறது. இவர் வேளாண்மரபினர். இவர் பாடல்கள் புறநானூற்றிலன்றி அகநானூற்றிலும், நற்றிணையிலும் காணப்படுகின்றன. நொச்சி நீயக்கிழார் என்று இப்பெயர் சில பிரதிகளில் உள்ளது.

நிறபபுடைக் கொல்கா யானை மேலோன்
குறும்பர்க் கெறியு மேவற் றண்ணுமை

நாணுடை மாக்கட் கிரங்கு மாயின்
எம்மினும் பேரெழில் இழந்து வினையெனப்
பிறர்மனை புகுவள் கொல்லோ
அளிய டானே பூவிலைப் பெண்டே.

(புறம். 293.)

நோய்பாடியார்:— இவர் நொய்ப்பாடியார் எனவும் வழங்கப் பெறுவர். நிலம்படு மின்மினிப்போலப் பரல் கடத்திடத்து இமைக்கும் என்று வியப்புறக் கூறியிருக்கின்றார். நடுகற்குப்பீலி சூட்டும் வழக்கத்தினையும், நடுகல் இடத்தவன் பிடித்த வேல் முதலிய கருவிகளை அங்கு வைக்கும் வழக்கத்தினையும் திறம் படக் கூறுகின்றார். அகநானூற்றிலுள்ள செய்யுள் ஒன்றே இவர் பாடியதாகும்.

யானெவன் செய்கோ தோழி பொறிவரி
வானம் வாழ்த்தி பாடவும் அருளா
துறைதுறந் தெழிலி நீங்கலிற் பறையுடன்
மரம்புல் லென்ற முரம்புயர் நனந்தலை
அரம்போழ் நுதிய வாளி அம்பின்
நிரம்பா நோக்கின் நிரையம் கொண்மார்
நெல்லி நீளிடை எல்லி மண்டி
நல்லமர்க் கடந்த நாணுடை மறவர்
பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்
பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்
வேலூன்று பலகை வேற்றுமுனை கடுக்கும்
மொழிபெயர் தேஎந் தருமார் மன்னர்
கழிப்பிணிக் கறைத்தோல் நிரைகண் டன்ன
உவலிடு பதுக்கை யாளுகு பறந்தலை
உருவில் பேஎய் ஊராத் தேரொடு
நிலம்படு மின்மினி போலப் பலவுடன்
இலங்குபரல் இமைக்கும் என்பநம்
நலந்துறந்து உறைநர் சென்ற ஆறே.

(அகம். 67.)

பக்குடுக்கை நன்கணியார்:— நன்கணியா ரென்பது இவரது இயற்பெயர். கணி-சோதிடம் வல்லவன்; உலகத்தை வெறுத்த ஞானியாதலால் இவர் பையையே

உடையாகக் கொண்டிருந்தன ரென்றும் அதுபற்றியே 'பக்குடுக்கை' என்னும் அடை இவர் பெயருக்குமுன் கொடுக்கப்பட்டதென்றும் தெரிகின்றன; பக்கு-பை (ஐங்குறு. 271) இவரி ஞானியென்பது இவரது செய் யுளால் அறியலாகும். புறநானூற்றிலுள்ள செய்யுள் ஒன்றே இவர் பாடியதாகும்.

ஓரில் நெய்தல் கறங்க ஓரில்
ஈர்ந்தண் முழவின் பாணி ததும்பப்
புணர்ந்தோர் பூவணி அணியப் பிரிந்தோர்
பைதல் உண்கண் பனிவார் புறைப்பப்
படைத்தோன் மன்றவப் பண்பி லாளன்
இன்னு தம்மஇவ் வுலகம்
இனிய காண்கிதன் இயல்புணர்ந் தோரே.

(புறம். 194.)

ஓரில்-ஒரு வீட்டில். நெய்தல் கறங்க-சாக்காட்டுப் பறை ஒலிக்க. ஈர்ந்தண் முழவு-மணத்திற்குக் கொட்டும் வாத்தியம்.

படுமரத்து மோசிகீரனுர்:— படுமரத்து மோசி கொற்றனுரும் இவரும் சகோதரர்களாக இருக்கலா மென்று தோன்றுகிறது. படுமரம் என்ற சொல் குறுந்தொகைப் பிரதிகளிற் சிலவிடங்களில் படுமாற்றூர்' என்றும் காணப்படுகிறது. இவரும் 'மோசி கீரனுர்' என்று குறுந்தொகைச் செய்யுட்களில் (59,84) வந்துள்ள பெயருக்குரியாரும் ஒருவரே என்று கருத இட முண்டு. மாணுக்கர் மன்றத்தில் இருப்பவர் என்றும் அவர்கள் இரந்தூண் வாழ்க்கையர் என்றும் இவர் கூறு கின்ருர். (குறுந். 33) மௌரியரின் தலைநகராகிய பாடலீபுரத்தின் செல்வமிகுதியையும் அங்கே யிருந்த யானைகளின் பெருக்கையும் இவர் குறித்துள்ளார். குறுந்தொகையிலுள்ள மூன்று செய்யுட்கள் (33,75, 383) இவர் பாடியனவாகும்.

அன்னாய் இவனோர் இளமா ணாக்கன்
தன்னூர் மன்றத் தென்னன் கொல்லோ
இரந்தூண் நிரம்பா மேனியொடு
விருந்தின் ஊரும் பெருஞ்செம் மலனே.

(குறுந். 33.)

இரந்தூண்-இரந்து பெற்று உண்ணும் உணவு. 'அட்டூண்டுழனி' என்பதைப் போன்றது இத்தொடர். மாணாக்கர் இரந்து உண்ணுதல் மரபு. நிரம்பாமை-பொலிவு பெறாமை. விருந்தின் ஊர்தலாவது விருந்து பெறுதற்குரிய இடங்களுக்கெல்லாம் செல்லுதல்; ஊர்தல்-செல்லுதல்; 'ஊர்தல் ஈண்டுப் போதன் மேற்று' (சீவக. 286, ந.)

<u>பதடி வைகலார்:—</u> தலைவியோடு பழகாத நாளைப் பதடி வைகல் என்று சொல்லுதலின் இவர் இப் பெயர் பெற்றார். (பதடி - பதர்). குறுந்தொகை யிலுள்ள செய்யுள் ஒன்றே இவர் பாடியதாகும்.

எல்லாம் எவனோ பதடி வைகல்
பாணர் படுமலை பண்ணிய வெழாலின்
வானத் தெழுஞ்சுவர் நல்லிசை வீழப்
பெய்த புலத்துப் பூத்த முல்லைப்
பசுமுகைத் தாது நாறு நறுநுதல்
அரிவை தோளிணைத் துஞ்சிக்
கழிந்த நாளிவண் வாழும் நாளே.

(குறுந். 323.)

படுமலை-படுமலைப்பாலை; பாலைப்பண் பன்னிரண்டனுள் ஒன்று. எழால்-இசையோசை. சுவல் - மேலிடம்; என்றது மந்தம், உச்சம், சமம் என்ற மூன்றில் உச்ச நிலையைக் குறித்தது போலும். பசுமுகை-செவ்வியரும்பு.

<u>பதுமனார்:</u>—பதுமன் என்பது பிரமதேவன் பெயர் தலைவன் பிரிந்தவிடத்து இரவில் துயில் கொள்ளாத தலைவி

தலைவன் தோழியின் துயிலையும் கெடுத்து அவள் தூங்குவதை, ''நனந்தலை யுலகமும் துஞ்சும்'' என்று இவர் கூறுவது நயம்பட அமைந்துள்ளது. பதுமனூர் என்ற பெயர் சைனரைக் குறிக்கு மென்பாருமுளர்; இவர் வேறு; பெரும்பதுமனூர் வேறு. இவர் பாடியதாகக் குறுந்தொகைச் செய்யுள் ஒன்றே உள்ளது.

நளளென் றன்றே யாமஞ் சொல்லவிந்
தினிதடங் கினரே மாக்கண் முனிவின்று
நனந்தலை யுலகமுந் துஞ்சும்
ஓர்யான் மன்ற துஞ்சா தேனே.

(குறுந். 6.)

மாக்கள்-ஐயறிவுடையோர்; என்றது தாய் முதலியவர்களை. தன் துயரை அறியாதிருத்தல் பற்றி இங்ஙனம் கூறினாள்.

<u>பரணர்</u>:— இவர் கபிலர்பால் மிக்க நேயமுடையவர். இது கபிலபரணர் என்னும் தொடரால் விளங்கும். இவர் பதிற்றுப்பத்தில் ஐந்தாம் பத்துப்பாடிக் கடல் பிறக்கோட்டிய கோச்செங்குட்டுவனிடம் உம்பற்காட்டு வாரியையும், அவன் மகன் குட்டுவன் சேரலையும் பரிசிலாகப் பெற்றனர். இதனை மேற்கூறிய பகுதியின் இறுதிக்கட்டுரையால் உணரலாம். இவரால் பாடப்பெற்றோர்; சோழன் உருவப் பஃறேரிளஞ்சேட்சென்னி, சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதன், சோழன் வேற்பஃறடக் கைப் பெருநற்கிள்ளி, வையாவிக்கோப்பெரும் பேகன், சேரமான் கடலோட்டிய வேல்கெழு குட்டுவ னென்பார். ''அமரர்ப் பேணியும்'' என்னும் ஔவையாருடைய பாட்டினால், அதியமான் நெடுமான் அஞ்சியை இவர் புகழ்ந்திருப்பதாகத் தெரிகின்றது. திருவள்ளுவமாலையிலுள்ள ''மாலுங் குறளாய்'' என்னும் அரிய வெண்பா இவர் பெயரால் உள்ளது. இன்னும் இவரியற்றிய பாடல்கள் குறுந்

தொகையிலும், நற்றிணையிலும், புறநானூற்றிலும் உண்டு. 11-ஆம் திருமுறையில் உள்ளதான சிவ பெருமான் திருவந்தாதி என்னும் பிரபந்தத்தின் ஆசிரியராகிய பரணதேவ நாயனுரென்பவர் இவ ரென்று சொல்லுவர். இவர் வேறு; வன்பரணர் வேறு. இரண்டு திருவிளையாடற் புராணங்களிலும் இவர் புகழப்பட்டிருக்கின்றூர். பதிற்றுப்பத்தின் ஐந்தாம் பத்தையும், குறுந்தொகைச் செய்யுட்கள் பதினேழையுமன்றி இவர் எட்டுத்தொகையில் இயற்றியனவாக உள்ள செய்யுட்கள் 57 (நற்.12; அகநா. 32; புறநா. 13) வையாவிக்கோப்பெரும் பேகனுல் நீக்கப்பட்ட கண்ணகியை மீட்டும் அவன் அழைத்துக் கொள்ளும்படி பாடினுர். குட்டுவனையும் அவனது முசிறியையும் புகழ்ந்து பாடியுள்ளார். வல்விலோரி என்னும் வள்ளல் இவராற் பாராட்டப் பெற்றுள்ளான். நன்னனென்னும் சிற்றரசனுடைய செய்திகள் பல இவரால் உரைக்கப்பெற்றுள்ளன. தொண்டி, உறையூர், காவிரி, ஆர்க்காடு, விச்சியர் கோன் போர், கழார், என்பன இவராற் கூறப் பெற்றுள்ளன. ஆதி மந்தியாரைப் பற்றியும், திதியனைப் பற்றியும் கண்ணியென்பவனைப்பற்றியும் அகநானூற்றில் இவர் கூறியுள்ளார். இவர் பாடிய பாடல் ஒவ்வொன் றிலும் யாரையேனும் புகழாமலும் அக்காலத்து நிகழ்ந்த கதை எதையேனும் அமையாமலும் இரார்.

பாணன் சூடிய பசும்பொற் றுமரை
மாணிழை விறலி மாலையொடு விளங்கக்
கடும்பரி நெடுந்தேர் பூட்டுவிட் டசைஇ
ஊரீர் போலச் சுரத்திடை யிருந்தனிர்
யாரீ ரோவென வினவ லானுக்
காரெ னெக்கற் கடும்பசி யிரவல
வென்வே லண்ணற் காணு வூங்கே
நின்னினும் புல்லியே மன்னே யினியே
இன்னே மாயினே மன்னே யென்றும்
உடாஅ போரா வாகுதல் அறிந்தும்

படாஅ மஞ்ஞைக் கீத்த வெங்கோ
கடாஅ யானைக் கலிமான் பேகன்
எத்துணை யாயினு மீத்த னன்றென
மறுமை நோக்கின்றோ வன்றே
பிறர், வறுமை நோக்கின்றவன் கைவண் மையே.

(புறம். 141.)

உடாஅ - உடுத்திக்கொள்வனவல்ல படாஅம் -ஆடை. கடாஅம்-மதம்.

பராயனார்:— தலைவன் தலைவியைப் பராயதாகப்பாடிய இச்செய்யுளால் இவர் இப்பெயர் பெற்றார் போலும். தலைவியினது ஊடலை நீக்கக் கருதிய தலைவன் அவளைப் பணிந்து பராய், அவளது முறுவல் கண்டு இன்புறும் செவ்வி பெரிதும் சுவையுடையதாகும். நெய்தலைச் சிறப்பித்துள்ளார். இவர் பாடிய பாடலொன்று நற்றிணையில் உள்ளது.

ஒள்ளிழை மகளிரொ டோரையும் ஆடாய்
வள்ளிழ் நெய்தல் தொடலையும் புனையாய்
விரிபூங் கானல் ஒருசிறை நின்றோய்
யாரை யோநிற் றொழுதனம் வினவுதும்
கண்டோர் தண்டா நலத்தை தெண்டிரைப்
பெருங்கடற் பரப்பின் அமர்ந்துறை அணங்கோ
இருங்கழி மருங்கு நிலைபெற் றனையோ
சொல்லினி மடந்தை என்றனென் அதனெதிர்
முள்ளெயிற்று முறுவலுந் திறந்தன
பல்லிதழ் உண்கணும் பரந்தவால் பனியே.

(நற். 155.)

ஓரை - பஞ்சாய்க்கோரையால் பாவை செய்து வைத்து விளையாட்டயர்வது. வள்ளிதழ் - பெரிய இதழ். தொடலை - மாலை. கண்டோர் தண்டா நலன் - பார்ப்போராலே கெடாத நலன். கண்ணெச்சில் (திருஷ்டிதோஷம்).

பருஉமோவாய்ப்பதுமர்:– பருத்த மோவாயை யுடைய பதுமர் என்பது இப்பெயரின் பொருள். தலைவியின் தோளோடு சேர்ந்திருக்கும் நாளுக்கு வையமும் வானகமும் சீர்சாலா என்று இவர் குறித்துள்ளார். தேவருலகை, ''அரிது பெறு சிறப் பிற் புத்தேணுடு'' என்று இவர் கூறியுள்ளது நோக்கத்தக்கது. குறுந்தொகையிலுள்ள செய்யுள் ஒன்றே இவர் பாடியதாகும். (பி.ம்) பருவமோ வாய்ப்பதுமன்)

விரிதிரைப் பெருங்கடல் வளைஇய வுலகமும்
அரிதுபெறு சிறப்பிற் புத்தேள் நாடும்
இரண்டுந் தூக்கிற் சீர்சா லாவே
பூப்போ லுண்கட் பொன்போல் மேனி
மாண்வரி அல்குல் குறுமகள்
தோண்மாறு படூஉம் வைகலொ டெமக்கே.

(குறுந். 101.)

உலகம் - நாடு: ஆகுபெயர். சீர் - கனம். உண்கண்-மையுண்டகண்.

பறநாட்டுப்பெருங்கொற்றனார்:– ''நறுநீல நெய்தலும் கொட்டியுந் தீண்டிப் பிறநாட்டுப் பெண்டிர் முடிநாறும் பாரி பறநாட்டுப் பெண்டிர் அடி'' எனவருதலால் பறநாடு பாரியினது நாடு என்று தெரி கிறது. அகநானூற்றுச் செய்யுள் ஒன்றே இவர் பாடியுள்ளார். யானைக்கூட்டம் போன்றும், தலைவியி னது கூந்தல் போன்றும் மேகங்கள் சூழ்ந்துள்ளன என்று தோழியின் கூற்றாக இவர் கூறிய உவமை நயம் மிகவும் பாராட்டத்தக்கது.

இம்மென் பேரலர் இவ்வூர் நம்வயின்
செய்வோர் ஏச்சொல் வாடக் காதலர்
வருவர் என்பது வாய்வ தாக
ஐய செய்ய மதனில சிறியநின்

அடிநிலன் உறுதல் அஞ்சிப் பையத்
தடவரல் ஒதுக்கந் தகைகொள இயலிக்
காணிய வம்மோ கற்புமேம் படுவி
பலவுப்பல தடைஇய வேய்பயில் அடுக்கத்து
யானைச் செல்லினங் கடுப்ப வானத்து
வயங்குகதிர் மழுங்கப் பாஅய்ப் பாம்பின்
பைபட விடிக்கும் கடுங்குரல் ஏற்றொடு
ஆலி யழிதுளி தலைஇக்
கால்வீழ்த் தன்றுநின் கதுப்புறழ் புயலே.

(அகம். 323.)

ஏச்சொல் - செருக்குடைய சொல். மதனில -செருக் கற்ற.

பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி:— பல நாடுகளைத் தந்த பாண்டியன் ஒருவனைப் பற்றிய செய்தி ''மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வவ்வலின், மெலிவின்றி மேற்சென்று மேவார்நா டிடம்படப், புலியொடு வின்னீக்கிப் புகழ்பொறித்த கிளர் கெண்டை, வலியினான் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்'' (கலித் 104), ''வடிவே லெறிந்த வான்பகை பொறாது, பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக் குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள, வடதிசைக் கங்கையு மிமயமுங் கொண்டு, தென்றிசை யாண்ட தென்னவன்'' (சிலப் - 11: 18-22) என்ற அடிகளாற் தெரிகிறது. வினைமுற்றிப் புகுந்த தலைமகன் செய்வினை முடித்த செம்மலுள்ள மொடு தலைவியினிடம் இருத்தலைக் கூறி மேகத்தை, ''இனி நீ முரசின் முழங்கி இடித்திடித்துப் பெய்துவாழி'' என்று கூறுவதாகக் குறுந்தொகையில் ஒரு பாடல் இவராற் பாடப் பட்டுள்ளது.

நற்றிணைச்செய்யுட்கள் (97,301) இரண்டினை இயற்றிய தோடன்றி அந்நூலைத் தொகுப்பித்த அரசரும் இவரே.

தாழிரு டுமிய மின்னித் தண்ணென
வீழுறை யினிய சிதறி யூழிற்
கடிப்பிகு முரசின் முழங்கி இடித்திடித்துப்
பெய்தினி வாழியோ பெருவான் யாமே
செய்வினை முடித்த செம்மல் உள்ளமோடு
இவளின் மேவின மாகிக் குவளைக்
குறுந்தாள் நாண்மலர் நாறும்
நறுமென் கூந்தல் மெல்லணை யேமே.

(குறுந். 270.)

வீழுறை-உயிர்களால் விரும்பப்படும் துளி எனலுமாம். ஊழ்-முறை. வாழ்த்தப்படும் பொருள்களுள் வானும் ஒன்று.

பனம்பாரனர்:— அகத்தியனர் மாணவருள் பனம் பாரம் என்ற இலக்கண நூலை இயற்றியவரும், தொல்காப்பியத்துக்குப் பாயிரம் செய்தவருமான பனம்பாரனரும் இவரும் ஒருவரோ வேறோ தெரியவில்லை. பெற்றோர் தலைவனுக்குத் தன்னைக் கொடாமலிருந்து விடுவாரோ என்ற அச்சத்தால் தலைவி மலைப்பக்கத்தில் வாழும் தெய்வத்தால் அழைக்கப் பட்டாற்போல் நடுங்கினள் என்று இவர் தாம் பாடிய குறுந்தொகைச் செய்யுளில் கூறுகின்றார்.

ஆர்களிறு மிதித்த நீர்திகழ் சிலம்பிற்
சூர்நசைந் தனையையாய் நடுங்கல் கண்டே
நரந்தம் நாறுங் குவையிருங் கூந்தல்
நிரந்திலங்கு வெண்பல் மடந்தை
பரிந்தென னல்லனோ இறையிறை யானே.

(குறுந். 52.)

குவை - தொகுதி. பரிதல் - இரங்கி அறத்தொடு நிற்றல்.

பாண்டரங் கண்ணனர்:— இவரால் பாடப்பட் டோன் சோழன் இராசசூயம் வேட்ட பெரு நற்கிள்ளி. பாண்டரங்கம் என்பது பதினோராடலுளொன்று;

அது வானோராகிய தேரில் முன்னின்ற திசைமுகன் காணும்படி பாரதி வடிவாகிய இறைவன் வெண்ணீற்றை அணிந்து ஆடியது; இதற்கு உறுப்பு ஆறு. இவர் அக்கூத்தில் வல்லவராக இருந்தமையால் இப்பெயர் பெற்றார் போலும். இவர் பாடியதாகப் புறநானூற்றுச் செய்யுளொன்றே உள்ளது.

வினைமாட்சிய விரைபுரவியொடு
மழையுருவின தோல்பரப்பி
முனைமுருங்கத் தலைச்சென்றவர்
விளைவயல் கவர்பூட்டி
மனைமரம் விறகாகக்
கடிதுறைநீர்க் களிறுபடீஇ
எல்லுப்பட விட்ட சுடுதீ விளக்கம்
செல்சுடர் ஞாயிற்றுச் செக்கரிற் றோன்றப்
புலங்கெட விறுக்கும் வரம்பி றானைத்
துணைவேண்டாச் செருவென்றிப்
புலவுவாட் புலர்சாந்தின்
முருகற் சீற்றத் துருகெழு குருசில்
மயங்குவள்ளை மலராம்பல்
பனிப்பகன்றைக் கனிப்பாகல்
கரும்பல்லது காடறியாப்
பெருந்தண்பணை பாழாக
ஏம நன்னா டொள்ளெரி யூட்டினை
நாம நல்லமர் செய்ய
ஓராங்கு மலைந்தன பெருமநின் களிறே.

(புறம். 16.)

பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்:—

இவன் கற்றோர்பால் மிக்க மதிப்புடையவனென்றும், கற்றலையே பெரும்பயனாக எண்ணியவனென்றும் இவன் பாடிய புறநானூற்றுப் பாடல் விளக்கும்; சிலப்பதிகாரக் கதாநாயகனாகிய கோவலனைக் கொல்வித்தவன் இவனே. இதனை அந்நூல் மதுரைக் காண்டத்தின் இறுதிக் கட்டுரையால் உணர்க.

உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே
பிறப்போர் அன்ன உடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயுமனந் திரியும்
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக வென்னாது அவருள்
அறிவுடை யோனா றரசுஞ் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே.

(புறம். 183.)

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்:– இவன் இளமைப் பருவத்தில் தலையாலங்கானத்தில் கோச்சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறையோடு போர்செய்து அவனைச் சிறைப்படுத்தியதன்றிச் சேரன், சோழன், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேண்மான், பொருநன் என்பவரையும் வென்றான்; வேள் எவ்வியின் மிழலைக் கூற்றத்தையும் பழைய வேளிருடைய முத்தூற்றுக் கூற்றத்தையும் கைக் கொண்டான்; மறக்களவேள்வியும் அறக்களவேள்வி யும் செய்தான்; செய்யுள் செய்தலில் வல்லவன்; புலவர்களிடத்து மிக்க அன்புள்ளவன்; உத்தம குணங்கள் பலவும் உடையோன். மாங்குடி மருதனார் இயற்றிய மதுரைக்காஞ்சித்தலைவன் இவனே. ''நகுதக்கனரே'' (புறநா. 72) என்னுஞ் செய்யுளை இயற்றியவன் ஆதலால், இவன் நல்லிசைப் புலவர் வரிசையில் விளங்கியவன் என்று தெரிகின்றது. ''பல்யானை மன்னர் முருங்க'' (யா. வி. மேற்.) என்னும் பாடலும் இவன் வரலாற்றின் ஒரு பகுதி யைத் தெரிவிக்கும். இவன் பெயர் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனெனவும் பாண்டியன் நெடுஞ்செழியனெனவும் வழங்கும். இவனைப்பாடிய புலவர்கள்: குறுங்கோழியூர்கிழார்;

குடபுலவியனர், கல்லாடனர், மாங்குடிகிழார், இடைக் குன்றூர்கிழார்.

நகுதக் கனரே நாடுமீக் கூறுநர்
இளைய னிவனென வுளையக் கூறிப்
படுமணி யிரட்டும் பாவடிப் பணைத்தாள்
நெடுநல் யானையுந் தேரு மாவும்
படையமை மறவரு முடையம் யாமென்
றுறுதுப் பஞ்சா துடல்சினஞ் செருக்கிச்
சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமஞ் சிதையத் தாக்கி முரசமொ
டொருங்ககப் படேஎ னுயிற் பொருந்திய
என்னிழல் வாழ்நர் சென்னிழற் காணாது
கொடியனெம் மிறையெனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றும் கோலே னுகுக
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவன் ஆக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பில்
புலவர் பாடாது வரைகவென் னிலவரை
புரப்போர் புன்கண் கூர
இரப்போர்க் கீயா இன்மையா னுறவே.

(புறம். 72.)

பாண்டியனேனாதி நெடுங்கண்ணனார்:— ஏனாதி என்பது வேந்தனால் கொடுக்கப்படும் பட்டப்பெயர்களுள் ஒன்று. சேனாதிபதிகட்கு வழங்கும் பட்டம் இது. பாண்டியனுடைய சேனைத்தலைவருள் இவர் ஒருவர். ஆவர். சேனைத் தலைவர் என்பதற்கு ஏற்பப் போரின் காரணமாக அழிந்துபட்ட மன்றமும் பொதியிலும் இவர் வாக்கில் கூறப்படுகின்றன. தன்னைப் பிரிந்து தலைவி உறக்கங் கொள்ளாமல் தவிப்பாளோ என்று நினைக்கும் தலைவன் கூற்றில், ''வென்வேல், அண்ணல் யானை யடுபோர் வேந்தர், ஒருங்ககப் படுத்த முரவுவாய் ஞாயில், ஒரெயின் மன்னன் போலத் துயிறுறந்தனள்கொ லளிய டானே'' (அகநா. 373.) என்பதை அமைத்துள்ளமையும் நோக்கத்தக்கது. பார்ப்பனப் பாங்கன் தண்டினையும்

கமண்டலத்தையும் வைத்திருப்பான் என்றும் வேதம் பயின்றவன் என்றும் இவர் வாக்கினுல் (குறுந். 156) தெரிகிறது. இவ்விரண்டு செய்யுட்களே இவர் பாடியவை.

பார்ப்பன மகனே பார்ப்பன மகனே
செம்பூ முருக்கின் நன்ஞர் களைந்து
தண்டொடு பிடித்த தாழ்கமண் டலத்துப்
படிவ வுண்டிப் பார்ப்பன மகனே
எழுதாக் கற்பின் நின்சொல் உள்ளும்
பிரிந்தோர்ப் புணர்க்கும் பண்பின்
மருந்து முண்டோ மயலோ இதுவே.

(குறுந். 156.)

முருக்கு - புரசமரம். இது பலாசு என்றும் கூறப் படும். மருந்து-பரிகாரம்.

<u>பார காபரர்:—</u> இலைகளில்லாத கிளைகளில் கோங்கு மலர்தலையும், தலைவன் தன் வருகையைக் குறித்து முன்னதாகத் தூது விடுதலையும் இவர் பாடல் குறிக்கின்றது. இவர் பாடியது குறுந்தொகைச் செய்யுள் ஒன்றே. (பி-ம்.) பார்காப்பான், பாரகரபரன், பாரகாபான்.)

இலையில் அஞ்சினை இனவண் டார்ப்ப
முலையேர் மென்முகை யவிழ்ந்த கோங்கின்
தலையலர் வந்தன வாரா தோழி
துயிலின் கங்குற் றுயிலவர் மறந்தனர்
பயினறுங் கதுப்பிற் பாயலு முள்ளார்
செய்பொரு டரனசைஇச் சென்றோர்
எய்தினர் ஆலென வரூஉந் தூதே.

(குறுந். 254.)

இலவமரத்தின் இனமாகிய கோங்கும் அவ்விலவத்தைப் போன்றே மலருங்காலத்தில் இலைகளின்றித் தோன்றும். தலையலர் - முதலில் பூக்கும் மலர்கள்.

பாரதம் பாடிய பெருந்தேவனுர்:— ஐங்குறுநூற்றின் கடவுள் வாழ்த்தியற்றிய இவர் கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர். உரைநடை இயற்றுதலிலும் செய்யுள் செய்தலிலும் மிக்க ஆற்றலுடையவர். இவர் பிறந்த இடம் தொண்டை நாடு; இது,

''சீருறும் பாடல்பன் னீரா யிரமுஞ் செழுந்தமிழ்க்கு
வீரர்தஞ் சங்கப் பலகையி லேற்றிய வித்தகனுர்
பாரதம் பாடும் பெருந்தேவர் வாழும்
பழம்பதிகாண்
மாருதம் பூவின் மணம்வீ சிடுந்தொண்டை
மண்டலமே''

என்னும் தொண்டைமண்டல சதகச் செய்யுளால் விளங்குகிறது.

பெருந்தேவனுரென்பது இவரது இயற்பெயர். இஃது இவரியற்றிய பாரதச் செய்யுளைத் தொல்காப்பியப் பொருளதிகாரவுரையில் மேற்கோளாக எடுத்துக் காட்டும் இடங்களில் நச்சினுர்க்கினியர், ''இச் செய்யுள் பெருந்தேவனுரியற்றியது'' என்று புலப்படுத்தியிருத்தலால் துணியப்படும். பாரதத்தை உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாக இயற்றிய தனுற் பாரதம் பாடிய பெருந்தேவனுரென்றும் இவர் வழங்கப்படுவர். இவருடைய பாரதச் செய்யுட்கள் தொல்காப்பியப் பொருளதிகாரம், நச்சினுர்க்கினியர் உரையிலின்றி யாப்பருங்கல விருத்தி முதலியவற்றிலும் மேற்கோளாக அமைந்த பெருமை வாய்ந்தவை.

திருவள்ளுவ மாலையிலுள்ள 'எப்பொருளும் யாரும்' என்னும் வெண்பா இவர் இயற்றியதாகத் தெரிகிறது.

இவரியற்றிய கடவுள் வாழ்த்துக்களுள் ஐங்குறுநூறு, அகநானூறு, புறநானூறு இவைகளில் உள்ளவைகள். சிவபெருமான் துதிகளாவும், நற்றிணையில் உள்ளது திருமால் துதியாகவும், குறுந்தொகையிலுள்ளது முருகக்கடவுள் துதியாகவும் உள்ளனவாதலால் இவருடைய கடவுள் வழிபாடும் கொள்கையும் இன்னவெனத் துணிந்து சொல்லக் கூடவில்லை.

இவருடைய கடவுள் வாழ்த்துக்கள் நற்றிணை முதலிய தொகைநூல்களின் முன்னர் வைக்கப் பெற்றிருத்தலும், ஐந்தாம் மறையாகிய பாரதத்தை இவரியற்றியிருத்தலும் இவருடைய முதன்மையையும் கல்விப் பெருமையையும் நன்கு விளக்கும்.

மேற்கூறிய கடவுள் வாழ்த்துச் செய்யுட்களையும் பாரத வெண்பாவையும் திருவள்ளுவ மாலைச் செய்யுளையுமன்றி இவர் செய்தனவாக அகநானூற்றில் ஒரு செய்யுளும், நற்றிணையில் ஒன்றும் இப்பொழுது தெரிகின்றன.

<u>பாரிமகளிர்:-</u> முன்னாளில், பாரி என்று ஒரு சிற்றரசன் இருந்தான். அவன் வள்ளல்களில் ஒருவன். அவனுக்கு இரண்டு புதல்வியருண்டு. அவ்விருவரும் தமிழ்ப் புலமை வாய்ந்தவர்களென்பது புறநானூற்றில் அவர்களுடைய பெயராலுள்ள பாட்டிலிருந்து விளங்குகிறது. தன் மகளிரை மூவேந்தர்கள் மணம் செய்துகொள்ள விரும்பியபோது பாரி மறுத்தமையால் அவர்கள் அவனோடு போர் செய்யக் கருதினர். குறிஞ்சி பாடுதலிற் பெரியாராகிய கபிலர் அப்போது அவனுடன் இருந்தார். அவர் மூவேந்தரையும் நோக்கி, ''நீங்கள் ஆடுநர் போலவும் பாடுநர் போலவும் வேடங்கொண்டு வருவீராயின்,

பாரி தன் மலையை உங்களுக்குக் கொடுத்து விடுவன்'' என்று பாரியின் வள்ளன்மையையும் வீரமும் விளங்க ஒரு பாடல் செய்திருக்கிறார்.

''கொடுக்கிலாதானைப் பாரியேயென்று கூறினுங் கொடுப்பாரிலை'' என்று சுந்தர மூர்த்திநாயனர் ஒரு தேவாரத்திற் சொல்லியிருப்பதிலிருந்து பாரியின் புகழ் விளங்குகிறது. மூவேந்தரும் மலையை வளைந்து பெரும்போர் செய்த போது பாரி இறந்து போனன். அதை நினைத்து அவன் மகளிர் உருகிப் பாடிய பாட்டு வருமாறு:—

''அற்றைத் திங்க ளவ்வெண் ணிலவின்
எந்தையு முடையே மெங்குன்றும் பிறர்கொளார்
இற்றைத் திங்க ளிவ்வெண் ணிலவின்
வென்றெறி முரசின் வேந்தரெம்
குன்றுங் கொண்டார்யா மெந்தையு மிலமே''
(புறநானூறு: 235.)

இம்மகளிரிருவர்க்கும் பிறகு கபிலர் விவாகம் செய்வித்தார். இம்மகளிரின் பெருமை 'பழமொழி' என்னும் நூலிலும் பாரட்டப்பட்டுள்ளது; இம் மகளிருள் ஒருத்தி, மழையில்லாத வறட்சிக் காலத்தில் இரந்து வந்த ஒரு பாணனை உண்பித்தற்குச் சோறு பெருமையாற் பொன்னை உலையிற் பெய்து சோறாக்கி கொடுத்தாளென்று, ''மாரியொன் றின்றி வறந் திருந்த காலத்துப், பாரி மடமகள் பாண்மகற்கு நீருலையுட் பொன்றந்து கொண்டு புகாவாக நல்கினாள், ஒன்றுரு முன்றிலோ வில்'' என்னும் வெண்பாவால் விளங்குகிறது.

பாலை பாடிய பெருங்கடுங்கோ:— இவர் சேரவரச பரம்பரையினருள் ஒருவர். பாலைத்திணையைப் பலபடப் பலதொகை நூல்களிற் சிறப்பித்து இவர் பாடியிருத்தவினால், 'பாலைபாடிய' என்ற

அடைமொழியைப் பெற்ருர். இவருடைய பாடல்களின் சொல் நயம் பொருள் நயங்கள் படிப்பாரைப் பிணிப்பனவாய் அமைந்துள்ளன. இடை இடையே நீதிகளை அழகாக அமைந்துள்ளார் இவர். ''பாலை நிலம் இன்னுதாயின் தலைவர் பிரிந்த மனைமகளிர்க்கு இனிதாகுமோ?'' (குறுந். 124) என்று தோழி கூறியது, ''நின் பிரிவினும் சுடுமோ பெருங்காடு'' என்ற சீதையின் கூற்றை நினைப்பூட்டுகின்றது. ''நீ தனிமையால் வருந்த யான் நின்னைப் பிரிந்து சென்ற இடத்தே மனம் பொருந்தி யிருப்பேனுயின், இரவலர் என்னைத் துறந்து வாராத நாட்கள் பலவாகுக'' என்று தலைவன் வஞ்சினம் கூறுவதாக (குறுந். 137) இவர் கூறியுள்ளார். இக்கருத்தையே இவர் பின்னும், ''இரந்தோர்க் கொன்றீயாமை யிளிவு'' (கலித். 14) என்று கூறுகிருர். இவர் பாடல்களில் செல்வத்தைப் பற்றிய பல செய்திகள் அழகாகக் கூறப்படுகின்றன. 'தம்முடைய முன்னேரால் ஈட்டி வைத்த பொருளைச் செலவிட்டு வாழ்வோர் செல்வரெனப் படார்; அஃது இரந்து வாழ்வதினும் இழிவுடையது' (குறுந்.283) ''செம்மையி னிகந்தோரீஇப் பொருள் செய்வார்க் கப்பொருள், இம்மையு மறுமையும் பகையாவ தறியாயோ'' (கலித். 14) ''கிழவ ரின்னு ரென்னுது பொருடான், பழவினை மருங்கிற் பெயர்பு பெயர் புறையும்'' (கலித். 21)

''அறன்கடைப் படாஅ வாழ்க்கையு மென்றும்,
பிறன்கடைச் செலாஅச் செல்வமு மிரண்டும்,
பொருளினுகும்'' (அகநா. 155) என்பன பொருளைப் பற்றி இவர் கூறுவனவற்றுள் ஒரு சிலவாம். ஆறலைப்போரின் கொடுமையை, ''கொள்ளும் பொருளிலராயினும் வம்பலர், துள்ளுநர்க் காண்மார் தொடர்ந்துயிர் வௌவலின். (கலித்.4) என்று குறித்திருக்கிருர். பாலை நிலத்தில் மரம் வெம்பி

வாடுதலே, ''வறியவ னிளமைபோல் வாடிய சினையவாய்ச், சிறியவன், செல்வம்போற் சேர்ந் தார்க்கு நிழலின்றி, யார்கண்ணு மிகந்துசெய் திசைகெட்டா னிறுதிபோல், வேரொடு மரம் வெம்ப'' (கலித். 10) என்று கூறும் முகத்தால் பலநீதிகளை அமைக்கிறார். நீதிகளை இவர் உவமை வாயிலாக விளக்குவதற்கு, ''சிறப்புச்செய் துழையராய்ப் புகழ்போற்றி மற்றவர், புறக்கொடையே பழிதூற்றும் புல்லியார் தொடர்புபோல்'' ''செல்வத்துட் சேர்ந்தவர் வளனுண்டு மற்றவர், ஒல்கிடத் துலப்பிலா வுணர்விலார் தொடர்பு போல்'', ''பொருந்திய கேண்மையின் மறையுணர்ந் தம்மறை, பிரிந்தக் காற் பிறர்க்குரைக்கும் பீடிலார் தொடர்புபோல்'' (கலித். 25) என்பன உதாரணமாகும். புறநானூற்றில் ஒரு வீரனது ஆற்றலை இவர் பாடியிருக்கும் விதம் படித்தின்புறற்பாலது (282) இவரைப் பாடியவர் பேய்மகள் இளவெயினி என்பார் (புறநா. 11.) குறுந் தொகைச் செய்யுட்கள் பத்தினையன்றி இவர் இயற்றிய வேறு பாடல்கள்: நற். 10; பாலைக்கலி; அகநா. 12; புறநா.1.

உள்ளார் கொல்லோ தோழி கள்வர்தம்
பொன்புனை பகழி செப்பங் கொண்மார்
உகிர்நுதி புரட்டும் ஓசை போலச்
செங்காற் பல்லி தன்றுணை பயிரும்
அங்காற் கள்ளியங் காடிறந் தோரே.

(குறுந். 16.)

கள்வர் - ஆறலைகள்வர்.

<u>பாவைக் கொட்டிலார்:</u>— பாவை என்பது இளைய மகளிர் வைத்து விளையாடும் பொருள்களுள் ஒன்றா கிய பதுமை. பாவை செய்து சிறுமியர்க்கு அளித்து வந்தவராக இவர் விளங்கினர் போலும்; அதனால் இப் பெயர் பெற்றார். மக்களுக்கு அடங்காமல்

திரியும் விலங்குகளை அடக்கி ஆளும் மக்கள், இறுதியில் அவ்விலங்குகளினாலேயே இறப்பர். யானை அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் இயல்பினையுடையது; யானையொடு பழகும் பாகன் இறக்காமல் உயிர் வாழ்தல், அவ்யானை அவனைக்கொல்லாமல் விட்டிருப்பதினாலேயே என்றும், நெருஞ்சிப்பூ, ஞாயிறு கீழ்த்திசை இருப்பின் கிழக்கு நோக்கும்; மேற்றிசைச்செல்லின் மேற்கு நோக்கும்; வானத்துச்சியில் இருப்பின் உச்சியை நோக்கும் என்றும் இவர் திறம்படக்கூறுகிறார். இவர் பாடிய பாடலொன்று அகநானூற்றில் உள்ளது.

குழற்காற் சேம்பின் கொழுமடல் அகலிலைப்
பாசிப் பரப்பிற் பறழொடு வதிந்த
உண்ணாப் பிணவின் உயக்கஞ் சொலிய
நாளிரை தரீஇய எழுந்த நீர்நாய்
வாளையொ டுழப்பத் துறைகலுழ்ந் தமையின்
தெண்கட் டேறல் மாந்தி மகளிர்
நுண்செயல் அம்குடம் இரீஇப் பண்பின்
மகிழ்நன் பரத்தமை பாடி அவிழிணர்க்
காஞ்சி நீழற் குரவை அயரும்
தீம்பெரும் பொய்கைத் துறைகேழ் ஊரன்
தேர்தர வந்த நேரிழை மகளிர்
ஏசுப என்பவென் நலனே அதுவே
பாகன் நெடிதுயிர் வாழ்தல் காய்சினக்
கொல்களிற் றியானை நல்கல் மாறே
தாமும் பிறரும் உளர்போற் சேறல்
முழவிமிழ் துணங்கை தூங்கும் விழவின்
யானவண் வாரா மாறே வரினே, வானிடைச்
சுடரோடு திரிதரும் நெருஞ்சி போல
என்னொடு திரியான் ஆயின் வென்வேல்
மாரி யம்பின் மழைத்தோற் சோழர்
வில்லீண்டு குறும்பின் வல்லத்துப் புறமிளை
ஆரியர் படையின் உடைகவென்
நேரிறை முன்கை வீங்கிய வளையே.

(அகம்.

பிசிராந்தையார்:— இவர் பாண்டிநாட்டிலுள்ள பிசிரென்னும் ஊரினர்; கோப்பெருஞ் சோழனுடைய

உயிர்த்தோழர். அவன் துறந்து உயிர்நீத்தது கேட்டுத் தாமும் உடன் உயிர் நீத்தார். ''பிசிரோ னென்பவென் னுயிரோம் புநனே'' (புறநா. 215) என்னும் அவன் வாய்மொழியாலும், கோப்பெருஞ் சோழனுக்கும் பிசிராந்தையாருக்கும் போல உணர்ச்சி யொப்பின், அதுவே உடனுயிர் நீங்கு முரிமைத்தாய நட்பினைப் பயக்கும்.'' (குறள். 785, பரிமேல்), ''இதற்குக் கோப்பெருஞ்சோழன் துறந்துழிப் பிசிராந்தையாரும் பொத்தியாரும் போல்வார் துறந் தாரென்று கூறும் புறச்செய்யுட்கள் உதாரணம்'' (தொல். கற்பு. சூ. 52, ந.) என்பவற்றாலும் இவை அறியலாகும். இவருடைய பாடல் மிக்க இன்பம் பயக்கும். இவர் நரை திரை மூப்புத் துன்பங்களின்றி வாழ்ந்தவர்; அதன் காரணத்தை, ''யாண்டு பலவாக'' என்னும் இவர் பாடல் புலப் படுத்தும். இவர் பெயர் இரும்பிசிராந்தையா ரெனவும் வழங்கும்; இவராற் பாடப்பட்டோர்; கோப்பெருஞ்சோழன், பாண்டியன் அறிவுடை நம்பி. இவர் அகநானூற்றில் ஒன்றும், நற்றிணையில் ஒன்றும், புறநானூற்றில் நான்கும் ஆக ஆறு செய்யுட்கள் பாடியுள்ளார்.

யாண்டுபல வாக நரையில வாகுதல்
யாங்கா கியரென வினவுதி ராயின்
மாண்டவென் மனைவியொடு மக்களும் நிரம்பினர்
யான்கண் டனையரென் இளையரும் வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும் அதன்தலை
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழும் ஊரே.

(புறம். 191.)

<u>பிரமசாரி:</u>— நிலைபற்றிய பெயர். பெயரிலிருந்தே இவர் மணம் செய்துகொள்ளாது பிரமசரியம் காத்திருந்த அந்தணர் என்று தெரிகிறது. ''கடவு ளாயினு மாக, மடவை மன்ற வாழிய முருகே''

என முருகவேளைக்கடிந்து கூறிய இவரது மனத் திட்பம் அறியத்தக்கது. இவர் குறிஞ்சியைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். இவர் பாடிய பாட லொன்று நற்றிணையில் உள்ளது.

கடவுட் கற்சுனை யடையிறந் தவிழ்ந்த
பறியாக் குவளை மலரொடு காந்தட்
குருதி ஒண்பூ உருகெழக் கட்டிப்
பெருவரை அடுக்கம் பொற்பச் சூர்மகள்
அருவி யின்னியத் தாடு நாடன்
மார்புதர வந்த படர்மலி அருநோய்
நின்னணங் கன்மை யறிந்தும் அண்ணாந்து
கார்நறுங் கடம்பின் கண்ணி சூடி
வேலன் வேண்ட வெறிமனை வந்தோய்
கடவு ளாயினு மாக
மடவை மன்ற வாழிய முருகே.

(நற். 34.)

பிரமனார்:— நிலையாமையை இவர் நன்கு அறிந்தவர்; அதனை அறிவுறுத்துதலிலும் வல்லவர்; இது ''பொதுமை சுட்டிய மூவருலகமும், பொதுமை யின்றி யாண்டிசி னோர்க்கும், மாண்ட வன்றே யாண்டுகிள்'' என்பதனால் விளங்கும். இவர் பாடியது புறநானூற்றுச் செய்யுள் ஒன்றே.

குன்றுதலை மணந்த மலைபிணித் தியாத்தமண்
பொதுமை சுட்டிய மூவர் உலகமும்
பொதுமை யின்றி யாண்டிசி னோர்க்கும்
மாண்ட வன்றே யாண்டுக டுணையே
வைத்த தன்றே வெறுக்கை வி..................
..........................................ணை
புணைகை விட்டோர்க் கரிதே துணையழத்
தொக்குயிர் வெளவுங் காலை
இக்கரை நின்றிவர்ந் துக்கரை கொளலே.

(புறம். 357.)

குன்று - சிறுமலை. பிணித்துயாத்த - மிக உறுதியாக யாக்கப்பெற்ற. சுட்டிய - நன்கு மதிக்கப் பெற்ற.

பொதுமையின்றி - சிறப்பாக. ஆண்டிசினோர்க்கும் - ஆண்டோர்க்கும். ஆண்டுகள் - வாழ்நாட்கள். வெறுக்கைதுணை வைத்ததன்றே - பொற்குவியல் துணையாக வைக்கப் பெற்றதன்று; அழியுந்தன்மை. யுடையது என்றபடி. புணை - தெப்பம். உக்கரை- அக்கரை; வீட்டுலகம்.

பிரான் சாத்தனார்:— இயற்பெயர் சாத்தனார். இவர் பிரான்மலை என்னும் ஊரைச் சார்ந்தவராக இருக்கலாம் என்று தெரிகிறது. இவர் குறிஞ்சித் திணையைப் பாடியுள்ளார். மகளிர் விளையாடாமல் வீட்டின்கண் இருத்தல் அறனன்று. ஆக்கமும் தேய்ந்து விடும் என்று அன்னையிடம் கூறுமாறு தலைவி கூறியதாக இவரது செய்யுள் அமைந்துள்ளது சிறப்பு. இவரது பாடலொன்று நற்றிணையில் உள்ளது.

விளையா டாயமொ டோரை யாடா
திளையோர் இல்லிடத் திற்செறிந் திருத்தல்
அறனும் அன்றே ஆக்கமுந் தேய்ம்மெனக்
குறுநுரை சுமந்து நறுமலர் உந்திப்
பொங்கிவரு புதுநீர் நெஞ்சுண வாடுகம்
வல்லிதின் வணங்கிச் சொல்லுநர்ப் பெறினே
செல்கென விடுநண்மற் கொல்லொ எல்லுமிழ்ந்
துரவுரு முரறு மரையிரு ணடுநாட்
கொடிநுடங் கிலங்கின மின்னி
ஆடுமழை யிறுத்தன்றவர் கோடுயர் குன்றே.

(நற். 68.)

புதுக்கயத்து வண்ணக்கன் கம்பூர்கிழார்:— இவர் வேளாண் மரபினைச் சார்ந்தவர். கம்பூர் என்னும் ஊரினர். வண்ணக்கன்-நாணயபரிசோதகன். புதுக் கயம் என்னும் ஊரில் நாணயப் பரிசோதகராய் இருந்திருக்கலாம் என்று தெரிகிறது. இவர் குறிஞ்சித் திணையைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். இவர் பாடியது நற். 294. ஆம் செய்யுள்.

தீயும் வளியும் விசும்புபயந் தாங்கு
நோயும் இன்பமும் ஆகின்று மாதோ
மாயம் அன்று தோழி வேய்பயின்
றெருவை நீடிய பெருவரை அகந்தொறும்
தொன்றுறை துப்பொடு முரண்மிகச் சினைஇக்
கொன்ற யானைக் கோடுகண் டன்ன
செம்புடைக் கொழுமுகை அவிழ்ந்த காந்தள்
சிலம்புடன் கமழுஞ் சாரல்
இலங்குமலை நாடன் மலர்ந்த மார்பே.

(நற். 294.)

புல்லாற்றூர் எயிற்றியனார்:— இம்மை மறுமைப் பயன்களை இவர் நன்கறிந்தவர். கோப்பெருஞ் சோழன் தன் மக்களோடு போர் செய்தற்கு எழுந்தபொழுது பாடித் தடுத்த அரிய பாடலே இதனை விளக்கும். புல்லாற்றூர் எயிற்றியா ரெனவும் பிரதிபேதமுண்டு. இவராற் பாடப்பட்டோன் மேற் கூறிய கோப்பெருஞ்சோழன். இவர் புறநானூற்றுச் செய்யுள் ஒன்றே பாடியுள்ளார்.

மண்டமர் அட்ட மதனுடை நோன்றாள்
வெண்குடை விளக்கும் விறல்கெழு வேந்தே
பொங்குநீர் உடுத்தவிம் மலர்தலை யுலகத்து
நின்றலை வந்த விருவரை நினைப்பிற்
றொன்றுறை துப்பினின் பகைஞரும் அல்லர்
அமர்வெங் காட்சியொடு மாறெதிர் பெழுந்தவர்
நினையுங் காலை நீயு மற்றவர்க்
கனையை யல்லை யடுமான் றோன்றல்
பரந்துபடு நல்லிசை யெய்தி மற்றுநீ
உயர்ந்தோர் உலகம் எய்திப் பின்னும்
ஒழித்த தாய மவர்க்குரித் தன்றே
அதனால், அன்ன தாதலும் அறிவோய் நன்றும்
இன்னுங் கேண்மதி யிசைவெய் யோயே
நின்ற துப்பொடு நிற்குறித் தெழுந்த
எண்ணில் காட்சி இளையோர் தோற்பின்
நின்பெருஞ் செல்வம் யார்க்கெஞ் சுவையே
அமர்வெஞ் செல்வ நீயவர்க் குலையின்
இகழுநர் உவப்பப் பழியெஞ் சுவையே
அதனால், ஒழிகதி லத்தைநின் மறனே வல்விரைந்

தெழுமதி வாழ்கநின் னுள்ள மழிந்தோர்க்
கேம மாகுநின் ருணிழன் மயங்காது
செய்தல் வேண்டுமால் நன்றே வானோர்
அரும்பெறல் உலகத் தான்றவர்
விதும்புறு விருப்பொடு விருந்தெதிர் கொளற்கே.

(புறம். 213.)

புறத்திணை நன்னாகனார்:— புறத்திணைத் துறைகளைச் சிறப்புறப் பாடுதல் பற்றி இப்பெயர் இவருக்கு அமைந்தது போலும். பெருமா விலங்கை, பாரி பறம்பிற் சுனை யென்பவை இவர் வாக்கிற் பாடப் பெற்றுள்ளன; ''இல்லோர் சொன்மலை'', ''நிரயத் தன்னவென் வறன்களைந் தன்றே, இரவி னானே யீத்தோ னெந்தை, அன்றை ஞான்றினொடின்றி னூங்கும், இரப்பச் சிந்தியேன் நிறைக்குளப் புதவின் மகிழ்ந்தனனென்'', ''மண்ணாணப் புகழ்வேட்டு நீர்நாண நெய்வழங்கிப் புரந்தோ னெந்தை ...யாண்டு நிற்க வெள்ளி'' என்பவை உபகாரிகளை இவர் பாராட்டிய அருமைப் பகுதிகள். ஆறுகளில் தருமவோடம் உண்டென்று இவர் பாடலால் தெரிகின்றது. இவர் பெயர் நன்னாகனாரெனவும் நன்னாதனாரெனவும் சில பிரதிகளில் வழங்கும். இவரால் பாடப்பட்டோர்; ஓய்மான் நல்லியக் கோடன், ஓய்மான் நல்லி யாதன், ஓய்மான் வில்லியாதன், கரும்பனூர் கிழானென்பார். பரிபாடலில் இரண்டாம் பாட்டுக்கு இசை வகுத்தவர் இவரே. இவர் பாடிய செய்யுட்கள்: புறநா. 176, 376, 381, 384.

ஓரை யாய்த் தொண்டொடி மகளிர்
கேழ லுழுத இருஞ்சேறு கிளைப்பின்
யாமை யீன்ற புலவுநாறு முட்டையைத்
தேனா ரும்பற் கிழங்கொடு பெறூஉம்
இழுமென வொலிக்குச் புனலம் புதவிற்
பெருமா விலங்கைத் தலைவன் சீறியாழ்

இல்லோர் சொன்மலை நல்லியக் கோடனை
உடையை வாழியெற் புணர்ந்த பாலே
பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர்
ஓரு ருண்மையின் இகழ்ந்தோர் போலக்
காணாது கழிந்த வைகல் காணா
வழிநாட் கிரங்குமென் னெஞ்சமவன்
கழிமென் சாயல் காண்டொறும் நினைந்தே.

(புறநா. 176.)

ஓரை-மகளிர் விளையாட்டு. புதவு-கதவு; ஆகுபெயர்.

பூங்கண்ணர்:— சுரத்திற் செல்வோர் இரவில் புலிதனக் குரிய இரையை வைத்திருந்த புலால் நாற்றம் வீசும் கற்குகையினிடத்துத் தங்குவர் என்று இவர், தாம் பாடியுள்ள குறுந்தொகைச் செய்யுளில் கூறியுள்ளார்.

கேளார் ஆகுவர் தோழி கேட்பின்
விழுமிது கழிவ தாயினும் நெகிழ்நூற்
பூச்சேர் அணையிற் பெருங்கவின் தொலைந்தநின்
நாள்துயர் கெடப்பின் நீடலர் மாதோ
ஒலிகழை நிவந்த ஓங்குமலைச் சாரல்
புலிபுகா வுறுத்த புலவுநாறு கல்லளை
ஆறுசெல் மாக்கள் சேக்கும்
கோடுயர் பிறங்கல் மலையிறந் தோரே.

(குறுந். 253.)

விழுமிது - அறம், பொருள் முதலியன. ஒலிகழை - தன்பாலுள்ள துளைவழியே காற்றுப் போகையில் ஒலிக்கும் மூங்கில். புகா - உணவு.

பூங்கணுத்தரையார்:— இவர் பெண்பாலார்; உத்தரையார் என்பது இவருடைய இயற்பெயர். ''மீனுண் கொக்கின் றூவி யன்ன, வானரைக் கூந்தன் முதியோள் சிறுவன், களிறெறிந்து பட்டன னென்னு முவகை, ஈன்ற ஞான்றினும் பெரிதே'' என மறக்குடியிற் பிறந்த முதுமகளின் இயல்பை

இவர் தெரிவித்திருத்தல் அறிதற்பாலது. குறுந்தொகையில் இவர் பாடிய செய்யுட்கள் இரண்டும், (48,171) புறநானூற்றில் ஒன்றும் (277) உள்ளன.

தாதிற் செய்த தண்பனிப் பாவை
காலை வருந்தும் கையா றோம்பென
ஓரை யாயம் கூறக் கேட்டும்
இன்ன பண்பி னினைபெரி துழக்கும்
நன்னுதல் பசலை நீங்க வன்ன
நசையாகு பண்பின் ஒருசொல்
இசையாது கொல்லோ காதலர் தமக்கே.

(குறுந். 48.)

தாது-பலவகைப்பொடி. இனை-வருத்தம்.

பூதங்கண்ணனார்:— இவரது இயற்பெயர் கண்ணனார். இவர் பூதன் என்பவரின் புதல்வராக இருக்கலாம் என்று தோற்றுகிறது. தலைவி அருளினும், அருள் செய்யாவிடினும் அவளே தனது நோய்க்கு மருந்தென்று தோழியால் குறை மறுக்கப்பட்ட தலைவன் தன்நெஞ்சை விளித்துக் கூறுவதாக இவர் நற்றிணையில் பாடியது பாராட்டத்தக்கது.

கொண்டல் மாமழை குடக்கேர்பு குழைத்த
சிறுகோ லிணர பெருந்தண் சாந்தம்
வகைசே ரைம்பாற் றகைபெற வாரிப்
புலர்விடத் துதிர்த்த துகள்படு கூழைப்
பெருங்கண் ணாயம் உவப்பத் தந்தை
நெடுந்தேர் வழங்கு நிலவுமணல் முற்றத்துப்
பந்தொடு பெயரும் பரிவி லாட்டி
அருளினும் அருளா ளாயினும் பெரிதழிந்து
பின்னிலை முனியல்மா நெஞ்சே என்னதூஉம்
அருந்துய ரவலந் தீர்க்கும்
மருந்துபிறி தில்லையா னுற்ற நோய்க்கே

(நற். 140.)

முன்னிலை - முன்னே நிற்றல். கொண்டல் - கொள்ளுதல் என்னும் பொருளது. ஏர்பு - எழுச்சி. குழைத்தல் - தழையச்செய்தல். ஐம்பால் - கூந்தல்.

பூதத்தேவர்:— நற்றிணையில் பூதன் றேவனென்று ஒருபெயர் காணப்படுகிறது. ஈழத்துப் பூதன் றேவன் இவரில் வேருனவர் என்று தோற்றுகிறது. விடியலிற் சிறுவர் கறப்பதற்காக எருமைகளைக் கன்றுகளோடு ஓட்டிச்செல்வர் என்றும், தலைவனது நோய்க்குத் தலைவியல்லது மருந்து பிறிதில்லை என்றும், (நற். 80) இவர் கூறுவர். ''வைகல் வைகல் வைகவும் வாரார். எல்லா வெல்லை யெல்லையுந் தோன்ருர்'' (குறுந். 285) என்று தலைவி கூற்றில் இவர் அமைத்திருக்கும் அடிகள் சொல்நயம் பொருந்தியனவாக உள்ளன. இவரியற்றியவை இந்த இரண்டு செய்யுட்களே. (பி. ம்.) பூதந்தேவன்.

வைகல் வைகல் வைகவும் வாரார்
எல்லா எல்லை யெல்லையுந் தோன்ருர்
யாண்டுளர் கொல்லோ தோழி யீண்டிவர்
சொல்லிய பருவமோ இதுவே பல்லூழ்
புன்புறப் பெடையொடு பயிரி யின்புற
இமைக்கண் ஏதா கின்ருே ஞெமைத்தலை
ஊனசைஇ யொருபருந் திருக்கும்
வானுயர் பிறங்கல் மலையிறந் தோரே.

(குறுந். 285.)

பூதபாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு:— பெருங்கோப்பெண்டு - பட்டத்துத் தேவியார். இவர் தம் கணவனுகிய பூதபாண்டியன் இறந்த பொழுது அவன் பிரிவாற்ருமல் வருந்தி, 'மற்றை மகளிர் போல யான் இனி உயிரோடிரேன்' என்று, புறநானூற்றிலுள்ள ''பல்சான் றீரே'' என்னும் அரிய பாடலைப் பாடித் தீயிற் பாய்ந்தார். இவர் காலத்துப்புலவர் மதுரைப்பேராலவாயார். பூதப் பாண்டி என்ற ஓர் ஊர் பாண்டி நாட்டில்உள்ளது.

பல்சான் றீரே பல்சான் றீரே
செல்கெனச் சொல்லா தொழிகென விலக்கும்

பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான்றீரே
அணில்வரிக் கொடுங்காய் வாள்போழ்ந் திட்ட
காழ்போல் நல்விளர் நறுநெய் தீண்டாது
அடையிடைக் கிடந்த கைபிழி பண்டம்
வெள்ளெட் சாந்தொடு புளிப்பெய் தட்ட
வேளை வெந்தை வல்சி யாகப்
பரற்பெய் பள்ளிப் பாயின்று வதியும்
உயவற் பெண்டிரே மல்லே மாதோ
பெருங்காட்டுப் பண்ணிய சருங்கோட் டீமம்
நுமக்கரி தாகுக தில்ல எமக்கெம்
பெருந்தோட் கணவன் மாய்ந்தென அரும்பற
வள்ளித ழவிந்த தாமரை
நள்ளிரும் பொய்கையுந் தீயுமோ ரற்றே

(புறநா. 246).

கொடுங்காய்என்பதுபெயர்; வெள்ளரிக்காய். வரி-அடை.

பூதம்புல்லர்:— 'பூதம் புலவர்' என்று பிரதிபேதம் இருத்தலால் இவர் பெயரை 'பூதம் புலவர்' என்றே கொள்ளலாம். பல பசுக்கள் உள்ள தொழுவத்தில் ஒரு நல்லேறு இருக்குமென்பது இவர் பாடியதான குறுந்தொகைப்பாடலாற் தெரிகிறது. பசுக்களைப் பாதுகாப்போர் பொலிகாளை ஒன்றை வைத்துக் கொள்ளல் நலம் என்ற கொள்கை இக்காலத்திலும் நிலவி வருகிறது.

நெறியிருங் கதுப்பொடு பெருந்தோள் நீவிச்
செறிவளை நெகிழச் செய்பொருட் ககன்றோர்
அறிவர்கொல் வாழி தோழி பொறிவரி
வெஞ்சின அரவின் பைந்தலை துமிய
உரவுரு முரறும் அரையிருள் நடுநாள்
நல்லே றியங்குதோ றியம்பும்
பல்லான் தொழுவத் தொருமணிக் குரலே.

(குறுந். 190.)

கதுப்பும் தோளும் நீவித் தலையளி செய்தது பின்பு பிரியும் பொருட்டு. செறிவளை - முன்பு செறிந்திருந்த

வளே. அறிவர்கொல் என்றது அறிந்தாற் பிரிந்திரா ரென்னும் நினைவிற்று. ஆவினங்களுக்கு இன்பந் தருதலின் நல்லேருயிற்று. இயங்குதோறு - அசையுந் தோறு மெனினுமாம். ஒரு மணி ஏற்றின் கழுத்தி லுள்ளது. பல பசுக்கள் கட்டிய தொழுவத்திற் கேட்கும் ஒரு மணிக்குரல், அவை அந்நல்லேற் ருேடு இன்புற்றிருக்கும் நிலையை நினைவுறுத்தி, ''இவை பெற்ற பேறு யாம் பெற்றிலேமே''! என இரங்குதற்குக்காரணமாயிற்று. அக்குரலை நள்ளிரவில் தான் கேட்பதாகத் தலைவி குறிப்பித்தாள்; இதனுல் அவள் நள்ளிரவிலும் துஞ்சாமை பெறப்படும்.

பெருங்கண்ணர்:— காமநோயின் வளர்ச்சிக்கு வளர் பிறையை இவர் உவமை காட்டியுள்ளார். பகல் கழிந்ததனுல் வானம் புல்லென்றிருத்தல் தலைவன் பிரிந்ததனுல் தலைவி பொலிவழிந்திருத்தல் போன்றது என்று கூறியுள்ளார். குறுந்தொகைச் செய்யுட்கள் இரண்டும் (289, 310) நற். 137 - ஆம் செய்யுளும் இவர் பாடியன.

> வ்ளர்பிறை போல வழிவழிப் பெருகி
> இறைவளே நெகிழ்த்த எவ்வ நோயொடு
> குழைபிசைந் தனையே மாகிச் சாஅய்
> உழைய ரன்மையின் உழப்ப தன்றியும்
> மழையுந் தோழி மான்றுபட் டன்றே
> பட்ட மாரி படாஅக் கண்ணும்
> அவர்திறத் திரங்கு நம்மினும்
> நந்திறத் திரங்குமிவ் வழுங்க லூரே.
>
> (குறுந். 289.)

பெருங்குன்றூர் கிழார்:— இவர் வேளாண் மரபினர். இவர் பதிற்றுப்பத்தின் ஒன்பதாம் பத்தைப் பாடிச் சேரமான் குடக்கோ இளஞ்சேரலிரும்பொறையிடம் முப்பத்தீராயிரம் காணம் முதலிய பரிசில் பெற்ற னர். வையாவிக் கோப்பெரும்பேகனுல் துறக்கப் பட்ட கண்ணகியை அவனுடன் சேர்த்தற்கு அவனைப்

பாடி அதனையே பரிசிலாகக் கூறினர். இவராற்பாடப் பட்டோர்: வையாவிக் கோப்பெரும்பேகன், சேரமான் குடக்கோச்சேரலிரும்பொறை, குடக்கோ இளஞ்சேரலி ரும்பொறை, சோழன் உருவப்பஃறேரிளஞ் சேட்சென்னி யென்பார்.

அகப்பொருளில் குறிஞ்சித்திணையை மிகுதியாகப் பாடி யுள்ளார். தலைவிப் பருவங்கண்டு அழிந்தமையையே புலவர்கள் பெரும்பாலும் கூற, இவர், ''தலைவன் வரவை அறிந்து மின்னி இடித்து வந்த மழைக்கு விருந்து என்செய்கோ'' என்று தலைவி தோழியிடம் கூறுவதாக (நற். 112)ப் பாடியுள்ளார். தலைவன் பிரிவினுல் தலைவி நலமழிந்து வாடுவதற்கு நீரின்மை யால் வருந்தும் வேனிற் றவளையை உவமை காட்டி யுள்ளார். மிகுந்த செல்வாக்குப் பெற்று விளங்கிய புலவருள் இவரும் ஒருவராவர். இவர் பாடியனவாக நாம் இப்பொழுது அறிபவை: நற். 4; குறுந். 1; பதிற். ஒன்பதாம் பத்து; அகநா. 1; புறநா. 4; பன்னிருபாட்டியலில் இவர் பாடியனவாகச் சில சூத்தி ரங்கள் உள்ளன. சிறு மேதாவியார், சேந்தம் பூதனர், நல்லந்துவனர், மருதனிள நாகனர், நக்கீரர், பரணர் முதலியோர் இவர் காலத்தவர்.

திரிமருப் பிரலை யண்ணல் நல்லேறு
அரிமடப் பிணையோ டல்குநிழ லசைஇ
வீததை வியலரிற் றுஞ்சிப் பொழுதுசெலச்
செழும்பயறு கறிக்கும் புன்கண் மாலைப்
பின்பனிக் கடைநாட் டண்பனி யச்சிரம்
வந்தன்று பெருவிறல் தேரே பணைத்தோள்
வியங்குநக ரடங்கிய கற்பின்
நலங்கே ழரிவை பிலம்பசா விட்வே.

(குறுந். 338.)

அல்கு நிழல் - மாலைக்காலத்தின் நிழலென்பதும் பொருந்தும். இரலையும் பிணையும் துஞ்சிப் பயறு

கறிக்கு மென்றது, நீயும் நின்தலைவனோடு இனிப் பிரிவின்றி இன்புறுதல் கூடுமென்ற குறிப்பை யுணர்த்தியது.

பெருஞ்சாத்தனார்:— ஒல்லையூர் கிழார்மகன் பெருஞ் சாத்தன் என்ற உபகாரி ஒருவரைப் பற்றிய செய்தி புறநானூற்றில் (242) வருகின்றது. மகளிர் தலைவனையே தெய்வமாகக் கொள்ளும் கற்புடையார் என்பதைக் காட்ட இவர் தோழி கூற்றில் வெறி யெடுத்தலை ''வேற்றுப் பெருந்தெய்வம் பலவுடன் வாழ்த்தி' என்று கூறுகிறார்; குறுந். 263. இக்குறுந் தொகைச் செய்யுளையன்றி வேறொன்றும் பாடிய தாகத் தெரியவில்லை.

மறிக்குரல் அறுத்துத் தினைப்பிரப் பிரீஇச்
செல்லாற்றுக் கவலைப் பல்லியங் கறங்கத்
தோற்ற மல்லது நோய்க்குமருந் தாகா
வேற்றுப்பெருந் தெய்வம் பலவுடன் வாழ்த்திப்
பேஎய்க் கொளீஇயள் இவளெனப் படுதல்
நோதக் கன்றே தோழி மால்வரை
மழைவிளை யாடு நாடனைப்
பிழையே மாகிய நாமிதற் படவே.

(குறுந். 263.)

பெருஞ்சித்திரனார்:— அன்பில்லாதவர்கள் எவ்வளவு செல்வமுடையவர்களாக இருப்பினும் அவர்களை இவர் மதிப்பவரல்லர்; புறநா. 162 207-8. ஊக்க முதலிய இயல்பு வாய்ந்தவர். குமணனுடைய வண்மையை புலப்படுத்துதல் முகமாகக் கடையெழு வள்ளல் களின் வரலாறுகள் சிறுபாணாற்றுப் படையிற் போலச் சுருக்கமாக இவராற் கூறப்பட்டுள்ளன. புறநா. 158. தம்முடைய தாய், குழந்தைகள், மனைவி, சுற்றத்தார் ஆகிய இவர்கள் பசியால் வருந்துவதை இவர் குமணனுக்குக் கூறும் பகுதிகள் (புற.நா. 159) கன்னெஞ்சையும் கரையச்செய்யும்; பசியால் வருந்தும் குழந்தைகளுக்கு அத்துன்பத்தைப் போக்கு

தற்பொருட்டு, அவ்வப்போது தம் மனைவி செய்யும் உபாயங்களை இவர் கூறும் பகுதிகளும் (புறநா.160), குமணனளித்த பரிசிலை தம்மனைவியிடம் கொடுத்து, ''நீஇனிக்கவலையின்றி வாழ்'' (புறநா. 163) என்று கூறுவனவும் அறிதற்பாலன; செய்யுளிலுள்ள பொருளமைதிகளை நோக்கியே இவருக்கு இப்பெயரை இட்டனர்போலும்; சித்திரம் - ஆச்சரியம். இவராற் பாடப்பட்டோன் குமணன்; இகழப்பட்டோர்- அதியமான் நெடுமானஞ்சி, இளவெளிமானென்பார். இவர் பாடிய செய்யுட்கள்: புறநா. 158, 159, 160 161, 162, 163, 207, 208, 237, 238.

நின்னயந் துறைநர்க்கு நீநயந் துறைநர்க்கும்
பன்மாண் கற்பினின் கிளைமுத லோர்க்கும்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
நெடுங்குறி யெதிர்ப்பை நல்கி யோர்க்கும்
இன்னோர்க் கென்னா தென்னொடுஞ் சூழாது
வல்லாங்கு வாழ்து மென்னாது நீயும்
எல்லோர்க்குங் கொடுமதி மனைகிழ வோயே
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்துவேற் குமணன் நல்கிய வளனே.

(புறநா. 163.)

கடும்பு - சுற்றம். கடும்பசி - மிக்கபசி.

<u>பெருந்தலைச்சாத்தனார்:—</u> சாத்தனாரென்பது தெய்வத்தான் வந்த இயற்பெயர்; குமணனது தலையை இவர் பாதுகாத்தது பற்றியோ உறுப்புப் பற்றியோ இப்பெயர் முன் இவ்வடைமொழி சார்த்தப் பெற்றதுபோலும். ஆவூர் மூலங்கிழாரென்பவருடைய புதல்வர் இவர். (அகநா. 224); நள்ளியின் தம்பியாகிய இளங்கண்டீரக்கோவும் இளவிச்சிக் கோவும் சேர்ந்திருந்த பொழுது சென்று இளவிச்சிக் கோவை மதியாமல் இளங்கண்டீரக்கோவை மட்டுந் தழுவி, அதற்குக் காரணமுங் கூறினார்; (புறநா.151) தம்பியால் நாடு கொள்ளப்பட்டுக் காடு பற்றியிருந்த

குமணனைக் கண்டு தம்முடைய வறுமைத்துன்பத்தைக் கூறித் தன் தலையைத் துணித்தற்கு அவன் வாள் கொடுப்ப அதனைக் கொண்டு சென்று . இளங் குமணனுக்குக்காட்டி அவன் மனத்திலிருந்த மாறு பாட்டைப் போக்கினர்; புறநா. 164 - 5. இவராற் பாடப்பட்டோரும் இவர் காலத்தவரும் இளங்கண் டீரக்கோ, இளவிச்சிக்கோ, குமணன், இளங்குமணன், கடிய நெடுவேட்டுவன், மூவனென்பார்; இவர் பாடல்கள் அகநானூற்றிலும், நற்றிணையிலும், திருவள்ளுவமாலையிலும், யாப்பருங்கல விருத்தி யுரையிலும் காணப்படுகின்றன.

ஆடுநனி மறந்த கோடுய ரடுப்பின்
ஆம்பி பூப்பத் தேம்புபசி யுழவாப்
பாஅ லின்மையிற் றோலொடு திரங்கி
இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
சுவைத்தொ றழூஉந்தன் மகத்துமுகம் நோக்கி
நீரொடு நிறைந்த ஈரிதழ் மழைக்கணென்
மனையோ ளெவ்வம் நோக்கி நினைஇ
நிற்படர்ந் திசினே நற்போர்க் குமண
என்னிலை யறிந்தனை யாயி னிந்நிலைத்
தொடுத்துங் கொள்ளா தமையலெ னடுக்கிய
பண்ணமை நரம்பின் பச்சை நல்யாழ்
மண்ணமை முழவின் வயிரியர்
இன்மை தீர்க்குங் குடிப்பிறந் தோயே.

(புறம். 164.)

பெருந்தோட் குறுஞ்சாத்தனார்:— சினை, வடிவுகளால் இவருக்கு இப்பெயர் வந்ததென்பர். வாழையால் யானை மதன் அழியும் என்பதும் யானையின் மத்தகம் தெய்வத்தன்மை பொருந்தியதென்பதும் இவர் பாடியதான குறுந்தொகைப் பாட்டால் தெரிய வருகின்றன.

சோலை வாழைச் சுரிநுகும் பினைய
அணங்குடை யருந்தலை நீவலின் மதனழிந்து
மயங்குதுய ருற்ற மையல் வேழம்

உயங்குயிர் மடப்பிடி யுலேபுறந் தைவர
ஆமிழி சிலம்பின் அரிதுகண் படுக்கும்
மாமலே நாடன் கேண்மை
காமந் தருவதோர் கைதாழ்ந் தன்றே.

(குறுந். 308.)

வாழையால் மதனழிந்த வேழம் மயங்கிப் பின் கண் படுக்கு மென்றது, நாம் வரைவு கடாவினமையின் மயங்கிய தலேவன் வரைந்து கொண்டு இடையீடில்லாத இன்பத்தைப் பெறுவானென்ற குறிப்பினது.

பெரும்பதுமனுர்:— உயர்ந்த கருத்தமைந்த செய்யுள் செய்தலில்இவர்வல்லவர். ஆரியக்கூத்தர் கழையிற் கட்டிய கயிற்றின்மேல் நின்று ஆடுவதும், அப்பொழுது பறை கொட்டுவதும் இவராற் கூறப் பட்டுள்ளன. மணமகளது காலிற் பெற்ருேர்களால் அணியப்பட்ட சிலம்பை நீக்குவததற்கு ஒரு சடங்கு செய்யும் வழக்கம் இவராற் குறிக்கப்படுகின்றது. இவர் தலேவனது உள்ளத்துக்குத் தலேவி இடியை உவமை கூறுவதாக (நற். 2) அமைத்துள்ளார். ''ஆலமரத்தின் பழங்களே நேற்று உண்டோமே என்று நினேயாமல் புள்ளினங்கள் மீட்டும் அம்மரத்தின் பாற்செல்லுதலேத் தவிரா; இரவலரும் அத்தன்மை யரே; தம்மை ஆதரிப்போர் செல்வமே இவர் செல்வம்; அவர் வறுமையே இவர் வறுமை'' என்பது இவர் கூறும் உயர்ந்த கருத்தாகும். (புறநா. 199) இவர் செய்த பாடல்கள்: 4 (நற்.1; குறுந். 1; புறநா.2).

கடவுள் ஆலத்துத் தடவுச்சினேப் பல்பழம்
நெருநல் உண்டனம் என்னுது பின்னும்
செலவா னுவே களிகொள் புள்ளினம்
அனேயர் வாழியோ இரவலர் அவரைப்
புரவெதிர் கொள்ளும் பெருஞ்செய் யாடவர்
உடைமை யாகுமவர் உடைமை
அவர், இன்மை யாகு மவரின் மையே.

(புறம். 199.)

பெரும்பாக்கனூர்:- பெரும்பாக்கம் என்பது ஓர் ஊர். நாரைகள் கழியிலுள்ள சிறுமீன்களை வெறுத்து வயலின்கண்ணுள்ள நெய்தல் மலர்களையும் நெற் கதிர்களையும் விரும்பும் என்று இவர், தாம் பாடிய தான குறுந்தொகைச் செய்யுளில் கூறியுள்ளார். இவர் அதிகமான் நெடுமானஞ்சியால் சிறப்பெய்தி யவர் என்றும், அரிசில்கிழார் காலத்தவர் என்றும் தொல்காப்பியம் பொருளதிகாரம் புறத்திணையியல் 63 - ஆம் சூத்திரத்தின் நச்சினார்க்கினியர் உரையால் இனிது விளங்கும்.

அம்ம வாழி தோழி புன்னை
அலங்குசினை யிருந்த அஞ்சிறை நாரை
உறுகழிச் சிறுமீன் முனையிற் செறுவிற்
கண்ணுறு நெய்தல் கதிரொடு நயக்கும்
தண்ணந் துறைவற் காணின் முன்னின்று
கடிய கழற லோம்புமதி தொடியோள்
இன்ன ளாகத் துறத்தல்
நும்மிற் றகுமோ வென்றனை துணிந்தே.

(குறுந். 296.)

பேய்மகள் இளவெயினி:- பேய்மகள்—தேவராட்டி; பூசாரிச்சி; பேயினது ஆவேசமுற்றவள். இந்த வகை யார் இக்காலத்தும் அங்கங்கே உள்ளார். புறநானூற்று 11 பாட்டின் விசேடவுரையால், பேயே ஒருமகள் வடிவங் கொண்டு பாடினளென்று புறநானூற்றின் பழைய உரையாசிரியர் கருதியதாகத் தெரிகிறது. எயினி - எயினக் குலத்திற் பிறந்த மங்கை. வஞ்சி நகரின் வளமும் தலைவன் கொடையும் இவர் பாடலிற் கூறப்பெற்றுள்ளன. இவராற் பாடப்பெற்றோன் சேரமான்பாலைபாடிய பெருங்கடுங்கோ. புறநானூற்றி லுள்ள செய்யுள் ஒன்றே இவர் பாடியதாகும்.

அரிமயிர்த் திரண்முன்கை
வாலிழை மடமங்கையர்

வரிமணற் புனைபாவைக்குக்
குலவுச்சினைப் பூக்கொய்து
தண்பொருநைப் புனல்பாயும்
விண்பொருபுகழ் விறல்வஞ்சிப்
பாடல்சான்ற விறல்வேந்தனும்மே
வெப்புடைய அரண்கடந்து
துப்புறுவர் புறம்பெற்றிசினே
புறம்பெற்ற வயவேந்தன்
மறம்பாடிய பாடினியும்மே
ஏருடைய விழுக்கழஞ்சிற்
சீருடைய விழைபெற்றிசினே
இழைபெற்ற பாடினிக்குக்
குரல்புணர்சீர்க் கொளைவல்பாண் மகனும்மே
எனவாங்கு,
ஒள்ளழல் புரிந்த தாமரை
வெள்ளி நாராற் பூப்பெற் றிசினே.

(புறம். 11.)

பேயனார்:— ஐங்குறுநூற்றின் ஐந்தாம் நூறாகிய முல்லைத் திணையைப் பாடிய இவர் கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர். முல்லைத்திணை வளங்களை விளங்கப் பாடுதலில் மிக்க ஆற்றலுடையவர். மற்றத் தொகைகளுள்ளே குறுந்தொகையில் மட்டும் மூன்று பாக்கள் இவர் செய்தனவாக உள்ளன. அவற்றுள் மூன்று செய்யுட்கள் முல்லைத்திணையைக் குறித்தனவே. பேயனென்றும், பேயாரென்றும், இவர் பெயர் பிரதிகளிற் காணப்படுகின்றது. யாப்பருங்கல விருத்தியுரையில்,

கறைப்பற் பெருமோட்டுக் காடு கிழவோட்
கரைத்திருந்த சாந்தைத்தொட் டப்பேய்
மறைக்குமோ மாட்டாது மற்றுந்தன் கையைக்
குறைக்குமாங் கூர்ங்கத்தி கொண்டு''

என்னும் வெண்பாவை மேற்கோளாக எடுத்துக் காட்டிய அந்நூல் உரையாசிரியர், 'இது பூதத் தாரும், காரைக்காற் பேயாரும் பாடியது; இதுவும்

இரண்டாமடி குறைந்து வந்தது கண்டு கொள்க, என்று எழுதியிருத்தலாற் காரைக்காற்பேயாரென்று ஒருவர் பண்டைக்காலத்திற் பாடும் வன்மையுள்ள வராக இருந்தார் என்று மட்டும் தெரிகின்றது. அவரும் இவரும் ஒருவரோ வேறோ யாதும் புலப்படவில்லை.

மறியிடைப் படுத்த மான்பிணை போலப்
புதல்வ னடுவண னாக நன்றும்
இனிது மன்றவவர் கிடக்கை முனிவின்றி
நீனிற வியலகங் கவைஇய
ஈனு மும்பரும் பெறலருங் குரைத்தே.

(ஐங்குறு. 401.)

மறி-மான்குட்டி. மானும் பிணையும் போல. நடுவணன்-நடுவின்கண் உள்ளான். நீனிற வியலகம் - கடல். கவைஇய-சூழ்ந்த. ஈனும்-இவ் வுலகத்தும். பெறலருங் குரைத்து - பெறுதற்கரியது.

<u>பேயார்</u>:— யாப்பருங்கல விருத்தியுரையில், ''கறைப் பற்பெருமோட்டு'' என்னும் வெண்பா மேற்கோளாக எடுத்துக்காட்டப் பெற்று, 'இது பூதத்தாரும் காரைக்காற் பேயாரும் பாடியது' என்று எழுதி யிருத்தலாற் காரைக்காற் பேயார் என்னும் பெயருடைய ஒரு புலவர் இருந்ததாகத் தெரிகின்றது; அவரும் இவரும் ஒருவரோ வேறோ யாதும் விளங்க வில்லை, அகிற்புகைக்கு மழைபெய்துவிட்ட வெண் மேகத்தை இவர் தாம் பாடியதான குறுந்தொகைச் செய்யுளில் உவமை கூறியுள்ளார்.

நறையகில் வயங்கிய நளிபுன நறும்புகை
உறையறு மையிற் போகிச் சாரற்
குறவர் பாக்கத் திழிதரு நாடன்
மயங்குமலர்க் கோதை நன்மார்பு முயங்கல்
இனிதுமன் வாழி தோழி மாயிதழ்க்
குவளை யுண்கண் கலுழப்
பசலை யாகா வூங்கலங் கடையே.

(குறுந். 339.)

'தலைவன் வந்து நின்னை முயங்கிய காலத்து இனிதாக இருந்தது; இப்பொழுது நின் பொருட்டன்றே பிரிந்தான்? இதற்கு அழிவது என்ன அறிவின்மை!' என்பதுபடத் தோழி கூறி வற்புறுத்தினாள்.

பேரிசாத்தனார்:— வடமவண்ணக்கன் பேரிசாத்தனார் என்பவரும் இவரும் ஒருவர் போலும். ''தெண்கடல் முழங்குதிரை முழவின் பாணியிற் பைபயப் பழம்புண் ணுறுநரிற் பரவையினாலும்'' (நற். 378) என்று கடலலையின் ஒலிக்கு முழவின் ஒலியை உவமை கூறிய சிறப்பால் இவர் பெயர்க்கு முன் 'பேரி' என்னும் அடை கொடுக்கப்பட்டதுபோலும்; பேரி - முழவு. அலையின் பிறழ்ச்சியால் வெண்மையாகத் தோற்றும் கடலுக்கு நிலவையும் செறிவால் இருண்டு தோன்றும் கானலுக்கு இருளையும் உவமை கூறியுள்ளார்; குறுந். 81. ''நீயும் நின்புதல்வரும் அவர் பெறும் புதல்வரும் நீடு வாழ்க'' என்று இவர் பாண்டியன் இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறனென்பானைக் கூறும் பகுதி (புறநா. 198) மிக்க நயமுடையது. ''விதியே தலைவியைத் தலைவனோடு கூட்டுவித்ததன்றித் தலைவனுடைய சால்பை அளந்தறிதற்கு நாம் யார்!'' என்ற கருத்தமைந்த குறுந்தொகைப் பாடலொன்று (366) இவர் இயற்றியுள்ளார். இவரியற்றிய பாடல்கள்: நற். 8; புறநா. 1. குறுந். 5.

பால்வரைந் தமைத்த லல்லது அவர்வயிற்
சால்பளந் தறிதற் கியாஅம் யாரோ
வெறியாள் கூறவும் அமையாள் அதன்தலைப்
பைங்கண் மாச்சுனைப் பல்பிணி யவிழ்ந்த
வள்ளிதழ் நீலம் நோக்கி யுள்ளகை
பழுத கண்ண ளாகிப்
பழுதன் றம்மவிவ் வாயிழை துணிவே.

(குறுந். 366.)

பேரெயின் முறுவலார்:— முறுவலாரென்பது இவரது இயற்பெயர்; பேரெயில்-சோழநாட்டிற் காவிரியின் தென்பாலுள்ள தேவாரம் பெற்ற ஒரு சிவஸ்தலம்.

இவருக்கு இப்பெயர் ஊராலும் உறுப்பாலும் வந்த பெயர்போலும். அன்றிப் பெரிய மும்மதில்களைத் தமது முறுவலாலெரித்த பரமசிவனுடைய திருநாமம் இவருக்கு இடப்பட்டதென்று கொள்ளினும் பொருந்தும்; முறுவல் - புன்னகை. நம்பி நெடுஞ்செழிய னென்பான், இம்மையில் தானடைதற்குரிய இன்பங்களை யெல்லாம் அடைந்தானென்றும் செய்ய வேண்டிய நற்காரியங்களையெல்லாம் வழுவின்றிச் செய்தானென்றும் இவர் அவனைப் பாராட்டியுள்ள பகுதிகள் அறியற்பாலன. இவர் குறுந்தொகையில் ஒன்றும் புறநானூற்றில் ஒன்றும் ஆக இரண்டு செய்யுட்கள் இயற்றியுள்ளார்.

தொடியுடைய தோண்மணந்தனன்
கடிகாவிற் பூச்சூடினன்
தண்கமழுஞ் சாந்துநீவினன்
செற்றோரை வழிதபுத்தனன்
நட்டோரை உயர்புகூறினன்
வலியரென வழிமொழியலன்
மெலியரென மீக்கூறலன்
பிறரைத்தான் இரப்பறியலன்
இரந்தோர்க்கு மறுப்பறியலன்
வேந்துடை யவையத் தோங்குபுகழ் தோற்றினன்
வருபடை எதிர்தாங்கினன்
பெயர்படை புறங்கண்டனன்
கடும்பரிய மாக்கடவினன்
நெடுந்தெருவில் தேர்வழங்கினன்
ஓங்கியல களிறூர்ந்தனன்
தீஞ்செறி தசும்புதொலைச்சினன்
பாணுவப்பப் பசிதீர்த்தனன்
மயக்குடைய மொழிவிடுத்தனன், ஆங்குச்
செய்ப வெல்லாஞ் செய்தன னாகலின்
இடுக வொன்றோ சுடுக வொன்றோ
படுவழிப் படுகவிப் புகழ்வெய்யோன் தலையே.

(புறம். 239.)

பொத்தியார்:— இவர் கோப்பெருஞ்சோழனுடைய உயிர்த்தோழர்; இவருடைய ஊர் உறையூர்.

அவன் வடக்கிருத்தற்குச் செல்லும் பொழுது உடன் சென்று அங்கே பிசிராந்தையார் வரக்கண்டு வியந்து (புறநா. 217), ''நீர் பிள்ளையைப் பெற்றபின்பு ஈங்குவாரும்'' (புறநா. 222) என்று அவன் சொல்லக் கேட்டு மீண்டுவந்து உறையூர் புகுந்து அவனுடைய பிரிவாற்ருமல் வருந்திச் (புற.நா. 220) சில நாள் இருந்து, புதல்வன் பிறந்தபின் சென்று அவன் நடுகற் கண்டு வருந்தி, 'எனக்கு இடந்தா' என்று கேட்டு அவன் இடம் கொடுக்கப் பெற்று வியப்புற்று அவனைப் பாடித் (புறநா. 221-3) தாமும் வடக்கிருந்து உயிர் நீத்தனர்; அவனது பிரிவாற்ருமையால் இவர் அடைந்த வருத்தங்களும் அவனுடைய அருமைக் குணங்களும் இவருடைய செய்யுட்களால் விளங்கும். 'கோப்பெருஞ்சோழன் துறந்துழிப் பிசிராந்தையாரும் பொத்தியாரும் போல்வார் துறந்தாரென்று கூறும் புறச்செய்யுட்கள் உதாரணம்'' (தொல்-கற்பு) சூத். 53, ந.) என்பது இச்சரிதத்தைத் தெரிவிக்கின்றது. இவரால் பாடப்பட்டோர்: கோப்பெருஞ்சோழன், பிசிராந்தையா ரென்பர்.

நினைக்குங் காலே மருட்கை யுடைத்தே
எனைப்பெருஞ் சிறப்பினே டீங்கிது துணிதல்
அதனினு மருட்கை யுடைத்தே பிறனாட்டுத்
தோற்றஞ் சான்ற சான்ருேன் போற்றி
இசைமர பாக நட்புக் கந்தாக
இனையதோர் காலை ஈங்கு வருதல்
வருவ னென்ற கோனது பெருமையும்
அதுபழு தின்றி வந்தவன் அறிவும்
வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந் தன்றே
அதனல், தன்கோ லியங்காத் தேயத் துறையும்
சான்ருேன் நெஞ்சுறப் பெற்ற தொன்றிசை
அன்னேனை யிழந்தவிவ் வுலகம்
என்னு வதுகொல் அளியது தானே.

(புறம். 217.)

பொதுக்கயத்துக்கீரந்தையார்:— கீரந்தையார் என்ற புலவர் சிலர் உண்டு. பொதுக்கயம் என்பது ஓர் ஊர். அவ்வூரினர் இவர். பருவம் வாய்த்த மகளிர்க்குரிய இயல்புகளை இவர் பாடல் (குறுந். 337) தெரிவிக்கின்றது.

முலையே முகிழ்முகிழ்த் தனவே தலையே
கிளைஇய மென்குரல் கிழக்குவீழ்ந் தனவே
செறிநிரை வெண்பலும் பறிமுறை நிரம்பின
சுணங்குஞ் சிலதோன் றினவே யணங்குதற்
கியான்ற னறிவலே தானறி யலளே
யாங்கா குவள்கொ றூனே
பெருமுது செல்வ ரொருமட மகளே.

(குறுந். 337.)

பொதும்பில் கிழார்:— பொதும்பில் என்பது ஓரூர். இது பாண்டிநாட்டிலுள்ள மதுரைத் தாலுக்காவைச் சார்ந்தது. இவரது இயற்பெயர் தெரியவில்லை. இவர் வேளாளர். இவர் பாடியது நற்றிணைச் செய்யுள் ஒன்றே. குறிஞ்சித் திணையைக் குறித்து இவர் பாடிய நற்றிணைச் செய்யுளின் உள்ளுறை யுவமம் வியந்து பாராட்டத்தக்கது.

தடங்கோட் டாமான் மடங்கல் மாநிரைக்
குன்ற வேங்கைக் கன்றொடு வதிந்தெனத்
துஞ்சுபதம் பெற்ற துய்த்தலை மந்தி
கல்லென் சுற்றம் கைகவியாக் குறுகி
வீங்குசுரை ஞெமுங்க வாங்கித் தீம்பால்
கல்லா வன்பறழ்க் கைந்நிறை பிழியும்
மாமலை நாட மருட்கை யுடைத்தே
செங்கோல் கொடுங்குரல் சிறுதினை வியன்புனங்
கொய்பதங் குறுகும் காலையெம்
மையீர் ஓதி மாணலம் தொலைவே.

(நற். 57.)

பொதும்பில் கிழார் மகனார் வெண்கண்ணியார்:— பொதும்பு - பொதும்பில்; இது மதுரைக்கு வடக்கே 4 மைலிலுள்ளது; அதனைப் பொதும்பென வழங்

குவர். இவர் முன்னே கூறிய பொதும்பில் கிழாரின் புதல்வர். இவர் வேளாளர். இவர் தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழி யனைப் பாடியிருத்தலால் அவ்வரசன் காலத்தவர் என்று தெரிகிறது. இவர் நெய்தலையும், பாலையையும் பாடியுள்ளார். இவர் பாடிய பாடல்கள் நற்றிணை யிலும், அகநானூற்றிலும் உள்ளன.

நீடுசினைப் புன்னை நறுந்தா துதிரக்
கோடுபுனை குருகின் தோடுதலைப் பெயரும்
பல்பூங் கானல் மல்குநீர்ச் சேர்ப்ப
அன்பிலை ஆதலின் தன்புலன் நயந்த
என்னும் நாணும் நன்னுதல் உவப்ப
வருவை ஆயினோ நன்றே பெருங்கடல்
இரவுத்தலை மண்டிலம் பெயர்ந்தென உரவுத்திரை
எறிவன போல வரூஉ
முயர்மணற் படப்பையெம் உறைவின் ஊரே.

(நற். 375.)

நீடுசினை - நீண்டகிளை. தாது - மகரந்தம். தோடு - தொகுதி; கூட்டம். சேர்ப்பன் - நெய்தல் நிலத்தலைவன். மண்டிலம் - முழுவெண்திங்கள். பெயர் தல் - வானிலே எழுதல். படப்பை - தோட்டம். மெய்ப்பாடு - பெருமிதம். பயன் - வரைவு கடாதல்.

பொய்கையார்:— இவருடைய ஊர் மலைநாட்டிலுள்ள தொண்டி என்பது. (புறநா. 48) இவராற் பாடப் பட்டோன் சேரமான் கோக்கோதைமார்பன்; சேரமான் கணைக்காலிரும்பொறையின் அவைக் களத்துப் புலவராக விளங்கியவர்; மூவன் என்பவனை அச்சேரமான் வென்று அவனது பல்லைப் பிடுங்கித் தன்னுடைய தொண்டி நகரத்துக் கோட்டை வாயிற் கதவிலே அழுத்தி வைத்த செய்தி இவர் பாடலில் வந்துளது; நற். 18. அசசேரமானைப் போரில் சோழன் செங்கணான் வென்று சிறையில் வைத்து விட்ட பொழுது சோழன்மீது களவழிநாற்பது

என்னும் நூலைப்பாடி அச்சேரமானை மீட்ட பேரருளாளர்; ''செய்கை யரிய களவழிப்பா முன் செய்த, பொய்கையொருவனுற்போந்தரமோ'' (பழம் பாடல்,) ''களவ ழிக்கவிதை பொய்கையுரை செய்ய வுதியன் கால் வழித்தளையை வெட்டியர சிட்ட பரிசும்'' (கலிங்க.) ''இன்னருளின், மேதக்க பொய்கை கவிகொண்டு வில்லவனைப், பாதத் தளை விட்ட பார்த்திபனும்'' (விக்கிரம சோழனுலா) ''பொறையனைப் பொய்கை கவிக்குக், கொடுத்துக் களவழிப்பாக் கொண்டோனும்'' (குலோத்துங்க சோழனுலா), ''பொய்கை களவழி நாற்பதுக்கு, வில்லவன் காற்றளையை விட்டகோன்'' (இராச ராச சோழனுலா) என இச்செய்தி கூறப் பெற்றிருத் தல் காண்க. இவர் பாடியனவாக யாப்பருங்கல விருத்தியிற் சிலவெண்பாக்களும், பன்னிருபாட்டியலிற் சில சூத்திரங்களும் காணப்படுகின்றன. இவரே பொய்கையாழ்வாரென்பது சிலருடைய கொள்கை; ஆழ்வார்கள் மறந்தும் புறந்தொழாத பெரியா ரென்பது வைஷ்ணவ சித்தாந்த மாதலால் அவர் வேறு; இவர் வேறென்று கொள்வதே மரபு''.

நாடன் என்கோ ஊரன் என்கோ
பாடிமிழ் பனிக்கடற் சேர்ப்பன் என்கோ
யாங்கனம் மொழிகோ ஓங்குவாட் கோதையை
புனவர் தட்டை புடைப்பின் அயல்
திறங்குகதி ரலமரு கழனியும்
பிறங்குநீர்ச் சேர்ப்பினும் புள்ளொருங் கெழுமே.

(புறம். 49.)

<u>பொருந்திலிளங் கீரனார்</u>:— இவர் பொருந்தில் என்னும் ஊரினர். ''செறுத்த செய்யுள் செய்செந் நாவின் வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்'' எனக் கபில ருடைய கல்விகேள்விகளை இவர் புகழ்ந் திருத்தலால் இவருடைய நற்குணம் வெளியாகின்றது; புறநா. 53.

இவராற் பாடப்பெற்ருேன் சேரன்மாந்தரஞ்சேரலிரும் பொறை. இவர் பாடிய செய்யுட்கள் 3 (அகநா. 19, 351; புறநா. 53.

முதிர்வா ரிப்பி முத்த வார்மணற்
கதிர்விடு மணியிற் கண்பொரு மாடத்து
இலங்குவளை மகளிர் தெற்றி யாடும்
விளங்குசீர் விளங்கில் விழுமங் கொன்ற
களங்கொ யானைக் கடுமான் பொறைய
விரிப்பின் அகலும் தொகுப்பின் எஞ்சும்
மம்மர் நெஞ்சத் தெம்மனோர்க் கொருதலை
கைம்முற் றலநின் புகழே என்றும்
ஒளியோர் பிறந்தவிம் மலர்தலை யுலகத்து
வாழே மென்றலும் அரிதே தாழாது
செறுத்த செய்யுட் செய்செந் நாவின்
வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்
இன்றுள னாயின் நன்றுமன் என்றநின்
ஆடுகொள் வரிசைக் கொப்பப்
பாடுவல் மன்னாற் பகைவரைக் கடப்பே.

(புறம். 53.)

பொன்மணியார்:— கார்காலத்தில் மயில்கள் கூவுவது தலைவிக்கு வருத்தத்தைத் தரும் என்று இவர், தாம் பாடியதான குறுந்தொகைச் செய்யுளில் குறித்துள் ளார். இவர் ஒரு பெண்பாற் புலவர்.

உவரி யொருத்தல் உழாது மடியப்
புகரி புழுங்கிய புயல்நீங்கு புறவிற்
கடிதிடி யுருமிற் பாம்புபை யவிய
இடியொடு மயங்கி யினிதுவீழ்ந் தன்றே
வீழ்ந்த மாமழை தழீஇப் பிரிந்தோர்
கையற வந்த பையுண் மாலைப்
பூஞ்சினை யிருந்த போழ்கண் மஞ்ஞை
தாநீர் நனந்தலை புலம்பக்
கூஉந் தோழி பெரும்பே தையவே.

(குறுந். 391.)

பொன்முடியார்:— இவர் சேரமான் தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறையின்காலத்தவர்; தகடூர் யாத்திரை என்னும் நூலில் இவராற் செய்யப்பட்ட சில செய்யுட்களுமுள்ளன; தொல். புறத்திணை. சூ. 8, 12, ந. இவருடனிருந்த புலவர் அரிசில் கிழார். இவராற் பாடப்பட்டோன் அதியமான் நெடுமானஞ்சி. திருவள்ளுவமாலையிலும் இவர் பெயரோடுள்ள செய்யுளொன்று காணப்படுகின்றது. மறக்குடியிற்பிறந்த முதியவள் கூற்றாக இவர் கூறிய, ''ஈன்றுபுறந் தருத லென்றலைக் கடனே, சான்றோ னாக்குத றந்தைக்குக் கடனே, வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே, நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே, ஒளிறுவா ளருஞ்சம முருக்கிக், களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே'' (புறநா. 312) என்னும் பாடலால், ஒவ்வொருவருக்கு முரிய கடப்பாடுகள் இவை என்பது விளங்கும்; இவர் கூறும் உவமை இனிமை வாய்ந் தது; இது, '''சிற்றூரரசனுடையதும் உழுத்தஞ் சக்கை யுண்டதும் அலங்கார மில்லாததுமான குதிரை, பகைவருடைய சேனையைக் கடலில் அலைகளைப் பிளந்து செல்லும் தோணியைப் போல விரைந்து அஞ்சாமல் செல்லாநின்றது. பெருஞ்செல்வத்தையுடைய அரசரின் நெய் விரவிய கவளத்தை உண்டனவும் மிக்க அலங்கார முள்ளனவுமான குதிரைகள் முருகன் கோயிலில் கலந்தொடாத மகளிரைப்போலப் போரில்சும்மா நிற்கின்றன''. (புறநா. 299.) என்பதனால் விளங்கும்.

ஈன்றுபுறந் தருதல் என்றலைக் கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே.
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவா ளரும்சம முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே.

(புறம். 312)

பொன்னுகனுர் :— தலைவியைத் தலைவனேடு கூட்ட வேண்டி அவளின் நீங்கித் தலைவனுக்கு 'இன்னுழி எதிர்ப்படுதி' என்று தோழி கூறுவதாக உள்ள ஒரு குறுந்தொகைச் செய்யுளே இவர் செய்தது. தலைவன் தலைவியிடம் விரைந்து செல்ல வேண்டும் என்பதைக் குறிக்க, ''செலவியங் கொண்மோ வல்கலும், ஆரலருந்தவயிற்ற, நாரை மிதிக்கு மென்மகணுதலே'' என்று அமைத்திருப்பது நயம்பட உள்ளது.

நெய்தல் பரப்பிற் பாவை கிடப்பி
நின்குறி வந்தனென் இயல்தேர்க் கொண்க
செல்கஞ் செலவியங் கொண்மோ அல்கலும்
ஆரல் அருந்த வயிற்ற
நாரை மிதிக்கும் என்மக ணுதலே.

(குறுந். 114.)

போதனுர் :— இவரைப்பற்றி அறிய முடியவில்லை. பாலையைச் சிறப்பித்துப்பாடியுள்ளார். இவர் பாடல் நற்றிணையில் வரும் பாடலின் பெருமைக்குக் கூறிய பன்னீரடியின் மிக்கும் பதின்மூன்றடியாய் உள்ளது. இவர் போத்தனுர் என்றும் கூறப்படுவார்.

பிரசங் கலந்த வெண்சுவைத் தீம்பால்
விரிகதிர்ப் பொற்கலத் தொருகை ஏந்திப்
புடைப்பிற் சுற்றும் பூந்தலைச் சிறுகோல்
உண்ணென் ருேக்குபு புடைப்பத் தெண்ணீர்
முத்தரிப் பொற்சிலம் பொலிப்பத் தத்துற்
றரிநரைக் கூந்தற் செம்முது செவிலியர்
பரிமெலிந் தொழியப் பந்தர் ஓடி
ஏவல் மறுக்குஞ் சிறுவிளை யாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந் தனள்கொல்
கொண்ட கொழுநன் குடிவற னுற்றெனக்
கொடுத்த தந்தை கொழுஞ்சோ றுள்ளாள்
ஒழுகுநீர் நுணங்கறல் போலப்
பொழுதுமறுத் துண்ணுஞ் சிறுமது கையளே.

(நற். 110.)

பிரசம் - தேன். வடசொல். அரி - பருக்கைக்கல். அரிநரை - மெல்லிய நரை. பரிதல் - ஓடுதல்.

போந்தைப் பசலையார்:— இவரது ஊர் போந்தை. பசலையென்பது இளமைக்கு ஒரு பெயர். ஆதலின் இவர் இளமையிலேயே பெரும்புலமை வாய்ந்தவராக இருந்தவரென்று கருத இடமுண்டு. புகார்த் தெய்வம் இவரால் கூறப்பட்டுள்ளது. இவர் பாடிய பாடலொன்று அகநானூற்றில் உள்ளது. தோழி செவிலித்தாய்க்கு அறத்தொடு நிற்பதாக இவரது பாடல் அமைந்துள்ளது

அன்னை அறியினும் அறிக அலர்வாய்
அம்மென் சேரி கேட்பினும் கேட்க
பிறிதொன் றின்மை அறியக் கூறிக்
கொடுஞ்சுழிப் புகாஅர்த் தெய்வம் நோக்கிக்
கடுஞ்சூ டருகவன் நினக்கே கானல்
தொடலை ஆயமொடு கடலுடன் ஆடியும்
சிற்றில் இழைத்தும் சிறுசோறு குவைஇயும்
வருந்திய வருத்தம் தீர யாஞ்சிறிது
இருந்தன மாக வெய்த வந்து
தடமென் பணைத்தோண் மடநல் லீரே
எல்லு மெல்லின்று அசைவுமிக வுடையேன்
மெல்லிலைப் பரப்பின் விருந்துண்டி யானுமிக்
கல்லென் சிறுகுடித் தங்கின்மற் றெவனோ
எனமொழிந் தனனே யொருவன் அவற்கண்டு
இறைஞ்சிய முகத்தெம் புறஞ்சேர்பு பொருந்தி
இவைநுமக் குரிய வல்ல இழிந்த
கொழுமீன் வல்சி யென்றனம் இழுமென
நெடுங்கொடி நுடங்கு நாவாய் தோன்றுவ
காணு மோவெனக் காலிற் சிதையா
நில்லாது பெயர்ந்த பல்லோ ருள்ளும்
என்னே குறித்த நோக்கமொடு நன்னுதால்
ஒழிகோ யானென அழிதகக் கூறி
யாம்பெயர் கென்ன நோக்கித் தான்ற
நெடுந்தேர்க் கொடிஞ்சி பற்றி
நின்றோன் போலும் என்றுமென் மகட்கே.

(அகம். 110.)

மடல்பாடியமாதங்கீரனுர் :— மடலேற்றத்தைப் பற்றிய செய்தியைத் தம் செய்யுளிற் சொல்லுதலின் மடல் பாடிய என்னும் அடைமொழி இவரது பெயரின்முன் வைக்கப்பட்டுள்ளது. ''தெருவில் மடலேறி வருவதே அவன்பால் நாம் விடற்கமைந்த தூது'' (குறுந். 182) என்பது தலைவன் கூற்று. நற். 377-ஆம் செய்யுளும் இவர் பாடியதே. தலைவன் மடலேறுவதாகத் தன் நெஞ்சுக்குக் கூறுவதாகவே அச்செய்யுளும் அமைந்துள்ளது.

விழுத்தலைப் பெண்ணை விளையல் மாமடல்
மணியணி பெருந்தார் மரபிற் பூட்டி
வெள்ளென் பணிந்துபிறர் எள்ளத் தோன்றி
ஒருநாள் மருங்கிற் பெருநாண் நீக்கித்
தெருவி னியலவுந் தருவது கொல்லோ
கலிழ்ந்தவிர் அசைநடைப் பேதை
மெலிந்திலன் நாம்விடற் கமைந்த தூதே.

(குறுந். 182.)

மதுரை, இளங்கண்ணிக்கௌசிகனுர் :— கௌசிகனு ரென்பது இவரது இயற்பெயர்; ஒரு முனிவர் பெயர் இவருக்கு இடப்பட்டது. பகைவர் சேய்மை யிலிருந்தே அஞ்சுதற்குரிய ஒளி தன்பால் அமையப் பெற்ற தலைவனுக்கு நல்லபாம்பு தங்கும் புற்றையும் கொல்லேறு திரிந்துலாவும் மன்றத்தையும் இவர் உவமை கூறியிருக்கின்றூர்; புறநானூற்றிலுள்ள செய் யுள் ஒன்றே இவர் பாடியதாகும்.

இரும்புமுகஞ் சிதைய நூறி யொன்னுர்
இருஞ்சமங் கடத்த லேனோர்க்கு மெளிதே
நல்லரா வுறையும் புற்றம் போலவும்
கொல்லேறு திரிதரு மன்றம் போலவும்
மாற்றருந் துப்பின் மாற்றோர் பாசறை
உளனென வெரூஉ மோரொளி
வலனுயர் நெடுவேல் என்னைகண் ணதுவே.

(புறம். 309.)

பகைவருடைய படைக்கலங்களின் முகஞ்சிதையும்படி தங்கள் படைக்கலங்களால் அவருடைய போரை வெல்லுதல் மற்றவர்க்கும் எளிதாகிய காரியம். இரும்பு—படைக்கலத்துக்கு ஆகுபெயர். ஏனோர் - ஏனையோர் என்பதன் விகாரம். நல்லரா-நாகம். கொல்லுகின்ற இடபம் திரிகின்ற மன்றம்; மன்றம்-பசுக்கள் தங்கும் பொதுவிடம். ஒளி - பிறர்க்கு அச்சமுண்டாதற்குக் காரணமான நன்மதிப்பு.

மதுரை இளங்கௌசிகனார்:— கௌசிக கோத்திரத்தில் தோன்றிய காரணத்தால் இவர் கௌசிகனார் என்று வழங்கப்படுகிறார்; இவர் அந்தணர். பொருளார்வம் மிகுந்து கடத்தற்கரிய பாலைநிலத்தைக் கடந்து வேற்றுநாட்டிற்குச் செல்லும் தனது துயரினும் தன்னைப் பிரிந்து வாடும் தலைவியின் துயர்தான் மிகுதியானதோ என்று தலைவன் பாலைநிலத்தினிடையே தனது நெஞ்சிற்குக் கூறுவதாக இவர் அகநானூற்றில் பாடியுள்ளார். இப்பாடலில் வடுகரது வில்திறத்தையும், வானவன் அரணழிக்கும் சிறப்பையும் வருணித்துள்ளார். இவர் பாடியதாக அகநானூற்றுப் பாடல் ஒன்றே உள்ளது.

ஆளி நன்மான் அணங்குடை ஒருத்தல்
மீளி வேழத்து நெடுந்தகை புலம்ப
ஏந்தல் வெண்கோடு வாங்கிக் குருத்தந்தும்
அஞ்சுவரத் தகுந ஆங்கண் மஞ்சுதப
அழல்கான்று திரிதரும் அலங்குகதிர் மண்டிலம்
நிழல்சூன் றுண்ட நிரம்பா நீளிடைக்
கற்றுரிக் குடம்பைக் கதநாய் வடுகர்
விற்சினந் தணிந்த வெருவரு கவலைக்
குருதி யாடிய புலவுநா றிருஞ்சிறை
எருவைச் சேவல் ஈண்டுகிளைத் தொழுதி
பச்சூன் கொள்ளை சாற்றிப் பறைநிவந்து
செக்கர் வானின் விசும்பணி கொள்ளும்
அருஞ்சுரம் நீந்திய நம்மினும் பொருந்தார்
முனையரண் கடந்த வினைவல் தானைத்

தேனிமிர் நறுந்தார் வானவன் உடற்றிய
ஒன்னாத் தெவ்வர் மன்னெயில் போலப்
பெரும்பாழ் கொண்ட மேனியள் நெடிதுயிர்த்து
வருந்துங்கொல் அளியள் தானே சுரும்புண
நெடுநீர் பயந்த நிரையிதழ்க் குவளை
எதிர்மலர் இணைப்போ தன்னதன்
அரிமதர் மழைக்கண் தெண்பனி கொளவே.

(அகம். 381)

**மதுரை ஓலைக்கடைக் கண்ணம்புகுந்தாராயத்தனார்:—**

ஓலை-ஓலையால் இயற்றப்பட்ட குடை; தாழை முதலியவற்றின் ஓலையுமாம். இதனால் இவர் வியாபாரஞ் செய்பவரென்று தெரிகிறது; இவர் பாடிய மகட்பாற்காஞ்சி (புறநா. 350) இன்சுவையுடையது. புறநானூற்றிலுள்ள செய்யுள் ஒன்றே இவர் பாடியதாகும். (பி-ம். கண்ணம் புகுதநராயத்தனார்.)

தூர்ந்த கிடங்கிற் சோர்ந்த ஞாயில்
சிதைந்த இஞ்சிக் கதுவாய் மூதூர்
யாங்கா வதுகொல் தானே தாங்காது
படுமழை உருமின் இரங்கு முரசின்
கடுமான் வேந்தர் காலை வந்தெம்
நெடுநிலை வாயில் கொட்குவர் மாதோ
பொருதா தமருவர் அல்லர் போருழந்து
அடுமுரண் முன்பிற் றன்னையர் ஏந்திய
வடிவேல் எஃகின் சிவந்த உண்கட்
டொடிபிறழ் முன்கை இளையோள்
அணிநல் லாகத் தரும்பிய சுணங்கே.

(புறம். 350.)

**மதுரை ஓலைக்கடையத்தார் நல்வெள்ளையார்:—**

இவர் பெண்பாலார் என்று தெரிகிறது. இவர் இமயமலையையுங், கங்கையாற்றையுங் சிறப்பித்துக் கூறியுள்ளார். மருதம், நெய்தல் ஆகிய இரண்டு திணைகளையும் சிறப்பித்துப்பாடியுள்ளார். இவர் பாடிய பாடல்கள் இரண்டு நற்றிணையில் உள்ளன.

நகுகம் வாராய் பாண பகுவாய்
அரிபெய் கிண்கிணி யார்ப்பத் தெருவில்
தேர்நடை பயிற்றுந் தேமொழிப் புதல்வன்
பூநாறு செவ்வாய் சிதைத்த சாந்தமொடு
காமர் நெஞ்சந் துரப்ப யாந்தன்
முயங்கல் விருப்பொடு குறுகினே மாகப்
பிறைவனப் புற்ற மாசறு திருநுதல்
நாறிரும் கதுப்பினெம் காதலி வேறுணர்ந்து
வெரூஉமான் பிணையி னொரீஇ
யாரை யோவென் றிகந்துநின் றதுவே.

(நற். 250.)

## மதுரைக் கடையத்தார்மகன் வெண்ணாகனார்:

தலைவியும் தோழியும் பெரிய ஊரின்கண் நிகழ்ந்த விழாவுக்குச் சென்று தலைவனை எதிர்ப்பட்டு அளவளாவிய நிகழ்ச்சியைத் தலைவி நினைவுறுத்தியதாக இவர் பாடியதான குறுந்தொகைச் செய்யுள் அமைந்துள்ளது.

பேரூர் கொண்ட ஆர்கலி விழவிற்
செல்வாஞ் செல்வா மென்றி யன்றிவண்
நல்லோர் நல்ல பலவாற் றில்ல
தழலுந் தட்டையும் முறியுந் தந்திவை
ஒத்தன நினக்கெனப் பொய்த்தன கூறி
அன்னை ஓம்பிய ஆய்நலம்
என்னை கொண்டான்யாம் இன்னமால் இனியே.

(குறுந். 223.)

செல்வாம் செல்வாம் என்றது பன்முறை வற்புறுத்தியதைப் புலப்படுத்தியது. அன்று-புறப்பட்ட நாளில். நல்ல என்றது நல்ல நிமித்தமாகிய வாய்ச் சொல்லை; இதனைப் புள்ளென்றும் விரிச்சி என்றும் கூறுவர்.

தழல்-கையாற் சுற்றின காலத்துத் தன்னிடத்துப் பிறக்கும் ஓசையால் கிளி முதலியவற்றை ஓட்டுங் கருவி. தட்டை-கிளிகடிகருவியுள் ஒருவகை. முறி-தழை; என்றது தழையால் ஆகிய உடையை;

தளிர் எனலுமாம். விளா, புன்கு முதலியவற்றின் தளிர்களை மகளிர் அப்பிக்கொள்ளுதல் வழக்க மாதலின் அவற்றை அளித்தான். ஆய்நலம்-பலரால் சிறப்பித்துக் கூறப்பட்டு ஆராய்ச்சிக்குட்படும் அழகு எனலும் ஆம்.

மதுரைக் கண்டரதத்தன்:- பனிக்காலத்தில் வாடைக்கு அழிந்த மேகம் தென்றிசை நோக்கிச் செல்லும் இயற்கையை இவர் அறிந்து கூறியுள்ளார், இவர் பாடியதாகக் குறுந்தொகையிலுள்ள செய்யுள் ஒன்றே உள்ளது. (பி.ம்) மதுரைக் கண்டரதத்தன்.

புரிமட மரையான் கருநரை நல்லேறு
தீம்புளி நெல்லி மாந்தி அயலது
தேம்பாய் மாமலர் நடுங்க வெய்துயிர்த்து
ஓங்குமலைப் பைஞ்சுனை பருகு நாடன்
நம்மைவிட் டமையுமோ மற்றே கைம்மிக
வடபுல வாடைக் கழிமழை
தென்புலம் படருந் தண்பனி நாளே.

(குறுந். 317.)

நரை-பெருமை; வெண்மையுமாம். முதலில் புளிப்பும் அப்பால் இனிமையும் தோற்றுதலின் 'தீம்புளி நெல்லி' என்றுள். நெல்லியைத் தின்று நீர் குடிக்குங் கால் இன்சுவை தோற்றும். வாடை-காற்று. அது வீசியதால் மேகம் தென்றிசையில் படர்ந்தது.

மதுரைக் கண்ணத்தனர்:- இவர் கண்ணத்தனர் என வும் வழங்கப்படுவார். அந்திமாலையில் மேலைக்கடல் சங்கரநாராயண அவதாரத்தின் தோற்றம் போன்றுள் ளது என்று அகநானூற்றில் கூறியிருப்பது சிறப் புடைத்து. இவர் குறிஞ்சி நெய்தல் நிலவளங்களை நன்கு சிறப்பித்துள்ளார். இவர் பாடியனவாக நற்றிணையில் ஒருசெய்யுளும், அகநானூற்றில் ஒரு செய்யுளும் உள்ளன.

இளமை தீர்ந்தனள் இவளென வளமனை
அருங்கடிப் படுத்தனை யாயினுஞ் சிறந்திவள்
பசந்தனள் என்ப துணராய் பன்னாள்
எவ்வ நெஞ்சமொடு தெய்வம் பேணி
வருந்தல் வாழிவேண் டன்னை கருந்தாள்
வேங்கையங் குவட்டிடைச் சாந்திற் செய்த
களிற்றுத்துப் பஞ்சாப் புலியதள் இதணத்துச்
சிறுதினை வியன்புனங் காப்பிற்
பெறுகுவள் மன்னோவென் தோழிதன் னலனே.

(நற். 351.)

மதுரைக்கண்ணனார்:— பொருள் முற்றி வந்த தலைமகனையுடைய கிழத்தி காமமிக்க கழிபடர்கிளவியால், ''எம்மைத் துயிலினின்றும் எழுப்பிய சேவலே, நீ இறந்துபடுவாயாக'' என்று கூறுவதாக இவர் பாடியுள்ள குறுந்தொகைச்செய்யுள் நயம் வாய்ந்ததொன்றும்.

குவியிணர்த் தோன்றி ஒண்பூ வன்ன
தொகுசெந் நெற்றிக் கணங்கொள் சேவல்
நள்ளிருள் யாமத் தில்லெலி பார்க்கும்
பிள்ளை வெருகிற் கல்கிரை யாகிக்
கடுநவைப் படீஇயரோ நீயே நெடுநீர்
யாணர் ஊரன் றன்னொடு வதிந்த
ஏம வின்றுயில் எடுப்பி யோயே.

(குறுந். 107.)

மதுரைக் கணக்கயனார்:—கணக்காயனார்- ஓதுவிப்பார்; ''கணக்காய ரில்லாத வூரும்'' (திரி-10). இதனால், இவருடைய தொழில் இன்னதென்று விளங்கும்; திருவருளாற் கிடைத்த சங்கப்பலகையில் முதலில் ஏறி வீற்றிருந்தவரும் நல்லிசைப்புலவர்களின் நடு நாயகமாக விளங்கியவருமான நக்கீரனாருடைய அருமைத்தந்தையார்இவர். இதனாலேயே இவருடைய தவப்பயனும் கல்விப்பெருமையும் விளங்கும். பகைவருடைய பெருஞ்சேனையைத் தனியே

நின்று தடுக்கும் ஒரு வீரனை, ''பெருங்கடற் காழி யனையன்'', ''தொன்மை சுட்டிய வண்மையோன்'' என்று இவர் பாராட்டினர்; புறநா. 330. இவர் பாடிய செய்யுட்கள்-5: அகநா. 3; நற். 1; புறநா. 1.

வேந்துடைத் தானை முனைகெட நெரிதர
ஏந்துவாள் வலத்த னொருவ னாகித்
தன்னிறந்து வாராமை விலக்கலிற் பெருங்கடற்
காழி யனையன் மாதோ வென்றும்
பாடிச் சென்றோர்க் கன்றியும் வாரிப்
புரவிற் காற்றாச் சீறூர்த்
தொன்மை சுட்டிய வண்மை யோனே.

(புறம். 330.)

முனை-சண்டை. நெரிதர-நெரிய. ஆழி-கரை. வாரி-வருவாய். புரவு-இறையிலி நிலம்.

<u>மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்</u>:— இவரது இயற்பெயர் கீரனாரென்பது; 'ந' சிறப்புப் பொருளைத் தருவதோரிடைச் சொல். திருமுருகாற்றுப்படையும், நெடுநல்வாடையும் இவர் இயற்றியவை. இவற்றை யன்றி நற்றிணையில் ஏழுசெய்யுட்களும், குறுந் தொகையில் எட்டும், அகநானூற்றில் பதினேழும், திருவள்ளுவமாலையில் ஒன்றும், பதினோராந் திருமுறை யில் திருமுருகாற்றுப்படையை யன்றி ஒன்பது பிரபந்தங்களும் இவர் இயற்றியனவாகக் காணப் படுகின்றன; வேறுசில தனிப்பாடல்களும் இவர் பெயரால் வழங்கும். இவர் இயற்றிய நாலடி நாற்ப தென்னும் நூலொன்றுண்டென்றும் அஃது அவிநயர் யாப்புக்கு அங்கமாக உள்ள யாப்பிலக்கண நூலென்றும் யாப்பருங்கல விருத்தி முதலியவற்றால் தெரிகின்றது. இவர் பெயர் நக்கீரர், நக்கீரனார், நக்கீரதேவ நாயனார், மதுரை நக்கீர ரெனவும் காணப்படுகின்றது. இவர் பெயருக்கு முன்னுள்ள அடைமொழியால் இவரது ஊர் மதுரையென்றும்

இவருடைய தந்தையார் ஒரு கணக்காயர் (உபாத்தியாயர்) என்றும் தெரிகின்றது. மதுரைக் கணக்காயனுரென்று பெயருள்ள ஒரு நல்லிசைப்புலவர் தாம் இவர் தந்தையாரெனத் தோற்றுகின்றது, இவருடைய புதல்வர் கொற்றனுரென்பவர்: கீரங் கொற்றனுரெனவும் வழங்கப்பெறுவர். *இறையனுரகப்பொருளுக்கு முதலில் நல்லுரை கண்டு அதனைத்தம் புதல்வராகிய கொற்றனுருக்குக் கூறினுரென்றும் இறையனுரகப்பொருளுரை கூறும். இவர் அந்தண வருணத்தினரென்று கூறப்படுவார்: வடமொழியிலும் நல்ல பயிற்சியை யுடையவர்; ''கீதவிசை கூட்டி வேதமொழி சூட்டு கீரர்'' (திருப்புகழ்) என்றதனுல் அருணகிரிநாதரும் இவரை அந்தணரர்கவே கருதினுரென்பது பெறப்படுகின்றது. திருக்காளத்தி ஞானப்பூங்கோதை யம்மைமீது இவர் இயற்றிய வடமொழித்தோத்திரமொன்றும் வடமொழி நிகண்டொன்றும் தஞ்சை அரண்மனைப் புத்தக சாலையிலுள்ளதென்று கூறுவர்.

இவர், மதுரைப் பட்டி மண்டபம் புகுந்து வடமொழியே சிறப்புடையதென்றும் தென்மொழி இழிந்ததென்றும் கூறிய குயக்கொண்டானென்பவனை இறக்கப் பாடி, பின்பு சிலர் வேண்ட அவனைப் பிழைக்கவும் பாடினுர். சிவபெருமான், தருமி யென்னும் ஓர் அந்தணன்பொருட்டுப் பாடிக் கொடுத்த, ''கொங்குதேர் வாழ்க்கை'' என்னும் செய்யுள் சம்பந்தமாக இவருக்கும் அக்கடவுளுக்கும்

---

* இறையனுர் அகப்பொருளுக்கு இப்பொழுதுள்ள உரை நக்கீரரால் இயற்றப்பட்டதன்று. சிலப்பதிகாரந் பாடல்கள் அதில் மேற்கோள்களாக வந்துள்ளன. ஆகையால் நக்கீரர் அதை இயற்றியிருக்கமாட்டாரென்று நினைக்கிறேன், அவர் மாணுக்கர் பரம்பரையில் உரை மட்டும் வந்ததென்று தோற்றுகின்றது; மேற்கோள்கள் பிற்காலத்து ஒருவரால் சேர்க்கப்பட்டிருத்தல் வேண்டும்—சங்கத்தமிழும் பிற்காலத்தமிழும்—பக்கம் **154.**

வாதம் நிகழ்ந்ததென்றும், அவ்வாதத்தில் இவர் வரம்பிகந்து பேசினமையின் அக்கடவுளுடைய சினத்திற்கு ஆளாகி நோயுற்ருரென்றும், பின்பு இவர் அவரைப் பணிந்து இரப்பக் கைலை கண்டால் நோய் தீருமென்று அவர் கட்டளையிட்டருள இவர் கைலையை நோக்கிச் சென்ருரென்றும், செல்லும் வழியில் திருப்பரங்குன்றத்தில் ஒரு பூதத்தாற் குகையொன்றில் அடைக்கப்பட்டுத் திருமுருகாற்றுப்படை பாடி முருகக்கடவுளால் மீட்கப் பட்டாரென்றும், பின்பு திருக்காளத்தி சென்று பொன்முகரி யாற்றில் நீராடு கையிற் கைலைத் தரிசனம் பெற்று நோய் நீங்கிக் கைலைபாதி காளத்திபாதியந்தாதியென்னும் நூலைப் பாடிஞரென்றும் உள்ள சில செய்திகள் இவருடைய வரலாருகத் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் முதலியவற்றிற் காணப்படுகின்றன. சிவ பெருமான் சினங்கொண்ட பொழுது அதனைத் தணிக்கக் கோபப்பிரசாதம் என்னும் பிரபந்தம் இவராற் பாடப்பட்டதென்பர்.

மதுரை மேலைமாசிவீதியின் மேல்சிறகில் நக்கீரர்கோயிலென்று ஒருகோயில் பெரிதாக உள்ளது. அது சங்கத்தார் கோயிலெனவும் வழங்கும்; அதில் இவருடைய திருவுருவமுள்ளது. பின்னும், இவருடைய திருவுருவம் திருப்பரங்குன்றத்தில் ஸ்ரீ முத்துக்குமாரசாமியின் பக்கத்தே அமைக்கப் பெற்றுள்ளது; திருவிழாக்காலத்தில் புறப்பாடுண்டு. இவர் ஈங்கோய்மலை யெழுபது என்னும் நூல் இயற்றியது பற்றிய செய்தி முன் காலத்தில் இருந்த அரசரொருவர் திருவீங்கோய்மலைக்கோயிலில் இவருடைய திருவுருவத்தைப் பிரதிட்டிப்பித்துப் பூசை முதலியன நடைபெற்று வரும்படி நிபந்தம் அமைந்திருத்தாரென்று அத்தலத்துச் சிலாசாசன மொன்ருல் தெரிய வருகின்றது. நக்கீரராற் பிரதிட்டிக்கப்பட்டதாகக் கூறப்படும் ஒரு சிவலிங்கப்பெருமான் திருவுருவம்

திருக்காளத்தியில் உண்டு; அதற்கு நக்கீர நாதர் அல்லது நக்கீரலிங்க மென்பது திருநாமம்.

இவர் செய்யுட்களில் வந்த தெய்வங்கள்: இந்திரன், இல்லுறைதெய்வம், சிவபிரான், திருமால், பலதேவர், பிரமன், வரையரமகளிர் முதலியோர்.

உபகாரிகள்: அருமன், எவ்வி, கிள்ளி வளவன், குட்டுவன், கோசர், கோதைமார்பன், சோழன், தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன், தழும்பன், தித்தன், திதியன், திரையன், பசும்பூட் பாண்டியன், பழையன் மாறன், பாண்டியன் இலவந்திகைத் துஞ்சிய நன்மாறன், பிடவூர்கிழார் மகன் பெருஞ்சாத்தன், முசுண்டை, வடுகர்பெருமகன், எருமை, வழுதி, வன்னி, வானவரம்பன்.

புலவர்கள்: அகத்தியர், கபிலர், தூங்கல், பரணர்.

ஊர்கள் முதலியன: ஆலங்கானம், இடையாறு, உறையூர், ஊணூர், கருவூர், காவிரிப்பூம்பட்டினம், திருச்சீரலைவாய், திருப்பரங்குன்றம், திருமருதந்துறை, திருவாவினன்குடி, திருவேரகம், தொண்டி, பவத்திரி, பழமுதிர்சோலை, பெருங்குளம், மதுரை, மருங்கூர்ப் பட்டினம், முசிறி, மூதில், வேங்கடம்.

ஆறுகள்: அயிரியாறு, ஆன்பொருநை, காவிரி, வையை.

இவர்பாடிய திருமுருகாற்றுப்படையிலும், நெடுநல்வாடையிலும் உள்ள ஒத்த பகுதிகள்:

| முருகு, | நெடுநல் |
|---|---|
| 38. வென்றடுவிறற்கொடி: | |
| | 87. ''வென்றெழுகொடி''. |
| 70-71. திருவீற்றிருந்ததீதுதீர் நியமத்துக்.........ல் கூட: | |

89-90 ''திருநிலைபெற்ற தீதுதீர் சிறப் பின் ..... திருநகர்''.

228. நெய்யோ டையவியப்பி:

86. ''ஐயவியப்பிய நெய்யணி நெடுநிலை''.

238. நளி மலைச் சிலம்பு:

100. ''நளிமலைச் சிலம்பிற் சிலம்புங் கோயில்''.

திருமுருகாற்றுப்படையிலும் இவர் இயற்றிய பிறசெய்யுட்களிலும் உள்ள ஒத்தபகுதிகள்:

முருகு:

24. திலகந் தைஇய தேங்கமழ் திருநுதல்: ''தேங்கமழ் திருநுதற் றிலகந் தைஇயும்'' அகநா. 389.

35-7. இளமுலை.................. விரிமலர், வேங்கை நுண்டா தப்பிக் காண்வர, வெள்ளிற் குறுமுறி கிள்ளுபு தெரியா: ''பல்லிதழெதிர்மலர் கிள்ளி வேறுபட, நல்லிள வனமுலை யல்லியொ டப்பியும்'' அகநா. 389.

71. மாடமலி மறுகிற் கூடல்: ''மாடமலிமறுகிற் கூடலாங்கண்'' அகநா. 346.

104. ஆரந்தாழ்ந்த வம்பகட்டு மார்பு: ''நெடு வேண் மார்பிலாரம்'' அகநா. 120.

122. பல்பொறி மஞ்ஞை வெல்கொடி: ''மணிமயி லுயரிய மாறு வென்றி'' புறநா. 56.

150-51. பாம்புபடப் புடைக்கும்.....புள்ளணி நீள்கொடிச் செல்வன்: ''விண்ணுயர் புட்கொடி விறல்வெய் யோனும்'' புறநா. 56.

151-4. வெள்ளேறு, வலவயி னுயரிய........ செல்வன்: ''ஏற்றுவலனுரிய மணிமிடற் றோனும்'' புறநா. 56.

247. ஓடாப்பூட்கைப் பிணிமுகம்: ''பிணிமுக வூர்தியொண் செய்யோனும்'' புறநா. 56.

நெடுநல்வாடையிலும் பிறசெய்யுட்களிலும் காணப்படும் ஒப்புமைப் பகுதிகள்:

நெடுநல்.

9. மந்திகூர: ''கூரற்கொக்கு'' அகநா. 346.

15-8. கொக்கின்மென்பறைத் தொழுதி........ கவரக் கயலறலெதிர: ''கொக்கின் குறும்பறைச் சேவல், வெள்ளி வெண்டோ டன்ன கயல்குறித்து.... கடுநீர் நோக்கிப் பைப்பயப், பார்வலிருக்கும்'' அகநா. 346.

51. வடவர் தந்த வான்கேழ் வட்டம்: மு. அகநா. 340.

88-90. குன்றுகுயின்றன்ன..................திருநகர்: ''வரைகுயின்றன்ன வான்றோய் நெடுநகர்'' அகநா. 93.

89-90. திருநிலைபெற்ற......திருநகர்: ''திரு வுடை வியனகர்'' நற். 258.

101. யவனர்: புறநா. 56.

161. செல்வனெடு நிலைஇய வுரோகிணி: ''மதி நிறைந் தறுமீன் சேரும்'' அகநா. 141.

173. வடந்தைத் தண்வளி: ''தண்ணென வாடை தூக்கும்'' அகநா. 78.

<u>மதுரைக் கதக்கண்ணனார்:—</u> கோபமிக்க கண்களை யுடையவர் என்பது கதக்கண்ணனார் என்பதன் பொருள்; ''செல்வப்போர்க் கதக்கண்ணன் செயிர்த்தெறிந்த சினவாழி'' (யா.கா.மேற்) என்ற அடியை நோக்குக. ''அரியவழியை அஞ்சாது தலைவன் நள்ளிரவில் வருதலும் வருவான்'' அவன் அங்ஙனம்

வருதலினால் உண்டாகும் பழிக்கு நாம் நாணேம்'' (குறுந். 88) என்று தோழி கூறுவதாக இவர் பாடியுள்ளார்.

ஒலிவெள் ளருவி ஓங்குமலை நாடன்
சிறுகட் பெருங்களிறு வயப்புலி தாக்கித்
தொன்முரண் சோரும் துன்னருஞ் சாரல்
நடுநாள் வருதலும் வரூஉம்
வடுநா ணலமே தோழி நாமே.

(குறுந். 88.)

வடுவென்றது தலைவன் வருதலைப் பிறர் குறிப்பால் அறிந்து பழிகூறுதலை; வடு-குற்றம்.

வழியின் ஏதத்துக்கு அஞ்சாமல் அவனே வரும் பொழுது அவனை ஏற்றுக்கொள்ளாமல் வடுவை நாணி மறுத்தல் அழகன்றென்பது தோழியின் நினைவு.

மதுரைக்கவுணியன் பூதத்தனார்:— இவர் கவுண்டின்ய கோத்திரத்தில் பிறந்தவர் என்று தெரிகிறது; அந்தணர், பூதத்தனார் என்பது இவரது இயற்பெயர் போலும். இவர்பாடிய பாடலொன்று அகநானூற்றில் உள்ளது; முல்லைத்திணையைச் சிறப்பித்துள்ளார். இவர் பெயருக்கு மதுரைக் கவுணியன்முத்தனார் என்ற பிரதிபேதமும் உண்டு.

வினைவலம் படுத்த வென்றியொடு மகிழ்சிறந்து
போர்வல் இளையர் தாள்வலம் வாழ்த்தத்
தண்பெயல் பொழிந்த பைதுறு காலைக்
குருதி உருவின் ஒண்செம் மூதாய்
பெருவழி மருங்கில் சிறுபல வரிப்பப்
பைங்கொடி முல்லை மென்பதப் புதுவீ
வெண்களர் அரிமணல் நன்பல தாஅய்
வண்டுபோ தவிழ்க்குந் தண்கமழ் புறவிற்

கருங்கோட் டிரலைக் காமர் மடப்பிணை
மருண்டமா னேக்கங் காண்டொறும்நின்னினைந்து
திண்டேர் வலவ கடவெனக் கடைஇ
இன்றே வருவர் ஆன்றிகம் பனியென
வன்புறை இன்சொல் நன்பல பயிற்றும்
நின்வலித் தமைகுவன் மன்னே அல்கல்
புன்கண் மாலையொடு பொருந்திக் கொடுங்கோற்
கல்லாக் கோவலர் ஊதும்
வல்வாய்ச் சிறுகுழல் வருத்தாக் காலே.

(அகம். 74.)

## மதுரைக் கள்ளிற்கடையத்தன் வெண்ணுகனுர்:—

வெண்ணுகனுரென்பது இவரது இயற்பெயர். இவர் பாடிய வல்லாண்முல்லைத் துறை(புறநா. 316) பொருட் சிறப்புடையது. அகநானூற்றில் ஒரு செய்யுள் இவர் பாடியதாக உள்ளது.

கள்ளின் வாழ்த்திக் கள்ளின் வாழ்த்திக்
காட்டொடு மிடைந்த சீயா முன்றில்
நாட்செருக் கனந்நர்த் துஞ்சு வோனே
அவனெம் மிறைவன் யாமவன் பாணர்
நெருநை வந்த விருந்திற்கு மற்றுத்தன்
இரும்புடைப் பழவாள் வைத்தன னின்றிக்
கருங்கோட்டுச் சீறியாழ் பணைய மிதுகொண்
டுவதிலாள னென்னுது நீயும்
வள்ளி மருங்குல் வயங்கிழை யணியக்
கள்ளுடைக் கலத்தேம் யாமகிழ் தூங்கச்
சென்றுவாய் சிவந்துமேல் வருக
சிறுகண் யானை வேந்துவிழு முறவே.

(புறம். 316.)

சீத்தல்-தூத்தல்; பெருக்கல். நாட்செருக்கு அனந்தர்- விடியற்காலத்துக் கள்ளைக் குடித்த மயக்கம் காட்டு- செத்தை. பணையம்-ஈடு. வள்ளி-பூங்கொடி.

மதுரைக் காருலவியங்கூத்தனார்:— இவரது பெயர் குறித்து மதுரை ஆருலாவிய நாட்டுக் கூத்தனார் என்ற பிரதிபேதமும் இருப்பதால் அதனையே பாடமாகக் கொள்ளின் இவர் மதுரையைச் சார்ந்த ஆருலாவிய நாட்டினர் எனக் கருதலாம். கூத்தன் என்ற பெயர் சிவபெருமானுக்குரியது; அப்பெயரைத் தமது பெயராக வைத்துக் கொண்டமையால் இவரது முன்னோர்கள் சிவபக்தராக இருக்கலாம் என்று தெரிகிறது. இவரைப்பற்றிய ஏனைய செய்திகள் புலப்படவில்லை. பாலை நிலத்து வழியில் நேரிடும் துன்பங்கள் நினைத்தற்கும் அரியவை என்று இவர் தாம் பாடியதான நற்றிணைப் பாடலில் கூறுகிறார்.

கவிதலை எண்கின் பரூஉமயிர் ஏற்றை
இரைதேர் வேட்கையின் இரவிற் போகி
நீடுசெயல் சிதலைத் தோடுபுனைந் தெடுத்த
அரவாழ் புற்றம் ஒழிய ஒய்யென
முரவாய் வள்ளுகிர் இடப்ப வாங்கும்
ஊக்கருங் கவலை நீந்தி மற்றிவள்
பூப்போல் உண்கண் புதுநலஞ் சிதைய
வீங்குநீர் வாரக் கண்டும்
தகுமோ பெரும தவிர்கநும் செலவே.

(நற். 325.)

மதுரைக்கூத்தனார்:— இவர் கூத்து ஆடுவதில் வல்லவர் போலும். இவர் மதுரைக் கடாரத்தனார்; மதுரைக் கந்தரத்தனார்; மதுரைக் கோடரத்தனார் எனவும் வழங்கப்படுவார். இவர் பாடிய பாடலொன்று அகநானூற்றில் உள்ளது. தான்மேற் கொண்ட வினைமுடித்த தலைவன், தலைவியைக் காணும் பொருட்டுத் தேரினை விரைந்து செலுத்துக எனத் தேர்ப்பாகனுக்குக்கூறுவதாக இவரது பாடல் அமைந்துள்ளது.

ஓடா நல்லேற் றுரிவை தைஇய
ஆடுகொள் முரசம் இழுமென முழங்க

நாடுதிறை கொண்டனம் ஆயின் பாக
பாடிமிழ் கடலின் எழுந்த சும்மையொடு
பெருங்களிற்றுத் தடக்கை புரையக் கால்வீழ்த்து
இரும்பிடித் தொழுதியின் ஈண்டுவன குழீஇ
வணங்கிறை மகளிர் அயர்ந்தனர் ஆடும்
கழங்குறழ் ஆலியொடு கதழுறை சிதறிப்
பெயல்தொடங் கின்றால் வானம் வானின்
வயங்குசிறை அன்னத்து நிரைபறை கடுப்ப
நால்குடன் பூண்ட கால்நவில் புரவிக்
கொடிஞ்சி நெடுந்தேர் கடும்பரி தவிராது
இனமயில் அகவும் கார்கொள் வியன்புனத்து
நோன்சூட் டாழி ஈர்நிலம் துமிப்ப
ஈண்டே காணக் கடவுமதி பூங்கேழ்ப்
பொலிவன அமர்த்த உண்கண்
ஒலிபல் கூந்தல் ஆய்சிறு நுதலே.

(அகம். 334.)

## மதுரைக்கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்:—

இவர் கூல வியாபாரி; கூலம்-நெல் முதலியவை; பாண்டியன் சித்திரமாடத்துத்துஞ்சியநன்மாறனை நோக்கி அவனுடைய இயல்புகளைச் சுருக்கிக் கூறியவர்; புறநா. 59. பத்தினிக்கடவுளாகிய கண்ணகியின் வரலாற்றையும் அவள் மேம்பாட்டையும் சேரன் செங்குட்டுவனுக்கு அறிவுறுத்தி அவனைக் கொண்டு அவளுக்குக் கோயில் கட்டுவித்து நித்திய பூசை முதலியன நடக்கும்படி செய்தவர். அவ்வரசனுக்குக் கண்ணகியின் வரலாற்றைக்கூறிய பொழுது அவனோடு கேட்டுக்கொண்டிருந்தவரும் துறவு பூண்டவருமாகிய இளங்கோவடிகள் அவளுடைய சரித்திரத்தைப் பொருட்டொடர் நிலைச்செய்யுளாகச் செய்தற்கு வேட்கையடையும் வண்ணம் செய்தவரும் இவரே; இதனைச் சிலப்பதிகாரத்தின் பதிகத்தாலும், அந்நூற் காட்சிக்காதையாலும் உணர்க. மணிமேகலை நூலாசிரியரும் இவரே; 'சீத்தலைச் சாத்தனாராற் செய்யப்பட்ட மணிமேகலை' (தொல். செய்.சூ. 241 பேர்.). எட்டுத்தொகையாகிய நற்றிணை

முதலிய நூல்களில் இவர் இயற்றியனவாகப் பத்துச் செய்யுட்களும் (நற். 3, குறுந். 1, அகநா. 5, புறநா. 1) திருவள்ளுவமாலேயில் ஒரு செய்யுளும் இப்பொழுது காணப்படுகின்றன. இவர் பெயர், மதுரைச் சீத்தலேச்சாத்தனுரெனவும், சீத்தலேச் சாத்தனுரெனவும், சாத்தனுரெனவும் வழங்கும்; ''தண்டமிழ்ச்சாத்தன்'' (பதிகம், 10) என்றும், ''தண்டமிழாசான் சாத்தன்'' (25 : 66) என்றும், ''நன்னூற் புலவன்'' (25 : 106) என்றும் சிலப் பதிகாரத்து இவர் சிறப்பிக்கப்பட்டிருக்கின்றனர். சங்கத்தில் அரங்கேற்றுவித்தற்பொருட்டு வரும் நூல் களிற் பிழைகள் காணப்படுந்தோறும் ஆக்கியோர் களேக் குற்றங்கூறுதற்குத் துணியாராய், 'இந்தப் பிழைகளேக் கேட்கும்படி நேரிட்டதே' என்று இவர் மனம் வருந்தித் தமது தலேயைக் குத்திக் கொள்வா ரென்றும், அதனுல் தலே புண்பட்டுச் சீயோடிருந் தமையின், சீத்தலேச் சாத்தனுரென்பது இவருக்குப் பெயராயிற்றென்றுங்கூறி, ''வள்ளுவர் முப்பாலாற் றலேக்குத்துத் தீர்வு சாத்தற்கு'' என்று மருத்துவன் தாமோதரனுர் திருக்குறளேச்சிறப்பித்துக் கூறிய செய்யுளே ஆதாரமாகக் காட்டுவர் ஒருசாரார்; 'சீத்தலேச் சாத்தன், கொடும்புறமருதி யென்பன சினேப் பெயரொடு தொடர்ந்து வரும் முதற்பெயர்' (தொல். பெயர். சூ. 20 இளம்.) என்பது இக் கருத்தை வலியுறுத்தும். சிலப்பதிகாரத்தை இவர் கேட்டனரெனச் சிலப்பதிகாரப்பதிகத்து இறுதி யிலும், மணிமேகலேயைச் சிலப்பதிகார நூலாசிரி யர் கேட்டனரென அந்நூற் பதிகத்து இறுதியிலும் கூறியிருத்தலால், இளங்கோவடிகளும் இவரும் ஒரே காலத்தினரென்பது அறியப்படுகின்றது. சீத்தலே யென்னும் ஓர் ஊரிலுள்ள ஐயனுர் பெயராகிய சீத்தலேச்சாத்தனுரென்பது இவரது இயற்பெயர் என் பது ஒரு சாரார் கொள்கை; உண்மை விளங்கவில்லே. அகநானூற்றிலும், புறநானூற்றிலும், திருவள்ளுவ

மாலையிலும் இவருடைய செய்யுளும் மருத்துவன் தாமோதரனார் செய்யுளும் அடுத்தடுத்துக் காணப் படுதலாலும் தாமோதரனார் இவரைப்பற்றிக் கூறியிருத்தலாலும் இவ்விருவரும் நெருங்கிய நட்பின ரென்று கருத இடமுண்டு. திருக்கச்சூர்ச் சாசன மொன்றில் முத்தமிழாசிரியரென்னும் சிறப்புப்பெயர் பெற்ற சாத்தனார் வழிவந்த பெருநம்பியென்னும் ஒருவர் கூறப்படுகிறார். அதிற்கூறப்படும் சாத்தனார் இவரோ வேறு யாரோ தெரியவில்லை. இவர் சேரன் செங்குட்டுவன்பாலும் இளங்கோவடிகள்பாலும் நட் புரிமை பூண்டவர். மணிமேகலையில் வஞ்சிமாநகர் புக்க காதையின் இறுதியில் செங்குட்டுவனுடைய செங்கோல் முறையையும் வெற்றிச் சிறப்பையும் விளக்கியிருத்தலாலும் இந்நூலை இளங்கோவடிகள் கேட்டதாலும் தம்நூலில் இவரைச் சிறப்பித் திருத்தலாலும் இஃது உணரப்படும்.

இவர் திருக்குறளில் மிகவும் ஈடுப்பட்டவரென்பது அந்நூலை இவர் சிறப்பித்துப் பாடிய திருவள்ளுவ மாலைச் செய்யுளாலும், மருத்துவன் தாமோதரனார் அம்முப்பாலால் இவர் தலைக்குத்துத் தீர்ந்ததெனச் சொல்வதாலும், மணிமேகலையில் இவர், ''தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள், பெய் யெனப் பெய்யும் பெருமழை யென்றவப், பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்'' *(22:59-61)* எனத் திருக்குறட் செய்யுளொன்றை மேற்கோள் காட்டித் திருவள்ளுவரைப் பாராட்டியிருத்தலாலும்'', கேள்வியாற் றோட்கப் படாத செவி'' என்னும் குறட் பகுதியை நினைந்து ''கேள்வியாளரிற், றோட்ட செவியை நீ யாகுவை *(18:134-5)* என்பதனாலும் பிறவற்றாலும் அறியக்கிடக்கின்றது.

இவர் கண்ணகியைப் பற்றிய வரலாற்றை இளங்கோவடிகட்குக் கூறுகையில், ''வினைவிளை கால

மாதலின் பாண்டியன் தேராளுகிக் கோவலனைக் கொல்லுமாறு கட்டளையிட்டான்'' என்று சொல்ல இளங்கோவடிகள், ''வினைவிளை காலமென்றீர்; யாது அவர் வினை' விளைவு?'' என்று கேட்க இவர், தாம் மதுரையில் வெள்ளியம்பலத்திற் பள்ளி கொண்டிருக்கையில் மதுராபதியென்னும் தெய்வம் கண்ணகிக்கு முற்பிறப்பின் வரலாற்றைக் கூறிக் கோவலன் கொலையுண்டது பண்டை வினையின் பயனென்றறிவுறுத்தியதைக் கேட்டவாறு கூறினு ரென்பதும், அதனைக் கேட்ட இளங்கோவடிகளால் மூன்று உண்மைகளைப் புலப்படுத்திச் சிலப்பதி காரம் இயற்றப் பெற்றதென்பதும் அந்நூலால் தெரி கின்றன. இவ்வரலாற்றினுல் சாத்தனுர் எந்த நிகழ்ச்சியும் பண்டை வினையின் பயனுக விளைவ தென்னும் கொள்கையுடையராதல் காணப்படும். அக்கொள்கையை மணிமேகலையின்கண் பலவகையிற் புலப்படுத்தியிருக்கின்றனர். உதயகுமரன் காஞ்சன னென்னும் விஞ்சையனுல் வெட்டுண்ட செய்தியைச் சக்கரவாளக் கோட்டத்து மாதவர் அரசனுக்குக் கூறும்பொழுது, ''ஆங்கவன் தீவினை உருத்த தாதலின் ஆங்கு அவள் தன்னை அம்பலத்தேற்றி இவனை ஆங் குய்த்து விஞ்சையனைக் கூஉய் அவன் மனத்தையுங் கலக்கி இவன்றன்னை எறிந்தது'' (மணி. 22:193-203) என்று அச்செய்கையை வினையின் மேலேற்றிச் சொல்லும் பகுதியாலும் மடையனை, உடற்றுணி செய்தாங் குருத்தெழும் வல்வினை, நஞ்சுவிழி யரவி னல்லுயிர் வாங்கி, விஞ்சையன் வாளால் வீட்டிய தன்றே'' (மணி. 23:82-5), ''காண்டகு நல்வினை நும்மையீங் கழைத்தது'' (மணி. 24: 98) என்பன போன்ற பகுதிகளாலும் இதனை அறிய லாகும்.

மணிமேகலையிற் காவிரிப்பூம்பட்டினம், வஞ்சி மாநகர், கச்சியம்பதி யென்னும் பெரிய நகரங்

களைப்பற்றி இவர் விரித்துக் கூறியுள்ள பகுதிகள் அக்காலத்து நாகரிகச் சிறப்பையும், கைத்தொழில் மேம்பாட்டையும் நகர வளத்தையும் விளக்கி அந்நகரங்களிலெல்லாம் இவர் நன்கு பழகிக் கண்டவற்றைக் கண்டவாறே அறிவிக்கும் பேராற்றல் உடையாரென்பதைப் புலப்படுத்துகின்றன; சிறு பொழுதுகளின் வருணனைகள் இடையிடையே சுவை பயக்கும் வண்ணம் இவராற் கூறப்பெற்றிருக்கின்றன; உவவனத்தைப் பற்றிச் சொல்லுகையில் அது, பல மலர்மரங்கள் நிறைந்து வித்தகரியற்றிய விளங்கிய கைவினைச் சித்திரச் செய்கைப் படாம் போர்த்ததுவே யொப்பத் தோன்றியதாக உரைக்கின்றார்; இதே கருத்து இவருடைய அகநானூற்றுச் செய்யுளொன்றிற் சிறிது வேறுபாட்டுடன் காணப் படுகின்றது; அது வருமாறு:

''வானம் வாய்ப்பக் கவினிக் கானம்
கமஞ்சூன் மாமழை கார்பயந் திறுத்தென
மணிமருள் பூவை யணிமல ரிடையிடைச்
செம்புற மூதாய் பரத்தலி னன்பல
முல்லை வீகழ ரூஅய் வல்லோன்
செய்கை யன்ன செந்நிலப் புறவின்.''

(அகம். 134.)

இவர் சித்திர சம்பந்தமாகக் கூறும் வேறுசில செய்திகளும் உண்டு. மனைகள்தோறும் தெய்வங்கள் முதல் பலவகை உயிர்கள்வரையிலுள்ளவற்றைப் போன்று சுண்ணச் சாந்தில் சிற்பிகள் இயற்றிய கண்கவரோவியங்கள் இருந்தமையும் (மணி 3:127-31), ஓவிய நூலில் பரத்தையரும் பயிற்சியுடையராக இருந்தமையும் (மணி. 2:31) இவராற் சொல்லப்படுகின்றன. அணிகலன் முதலியவற்றை அணியாமல் மணிமேகலை நின்றதை, ''புனையா வோவியம் போல நிற்றலும் (மணி. 16:131) என்றும், ஊரரார் அலர் கூறியதற்காக மணம்

பெருது யாதொரு செயற்கை யழகுமின்றிக் கன்னி யாக வாழ்வைக் கழிக்கத் துணிந்த விசாகை வந்ததை, ''புனையா வோவியம் புறம்போந் தென்ன'' (மணி. 22.88) என்றும்கூறிய அடிகளில் வண்ணங் களைக் கொண்டு ஒப்பனை செய்யாத சித்திரத்தை அவ்விருவர்களுக்கும் உவமை கூறியிருத்தல் காண்க. மாதவிக்குச் சுதமதி உவவனத்திலுள்ள பளிக்கறை மண்டபத்தைப் பற்றி யுரைக்கும்பொழுது, ''விளிப் பறை போகாது மெய்புறத் திடூஉம் பளிக்கறை மண்டபமுண்டு'' (மணி. 3:63-4) என்றதும், மணி மேகலை அதற்குள் மறைந்திருந்த காலையில் உதய குமரன் அவள் உருவத்தைமட்டிலும் கண்டது மாகிய செய்திகளால் இவர் கண்ணுடியின் இயற் கையைப் புலப்படுத்தியிருக்கின்றார். இவர் மணி மேகலையில் வருகின்ற பலருடைய வரலாற்றையும் யாரேனும் ஒருவருடைய கூற்றாக அமைத்துப் புலப் படுத்துகின்றார்; உயிர்களின் பசிப்பிணியை நீக்கியும் அவற்றிற்கு உடை இருக்கை முதலியவற்றை வழங்கி யும் செய்யப்படும் அருளறத்தினது சிறப்பைப் பலவகையில் எடுத்துக் காட்டுகின்றார். மாதவி கண்ணகியைப் பற்றிக் கூறும் பகுதியிலும் ஆதிரை மருதியென்பவர்களுடைய வரலாறுகளிலும், சித்திரா பதியின் கூற்றிலும் பத்தினிப்பெண்டிர் இயல்பை விளங்கவைத்திருக்கின்றார்.

எடுத்துக்கொண்ட நூற்கேற்ற கொள்கைகளைச் சிறப்பித்தல் ஆசிரியரது கடப்பாடாதலின், பௌத்த சமயத்தைப் பாராட்டிக் கூறும் மணிமேகலையில் சுதமதியின் வரலாற்றால் சமணரையும் ஆபுத்திரனது வரலாற்றால் வேள்வியையும் குறைகூறுதல் அறிதற் குரியது. இடையிடையே பல இதிகாசக் கதைகள் புராணக்கதைகள் முதலியன இவரால் எடுத்தாளப் படுகின்றன (இவற்றை மணிமேகலை 395-6-ஆம் பக்கங்களிற் காணலாம்) மாதவர்களுக்கு அபசாரம்

செய்யின் அத்தீங்கு பெருந்துன்பத்தை விளைக்கு மென்பதும் அவர்களுக்கு ஒரு சிறிது நன்மை புரியினும் அது பின்பு பன்மடங்கு நற்பயனை உண் டாக்குமென்பதும் பலருடைய வரலாறுகளாற் மணி மேகலையின்கண் இவராற் காட்டப்படுகின்றன.

சில இடங்களில் சிலர் கூற்றில் உலக வழக்கில் திகழும் சிலவகைத் தொடர்களை இடைப்பெய்து அப்பகுதிகளைச் சுவைபெறச் செய்கின்றார்:; ''மறந்தே னதன்றிற மாதவி கேளாய்'' (மணி. 3:69), ''மறந்தது முண்டெனா மறித்தாங் கிழிந்து'' (மணி. 10:88), ''மறந்தே னதன்றிற நீயெடுத் துரைத் தனை'' (மணி. 11:119) என்பவற்றையும், ஆங்கவன் றன்றிற மறவண னறியுமென், றீங்கென் னுவை வருத்தியது'' (மணி. 15:38-9) என்பதனையும், ''ஓவியச் சேனனென் னுறுதுணைத் தோழன், ஆவதை யிந்நகர்க் காருரைத் தனரோ'' (மணி. 21:135-6) என்பதனையும், ''இருந்தாய் நீயோ வென்பா ரின்மையின்'' (மணி. 14:69) என்பதனையும் காண்க. சுதமதி உதயகுமரனுடன் உடலின் தன்மையைக் கூறும் பகுதியும், சித்திராபதி மணிமேகலையை அழைத்து வருமாறு உதயகுமரனைத்தூண்டும் பகுதி யும், சக்கரவாளக் கோட்டத்து முனிவர் உதய குமரன் வெட்டுண்ட செய்தியை அரசனுக்குக் கூறும் பகுதியும், இவைபோன்ற பிறவும் இன்ன வகைச் செய்தியை இன்னருடன் இவ்வாறு சொல்ல வேண்டுமென்னும் முறையைப் புலப்படுத்தி நிற் கின்றன. சிலதொடர்கள் ஒரேவிதமாய்ப் பலவிடங் களில் மணிமேகலையில் வந்துள்ளன. உருவகங்கள் பல மணிமேகலையுட் காணப்படும். ''வலம்புரிச் சங்கம் வறிதெழுந் தார்ப்பப், புலம்புரிச் சங்கம் பொருளொடு முழங்க'' (மணி. 7:113-14) என்பன முதலிய அடிகளிற் சொற்பின்வருநிலையணியும், ''சாலிக்குண்டோ தவறு'' (மணி. 13:98) என்னும்

தொடரிற் சிலேடையணியும், *''குருகுகரு வுயிர்ப்ப, ஒருதனியோங்கிய திருமணிக்காஞ்சி ''(மணி. 18:55-60) எனவரும் அடிகளிற் சிலேடை உருவகம் முதலியனவும், ''பறூஅக் குருகி னுயிர்த்து'' (மணி. 19:28), ''பூத்த வஞ்சி பூவாவஞ் சியில்'' (மணி. 26:78) என்பவற்றில் வெளிப்படை நிலையணியும் அமைந்துள்ளன. சமய சம்பந்தமான சில சொற்களையும் தொடர்களையும் வேறு சிலவற்றையும் இடத்திற்கேற்ப இவர் மொழிபெயர்த்து அமைத்திருத்தல் மிகப் பாராட்டற்குரிய தொன்றும். இவருடைய வாக்கில் நன்கனம் செவ்வனம் என்னும் சொற்கள் பலவிடங்களில் வந்துள்ளன.

வெண்பா

''சொல்லென்னுங் பூம்போது தோற்றிப் பொருளென்னும்
நல்லிருந் தீந்தாது நாறுதலால்—மல்லிகையின்
வண்டார் கமழ்தாம மன்றே மலையாத
தண்டாரான் கூடற் றமிழ்''.

<u>மதுரைக் கொல்லன்புல்லர்:—</u> கொல்லர் மரபிற் பல புலவர்கள் மதுரையில் இருந்தனர். ''நிலம் புடை பெயரினும் நீர்தீப் பிறழினும், இலங்கு திரைப் பெருங்கடற் கெல்லை தோன்றினும் மலை நாடனொடு அமைந்த தொடர்பு கெடுதல் எவ்வாறு உடையதாகும்'' என்று தோழி கூற்றில் கற்புடைய மகளது உள்ளத் தன்மையை இவர் தாம் பாடியதான குறுந்தொகைச் செய்யுளில் (373) விளக்கி

* மெய்ந்நிலை மயக்கமாவது பொருணிலைமை மயக்கங் கூறுதல்; குருகு கருவுயிர்ப்ப, ஒருதனி யோங்கிய திருமணிக் காஞ்சி' என்ற வழி, குருகு என்பது மாதவியென்னும் கொடிக்கும் பெயராதலின் அப்பெயருடையாளைக் குருகென்றார். காஞ்சி என்பது; மேகலைக் குப் பெயராதலின், அது மணிக்காஞ்சி யென்றெட்டி மணிமேகலை யென்பாள்மேல் வந்தது, இவ்வாறு பொருணிலை மயங்க வருவன வும் இசையெச்சமா மென்றவாறு'' தொல். (எச்ச. 47. தெய்வச்) என்றது இங்கே கருதற்குரியது.

யுள்ளார். புல்லர்: இது புலவரென்பதன் திரிபாக இருக்கலாமென்று சிலர் கருதுகின்றனர்.
(பி-ம். மதுரைக் கொல்லபுல்லன், மதுரைக் கோலம் புல்லன், மதுரைக் கொலம்புல்லன்)

நிலம்புடை பெயரினும் நீர்தீப் பிறழினும்
இலங்குதிரைப் பெருங்கடற் கெல்லை தோன்றினும்
வெவ்வாய்ப் பெண்டிர் கௌவை யஞ்சிக்
கேடெவ னுடைத்தோ தோழி நீடுமயிர்க்
கடும்ப லூரகக் கறைவிர லேற்றை
புடைத்தொடு புடைஇப் பூநாறு பலவுக்கனி
காந்தளஞ் சிறுகுடிக் கமழும்
ஓங்குமலை நாடனொ டமைந்தநந் தொடர்பே.

(குறுந். 373.)

எல்லை-வரம்பு; முடிவு. வெவ்வாய்-அலர் கூறுதலால் வெம்மையையுடைய வாய்; அவர் கூறும் அலர் நெஞ்சைச் சுடுவதாதலின் இங்ஙனம் கூறினாள்.

<u>மதுரைக் கொல்லன் வெண்ணாகனார்</u>:—இவர் பொன்செய் கொல்லன்வெண்ணாகனார் என்றும் வழங்கப் பெறுவர். இவர் குறிஞ்சியையும், பாலைத்திணையையும் புகழ்ந்து பாடியுள்ளார். இவர் தமது பாடலில் பொன் செய் காசெனக் கூறிய அருந்தொடர்மொழியால் பொற்கொல்லனென அறியப்படுவர். இவர் பாடியன வாக நற்றிணையில் ஒரு பாடலும், அகநானூற்றில் ஒரு பாடலும் உள்ளன.

அரவிரை தேரும் ஆரிருள் நடுநாள்
இரவின் வருதல் அன்றியும் உரவுக்கணை
வன்கைக் கானவன் வெஞ்சிலை வணக்கி
உளமிசைத் தவிர்த்த முளவுமா னேற்றையொடு
மனைவாய் ஞமலி யொருங்குபுடை யாட
வேட்டுவலம் படுத்த உவகையன் காட்டு
நடுகாற் குரம்பைத்தன் குடிவயிற் பெயரும்
குன்ற நாடன் கேண்மை நமக்கே

நன்ருல் வாழி தோழி என்றும்
அயலோர் அம்பலின் அகலான்
பகலின் வரூஉம் எறிபுனத் தானே.

(நற். 285.)

முளவுமான்-முள்ளம்பன்றி.
(பி-ம்) வண்கைக் கானவன், மனைவாய் ஞெமிலி.

மதுரைச் சுள்ளம்போதனுர்:— இவர் சுள்ளம்போது என்னும் ஊரிலிருந்து வந்து மதுரையில் வதிந்த காரணத்தால் இப்பெயர் பெற்ருர்போலும். நெய்தல் திணையைச் சிறப்பித்து நற்றிணையில் ஒரு செய்யுள் பாடியுள்ளார்.

குணகடல் இவர்ந்து குரூஉக்கதிர் பரப்பிப்
பகல்கெழு செல்வன் குடமலை மறையப்
புலம்புவந் திறுத்த புன்கண் மாலை
இலங்குவளை மகளிர் வியனகர் அயர
மீனிணந் தொகுத்த வூனெய் ஒண்சுடர்
நீனிறப் பரப்பிற் றயங்குதிரை யுதைப்பக்
கரைசேர் பிருந்த கல்லென் பாக்கத்து
இன்றுநீ இவணை யாகி எம்மொடு
தங்கின் எவனே தெய்ய செங்கால்
கொடுமுடி அவ்வலை பரியப் போகிய
கோட்சுருக் குறித்த முன்பொடு
வேட்டம் வாயா தெமர்வா ரலரே.

(நற். 215.)

மதுரைத் தத்தங்கண்ணனுர்:— தத்தன் என்பது இவருடைய தந்தையின் பெயர். கண்ணன் இவர் இயற்பெயர். இவரது பாடல் ஒன்று அகநானூற்றில் உள்ளது. இவர் அருள், பொருள் ஆகிய இரண்டின் தன்மையினை நன்கு அறிந்தவர் ''அருளுடையவர் பொருளையும் பெற்றிருக்க வேண்டும்''. இந்த உண்மையைத் தலைமகன் ஒருவன் மூலமாக நன்கு விளக்குகின்ருர் இவர்.

இருள்படு நெஞ்சத் திடும்பை தீர்க்கும்
அருள்நன் குடைய ராயினும் ஈதல்
பொருளில் லோர்க்கஃ தியையா தாகுதல்
யானும் அறிவென் மன்னே யானைதன்
கொல்மருப் பொடியக் குத்திச் சினஞ்சிறந்து
இன்னு வேனில் இன்றுணை யாரப்
முளிசினை மராஅத்துப் பொளிபிளந் தூட்டப்
புலம்புவீற் றிருந்த நிலம்பகு வெஞ்சுரம்
அரிய அல்லமன் நமக்கே விரிதார்
ஆடுகொள் முரசின் அடுபோர்ச் செழியன்
மாட மூதூர் மதிற்புறம் தழீஇ
நீடுவெயில் உழந்த குறியிறைக் கணைக்கால்
தொடையமை பன்மலர்த் தோடுபொதிந்து யாத்த
குடையோர் அன்ன கோளமை யெருத்திற்
பாளை பற்றழிந் தொழியப் புறஞ்சேர்பு
வாள்வடித் தன்ன வயிறுடைப் பொதிய
நாளுறத் தோன்றிய நயவரு வனப்பின்
ஆரத் தன்ன அணிகிளர் புதுப்பூ
வாருறு கவரியின் வண்டுண விரிய
முத்தின் அன்ன வெள்வீ தாஅ
அலகின் அன்ன அரிநிறத் தாலி
நகைநனி வளர்க்குஞ் சிறப்பின் தகைமிகப்
பூவொடு வளர்ந்த மூவாப் பசுங்காய்
நீரினும் இனிய ஆகிக் கூரெயிற்று
அமிழ்தம் ஊறும் செவ்வாய்
ஒண்டொடிக் குறுமகட் கொண்டனம் செலினே.

(அகம். 335.)

மதுரைத்தமிழ்க்கூத்தன்கடுவன் மள்ளனார்:—

புறநானூற்றிலுள்ள 334 ஆம் செய்யுளைப் பாடிய மதுரைத்தமிழ்க்கூத்தனாரின் புதல்வர் இவர். கடுவன் என்பது ஒரூர். மள்ளனார் என்பது காரணப்பெயராக இருக்கலாம் என்று தோன்றுகிறது. இவர்பாடியன வாக அகநானூற்றில் மூன்று செய்யுளும், நற்றிணையில் ஒரு செய்யுளும், குறுந்தொகையில் ஒரு செய்யுளும் உள்ளன.

கொடுந்திமிற் பரதவர் வேட்டம் வாய்த்தென
இரும்புலால் கமழும் சிறுகுடிப் பாக்கத்துக்

குறுங்கண் அவ்வலைப் பயம்பா ராட்டிக்
கொழுங்கண் அயிலை பகுக்கும் துறைவன்
நம்மொடு புணர்ந்த கேண்மை முன்னே
அலர்வாய்ப் பெண்டிர் அம்பல் தூற்றப்
பலருமாங் கறிந்தனர் மன்னே இனியே
வதுவை கூடிய பின்றைப் புதுவது
பொன்வீ ஞாழலொடு புன்னை வரிக்கும்
கானலம் பெருந்துறைக் கழனி மாநீர்ப்
பாசடைக் கலித்த கணைக்கால் நெய்தல்
விழவணி மகளிர் தழையணிக் கூட்டும்
வென்வேற் கவுரியர் தொன்முது கோடி
முழங்கிரும் பௌவம் இரங்கும் முன்றுறை
வெல்போர் இராமன் அருமறைக் கவித்த
பல்வீழ் ஆலம் போல
ஒலியவிந் தன்றிவ் அழுங்கல் ஊரே.

(அகம். 70.)

மதுரைத்தமிழ்க்கூத்தன் நாகன்தேவனார்:— மதுரைத் தமிழ்க்கூத்தனாரின் புதல்வர் இவர். இவர் இயற்றிய செய்யுள் ஒன்று அகநானூற்றில் உள்ளது. இவர் முல்லைத்திணையைச் சிறப்பித்துள்ளார்.

கதிர்கை யாக வாங்கி ஞாயிறு
பைதறத் தெறுதலிற் பயங்கரந்து மாறி
விடுவாய்ப் பட்ட வியன்கண் மாநிலம்
காடுகவின் எதிரக் கனைபெயல் பொழிதலின்
பொறிவரி இனவண் டார்ப்பப் பலவுடன்
நறுவீ முல்லையொடு தோன்றி தோன்ற
வெறியேன் றன்றே வீகமழ் கானம்
எவன்கொல் மற்றவர் நிலையென மயங்கி
இகுபனி உறைக்குங் கண்ணொ டினைபாங்கு
இன்னா துறைவி தொன்னலம் பெறூஉம்
இதுநற் காலம் கண்டிசின் பகைவர்
மதில்முகம் முருக்கிய தொடிசிதை மருப்பின்
கந்துகால் ஒசிக்கும் யானை
வெஞ்சின வேந்தன் வினைவிடப் பெறினே.

(அகம். 164.)

மதுரைத்தமிழக்கூத்தனார்:— ஆரியக்கூத்து முதலிய வற்றைப் போலத் தமிழ்மொழிக்கேயுரிய கூத்தாற் பெயர் பெற்றவர் இவர். இவருக்குக் கடுவன் மள்ளனார் நாகன் றேவனாரென இருபுதல்வருளர்; அகநா. 70, 164, 354. இவர் பாட்டில் (புறநா. 334.) வந்துள்ள உவமையும் தலைவன் தலைவிகளுக்குரிய இல்லற முறையும் அறிந்து இன்புறற் பாலன.

காமரு பழனக் கண்பி னன்ன
தூமயிர்க் குறுந்தாள் நெடுஞ்செவிக் குறுமுயல்
புன்றலைச் சிறுஅர் மன்றத் தார்ப்பிற்
படப்பொடுங் கும்மே.........பின்பு.....
.......................னூரே மனையோள்
பாணர் ஆர்த்தவும் பரிசிலர் ஓம்பவும்
ஊணொலி யரவமொடு கைதூ வாளே
உயர்மருப்பு யானைப் புகர்முகத் தணிந்த
பொலம்.................................ப்
பரிசில் பரிசிலர்க் கீய
உரவுவேற் காளையுங் கைதூ வானே.

(புறம். 334.)

கண்பு - ஒருவகைக்கோரை. படப்புபடப்பை - வைக் கோற்போர். ஆர்த்த-நிறைய உண்பிக்க. ஊணொலி யரவம் - ஊணாலுண்டாகிய ஆரவாரம். கைதூவாள்- கையொழியாள். காளை-தலைவன்.

மதுரைத்தமிழ்நாயகனார்:— இவர் கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர். திருக்குறளுக்குச் சிறப்புப்பாயிரம் அளித்துள்ளார். இவரது பாடலொன்று திருவள்ளுவ மாலையில் உள்ளது.

எல்லாப் பொருளும் இதன்பால் உளவிதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால்—சொல்லால்
பரந்தபா வாலென் பயன்வள் ளுவனார்
சுரந்தபா வையத் துணை.

(திருவள்ளுவ. 29.)

மதுரைத்தமிழாசிரியர்செங்குன்றூர்க்கிழார்:—

கடைச்சங்கப்புலவர்களுள் ஒருவராகிய இவர் திருச்செங்கோடு என இக்காலத்து வழங்கப்பெறும் கொடிமாடச்செங்குன்றூரைச் சார்ந்தவராக இருக்கலாம். வேளாண்மரபினர்; மதுரைக்குச் சென்று மாணுக்கர்களுக்குத் தமிழ்கற்பிக்கும் ஆசிரியராக இருந்தனர் எனத்தெரிகிறது. இவர் திருக்குறளுக்குச் சிறப்புப்பாயிரம் ஒன்று வழங்கியுள்ளார்.

புலவர் திருவள் ளுவரன்றிப் பூமேற்
சிலவர் புலவரெனச் செப்பல்—நிலவு
பிறங்கொளிமா லைக்கும் பெயர்மாலை மற்றும்
கறங்கிருண்மா லைக்கும் பெயர்.

(திருவள்ளுவ. 34.)

மதுரை நக்கீரர்:— நிலையாமையை இவர் எடுத்துக்காட்டியிருக்கும்முறை மிக அழகிது; புறநா. 395. இவர் தலையாலங்கானத்துச் செருவென்றபாண்டியன் நெடுஞ்செழியனுல் ஆதரிக்கப் பெற்றவர்; கபிலருக்கும் வேள்பாரிக்கும் காலத்தாற் பிற்பட்டவர்; இவர் இயற்றிய பாடல்கள்: அகநா. 36, 78. (புறநா. 395.)

மென்புலத்து வயலுழவர்
வன்புலத்துப் பகடுவிட்டுக்
குறுமுயலின் குழைச்சூட்டொடு
நெடுவாளைப் பல்லுவியற்
பழஞ்சோற்றுப் புகவருந்திப்
புதற்றளவின் பூச்சூடி
.......................................
.....................அரியலாருந்து
மனைக்கோழிப் பைம்பயிரினனே
கானக்கோழிக் கவர்குரலொடு
நீர்க்கோழிக் கூய்ப்பெயர்க் குந்து
வேயன்ன மென்றோளால்
மயிலன்ன மென்சாயலார்

கிளிகடி யினனே
அகலள்ளற் புள்ளிரீஇ யுந்து
யாங்கப் பலநல்ல புலனணியும்
சீர்சான்ற விழுச்சிறப்பிற்
சிறுகண் யானைப் பெறலருந் தித்தன்
செல்லா நல்லிசை யுறந்தைக் குணது
நெடுங்கை வேண்மா னருங்கடிப் பிடவூர்
அறப்பெயர்ச் சாத்தன் கிளையேம் பெரும
முன்னு ணண்பகற் சுரனுழந்து வருந்திக்
கதிர்நனிசெ.....................மாலைத்
தன்கடைத் தோன்றி யென்னுற விசைத்தலிற்
றீங்குரல்...................கி னரிக்குரற் றடாரியோ
டாங்குநின்ற வெற்கண்டு
சிறிதுநில்லான் பெரிதுங்கூருன்
அருங்கலம் வரவே யருளினன் வேண்டி
.....யென வுரைத்தன்றி நல்கித் தன்மனைப்
பொன்போன் மடந்தையைக் காட்டி யிவனை
என்போற் போற்றென் ரேனே யதற்கண்
டவன்மறவ லேனே பிறருள்ள லேனே
அகன்ஞாலம் பெரிது வெம்பினும்
மிகவானுள் எரிதோன்றினும்
குளமீனொடுந் தாட்புகையினும்
பெருஞ்செய் நெல்லின் கொக்குகிர் நிமிரல்
பசுங்கட் கருனைச் சூட்டொடு மாந்தி
விளைவொன்ரே வெள்ளங் கொள்கென
உள்ளது மில்லது மறியா
தாங்கமைந் தன்ருல் வாழ்கவன் ருளே.

(புறம். 395.)

மென்புலம்-மருதநிலம். வன்புலம்-முல்லைநிலம். விட்டு-மேய்தற்குவிட்டு. குழைச்சூடு-குழைதலையுடைய சூட்டிறைச்சி. உவியல்-அவியல். புகவு-உணவு. அரியல்-கள். ஆருந்து-உண்ணும். இரீஇயுந்து கெட்டு ஓடும். புலன்-இடங்கள். சீர்சான்ற-தலைமையமைந்த. தித்தன்-ஒருசோழன். செல்லா நல்லிசை-கெடாத நல்ல புகழ். உறந்தை-உறையூர். குணது-கிழக்கின்கண் உள்ளது. நெடுங்கைவேண்மான் என்பது உழுவித்துண் போரில் ஓர் உபகாரியின்பெயர். அறப்பெயர்-அறத்

தாலுளதாகிய புகழ். பிடவூர் என்பது சோழ நாட்டிலுள்ளதொரு வைப்புத்தலம். அங்கு மாசாத் தனுர் கோயில் ஒன்று உண்டு. அவர் பெயரே இப்பாட்டுடைத்தலைவனுக்கு அமைந்துள்ளதுபோலும். எரி, குளமீன், தாள் என்பன வான்மீன் விசேடங்கள். இவை முறையே தோன்றுதலும் புகைதலும் உலக வறுமைக்கு ஏதுக்கள். செய்-தொழில். கொக்குகிர் நிமிரல்-கொக்கின் நகம்போன்ற நீட்சியையுடைய அவிழ். (சோறு).

மதுரை நல்வெள்ளியார்:— இவர் பெண்பாற் புலவர். வெள்ளியார் என்னும் சுக்கிரனுக்குரிய பெயர் இவருக்காயிற்றுப் போலும். இவர் அருவி யின் ஒலிக்கு முரசின் ஒலியை உவமை கூறியுள்ளார் (குறுந். 365).) ''தலைவன் புரவலனைப் போலத் தோன்றி இரவலனைப் போலப் பணிமொழிகளைப் பயிற்றினுன்'' என்று தோழியின் கூற்றில் இவர் அமைத்த பாடலொன்று அகநானூற்றில் (32) காணப்படுகிறது. நற்றிணை-7 ஆம் செய்யுள் செய்த வரும் இவரே.

கோடீர் இலங்குவளை நெகிழ நாளும்
பாடில கலிழ்ந்து பனியா னுவே
துன்னரு நெடுவரைத் ததும்பிய வருவி
தண்ணென் முரசின் இமிழிசை காட்டும்
மருங்கிற் கொண்ட பலவிற்
பெருங்கல் நாடநீ நயந்தோள் கண்ணே.

(குறுந். 365.)

மதுரைப்படைமங்கமன்னியார்:— எயினனென்னும் ஒருபகாரியையும் அவனது ஊராகிய வாகையென் பதையும் இவர் பாராட்டியிருக்கிறுர்; புறநா. 351.

படுமணி மருங்கின பணைத்தாள் யானையும்
கொடிநுடங்கு மிசைய தேரு மாவும்

படையமை மறவரொடு துவன்றிக் கல்லெனக்
கடல்கண் டன்ன கண்ணகன் ருனை
வென்றெறி முரசின் வேந்தர் என்றும்
வண்கை எயினன் வாகை யன்ன
இவணலந் தாரா தமைகுவர் அல்லர்
என்னு வதுகொ ருனே தெண்ணீர்ப்
பொய்கை மேய்ந்த செவ்வரி நாரை
தேங்கொண் மருதின் பூஞ்சினை முனையிற்
காமரு காஞ்சித் துஞ்சும்
ஏமஞ்சால் சிறப்பினிப் பணைநல் லூரே.

(புறம். 351.)

எயினன் ஒருபகாரி; வாகை: அவனுடைய ஊர். தேம்-இனிமை. முனையின்-வெறுத்தால். காஞ்சி-ஒரு வகை மரம்.

## மதுரைப்பள்ளி மருதங்கிழார் மகனுர் சொகுத்தனுர்:—

இவர் மதுரை மருதங்கிழார் மகனுர் சுகுத்தனுர் என்றும் வழங்கப் பெறுவர். இவர் பாலையைச் சிறப்பித்துள்ளார்; இடைச்சுரத்துத் தலைமகன் தலைமகளது உருவெளித் தோற்றங் கண்டு மருளு வதாகக் கூறியிருப்பது சிறப்பு. இவர் பாடியயன வாக நற்றிணையில் இரண்டு செய்யுட்கள் உள்ளன. இவர் மதுரை மருதங்கிழார் மகனுர் சுகுத்தனுர் என்றும் வழங்கப்படுகிருர்.

வரையா நயவினர் நிரையம் பேணர்
கொன்ருற்றுத் துறந்த மாக்களி னடுபிணன்
இடுமுடை மருங்கின் தொடுமிடம் பெருஅது
புனிற்றுநிரை கதித்த பொறிய முதுபாறு
இறகுபுடைத் திற்ற பறைப்புன் றூவி
செங்கணைச் செறித்த வன்க ணுடவர்
ஆடுகொள் நெஞ்சமொ டதர்பார்த் தல்கும்
அத்த மிறந்தனர் ஆயினும் நத்துறந்து
அல்கலர் வாழி தோழி உதுக்காண்
இருவிசும் பதிர மின்னிக்
கருவி மாமழை கடல்முகந் தனவே.

(நற். 329.)

மதுரைப் பாலாசிரியர் நப்பாலனர்:— இவர் இயற் பெயர் பாலனர். 'ந' சிறப்புப்பொருளைத் தருவ தோர் இடைச்சொல். இளஞ்சிறூராகிய பாலருக்குக் கல்வி பயிற்றும் ஆசிரியராக இருந்தமையின் இவர் பாலாசிரியர் எனவும் கூறப்பட்டனர் போலும். அகநானூற்றிலுள்ள குறிஞ்சித்திணை பற்றிய செய்யுள் (172) ஒன்றே இவர் பாடியதாகக் காணப்படு கிறது. வேட்டுவனது வலிய கை இரும்பினை வடித் தாற் போன்றது எனக்கூறி அவனது ஆற்றலையும் இவர் புலப்படுத்தியிருப்பது பாராட்டத் தக்கது.

வாரணம் உரறு நீர்திகழ் சிலம்பிற்
பிரசமொடு விரைஇய வயங்குவெள் ளருவி
இன்னிசை யிமிழியங் கடுப்ப இம்மெனக்
கன்முகை விடரகஞ் சிலம்ப வீழுங்
காம்புதலை மணந்த ஓங்குமலைச் சாரல்
இரும்புவடித் தன்ன கருங்கைக் கானவன்
விரிமலர் மராஅம் பொருந்திக் கோல்தெரிந்து
வரிநுதல் யானை அருநிறத் தழுத்தி
இகலடு முன்பின் வெண்கோடு கொண்டுதன்
புல்வேய் குரம்பை புலர வூன்றி
முன்றில் நீடிய முழவுறழ் பலவிற்
பிழிமகிழ் உவகையன் கிளையொடு கலிசிறந்து
சாந்த ஞெகிழியின் ஊன்புழுக் கயருங்
குன்ற நாடநீ யன்பிலை யாகுதல்
அறியேன் யானஃ தறிந்தனெ னாயின்
அணியிழை யுண்க ணொயிதழ்க் குறுமகள்
மணியேர் மாணலஞ் சிதையப்
பொன்னேர் பசலை பாவின்று மன்னே.

(அகம். 172.)

மதுரைப் பாலாசிரியர் நற்றாமனர்:— தாமன் என்பது இவரது இயற்பெயர்; நன்மையைக் குறிக்கும் அடைமொழியுடன் நற்றாமனர் என வழங்கப் பட்டனர். பகற்குறி, இரவுக்குறி ஆகிய இரண்டுமே இடையூறு தருவனவாதலின் தலைவன் தலைவியை

வரைந்து கொள்ளுதலே நன்று என்று தோழி தலைவனுக்குக் கூறுவதாக இவர் அகநானூற்றில் பாடியுள்ளார்; அகநா. 92; குறிஞ்சித் திணையைச் சிறப்பித்துள்ளார். இவர் யானையைக் குறிக்கக் குஞ்சரம் என்ற வடமொழிச் சொல்லைக் கையாண்டுள்ளார்.

நெடுமலை அடுக்கங் கண்கெட மின்னிப்
படுமழை பொழிந்த பானாட் கங்குல்
குஞ்சரம் நடுங்கத் தாக்கிக் கொடுவரிச்
செங்கண் இரும்புலி குழுமுஞ் சாரல்
வாரல் வாழியர் ஐய நேரிறை
நெடுமென் பணைத்தோள் இவளும் யானுங்
காவல் கண்ணினந் தினையே நாளை
மந்தியும் அறியா மரம்பயி லிறும்பின்
ஒண்செங் காந்தள் அவிழ்ந்த ஆங்கண்
தண்பல் லருவித் தாழ்நீர் ஒருசிறை
உருமுச்சிவந் தெறிந்த உரனழி பாம்பின்
திருமணி விளக்கிற் பெறுகுவை
இருள்மென் கூந்தல் ஏமுறு துயிலே.

(அகம். 92.)

பகற்குறியிலும் இடையூறுகள் உள்ளன எனக் குறிப்பாகத் தோழி தலைவனுக்குப் புலப்படுத்தினமையின் பகற்குறியிலும் தலைவன் வரவேண்டாம் என்பதும் அவன் தலைவியை மணந்து (வரைந்து) கொள்ளுதலே நன்றென்பதும் புலனாயின.

மதுரைப்பாலாசிரியன் சேந்தன்கொற்றனார்:—

சேந்தனார் என்பவரின் மகனான இவர் கொற்றனார் என்ற இயற்பெயர் உடையவர். இவரது தந்தை இளஞ்சிறார்களுக்குக் கல்வி போதித்து வந்த காரணத்தினால் இவர் பாலாசிரியன் சேந்தன் கொற்றனார் என்று வழங்கப்பட்டார்போலும். தலைவியின் பசலை நோய், தலைவன் அவளை உரிமையாக மணந்து கொண்டாலன்றித் தீராது; அந்நோய் தீர

முருகனைப் பரவி பலி கொடுத்தல் மிகக் கொடிது என்று தோழியின் கூற்றாகவரும் நற்றிணைப் பாடலொன்றே இவர் பாடியுள்ளார்.

ஆங்கனம் தணிகுவ தாயின் யாங்கு
மிதனிற் கொடியது பிறிதொன் றில்லை
வாய்கொல் வாழி தோழி வேயுயர்ந்
தெறிந்துசெறித் தன்ன பிணங்கரில் விடர்முகை
யூன்றின் பிணவி னுட்குபசி களைஇயர்
ஆளியங் கரும்புழை யொற்றி வாள்வரிக்
கடுங்கண் வயப்புலி யொடுங்கு நாடன்
தண்கமழ் வியன்மார் புரிதினிற் பெருது
நன்னுதற் பசந்த படர்மலி யருநோய்
அணங்கென உணரக் கூறி வேலன்
இன்னியங் கறங்கப் பாடிப்
பன்மலர் சிதறியர் பரவுறு பலிக்கே.

(நற். 322.)

மதுரைப் புல்லங்கண்ணனார்:— கண்ணனார் என்பது இவரது இயற்பெயர். புல்லன் என்பது இவரது தந்தையின் பெயர். இவர் பாடிய ஒரு செய்யுள் அகநானூற்றில் உள்ளது; பாலைத் திணையைப் பற்றியது. பொருள் புரியும் பொருட்டுத் தலைவன் தலைவியைப் பிரிந்து செல்லப் போவதைத் தனக்கு முன்னரே தலைவி உணர்ந்து வாடுவதைக் கண்ட தோழி தலைவனுக்குத் தலைவியின் வாட்டத்தை எடுத்துக் கூறி, அவனது பொருள்வயின் பிரிவை விலக்குவதாக இவர் பாடியுள்ளார்; அகநா. 161.

வினைவயிற் பிரிதல் யாவது வணர்சுரி
வடியாப் பித்தை வன்கண் ஆடவர்
அடியமை பகழி ஆர வாங்கி
வம்பலர்ச் செகுத்த அஞ்சுவரு கவலைப்
படுமுடை நசைஇய வாழ்க்கைச் செஞ்செவி
எருவைச் சேவல் ஈண்டுகிளை பயிரும்
வெருவரு கானம் நீந்திப் பொருள்புரிந்
திறப்ப வெண்ணினர் என்பது சிறப்பக்

கேட்டனள் கொல்லோ தானே தோட்டாழ்பு
சுரும்புண வொலிவரு மிரும்பல் கூந்தல்
அம்மா மேனி யாயிழைக் குறுமகள்
சுணங்குசூழ் ஆகத் தணங்கென வுருத்த
நல்வரல் இளமுலை நனையப்
பல்லிதழ் உண்கண் பரந்தன பனியே.

(அகம். 161.)

மதுரைப் பூதனிளநாகனார்:— தன்னுடைய தறுகண்மையாற் பகைவருடைய சேனையை அஞ்சுவித்து வேறுபடுத்தும் ஒரு வீரனுக்குக் குடத்திலுள்ள பாலையெல்லாம் தயிராகத் திரிக்கும் சிறுபிரையை இவர் உவமை கூறியிருக்கின்றனர்; இவர்பாடிய பாடலொன்று புறநானூற்றில் உள்ளது.

நறுவிரை துறந்த நரைவெண் கூந்தல்
இரங்கா ழன்ன திரங்குகண் வறுமுலைச்
செம்முது பெண்டின் காதலஞ் சிறுஅன்
மடப்பால் ஆய்மகள் வள்ளுகிர்த் தெறித்த
குடப்பாற் சில்லுறை போலப்
படைக்குநோய் எல்லாம் தானா யினனே.

(புறம். 276.)

இரங்காழ்-இரமரத்தின் விதை. இரவென ஒரு மரம் உண்டென்பர். ஆய்மகள்-இடைச்சி. குடம்நிறைய உள்ள பாலில் தெறித்த சிறிய மோர்த்துளியைப் போல.

மதுரைப் பூவண்டநாகன் வேட்டனார்:— பூவண்டல்- ஓரூர். இவர் குறிஞ்சித் திணையைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். இவரது பாடலொன்று நற்றிணையில் உள்ளது.

நீடிருஞ் சிலம்பிற் பிடியொடு புணர்ந்த
பூம்பொறி யொருத்தல் ஏந்துகை கடுப்பத்
தோடுதலை வாங்கிய நீடுகுரல் பைந்தினை
பவளச் செவ்வாய்ப் பைங்கிளி கவரும்

உயர்வரை நாடநீ நயந்தோள் கேண்மை
அன்னை அறிகுவள் ஆயின் பனிகலந்து
என்னு குவகொல் தானே எந்தை
ஓங்குவரைச் சாரல் தீஞ்சுனை யாடி
ஆயமொடு குற்ற குவளை
மாயிதழ் மாமலர் புரைஇய கண்ணே.

(நற். 317.)

மதுரைப் பெருங்கொல்லனுர்:— இவருக்கு இப் பெயர் தொழிலால் அமைந்தது. இரவுக்குறி நிகழ்ந்த பின்னரும் தலைவற்குப் பகற்குறி நிகழுமென்பது இவர் வாக்கால் தெரிகிறது. பழைய கருத்து இரவுக்குறியையே யன்றிப் பகற்குறியையும் தலை மகள் மறுத்துக் கூறுவதாக அமைந்துள்ளது. குறுந் தொகையில் ஒரு செய்யுள் (141) இவர் பாடியதாக உள்ளது.

வளைவாய்ச் சிறுகிளி விளைதினைக் கடீஇயர்
செல்கென் ருேளே அன்னை யெனநீ
சொல்லின் எவனே தோழி கொல்லை
நெடுங்கை வன்மான் கடும்பகை யுழந்த
குறுங்கை இரும்புலிக் கோள்வல் ஏற்றை
பைங்கட் செந்நாய் படுபதம் பார்க்கும்
ஆரிருள் நடுநாள் வருதி
சாரல்நாட வாரலோ வெனவே.

(குறுந். 141.)

கடீஇயர்-கடியும்பொருட்டு. குறிஞ்சிநிலமகளிர் தினைப் புனம் காத்தலும், அப்புனத்தில் படியும் கிளி முதலியவற்றைத் தட்டை, கவண் முதலியவற்ருல் கடிதலும் இயல்பு. குறுங்கை: கையென்றது முன் கால்களை.

மதுரைப் பேராலவாயார்:— சொக்கநாதக் கடவுள் ஒரு புலவராக வந்து சங்கப் புலவருடைய வழக்கை விடுவித்தபொழுது முதலில் அவர் பெயராக அமைந் திருந்த இப்பெயர் (திருவால. 15 : 13-9), பின்பு

அவர்களுள் ஒருவராகிய இவருக்கு இடப்பட்டு வழங்கலாயிற்று; ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் காலத்தினர் இவர். அவன் இறந்த பின்பு தானும் இறத்தற்குத் தீயிற் பாயும் அவன் மனைவியின் நிலைமையைப் பார்த்து இவர் கூறிய பாடல் (புறநா. 247) யாருடைய மனத்தையும் நெகிழ் விக்கும். புறநானூற்றில் இவர் இயற்றிய பாடல் கள் 2; 247, 262. இன்னும் இவர் செய்த பாடல்கள் ஏனைத் தொகைகளிலும் உண்டு; அகநா. நற்.

யானை தந்த முளிமர விறகிற்
கானவர் பொத்திய ஞெலிதீ விளக்கத்து
மடமான் பெருநிரை வைகுதுயில் எழுப்பி
மந்தி சீக்கும் அணங்குடை முன்றிலின்
நீர்வார் கூந்த லிரும்புறந் தாழப்
பேரஞர்க் கண்ணள் பெருங்காடு நோக்கித்
தெருமரும் அம்ம தானேதன் கொழுநன்
முழவுகண் துயிலாக் கடியுடை வியனகர்ச்
சிறுநனி தமிய ளாயினும்
இன்னுயிர் நடுங்குந்தன் இளமைபுறங் கொடுத்தே
(புறம். 247.)

## மதுரை மருதங்கிழார் மகனார் இளம்போத்தனார்;-

மருதங்கிழாரின் மக்கள் இளம்போத்தனார், பெருங் கண்ணனார், சோகுத்தனார், என்பவர்களின் பாடல்கள் தொகைநூல்களில் வந்துள்ளன. அவர்களுள் இளம் போத்தன் என்பவர் மூவரில் இளையவர் போலும். குறுந்தொகையில் மட்டும் இவர் பாடல் உள்ளது. வாடைக்காலத்தே சில் பெயல் இருக்குமென்றும் அக்காலத்தின் கடைநாளில் காம நோயை நீந்துதற்கரி தென்றும் இவர் புலப்படுத்தி யுள்ளார்.

வந்த வாடைச் சில்பெயற் கடைநாள்
நோய்நீந் தரும்படர் தீரநீ நயந்து
கூறின் எவனோ தோழி நாறுயிர்
மடப்பிடி தழீஇத் தடக்கை யானை
குன்றச் சிறுகுடி இழிதரும்
மன்றம் நண்ணிய மலைகிழ வோற்கே. (குறுந். 332.)

நாறு உயிர்-தோன்றுகின்ற உயிர்ப்பு.

மதுரை மருதங்கிழார் மகனார் பெருங்கண்ணனார்:– இவர் வேளாளர். இளம்போத்தனார், சொகுத்தனார் என்பவர்களின் சகோதரர். தலைமகன் தேரோடு வேற்றுநாட்டுக்குச்சென்று பொருள் ஈட்டி வந்து முன்றிலிலே குவித்து எம்மனைக்கண் சுற்றத்தாரொடு மகிழ்ந்து என்னை மணந்து எனது நலனை நுகர்ந்து மகிழ்வானாக என்பது உள்ளுறை. இவர் நெய்தல், குறிஞ்சி, முல்லைத்திணைகளைச் சிறப்பித்துள்ளமை போற்றத்தக்கது. இவர் பாடியனவாக நற்றிணையில் ஒரு பாடலும், அகத்தில் இரண்டு பாடல்களும் உள்ளன.

அம்ம வாழி தோழி நன்னுதற்
கியாங்கா கின்றுகொல் பசப்பே நோன்புரிக்
கயிறுகடை யாத்த கடுநடை யெறியுளித்
திண்டிமிற் பரதவர் ஒண்சுடர்க் கொளிஇ
நடுநாள் வேட்டம் போகி வைகறைக்
கடல்மீன் தந்து கானற் குவைஇ
ஓங்கிரும் புன்னை வரிநிழல் இருந்து
தேங்கமழ் தேறல் கிளையொடு மாந்திப்
பெரிய மகிழுந் துறைவனெஞ்
சிறிய நெஞ்சத் தகல்வறி யானே.

(நற். 388.)

மதுரை மருதனிளநாகனார்:– மருதக்கலியைப் பாடிய மருதனிளநாகனார் வேறு; இவர் வேறு. ஒரு பாண்டியனுடைய வெற்றியை இவர் குறிப்பிடுகிறார்: நற். 39; அகநா. 312. இவராற் கூறப்படும் உபகாரிகள் பாட்டன், கோசர், வாணன், மாவண் கழுவுள் (அகநா. 90, 220, 269, 365) என்பவராவர். பரங்குன்றம் செல்லூர், ஊணூர், முனைப்பாக்கம், காமூர், (அகநா. 59, 90, 220, 245, 365) முதலியவை இவராற் குறிக்கப்படுகின்றன. ''ஏதிலாளன் கவலை கவற்ற ஒரு முலையறுத்த'' ஒரு பெண்ணின் செய்தி (நற். 216) இவராற் கூறப்படுகிறது. தொழுநை

யாற்றங்கரையில் மாயவன் கோவியர் புடைவைகளை ஒளித்து வைத்தமையையும் (அகநா. 59) பரசுராமர் யாகம் செய்தமையையும் (அகநா. 220) இவர் கூறியுள்ளார். உண்மைக்குச் சூரியனை உவமங் கூறி, ''முந்நீர் மீமிசைப் பலர் தொழத் தோன்றி, ஏமுற விளங்கிய சுடரினும் வாய்மை சான்ற நின் சொல்'' (நற். 283) என்கிருர். ''அந்துவன்பாடிய சந்துகெழு நெடுவரை'' என்று நல்லந்துவனுர் என்ற புலவர் பரிபாடற் செய்யுளியற்றியதைச் சிறப்பித் துள்ளார்; அகநா. 59. பரத்தைமையை விரும்பிய ஒரு தலைமகனைப் பல மலர்களை நாடிச் செல்லும் வண்டிற்கு உவமையாக்கி, ''நெடுநீர்ப் பொய்கை நடுநாளெய்தித், தண்கமழ் புதுமல ரூதும், வண்டென மொழிப மகனென் ணுரே'' (நற். 290) என்கிருர். கரந்தை வீரர்களது ''பெயரும் பீடும் எழுதி யதர் தொறும், பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்'' (அகநா. 131) இவராற் சிறப்பிக்கப்பட்டுள்ளது. நடுகல்லைப் பற்றிய வேறு செய்திகள் இவரியற்றிய அகநா. 297, 343, 365, 387-ஆம் செய்யுட்களிலும் காணப் படுகின்றன. ஒரு மனைவிக்குச் சிறப்பு அவளது சிறந்த கற்பினுலும் நற்புதல்வரைப் பெறுதலினுலுமே என்பது, ''கடவுட் கற்பொடு குடிவிளக் காகிய, புதல் வர்ப் பயந்த புகழ்மிகு சிறப்பின், நன்னராட்டி'' (அகநா. 184) என்று இவர் கூறியிருப்பதனுற் றெரி கிறது. கொங்கு நாட்டில் மக்கள் இடையில் மணிகளைக் கூட்டிக் கொண்டு தெருக்களில் ஆடும் உள்ளிவிழா என்பதொன்று (அகநா. 368) இவராற் குறிக்கப்படுகிறது. இவருடைய பாடல்கள் பொருள் நயம் வாய்ந்து விளங்குகின்றன. இறையனுரகப் பொருளுக்கு இவரும் உரைசெய்தனரென்பது அந்நூல் வரலாற்ருற் றெரிகிறது. நிலங்களைப் பற்றிய கற் பனைகளும், உள்ளுறைகளும், வெளிப்படையுவமங் களும், படிப்போர் மனத்தைக் கவர்வன. நிலங் களின் இயல்புகளை நன்கறிந்து பாடியவர். இவர்

பாடிய செய்யுட்கள்: 37. (நற். 10; குறுந். 4; அகநா. 21; புறநா. 2).

அம்ம வாழி தோழி யாவதும்
தவறெனிற் றவரோ விலவே வெஞ்சுரத்
துலந்த வம்பலர் உவலிடு பதுக்கை
நெடுநல் யானைக் கிடுநிழல் ஆகும்
அரிய கானஞ் சென்றோர்க்
கெளிய வாகிய தடமென் றோளே.

(குறுந். 77.)

பாலைநிலத்தில் செல்வாரை அந்நிலத்துள்ள ஆறலை கள்வர் கொன்று அவருடலைத் தழைக்குவியலால் மூடிவிடுதல் வழக்கம்; கற்குவியலால் மூடுதலும் உண்டு. வம்பலர்-வழிப்போவார். உவல்-தழை. பதுக்கை-குவியல். அரியகானம்-இயல்பாக உள்ள வெம்மையினாலும் ஆறலைகள்வரால் உண்டாகும் ஏதத்தினாலும் செல்லுதற்கரிய பாலைநிலம்.

<u>மதுரையளக்கர்ஞாழலார்மகனார்மள்ளனார்:—</u>

அளக்கர் ஞாழல் என்பது ஓரூர். மள்ளர் என்பது வீரரைக் குறிக்கும் சொல். பாண்டிய அரசரால் முதலில் இவர் பாதுகாக்கப் பெற்றவர். சுக்கிரன் வானத்தில் தென்பாற் காணப்படின் மழைகுறையு மென்று இவர் அறிந்திருந்தனர். (புறநா. 388; 1-2, 15-6). இவராற் பாடப்பட்டோன் சிறுகுடி கிழான் பண்ணன் என்பவன். இவர் சேனைத் தலைவர் என்பதற்கியையத் தம்பாடல்கள் சில வற்றிற் போர்க்களத்திற் பெறும் வெற்றியைச் செல்வம் என்று குறித்திருக்கிறார். (அகநா. 144, 174); வினைமுடித்து மீளும் தலைமகன் பாகனொடு கூறும் கூற்றே இவர் கவிகளில் மிகுதியாகக் காணப் படுகிறது. புலியின் உபத்திரவத்திலிருந்து பிடியைக் களிறு காப்பது இவராற் கூறப்பட்டுள்ளது; குறுந். 188 ஆம் செய்யுளும் இவர் பாடியதே. இவர் பாடிய

பாடல்கள் 12 (நற். 2; அகநா. 7; புறநா.1; குறுந். 2.)

முகைமுற் றினவே முல்லை முல்லையொடு
தகைமுற் றினவே தண்கார் வியன்புனம்
வாலிழை நெகிழ்த்தோர் வாரார்
மாலை வந்தன்றென் மாணலங் குறித்தே.

(குறுந். 188.[)

தகை-தகுதி; முல்லைத்திணை என்னும் தகுதியை முல்லை மலர்களால் பெற்றது என்றலுமாம்.

மதுரையறுவை வாணிகன் இளவேட்டனார்:— இவர் ஆடை விற்கும் வணிகர்; அறுவை-ஆடை. கீழ் காற்றால் வீழ்த்தப்பட்ட காந்தள்மலர் பாறையின் மேல் கவிந்து கிடப்பது பாம்பு படம் ஒடுங்கிக் கிடப்பது போலும் (குறுந். 185) என்றும் செவிலியர் பாராட்டப் பொலஞ்செய் கிண்கிணி நலம்பெறு சேவடி மணல்மலி முற்றத்து நிலம் வடுக்கொளாமல் விளையாடு ஆயத்துச் சிறுரைத் தலைவி காணுந்தோறும் தன்னை நினைத்து வருந்துவள் என்று வினைமுற்றிய தலைவன் தேர்ப்பாகனுக்குக் கூறுவதாக (அகநா. 254) இவர் பாடியுள்ளார். மேலும் தலைவன் தன் மின்னொளிர் எஃகமே செல்நெறி விளக்க நள்ளிரவில் வருவான் என்றும் அகநா. (272) தினைப்பயிர் கரும்பு போலக் கவினித் தோன்றும் (அகநா. 302) என்றும் பாராட்டியுள்ளார். வேட்டனார் என்ற பெயர்க் காரணம் புலப்படவில்லை. இவர் செய்தனவாக நற்றிணையில் 1-ம், குறுந்தொகையில் 1-ம், அகநானூற்றில் 6-ம், புறநானூற்றிம் ஒன்றும், திருவள்ளுவமாலையில் ஒன்றுமாக 10 செய்யுட்கள் காணப்படுகின்றன.

நுதல்பசப் பிவர்ந்து திதலை வாடி
நெடுமென் பணைத்தோள் சாஅய்த் தொடிநெகிழ்ந்து
இன்ன ளாகுதல் நும்மின் ஆகுமெனச்
சொல்லின் எவனுந் தோழி பல்வரிப்

பாம்புபை யவிந்தது போலக் கூம்பிக்
கொண்டலிற் றொலைந்த வொண்செங் காந்தள்
கன்மிசைக் கவியும் நாடற்கென்
நன்மா மேனி யழிபடர் நிலையே.

(குறுந். 185.)

<u>மதுரை யாசிரியர் கோடங் கொற்றனார்</u>:— ஆசிரியர் என்றதனால் இவர் கணக்காயர் போலும். மகட் போக்கிய செவிலித்தாயின் கூற்றாக இவர் பாடியதான குறுந்தொகைச்செய்யுள் (144) நயமுள்ளதாகும்.

கழிய காவி குற்றுங் கடல
வெண்டலைப் புணரி யாடியும் நன்றே
பிரிவில் ஆய முரியதொன் றயர
இவ்வழிப் படுதலும் ஒல்லாள் அவ்வழிப்
பரல்பாழ் படுப்பச் சென்றனள் மாதோ
சென்மழை தவழுஞ் சென்னி
விண்ணுயர் பிறங்கல் விலங்குமலை நாட்டே.

(குறுந். 144.)

செல்மழை-இடியையுடைய மேகம் எனலும் ஒன்று. பிறங்கல்-விளக்கம்: வழியுயர்ச்சியுமாம். பாய் பரற் படுப்ப என்ற பாடத்திற்கு ஊழ்வினை தன்னைப்பாலை நிலத்துப்பருக்கைக் கற்களினிடையே செல்லும்படி செய்ய வென்று பொருள் காண்க.

<u>மதுரையிளம்பாலாசிரியர் சேந்தன் கூத்தனார்</u>:-இவரது ஊர் இளம்பால் எனக் கூறுவர். சேந்தன் கூத்தனார்: *சேந்தனாகிய கூத்தனார் என்பது இத்தொடரின் பொருள். தம் ஊரினின்று மதுரைக்குச் சென்று ஆசிரியராக இருந்தனர் போலும். கூத்தினை அறிந்த காரணத்தால் அதன்வகை ஒன்றினுக்கு இவர்

*சேந்தனது கூத்து (சேந்தன்கூத்து) அறிந்தமையின் சேந்தன் கூத்தனார் என வழங்கப் பட்டனரென்றும் இப் பெயருக்குப் பொருள் காணலாம்.

ஆசிரியராகத் திகழ்ந்தனர் என்றும் கருதுவர். அகநானூற்றில் இரண்டும் (102, 348) நற்றிணையில் ஒன்று (273) மாக இவர் குறிஞ்சித்திணையைக் குறித்தே மூன்று பாடல்கள் பாடியுள்ளனர்.

(பி-ம்) மதுரைப்பாலாசிரியன் சேனங்கூத்தன்.

இஃதெவன் கொல்லோ தோழி மெய்பரந்து
எவ்வங் கூர்ந்த ஏமுறு துயரம்
வெம்மையிற் றான்வருத் துறீஇ நம்வயின்
அறியா தயர்ந்த அன்னைக்கு வெறியென
வேல னுரைக்கு மென்ப ஆகலின்
வண்ண மிகுத்த அண்ணல் யானை
நீர்கொள் நெடுஞ்சுனை யமைந்துவார்ந் துறைந்தென்
கண்போல் நீலந் தண்கமழ் சிறக்குங்
குன்ற நாடனை யுள்ளுதொறும்
நெஞ்சுநடுக் குறூஉமவன் பண்புதரு படரே.

(நற். 273.)

யானை தலைவனாகவும், சுனை நமது குடியாகவும் நீர் தலைவியாகவும் அவ்யானை உண்ணுதல் தலைவன் தலைவியை மணந்து நலன் நுகர்தலாகவும் நீல மலர்தல் இருமுதுகுரவரும் மகிழ்வதாகவும் கொள்க.

<u>மதுரையீழத்துப்பூதன்றேவனார்:-</u> ஈழநாட்டிலிருந்து வந்து மதுரையில் தங்கியவர் இவர். பூதன் என்பது இவருடைய தந்தையின் பெயர். தந்தத்தினாற் செய்த தேரின் நேமி போகும்போது மண்ணிற் புதைந்த பகுதி போக எஞ்சிய பகுதியே வெளியில் தெரியுமாதலால் அப்பகுதிக்குப் பிறையையும், பயிரைத் துமிக்கும் நேமிக்கு விண்வீழ் கொள்ளியையும் (குறுந். 189) உவமை கூறியுள்ளார். தூக்கணங்குருவிக் கூடுகள் தொங்கும் மூங்கில்களை வாடைக்காற்று அலைத்தலை (நற். 366) யும் காட்டுப் பன்றி தினையை உண்பதற்குப் பகுவாய்ப் பல்லியின் பாடோர்த்துக் குறுகுதலையும் (அகநா. 88) இவர்

வாக்கில் காணலாகும். சுரத்தில் 'பெருங்கை எண்கினம் ஈசலைத் தேடும் புற்றுக்களையுடைய சுவர்களோடு கூடிய புதல்கள் இவர்ந்த அழிந்துபட்ட பொதியிலில் கடவுள் நீங்கிய வலிய தூணினிடம் சேவற்புறு உடனுறை பழமையிற் றுறத்தல் செல்லாது பெடையுடன் வசிக்கும் என்று (அகநா. 307) இவர் கூறுவதும் பிறவும் இவருடைய கவிநயம் ஆராய்ச்சி முதலியவற்றைப் புலப்படுத்துகின்றன. 360 ஆம் செய்யுளையும் சேர்த்து இவர் பாடியன வாகக் குறுந்தொகையில் இரண்டு செய்யுட்கள் உள்ளன. இவர் பாடிய வேறு செய்யுட்கள் 4 (நற்.1; அகநா. 3)

இன்றே சென்று வருவது நாளைக்
குன்றிழி யருவியின் வெண்தேர் முடுக
இளம்பிறை யன்ன விளங்குசுடர் நேமி
விசும்புவீழ் கொள்ளியிற் பைம்பயிர் துமிப்பக்
காலியற் செலவின் மாலை எய்திச்
சின்னிரை வால்வளைக் குறுமகள்
பன்மாண் ஆகம் மணந்துவக் குவமே.

(குறுந். 189.)

வருவது-வருவேமாக; வியங்கோட்பொருளில் வந்தது. சின்னிரைவளையென்றஅடைதலைவி பெதும்பைப் பருவங் கடந்த மங்கைப்பருவத்தினள் என்பதைக் குறித்தது. வால்வளை-சங்கினால் செய்தவளை. பன்மாண்ஆகம்-காட்சியினிமை, ஊற்றினிமை நன்மணம் முதலிய பல மாட்சிமைப்பட்ட உடம்பு.

மதுரை யெழுத்தாளன் சேந்தம்பூதனார்:- சேந்தன் என்பவர் இவருடைய தந்தையார். அரசரிடும் கட்டளைகளை எழுதும் தொழிலையுடையவர் இவர். அகநா. 207-இல் மகட்போக்கிய தாயின் கூற்றாக இவர் கூறும் செய்திகள் சிறந்த நயமுடையனவாக அமைந்துள்ளன. குறுந். 90-இல் இவர் காட்டும்

உள்ளுறையுவமை இனிமை பயப்பதொன்றும். இவர் அகத்தில் இரண்டும், குறுந்தொகையில் இரண்டு பாடல்களும் பாடியுள்ளார்.

எற்றே வாழி தோழி முற்றுபு
கறிவளர் அடுக்கத் திரவின் முழங்கிய
மங்குல் மாமழை வீழ்ந்தெனப் பொங்குமயிர்க்
கலைதொட இழுக்கிய பூநாறு பலவுக்கனி
வரையிழி யருவி யுண்டுறைத் தரூஉம்
குன்ற நாடன் கேண்மை
மென்தோள் சாய்த்துஞ் சால்பீன் றன்றே.

(குறுந். 90.)

எற்று-எத்தகையது. என்ன வியப்பைத் தருவது என்பது நினைவு: மெலிவைத் தருவதற்கும, அமைதியைத்தருவதற்கும் ஒருங்கே காரணமாயிருப்பது விருப்பாதலின் 'எற்றே' என்றாள். அடுக்கம்-பக்கமலை. உண்துறை-ஊரினர் நீர் உண்ணுகின்ற துறை. மலையுச்சியிலே கலையால் விரும்பப்பட்ட பழத்தை அதன் கைப்படாதபடி அருவியானது பலரும் அறியத்தான் பயன்படும் துறையின்கண் சேர்த்து அப்பழத்தையும் பயன்படவைத்ததுபோல, பிறரால் வரைந்து கோடற்கு உரிய நிலையிலுள்ள தலைவியை அவர் பெறுமற்செய்து தான் மணந்து தான் பிறர்க்குதவி செய்து வாழும் தனது இல்லத்தின்கண் அவளையும் விருந்தோம்பல் முதலிய அறம்புரியச் செய்வித்தற்குரியன் என்பது குறிப்பு. சேந்தம்பூதனார் என்ற புலவரும் இவரும் ஒருவரே என்று தெரிகிறது.

மதுரை வேளாசான்:- வேள்-யாகஞ்செய்யுந் தொழிலின் பெயராகிய வேட்டலென்பதன் முதனிலை; ஆசான்-ஆசிரியன். ஒரு வேந்தனிடமிருந்து மற்றொரு வேந்தன்பால் அந்தணன் தூது செல்லுதற்குரியனென்பது இவர் பாடியதான புறநானூற்றுப் பாடலால் தெரிய வருகின்றது.

வயலைக் கொடியின் வாடிய மருங்குல்
உயவல் ஊர்திப் பயலைப் பார்ப்பான்
எல்லி வந்து நில்லாது புக்குச்
சொல்லிய சொல்லோ சிலவே அதற்கே
ஏணியுஞ் சீப்பும் மாற்றி
மாண்வினை யானையும் மணிகளைந் தனவே.

(புறம். 305.)

வயலைக்கொடி-பசலைக்கொடி. மருங்குல்-இடை. எல்லி-இரவு. நில்லாது புக்கு-வாயில் காவலனால் சொல்லி விடாதே அரசனிடம்போய். மாண்வினை யானை-மாட்சிமைப்பட்ட தொழிலையுடைய யானை; மாட்சிமையாவது, போரிலே எதிர்த்தாலன்றி மற்ற இடத்து ஒருயிரையும் துன்புறுத்தாமை.

மதுரை வேளாதத்தர்:- இவருடைய இயற்பெயர் தத்தன் என்பது. மதியத்தின் உதயம் கடலினிடத்தே நீளத்தோன்றுமாறுபோல்கரிய மலையினிடத்தே அருவி தோன்றுமென்றும் தலைவன் சூரியனுக்கு ஒப்பாக அச்சூரியனுடன் திரிதரு நெருஞ்சி மலரைப் போன்றவள் தலைவியென்றும் இவர்தாம் பாடியதான குறுந்தொகைச் செய்யுளில் நான்கு அடிகளில் சுருங்கக் கூறி விளங்க வைத்த இவர் புலமைத்திறன் பாராட்டற் பாலது.

எழுதரு மதியங் கடற்கண் டாஅங்கு
ஒழுகுவெள் ளருவி ஓங்குமலை நாடன்
ஞாயி றனையன் தோழி
நெருஞ்சி யனையவென் பெரும்பணைத் தோளே.

(குறுந். 315.)

நெருஞ்சிமலர் ஞாயிற்றையே நோக்கி நிற்கும் இயல்பினது. ஞாயிறு கீழ்த்திசையிருப்பின் கிழக்கு நோக்கியும் மேற்றிசைச் செல்லின் மேற்கு நோக்கியும், உச்சிவானத்திலிருப்பின் உச்சியை நோக்கியும் நிற்பது. ஞாயிற்றை நோக்கிய நெருஞ்சிபோலத் தலைவனை என்தோள் நோக்கி நிற்கும் என்றாள்.

மருங்கூர்கிழார் பெருங்கண்ணனூர்:- மருங்கூர் என்பது பாண்டி நாட்டுத் திருவாடானைத் தாலுக்காவில் உள்ள ஊர். இவர் நெய்தல் திணையைச் சிறப்பித்துப்பாடியுள்ளார். அழும்பன் என்பவனுடைய மருங்கூர்ப் பட்டினத்தைச் சார்ந்தவராக இருக்கலாம் என்று சிலர் நினைக்கின்றனர். இவரது பாடல் அகநானூற்றில் ஒன்று உள்ளது.

கொடுந்தாள் முதலையொடு கோட்டுமீன் வழங்கும்
இருங்கழி இட்டுச்சுரம் நீந்தி யிரவின்
வந்தோய் மன்ற தண்கடற் சேர்ப்ப
நினக்கெவன் அரியமோ யாமே யெந்தை
புணர்திரைப் பரப்பகம் துழைஇத் தந்த
பன்மீன் உணங்கற் படுபுள் ஓப்புதும்
முண்டகம் கலித்த முதுநீர் அடைகரை
ஒண்பன் மலரக் கவட்டிலை அடும்பின்
செங்கேழ் மென்கொடி ஆழி அறுப்ப
இனமணிப் புரவி நெடுந்தேர் கடைஇ
மின்னிலைப் பொலிந்த விளங்கிணர் அவிழ்பொன்
தண்ணறும் பைந்தா துறைக்கும்
புன்னையங் கானற் பகல்வந் தீமே.

(அகம். 80.)

மருங்கூர்ப் பட்டினத்துச் சேந்தன் குமரனூர்:- பாண்டிய நாட்டில் திருவாடானைத் தாலுக்காவில் மருங்கூர் என ஓரூர் உள்ளது. அவ்வூரைச் சேர்ந்தவராக இருக்கலாம் என்று தெரிகிறது. நாகப்பட்டினம் தாலுக்காவில் உள்ளதாக ஐயரவர்கள் குறித்துள்ளார்கள். இவர் சேந்தன் என்பவருடைய மகனூர். இவர் பாடிய பாடலொன்று நற்றிணையில் உள்ளது, தலைவனது வாய்மைச் சிறப்பு நிலம்புடை பெயரினும் பெயராது நிலைபெற்ற தகைமையது என்று தலைவி தோழிக்குக் கூறுவதாக இவர் பாடியுள்ளமை கருதத்தக்கது.

அம்ம வாழி தோழி காதலர்
நிலம்புடை பெயர்வ தாயினுங் கூறிய

சொற்புடை பெயர்தலோ இலரே வானம்
நளிகடல் முகந்து செறிதக இருளிக்
கனைபெயல் பொழிந்து கடுங்குரல் பயிற்றிக்
கார்செய் தென்னுழை யதுவே யாயிடைக்
கொல்லைக் கோவலர் எல்லி மாட்டிய
பெருமர வேரடிப் போல
அருளிலே னம்ம அளியேன் யானே.

(நற். 289.)

<u>மருங்கூர்ப்பாகைச்சாத்தன்பூதனார்</u>:- மருங்கூர்ப் பாகை என்பது ஓரூர். இவர் இயற்பெயர் பூதனார். இவரது பாடலொன்று அகநானூற்றில் உள்ளது; பாலைத்திணையைப் பற்றியது. சுரத்தின் வழிச் செல்வோரை அம்பினால் கொல்லும் வேடர் தம் அம்பு சிதைந்தமைக்கு வருந்துவரேயல்லது அம்பால் இறந்தவர்க்கு இரங்கமாட்டார் என வேடரின் தன்மையைக் கூறுகிறார்.

இன்பமும் இடும்பையும் புணர்வும் பிரிவும்
நன்பகல் அமையமும் இரவும் போல
வேறுவேறு இயல வாகி மாறெதிர்ந்து
உளவென உணர்ந்தனை யாயி னொரூஉம்
இன்னா வெஞ்சுரம் நன்னசை துரப்பத்
துன்னலுந் தகுமோ துணிவில் நெஞ்சே
நீசெல வலித்தனை யாயின் யாவது
நினைதலுஞ் செய்தியோ எம்மே கனைகதிர்
ஆவி அவ்வரி நீரென நசைஇ
மாதவப் பரிக்கும் மரறிரங்கு நனந்தலைக்
களர்கால் யாத்த கண்ணகன் பரப்பிற்
செவ்வரைக் கொழிநீர் கடுப்ப அரவின்
அவ்வரி உரிவை அணவரும் மருங்கிற்
புற்றரை யாத்த புலர்சினை மரத்த
மைந்நிற உருவின் மணிக்கட் காக்கை
பைந்நிணங் கவரும் படுபிணக் கவலைச்
சென்றோர் செல்புறத் திரங்கார் கொன்றோர்
கோல்கழிபு இரங்கும் அதர
வேய்பயில் அழுவம் இறந்த பின்னே.

(அகம். 327.)

மருதம்பாடிய இளங்கடுங்கோ:- இவர் சேரர் மரபினர். பாலைபாடிய பெருங்கடுங்கோவின் தம்பியாக இருக்கலாம் என்று ஊகிக்கப்படுகின்றார். இவர் மருதத் திணையைச் சிறப்பித்துப் பாடியுள்ளமையால் இவ் வடைமொழி பெற்றார்போலும். இவர் பாடியனவாக நற்றிணையில் ஒரு பாடலும், அகநானூற்றில் இரண்டு பாடல்களும் உள்ளன. பருவூர்ப் போர்க் களத்தில் சோழர்கள் சேரரையும், பாண்டியரையும் வெற்றி கொண்டனர் என இவர் இயற்றிய அக நானூற்றிலுள்ள 96-ஆவது செய்யுளின் மூலமாக அறியலாம்.

அறியா மையி னன்னை அஞ்சிக்
குழையன் கோதையன் குறும்பைந் தொடியன்
விழவயர் துணங்கை தழூஉகஞ் செல்ல
நெடுநிமிர் தெருவிற் கைபுகு கொடுமிடை
நொதும லாளன் கதுமெனத் தாக்கலிற்
கேட்போர் உளர்கொல் இல்லைகொல் போற்றெனை
யாணது பசலை யென்றன னதனெதிர்
நாணிலை யெலுவ வென்றுவந் திசினே
செறுநரும் விழையும் செம்ம லோனென
நறுநுதல் அரிவை போற்றேன்
சிறுமை பெருமையிற் காணது துணிந்தே.

(நற். 50.)

மலையனார்:- இவர் தமது பாடலில் மலைவளத்தைச் சிறப்பித்துக் கூறியுள்ளமையால் இப்பெயர் பெற்றார் போலும். இயற்பெயர் தெரியவில்லை, இவர் பாடிய பாடலொன்று நற்றிணையில் உள்ளது; குறிஞ்சித் திணைப்பாடலாகிய இதில் வரும் இறைச்சிப்பொருள் போற்றத்தக்கது.

பிரசந் தூங்கப் பெரும்பழந் துணர
வரைவெள் ளருவி மாலையின் இழிதரக்
கூல மெல்லாம் புலம்புக நாளும்
மல்லற் றம்மஇம் மலைகெழு வெற்பெனப்

பிரிந்தோர் இரங்கும் பெருங்கல் நாட
செல்கம் எழுமோ சிறக்கநின் ஊழி
மருங்கு மறைத்த திருந்திழைப் பணைத்தோள்
நல்கூர் நுசுப்பின் மெல்லியல் குறுமகள்
பூண்டா ழாக நாணட வருந்திய
பழங்கண் மாமையும் உடைய தழங்குகுரல்
மயிர்க்கண் முரசி னேருமு
னுயிர்க்குறி யெதிர்ப்பை பெறலருங் குரைத்தே.

(நற். 93.)

நினது வளம் மிக்க மலையினைப் பிரிந்தோர் வருந்து வதுபோன்று, தலைவியும் நின்னை மணக்கப் பெறாது பிரிந்து வருந்துகின்றனள்; ஆதலின் அவளை வரைந்து கொள்க என்னும் குறிப்புத் தோன்ற, தோழி தலைவனிடம் கூறுகிறாள்.

கூலம் 16:- நெல், புல், வரகு, சாமை, தினை, இறுங்கு, தோரை, இராகி, எள்ளு, கொள்ளு, பயறு, உளுந்து, அவரை, துவரை, கடலை, மொச்சை, சோளத்தையும் கம்பையும் சேர்த்துப் பதினெட்டு என்பாரும் உளர். ''பதினெண் கூலமும் உழவர்க்கு மிகுக'' என்றார் பிறரும்.

<u>மள்ளனார்:-</u> சில அடைமொழிகளைப் பெற்றுள்ள மள்ளனார் என்னும் இருவர் குறுந்தொகைச் செய்யுட் களை இயற்றியவராக உளர். இவர் அவர்களினும் வேறாக இருக்கலாமென்று தோற்றுகிறது. தலைவி யின் பூவொத் தலமருங்கண் ஏவொத்து நோய் செய்தனவென்று தலைவன் பாங்கற்குக் கூறியதாக இவர் செய்த இவ்வொரு பாடலே குறுந்தொகையில் இப்பொழுது கிடைத்துள்ளது.

பூவொத் தலமருந் தகைய ஏவொத்து
எல்லாரும் அறிய நோய்செய் தனவே
தேமொழித் திரண்ட மென்தோள் மாமலைப்
பரீஇ வித்திய ஏனற்
குரீஇ ஓப்புவாள் பெருமழைக் கண்ணே.

(குறுந். 72.)

<u>மாங்குடி மருதனார்:-</u> இவர் மதுரைக்காஞ்சியை இயற்றியவர். மாங்குடிகிழாரென்னும் நல்லிசைப் புலவரொருவர் இயற்றிய செய்யுட்கள் கருத்திலும் சொல்லமைதியிலும் இவருடையனவற்றை ஒத்து இருப்பதால் அவரும் இவரும் ஒருவரெனக் கருதப்படுகிறார். கிழாரென்னும் மரபுப் பெயரால் இவர் வேளாண் மரபினரென்பது பெறப்படும். இவர் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனது அவைக்களத்து நல்லிசைப் புலவர்களின் தலைவராக வீற்றிருந்தவர். அவனுக்குப் பல்வேறு நிலையாமையை அறிவுறுத்தி இவர் பாடிய மதுரைக்காஞ்சியின் பெருஞ்சிறப்பை அறிந்த யாவரும் இவரைக் காஞ்சிப்புலவன், மதுரைக் காஞ்சிப் புலவன் என்னும் பெயர்களால் வழங்கி வந்தனரென்று தெரிகிறது. பாண்டியன் நெடுஞ் செழியனுக்கு இவர்பாலுள்ள நன்மதிப்பு, ''ஓங்கிய சிறப்பி னுயர்ந்த கேள்வி, மாங்குடி மருதன் றலைவனாக, உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற், புலவர் பாடாது வரைகவென் னிலவரை, (புறநா. 72) என்று அவன் கூறிய வஞ்சினத்தால் விளங்கும். ''மழுவா ணெடியோன் றலைவனாக பெரியோர்'' என்று கூறுவதால் இவர் சிவபெருமான் பாற் சிறந்த அன்புடையாரென்பது அறியப்படும்; ''தென்னவற் பெயரிய துன்னருந் துப்பிற், றொன் முது கடவுள்'' (மதுரைக்காஞ்சி. 40) என்பதன் உரையில் ''கூற்றுவனை யுதைத்த கடவுளென்று இறைவனாக்கி'' என்று மறுக்கும் வாயிலால் நச்சினார்க்கினியர் வெளியிடும்பொருள் இக்கருத்துக்குத் துணையாக அமைகின்றது. வாட்டாற்று எழினியாதனென்பானை இவர் பாடியுள்ளார். இவர் பாடியனவாக இப்பொழுது கிடைக்கும் செய்யுட்கள் 14; மதுரைக்1, நற். 2, குறுந். 3, அகநா. 1, புறநா. 6, திருவள்ளுவ. 1 இவற்றுள் நற்றிணை 123-ஆம் செய்யுள் காஞ்சிப்புலவனென்னும் பெயரோடும், குறுந்தொகை 173-ஆம்

செய்யுளும், அகநானூறு 89-ஆம் செய்யுளும் மதுரைக் காஞ்சிப்புலவனென்னும் பெயரோடும் வழங்கு கின்றமையின் அவை மதுரைக்காஞ்சிக்குப் பின்னர் இவரால் இயற்றப் பெற்றன வென்று தோற்றுகின்றது.

இவர் செய்யுட்களில் மதுரைக்காஞ்சியை யொழிந்த ஏனையவற்றில் வேள் எவ்வியினது மிழலைக்கூற்றமும் வேளிரது முத்தூற்றுக் கூற்றமும் குன்றூரும் கூறப்படுகின்றன.

காஞ்சித்திணையில் இவரால் இயற்றப் பெற்ற வற்றுள் மதுரைக்காஞ்சியோடு சொற்பொருளொப் புமையுடையதும் பொருண்மொழிக் காஞ்சித்துறை அமைந்ததுமாகிய ஒருசெய்யுள் புறநானூற்றில் உண்டு. மதுரைக்காஞ்சி பெரும்பாலும் வஞ்சியடி களாக இருத்தல் போலவே புற நானூற்றில் உள்ள 24, 26, 396-ஆம் செய்யுட்களும் இருக்கின்றன.

போர்க்களத்தில் தலைகளை அடுப்பாகவும் குருதியை உலையாகவும் தோளைத் துடுப்பாகவும் கொண்டு பேய் கள் அடுதல் மதுரைக்காஞ்சியிற் கூறப்பட்டிருத்தல், ''முடித்தலை யடுப்பாகப், புனற்குருதி யுலைக்கொளீ இத் தொடித்தோட் டுடுப்பிற் றுழந்த வல்சி'', ''பொருந்தாத் தெவ்வ ரிருந்தலையடுப்பிற்...மாமறி பிண்டம் வாலுவ னேந்த'' (புறநா. 26, 372) எனக் கூறியவற்றின் விரியாக அமைந்துள்ளது. ''அரசுபட வமருழக்கி, முரசுகொண்டு களம்வேட்ட, வடு திறலுயர் புகழ்வேந்தே'' (மதுரைக். 128-30) என்ற அடிகளிலும், ''அரைசுபட வமருழக்கி, உரைசெல முரசுவெளவி... அடுகளம் வேட்ட வடுபோர்ச் செழிய'' (புறநா. 26) என்பதிலும், சொற்பொரு ளொப்புமை மிக்கு விளங்குதல் காண்க. அடு களம். வேட்டதை இங்கே பிற செய்திகளோடு கலந்து கூறியவர் தனியாக அதனைச் சிறப்பித்து

மறக்கள வேள்வித்துறைச்செய்யுளொன்று (புறநா. 372) பாடியுள்ளது அறிதற்குரியது. நெடுஞ்செழியனே வாழ்த்துவார் வளர்பிறைபோல அவன் தெவ்வராக்கம் கெடுக வென்றும் மதுரைக் காஞ்சியில் உரைத்தவர். ''நின்று நிலேஇயர்நின் னுண்மீனில் லாது, படாஅச் செலீயர்நின் பகைவர்மீனே'' (புறநா. 24) என வாழ்த்துதல் இவருடைய கருத்தொப்புமையை உணர்த்துகின்றது. வாழ்க்கைநிலேயாமையைப் புலப் படுத்த நினேத்த இவர், நற்செயலேச்செய்யாமல் வீணே வாழ்நாள் போக்கி மாண்டவர் பலரென்ப தனே மதுரைக்காஞ்சியில் கூறினர்; இவ்வாறே புறநானூற்றில் ''மலர்தலே யுலகத்துத் தோன்றிப், பலர்செலச் செல்லாது நின்றுவிளிந் தோரே'' (புறநா. 24) என்றனர். மதுரைக்காஞ்சியில் கூறிய, ''விளேந்த கழனி, வன்கை வினேஞ ரரிப்பறை'' என்பதனே ''விளேகழனி யரிப்பறை'' (புறநா. 396) எனச் சுருக்கிச் சொல்லியிருப்பதும், ''மறவர்,வாள் வலம் புணர்ந்தநின் ருள்வலம் வாழ்த்த'' என்றவர், ''வாளின் வாழ்நர் தாள்வலம் வாழ்த்த'' (புறநா. 24) என்பதும். மதுரைக் காஞ்சியின் இறுதியில், ''இலங்கிழை மகளிர் பொலங்கலத் தேந்திய, மணங் கமழ் தேறன் மடுப்ப நாளும், மகிழ்ந்தினி துறைமதி பெரும'' என வாழ்த்தியவர், ''ஒண்டொடி மகளிர் பொலங்கலத் தேந்திய தண்கமழ் தேறன் மடுப்ப மகிழ்சிறந், தாங்கினி தொழுகுமதி பெரும'' (புறநா. 24) என்பதும், கணேக்குமழை, களிற்றுக்கு நாவாய், பலர் நடுவிலுள்ள அரசனுக்கு நாண் மீனுக்கிடை யிலுள்ள சந்திரன் என்று மதுரைக் காஞ்சி யிற் கூறப்பட்ட உவமைகளேயும், கோசரையும் பிற விடங்களிலும் சொல்லியிருத்தலும் இவர் தாம் நினேத்த கருத்துக்களேயும் சொற்றொடர்களேயும் பல ''ஒண்டொடி மகளிர் பொலங்கலத் தேந்திய தண் இடங்களில் அமைத்து உறுதிப் படுத்திப் பாடும் இயல் புடையவரென்பதனேப் புலப்படுத்துகின்றன.

இவர் பாடிய அகத்திணைச் செய்யுட்களில், இல்லறம் நடத்தும் மகளொருத்தி விருந்தினரை உண்பிக்கும் பொருட்டு உணவு சமைக்கும் இயல்பும், மடன்மாவின் இலக்கணங்களும், வேடர்கள் தாம் கொள்ளையிட்டுப் பெற்ற பொருள்களைப் பாறையின் மேல் வைத்துப் பங்கிட்டுக் கொள்ளும் செயலும் நயம்படக் கூறப் பெற்றுள்ளன.

<u>மாடலூர் கிழார்:-</u> இவர் வேளாண் மரபினர். இவர் ஊர் மாடலூர். மரத்தின் உச்சியிற் பரணின் மீது குறவர் இரவில் வாசனையுள்ள மரங்களை எரித்து விளக்கஞ் செய்யும் வழக்கம் இவராற் குறுந்தொகையில் கூறப்பட்டுள்ளது.

சேணோன் மாட்டிய நறும்புகை ஞெகிழி
வான மீனின் வயின்வயின் இமைக்கும்
ஓங்குமலை நாடன் சாந்துபுலர் அகலம்
உள்ளின் உண்ணோய் மல்கும்
புல்லின் மாய்வ தெவன்கொல் அன்னாய்.

(குறுந். 150.)

சேணோன்-மலைமிசையுறையும் குறவன்.

''கலிகெழு மரமிசைச் சேணோன்'' என்ற குறிஞ்சிப் பாட்டின் அடியினால் இவன் மரத்தின்மீது இருப்பவன் என்பது விளங்கும். வேங்கை மரத்தின்மீது கட்டப்பட்ட பரணிலும், யானையாலும் எட்டமுடியாதபடி குன்றின்மீது கட்டப்பட்ட பரணிலும் இருப்பவன் ஆதலின் இவன் சேணோன் எனப்பட்டான்.

பல இடங்களிலுமுள்ள 'சேணோன்' என்ற இச் சொல்லாட்சியை நோக்கும்போது சேண் என்பது ஆகுபெயர் வகையால் பரணுக்கே உரிய பெயராக வழங்கியதென்று தோற்றுகின்றது. (ஐயரவர்கள்)

<u>மாதிரத்தனார்:-</u> மாதிரத்தர் என்பவரும் இவரும் ஒருவராக இருக்கலாம் என்று தெரிகிறது. மாதிரத்தர் என்னும் பெயர் மாதீர்த்தன் என்றும் மாதீரத்தன் என்றும் சில பிரதிகளிற் காணப்படுகிறது. பெண்கள் கூந்தலின் எண்ணெயைப்போக்கிக் கொள்ள மண்ணை அப்பித்தேய்த்துக் குளிக்கும்வழக்கம் இவராற் கூறப்பட்டிருக்கிறது;

ஊர்க்கும் அணித்தே பொய்கை பொய்கைக்குச்
சேய்த்தும் அன்றே சிறுகான் யாறே
இரைதேர் வெண்குரு கல்லது யாவதும்
துன்னல்போ கின்றால் பொழிலே யாமெம்
கூழைக் கெருமண் கொணர்கஞ் சேறும்
ஆண்டும் வருகுவள் பெரும்பே தையே.

(குறுந். 113.)

பொய்கை என்றது, ஊரினர் உண்ணுதற்கும் ஆடுதற்கும் பயன்படும் பொய்கையை. ஊர்க்கு அணித்தாயிருத்தல் பற்றி அதனை ஊரணி என வழங்குதலும் உண்டு.

பொய்கை-மானிடர் ஆக்காதநீர்நிலை. இரை-மீன் முதலியன. எருமண்-களிமண். கூந்தலிலுள்ள எண்ணெய்ப்பசை, சிக்கு முதலியன போகும்பொருட்டுக் களிமண்ணைத் தேய்த்துக் கொண்டு மகளிர் நீராடுதல் வழக்கம்; இதனை இன்றும் சிற்றூர்கவில் காணலாம்.

<u>மாமலாடனார்:—</u> இப்பெயர் மாமிலாடன் என்றும் பிரதிகளிற் காணப்படுகிறது. மலாடு என்பது கொடுந்தமிழ்நாடுகள் பன்னிரண்டில் ஒன்று. அதனைச் சேர்ந்தவர் இவர். வாடிய ஆம்பல் மலருக்குக் கூம்பிய சிறகுகளையுடைய மனையுறை குருவியை இவர் உவமை கூறியிருக்கிறார். இவருடைய பாடலொன்று குறுந்தொகையில் உள்ளது.

ஆம்பல் பூவின் சாம்பல் அன்ன
கூம்பிய சிறகர் மனையுறை குரீஇ
முன்றில் உணங்கல் மாந்தி மன்றத்து
எருவினுண் தாது குடைவன வாடி
இல்லிறைப் பள்ளித்தம் பிள்ளையொடு வதியும்
புன்கண் மாலையும் புலம்பும்
இன்றுகொல் தோழியவர் சென்ற நாட்டே.

(குறுந். 46.)

சாம்பல்-பூவின்வாடல். எரு-உலர்ந்த சாணம். தலைவர் சென்ற நாட்டிலும் துன்பந்தரும் மாலையும் தனிமையும் உளவாதலின் அவற்றால் உண்டாகும் துயரத்தை அறிந்து அவர் என்னை நினைத்து மீண்டு வருவார். அது நினைத்து யான் ஆற்றுவேனாயினே னென்பது தலைவியின் கருத்து.

மாமூலனார்:— இவர் அந்தணர்; இவரை யோகி என்றும் கொள்ளுதல் பொருந்தும்; இது தொல். பொருள் 75-ஆம் சூத்திரவுரையில் நச்சினார்க்கினியர், ''யோகிகளாய் உபாயங்களால் முக்காலமு முணர்ந்த மாமூலர் முதலியோர் அறிவன்றேயத்து அனைநிலை வகையோராவர்'' என்று பார்ப்பன வாகையை விளக்குவதனால் விளங்குகிறது. மாமரத்தடியில் இருக்கும் ஏகாம்பரநாதன் பெயரே மாமூலர் என்று வழங்கியது போலும். இவர், ''பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர், சீர்மிகு பாடலி'' என்று நந்த மன்னரையும் (அகநா. 265), மோரியரையும் (அகநா. 251, 281) பாராட்டியிருப்பதனால் அவர்கள் காலத்தவராகக் கருதப்பெறுகிறார். அவர்கள் காலம் கி.மு. 260 ஆண்டுகளுக்குமுன் என்பர். பாலைத்திணையையே இவர் மிகுதியாகச் சிறப்பித்துப் பாடியுள்ளார். அங்கங்கே இவர் உபகாரிகளாகிய புல்லியையும் அவனது வேங்கடமலையையும் (அகநா. 61, 265, 295, 311, 359, 393) நெடுவேளாவியையும் (அகநா. 1, 349) நன்னனையும் அவன் ஏழ்குன்றத்தையும்

(அகநா. 15, 349) நன்னன் வேண்மான் என்பவனுடைய வியலூரையும் (அகநா. 97) மற்றும் வடுகத் தலைவராகிய கட்டி, எருமை என்பவர்களையும் அஞ்சி, கண்ணனெழினி, பாணன் என்ற வடநாட்டுத் தலைவன் முதலியவர்களையும் தம்பாடல்களிற் குறிப்பிட்டிருக்கிறார். இவர்பாடல்களிலிருந்து தெரியும் சரித்திரச்செய்திகள் பல. கரிகால்வளவனொடு வெண்ணிப்பறந்தலையிற் பொருது தோற்றுப் புறப்புண் நாணி வடக்கிருந்த சேரலாதனொடு சில சான்றோரும் வடக்கிருந்து மாண்டனர் என்பதும் (அகநா. 55) சேரலாதன் கடலில் நாவாயைச் செலுத்தி ஓரரசனுடைய கடம்பை அறுத்து அதனைக் கொண்டு செய்வித்த முரசினொடு இமயங்காறும் சென்று அம்மலையின்மீது விற்பொறித்து வந்து பகைவர் தந்த திறை அனைத்தையும் தன் வாயில் முன் குவித்துப் பிறர் முகந்துபோகச் செய்தனன். (அகநா. 127) என்பதும், மத்தி என்பவன் எழினியின்மேற்படையெடுத்துச் சென்று அவனை வென்று அவன்தன் பற்களைக் கொணர்ந்து தன் வாயில் கதவில் அழுத்தினான் (அகநா. 211) என்பதும் உதியஞ்சேரல் (பாரதப்படை வீரருக்குப்) பெருஞ்சோற்றை வழங்கியபோது கூளிச்சுற்றம் எஞ்சிய சோற்றை உண்ண அங்கு வந்து குழுமியிருந்தன (அகநா. 233) என்பதும் எவ்வி என்ற உபகாரி செருவில் இறந்துபட வருத்தம் பொறாத பாணர் அவ்விடத்தே தம் யாழை முறித்துப் போட்டு அன்றுகாறும் அவ்வியாழ் தமக்கு வயிற்றுப்பிழைப்புக்குக் காரணமாக இருந்தமையின் அதனைத் தொழுது அவலித்தார்கள் (அகநா. 115) என்பதும் இவர் காட்டும் கதைகளில் ஒரு சிலவாம். இவர் கவிகளில் இங்ஙனம் வரலாறுகளே பெரிதும் காணப்படுகின்றன. இவர் இயற்றினவாக இப்பொழுது கிடைத்துள்ள பாடல்கள்: 30 (நற். 2; குறுந். 1; அகம் 26; திருவள்ளுவமாலை 1.) இவர் இலக்கண

நூல் ஒன்று செய்துள்ளதாக இலக்கண விளக்கம் முதலியவற்ருல் தெரியவருகிறது.

<u>மாயெண்டனுர்:—</u> இவர் பாம்பின் உரியை அருவிக்கு உவமை கூறுகிருர். தலைவியைப் பாதுகாக்குமாறு தலைவன் வாடையை வேண்டுவதாக இவர் பாடிய தான குறுந்தொகைச் செய்யுள் அமைந்துள்ளது; 235.

ஓம்புமதி வாழியோ வாடை பாம்பின்
தூங்குதோல் கடுக்குந் தூவெள் ளருவிக்
கல்லுயர் நண்ணி யதுவே நெல்லி
மரையின மாரு முன்றிற்
புல்வேய் குரம்பை நல்லோ ளூரே.

(குறுந். 235.)

<u>மார்க்கண்டேயனுர்:—</u> ஒரு முனிவர் பெயராகிய இஃது இவருக்கு இடப்பட்டது. இவரியற்றிய நூலைத் தலையாய வோத்தென்பர். (தொல். புறத்திணை. சூ. 20, ந.); மார்க்கண்டேயனுர் காஞ்சி யென்று ஒருநூற்பெயரும் ஒருசெய்யுளும் வழங்கும்; யா.வி; கா; உரை. இவர் பாடியதாகப் புறநானூற்றில் ஒரு செய்யுள் உள்ளது.

மயங்கிருங் கருவிய விசும்புமுக ஞக
இயங்கிய இருசுடர் கண்ணெனப் பெயரிய
வளியிடை வழங்கா வழக்கரு நீத்தம்
வயிரக் குறட்டின் வயங்குமணி யாரத்துப்
பொன்னந் திகிரி முன்சமத் துருட்டிப்
பொருநர்க் காணுச் செருமிகு முன்பின்
முன்னேர் செல்லவுஞ் செல்லா தின்னும்
விலைநலப் பெண்டிரிற் பலர்மீக் கூற
உள்ளேன் வாழியர் யானெனப் பன்மாண்
நிலமகள் அழுத காஞ்சியும்
உண்டென உரைப்பரால் உணர்ந்திசி னேரே.

(புறம். 365.)

மாலை மாறனார்:— வாள்போன்ற வாயையுடைய மடல்கள் செறிந்த தாழை வேல்நாட்டும் வேலியைப் போலப் பயன்தரும் கடற்கரை என்று இவர் கூறுவதிலிருந்து வேல்களை வேலியாக நடும் வழக்கம் உண்டென்று தெரிகிறது. மாறன் என்ற பெயர் இவர் பாண்டிய மன்னனாக இருக்கலாமோ என்று கருத இடந்தருகிறது. குறுந்தொகையில் இவர் பாடிய செய்யுள் ஒன்றுள்ளது.

கடலங் கானல் ஆயம் ஆய்ந்தவென்
நலமிழந் ததனினும் நனியின் னாதே
வாள்போல் வாய கொழுமடற் றாழை
மாலை வேனாட்டு வேலி யாகும்
மெல்லம் புலம்பன் கொடுமை
பல்லோ ரறியப் பரந்துவெளிப் படினே.

(குறுந். 245.)

செயற்கையானன்றி இயல்பாகவே உள்ள தாழை வேலியாவது போல, நீ கூற வேண்டாமே இயல் பாகவே தலைவன் கொடுமையை நான் மறைத்து ஆற்றுவே னென்பது குறிப்பு (தலைவி கூற்று)

மாவளத்தனார்:— இவர் தலைவியின் வாட்டத்துக்கு யானையின் கொம்பினால் முறிந்து கிடக்கும் முல்லைக் கொடியை உவமை கூறியுள்ளார். சோழன் நலங் கிள்ளியின் தம்பி மாவளத்தன் என்ற பெயருடைய ஒருவன் புறநா. 43-ஆம் செய்யுளிற் கூறப்படுகிறான். இவர் பா.டியதாகக் குறுந்தொகையில் ஒரு செய்யுள் உள்ளது.

தாமே செல்ப வாயின் கானத்துப்
புலந்தேர் யானைக் கோட்டிடை யொழிந்த
சிறுவீ முல்லைக் கொம்பிற் றாஅய்
இதழழிந் தூறுங் கண்பனி மதரெழிற்
பூணக வனமுலை நனைத்தலும்
காணார் கொல்லோ மாணிழை நமரே.

(குறுந். 348.)

மாற்பித்தியார்:— இவர் பெண்பாலாரென்று தெரிகிறது. பெருஞ்செல்வத்தை நுகர்ந்த ஒரு தலைவன் அச்செல்வத்தை வெறுத்துத் துறவு பூண்டு கடிய விரதங்கொண்டு நோற்றிருத்தல் இவர் பாடல்களிற் கூறப்பெற்றுள்ளது; இவர் பாடியனவாக இரண்டு செய்யுட்கள் புறநானூற்றில் உள்ளன.

ஓவத் தன்ன இடனுடை வரைப்பிற்
பாவை யன்ன குறுந்தொடி மகளிர்
இழைநிலை நெகிழ்த்த மள்ளற் கண்டிகும்
கழைக்கண் நெடுவரை யருவி யாடிக்
கான யானை தந்த விறகிற்
கடுந்தெறற் செந்தீ வேட்டுப்
புறந்தாழ் புரிசடை புலர்த்து வோனே.

(புறம். 251.)

மாற்றூர்கிழார்மகனார் கொற்றங்கொற்றனார்:— இவரது இயற்பெயர் கொற்றங்கொற்றனார்; வேளாளர், சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளி வளவனுடைய நண்பருள் ஒருவனும், சிறந்த கொடையாளியுமாகிய சிறுகுடி கிழான் பண்ணனையும், அவனது சிறுகுடியையும் சிறப்பித்துப் பாடியுள்ளார்; அகநா. 54. நற்றிணையிலும் ஒரு செய்யுள் (259) இவர் பாடியதாக உள்ளது.

விருந்தின் மன்ன ரருங்கலந் தெறுப்ப
வேந்தனும் வெம்பகை தணிந்தனன் தீம்பெயற்
காரு மார்கலி தலையின்று தேரும்
ஓவத் தன்ன கோபச் செந்நிலம்
வள்வா யாழி யுள்ளுறு புருளக்
கடவுக காண்குவம் பாக மதவுநடைத்
தாம்பசை குழவி வீங்குசுரை மடியக்
கனையலங் குரல காற்பரி பயிற்றிப்
படுமணி மிடற்ற பயநிரை யாயம்
கொடுமடி யுடையர் கோற்கைக் கோவலர்
கொன்றையங் குழலர் பின்றைத் தூங்க
மனைமனைப் படரும் நனைநகு மாலைத்

தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளன்
பண்ணன் சிறுகுடிப் படப்பை நுண்ணிலைப்
புன்காழ் நெல்லிப் பைங்காய் தின்றவர்
நீர்குடி சுவையிற் றீவிய மிழற்றி
முகிழ்நிலாத் திகழ்தரு மூவாத் திங்கள்
பொன்னுடைத் தாலி யென்மக னொற்றி
வருகுவை யாயின் தருகுவென் பாலென
விலங்கமர்க் கண்ணன் விரல்விளி பயிற்றித்
திதலை யல்குலெங் காதலி
புதல்வற் பொய்க்கும் பூங்கொடி நிலையே.

(அகம். 54.)

மாறோக்கத்துக்காமக்கண்ணி நப்பாலத்தனார்:— மாறோக்கம் கொற்கையைச் சூழ்ந்ததொரு நாடு. அருஞ்சுரத்தில் மறவர், எறும்பு தேடி வைத்திருந்த தானியத்தை எடுத்து உண்பதனை ஆசிரியர் விளக்கியிருக்கிறார்.

கோடை நீடலின் வாடுபுலத் துக்க
சிறுபுல் லுணவு நெறிபட மறுகி
நுண்பல் லெறும்பினங் கொண்டளைச் செறித்த
வித்தா வல்சி வீங்குசிலை மறவர்
பல்லூர் புக்குப் பயனிரை கவரக்
கொழுங்குடி போகிய பெரும்பாழ் மன்றத்து
நரைமூ தாளர் அதிர்தலை இறக்கிக்
கவைமனத் திருந்தும் வல்லுவனப் பழிய
வரிநிறச் சிதலை அரித்தலிற் புல்லென்று
பெருநலம் சிதைந்த பேஎமுதிர் பொதியில்
இன்னா ஒருசிறைத் தங்கி இன்னகைச்
சிறுமென் சாயல் பெருநலம் உள்ளி
வம்பலர் ஆகியும் கழிப மன்ற
நசைதர வந்தோர் இரந்தவை
இசைபடப் பெய்தல் ஆற்று வோரே.

(அகம். 377.)

மாறோக்கத்து நப்பசலையார்:— மாறோக்கம்—கொற்கையைச் சூழ்ந்ததொரு நாடு; ந: சிறப்புப்பொருளைத் தருவதோர் இடைச்சொல். பசலை—கணவனைப் பிரிந்த

மகளிருடைய நெற்றி முதலியவற்றில் உண்டாவதாகிய வேறுபட்ட நிறம்; ''மணிமிடை பொன்னின் மாமை சாயவென், அணிநலஞ்சிதைக்குமார் பசலை'' (நற். 304) எனப்பசலையின் இயல்பை விளங்கக் கூறியிருத் தலின், இவர் இப்பெயர் பெற்றார்; சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளி வளவனுடைய போர் வென்றியையும் அவன் கொடை முதலியவற்றை யும் சிறப்பித்துப் பாடியுள்ளார்; அவன் இறந்த பொழுது இவர் பாடிய பாடல் படிப்பவர் மனத்தை உருக்கும். மலையமான் திருமுடிக்காரியும் அவன் மகன் சோழியவேனாதி திருக்கண்ணனும் கபிலரும் இவராற் பாராட்டப் பெற்றோராவர். இவர் பெண் பாலாரென்று தெரிகிறது; இவர் இயற்றிய செய்யு ளொன்று நற்றிணையில் உண்டு. இவர் பாடியன வாகப் புறநானூற்றில் 7 செய்யுட்கள் உள்ளன.

நஞ்சுடை வாலெயிற் றைந்தலை சுமந்த
வேக வெந்திறல் நாகம் புக்கென
விசும்புதீப் பிறப்பத் திருகிப் பசுங்கொடிப்
பெருமலை விடரகத் துருமெறிந் தாங்குப்
புள்ளுறு புண்கண் தீர்த்த வெள்வேல்
சினங்கெழு தானைச் செம்பியன் மருக
கராஅம் கலித்த குண்டுகண் அகழி
இடங்கருங் குட்டத் துடன்றொக் கோடி
யாமங் கொள்பவர் சுடர்நிழற் கதூஉம்
கடுமுரண் முதலைய நெடுநீர் இலஞ்சிச்
செம்புறழ் புரிசைச் செம்மல் மூதூர்
வம்பணி யானை வேந்தகத் துண்மையின்
நல்ல என்னாது சிதைத்தல்
வல்லையால் நெடுந்தகை செருவத் தானே.

(புறம். 37.)

மிளைக்கந்தனார்:— மிளை என்பது ஓர் ஊர். மிளைப் பெருங்கந்தனார் என்ற பெயரிய புலவர் ஒருவர் பாடிய கவிகள் குறுந்தொகை நூலில் வந்துள்ளன.

அவர் வேறு, இவர் வேறு. ''ஏனது சுவைப்பினும் நீ கைதொட்டது வானேரமுதம் புரையுமாலெனக்கு'' என்று தலைவன் தலைவியைப் பாராட்டுவான் என்ற இலக்கணத்துக்கு இவர் பாடல் (குறுந். 196) உதாரண மாக விளங்குகின்றது. பாரி வள்ளலின் பறம்பு நாட்டிலுள்ள சுனைநீரின் இனிமை இவரால் புகழப் பட்டுள்ளது. அதனல் அவ்வுபகாரியால் ஆதரிக்கப் பெற்ருருள் இவரும் ஒருவரென்று கொள்ளக்கூடும். கந்தனுரென்பது இவருக்கு இடப்பட்ட தெய்வப் பெயர். இவர் பாடிய பாடலொன்று குறுந்தொகையில் உள்ளது.

வேம்பின் பைங்காயென் தோழி தரினே
தேம்பூங் கட்டி யென்றனிர் இனியே
பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர்
தைஇத் திங்கட் டண்ணிய தரினும்
வெய்ய உவர்க்கும் என்றனிர்
ஐய அற்ருல் அன்பின் பாலே.

(குறுந். 196.)

''இயல்பாகவே கைப்புடைத்தாகிய வேப்பங்காய் முன்பு தலைவியின் கைப்பட்ட காரணத்தால் நுமக்கு இனியதாயிற்று; இயல்பாகவே இனியநீர் இவள் கைப்பட்ட காரணத்தால் இப்பொழுது நுமக்கு உவர்ப்புடையதாயிற்று. அன்றும் இவளே தந்தனள்; இன்றும் இவளே தந்தனள். ஆயினும் நும்பால் இம்மாறுபாடு உண்டாயதன் காரணம் நும் அன்பு மாறியதேயாம்'' என்று தோழி கூறினுள்.

<u>மிளைகிழான்நல்வேட்டனுர்:—</u> இவர் வேளாண் மரபினர். நல்வேட்டனுர் என்று வேறு அடை யின்றியும் இவர் பெயர் காணப்படுகின்றது. ''பெரியோர் கண்ணிய ஆண்மை கடவதன்று (குறுந். 341), ''நெடிய மொழிதலும் கடிய வூர்தலும், செல்வ மன்றுதன் செய்வினைப் பயனே,

சான்றோர் செல்வ மென்பது சேர்ந்தோர், புன்கண் ணஞ்சும் பண்பின், மென்கட் செல்வம் செல்வ மென்பதுவே'' (நற். 210) என்பன இவர் கூறும் நீதிகளாகும். கான்யாற்றுப் புதுவெள்ளத்தில் தலைவி திளைத்தல் (நற். 53) இவராற் காட்டப்படுகிறது. மதியுடம்பாட்டின்கண் தலைவன் தோழியைப் பின்பற்றி ஒழுகுவதற்குப் போரிற்பட்ட வீரர் உயிர் போமளவும் அருகிருந்து பேய் வழிபாடு செய்தலை (பேய்க்காஞ்சியை) உவமை கூறி யுள்ளார் (நற். 349). நற்றிணையில் 4 செய்யுட் களும், குறுந்தொகையில் ஒரு செய்யுளும் பாடி யுள்ளார்.

பல்வீ பட்ட பசுநனைக் குரவம்
பொரிப்பூம் புன்கொடு பொழிலணிக் கொளாஅச்
சினையினி தாகிய காலையுங் காதலர்
பேணு ராயினும் பெரியோர் நெஞ்சத்துக்
கண்ணிய ஆண்மை கடவ தன்றென
வலியா நெஞ்சம் வலிப்ப
வாழ்வேன் தோழியென் வன்க ணனே.

(குறுந். 341.)

<u>மிளைப்பெருங் கந்தனார்:—</u> காமத்தின் இயல்பை இவர் வருணிக்கும் முறை அழகாக அமைந்துள்ளது (குறுந். 136, 204). ''செவ்வானம் படர்ந்து ஒளி மழுங்கிய பொழுதில் முல்லை மலர்கின்ற காலத்தையே மாலைக்காலம் என்பர்; துணைபிரிந்தவர்களுக்கு விடியலும் பகற்காலமும்கூட மாலையாகும்'' என்று தலைவி கூற்றில் (குறுந். 234) இவர் அமைத்திருக்கும் செய்யுள் அழகமைந்ததொன்றும் இவர் பாடியன வாகக் குறுந்தொகையில் மூன்று செய்யுட்கள் உள்ளன. இவர் குறுந். 136-ஆம் பாடலில் ''காமம் யாவரிடத்தும் இயல்பாக உள்ளது; அது வெளிப் படற்குரியதொரு காலத்தை யுடையது'' என்று கூறுவது போற்றற்குரியது. ஊழின் வலியால் காணற்

குரியாரைக் காணப்பெறின் இயல்பாகவே உள்ளத்துள் அடங்கியிருந்த காமம் வெளிப்படுமென்று கூறுகிறார். காமம் தலைவனிடத்தே அடங்கியிருந்து தலைவியைக் கண்ட காலத்தே வெளிப்படும் என்னும் கருத்து ''நீங்கிற் றெறூஉம் குறுகுங்காற் றண்ணென்னும் தீயாண்டுப் பெற்றாள் இவள்'' (குறள். 1104). என்ப தன் விசேட உரையில் பரிமேலழகர் 'தன் காமத்தீத் தன்னையே தந்தாளாகக் கூறினான், அவளால் அது வெளிப்படுதலின்' என்று குறிப்பிட்டுள்ளது அறியத் தக்கது.

சுடர்செல் வானஞ் சேப்பப் படர்கூர்ந்து
எல்லறு பொழுதின் முல்லை மலரும்
மாலை என்மனார் மயங்கி யோரே
குடுமிக் கோழி நெடுநகர் இயம்பும்
பெரும்புலர் விடியலும் மாலை
பகலும் மாலை துணையி லோர்க்கே.

(குறுந். 234.)

மிளைவேள் தித்தனார்:— இவர் உழுவித்துண்ணும் வேளாளர் மரபைச் சேர்ந்தவர். பாறையின் மீது செங்காந்தள் படர்ந்து மலர்ந்திருப்பது போரில் புண்பெற்ற யானையின் முகத்தைப் போன்றதாக இவர் தாம் பாடியதான குறுந்தொகைச்செய்யுளில் (284) கூறியுள்ளார்.

பொருத யானைப் புகர்முகங் கடுப்ப
மன்றத் துறுகல் மீமிசைப் பலவுடன்
ஒண்செங் காந்தள் அவிழும் நாடன்
அறவ னாயினும் அல்ல னாயினும்
நம்மே சுவரோ தம்மிலர் கொல்லோ
வரையிற் றாழ்ந்த வால்வெள் ளருவி
கொன்னிலைக் குரம்பையின் இழிதரும்
இன்னா திருந்தஇச் சிறுகுடி யோரே.

(குறுந். 284.)

தலைவன் வரைபொருட்குப் பிரிந்த காலத்தில் தலைவி, ''தலைவன் கூறிய காலத்தில் வந்து மணப்பானோ? அல்லனோ? அங்ஙனம் மணவாவிடின் இவ்வூரினர் நம்மைப் பெரிதும் ஏசுவரே'' என்று வருந்தினள்; அதுகண்ட தோழி, ''தலைவன் நல்லனு யினும் அல்லனுயினும் நம்மை ஏசுவதால் மட்டும் பயனில்லை, அறிவில்லாரே அங்ஙனம் செய்வர்'' என்றுள்.

மீனெறிதூண்டிலார்:— இவர், யானை இழுத்துவிட்ட மூங்கிலுக்கு, மீன் பிடிப்பவர் மேலே இழுத்த தூண்டிலை உவமை கூறியதனுல் இப்பெயர் பெற்றுர். இவரது இயற்பெயர் தெரியவில்லை. இவர் பாடிய பாட லொன்று குறுந்தொகையில் உள்ளது.

யானே யீண்டை யேனே யென்னலனே
ஏனல் காவலர் கவணொலி வெரீஇக்
கான யானை கைவிடு பசுங்கழை
மீனெறி தூண்டிலின் நிவக்கும்
கானக நாடனொடு ஆண்டொழிந் தன்றே.

(குறுந். 54.)

முக்கல் ஆசான் நல்வெள்ளையார்:— முக்கல்: ஓரூர். இவ்வூர் எங்குள்ளது என்று புலப்படவில்லை. ஆசான் என்றதனுல் அந்தணர் என்று தெரிகிறது. இவர் நெய்தலைச் சிறப்பித்துள்ளார். இவர் பாடிய பாட லொன்று நற்றிணையில் உள்ளது.

கடலங் காக்கைச் செவ்வாய்ச் சேவல்
படிவ மகளிர் கொடிகொய் தழித்த
பொம்மல் அடும்பின் வெண்மணல் ஒருசிறைக்
கடுஞ்சூல் வதிந்த காமர் பேடைக்
கிருஞ்சேற் றயிரை தேரிய தெண்கழிப்
பூவுடைக் குட்டந் துழவுந் துறைவ
னல்கா மையி னசைபழு தாகப்
பெருங்கை யற்றவென் சிறுமை யலர்வாய்

அம்பல் மூதூ ரலர்தந்து
நோயா கின்றது நோயினும் பெரிதே.

(நற். 272.)

முடங்கிக்கிடந்த நெடுஞ்சேரலாதன்:— இவர் அரசர். இவர் சேரர் குடியைச் சேர்ந்தவர். முடங்கிக்கிடந்த என்ற அடைமொழியால் நடக்க வியலாது இருந்தனர் போலும். இவர் நெய்தலைப் புனைந்து பாடியுள்ளார். அகநானூற்றில் ஒரு செய்யுள் இவர் பாடியதாக உள்ளது.

நெடுங்கயிறு வலந்த குறுங்கண் அவ்வலைக்
கடல்பாடு அழிய இளமீன் முகந்து
துணைபுணர் உவகையர் பரத மாக்கள்
இளையரும் முதியரும் கிளையுடன் துவன்றி
உப்பொய் உமணர் அருந்துறை போக்கும்
ஒழுகை நோன்பகடு ஒப்பக் குழீஇ
அயிர்திணி அடைகரை ஒலிப்ப வாங்கிப்
பெருங்களந் தொகுத்த உழவர் போல
இரந்தோர் வறுங்கலம் மல்க வீசிப்
பாடுபல அமைத்துக் கொள்ளை சாற்றிக்
கோடுயர் திணிமணற் றுஞ்சுந் துறைவ
பெருமை யென்பது கெடுமோ ஒருநாண்
மண்ணு முத்தம் அரும்பிய புன்னைத்
தண்ணறும் கானல் வந்துநும்
வண்ணம் எவனே என்றனிர் செலினே.

(அகம். 30.)

முடத்தாமக்கண்ணியார்:— ''பொருநராற்றுப்படையை இயற்றியவர் இவர். ''இயற்பெயர் முன்னர்'' (தொல். சொல். இடை. சூ. 22. சே.ந.) என்னும் சூத்திர உரையில் ஆர் விகுதி பன்மை யொடு முடிதற்கு முடத்தாமக்கண்ணியார் வந்தா ரென்பது உதாரணமாகக் காட்டப் பெற்றிருத்த லால் இவர் பெயர் முடத்தாமக்கண்ணி என்று தெரிகின்றது. இப்பெயர் உறுப்பால் வந்ததென்றும்,

இவர் பெண்பாலரென்றும் கூறுவாரும் உளர். ஆர்விகுதிபெற்ற பலபெயர்கள் இருப்ப இவர் பெயரை உரையாசிரியர்கள் எடுத்துக்காட்டியது இவரது சிறப்பைப் புலப்படுத்தும். காவிரியின் பெருமையைக் கீழ்க்கண்ட அடிகளால் கூறுகின்றது போற்றற்குரியது.

''எல்லை தருநன் பல்கதிர் பரப்பிக்
குல்லை கரியவும் கோடெரி நைப்பவும்
அருவி மாமலை நிழத்தவு மற்றக்
கருவி வானம் கடற்கோண் மறப்பவும்
பெருவற ளுகிய பண்பில் காலையும்
நறையு நரந்தமு மகிலு மாரமுந்
துறைதுறை தோறும் பொறையுயிர்த் தொழுகி
நுரைத்தலைக் குரைப்புனல் வரைப்பகம் புகுதொறும்
புனலாடு மகளிர் கதுமெனக் குடையக்
கூனிக் குயத்தின் வாய்நெல் லரிந்து
சூடுகோ டாகப் பிறக்கி நாடொறுங்
குன்றெனக் குவைஇய குன்ருக் குப்பை
கடுந்தெற்று மூடையி னிடங்கெடக் கிடக்குஞ்
சாலி நெல்லின் சிறைகொள் வேலி
ஆயிரம் விளையுட் டாகக்
காவிரி புரக்கு நாடுகிழ வோனே''.

(பொருநராற்றுப்படை. 233-248.)

<u>முடத்திருமாறனுர்</u>:— இவர் இடைச்சங்கத்திறுதியில் பாண்டி நாட்டை ஆண்டவர். இவர் காலத்துச் சங்கமிருந்த கபாடபுரம் கடல் கொள்ளப்பட்டுச் சங்கம் அழிந்தபோது, உடனே இப்பொழுது உள்ள மதுரையில் கடைச்சங்கத்தை நிறுவினுர். இவர் பாண்டியமரபினர். சேரமான் கடலோட்டிய வேல் கெழுகுட்டுவன் மகனுகிய குட்டுவன்சேரலைப் பாராட்டி யுள்ளார். இவர் பாலைத்திணையையும், குறிஞ்சித் திணையையும் சிறப்பித்துப் பாடியுள்ளார் இவர் தாம் பாடியுள்ள செய்யுளில் சாபம் என்ற வடசொல்லைக் (நற். 228) கையாண்டுள்ளார். இவர்

பாடியனவாக இரண்டு செய்யுட்கள் நற்றிணையில் உள்ளன.

என்னெனப் படுமோ தோழி மின்னுவசிபு
அதிர்குரல் எழிலி முதிர்கடன் தீரக்
கண்தூர்பு விரிந்த கனையிருள் நடுநாள்
பண்பில் ஆரிடை வரூஉம் நந்திறத்து
அருளான் கொல்லோ தானே கானவன்
சிறுபுறம் கடுக்கும் பெருங்கை வேழம்
வெறிகொள் சாபத் தெறிகணை வெரீஇ
யழுந்துபட விடரகத் தியம்பும்
எழுந்துவீழ் அருவிய மலைகிழ வோனே.

(நற். 228.)

முப்பேர் நாகனார்:— முப்பேர் என்பது ஓரூர். இவர் பாலைத்திணையைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். நாளது சின்மையையும், இளமையது அருமையையும் விரித்துப்பாடியுள்ளார். இவர் பாடியதாக நற்றிணையில் ஒரு செய்யுள் உள்ளது.

முதிர்ந்தோர் இளமை யழிந்து மெய்தார்
வாழ்நாள் வகையள வறிஞரு மில்லை
மாரிப் பித்திகத் தீரித ழலரி
நறுங்கா ழாரமொடு மிடைந்த மார்பிற்
குறும்பொறிக் கொண்ட கொம்மையம் புகர்ப்பிற்
கருங்கண் வெம்முலை ஞெமுங்கப் புல்லிக்
கழிவ தாக கங்குல் என்றுதா
மொழிவன் மையிற் பொய்த்தனர் வாழிய
நொடிவிடு வன்ன காய்விடு கள்ளி
அலங்கலம் பாவை ஏறிப் புலம்புகொள்
புன்புறு வீழ்பெடைப் பயிரு
மென்றூழ் நீளிடைச் சென்றிசி னோரே.

(நற். 314.)

முரஞ்சியூர் முடிநாகராயர்:— இப்பெயரினரொருவர் தலைச்சங்கத்தில் இருந்தனரென்று இறையனாரகப் பொருளின் முதற்சூத்திரவுரையால் தெரிகின்றது.

இவராற் பாடப்பட்டோன் சேரமான் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதன். இவர் பாடியதாகப் புறநானூற்றில் ஒரு செய்யுள் உள்ளது.

மண்திணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்புதைவரு வளியும்
வளித்தலைஇய தீயும்
தீமுரணிய நீரு மென்றாங்கு
ஐம்பெரும் பூதத் தியற்கை போலப்
போற்றார்ப் பொறுத்தலுஞ் சூழ்ச்சிய தகலமும்
வலியுந் தெறலும் அளியும் உடையோய்
நின்கடற் பிறந்த ஞாயிறு பெயர்த்துநின்
வெண்டலைப் புணரிக் குடகடற் குளிக்கும்
யாணர் வைப்பின் நன்னாட்டுப் பொருந
வான வரம்பனை நீயோ பெரும
அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்
பாஅல் புளிப்பினும் பகலிருளினும்
நாஅல் வேத நெறிதிரியினும்
திரியாச் சுற்றமொடு முழுதுசேண் விளங்கி
நடுக்கின்றி நிலியரோ வத்தை யடுக்கத்துச்
சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை
அந்தி அந்தணர் அருங்கடன் இறுக்கும்
முத்தீ விளக்கிற் றுஞ்சும்
பொற்கோட் டிமயமும் பொதியமும் போன்றே.

(புறம். 2.)

முள்ளியூர்ப் பூதியார்:— இவர் முன்னியூர் வழுதியார் எனவும் வழங்கப்படுகிறார். நன்னனது பொன் விளையும் சுரங்கங்களையுடைய மலையைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். இவர் பாடியதாக அகத்தில் ஒரு செய்யுள் உள்ளது.

அறந்தலைப் பிரியா தொழுகலுஞ் சிறந்த
கேளிர் கேடுபல வூன்றலும் நாளும்

வருந்தா உள்ளமொ டிருந்தோர்க் கில்லெனச்
செய்வினை புரிந்த நெஞ்சினர் நறுநுதல்
மையீ ரோதி யரும்பட ருழத்தல்
சின்னாள் தாங்கல் வேண்டு மென்று நின்
நன்மான் எல்வளை திருத்தின ராயின்
வருவர் வாழி தோழி பலபுரி
வார்கயிற் றொழுகை நோன்சுவற் கொளீஇப்
பகடுதுறை யேற்றத் துமண்விளி வெரீஇ
உழைமான் அம்பிணை யினனிரிந் தோடக்
காடுகவின் அழிய உரைஇக் கோடை
நின்றுதின விளிந்த அம்பணை நெடுவேய்க்
கண்விடத் தெறிக்கு மண்ணா முத்தங்
கழங்குறழ் தோன்றல பழங்குழித் தாஅம்
இன்களி நறவின் இயல்தேர் நன்னன்
விண்பொரு நெடுவரைக் கவாஅற்
பொன்படு மருங்கின் மலையிறந் தோரே.

(அகம். 173.)

முறுவெங்கண்ணனார்:— இவருக்கு இப்பெயர் உறுப்பால் வந்தது. இவர் வெங்கண்ணனார் எனவும் வழங்கப்படுவர். குறிஞ்சியைச் சிறப்பித்துள்ளார். பகற்குறிக்கண் வந்து ஒழுகும் தலைவனைத் தோழி இரவுக்குறிக்கண் வருமாறு கூறுவதுபோலத் தலைவியை மணந்து கொள்ளுமாறு வலியுறுத்துவதாக இவர் பாடியுள்ளார். இவர் பாடியதாக நற்றிணையில் ஒரு செய்யுள் உள்ளது.

சிறுகண் யானைப் பெருங்கை யீரினங்
குளவித் தண்கயங் குழையத் தீண்டிச்
சோலை வாழை முணைஇ யயலது
வேரல் வேலிச் சிறுகுடி யலறச்
செங்காற் பலவின் தீம்பழ மிசையும்
மாமலை நாட தாமம் நல்கென
வேண்டுதும் வாழிய எந்தை வேங்கை
வீயுக விரிந்த முன்றிற்
கல்கெழு பாக்கத்து அல்கினை செலினே.

(நற். 232.)

மூலங்கீரனுர்:— பேய்கள் பலியுண்ண மூதூர் மன்றங்களுக்கு வருவதை இவர் கூறுகின்றூர். திருச்சாய்க்காட்டின் வளத்தையும் சிறப்பித்துக் கூறியுள்ளார். இக்காலத்தில் சாயாவனம் என்று வழங்கப் படுவதுதான் திருச்சாய்க்காடு. இவர் பாடியதாக நற்றிணையில் ஒரு செய்யுள் உள்ளது. இவர் பாலையைச் சிறப்பித்துப்பாடியுள்ளார்.

வேனில் முருக்கின் விளைதுணர் அன்ன
மாணு விரல வல்வாய்ப் பேஎய்
மல்லல் மூதூர் மலர்ப்பலி யுணீஇய
மன்றம் போழும் புன்கண் மாலைத்
தம்மொடும் அஞ்சும் நம்மிவண் ஒழியச்
செல்ப வென்ப தாமே செவ்வரி
மயிர்நிரைத் தன்ன வார்கோல் வாங்குகதிர்ச்
செந்நெலஞ் செறுவின் அன்னந் துஞ்சும்
பூக்கெழு படப்பைச் சாய்க்காட் டன்னவென்
நுதல்கவி னழிக்கும் பசலையும்
அயலோர் தூற்றும் அம்பலும் அளித்தே.

(நற். 73.)

மையோடக் கோவனுர்:— பரிபாடலில் இவர் வையைக் குரியதாகிய 7-ஆம் பாடலை இயற்றியவர். வையை பல பொருள்களை அடித்துக்கொண்டு பெருகி வருவதற்குப் பாண்டியர் சேனை பகைமேற் செல்லுதலையும் அப்பெருக்கால் வேறுபட்ட இடங்களுக்கு அச்சேனையால் வேறுபட்ட பகைப்புலங்களையும் உவமை கூறியிருத்தலை நோக்கும் பொழுது இவர் இராசபக்தியுடையவரென்பது புலனுகும். இவர் கூறிய வையைப்பெருக்கின் செயல்களும், புனல் விளையாட்டு வகையும், திருமருத முன்றுறைச் சிறப்பும், பிறவும் மிக வியக்கற்பாலன. இவர் புனல் விளையாட்டிற்குக் கருவியாகிய ஓடத்தை எந்த வகையாகவோ புனைந்து கூறியது பற்றி இப்பெயர் பெற்றிருக்கலாமென்று ஊகித்தற்கிடமுண்டு.

<u>மோசி கண்ணத்தனுர்:—</u> மோசி என்னும் ஊரினர். இவ்வூர் மோசிகீரனுர், மோசி சாத்தனுர், முட மோசியார் முதலிய பல புலவர்களைத் தோற்றுவித்து அளவிலாப் புகழடைந்துள்ளது. இவர் நெய்தல் நில வளத்தைச் சிறப்பித்துக் கூறியிருக்கிருர். இவரது பாடலொன்று நற்றிணையில் மட்டும் உள்ளது.

ஒன்றில் காலை அன்றில் போலப்
புலம்புகொண் டுறையும் புன்கண் வாழ்க்கை
யானுமாற் றேனது தானும்வந் தன்று
நீங்கல் வாழிய ரைய வீங்கை
முகைவீ அதிரல் மோட்டுமணல் எக்கர்
நெளவி நோன்குளம் பழுந்தென வெள்ளி
உருக்குறு கொள்கலம் கடுப்ப விருப்புறத்
தெண்ணீர்க் குமிழி இழிதரும்
தண்ணீர் ததைஇ நின்ற பொழுதே.

(நற். 124.)

<u>மோசிக்கரையனுர்:—</u> இவரது இயற்பெயர் புலப்பட வில்லைபோலும். இவரது ஊராகிய மோசிக்கரையைக் கொண்டே இவரது பெயரும் மோசிக்கரையனுர் என்று வழங்கப்படுவதாகக் கருதலாம். ''அன்பில் லாத் தலைவனுடைய அறிவை விரும்பினேனே'' என்று தலைவி தன்னை நொந்து கூறுவதாக இவர் அகநானூற்றில் பாடியுள்ளார்.

மண்டிலம் மழுக மலைநிறங் கிளர
வண்டினம் மலர்பாய்ந் தூத மீமிசைக்
கண்டற் கானற் குருகினம் ஒலிப்பத்
திரைபா டவியத் திமில்தொழில் மறப்பக்
கரையா டலவன் அளைவயிற் செறியச்
செக்கர் தோன்றத் துணைபுணர் அன்றில்
எக்கர்ப் பெண்ணை அகமடல் சேரக்
கழிமலர் கமழ்முகங் காப்பப் பொழில்மனைப்
புன்னை நறுவீ பொன்னிறங் கொளாஅ
எல்லை பைப்பயக் கழிப்பி எல்லுற
யாங்காகு வல்கொல் யானே நீங்காது

முதுமரத் துறையும் உரவுவாய் முதுபுள்
கதுமெனக் குழறுங் கழுதுவழங் கரைநா
நெஞ்சுநெகிழ் பருவரல் செய்த
அன்பி லாளன் அறிவுநயந் தேனே.

(அகம். 260.)

<u>மோசிகீரனர்:—</u> மோசி என்பது ஓர் ஊர். மோசி கொற்றனர் இவ்வூரினரே. படுமரத்து மோசிகீரனர் என்னும் புலவர் ஒருவர் குறுந்தொகைநூலிற் பாடியுள்ளார். அவரும் இவரும் ஒருவரோ வேருே தெரியவில்லை. ஒருகால் இவர் தெய்வத்தன்மை யுள்ள முரசு கட்டிலில் அறியாது துயின்று சேரமான் தகடூரெறிந்த பெருஞ் சேரலிரும்பொறையாற் கவரி வீசப்பெற்ற பெருமை வாய்ந்தவர். இவர் அம் மன்னவனையும் கொண்கானங் கிழான் என்பானையும் பாடியுள்ளார். ''நெல்லு முயிரன்றே நீரு முயி ரன்றே, மன்னன் உயிர்த்தே மலர்தலையுலகம்'' என்று அரசரின் இன்றியமையாமையை இவர் புலப்படுத்தியுள்ளார். (புறநா. 186) ''தலைவன் நின்னைப் பிரியான்; பிரியின், வேற்று வேந்தன் தானையோடு மதிபுறத்தே வந்திருப்பப் புறத்தே வாராமல் அகமதிலிற் கிடந்த நன்னன் போல யான் ஆகுவன்'' என்று தோழி தலைவிக்குக் குறை நயப்பிக்குங்கால் கூறுவது அழகாக உள்ளது. (அகநா. 392.)ஆய் அண்டிரனுடைய பொதியில், ஓர் உபகாரியின் அரலைக்குன்றம் இவைகளையும் இவர் பாராட்டியுள்ளார்; குறுந். 59, 84. குறுந்தொகை யிலன்றி இவரிற்றியனவாக இப்போது தெரிந்துள்ள வேறு செய்யுட்கள்: 7 (நற். 1; அகநா. 1; புறநா. 4; திருவள்ளுவ மாலை 1.)

நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்
அதனுல் யானுயிர் என்ப தறிகை
வேல்மிகு தானை வேந்தற்குக் கடனே.

(புறம். 186.)

மோசி கொற்றனார்:— தலைவனது நல்லியல்பறிந்து ஆற்றியிருக்கும் தலைவி தோழியைப் பார்த்து, ''நீ ஆற்றலையே'' என்று கூறுவதாக இவர் பாடிய குறுந்தொகைச் செய்யுள் அமைந்துள்ளது.

மலரேர் உண்கண் மாணலந் தொலைய
வளையேர் மென்றோள் ஞெகிழ்ந்ததன் றலையும்
மாற்று கின்றே தோழியாற் றலையே
அறிதற் கமையா நாடனொடு
செய்து கொண்டதோர் சிறுநன் நட்பே.

(குறுந். 377.)

மோசி சாத்தனார்:— இவர் பாடியதான புறநானூற்றுச் செய்யுளிற் களவேள்வி ஒரு வகையாக விளங்கக் கூறப்பெற்றுள்ளது.

மணிதுணர்ந் தன்ன மாக்குரல் நொச்சி
போதுவிரி பன்மர னுள்ளுஞ் சிறந்த
காதல் நன்மரம் நீமற் றிசினே
கடியுடை வியனகர்க் காண்வரப் பொலிந்த
தொடியுடை மகளிர் அல்குலுங் கிடத்தி
காப்புடைப் புரிசை புக்குமா றழித்தலின்
ஊர்ப்புறங் கொடாஅ நெடுந்தகை
பீடுகெழு சென்னிக் கிழமையும் நினதே.

(புறம். 272.)

மோதாசனார்:— மனம் ஒத்துச் செல்கின்ற தலைவன் தலைவியர்க்கு இணைமலர்ப்பிணையலை இவர் உவமை காட்டியுள்ளார். சிறு வயதில் ஓரில்லிலிருந்து கலாம் விளைத்தாரைத் தலைவன் தலைவியாகச் செய்த விதியை இடைச்சுரத்துக் கண்டோர் வியந்து பாராட்டியதாக இவர் பாடிய குறுந்தொகைச் செய்யுள் அமைந்துள்ளது.

இவனிவள் ஐம்பால் பற்றவும் இவளிவன்
புன்றலை யோரி வாங்குநள் பரியவும்
காதற் செவிலியர் தவிர்ப்பவுந் தவிராது

ஏதில் சிறுசெரு வுறுப மன்னே
நல்லைமன் றம்ம பாலே மெல்லியற்
றுணைமலர்ப் பிணையல் அன்னவிவர்
மணமகிழ் இயற்கை காட்டி யோயே.

(குறுந். 229.)

வடம நெடுந்தத்தனுர்:— இவராற் பாடப்பட்டோன் நாலைகிழவன் நாகனென்பான். இவர் பெயர் வடநெடுந் தத்தனுரெனவும், வடமநெடுந் தச்சனுரெனவும் சில பிரதிகளிற் காணப்படுகின்றது. இவர் இயற்றிய தாகப் புறநானூற்றில் ஒரு செய்யுள் காணப் படுகிறது.

ஞால மீமிசை வள்ளியோர் மாய்ந்தென
ஏலாது கவிழ்ந்தஎன் இரவல் மண்டை
மலர்ப்போர் யாரென வினவலின் மலைந்தோர்
விசிபிணி முரசமொடு மண்பல தந்த
திருவீழ் நுண்பூண் பாண்டியன் மறவன்
படைவேண்டுவழி வாளுதவியும்
வினைவேண்டுவழி யறிவுதவியும்
வேண்டுப வேண்டுப வேந்தன் தேஎத்து
அசைநுகம் படாஅ ஆண்டகை யுள்ளத்துத்
தோலா நல்லிசை நாலை கிழவன்
பருந்துபசி தீர்க்கும் நற்போர்த்
திருந்துவேல் நாகற் கூறினர் பலரே.

(புறம். 179.)

வடமவண்ணக்கன் தாமோதரனுர்:— இவர் பெயர் வடமன்றுமோதரனுர் என்றும் பிரதிகளிற் காணப் படுகின்றது. வண்ணக்கன்—நாணய பரிசோதகன், நோட்டக்காரன். இப்பொருள் நீலகேசி உரையிற் கண்டது. நோட்டக்காரன் என்னும் பெயர் இப் பொருளில் இக்காலத்து வழங்கப்படுகின்றது. தாமோ தரனுர் என்பது கடவுள் பெயரால் வந்த இவரது இயற்பெயர். இவர் வடதிசையிலிருந்து வந்தவராக எண்ணப்படுகிறுர். புறநானூற்றில் (172) பிட்டங்

கொற்றனை இவர் பாடுங்கால், ''பிட்டன் வேலுங், அவன் மாறுகொள் மன்னரும் வாழ்க'' என்று கூறுகிறார். பகை மன்னரை அங்கு வாழ்த்தியது இவன் வென்று திறை கொள்ளல் அவருளராயின் என்பதனால். ''தலைவன் பாணன் வாயில் யாரினும் இனியன் பேரன்பினன்'' என்று தோழி தலைவனது அன்பின்மையைப் புலப்படுத்துவதாகக் குறுந்தொகையில் இவர் செய்யுள் அமைந்துள்ளது. இவர் இயற்றிய வேறு செய்யுள் புறநா. 172.

யாரினும் இனியன் பேரன் பினனே
உள்ளூர்க் குரீஇத் துள்ளுநடைச் சேவல்
சூன்முதிர் பேடைக் கீனில் இழைஇயர்
தேம்பொதிக் கொண்ட தீங்கழைக் கரும்பின்
நாறா வெண்பூக் கொழுதும்
யாணர் ஊரன் பாணன் நீயே.

(குறுந். 85.)

<u>வடமோதங்கிழார்:—</u> இவருடைய பாடலிற் பகைவர் கைப்பற்றிச்சென்ற நிரையை மீட்டுவந்த வீரனொருவன் தன் உயிர்விட்ட சிறப்பும் அவனுக்காக நடப்பட்ட வீரக்கல்லில் அவன் தெய்வமாக வாழ்ந்ததும் கூறப்பெற்றுள்ளன; புறநா. 260 இவர் பாடியதாக அகநானூற்றில் ஒரு செய்யுள் காணப்படுகின்றது. அப்பாடலில் கோங்கலரில் குரவமலர் உதிர்வது பொன் தராசுத்தட்டில் வெள்ளித்துண்டினைச் சொரிவதுபோலும் என்று கூறுகிறார்.

வளரத் தொடினும் வௌவுபு திரிந்து
விளரி யுறுதருந் தீந்தொடை நினையாத்
தளரு நெஞ்சந் தலைஇ மனையோள்
உளருங் கூந்தல் நோக்கிக் களர
கள்ளி நீழற் கடவுள் வாழ்த்திப்
பசிபடு மருங்குலை கசிபுகை தொழாஅக்
காணலென் கொல்லென வினவினை வருஉம்
பாண கேண்மதி யாணரது நிலையே
புரவுத்தொடுத் துண்குவை யாயினும் இரவெழுந்து

எவ்வங் கொள்குவை யாயினும் இரண்டும்
கையுள போலும் கடிதண் மையவே
முன்னூர்ப் பூசலிற் றோன்றித் தன்னூர்
நெடுநிரை தழீஇய மீளி யாளர்
விடுகணை நீத்தம் துடிபுணை யாக
வென்றி தந்து கொன்றுகோள் விடுத்து
வையகம் புலம்ப வளைஇய பாம்பின்
வையெயிற் றுய்ந்த மதியின் மறவர்
கையகத் துய்ந்த கன்றுடைப் பல்லான்
நிரையொடு வந்த வுரைய ளுகி
உரிகளை யரவ மானத் தானே
அரிதுசெல் லுலகிற் சென்றனன் உடம்பே
கானச் சிற்றியாற்று அருங்கரைக் காலுற்றுக்
கம்பமொடு துளங்கிய இலக்கம் போல
அம்பொடு துளங்கி ஆண்டொழிந் தன்றே
உயரிசை வெறுப்பத் தோன்றிய பெயரே
மடஞ்சால் மஞ்ஞை அணிமயிர் சூட்டி
இடம்பிறர் கொள்ளாச் சிறுவழிப்
படஞ்செய் பந்தர் கன்மிசை யதுவே.

(புறம். 260.)

வண்ணக்கஞ்சாத்தனார்:— இவர் கடைச்சங்கப்புலவர்களுள் ஒருவர். இவருடைய பாடலொன்று திருவள்ளுவமாலையில் உள்ளது.

ஆரியமுஞ் செந்தமிழு மாராய்ந் திதனினிது
சீரிய தென்றொன்றைச் செப்பரிதால்—ஆரியம்
வேத முடைத்துத் தமிழ்திரு வள்ளுவனார்
ஓது குறட்பா வுடைத்து.

(திருவள்ளுவ. 43.)

வண்ணக்கன் சொருமருங்குமரனார்:— இவர் நாணய பரிசோதகராக இருந்தவர். குறிஞ்சித்திணையைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். இவர் பாடலில் தலைமகன் இரவில் வருநெறியின் ஏதங்கூறிய பகுதி மிகச்சிறப்புடைத்து. நற்றிணையில் ஒரு செய்யுள் இவர் பாடியதாக உள்ளது.

விளிவில் அரவமொடு தளிசிறந் துரைஇ
மழையெழுந் திறுத்த நளிர்தூங்கு சிலம்பிற்
கழையமல்பு நீடிய வானுயர் நெடுங்கோட்டு
இலங்குவெள் ளருவி வியன்மலைக் கவாஅன்
அரும்புவா யவிழ்ந்த கருங்கால் வேங்கைப்
பொன்மருள் நறுவீ கன்மிசைத் தாஅம்
நன்மலை நாட நயந்தனை யருளாய்
இயங்குநர் மடிந்த வயந்திகழ் சிறுநெறிக்
கடுமா வழங்குதல் அறிந்தும்
நடுநாள் வருதி நோகோ யானே.

(நற். 257.)

வண்ணப்புறக் கந்தரத்தனார்:— இவரது இயற்பெயர் கந்தரத்தன் என்பது. இவரது பாடலில் ''வண்ணப் புறவின் செங்காற் சேவல்'' என்ற அடியில் புறுவினை வண்ணப்புறவு என்ற சொற்சிறப்பு நோக்கி அச்சொல்லே இவர்க்கு அடைமொழியாக அமைந்தது போலும். பாலைத்திணையைச் சிறப்பித்துள்ளார். இவர் பாடியனவாக அகத்தில் ஒரு செய்யுளும், நற்றிணையில் ஒரு செய்யுளும் உள்ளன. இவர் வண்ணப்புறக் கல்லாடனார் எனவும் வழங்கப்பெறுவர்.

மன்னுப் பொருட்பிணி முன்னி யின்னதை
வளையணி முன்கைநின் இகுளைக் குணர்த்தெனப்
பன்மாண் இரத்தி ராயிற் சென்மென
விடுந ளாதலு முரியள் விடினே
கண்ணும் நுதலும் நீவி முன்னின்று
பிரிதல் வல்லிரோ ஐய செல்வர்
வகையமர் நல்லில் அகவிறை யுறையும்
வண்ணப் புறவின் செங்காற் சேவல்
வீழ்துணைப் பயிருங் கையறு முரல்குரல்
நும்மிலள் புலம்பக் கேட்டொறும்
பொம்ம லோதி பெருவிதுப் புறவே.

(நற். 71.)

வருமுலை யாரித்தி:— இவர் பெண்பாலார். நெஞ்சத்தின் கலக்கத்துக்கு மழைநீரின் கலக்கத்தை

இவர் உவமை கூறியுள்ளார். தலைவனுக்குத் தேனிருலை இவர் உவமை கூறியிருப்பது பாராட்டற்பாலது. இவர் பாடியதாகக் குறுந்தொகையில் ஒரு செய்யுள் உள்ளது.

ஒருநாள் வாரலன் இருநாள் வாரலன்
பன்னாள் வந்து பணிமொழி பயிற்றியென்
நன்னர் நெஞ்சம் நெகிழ்த்த பின்றை
வரைமுதிர் தேனிற் போகி யோனே
ஆசா கெந்தை யாண்டுளன் கொல்லோ
வேறுபுல னன்னாட்டுப் பெய்த
ஏறுடை மழையிற் கலிழுமென் னெஞ்சே.

(குறுந். 176.)

வன்பரணர்:— பரணர், நெடுங்கழுத்துப் பரணரென வேறு இருபுலவர் உளராதலின், இவர் பெயருக்கு முன் வன்மையென்னும் அடைமொழி கொடுக்கப் பட்டது. இவருடைய செய்யுளிலுள்ள பொருள் நயம் சிறந்தது. இவராற் பாடப்பட்டோர். கண்டீரக் கோப்பெருநள்ளி, வல்விலோரி யென்பார். நள்ளியை நோக்கி, 'நீ முற்ற அளித்ததால், இனி எம்முடைய நா ஏனை அரசரைத் துதித்தலை யறியாது' என்பார்: ''பரிசின் முற்றளிப்பப், பீடின் மன்னர்ப் புகழ்ச்சி வேண்டிச், செய்யா கூறிக் கிளத்தல், எய்யாதாகின் றெஞ் சிறுசெந் நாவே (புறநா. 148) பெருஞ் செல்வத்தை அடைந்தமையால், எம்மவர் ஆடல் பாடல்களை அடியோடே மறந்தன ரென்பதைப் புலப் படுத்தி, ''மாலை மருதம் பண்ணிக் காலைக், கைவழி மருங்கிற் செவ்வழி பண்ணி, வரவெமர் மறந்தன ரதுநீ, புரவுக்கடன் பூண்ட வண்மை யானே (புறநா. 149) எனவும், ''பசியா ராகன் மாறுகொல் விசிபிணிக் கூடுகொ ளின்னியங் கறங்க, ஆடலு மொல்லார்தம் பாடலுமறந்தே (புறநா. 153) எனவுங் கூறுவர்; நள்ளி தன்னை இன்ன னென்று புலப்படுத்தாமல் உணவு முதலியவற்றை

அன்புடனளித்துச் சென்ற அருமையைக் கூறிய புறநா. 150-ஆம் செய்யுள் அறிஞரும் கொடையாளிகளும் எப்பொழுதும் படித்துக் கைக்கொண்டொழுகற்பாலது. வல்விலோரியின் வில்வன்மையைப் புலப்படுத்தற்கு, ''வேழம் வீழ்த்த விழுத்தொடைப் பகழி, பேழ்வா யுழுவையைப் பெரும்பிறிதுறீஇப், புழற்றலைப் புகர்க்கலை யுருட்டி யுரற்றலைக், கேழற் பன்றி வீழ வயல, தாழற் புற்றத் துடும்பிற் செற்றும் வல்வில் வேட்டம் வலம்படுத் திருந்தோன் (புறநா. 152) என இவர் கூறிய அருமை நுணுகி அறிதற்பாலது இவர் செய்ததாக நற்றிணையில் ஒரு செய்யுள் காணப்படுகின்றது.

கறங்குமிசை யருவிப் பிறங்குமலை நள்ளிநின்
அசைவில் நோன்ருள் நசைவளன் ஏத்தி
நாடொறும் நன்கலங் களிற்ருெடு கொணர்ந்து
கூடுவிளங்கு வியனகர்ப் பரிசில்முற் றளிப்பப்
பீடில் மன்னர்ப் புகழ்ச்சி வேண்டிச்
செய்யா கூறிக் கிளத்தல்
எய்யா தாகின்றெஞ் சிறுசெந் நாவே.

(புறம். 148.)

<u>வாடாப் பிரபந்தர்:—</u> தலைவன் பொருள் தேடிச் செல்வதற்காகப் பிரிய எண்ணியதை நினைந்து வருந்திய தலைவியை நோக்கிய தோழி அவர் அங்ஙனம் செல்லாரென்று ஆற்றுவித்ததாக அமைந்துள்ளது இவர் பாடியதான குறுந்தொகைச் செய்யுள். (பி.ம். வாடாப் பிரமந்தன், பிரமாந்தன்)

நெடுங்கழை திரங்கிய நீரி லாரிடை
ஆறுசெல் வம்பலர் தொலைய மாறுநின்று
கொடுஞ்சிலை மறவர் கடறுகூட் டுண்ணும்
கடுங்கண் யானைக் கானம் நீந்தி.
இறப்பர்கொல் வாழி தோழி நறுவடிப்
பைங்கான் மாஅத் தந்தளிர் அன்ன
நன்மா மேனி பசப்ப
நம்மினுஞ் சிறந்த அரும்பொருள் தரற்கே.

(குறுந். 331.)

வாயிலான் தேவனார்:— வாயில் என்பது ஒரூர். வாயிலிளங் கண்ணனாரும் இவ்வூரினரே. இவர் பாடியனவாகக் குறுந்தொகையிலுள்ள இரண்டு செய்யுட்களும் (103, 108) பருவங்கண்டு அழிந்த தலைமகள் தோழிக்குக்கூறும்கூற்றாக அமைந்துள்ளன.

கடும்புனல் தொகுத்த நடுங்களுர் அள்ளல்
கவிரிதழ் அன்ன தூவிச் செவ்வாய்
இரைதேர் நாரைக்கு எவ்வ மாகத்
தூஉந் துவலைத் துயர்கூர் வாடையும்
வாரார் போல்வர்நங் காதலர்
வாழேன் போல்வல் தோழி யானே.

(குறுந். 103.)

வாயிலிளங் கண்ணனார்:— "தலைவன் காலையில் வந்து தலைவிக்குக் குவளைமாலையைத் தந்தும், பகலில் தினையில் படுகிளி ஒப்பியும், மாலைப்பொழுதில் தன் நெஞ்சில் ஒன்றைக் கருதி வருந்தி அக்கருத்தைச் சொல்லவும் எழுச்சி பெறாமல் குறைவுற்றான்" என்று தோழி கிழத்தியை இரவுக்குறி நயப்பக் கூறியதாக இவர் இயற்றியதான குறுந்தொகைப் பாடல் அமைந்துள்ளது.

நாகுபிடி நயந்த முளைக்கோட் டிளங்களிறு
குன்றம் நண்ணிக் குறவர் ஆர்ப்ப
மன்றம் போழும் நாடன் தோழி
சுனைப்பூங் குவளைத் தொடலை தந்தும்
தினைப்புன மருங்கில் படுகிளி ஒப்பியும்
காலை வந்து மாலைப் பொழுதில்
நல்லகம் நயந்துதான் உயங்கிச்
சொல்லவு மாகாது அஃகி யோனே.

(குறுந். 346.)

வான்மீகியார்:— ஒரு முனிவர் பெயராகிய இப் பெயர் மரபு பற்றி இவருக்கு இடப்பட்டது போலும்.

இவர் கூறிய துறவறத்தின் பெருமை அறிதற்பாலது; ''வையமுந் தவமுந் தூக்கிற் றவத்துக், கையவி யனைத்து மாற்றாது'' என்பதனால் அறிக. இவர் பெயர் வான்மீகையாரெனவும் வழங்கும். முதற் சங்கத்திருந்த புலவருள் வான்மீகனாரென்று ஒருவருளர்; அவர் வேறு; இவர் வேறு. இவர் பாடியதாகப் புறநானூற் றில் ஒரு செய்யுள் உள்ளது.

பருதி சூழ்ந்தவிப் பயங்கெழு மாநிலம்
ஒருபகல் எழுவர் எய்தி யற்றே
வையமுந் தவமும் தூக்கில் தவத்துக்கு
ஐயவி யனைத்தும் ஆற்றா தாகலிற்
கைவிட் டனரே காதலர் அதனால்
விட்டோரை விடாஅள் திருவே
விடாஅ தோரிவள் விடப்பட் டோரே.

(புறம். 358.)

விட்ட குதிரையார்:— யானையாற் பற்றி விடப்பட்ட மூங்கில் செருவிற் செலுத்தி விட்ட குதிரையைப் போல மேலே எழும்பும் என்று உவமையை அமைத் தமையின் இச்சிறப்புப் பெயரால் இவர் வழங்கப் பட்டார். குறுந்தொகையில் உள்ள செய்யுளொன்றே இவர் பாடியதாகக் காணப்படுகின்றது.

விட்ட குதிரை விசைப்பி னன்ன
விசும்புதோய் பசுங்கழைக் குன்ற நாடன்
யாந்தற் படர்ந்தமை அறியான் தானும்
வேனில் ஆனேறு போலச்
சாயினன் என்பநம் மாணலம் நயந்தே.

(குறுந். 74.)

விரிச்சியூர் நன்னாகனார்:— தம்முடைய தலைவன் போர் செய்தற்குத் தம்மினும் முந்திச் செல்லுதலை தாம் பாடியதான புறநானூற்றுச்செய்யுளில் விளக்கிக் கூறியிருத்தலின் இவர் ஒரு வீரராக எண்ணப்படுகிறார்; அன்றி ஒரு வீரன் கூற்றைக்கொண்டு கூறியதுமாம்.

வேந்தற் கேந்திய தீந்தண் நறவம்
யாந்தனக் குறுமுறை வளாவ விலக்கி
வாய்வாள் பற்றி நின்றனெ னென்று
சினவல் ஓம்புமின் சிறுபுல் லாளர்
ஈண்டே போல வேண்டுவ னுயின்
என்முறை வருக வென்னுன் கம்மென
எழுதரு பெரும்படை விலக்கி
ஆண்டு நிற்கும் ஆண்டகை யன்னே.

(புறம். 292.)

தீந்தண் நறவம்-இனிய குளிர்ந்த நறுநாற்றத்தை யுடைய மது, உறுமுறைவளாவ-உற்றமுறையால் கலந்து கொடுக்க. வாய்வாள்-தப்பாத வாள். சினவல் ஓம்புமின்-கோபித்தலை ஒழிமின். கம்மென-விரைய; தேயவழக்கு.

விரியூர்நக்கனுர்:— சிவபிரானுடைய திருநாமமாகிய நக்கனுரென்பது இவருக்கு இடப்பட்டது போலும். இப்பெயர் விரியூக நக்கனுரெனவும் விரியூரங்கனெனவும் பிரதிகளிற் காணப்படுகின்றது. இவர் தம்முடைய தலைவனது வேற்படையைப் பலபடப் பாராட்டிக் கூறியிருக்கின்றனர். இவர் பாடியதாகப் புறநானூற்றில் ஒரு செய்யுள் உள்ளது.

பிறர்வேல் போலா தாகி இவ்வூர்
மறவன் வேலோ பெருந்தகை யுடைத்தே
இரும்புற நீறும் ஆடிக் கலந்திடைக்
குரம்பைக் கூரைக் கிடக்கினுங் கிடக்கும்
மங்கல மகளிரொடு மாலை சூட்டி
இன்குரல் இரும்பை யாழொடு ததும்பத்
தெண்ணீர்ப் படுவினுந் தெருவினும் திரிந்து
மண்முழு தழுங்கச் செல்லினுஞ் செல்லுமாங்கு
இருங்கடற் ருனை வேந்தர்
பெருங்களிற்று முகத்தினுஞ் செலவா னுதே.

(புறம். 332.)

நீறு-புழுதி. குரம்பை-சிறுகுடில். குரல்-மகளிர் இசை. இரும்பை-பெரிய பை; யாழுறை. ததும்ப-ஒலிக்க. படு-மடு. செலவுஆனது-செல்லுதல் தவிராது.

வில்லக விரலினுர்:— பரத்தையும் தலைவனும் ஒன்று பட்டதற்கு வில்லைப்பிடித்த விரல்களை உவமையாக்கி, ''வில்லக விரலிற் பொருந்தி'' என்று பாடுதலின் இவர் இப்பெயர் பெற்ருர். குறுந்தொகையிலுள்ள செய்யுளொன்றே இவர் பாடியதாகும்.

பொய்கை ஆம்பல் அணிநிறக் கொழுமுகை
வண்டுவாய் திறக்கும் தண்டுறை யூரனெடு
இருப்பின் இருமருங் கினமே கிடப்பின்
வில்லக விரலிற் பொருந்தியவன்
நல்லகஞ் சேரின் ஒருமருங் கினமே.

(குறுந். 370.)

விழிக்கட்பேதைப் பெருங்கண்ணனுர்:— இவரது இயற் பெயர் பெருங்கண்ணனுர். இவர் மானைக் குறித்துப் பாடிய 'விழிக்கட்பேதை' என்ற அருஞ்சொல்லின் காரணம்பற்றி அதனையே தமது பெயரின்முன் அடை மொழியாக வழங்கப்பெற்ருர். இவர் முல்லைத் திணையைச் சிறப்பித்துப்பாடியுள்ளார். இவர் பாடியன வாக நற்றிணையில் ஒரு செய்யுளும், திருவள்ளுவ மாலையில் ஒரு செய்யுளும் உள்ளன.

இலையில் பிடவம் ஈர்மலர் அரும்பப்
புதலிவர் தளவம் பூங்கொடி யவிழப்
பொன்னெனக் கொன்றை மலர மணியெனப்
பன்மலர்க் காயாங் குறுஞ்சினை கனலக்
கார்தொடங் கின்றே காலை வல்விரைந்து
செல்க பாகநின் தேரே யுவக்காண்
கழிப்பெயர் களரிற் போகிய மடமான்
விழிக்கட் பேதையொடு இனனிரிந் தோடக்
காமர் நெஞ்சமொடு அகலாத்
தேடூஉ நின்ற இரலை யேறே.

(நற். 242.)

விற்றூற்று மூதெயினனுர்:— இப்பெயர் முத்தூற்று மூதெயினனுர் என்றும் பிரதிகளிற் காணப்படுகின்றது. விற்றூறு அல்லது முத்தூறு என்பது ஓர் ஊரின்பெயர். விற்றூற்று வண்ணக்கன் தத்தன் என்ற ஒருவரது பாட்டு நற்றிணையிற் காணப்படுகின்றது. இவர் வேடர் மரபினரென்பதும் முதுமையினுற் கௌரவம் பெற்றவரென்பதும் மூதெயினனுர் என்ற தொடரால் தெரியவருகிறது. தமிழருடைய திருமணமுறை இவரால் மிக அழகாக வருணிக்கப் பெற்றுள்ளது (அகநா. 136.) திங்களை உரோகிணி சேர்ந்த நாள் எல்லாக்குற்றமும் நீங்கிய நன்ளுளென்று இவர் கூறுவர். மணநாளன்று வாகையிலையையும் அறுகங்கிழங்கையும் நூலிற் சேர்த்துக் கட்டி அதனை மணமகளுக்குச் சூட்டும் வழக்கமும் அற்றையிரவிலேயே மணமகனையும் மகளையும் பள்ளியறைப்படுத்தலும் இவர் வாக்கால் தெரியவருகின்றன. போர்த்தியுள்ள போர்வை கழித்ததும் வெளிப்படும் தலைவியின் தோற்றத்துக்கு இவர் உறை நீங்கிய வாளின் தோற்றத்தை உவமை கூறியிருப்பது பாராட்டத்தக்கது. இவர் இயற்றியனவாக அகநானூற்றில் மூன்று செய்யுட்களும், குறுந்தொகையில் ஒரு செய்யுளும் காணப்படுகின்றன.

பனைத்தலைக், கருக்குடை நெடுமடல் குருத்தொடு மாயக்
கடுவளி தொகுத்த நெடுவெண் குப்பைக்
கணங்கொள் சிமைய அணங்குங் கானல்
ஆழிதலை வீசிய அயிர்ச்சேற் றருவிக்
கூழைபெய் எக்கர்க் குழீஇய பதுக்கை
புலர்பதங் கொள்ளா வளவை
அலரெழுந் தன்றிவ் வழுங்க லூரே.

(குறுந். 372.)

பனைத்தலை; சீர், பாவின் முதலில் கூனய் நின்றது.

விற்றூற்று வண்ணக்கன் தத்தனார்:— விற்றூறு என்பது ஓரூர். வண்ணக்கன்-நாணய பரிசோதகன். இப்புலவர் தமது பாடலில் பாண்டியனையும் அவனது மதுரையையும் பாராட்டியிருக்கின்றார். இவர் பாலைத் திணையைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். இவர்பாடிய தாக நற்றிணையில் ஒரு செய்யுள் உள்ளது.

வம்ப மாக்கள் வருதிறம் நோக்கிச்
செங்கணை தொடுத்த செயிர்நோக் காடவர்
மடிவாய்த் தண்ணுமைத் தழங்குகுரல் கேட்ட
எருவைச் சேவல் கிளைவயிற் பெயரும்
அருஞ்சுரக் கவலை அஞ்சுவரு நனந்தலைப்
பெரும்பல் குன்றம் உள்ளியும் மற்றிவள்
கரும்புடைப் பணைத்தோள் நோக்கியும் ஒருதிறம்
பற்றாய் வாழியெந் நெஞ்சே நற்றோர்ப்
பொற்றேர்ச் செழியன் கூட லாங்கண்
ஒருமை செப்பிய அருமை வான்முகை
இரும்போது கமழுங் கூந்தல்
பெருமலை தழீஇயுநோக் கியையுமோ மற்றே.

(நற். 298.)

வினைத்தொழிற் சோகீரனார்:— இவர் இரவின் நடு யாமத்தில் கடற்கரையூரின் நிலையை நன்கு சிறப்பித்துப்பாடியுள்ளார். இவர் நெய்தல் நிலவளத்தைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். இவர் பாடியதாக நற்றிணையில் ஒரு செய்யுள் உள்ளது.

ஓதமும் ஒலியோ வின்றே யூதையும்
தாதுளர் கானற் றவ்வென் றன்றே
மணல்மலி மூதூர் அகனெடுந் தெருவில்
கூகைச் சேவல் குராலோ டேறி
ஆரிருஞ் சதுக்கத் தஞ்சுவரக் குழறும்
அணங்குகால் கிளரும் மயங்கிருள் நடுநாள்
பாவை யன்ன பலராய் வனப்பின்

தடமென் பணைத்தோள் மடமிகு குறுமகள்
சுணங்கணி வனமுலை முயங்கல் உள்ளி
மீன்கண் துஞ்சும் பொழுதும்
யான்கண் துஞ்சிலன் யாதுகொல் நிலையே.

(நற். 319.)

வீரைவெளியன் தித்தனார்:— வீரைவேண்மான் வெளியன் தித்தன் என்றும் வழங்கப் பெறுவர். பேராண்மை மிக்க வீரர்கள் தம் உறையினின்றும் உருவியவாள் போன்று மின்னல் ஒளிரும் என்று இவர் தாம் பாடிய அகநானூற்றுச் செய்யுவில் கூறியுள்ளார்.

பெருங்கடல் முகந்த இருங்கிளைக் கொண்மூ
இருண்டுயர் விசும்பின் வலனேர்பு வளைஇப்
போர்ப்புறு முரசின் இரங்கி முறைபுரிந்து
அறனெறி பிழையாத் திறனறி மன்னர்
அருஞ்சமத் ததிர்ந்த பெருஞ்செ யாடவர்
கழித்தெறி வாளின் அளிப்பன விளங்கும்
மின்னுடை கருவியை யாகி நாளுங்
கொன்னே செய்தியோ அரவம் பொன்னென
மலர்ந்த வேங்கை மலிதொடர் அடைச்சிப்
பொலிந்த ஆயமொடு காண்டக இயலித்
தழலை வாங்கியுந் தட்டை யோப்பியும்
அழலேர் செயலை யந்தழை அசைஇயும்
குறமகள் காக்கும் ஏனற்
புறமுந் தருதியோ வாழிய மழையே.

(அகம். 188.)

வீரைவெளியனார்:— வீரைவெளி யென்பது ஒரூர். இவர், ''முன்றில் முஞ்ஞையொடு முசுண்டை பம்பிப், பந்தர் வேண்டாப் பலர்தூங்கு நீழல்'' என்று தம்முடைய தலைவனது வீட்டு முன்றிலையும், ''வேந்துதரு விழுக்கூழ் பரிசிலர்க் கென்றும், அருகா தீயும் வண்மை, உரைசா னெடுந்தகை'' என்று அவன் கொடைவிசேடத்தையும் தாம் பாடியதான புறநானூற்றுச் செய்யுளில் கூறுவர்.

முன்றில் முஞ்ஞையொடு முசுண்டை பம்பிப்
பந்தர் வேண்டாப் பலர்தூங்கு நீழற்
கைம்மான் வேட்டுவன் கனைதுயில் மடிந்தெனப்
பார்வை மடப்பிணை தழீஇப் பிறிதோர்
தீர்தொழிற் றனிக்கலை திளைத்துவிளை யாட
இன்புறு புணர்நிலை கண்ட மனையோள்
கணவன் எழுதலும் அஞ்சிக் கலையே
பிணைவயின் தீர்தலும் அஞ்சி யாவதும்
இல்வழங் காமையிற் கல்லென வொலித்து
மானதட் பெய்த உணங்குதினை வல்சி
கானக் கோழியோ டிதல்கவர்ந் துண்டென
ஆர நெருப்பின் ஆரல் நாறத்
தடிவார்ந் திட்ட முழுவள் ளூரம்
இரும்பேர் ஒக்கலொ டொருங்கினி தருந்தித்
தங்கினை சென்மோ பாண தங்காது
வேந்துதரு விழுக்கூழ் பரிசிலர்க் கென்றும்
அருகா தீயும் வண்மை
உரைசால் நெடுந்தகை ஓம்பும் ஊரே.

(புறம். 320.)

வெண்கொற்றனார்:— தன்னை வருத்தும் ஈயின் குரலோசையைக் கேட்ட அளவிலேயே பசுவானது நடுங்க அதன் கழுத்திலுள்ள மணி ஒலிக்கும் என்று இவர் ஈயின்பால் பசுவுக்குள்ள அச்சத்தைப் புலப் படுத்தி அம்மணியோசை தலைவிக்குக் காமவேதனையை மிகுப்பதை இந்த ஒரு குறுந்தொகைப் பாட்டில் காட்டி யுள்ளார்.

சிறைபனி யுடைந்த சேயரி மழைக்கட்
பொறையரு நோயொடு புலம்பலைக் கலங்கிப்
பிறருங் கேட்குநர் உளர்கொல் உறைசிறந்து
ஊதை தூற்றும் கூதிர் யாமத்து
ஆனுளம் புலம்புதொ றுளம்பும்
நாநவில் கொடுமணி நல்கூர் குரலே.

(குறுந். 86.)

வெண்ணிக்குயத்தியார்:— வெண்ணிக்குயத்தியார் என்ற புலமை வாய்ந்த பெண்பாலார் ஒருவர் இருந்

தார். வெண்ணி என்பது இக்காலத்தில் கோவிலுண்ணி என்று வழங்கப்படுகிறது. நீடாமங்கலம் இரயில்வே ஸ்டேஷனுக்கு மேற்கில் உள்ளது; இவர் குயச் சாதியார்; கரிகாற்சோழனைச் சேரனும் பாண்டியனும் மேற்கூறிய வெண்ணியூரிலுள்ள போர்க் களத்தில் எதிர்த்துப் போர்செய்து தோற்றனர். தன்மார்பில் தைத்து முதுகில் ஊடுருவிச்சென்ற அம்பாலுண்டாகிய புண்ணிற்கு நாணிச் சேரன்போய் வடக்கே இருந்தான்; ஓடுங்காலத்துத் தன் முதுகில் அம்பின்காயம் பட்டதாகப் பிறர் கருதக்கூடுமோ வென்று எண்ணி அவன் நாணினன்.

வடக்கிருத்தல் என்பது தோல்வியுற்றவர் உலக வாழ்க்கையை வெறுத்து இனி உயிரைத் துறக்க வேண்டுமென்று நிச்சயித்துக்கொண்டு வடக்கே சென்றிருந்து ஊண் உறக்கமின்றி உடம்பை வாட்டி உயிர் விடுவதாகும். இஃது உத்தரகமனம் என்றும் வழங்கப்படும். சேரன் வடக்கிருந்ததைப் பாராட்டிக் கரிகால்வளவனை நோக்கி ''வென்றோய் நின்னினு நல்ல னன்றே கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை, மிகப்புக ழுலக மெய்திப், புறப்புண்ணாணி வடக்கிருந் தோனே'' என்று புறநானூற்றில் பாடியிருக்கிறார். ''நின்றோகை கற்பி னிலைமையெண் ணுதெதிர் நின்று வென்நிட் டன்றோ வடக்கிருந் தாண்டப் பாவை யருந்ததியே'' எனத் தஞ்சை வாணன்கோவையிலும், ''பெரும்பதிக்குவமையும் பெறாமல், மறக்கடுங் களிற்றுக் குபேரன்வா ழளகை வடக்கிருந்து'' என வில்லிபுத்தூராழ்வார் பாரதத்தும் காணப்படும் வாக்கியங்கள் வடக்கிருத்தலின் கருத்தைப் புலப்படுத்தல் காண்க.

நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி
வளிதொழில் ஆண்ட உரவோன் மருக
களியியல் யானைக் கரிகால் வளவ
சென்றமர்க் கடந்தநின் ஆற்றல் தோன்ற

வென்றோய் நின்னினும் நல்ல னன்றே
கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை
மிகப்புகழ் உலகம் எய்திப்
புறப்புண் நாணி வடக்கிருந் தோனே.

(புறம். 66.)

வெண்ணி:— சோழநாட்டில் நீடாமங்கலத்திற்கு மேற்கேயுள்ள ஓர் ஊர். அது தேவாரம் பெற்ற தலங்களுள் ஒன்று. கோயில் வெண்ணி (கோவிலுண்ணி) என இக்காலத்து வழங்கும். அவ்வூரையும், அதனைச் சூழ்ந்துள்ள இடங்களையும் பார்க்கையில் அந்த இடம் பண்டைக்காலத்தில் மிகப்பெரிய நகராக இருந்திருக்கவேண்டுமென்று தோற்றுகின்றது.

வெண்பூதனார்:— பலாப்பழத்தின் சுவைக்கு இவர் தமது வீட்டின்கண் இருந்து தமது முயற்சியால் ஈட்டிய பொருளில் தம் கூற்றை உண்போர் பெறும் சுவையை உவமை காட்டியுள்ளார். தலைவனை மணமகனாக ஏற்றுக்கொள்ள இயைந்த செவிலியைத் தோழி, ''அரும் பெற லமிழ்த மார்பதமாகப் பெரும் பெய ருலகம் பெறீஇயரோ'' என்று வாழ்த்துவதாக இவர் பாடியதான குறுந்தொகைச் செய்யுள் அமைந்துள்ளது.

அரும்பெறல் அமிழ்தம் ஆர்பதம் ஆகப்
பெரும்பெயர் உலகம் பெறீஇயரோ அன்னை
தம்மிற் றமதுண் டன்ன சினைதொறும்
தீம்பழந் தூங்கும் பலவின்
ஓங்குமலை நாடனை வருமென் றோளே.

(குறுந். 83.)

வெண்பூதியார்:— வெள்ளூர்கிழார் மகனார் வெண்பூதியார் என்பாரும் இவரும் ஒருவரே. பெயரளவில் பெண்பாலாக இருக்கலாமென்று தோற்றினும் வெள்ளூர்கிழார் மகனார் என்றிருப்பதால் ஆண்பாலென்றே கொள்ளவேண்டும் இவர் வேளாண்

மரபினர்; சைவ சமயத்தவர்; பூதி-விபூதி; திருநீறு. குறுந்தொகையிலுள்ள இவருடைய செய்யுட்கள் மூன்றும் தலைவியின் கூற்றாகவே அமைந்துள்ளன. ''யான் ஈண்டையேன், என் நலன் கானலிடத்தது, தலைவன் தன் ஊரினன். எம்மிருவருக்குமிடை நின்ற மறை அலராகி அம்பலமாயிற்று (குறுந். 97) என்று தலைவி தன்வருத்தத்தைத் தெரிவிக்கும் செய்யுள் சுருங்கச் சொல்லல் முதலிய பல அழகுகளைத் தன் பாற்பெற்றதொன்றும். இஃது ஒரு வகையில் குறுந் தொகை 219-ஆம் செய்யுளோடு ஒத்திருக்கின்றது. ''தலைவன் பொருள் வேட்கையனாகித் தன்னைப் பிரிய நினைப்பானேயானால் இவ்வுலகில் செல்வமே உறுதிப் பொருளாகும், அருளோ தன்னை எவரும் ஏற்றுக் கொள்ளாததாகும்'' என்று தலைவி கூறுவதாக இவர் அமைத்துள்ள பாட்டு (குறுந். 174) அழகமைந்த தொன்றும்.

யானே யீண்டை யேனே என்னலனே
ஆனா நோயொடு கான லஃதே
துறைவன் தம்மூ ரானே
மறையல ராகி மன்றத் தஃதே.

(குறுந். 97.)

<u>வெண்மணிப் பூதி:–</u> இவர் ஒரு பெண்பாற் புலவர். வெண்மணி யென்ற ஓர் ஊர் அரியிலூர்ப் பக்கத்தில் உள்ளது. இவர் அவ்வூரினர் போலும். ''தலைவனைக் கண்ட கண்ணும் அவன் சொல்லைக் கேட்ட செவியும் வாளா விருக்கத் தோள்கள் மட்டும் அவன் பிரிந்தகாலைத்தன் மெலிவைப் புறத்தார் அறி யும்படி நெகிழ்ந்தன'' என்று தலைவி கூறுவதாக இவர் பாடியதான குறுந்தொகைச் செய்யுள் அமைந்துள்ளது.

இதுமற் றெவனோ தோழி முதுநீர்ப்
புணரி திளைக்கும் புள்ளிமிழ் கானல்
இணரவிழ் புன்னை எக்கர் நீழற்

புணர்குறி வாய்த்த ஞான்றைக் கொண்கற்
கண்டன மன்எங் கண்ணே அவன்சொற்
கேட்டன மன்எஞ் செவியே மற்றவன்
மணப்பின் மாணலம் எய்தித்
தணப்பின் ஞெகிழ்பஎந் தடமென் தோளே.

(குறுந். 299.)

வெள்ளாடியனார்:— இவர் மதுரை மாவட்டத்திலுள்ள வெள்ளோடு என்னும் ஊரினராக இருக்கலாம். புலி தான் அடித்த யானை இடப்புறமாக வீழின் மிசையாது என்று புலியின் மானத்தினை விளக்குகின்றார். இவர் பாடியதாக அகநானூற்றில் ஒரு செய்யுள் காணப் படுகின்றது. இவர் பாலைத்திணையின் சிறப்பினை விளக்குகின்றார் இவர் வெண்வட்டியார் என்றும் வழங்கப் பெறுவர்.

தொடங்குவினை தவிரா அசைவில் நோன்றாட்
கிடந்துயிர் மறுகுவ தாயினும் இடம்படின்
வீழ்களிறு மிசையாப் புலியினுஞ் சிறந்த
தாழ்வில் உள்ளந் தலைத்தலைச் சிறப்பச்
செய்வினைக் ககன்ற காலை யெஃகுற்று
இருவேறு ஆகிய தெரிதகு வனப்பின்
மாவின் நறுவடி போலக் காண்டொறும்
மேவல் தண்டா மகிழ்நோக் குண்கண்
நினையாது கழிந்த வைகல் எனையதூஉம்
வாழலென் யானெனத் தேற்றிப் பன்மாண்
தாழக் கூறிய தகைசால் நன்மொழி
மறந்தனிர் போறிர் எம்மெனச் சிறந்தநின்
எயிறுகெழு துவர்வாய் இன்னகை அழுங்க
வினவ லானாப் புனையிழை கேளினி
வெம்மை தண்டா எரியுகு பறந்தலைக்
கொம்மை வாடிய இயவுள் யானை
நீர்மருங் கறியாது தேர்மருங் கோடி
அறுநீர் அம்பியின் நெறிமுதல் உணங்கும்
உள்ளுநர்ப் பனிக்கும் ஊக்கருங் கடத்திடை

எள்ளல் நோனுப் பொருள்தரல் விருப்பொடு
நாணுத்தளை யாக வைகி மாண்வினைக்
குடம்பாண் டொழிந்தமை அல்லதை
மடங்கெழு நெஞ்சம் நின்னுழை யதுவே.

(அகம். 29)

<u>வெள்ளியந்தின்னனார்:</u>— இவர் நெய்தலின் வளத்தைச் சிறப்பித்துப்பாடியுள்ளார். இவர் கடலிலிருந்து இரு மீனைக் கொணர்ந்து காயவைக்கும் திறத்தைக் கூறுகின்றார். இவர் பாடிய இப்பாடல் நற்றிணையில் உள்ளது.

முற்றா மஞ்சட் பசும்புறங் கடுப்பச்
சுற்றிய பிணர சூழ்கழி இறவின்
கணங்கொள் குப்பை யுணங்குதிறன் நோக்கிப்
புன்னையங் கொழுநிழல் முன்னுய்த்துப் பரப்புந்
துறைநணி யிருந்த பாக்கமும் உறைநனி
இனிதுமன் அளிதோ தானே துனிதீர்ந்து
அகன்ற அல்குல் ஐதமை நுசுப்பின்
மீனெறி பரதவர் மடமகள்
மானமர் நோக்கங் காணு வூங்கே.

(நற். 101.)

<u>வெள்ளி வீதியார்:</u>— இவர் பெண்பாலார். இவர் பாடிய பாடல்கள் பல தம் அனுபவங்களே யாகும் என்பதும், இங்ஙனமே தம் அனுபவங்களைக் கூறும் ஆதி மந்தியார் என்ற பெண்புலவரும் இவரும் ஒரு காலத்தவர் என்பதும் தொல். அகத். சூ. 54-க்கு நச்சினார்க்கினியர் எழுதிய விசேடவுரையால் தெரிகின்றன. ''கன்று முண்ணாது கலத்தினும் படாது கவினே.... இது (குறுந். 27); வெள்ளி வீதியார் பாட்டு; 'மள்ளர் குழீஇய விழவினானும்.... மகனே' (குறுந். 31) இது காதலற் கெடுத்த ஆதிமந்தி பாட்டு. இவை தத்தம் பெயர்கூறிற் புறமாம் என்றஞ்சி வாளாது கூறினார். ஆதிமந்தி தன் பெயராலும் காதலானாகிய ஆட்டனத்தி பெயராலும்

கூறிற் காஞ்சிப்பாற்படும். 'ஆதிமந்திபோல, ஏதஞ் சொல்லிப் பேது பெரிதுறலே' (அகநா. 236) எனவும், 'வெள்ளி வீதியைப் போல நன்றும், செலவயர்ந் திசினல் யானே' (அகநா. 147) எனவும் அகத்திணைக்கட் சார்த்து வகையான் வந்தன அன்றித் தலைமை வகையாக வந்தில என்பது'' அது. வெள்ளி வீதியார் தம் கணவனைத்தேடி அலைந்தமை இவர் வாக்கானும், ஔவையார் ''நெறி படு கவலை நிரம்பா நீளிடை, வெள்ளி வீதியைப் போல நன்றுஞ், செலவயர்ந் திசினல் யானே'' (அகநா. 147) என்று கூறியிருப்பதனாலும் தெரியவரும். இவர் பாடிய ''தூதுவிட்டுத் தலைவரைத் தேடித் தருவேன்'' என்ற தோழி கூற்று, ''நிலந் தொட்டுப் புகாஅர் வான மேறார், விலங்கிரு முந்நீர் காலிற் செல்லார், நாட்டி னாட்டி னூரி னூரிற், குடிமுறை குடிமுறை தேரிற், கெடுநரு முளரோநங் காதலோரே'' (குறுந். 130) என்று அழகுபட அமைந்துள்ளது. நச்சினார்க் கினியர் இச்செய்யுளை ''செவிலி இடைச்சுரத்துச் சென்று தலைவியையும் தலைவனையும் தேடத் துணிந்து கூறினது'' என்பர் (தொல். அகத். சூ. 37.) ''காலே பரிதப்பினவே கண்ணே, நோக்கி நோக்கி வாளிழந் தனவே! ..... பிறரே'' (குறுந். 44) என்பதும் செவிலியின் கூற்றே. இச்செய்யுள் மிகுந்த நயம் வாய்ந்தது. தன்காமநோய் பரவுதலைத் தலைவன் பாங் கனுக்குக் கழற்றெதிர்மறையில், ''ஞாயிறுகாயும் வெவ்வறை மருங்கிற், கையிலூமன் கண்ணிற் காக்கும், வெண்ணெ யுணங்கல் போலப் பரந் தன்றிந் நோய் (குறுந். 58) என்று கூறும் பகுதியுள் அந்நோயைத் தடுக்கத் தன் செயலின்மை குறிக்கப் படும்முறை அழகிது. முன்காலத்தில் மணம் பேசப் பெரியோரை விடுத்தலும் தலையில் பாகையை அணிந்து மங்களகரமான இடங்களுக்குச் செல்ல வேண்டும் என்பதும் தமிழ்நாட்டின் மரபு. இம்மரபு குறுந். 146-ஆம் செய்யுளில் இவராற் கூறப்

படுகிறது. அன்னி என்பான் குறுக்கைப் பறந்தலையில் திதியனுடைய காவல்மரமாகிய புன்னையைக் குறைத்த செய்தி இவராற் குறிக்கப்பட்டுள்ளது (அகநா. 45.) நற்றிணையில் மூன்றும், குறுந்தொகையில் எட்டும், அகத்தில் இரண்டும், திருவள்ளுவ மாலையில் ஒன்றும் இவர் பாடிய செய்யுட்களாகும்.

காலே பரிதப் பினவே கண்ணே
நோக்கி நோக்கி வாளிழந் தனவே
அகலிரு விசும்பின் மீனினும்
பலரே மன்றவிவ் வுலகத்துப் பிறரே.

(குறுந். 44)

பரி-நடை.

<u>வெள்ளெருக்கிலையார்:—</u> இவராற் பாடப்பட்டோன் வேள் எவ்வி. அவனிறந்த பின்பும் இவரிருந்து புலம்பினர். இறந்த அவனுக்கு அவன் மனைவி சிறிய இடத்திற் பிண்டம் வைத்தலைக் கண்டு கூறுதல் வாயிலாக, அவன் பெருங்கொடையைப் புலப்படுத்தினர். இவர் பாடியனவாகப் புறநானூற்றில் இரண்டு செய்யுட்கள் உள்ளன.

நோகோ யானே தேய்கமா காலை
பிடியடி யன்ன சிறுவழி மெழுகித்
தன்னமர் காதலி புன்மேல் வைத்த
இன்சிறு பிண்டம் யாங்குண் டனன்கொல்
உலகுபுகத் திறந்த வாயிற்
பலரோ டுண்டல் மரீஇ யோனே.

(புறம். 234.)

<u>வெள்ளைக்குடி நாகனார்:—</u> வெள்ளைக்குடி யென்பது ஒரூர். இவர் தம்முடைய பழைய நிலங்களுக்குரிய வரிப்பணத்தைச் செலுத்துதற்கு ஆற்றாதவராகிச் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனுக்குச் செவியறிவுறுத்தி அச்செய்களை முற்றூட்டாகப்

பெற்றனர் என்பது இவர் பாடிய புறநானூற்றுச் செய்யுளால் தெரியவருகின்றது; முற்றூட்டு-சர்வ மானியம். இன்னும் இவர் வாக்காக நற்றிணையில் இரண்டு பாடல்கள் உள்ளன.

நளியிரு முந்நீர் ஏணி யாக
வளியிடை வழங்கா வானஞ் சூடிய
மண்திணி கிடக்கைத் தண்தமிழ்க் கிழவர்
முரசுமுழங்கு தானை மூவர் உள்ளும்
அரசெனப் படுவது நினதே பெரும
அலங்குகதிர்க் கனலி நால்வயின் தோன்றினும்
இலங்குகதிர் வெள்ளி தென்புலம் படரினும்
அந்தண் காவிரி வந்துகவர்பு ஊட்டத்
தோடுகொள் வேலின் தோற்றம் போல
ஆடுகட் கரும்பின் வெண்பூ நுடங்கும்
நாடெனப் படுவது நினதே யத்தை, ஆங்க
நாடுகெழு செல்வத்துப் பீடுகெழு வேந்தே
நினவ கூறுவல் எனவ கேண்மதி
அறம்புரிந் தன்ன செங்கோல் நாட்டத்து
முறைவேண்டு பொழுதிற் பதனெளி யோர்ஈண்டு
உறைவேண்டு பொழுதிற் பெயல்பெற் றோரே
ஞாயிறு சுமந்த கோடுதிரள் கொண்மூ
மாக விசும்பின் நடுவுநின் றாங்குக்
கண்பொர விளங்குநின் விண்பொரு வியன்குடை
வெயின்மறைக் கொண்டன்றோ அன்றே வருந்திய
குடிமறைப் பதுவே கூர்வேல் வளவ
வெளிற்றுப்பனந் துணியின் வீற்றுவீற்றுக் கிடப்பக்
களிற்றுக்கணம் பொருத கண்ணகன் பறந்தலை
வருபடை தாங்கிப் பெயர்புறத் தார்த்துப்
பொருபடை தரூஉங் கொற்றமும் உழுபடை
ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனே
மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்
இயற்கை யல்லன செயற்கையிற் றோன்றினும்
காவலர்ப் பழிக்குமிக் கண்ணகன் ஞாலம்
அதுநற் கறிந்தனை யாயின் நீயும்
நொதும லாளர் பொதுமொழி கொள்ளாது
பகடுபுறந் தருநர் பாரம் ஓம்பிக்
குடிபுறந் தருகுவை யாயினின்
அடிபுறந் தருகுவர் அடங்கா தோரே. (புறம். 35.)

வெள்ளைமாளர்:— இவர் பாடிய ஏறுண்முல்லைத் துறை (புறநா. 296) மிக்க பொருள் நயமுடையது.

வேம்புசினை ஒடிப்பவுங் காஞ்சி பாடவும்
நெய்யுடைக் கையர் ஐயவி புகைப்பவும்
எல்லா மனையும் கல்லென் றனவே
வெந்துடன்று எறிவான் கொல்லோ
நெடிதுவந் தன்றால் நெடுந்தகை தேரே.

(புறம். 296.)

சினை-தழையையுடைய கிளை. காஞ்சி-காஞ்சிப் பண். ஐயவி-வெண்சிறுகடுகு. புண்பட்டோரைப் பேய்கள் அணுகாதிருத்தற் பொருட்டு வேப்பந் தழையை வீட்டின்முன் இறப்பிற் செருகுதலும் காஞ்சிப்பண்ணைப் பாடுதலும் ஐயவியைப் புகைத்தலும் மரபு. நெடிது-நெடுநேரம்.

வெறிபாடிய காமக்கண்ணியார்:— இவர் பெண்பாலார். காமக்கண்ணி (காமாக்ஷி) யென்பது காஞ்சிநகரத்திற் கோயில் கொண்டெழுந்தருளிய அம்பிகையின் திருநாமம். வெறியென்பது தெய்வமேறப் பெற்று ஒருத்தி யாடுதல். இது வெறியாட்ட மெனவும் வழங்கும்; இதன் இயல்பை நன்றாக விளக்கிப் பாடியிருத்தலால் 'வெறிபாடிய'' என்னும் அடைமொழி இவர் பெயர்க்குமுன் சேர்க்கப் பெற்றது; அகநா. 22, 92; நற். 268. இவர்பெயர் வெறியாடிய காமக்கண்ணியாரெனவும் பிரதிகளிற் காணப்படுகின்றது. இவர் புறநானூற்றிற் பாடிய செருவிடை வீழ்தல், குதிரைமறமென்னுந் துறைப்பாடல்கள் அறிதற்பாலன.

வெடிவேய் கொள்வது போல ஓடித்
தாவுபு உகளு மாவே பூவே
விளங்கிழை மகளிர் கூந்தற் கொண்ட
நரந்தப் பல்காழ்க் கோதை சுற்றிய

ஐதமை பாணி வணர்கோட்டுச் சீறியாழ்க்
கைவார் நரம்பின் பாணர்க்கு ஒக்கிய
நிரம்பா இயல்பிற் கரம்பைச் சீறூர்
நோக்கினர்ச் செகுக்குங் காளை ஊக்கி
வேலின் அட்ட களிறுபெயர்த் தெண்ணின்
விண்ணவர் விசும்பின் மீனும்
தண்பெயல் உறையும் உறையாற் ருவே.

(புறம். 302.)

வெடிகொள்ளல்-மேல்எழல். தாவுபு-தாவி. பூ-பொற் பூக்கள். மகளிர்-இங்கே விறலியர். நரந்தம்-நாரத்தை மலர். ஐது அமை-அழகிதாக அமைந்த. பாணி-தாளம். வணர்-வளைவு. உறை-மழைத்துளி.

வேட்டக்கண்ணனார்:— இவர் சாதியில் வேடர் என்று தெரிகிறது; வேட்டம்-வேட்டை. இவர்தாம் வேடர் என்பதற்கியையக் குறுந்தொகையில் தோழி கூற்றில் ''தலைமகனுடைய குற்றேவல் மகன், ''நெய்கனி குறும் பூழ் காயமாக, ஆர்பதம் பெறுக'' என்று நெய்யிற் பொரித்த காடை இறைச்சியைக் கூறியுள்ளார். வேட்டக் கண்ணனார் என்பது கண்ணப்ப நாயனாரை நினைவுறுத்துகின்றது.

நெய்கனி குறும்பூழ் காய மாக
ஆர்பதம் பெறுக தோழி யத்தை
பெருங்கல் நாடன் வரைந்தென அவனெதிர்
நன்றோ மகனே என்றனென்
நன்றே போலும் என்றுரைத் தோனே.

(குறுந். 389.)

வேம்பற்றூர்க்கண்ணன் கூத்தனார்:— வேம்பற்றூர் என்பது மதுரைக்கு வடகிழக்கில் இரண்டு காதத்தில் வையை நதிக்கு வடக்கே உள்ளது. பண்டைக்காலந்

தொட்டுத் தமிழ் அறிஞர் வாழும் இடம் இது. இப் போது வேம்பத்தூர் என்று வழங்குகிறது. வேம் பற்றூர்க்குமரனூர் என்பவரின் பாடல்கள் அகத்தி லும், புறத்திலும் உள்ளன. இவர் கூத்தாடுந் தொழிலையுடையவர். ''வேல, நீ கொடுக்கும்பலியைச் சிலம்பன் ஒண்டாரகலமும் உண்ணுமோ'' என்று தோழி கூற்றில் இவர் அமைத்துள்ள கருத்தைப் பிற்காலத்தவர் அங்ஙனமே எடுத்தாண்டனர். (தமிழ் நெறி. மேற் 104; பாண்டிக்கோவை; கிளவித் தெளிவு.) இவர்பாடிய குறுந்தொகைச் செய்யுள் ஒன்று.

(பி.ம். வேற்பற்றூர்க் கண்ணகன் கூத்தன்.)

முருகயர்ந்து வந்த முதுவாய் வேல
சினவல் ஓம்புமதி வினவுவ துடையேன்
பல்வே றுருவிற் சில்லவிழ் மடையொடு
சிறுமறி கொன்றிவள் நறுநுதல் நீவி
வணங்கினை கொடுத்தி யாயின் அணங்கிய
விண்டோய் மாமலைச் சிலம்பன்
ஒண்டார் அகலமும் உண்ணுமோ பலியே.

(குறுந். 362.)

வேம்பற்றூர்க்குமரனூர்:— வேம்பற்றூர் என்பது மதுரைக்குக் கிழக்கே யுள்ளதோரூர்; வேம்பத்தூரென இக்காலத்து வழங்கும்; குலசேகரச்சதுர்வேதி மங்கலமென்றும் இதனுக்கு ஒரு பெயருண்டென்று சிலாசாசனத்தால் தெரிகிறது. கடைச்சங்கப் புலவர் காலந்தொடங்கி இன்றுவரை அந்தணர்களே தமிழ்ப் புலவர்களாக இவ்வூரில் விளங்கியிருத்தல் கண்கூடாத லாலும், பெயராலும் இவர் அந்தணராகக் கருதப் படுகிறார். இவர்பாடியனவாக அகநானூற்றில் ஒன்றும்,

புறநானூற்றில் ஒன்றுமாக இரண்டு செய்யுட்கள் உள்ளன.

வென்வேல்..........................நது
முன்றிற் கிடந்த பெருங்களி யாளற்கு
அதளுண் டாயினும் பாயுண் டாயினும்
யாதுண் டாயினும் கொடுமின் வல்லே
வேட்கை மீளப..........................
....................கு மெமக்கும் பிறர்க்கும்
யார்க்கும் ஈய்ந்து துயிலேற் பினனே.

(புறம். 317.)

அதள்-தோல். இதில் சில சாதியார் படுத்தல் இயல்பு. வல்லே-விரைவாக. துயிலேற்பினன்-துயிலேற்றலையுடையான். ஆதலால் அக்களியாளனுக்கு யாதுண்டாயினும் வல்லே கொடுமின் என்க.